
என்டமூரி
வீரேந்திரநாத்

# கோல்டு பிஸ்கெட்

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

கற்பகம் புத்தகாலயம்

18, ராஜாபாதர் தெரு,

தியாகராயநகர், சென்னை- 600 017

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **கோல்டு பிஸ்கெட்** |
| நூலாசிரியர் | : | எண்டமூரி வீரேந்திரநாத்<br>தமிழில்; சுசீலாகனகதுர்கா |
| நூல்வகை | : | நாவல் |
| நூல் உரிமை | : | ஆசிரியர் |
| வெளியிட்ட ஆண்டு | : | முதற்பதிப்பு : மே-1995. |
| தாள் | : | 10.5 வெள்ளைத்தாள் |
| அச்செழுத்து | : | 10 புள்ளிகள் |
| நூலின் அளவு | : | 18.5X12.5 செ.மீ. |
| பக்கங்கள் | : | 400 |
| வெளியீடு | : | **கற்பகம் புத்தகாலயம்**<br>18, ராஜாபாதர் தெரு,<br>சென்னை - 600 017. |
| அச்சிட்டோர் | : | ராஜ் அச்சகம்,<br>23, பர்மா-<br>கனகாம்பாள் தெரு,<br>மேற்குமாம்பலம்,<br>சென்னை 33. |
| பைண்டிங் | : | கார்டு போர்டு. |

**விலை : ரூ. 68. 00**


GM

# பதிப்புரை

அன்புள்ள வாசகர்களே!

இது "**கோல்டு பிஸ்கெட்.**" சாதாரண பிஸ்கெட் என்றால் ஜீரணித்து விடுவீர்கள். இதை ஜீரணிக்க முடியாது. கடத்தல் செய்யலாம்.

தன் மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக தூக்குத் தண்டனையடைந்த ஒரு குற்றவாளி, அதி காலையில் தூக்குப்போடுமுன், இரவில் ஜெயிலிலிருந்து தப்பித்து விடுகிறான். அவனுக்கும் தங்கத்துக்கும் (கோல்டு பிஸ்கெட்) என்ன சம்பந்தம்?

கடத்தல் காரன் கான் எப்படி தனியாக கடத்தல் மன்னனாகிறான்? சந்தனாவை ஏன் கடத்துகிறான்? இரண்டாவது முறை கடத்தும் போது சர்வதேசக் கடத்தல் காரர்களை விடவும் திறமையாகக் கடத்தியது கான் தானா?

பாம்புக்கடியின் விஷத்தால் பாம்பாக உருமாறும் மகரிஷி எப்படி குணமடைகிறான்? இதை எல்லாம் வாசகர்களாகிய உங்களுடைய சிந்தனைக்கு விடப் பட்டுள்ளது. ஒரு துப்பறியும் நாவலைப் படித்து விட்டு, நல்ல விறுவிறுப்போடு செல்கிறது என்று சொல்வதை விட, உங்கள் கற்பனா சக்தியை உபயோகித்துக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.


விறுவிறுப்புக் குன்றாமல் எழுதி, வெளியிட அனுமதியளித்த ஆசிரியர் அவர்களுக்கும், சுவை குன்றாமல் மொழியாக்கம் செய்த திருமதி **சுசீலா கனகதுர்கா** அவர்களுக்கும், அழகாக அச்சிட்டுதவிய **ராஜ் அச்சகம்** அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற அமைத்த திரு. **குரு** அவர்களுக்கும் எங்கள் நன்றி.


**ரா. நல்லதம்பி,**
கற்பகம் புத்தகாலயம்.

GM

# கோல்டு பிஸ்கெட்

## 1

''உன் கடைசி ஆசை என்ன?''

சாப்பிட்டுக் கொண்டுந்த மகரிஷி மெதுவாய் நிமிர்ந்தான். ஜெயிலரின் முகம் கடுகடுப்பாய் இருந்தது, மறுநாள் தூக்கிலேற்றப் போகும் கைதியை ஏதோ கேட்டுத் தீர வேண்டுமே என்பதற்காகக் கேட்டாற்போலிருந்ததே தவிர அக்குரலில் மகரிஷியின்பால் இரக்கம் சற்றும் இல்லை.

மகரிஷி பதில் சொல்லாமல் மௌனமாய் இருந்தான்.

''ஏன் பேசமாட்டேங்கிறாய்?''

''யோசித்துக் கொண்டிருக்கிறேன்...கடைசி ஆசையாய் எதைக் கேட்கலாம் என்று'' அவன் குரல் தழுதழுப்புடன் அலட்சியமாய் கேட்டது.

''கண்டதையெல்லாம் கேட்காதே. உன் பெயரில் ஏதாவது சொத்து இருந்தால் உயில் எழுதுவதற்கோ, நீ யாரையாவது பார்க்க விரும்பினால் அவங்களுக்காகச் செய்தி அனுப்பவோ அனுமதிப்போமே தவிர...''

''சாதாரணமாய் தூக்குப் போடுவதற்கு முன்னால் தான் கடைசி ஆசை என்ன என்று கேட்பாங்க, நீங்களோ ஒரு நாள் முன்னாடியே கேட்கிறீங்களே!''

''என்னடா...பெரிதாய் ரூலிங் எல்லாம் தெரிந்தாற் போல பேசுகிறாய்! சினிமாக்களைப் பார்த்தும் புத்தகங்களைப் படித்தும் தெரிந்துக் கொண்டாயோ? அப்படியெல்லாம் கிடையாது. உனக்கு யாரையாவது பார்க்கணும் போலிந்தால் சொல்லு, அழைத்துவரச் சொல்கிறேன்.''

மகரிஷி கையிலிருந்த சாத உருண்டையைப் பார்த்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தான். ஜெயிலர் தொடர்ந்தான்-- ''அதனால், நான் ஒரு நாள் முன்பே கேட்டது. தூக்குமேடையின் படிமேல் நீன்று கொண்டு, எனக்குக் குறிப்பிட்ட அவங்களைப் பார்க்கணும் என்று சொன்னால், தூக்குப் போடுவதை நிறுத்தி விட்டு அவங்களைக் கூட்டிட்டு வரப் போவாங்கன்னு எண்ணி விடாதே. அதெல்லாம் கதைகளில் தான் நடக்கும்;''

மகரிஷி இன்னும் சாதக் கவளத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

ஜெயிலர் பொறுமையின்றி—''என்னடா...ஏதாவது சொல்லப் போகிறாயா இல்லையா? நான் போய் தூக்குப் போடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யணும்'' என்று கேட்டான்.

''எனக்கு ஒரு ஆசை இருக்கு சார்'' என்றான் மகரிஷி.

''அதென்ன? சீக்கிரமாய் சொல்லித் தொலை,''

''எனக்கு ஒரு பெண்ணைப் பார்க்கணும்னு இருக்கு''

ஜெயிலர் திடுக்கிட்டான், சூள் கொட்டிவிட்டு ''பெண்ணா? உனக்கு மகள் இருப்பதாய் தெரியாதே? அதான் கல்யாணமான ஆறு மாதத்திற்குள்ளேயே மனைவியைக் கொன்று விட்டாயே?'' என்றான்.

''மகள் இல்லைங்க. என் சிநேகிதி''

''என்ன? உனக்கு சிநேகிதி கூட உண்டா?''



''ஆமாம், படிக்கும் காலத்தில் என் கிளாஸ்மெட். சாகும் முன்னால் அந்தப் பெண்ணை ஒரு தடவை பார்க்கணும் போலிருக்கு. வரவழைக்கிறீங்களா?',

''அவள் வர சம்மதிப்பாளா?.''

''தெரியாது''

''எங்கே இருக்கிறாள்?''

''அதுவும் தெரியாது.''

ஜெயிலர் முகத்தில் எரிச்சல்.

''பேர்?'' கேட்டான்,

''சந்தனா''

''அவள் உனக்கு என்னவாகணும்? சிநேகிதி என்று தானே சொன்னாய்?''

''நான் அந்தப் பெண்ணைக் காதலித்தேன்.''

''அவள் கூட உன்னைக் காதலித்தாளா?'' வரும் கோபத்தை அடக்கிக் கொண்டே கேட்டான்.

''தெரியாது, நான் என்றுமே அவளிடம் சொன்னதில்லை. அவள் இப்பொழுது எங்கே இருக்கிறாள் என்று கூட தெரியாது. ஒருக்கால் கல்யாணம் கூட ஆயிடுத்தோ என்னவோ? சுகமாய் குடித்தனம் பண்ணிக் கொண்டிருப்பாள். என்னை அடையாளமாவது தெரியுதான்னு தெரியலை.''

''நீ உன் மனைவியைக் கொன்றது உண்மையா பொய்யா?''

'கொன்றது நிஜந்தான்.''

''சாதாரணாய் இல்லை. மிகக் கொடுமையாய் கழுத்தில் குத்திக் கொன்றாய். இதெல்லாம் உன் மனைவியைக்

கொன்னு விட்டுக் காதலியோடு சேர்ந்திருப்பதற்காகத் தானே?''

''நான் என் காதலியைச் சந்திப்பதற்கும், என் மனைவியைக் கொன்றதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.''

அவன் வார்த்தைகள் முடியக்கூடவில்லை, ஜெயிலர் அவன் காலரைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, கன்னங்களில் மாறி மாறி அடித்தான், அதே வேகத்தில் கழுத்தைப் பிடித்து வளைத்து பலமாய் மூன்று நான்கு முறை அடித்து விட்டு தொலைவிற்குத் தள்ளி விட்டான், தட்டிலிருந்த சாதம் சிதறிப் போயிற்று. மகரிஷி வேகமாய் போய் சுவற்றோரமாய் விழுந்தான்.

ஜெயிலர் மூச்சிரைக்கக் கத்தினான். ''அடேய் திருட்டுப் பயலே! யாரோ ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு, அவளைக் கல்யாணம் பண்ணிக்காமல் வேறொரு பெண்ணையா பண்ணிக் கொண்டாய்? செய்து கொண்ட பிறகு காதலித்தவளை மறந்து போகாமல் மனைவியைக் கொன்றாயா? அதோடு இப்ப சுகமாய் வாழ்ந்துட்டிருக்கிற அந்தப் பெண்ணின் குடியைக் கெடுப்பதற்காக உன்னைப் பார்க்க வரச் சொல்கிறாயா? இதானா உன் கடைசி ஆசை? அதற்கு தாண்டா...அதற்கு தான் உனக்கு தூக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது...''—என்று திரும்பவும் ஆவேசம் பொங்கி வரவே, கிட்டே போய் மற்றொரு முறை ஓங்கி அடித்தான்.

ஃ ஃ ஃ

வெங்கட்ராமன்முத்து தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு, விடாமல் அலறிக் கொண்டிருந்த கடியாரத்தின் தலையைத் தட்டி அலாரத்தை நிறுத்தினான். அலாரம் நின்று விட்டது. அவன் உடனே படுக்கையிலிருந்து எழுந்திருக்காமல் கொஞ்ச நேரம் அப்படியே படுத்திருந்தான்.



அப்பொழுது நள்ளிரவைத் தாண்டி இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. அவனுக்கு அதொன்றும் சுபமான உதயம் இல்லை இன்னும் இரண்டு மணி நேரத்தில் தூக்குப் போடுவதற்காக ஏற்பாடுகளை யெல்லாம் செய்து முடிக்க வேண்டும். விடியற்காலை ஆறு மணிக்கு தூக்குப் போட வேண்டும். அதற்கு முன்னால் இரண்டு மணி நேரம் வேலை இருந்தது. கைதிக்கு அருகில் இருந்து குளிக்க வைப்பது, பகவத்கீதை புத்தகத்தை தருவது. தூக்கு மேடைக் கருகில் ஏற்பாடுகள எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று கடைசி முறையாய் பார்த்துக் கொள்வது முதலிய பொறுப்புக்கள் எல்லாம் அவனுடையதுதான்.

வெங்கட்ராமன்முத்துவுக்கு ஐம்பது வயது. கொஞ்ச நாட்களில் ரிடயராகி கேரளாவுக்குப் போய் செட்டில் ஆகி விடவேண்டும் என்பது அவன் ஆசை. சமீப காலத்தில் பல வருஷங்களாய் தூக்குதண்டனை ஜெயிலில் இல்லை. இப்பொழுதுதான் பல ஆண்டுகளுக்குப் பிறகு இது வந்திருக்கிறது.

வெங்கட்ராமன்முத்துவுக்கு தூக்குப் போடப்படும் கைதிகளின் பால் ரொம்பவும் இரக்கம் உண்டு. ஒவ்வொரு முறையும் கைதிகளை தூக்கிலேற்றப்படும் பொழுது அவன் மிகவும் வருத்தத்திற்காளாவான், குற்றவாளி எப்படிப் பட்டவனாய் தான் இருக்கட்டுமே, கொலை என்பதை அவன் ஆவேசத்தால்தான் செய்கிறான் என்பது அவன் நம்பிக்கை. அவ்வாறு ஆவேசத்தால் செய்த கொலைக்கு தண்டனையாய் அவனைக் கொல்வது எப்படிப்பட்ட நிலையிலும் நியாயமல்ல என்று நம்பினான் அவன்.

ஆனால் இம்முறை அவன் அவ்வாறு எண்ணவில்லை. திருமணமான ஆறு மாதத்திலேயே மனைவியைக் கொன்ற குற்றவாளியின் மீது அவனுக்குச் சற்றும் இரக்கம் ஏற்படவில்லை. கொலையுண்டவளின் போட்டோவைக் கூட

அவன் பார்த்தான். இரும்புக் கம்பியால் கழுத்தில் துளைத்து விட்டிருக்கிறான். அவ்வளவு கொடுமையான கொலையை அவன் இதுவரை பார்த்ததில்லை. சொந்த மனைவியைக் கொல்ல வேண்டிய காரணமென்ன என்று தான் அவனுக்குப் புரியவில்லை. இன்று பிற்பகலில் அந்த விஷயம் ஜெயிலில் அதிகாரிகளுக்கிடையே விவாதத்திற்கு வந்தது. ஜெயிலர் அப்பொழுது தனக்குத் தெரிந்த புது விஷயத்தைச் சொன்னான். குற்றவாளிக்கு அதற்கு முன்பே வேறொரு பெண்ணோடு பரிச்சயம் இருந்து வந்தது என்றும்—அவளைக் காதலித்தான் என்றும் அதன் காரணமாய் மனைவியைக் கொன்று விட்டான் என்றும் ஜெயிலர் சொன்னபொழுது வெங்கட்ராமன்முத்துவின் ரத்தம் சலசலவென்று கொதிக்கத் தொடங்கி விட்டது.

முத்துவுக்கு தெய்வபக்தி அதிகம். மனைவி மீது அபாரமான அன்பு. அப்படிப்பட்ட முத்து, இந்த விஷயம் தெரிந்து...முதல் முதலாக ஒரு ஆள் தூக்கிலேற்றப்படுவதற்கு முன்னால் சந்தோஷப் பட்டான். மனைவியை எவ்வளவு கொடுமையாய் கொன்றும் கூட கடைசி ஆசையாய் தான் காதலித்த பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்ததால் அவனுக்கு மிகவும் ஆவேசம் வந்து விட்டது. கையில் அதிகாரம் மட்டும் இருந்திருந்தால் முதல் நாள் பிற்பகலிலேயே தூக்கிலேற்றிவிடச் சொல்லி உத்தரவு பிறப்பித்து விட்டிருப்பான் முத்து.

இரண்டரை மணியளவில் அவன் தன் கடமைகளை முடித்துக் கொண்டு குவார்டர்ஸிற்கு வெளியே வந்தான். ஜெயில் காம்பவுண்டிற்கு அப்பால் இருந்தது சிப்பந்திகளின் குவார்டர்ஸ். அங்கிருந்து பத்து நிமிஷங்கள் நடந்து ஜெயிலுக்குள் நுழைந்தான். அடுத்த இரண்டு மணி நேரத்தில் அங்கே ஒரு ஆள் தூக்கிலேற்றப்படவிருக்கிறான் என்ற



விஷயம் தெரிந்துதான் போலும் சூழ்நிலை கூட சலனமில்லாமல் இருந்தது. டிஸம்பர் மாதமாதலால் குளிர்கூட அதிகமாகவே இருந்தது. சென்ட்டிரியின் புத்தகத்தில் முத்து கையொப்பமிட்டான். அங்கிருந்து அரை பர்லாங்கு தூரத்தில் இருந்த தூக்குக் கம்பத்திற்கருகில் போனான், தலையாரி கூட இன்னும் வரவில்லை. ஒரு போலீஸ் தூக்குக் கம்பத்திற்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்தான். மணல் மூட்டை, கயிறு, தூக்கு மரம் எல்லாவற்றையும் பரிசீலித்துவிட்டு முத்து கைதி இருந்த செல்லை நோக்கிப் போனான்.

தூக்கிலேற்றப்படவிருக்கும் கைதியை எஞ்சிய கைதிகளை விட்டு தொலைவில் தனி செல்லில் வைத்திருப்பார்கள். முத்துவைப் பார்த்ததும் அங்கிருந்த சென்ட்ரி சாவியை எடுத்துத் தந்து விட்டு சல்யூட் பண்ணினான். முத்து அந்த இரண்டாவது காம்பவுண்டிற்குள் நுழைந்தான். அங்கே குரோட்டன்ஸ் செடிகள் வரிசையாய் இருந்தன. நடுவே நிலா வெளிச்சத்தில் பாதை தெரிந்தது. திடீரென்று அவனுக்கு ஏதோ சந்தேகம் வந்தது. எல்லாம் சரிவர நடக்கவில்லை என்ற உணர்ச்சி ஏதோ அவனுக்குத் தோன்றிற்று. அதற்குக் காரணம் கூட புரிந்து விட்டது. காம்பௌண்டுக் கதவைத் திறந்ததுமே உள்ளேயிருக்கும் சென்ட்ரி அவ்விடத்திற்கு வரவேண்டும்.

ஆனால் வரவில்லை.

முத்துவின் சந்தேகம் நிஜமாயிற்று, அவன் விடுவிடென்று நடக்கத் தொடங்கினான். ஏறக்குறைய ஓட்டம் பிடித்தாற் போலவே அந்த செல்லை நோக்கிப் போனான். படிக்கட்டிற்கருகில் சென்ட்ரி விழுந்து கிடந்தான்.

பாதியாய் திறந்துகிடந்த கதவு அவனைப் பார்த்து கேலி செய்தது,

உள்ளே மகரிஷி இல்லை.

............

முத்து ஜேபிலிருந்து விசிலை எடுத்து இரண்டு முறை அழுத்தி ஊதினான்.

தொலைவில் போலீசாரின் காலடியோசைகள் கேட்டன.

சென்ட்ரீ ரத்தவெள்ளத்தில் கிடந்தான்,

முத்து அந்த சென்ட்ரியையே சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு ஆளை இன்னொரு ஆள் இவ்வளவு முரட்டுத்தனமாய்க் கொல்லக்கூடும் என்று அவன் கனவிலும்நினைத்திருக்கவில்லை.

சென்ட்ரியின் முகம் சப்பையாகி விட்டிருந்தது.

அவன் ஆத்மசாந்திக்காக ஒரு நிமிஷம் மௌனமாய் தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டான் முத்து.

அவனிடம், மனைவியைக் கொடுமையாய்க் கொன்ற அந்தக் கைதியின் பால் அதுவரை இருந்து வந்த வெறுப்பு இப்பொழுது பத்து மடங்காகி விட்டது.

'உன்னை எங்கள் ஆட்கள் எப்படியாவது பிடித்தே தீருவார்கள் மகரிஷி! அப்பொழுது நானே சுயமாய் என் கையால் உன்னைத் தூக்கிலேற்றுகிறேன் நீ துடிதுடித்துச் சாவதைக் காணாமல் நான் என் சர்வீஸிலிருந்து ரிடயராக மாட்டேன்'—என்று தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டாற்போல சொல்லிக் கொண்டான்.



## 2

காலிங்பெல் சப்தத்தைக் கேட்டுவிட்டு, படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு வந்து கதவைத் திறந்தான் வர்மா. எதிரே தென்பட்ட ஆளைப் பார்த்தவன் தன்னையறியாமல் ஓரடி பின் வாங்கினான். "நீயா...?" என்றான் தன் கண்களையே தான் நம்ப மாட்டாதவனாய்.

மகரிஷி உள்ளே அடியெடுத்து வைத்துக் கொண்டே "என்ன, பிசாசாய் வந்திருப்பேன்னு நினைத்து விட்டாயா?" என்றான் சிரிக்க முயன்றபடி.

வர்மா வாசலுக்குப் போய் எட்டிப் பார்த்து விட்டு யாரும் தம் வீட்டை கவனிக்கவில்லை என்று உறுதியாய் தெரிந்துக் கொண்ட பிறகு திரும்பி வந்தான்.

"ஜெயிலிலிருந்து தப்பிதநுக் கொண்டு விட்டாயா?"

"தப்பித்துக் கொண்டிருக்காவிட்டால் இன்று காலையிலேயே தூக்கிலேற்றப்பட்டு உயிரையும் இழத்திருப்பேன்."

"ஆனால் இதெல்லாம் பேப்பரில் வரவில்லையே?"

"விடியற்காலை ரெண்டு மணிக்குத் தப்பித்துக்
கொண்டேன் அதற்குள் பேப்பருங்க பிரிண்ட் ஆகிவிட்
டிருக்கும் ஒருக்கால் நாளைக்கு வரும் இச்செய்தி..."
என்றுச் சொல்லிக் கொண்டே நாற்காலியில் வந்து உட்
கார்ந்துக் கொண்டவன்—'ரொம்ப களைப்பாய் இருக்கு
ரவிவர்மா, எனக்கு ஒரு கப் காபி வேணும்" என்றான்.

வர்மா சமையலறைக்குள் நுழைந்து ஸ்டவ்வில் தண்ணீரை வைத்து விட்டு வந்தான். அவன் மனமெல்லாம்

பரபரப்பாய் இருந்தது. வந்து மகரிஷிக்கு எதிரே உட்கார்ந்துக் கொண்டு—''இதையெல்லாம் என்னால் நம்பவேமிடியலை. நீ இவ்வளவு சாகஸம் பண்ணுணுவாய்னு நினைத்திருக்கவில்லை'' என்றான்.

''நானும் பண்ணுவேன்னு நினைத்திருக்கவில்லை இதனால் எந்த லாபமும் இருக்காதுன்னும் தெரியும். போலீசார் என்றாவது ஒரு நாள் என்னைப் பிடித்தே தீருவார்கள். தூக்குக் கம்பத்தில் ஏற்றுகிற வரைக்கும் பேசாமலிருக்கவே மாட்டார்கள்.''

''அப்படியிருக்கும்போது ..''

நண்பனின் சந்தேகத்தைப் புரிந்துக் கொண்டவனாய் மகரிஷி சொன்னான்,

''எப்படியும் தூக்கிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட முடியாதுன்னு தெரிந்தும் இவ்வளவு கஷ்டப்பட்டு ஏன் தப்பித்துக் கொண்டாய் என்பது தானே உன் கேள்வி?''

வர்மா பதில் பேசவில்லை..

மகரிஷி ஆழ்ந்து பெருமூச்சு விட்டு விட்டு—

''மரணமடைவதற்கு முன்னால் சந்தனாவை ஒரு முறை பார்க்க விரும்பினேன். ஜெயிலரைக் கேட்டபோது ஒப்புக் கொள்ளவில்லை! மரணம் நெருங்க நெருங்க சந்தனாவைப் பார்க்க வேண்டுங்கிற ஆசை அதிகமாகி விட்டது. அதற்கு மேல் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. வெளியே வந்துட்டேன்'' என்றான்.

''ஆனால் இது எவ்வளவு ரிஸ்க் என்று யோசித்துப் பார்த்தாயா?''

''மரணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. மரணமடைவதற்கு முன்னால் அவளைப் பார்க்க வேண்டும் என்பது தான் என் ஆசை.''



''உன்னைப் பைத்தியக்காரன் என்பதா! அல்லது காதலுக்கு யாருமே தராத அவ்வளவு மதிப்பைத் தரும் 'அபூர்வ மனிதன்' என்பதா என்று புரியலை?''

வெகு நேரங்கழித்து மகரிஷி சிரித்தான். ''நீ என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள். நான் எப்படியும் சந்தனாவைப் பார்க்கணும்.''

''அவள் எங்கே இருக்கிறாள்?''

''தெரியாது.''

''ஒரு பக்கத்தில் போலீசார் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் அந்தப் பெண் எங்கே இருக்கிறாள் என்று எப்படி கண்டுபிடிக்க முடியும் உன்னால்? யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டிருப்பாளா, அல்லது இந்த ஊரில் தான் இருக்கிறாளோ இல்லையோ ஒன்றுமே தெரியாதே!''

''காலேஜிற்குப் போய் பழைய ரிகார்டுங்களைப் பரிசோதித்தால் அவள் அட்ரஸ் கிடைக்கலாம். அதைக் கொண்டு தெரிஞ்சுக்க முயற்சிப் பண்ணணும்.''

''ஒருக்கால் அவள் இந்த நாட்டிலேயே இல்லாவிட்டால்?''

''மொதல்ல ரிகார்டுகளில் முயற்சி பண்ணினால் அவள் பெர்சனல் அட்ரஸ் கிடைக்கலாம். அதிலிருந்து விசாரணை பண்ணிக் கொண்டே போனால், தற்சமயம் எங்கேயிருக்கிறாள் என்று தெரியலாம்.''

''இதெல்லாம் நடக்கக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும்!''

''ஒரு மாதம் ஆனாலும் சரி, நான் பார்த்தே தீரணும்''.

வர்மா, மகரிஷியை விநோதமாய் பார்த்தான்.

"அவளோடு ஒன்றாய் படித்துக் கொண்டிருந்த காலத்தில் உன் காதலை நீ வெளிப்படுத்தவில்லை. மொதல்ல உன் பேராவது அந்தப் பெண்ணிற்கு ஞாபகம் இருக்குமோன்னு தெரியலை. இப்ப நீ செத்துப் போவதற்கு முன்னால் அவளைப் பார்க்க விரும்புகிறாய்" என்று ஆழ்ந்து பெருமூச்சு விட்டுவிட்டு—

''சரி, என்னால் முடிந்த வரை முயற்சிக்கிறேன். ஆனால் இந்த பத்து நாளும் நீ எங்கே இருப்பாய்?'' என்று கேட்டான்.

''எங்கே இருந்தால் நல்லது என்கிறாய்?'' எதிர்க் கேள்வி கேட்டான் மகரிஷி,

"என்னிடம் இருந்தால் ஆபத்து. உன்னைப் போலீசார் அரெஸ்ட் பண்ணியபோதும். கோர்ட்டில் விசாரணை நடந்த போதும் நான் உனக்கு நிறைய உதவி பண்ணியது எல்லோருக்கும் தெரியும். நீ தப்பித்துக் கொண்டு விட்டது தெரிந்ததுமே அவங்க சந்தேகம் என் மேல் தான் வரும். இங்கே இருப்பது நல்லதல்ல!'

"ஏதாவது ஓட்டலில் இருக்கேன்'' என்றான் மகரிஷி.

"ஓட்டலிலா?'' ஆச்சரியத்தோடு கேட்டான் மகரிஷி.

"ஆமாம். சாதாரணாய் ஜெயிலிலிருந்து யாராவது தப்பித்துக் கொண்டால் எங்கேயாவது ஒளிஞ்சுக் கொண்டிருப்பாங்க என்றும், வெளியே வர பயப்படுவாங்க என்றுந்தான் எல்லோரும் நினைச்சுப்பாங்க. நான் சாதாரணமாய் ஓட்டலில் இருந்தால் யாருக்குமே சந்தேகம் வராது. கொஞ்சம் வேஷத்தை மாற்றிக் கொள்கிறேன், அந்தப் பொண்ணு எங்கே இருக்கிறாள் என்று நீ தேடு. தெரிந்ததுமே எனக்குத் தெரிவி. போய் ஒரு முறை பார்த்துவிட்டு அங்கிருந்தே நேராய் ஜெயிலுக்குப் போய் விடுகிறேன்,''



''அந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு திரும்பி ஓட்டலுக்கு வருவாயோ, அல்லது திரும்பவும் உயிர் மேல் ஆசை ஏற்பட்டுவிடுமோ யார் கண்டது? சரி, அந்தப் பெண்ணைத் தேட முயல்கிறேன்.'' எழுந்திருந்து-- "வா, உன்னை ஓட்டலில் இறக்கி விடுகிறேன்'' என்றான் வர்மா.

''வேண்டாம். நீயும் நானும் சேர்ந்து வெளியே போனால், நீ சொன்னது போல யாருக்காவது சந்தேகம் வந்து விட்டால் ஆபத்து. நான் மட்டும் தனியாய் போய் அறை எடுத்துக் கொள்கிறேன். நாளைக் காலையில் நான் பிடிபட்டுப் போனாலும் இந்தக் கேசில் உன் பாத்திரம் இருப்பது போல ருசு ஆகாது'' என்றுச் சொல்லிவிட்டு வெளியே நடந்தான் மகரிஷீ.

அவன் கதவைத் திறக்கப் போனபொழுது பின்னாலிருந்து கூப்பிட்டான் வர்மா,

''மகரிஷி...''

நின்று திரும்பிப் பார்த்தான் மகரிஷி.

"ஒரு நிமிஷம்'' என்று உள்ளே போனான் வர்மா.

சுமார் ஐந்து நிமிஷம் தேடிப் பார்த்து விட்டுப் பெட்டியின் அடியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தான் வர்மா.

''இதென்ன?'' கேட்டான் மகரிஷி.

''உனக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதுமே இனி இது அவசியமில்லைன்னு நினைத்து பெட்டிக் கட்டியில் எங்கேயோ போட்டு விட்டேன். இப்ப நீ வெளியே வந்து விட்டாய். அதனால் ஒரு முறை இதைப் படித்தால் நல்லது.''

மகரிஷி ஆச்சரியமடைந்தவனாய் அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். முதல் பக்கத்தைத் திருப்பினான். அது ஒரு டைரி.

முதல் பக்கத்தில் பெயரைப் பார்த்ததுமே அவன் முகம் களையிழந்தது.

''ஸ்ரீ வாணி''

தன் மனைவி!

சிரிக்க முயன்றவனாய்-- ''இந்த டைரியைப் படித்து நான் புதிதாய் தெரிந்துக்க வேண்டியது என்ன இருக்கு வர்மா?'' என்று கேட்டான்.

''படி. படிக்கிறதால் நஷ்டம் ஒன்றுமில்லையே?'' என்றான் வர்மா சுருக்கமாய்.

''சரி, போயிட்டு வரேன்'' என்று மகரிஷி அந்த டைரியை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தான்.

அங்கிருந்து நேராய் ஓட்டலுக்குப் போனான்,

அவன் வாழ்க்கையின் கடைசி பத்து நாட்களையும் நல்ல ஓட்டலில் கழிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான், வர்மா தந்த பணம் பாக்கெட்டில் பத்திர மாக இருந்தது.

'ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்ட கைதி' என்று பெரிய போட்டோ முதல் பக்கத்தில் வருவதும், பிடித்துத் தருபவருக்கு லட்சம் ரூபாய் பரிசு என்று அறிவிப்பைப் போடுவதும், கேவலம் சினிமாக்களில் மட்டுந்தான் நடக்கும் என்று அவனுக்குத் தெரியும். இன்று காலையில் நடந்த இந்த விஷயம் இன்னும் வெளியே பரவவில்லை. அதனால் அவன் பயப்படத் தேவையில்லை என்றெண்ணிக் கொண்டான்.

சாதாரணமாய் நடந்துக் கொண்டே போய் கௌண்டரில் கையெழுத்துப் போட்டு விட்டு அறையை எடுத்துக் கொண்டான்.



மூன்று மாடிக் கட்டிடம் அது.

மூன்றாம் மாடியில் கடைசி அறை அவனுடையது. ஒரு விதத்தில் நல்லது தான் என்றெண்ணிக் கொண்டே, ரிஸப்ஷனிலிருந்து அறைச் சாவியைப் பெற்றுக் கொண்டு அவ்விடத்திற்கு வந்துச் சேர்ந்தான்.

கையிலிருந்த டைரியைக் கட்டிலில் போட்டு விட்டு பாத்ரூமிற்குப் போய் சுமார் ஒரு மணி நேரம் குளித்தான். வெகு நாட்களுக்குப் பிறகு வென்னீரில் குளித்தது சுகமாய் இருந்தது.

திரும்பி அறைக்குள் வந்தான்.

தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. அதுவும் நேற்றிரவு ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் ஆழ்ந்து போய் தூங்கவேயில்லை. அப்படியே படுக்கையில் சாய்ந்தான். கைக்கு டைரி தட்டுப்பட்டது. அதை வெறுப்போடு தொலைவில் வீசியெறிந்தான். மனைவியின் பொருட்கள் மட்டுமில்லை, யோசனைகள் கூட அவனுக்கு வெருப்பைத் தந்தன.

அதுவரை கண்களை சுழற்றிக் கொண்டு வந்த தூக்கம் மாயமாகி விட்டது. பலவந்தமாய் உறங்க முயன்றான். மெல்ல மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்துக் கொண்டிருந்தான். அவன் யோசனைகள் கடந்த காலத்தை நோக்கித் தாவிக் கொண்டிருந்தன.

## 3

ஆணும் பெண்ணும் வாழ்க்கையின் இரண்டாவது கட்டத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும் முதலிரவு...

மணமக்களின் கற்பனைகளுக்கு அஸ்திவாரம் போட வேண்டுமென்றாலும். அவர்களின் வாழ்க்கைக் கட்டிடம் சூதாட்ட மேடையைப் போல இடிந்து விழவேண்டுமென்றாலும், அன்றிரவு தான் ஆரம்பம். ஒருத்தரையொருத்தர் புரிந்துக் கொள்வதற்கும், ஒருத்தர்பால் இன்னொருத்தருக்கு இருக்கும் அன்பை எடுத்துக் காட்டிக் கொள்வதற்கும் அன்றிரவுதான் வாழ்க்கைப் புத்தகத்தின் முதல் வாக்கியம்.

பூ முழுமையாய மலர வேண்டுமென்றாலும் சுலபமாய் வாடிப் போய்விட வேண்டுமென்றாலும், அதற்கு வித்திடப்படுவது அன்றிரவுதான்.

அவ்வறையில்...! ஜாதி மல்லிகைப் பூக்களின் வாசனையும். அகர்பத்திகளின் வாசனையும், பட்டு மெத்தையும்... விரகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் விட வேதனையாய் இருந்தது அவ்வறையில் இருந்த ஒரே ஒரு விளக்கு தான். அன்றிரவு தன் தேவை, அவர்களுக்கு இல்லை என்ற வருத்தத்தோடு அது குறுகிப் போய் மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது.

சரியாய் அந்தச் சமயத்தில் பெண்களின் சிரிப்பு சப்தம் கதவைத் தள்ளிற்று. வளையல்களின் கலகல ஓசை அவனை உள்ளே தள்ளின. சிரிப்பு சப்தங்களுக்கிடையிலேயே கதவு தாழிட்டுக் கொண்டு விட்டது.

தானே முன்நோக்கிப் போக வேண்டுமா, அல்லது அவனே வந்து இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டு நடத்தி அழைத்துச் செல்வானா.

என்று தெரியாமல் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தாள், அவள் கொஞ்ச நேரம்.

அவன் நிலைமை கூட அதுபோலவே தான் இருந்தது.



கடைசியில் அவளே நகர்ந்தாள். அவள் அவனுக்கு எதிரே வந்து தலைகுனிந்தபடி நின்றாள்.

அன்றிரவுக்காக மனதிற்குள் எவ்வளவோ ஒத்திகைகளைப் போட்டுக் கொண்டு விட்டு, இறுதியில் எல்லாவற்றையும் மறந்துபோய், என்ன செய்வதென்று தெரியாமல் கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

கடிகாரத்திலிருந்து வினாடிமுள், வினாடிக்கு வினாடி முள்ளாய் குத்துவதுபோல உணர்வு. தொண்டையைச் செருமிக் கொண்டே.- ''உட்காரு ஸ்ரீவாணி'' என்றான்.

அவள் நிசப்தமாய் பால் தம்ளரை அவனிடம் தந்து விட்டு கட்டில் விளிம்பில் உட்கார்ந்து கொண்டாள்.

அவன் பாதிப் பாலைக் குடித்துவிட்டு, தம்ளரை அவளிடம் தந்தான். அவள் குடித்ததும் உரிமையோடு தம்ளரை வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

அவ்விடத்தில் சூழ்ந்து கொண்டிருந்த நிசப்தம் அவனுக்குப் பொறுமையை இழக்கச்செய்தது, அதனைச் சிதறடித்தபடி ''ஏதாவது பேசு ஸ்ரீ வாணி'' என்றான்.

என்ன பேசுவது என்பதுபோல அவள் இமைகள் படபடத்தன.

அவன் பேச்சிற்கு பதிலளிக்காவிட்டால் நன்றாயிராது என்றெண்ணிக் கொண்டாளோ என்னவோ— மெதுவாய் நிமிர்ந்து ''என்ன பேசறது?'' என்றாள்.

''ஏதாவது... உனக்குப் பிடித்த டாபிக்'' என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. தரையைப் பார்த்துக் கொண்டிருந்த அக்கண்களில் என்ன யோசனைகள்

தேங்கி நின்றனவோ. அவனுக்குப் புரியவில்லை. அவ்வளவு நிசப்தத்தைத் தாங்க முடியாதவனாய் அவளை நோககி நெருங்கினான். உரிமையோடு அவள் கைகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டு ''உன்னிடம் என்னைப்பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன்-'' என்றான்.

அவளுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. சுருக்கமாய்— ''உங்க இஷ்டம்'' என்றாள். அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்ததுதான் தாமதம் அவன் அவளுக்கு இன்னும் நெருக்கமாய் நகர்ந்துக் கொண்டு— அவள் தலையைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு—''நான் ஒரு கேள்வி கேட்கிறேன், தப்பாய் எடுத்துக்கொள்ள மாட்டாயே?'' என்றான்.

முதலிரவன்றைக்குக் கணவன் ஒரு கேள்வி கேட்பதற்குக்கூட தன் அனுமதியைக் கேட்டது அவளுக்கு மிகத் திருப்தியை அளித்தது.

''கேளுங்கள்'' என்றாள்.

''கலியாணத்திற்கு முன்னால்'' ஒரு வினாடி நிறுத்தி விட்டு, முடித்தான்— யாரையாவது காதலித்தாயா?''

முதலில் அவளுக்கு அந்த வார்த்தை புரியவில்லை. புரிந்தும் சட்டென்று அவனை விட்டுவிட்டு தொலைவிற்கு நகர்ந்து கொண்டே-- ''உங்களுக்கு ஏன் வந்தது இந்த சந்தேகம்?'' என்று கேட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டே அவள் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு அழுத்திவிட்டு அதை விட்டான். ''அவ்வளவு பயப்படாதே. சும்மா கேட்டேன் அவ்வளவு தான். தெரிஞ்சுக்கலாம்னுதான்'' என்றான். அவள் உடனே மறுத்துத் தலையாட்டி விட்டு-- நான் இந்தமாதிரி விஷயத்திற்கெல்லம் ரொம்ப அப்பாற்பட்டவள்-- என்றாள். அவள் குரலில் தென்பட்ட அப்பாபித்தனத்துக்கு மெய்மறந்தவனாய் அவளை அணைத்துக்



கொண்டே— ''உண்மையில் இதற்குள் கல்யாணம் பண்ணிக் கொள்கிற உத்தேசம் எனக்கு இல்லாமலிருந்தது. ஆனால் உன்னைப் பண்ணிக் கொண்டு நான் தப்புப் பண்ணி விடவில்லைன்னு தோணுகிறது'' என்றான். அவள் சட்டென்று-- ''ஒருக்கால் நான் யாரையாவது காதலித்ததாய் சொல்லியிருந்தால் உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்று கேட்டாள்.

அவன் ஒரு வினாடி வாயடைத்துப் போய்விட்டான். அவள் அவ்வாறு கோட்பாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. பிறகு சிரிக்க முயன்றவனாய் ''அப்படியெல்லாம் இருந்திருக்காது'' என்றான்.

''ஒருக்கால் இருந்தால் ..?''

அவன் உறுதியோடு-- ''திரும்பவும் உங்களை ஒன்று சேர்த்துவைக்க முயன்றிருப்பேன்.'' என்றான்,

அவள் அவன் முகத்தைப் பார்த்துத் தலை குனிந்தபடி மெல்லிய குரலில் சொன்னாள்,

''ஆனாலும் நான் இதுவரை அப்படிப்பட்ட யோசனைகளே பண்ணியதில்லை. என் இருபது வருடவாழ்க்கையும் படிப்பதற்கே சரியாயிருந்தது. வேறுயோசனை பண்ணுவதற்குக்கூட நேரமே கிடைக்கவில்லை. ஆனால் வாழ்க்கையில் கல்யாணம் என்று நடந்தால் என் சகலத்தையும் அவருக்கே அர்பணிக்க வேண்டும் என்று மட்டும் எண்ணிக்கொள்வேன்.''

அதைக் கேட்டு அவன் பரவசமடைந்து போனான். அவன் கண்கள் செருகிக் கொண்டன. அவளை அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்த அவன் கைகள் நடுங்கின. சந்தோஷத்தால் நடுங்க முயன்றன. சட்டென்று அவள் கன்னத்தில் முத்தமிட்டான். பிறகு மெல்ல தொலைவிற்கு நகர்ந்துகொண்டான். அவள் புனிதத்திற்கு முன்னால் தானும் நேர்மையாளன்தான் என்று சொல்லி

கொள்ள வேண்டும் என்றெண்ணி. மனமும் மனமும் ஒன்று சேர வேண்டுமானால் முதலில் திரை விலக வேண்டும்.

''ஸ்ரீ வாணீ...'' என்றான் ''நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன்.''

எரிமலை வெடித்துவிடவில்லை. குறைந்தது லேசான அதிர்ச்சி கூட இல்லாமல் நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்துக்கொண்டே— ''என்னை அழவைக்கணும்னு தானே இப்படிச் சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

அவள் நம்பிக்கையைப் பொய்ப்பிக்கப் பிடிக்காவிட்டாலும்—முதலிலேயே எல்லாவற்றையும் சொல்லிவிட்டு தான், பிறகு விவாக வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்றெண்ணியதால் அவன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான்,

''அவள்...அவள் உங்களை விட்டுவிட்டுப் போய்விட்டாளா?'' அவள் குரலில் தீவிரம் இல்லை. இரக்கம் இருந்தது. அதை கவனித்து அவன் நிம்மதியடைந்தான்.

''இல்லை. அவள் என்னை அந்தக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கவில்லை. சதா என்னுடைய அன்பை காட்டிக் கொண்டிருப்பதில்தான் என் கவனமெல்லாம் இருந்ததே தவிர, அவள் என் சிநேகத்தை எப்படி எடுத்துக்கொண்டாள் என்று தெரிந்து கொள்ளாமல் போய்விட்டேன். தெரிந்ததும் அவள் சிநேகம் வெதும் சிநேகம் மட்டுமே என்பது புரிந்தது. என் காதலை எனக்குள்ளேயே சமாதியாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது; ஆனால் ஒன்று— இன்னும் அவளை உயிருக்கு உயிராகவே நேசிக்கிறேன் நான்.''

முழுவதும் சொன்ன பிறகு அவனுக்கு. '' முதலிரவன்றைக்கே தன் பழைய விஷயங்களைச் சொல்லி



அவள் மனதைப் புண்படுத்திவிட்டோமோ என்ற குற்ற உணர்ச்சி தோன்றியது.

''என்னை மன்னித்துக் கொள் வாணீ'' என்றான்.

அவள், அவன் மார்பில் தலையைச் சாத்துக்கொண்டிருந்தாள். அவன் சொல்லி முடிந்ததும், அவனை மேலும் நெருங்கி—'' நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! கல்யாணத்திற்கு முன்னால் கண்டபடியெல்லாம் சுற்றியலைந்து கெட்டுப்போய். அவதயெல்லாம் மூடிமறைத்துக் கொண்டு. ஒன்றுமே நடக்காதது போல நடிக்கிறவங்களை விட நீங்கள் பல மடங்கு மேல்! இந்த விஷயத்தை நீங்கள் சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரிந்து கொள்ள சான்ஸ் இல்லை, ஆனாலும் சொன்னீங்க என்றால், அதில் என்னை மோசம் பண்ணிவிடக் கூடாதேங்கிற நேர்மை இருக்கிறது புரிகிறது'' என்று தன் அபிப்பிராயத்தைத் தெளிவாய்ச் சொன்னாள். முதலில் அவள் என்ன சொன்னாள் என்று அவனுக்குப் புரியவில்லை, புரிந்ததும் ஆச்சரியமடைந்து விட்டான். அப்படிப்பட்ட பதில் அவளிடமிருந்து வரும் என்று எதிர்பார்த்திராததால் உண்டான ஆச்சரியம் அது! ஆனால் சட்டென்று சுதாரித்துக் கொண்டான். தன்னை ஒரு மோசக்காரனாய் பாவிக்கிறாளோ என்றெண்ணிய அவனுக்கு அந்த வார்த்தைகள் திகைப்பை அளித்தன.

அவள் சொல்லி முடித்ததும் அவன் முற்றிலும் நெகிழ்ந்து போய் விட்டான்.

அதற்குப் பிறகு...ஒருவர் மீது மற்றொருவர் நிலா வெளிச்சத்தைப் போல பரவி நின்று, அமிர்தத்தைப் பகிர்ந்து கொண்டு இருவரையும் ஒன்று சேர்த்தது அந்த நிமிடம்..சிருஷ்டி ரகசியம்.

விடியற்காலையில் எப்பொழுதோ தூக்கத்தில் ஆழ்ந்து போவதற்கு முன்னால் அவன் மார்பிலிருந்த உரோ

மங்களை நீவிக்கொண்டே "அந்தப் பெண்ணின் பெயர் என்ன?" என்று கேட்டாள் அவள்.

"சந்தனா."

## 2

மேகங்கள் விலகிப் போய் விட்டால் வானம் நிர்மல மாகி விடுகிறது. புயலின் சீற்றம் தணிந்து போய் விட்டால் வழி தெளிவாகி விடுகிறது. தவறான அபிப்பிராயங்கள் நீங்கி விட்டால் அந்தக் குடும்பம் சுவர்கமே ஆகிவிடுகிறது.

அவன் தன் காதல் விஷயத்தை மனைவியிடம் சொல்லி விட்ட பிறகு நிம்மதியடைந்தான். அவளும் அந்த விஷயத் தைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளாததால் அவனுக்கு அவள் மீது அன்பு இருமடங்காயிற்று.

ஆனால் சந்தனாவை மறப்பதற்கு மட்டும் அரும்பாடு படவேண்டியிருந்தது. திடீரென்று எந்த ராத்திரியிலாவது அவளைப் பற்றிய ஞாபகம் வந்து விடும். மனைவிக்கு தவறு இழைத்து விட்டோம் என்ற உணர்ச்சி அவனை வாட்டத் தொடங்கி விடும். அவன் சிறு குழந்தையாகி அவள் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டு விடுவான்.

சந்தனாவின் பால் அவனுக்கு இருந்து வந்த அன்பு சாதாரணக் கவர்ச்சி அல்ல. கவர்ச்சி தற்காலிகமானது. அவள் அழகைப் பார்த்து காதலித்திருந்தால், ஸ்ரீ வாணி அவளையும் விட அழகாய் இருந்தாளே! அழகையே பெரி தாய் எடுத்துக் கொண்டு காதல் வசப்படுகிற சாதாரண



அன்பில்லை அவனுடையது. அவன் கண்ணோட்டத்தில் காதல் என்றால் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்கிற ஏரி நீரைப் போன்றதல்ல...ஆடாமல் ஒரே இடத் தில் இருந்து கொண்டு தாமரைப் பூக்களுக்கு வாசஸ்தல மாய் இருக்கும் தடாகத்தைப் போன்றது...அதனால்தான் அவன் நினைத்துக் கொண்டிருந்தாற்போல அத்தனை எளிதாய் அவளை மறந்து போய்விட முடியவில்லை.

ஆனால் இவளை மறக்க வேண்டும் என்று மட்டும் திடமாய் எண்ணினான். ஸ்ரீ வாணியின் கழுத்தில் தாலி கட்டிவிட்ட அந்த நிமிஷத்திலிருந்தே அவன் எல்லா விஷ யத்திலும் அவளை மட்டுமே மனைவியாய்—காதலியாய் ஊகித்துக் கொண்டான். அவளைப் பற்றிய ஞாபகங்களை ஏறக்குறைய மறந்து போய்விடவே முயன்று கொண்டிருந் தான்.

அந்த விதமாய் சந்தனா அவன் யோசனைகளை விட்டு ஏறக்குறைய விலகிப் போய்க்கொண்டிருந்த சமயத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று அவன் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி விட்டது.

காலம் அவன் நம்பிக்கையைத் தவிடு பொடியாக்கி விட்டது.

..அவன் அடிக்கடி கேம்ப்பிற்குப் போவான். முதலில் எல்லாம் ஸ்ரீ வாணியை விட்டு தொலைவிற்குப் போனால் எங்கே சந்தனாவின் யோசனைகள் தன்னைப் பிடித்துக் கொண்டு விடுமோ என்று பயந்து அவளையும் கூடத் தன்னோடு வரச் சொல்லுவான்.

ஓரிரண்டு முறை இருவருமாய் அவ்வாறு வெளியூர் களுக்கு கேம்ப்பிற்குப் போய் விட்டு வந்த பிறகு, அவள், தான் இனி வரமாட்டேன் என்று சொல்லி விட்டாள். "கேம்பில் நீங்கள் காலையில் போய் சாயந்திரம் திரும்பி வரீங்க. அதுவரை நான் உங்களுக்காகக் காத்துக் கொண்டே உட்கார்ந்திருக்கணும்" என்றாள்.

சில சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் தான் ஆனந்தமே இருக்கும்'' என்றான் அவன்.

''அப்படி எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை வீட்டிலேயே எதிர்பார்த்துக் கொண்டிருப்பேனே! ஊரை விட்டு எங்கேயோ கண்காணாத ஊரில், ஓட்டல் அறையில் தனியாய் இருக்க பயமாய் இருக்கு எனக்கு'' என்று தப்பித்துக் கொண்டாள்.

அதற்குப் பிறகு கேம்ப்புகளுக்குப் போனால் தினமும் நாலு தடவையாவது வீட்டிற்குப் போன் பண்ணுவான் அவன். அவள் கொஞ்சலுடன் அலுத்துக் கொள்வாள் ''தினமும் ஒரு தடவை போன் பண்ணுங்கள், போதும், நாலு தடவை பண்ணினால் பேசவே வார்த்தைகள் கிடைக்கமாட்டேங்கிறது'' என்பாள்.

அவனுக்கும் நிஜந்தான் என்று தோன்றியது. கேம்பிலிருந்து வரும்பொது அவளுக்காக என்னென்னவோ பரிசுகளை வாங்கி வருவான். கேம்பிற்குப் போனால் எந்த யோசனையும் சூழ்ந்து கொண்டு விடாமல் தினமும் அவளுக்கு கடிதம் எழுத உட்கார்ந்து விடுவான். அன்றைக்கு.. அவன் வேலையை சீக்கிரமாய் முடித்துக் கொண்டு சொன்னதற்கு ஒரு நாள் முன்பாகவே கிளம்பி வந்தான். கதவைத் தட்டப் போனவன் நின்றுவிட்டான். உள்ளேயிருந்து இரண்டு குரல்கள் கேட்டன. ஒன்று யாரோ ஆண்குரல். இன்னொன்று மட்டும் அவன் மனைவியுடையது!

இந்தச் சமயத்தில் தன் வீட்டில் யார் இருப்பார்கள் என்ற சந்தேகத்துடன் உள்ளே, நுழையப் போனவன் அந்தச் சம்பாஷனையைக் கேட்டு விட்டுத் தன் முயற்சியைக் கைவிட்டான்.

உள்ளேயிருந்து ஆண் குரல் கேட்டது.

உன்கணவன் இப்படி அடிக்கடி கேம்பிற்குப் போய் விடுவது நம்ப அதிர்ஷ்டம்.''



''ப்ளீஸ், அங்கேயிருந்து கையை எடுங்கள்.''

ஏன்? நன்றாயில்லையா?''

''நன்றாய் தான் இருக்கு. ஆனால்...''

முத்தமிட்ட சப்தம். பிறகு அவன் குறல்.

''ஏழுவருஷப் பழக்கம். உனக்கு எங்கெங்கே நன்றாயிருக்குன்னு எனக்கா தெரியாது?''

ஸ்ரீவாணியின் குரலில் மந்திர ஸ்தாயியில் லேசான முணுமுணுப்பு— ''கொள்றீங்க.''

''நிஜமாவா? கல்யாணமாகி ஆறுமாதமாகியும் உன் உடம்பில் எந்த மாறுதலும் இல்லை பதினாறு வயதில் எப்படி இருந்தாயோ அப்படியே தான் இப்பவும் இருக்கிறாய். உன் கணவன் அதிர்ஷ்டக்காரன்.''

''இப்ப அவரைப் பற்றி என்ன பேச்சு?''

''ஏன்? சென்ட்டிமென்ட் குறுக்கிடுகிறதோ?''

பிறகு சம்பாஷணை காதில் விழவில்லை. அவன் முத்தங்களால் அவளைத் திணறடித்துக் கொண்டிருந்தாற்போல லேசான திணறல் சப்தம் கேட்டது. அதற்கு மேல் அதிகநேரம் மகரிஷியால் அங்கே நின்று கொண்டிருக்க முடியவில்லை.

தான் கேட்டதெல்லாம் பொய் என்றும் இதெல்லாம் கனவு என்றும்... ஆசைப்பட்டவனாய் முன் நோக்கி நகரப்போண அதற்குள் மரத்துப் போனாற்போலாகி விட்ட அவன் உடல் லேசாய் தள்ளாடிற்று. கைத்தாங்கலாய் கதவைப் பிடித்துக்கொண்டான்

உள்ளே தாழிடாமலிருந்ததால் அது பெருத்த சப்தமிட்டுக் கொண்டே திறந்து கொண்டு சுவற்றில் அடித்துக் கொண்டு நின்று போயிற்று.

ஒரே கட்டிலில்— ஒருவர் அணைப்பில் இன்னொருவ ராய் இருந்த அவ்விருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்தார்கள்.

அவள் கீழே விழுந்த புடவையை உருவிக்கொண்டு, மார்பிற்குக் குறுக்காய் வைத்துக்கொண்டாள்.

ஒரு வினாடி... அங்கே காலம் ஸ்தம்பித்து விட்டது.

மகரிஷி சிலையாய் நின்றுபோய் அவ்விருவரையும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். அவளை அக் காதலன் இன்னும் அப்படியே அணைத்துப்பிடித்துக் கொண்டேயிருந்தான். அவன் உடம்பில் பேன்ட் மட்டுமே இருந்தது சட்டை பக்கத்திலிருந்த ஸ்டான்டின் மீது இருந் தது. அங்கிருந்து எழுந்திருக்க வேண்டும் என்றோ ஓடிப் போய் விடவேண்டும் என்றோ கூட தோன்றாத அளவிற்கு பெரிய அதிர்ச்சியில் இருந்தாற்போல தோன்றினான் அவன்.

முதலில் தேறிக் கொண்டது அவள் தான். சட் டென்று கட்டிலை விட்டு இறங்கி, காதலனை எச்சரிப் பது போல— ''போய்விடுங்க, போய்விடுங்க'' என்று கத்தினாள் சட்டென்று சுய நினைவிற்கு வந்தவனைப் போல அவன் எழுந்திருந்து, சட்டையைக் கையிலெடுத் துக் கொண்டான். அதுவரை ஸ்தம்பித்துப் போனபடி அப்படியே நின்று கொண்டிருந்த மகரிஷிகூட அவள் வார்த்தைகளால் விழிப்படைந்து அவன் மீது பாய்ந்தான். மாறி மாறி விளாசத் தொடங்கினான்.

அவன் மகரிஷியின் உதையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று பார்த்தானே தவிர, திருப்பி அடிக்கவில்லை. சில சமயம் குற்றம் பண்ணிவிட்டோமே என்ற உணர்ச்சி துணிச்சலைத் தருவது போலவே முற் றிலும் துணிச்சலை, இழக்கவும் செய்யவல்லது என்பதற்கு எடுத்துக்காட்டைப் போல அவன் அடிவாங்கிக் கொண் டேயிருந்தான்.



ருத்திரதாண்டவம் எடுத்துக் கொண்டிருந்தான் மகரிஷி. அவள் பயம் அதிகரித்தது. அப்படியே விட்டு விட்டால் இருவருள் யாராவது ஒருவர் கொலையாளியாய் மாறிவிடுவார்கள் என்றெண்ணிணாளோ என்னவோ? சட் டென்று ஓடிப்போய் அவ்விருவருக்கும் குறுக்காய் நின்று கணவனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். ப்ளீஸ்' நான்சொல்றதைக் கேளுங்க'' என்று கெஞ்சினாள். கோபத்தால் அவன் அவளைப் பொருட்படுத்தாமல் பிடி த்துத் தள்ளிவிட்டு' அவன் மீது பாய்ந்தான்.

அவள் துள்ளி விழபோய் சுவற்றை பிடுத்துக் கொண்டு நின்றவள்— ''ப்ளீஸ், போய்விடுங்க'' என்று காதலனை திரும்பவும் எச்சரித்தாள்.

பெரிய மலையைப் போல தன் மீது பாயவந்த மகரிஷியைப் பார்த்ததுமே' அவன் வாசலை நோக்கி ஓடப் போனான். அவனைப் போகவிடாமல் தடுத்து, முழங்கா லால் வயிற்றில் பலமாய்க் குத்தினான் மகரிஷி.

வலி தாங்க முடியாமல் அவன் கத்திய கத்தல் அவ் வறைச் சுவர்களில் மோதி எதிரொலித்தது. தரையில் சுருண்டு விழுந்தான் அவன்.

அவள் கணவனின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''ப்ளீஸ்... என் முகத்தைப் பார்த்து விட்டுவிடுங்க'' என்றாள்.

தங்கத்தாலான மாயமான்தான் தென்பட்டது அவன் கண்களுக்கு. அவ்வளவுதான்...

அவள் கூந்தலைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி ' ஓஹோ! அவ்வளவு காதல் போலிருக்கு அவன்மேல்! அப்படிப்பட் டவள் என்னை ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டாய்?'' கோபத்தால் அவன் கண்கள் அக்னிபிழம்பாய் இருந்தன'

''என்னை மன்னிச்சுடுங்க'' என்றாள் அவள் அழுது கொண்டே.

உன்னை மன்னிப்பதா? இம்பாஸிபிள்!'' என்று அவள் கன்னத்தில் ஓங்கி அடித்தான்.

அப்பொழுது தான் நகர்ந்தான் அவள் காதலன். தப்புப்பண்ணிய உணர்ச்சியால் அடிவாங்கிய அவன் அத ற்குள் தேறிக்கொண்டவனாய் வேகமாய்ப் போய் மகரிஷி யின் காலரை பிடித்து இழுத்தான்

அவ்வளவு நேரமாய் வாயை மூடிக்கொண்டு செம்மை யாய் உதைவாங்கிய அவன் தன்னை எதிர்த்துப் பாய வந்ததைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை மகரிஷி. அதனால் அவனைத் திரும்பி எதிர்க்கப் போனான். அதற்குள் 'அவன்' பக்கததில் ஃபிரிட்ஜின் மீதிருந்த பித்தளை ஃபிளவர் வாஸை எடுத் வேகமாய் மகரிஷி யின் மேல் வீசியெறிந்தான். தரையில் விழுந்து உருண்டது. ஸ்ரீ வாணி சட்டென்று ஓடிப்போய் கணவனைப் பிடித் துக்கொள்ளப் போனாள்,

'என்னைத் தொடாதே' என்பது போல அவனை வேகமாய் பின்னுக்குத் தள்ளிவிட்டான் அவன் அந்த நடவடிக்கை அவன் வாழ்க்கையையே திசைத்திருப்பி விட்டது.

அவள் தலை பிரிட்ஜில் போய் மோதிக்கொண்டு பெருத்த சப்தத்தை எழுப்பிற்று. அவள் தரையில் சாய்ந்துக் கொண்டிருக்கையில் கீழே இருந்த வைப்பரின் கம்பி கழுத்துவழியாய் உள்ளே குத்திக்கொண்டு விட்டது.

எல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் நடந் முடிந்து விட்டது.

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் கண் கள் திறந்தே இருந்தன ஆனால் அக்கண்களில் ஏதோ அசாதாரணத் தன்மை தென்பட்டது. கிட்டே போனான் அவன்.



அவளிடம் சலனம் சிறிதும் இல்லை. திறந்து கொண்டிருந்த கண்களைப் பார்த்தான். அப்பொழுது தான். ஏற்பட்டது அவனுக்கு அந்தச் சந்தேகம். குனி ந்து மூக்கின் மீது விரல்வைத்து மூச்சு வருகிறதா என்று பார்த்தான்.

மூச்சு இல்லை அவனுக்கு அவள் மரணமடைந்து விட்டாள் என்ற விஷயம் புறிந்தது.

ஏதாவது பொருள் உடைந்தால் சப்தம் உண்டாகும். மனம் உடைந்தாலோ நிசப்தந்தான் எஞ்சி நிற்கும். அங்கே காற்று கூட ஸ்தம்பித்து விட்டாற் போலிருந்தது. அவனும், அவளுடைய அந்தக் காதலனும் நடந்த சம்பவத்தை ஜிரணித்துக் கொள்வதற்குக் கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டாற்போல சிலையாய் நின்று கொண்டி ருந்தார்கள்;

மகரிஷியின் கோபம் முற்றிலும் தணிந்து விட்டது. ஒரு வினாடிக்கு முன்னால் உயிரோடிருந்தவள் இப்பொழுது இல்லை என்பதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை. அவள் அவனுக்குத் தெரியாதவாறு ரகசியமாய் தப்புப் பண்ணியிருக்கலாம். ஆனால் இப்பொழுது திறந் திருந்த அக்கண்கள் அவனை உலுக்கி எடுப்பது போலவே இருந்தன. இன்னும் அம் முகத்தில் அவனுக்கு அப்பாவித் தனமே தென்பட்டது.

கேம்ப்பிற்குப் புறப்படும்பொழுது வாசல் வரை வந்து வழியனுப்பி விட்டு—' சீக்கிரமாய் திரும்பி வந்து விடுங் கள்'' என்று கெஞ்சினாற்போலவே இருந்தது அதெல் லாம் உதட்டளவில் சொன்ன வார்த்தைகளாகவே இருக் கலாம். 'சீக்கிரமாய் வராவிட்டால்தான் நல்லது' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கலாம். அதற்குப் பிறகு அந்த விஷயத்தைக் காதலனோடு பகிர்ந்து கொண்டு சிரித்திருக்கலாம். அவன் மிகக் கொடுமையாய் ஏமாற்றப்பட்டு விட்டான். அவனுக்குத் தெரியாமல் அவ

ணைப் பற்றி, அவன் இல்லாத சமயத்தில் கேலியாய், இளப்பமாய் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள். அவன் தெரியாமல் அவளைத் தள்ளி விட்டான் துரதிர்ஷ்டம் துரத்திக் கொண்டு வந்து மரண உருவத்தில் அவளைக் கொன்று விட்டது.

...ஆனால் இதையெல்லாம் யார் நம்புவார்கள்? நீதிமன்றம் நம்புமா?

அவன் தரையிலிருந்து எழுந்து நிற்க முயற்சிக்க வில்லை. இன்னும் மரணமடைந்துவிட்ட மனைவியையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அதற்குள் அவள் காதலன், கனவிலிருந்து தேறிக்கொண்டவன் சட்டென்று சொரணை வந்தவனாய் அங்கிருந்து வெளியே ஓடினான். ஆனால் அவ்வளவு அதிர்ச்சியிலும் கூட கதவை வெளியே சாத்தித் தாழிட மறக்கவில்லை அவன். ஒருக்கால் போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலைப் பாத்து வந்ததால் அவனுக்கு அந்த சாமர்த்தியம் வந்திருக்குமோ என்னவோ?

இந்த விஷயங்கள் எல்லாம் வெளியே தெரிந்து விட்டால், தனக்கும் அவளுக்கும் இருந்து வந்த சம்பந்தத்தைப் பற்றி உலகம் தெரிந்து கொண்டுவிடும் என்று உணர்ந்தான். வேற்று மனிதனோடு தன் மனைவி கூடி மகிழ்ந்த பொழுது தான் கேம்ப்பிலிருந்து திரும்பி வந்ததாகவும், அவ்விருவரையும் பார்த்து ஆவேசத்தோடு அவர்கள் மீது பாய்ந்ததாகவும், அந்தச் சண்டையில் அவள் மரண மடைந்து விட்டாள் என்றும், நாளைக்கு அவன் சார்பில் டிஃபென்ஸ் லாயர் வாதாடுவார் என்றும் அந்த ஆளுக்குத் தெரிந்திருந்தது. அது மட்டும் நடந்து விட்டால் தன் மானம் மரியாதை எல்லாம் பஞ்சாய் பறந்துவிடும் என்றும் கூடத்தெரியும். அதனால் தான் கதவை வெளியேதாழிட்டு விட்டு தொலைவில் போய் நின்று கொண்டான்.



தன் மனைவியின் காதலன் வெளியே ஓடியதை கவனித்துவிட்டு மகரிஷி சட்டென்று ஓடிப்போய்க் கதவைத் திறக்க முயன்றான். ஆனால் அது திறந்து கொள்ள வில்லை. தான் அவ்வறைக்குள் மனைவியின் சவத்தோடு சிக்கிக் கொண்டு விட்டோம் என்றுணர்ந்தான் மகரிஷி. யாராவது ஒருத்தர் வந்து திறக்கும் வரை, தான் அங்கேயே இருந்து தீரவேண்டும் என்று புரிந்தது, வந்து மனைவியின் சவத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.'

இரண்டு நிமிஷங்கள் காத்திருந்து விட்டு வெளியே இருந்த அந்த ஆள், திரும்பவும் சந்தடி செய்யாமல் கதவின் தாழைத் திறந்துவிட்டு, ஓடிப் போய் விட்டான். உள்ளே யிருந்த மகரிஷிக்கு மட்டும் வெளியே தாழ்ப்பாளைத் திறந்து விட்ட விஷயம் தெரியாது. உள்ளே அப்படியே சவத்திற்குப் பக்கத்தில உட்கார்ந்து கொண்டிருந்தான்,

கால் மணி நேரங்கழித்து வேலைக்காரி வந்து கதவைத் தள்ளினாள். அறைக்குள் செல்லச் செதிர சிதறிக் கிடந்த சாமான்களுக்கிடையே ஸ்ரீ வாணியின் சவத்தையும், பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்த மகரிஷியையும் பார்த்ததுமே வேலைக்காரிக்கு நடந்தது என்ன என்று முதலில் புரியவில்லை. மேலும் கூர்ந்து பார்த்த பொழுது ஸ்ரீ வாணியைச் சுற்றிலும் இருந்த ரத்த வெள்ளம் தென்பட்டது. அவள் பெரிதாய் கத்தத் தொடங்கினாள். அதற்குப் பிறகு போலீசார் வந்ததும், ஸ்ரீ வாணியின் சவத்தை சவப் பரிசோதனை பண்ணியதும், அவனை அரெஸ்ட் பண்ணியதும் துரிதகதியில் நடந்தேறி விட்டன.

ஃ ஃ ஃ

"அப்படியென்றால் நீ கொலை பண்ணவில்லை என்றுச் சொல்கிறாயா?" இன்ஸ்பெக்டர் எரிச்சலோடு கேட்டார்.

''கொலை நடந்து விட்டது சார். ஆனால் அது நான் வேண்டுமென்றே செய்த கொலை அல்ல. தள்ளினேன். துரதிருஷ்டவசமாய் அவள் அந்தக் கம்பியின் மீது விழுந்து விட்டாள்.''

''அதற்கு சாட்சி உன் மனைவியின் காதலன் என் கிறாய். இல்லையா?''

''ஆமாம். அவங்களைப் பார்த்து நான் ஆவேசப்பட் டது நிஜந்தான், ஆனால் என் கோபமெல்லாம் அவன் மீது தான் இருந்ததே தவிர, அவளை அடிக்க வேண்டும் என்ற எண்ணம் கூட எனக்கு இல்லை. நாங்களிருவரும் வாதாடிக் கொண்டிருக்கையில் அவன் என்னை அடித் தான். என் மனைவி என்னிடம் வந்து என்னைத் தூக்கி நிறுத்தப் போனாள், அவன் மேலிருந்த ஆத்திரத்தையெல் லாம் அவள் மேல் காட்டியபடி பிடித்துத் தள்ளினேன், துரதிர்ஷ்டவசமாய் அவள் அந்தக் கம்பியின் மேல் விழுந்து விட்டாள்.

''அவன் யார்?''

''எனக்குத் தெரியாது. அவ்விருவருக்குமிடையே ஏழெட்டு ஆண்டுகளாய் உடலுறவு இருந்து வந்தாய் மட்டும் அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது.''

''அவனை எப்படியாவது பிடித்து விடலாம். நீ சொன்னதெல்லாம் நிஜந்தான் என்று ருசுவானால் அது எதிர்ப்பாராமல் நேர்ந்த சம்பவமாய் உனக்கு தண்டனை கிடைக்காமல் போகலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

மகரிஷி மனதிற்குள் அவருக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

ஆனால் நினைத்ததெல்லாம் நினைத்தபடியே நடந்து விட்டால் அது வாழ்க்கை எப்படியாகும்? அவன் மனைவி யின் காதலனைப் பற்றி இன்ஸ்பெக்டர் விசாரணை பண்ணினார் போலும்! அவன் யார் என்று தெரிந்தவுடன்



இன்ஸ்பெக்டரின் தோரணையில் மாறுபாடு நன்றாய் தெரிந்தது. அதை மகரிஷி கூட கவனித்தான்.

''நீ உன் மனைவியின் சவத்திற்கருகில் உட்கார்ந்து கொண்டிருக்கையில் உன் மனைவியின் காதலன் வெளியே ஓடிப் போய் விட்டதாய் சொன்னாய் அல்லவா?''

''ஆமாம் சார்.''

''அப்படிப் போகும்போது வெளியே தாழிட்டு விட்டுப் போய்விட்டான் என்றும் சொன்னாய், இல்லையா?''

''ஆமாம். ஒருக்கால் என்னை போலீசாரிடம் கையும் களவுமாய் பிடித்துத் தந்துவிட வேண்டும் என்றுதான் அப்படிப் பண்ணியதாய் நினைத்தேன் அப்பொழுது.''

''ஆனால் அது பொய் என்று எங்கள் சோதனை மூலம் தெரிந்து விட்டது. கால் மணிக்குப் பிறகு வந்த வேலைக்காரி வெளியே கதவு திறந்திருந்ததாய் சாட்சி சொல்கிறாள். நீ பொய் சொல்கிறாய் என்று தெரிகிறது''

மகரிஷி இன்ஸ்பெக்டரை வாயடைத்துப்போன வனாய் பார்த்தான். இல்லை. அவன் வெளியே தாழிட் டான். நான் போய் கதவை நன்றாய் இழுத்துப் பார்த் தேன் வேறு வழியில்லாமல் வெளியே போக முடியா தவனாய் என் மனைவியின் சவத்திற்கருகில் உட்கார்ந் திருந்தேன்.''

ஆனால் அவன் சொன்னதைக் கொண்டு பார்த் தால் அவனுக்கும் உன் மனைவிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அது வெறும் அண்ணன் தங்கை உறவுதான். அன்றைக்கு அவன் உங்கள் வீட்டிற்கு வரவே இல்லை.''

''பொய்'' இரைந்து கத்திவிட்டான் மகரிஷி.

''அவன் எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றது பொய். அவங்க ரெண்டுபேருக்குமிடையே இருந்து வந்தது அண்ணன் தங்கை உறவு என்று சொன்னதும் பச்சைப்பொய். அவன் மட்டும் அப்படிச் சொன்னானானால் அது ஒரு புனிதமான உறவுக்கே அவதூறு கற்பிப்பதாகும்''

''அதெல்லாம் உன் வாதனை.'' என்றார் இன்ஸ்பெக்டர் அமைதியாய்.

''நான் விசாரணை பண்ணினேன். மொதல்ல அவன் இந்தக் கொலை நடந்த அன்றைக்கு இந்த ஊரிலேயே இல்லை. அப்படிச் சொல்றத்துக்குச் சாட்சிகளும் ஆதாரங்களும் பலமாய் உள்ளன. உன்மீது கோர்ட்டில் கேசு பதிவுப்பண்ணப்போறேன்'' என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச எதுவும் இல்லை என்பது போல அங்கிருந்து போய்விட்டார். மகரிஷி செல்லிற்குள் வெகுநேரம் அப்படியே சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். அவன் மனம் யோசிப்பதற்குக் கூட ஒத்துழைக்கவில்லை. தன் மனைவியின் காதலன் சமூகத்தில் செல்வாக்கு உள்ளவனாய் இருந்திருக்க வேண்டும். அல்லது இந்த இன்ஸ்பெக்டருக்கு நிறைய லஞ்சமாவது கொடுத்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் அவன் யார் என்று கூட இன்ஸ்பெக்டர் வெளியே சொல்லிக் கொள்ள விரும்பவில்லை போலிருந்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு கேசு கோர்ட்டில் கடைசி விசாரணைக்கு வந்தது. மகரிஷியின் சார்பிலிருந்த டிஃபென்ஸ் லாயர் தன்னால் முடிந்த வரை வாதாடினார். உள்ளதை உள்ளவாறு கோர்ட்டாருக்கு எடுத்துச் சொன்னார்.

''பிராஸிக்யூஷன் சொல்லுவதற்கும் நீங்கள் சொல்லுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது'' என்றார் ஜட்ஜ் ''நீங்கள் சொல்வது மட்டும் நிஜமானால் குற்றவாளி கேம்ப்பிலிருந்து திரும்பி வந்த சமயத்தில் அவன் மனைவி காதலனின் அறையில் இருந்திருக்க வேண்டும். அப்படியானால் அந்தக் காதலன் யார்? அவனை கோர்ட்டில் ஆஜராக்க முடியுமா?''



கூண்டிற்குள் நின்று கொண்டிருந்த மகரிஷி தனக்குள் சிரித்துக்கொண்டான். ஆஜராக்க வேண்டியது டிஃபென்ஸ் லாயர் அல்ல போலீசார். போலீசாரே கேஸில் உள்ள சத்தியத்தை அடக்கி வைத்து விட்டுத் தவறாய் எழுதினார் இனி நீதி எங்கே நடக்கும்? அதனால் டிஃபென்ஸ் லாயர் அரும்பாடுபட்டு 'அவனை'ப் பிடித்துக்கொண்டார். ''பாரப்பா! நல்லதோ கெட்டதோ தெரியாது, ஒரு அனர்த்தம் நிகழ்ந்துவிட்டது. அவன் மனைவியோடு சிநேகமாய் இருந்து நீ தப்புப் பண்ணிவிட்டாய் என்று உன்னை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக நான் இங்கே வரவில்லை. அங்கே நடந்ததைப் பார்த்த ஒரே சாட்சி நீ தான். அங்கே நடந்தது கொலை அல்ல, எதேச்சையாய் நடந்தது என்று ஒரு வார்த்தைச்யை சொல்லு, போதும். அவனுக்கு தண்டனை கிடைக்காமல் போகும்''- என்று லாயர் சாமர்த்தியமாய் அவனை ஒப்புக்கொள்ளச் செய்துவிட வேண்டும் என்று முயற்சி பண்ணினார்.

''நான் அந்தச் சமயத்தில் அங்கே இல்லை'' கச்சிதமாய் சொல்லிவிட்டான் அவன்.

''நீ இருந்தாய் என்று எனக்குத் தெரியும். உன்மேல் தப்பு இருந்தாலும், இல்லாமல் போனாலும் அவன் மனைவியின் உயிர் போவதற்கு நீதான் காரணமாகி விட்டாய். இப்பொழுது நீ சாட்சிசொல்லக்கூடிய நிலையில் இருந்தும் சொல்லாமல் போவதால் இன்னொருத்தன் தூக்கு மேடையில் ஏறுவதற்கு வழி வகுத்துவிட்டாய். மனிதப் பண்புடன் யோசித்துப் பார்.''

''நான் தான் அங்கே இல்லவே இல்லை என்று சொல்லிவிட்டேனே!'' அலுத்துக்கொண்டான் அவன்.

'அதோடு கூட நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல அவன் மனைவியோடு அப்படிப்பட்ட சம்பந்தம் எதுவும் இல்லை எனக்கு'' மறுத்து வாதாடினான்.

லாயர் கோபமாய் எழுந்திந்தார். ''நீ ஏன் வர மாட்டேங்கிறாய் என்று எனக்குத் தெரியும். அப்படி வந்தால் உன் போட்டோவோடு கூட எல்லா விஷயமும் பேப்பர்களில் வந்துவிடும். மாற்றான் மனைவியைக் கைக்குள் போட்டுக்கொண்டவனாய் உன் போட்டோக்கள் பேப்பர்களில் வந்தால் உனக்கு அது ஒரு தீராத களங்கத்தைத் தந்து விடும். உன் தொழிலுக்கே அது ஒரு உதை. அப்படித்தானே?''

அவன் சிரித்துவிட்டு— ''ரொம்ப நன்றாய் ஊகித்துக் கொண்டிருக்கீங்க. அதனால்தான் நான் கோர்ட்டுக்கு வரமாட்டேங்கிறேன்''

''உன் தொழிலுக்கு ஏற்படப்போகும் ஒரு சின்ன களங்கத்திற்காக ஒரு ஆளை அநியாயமாய் தூக்குமேடையில் ஏற்றக்கூட சம்மதிக்கிறாய் என்றால் நீ மனிதன் அல்ல, ராட்சசன்''—என்று சொல்லி விட்டு லாயர் அங்கிருந்து வந்துவிட்டார்.

லாயர் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டுத் தனக்குள் சலனமில்லாமல் சிரித்துக்கொண்டான் மகரிஷி. ஒரு உலகத்தின் பார்வையில் அவன் ஒரு குற்றவாளி. ஒரு அப்பாவியான மனைவியைக் கொன்ற அரக்கன், அவனுக்குத் தெரியாமல் அவன் மனைவி எப்படிப்பட்ட விபச்சாரம் செய்தாளோ!.........

அவன் மனைவியோடு அவள் காதலன் எந்த விதமாய் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தானோ.........அதற்குப் பிறகு உலகத்தாரின் கண்முன் எப்படி ஒரு கௌரமான மனிதனாய் வளையவந்து கொண்டிருக்கிறானோ......



இதெல்லாம் உலகத்திற்குத் தேவையில்லை. தன்னை மட்டும் ஒரு கொலையாளியாய் முத்திரை குத்தி விட்டது. தீர்ப்பும் அளித்துவிட்டார்கள்.

ஜட்ஜ் படித்தார்—''மகரிஷி என்ற குற்றவாளி மனைவிக்கு யாருடனோ சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்துடன், அப்பாவியான அவள் மீது துவேஷத்தை வளர்த்துக்கொண்டு, தடையின்றி ஒரு கம்பியால் அவள் கழுத்தில் குத்திக் கொலை செய்திருக்கிறான். சாதாரண மனிதன் யாருமே கனவிலும் நினைத்துப் பார்த்திராத விதத்தில் கழுத்தில் கம்பியைப் பாய்ச்சியிருக்கும் இந்த அரக்கனை செக்ஷன் 302-ன் பிரகாரம் தூக்கிலேற்ற வேண்டியதாய் உத்தரவளிக்கிறேன்.''

# 5

மகரிஷிக்கு விழிப்பு வந்தபோது நன்றாய் விடிந்துவிட்டிருந்தது. ரிஸப்ஷனுக்கு போன் பண்ணி நேரத்தைத் தெரிந்துக்கொண்டான். எட்டரை ஆகியிருந்தது. 'வெகு நேரமாய் தூங்கிவிட்டேன் போலிருக்கிறது' என்றெண்ணிக் கொண்டான் தனக்குள்.

அதற்குள் போன் மணியடித்தது. மறுமுனையில் அவன் சிநேகிதன் வர்மா.

''ஹலோ''

''நீ அங்கேயே இரு. வெளியே வராதே''—கலவரத்துடன் கேட்டது வர்மாவின் குரல்.

''என்ன விஷயம்?''

''நான் வந்து சொல்கிறேன்.''

பத்து நிமிஷத்தில் வர்மா ஓட்டலுக்கு வந்து சேர்ந்தான். அறைக்குள் வந்து கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு. மகரிஷிக்கெதிரே உட்கார்ந்து கொண்டான். அவன் கையில் அன்றைய தினசரி பத்திரிகையின் மாலை எடிஷன் இருந்தது.

''உன் போட்டோ பேப்பரில் வந்திருக்கிறது'' என்றான். மகரிஷி கண்களை இடுக்கிக் கொண்டே—''இவ்வளவு சின்ன விஷயம் பேப்பரில் வராதுன்னு நினைச்சோமே?'' என்றான்.

''இது சின்ன விஷயமா? ஜெயில் சென்ட்ரியை எதுக்காகக் கொன்றாய்?'' கொஞ்சம் கோபமாகவே கேட்டான் வர்மா.

மகரிஷி ஆச்சரியத்தோடு—'' சென்ட்ரியையா? நான் கொன்றேனா? என்ன சொல்கிறாய் நீ?'' என்றான்.

வர்மா அவனிடம் பேப்பரைத் தந்தான் குரோட்டன்ஸ் செடிக்குப் பக்கத்தில் ரத்தத்தில் தோய்ந்த உடைகளோடு விழுந்துகிடந்த சென்ட்ரியின் போட்டோவைச் சிறப்பாய் பிரசுரித்திருந்தார்கள்.

'சென்ட்ரியைக் கொன்று விட்டுத் தலைமறைவாகி விட்ட கைதி'...என்ற தலையங்கம்'. மகரிஷிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் அந்தச் செய்திகளை முழுவதும் படித்தான். மேலும் இரண்டு சின்னக் கைதிகள் கூட தப்பித்துக் கொண்டு விட்டதாய் வெளிவந்திருந்தது அதில். அப்பொழுது அவனுக்கு நடந்ததெல்லாம் புரிந்தது.

''சென்ட்ரியைக் கொன்றது நான் இல்லை. இதப் பார், இந்த ரெண்டு கைதிகளுந்தான்'' என்று செய்தியைக் காட்டினான்.



''அப்படீன்னால்......''

''மறுநாள் விடியற்காலையில் தூக்கிலேற்றப் போவதாய் என்னிடம் சொன்னாங்க. அன்றிரவெல்லாம் தெய்வ பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்படி சொல்லி என்னிடம் பகவத்கீதை புத்தகத்தைக் கூட தந்தாங்க. நான் சந்தனாவைப் பற்றி யோசித்தபடியே உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது தொலைவில் ஒரு செல்லிற்குள் சந்தடி எழும்பிற்று. கத்தல்கள் கேட்டன.

கைதிகளுக் ரகசியமாய் மதுபானங்களை வரவழைத்துத் தருவதும், அவர்கள் இரவு நேரங்களில் குடிப்பதும் பழக்கப்பட்டதுதான். அதனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்பொழுது தான் தோன்றுகிறது, அந்தக் கத்தல்கள் சென்ட்ரியுடையது போலும்! நான் அந்தக் கத்தலைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அந்த இரண்டு கைதிகளும் என்னிடம் ஓடிவந்தாங்க. ''நாளைக்குத் தானே உனக்கு தூக்குத் தண்டனை? தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விடு'' என்று உள்ளே சாவிக் கொத்தை வீசியெறிந்து விட்டு அங்கிருந்து வேகமாய் ஓடிப்போய் விட்டார்கள்.

சந்தனாவைச் சந்திப்பதற்காக தெய்வமே இந்த அவகாசத்தை ஏற்படுத்தித் தந்ததாய் நினைத்து உள்ளிருந்து கையை வெளியே நீட்டி பூட்டைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டேன். சென்ட்டிரி அந்தச் சுற்றுவட்டாரத்தில் எங்குமே தென்படவில்லை. சுவரேறிக் குதித்து வெளியே வந்து விட்டேன். இதுதான் நடந்தது'' என்றான் மகரிஷி.

''ஒருக்கால் அந்த இரண்டு திருடர்களும் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சி பண்ணியிருப்பாங்க. சென்ட்ரி அதைப் பார்த்துவிட்டுப் பெரிதாய் கத்தியதால் இவங்க அவன் முகம் சிதைந்து போகும்படியாய் காயப்படுத்திக் கொன்றிருப்பாங்க. அந்தக் குற்றம் தம்மீது

வராமலிருக்க வேண்டும் என்பதற்காகத் தம்மிடமுள்ள சாவியை இந்த செல்லிற்குள் வீசியெறிந்து விட்டுப் போய்விட்டார்கள் போலிருக்கிறது. இப்பொழுது அந்த சென்ட்ரியைக் கொன்றது நீதான் என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டுவிட்டது. சின்னக் கைதிகள் ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு சென்ட்ரியைக் கொன்றுவிடுவார்கள் என்று சொன்னால் யாராலும் நம்ப முடியாது. நாளைக்கு தூக்குத்தண்டனை என்றதால் நீதான் தப்பித்துக் கொள்வதற்காக இவ்வாறு மிகக் கொடுமையாய் கொலை செய்திருப்பாய் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள்'' என்றான் வருத்தத்தோடு.

மகரிஷி விரக்தியாய் சிரித்துவிட்டு'' இதன் மூலமாய் எனக்குப் பெரிதாய் விதிக்கப் போகிற தண்டனை வேறொன்றும் இல்லை. நான் இப்பொழுதே தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஆள்தானே?'' என்றான். ''தண்டனை என்ன விதிக்கப்படும் என்பதைப்பற்றி இல்லை. எவ்வளவு கொடுமையாய் இந்த சென்ட்ரியைக் கொன்றிருக்காங்க பார்த்தாயா? பக்கத்திலேயே உன் போட்டோவைக் கூட போட்டிருக்காங்க. யாருக்குமே உன்மீது இரக்கம் ஏற்படாது. ஒருக்கால் சாந்தனா கூட இந்த போட்டோவைப் பார்ததிருந்தால் அவள் உன் முகத்தைப் பார்க்கக்கூட மாட்டாள்''

''சந்தனா என்னை விரும்ப வேண்டும் என்றோ என்னோடு பேசவேண்டுமென்றோ நான் எண்ணவில்லை வர்மா. நான் அவளை தொலைவிலிருந்தே ஒரு முறை பார்த்தால் கூட போதும்'' என்றான் மகரிஷி சலனமில்லாமல்.

''உன்னை என்னால் புரிஞ்சுக்கவே முடியலை'' என்றான் வர்மா சிநேகிதனைப் பார்த்து. ''அவ்வளவு



தூரம் அவளைக் காதலித்து விட்டு, காலேஜ் நாட்களிலயே அவளிடம் அதைப்பற்றி ஏன் சொல்லாமல் போனாய்?''

''நான் சோற்றுக்கு கதியில்லாதவன். அவள் கோடீஸ்வரரின் மகள். என் காதலை எப்படி ஏற்றுக் கொள்வாள்? கேட்டுவிட்டு மனம் குறுகிப் போவானேன்? அவள் என்னைக் காதலிப்பதற்கு என்னிடம் என்ன தகுதி இருந்தது? இதையெல்லாம் யோசித்துப் பார்த்து விட்டுத்தான் நான் அவவிடம் அதைப் பற்றியே பேசவில்லை. தொலைவிலிருந்தே அவளைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பேன்.''

இந்த தர்க்கம் எதுவும் புரியாமல் வர்மா எழுந்திருந்தான். ''ஆனால் நீ மட்டும் அறையை விட்டு வெளியே போகாதே. நான் அவளைப் பற்றித் தெரிந்து கொண்டு வரேன். நீ உனக்குச் சாப்பாடு கொண்டு வருகிற சர்வருக்கு முன்னால் கூட உன் முகத்தைச் சரியாய் காட்டாதே. இரண்டு மூன்று நாட்களில் அந்தப் பெண் இருக்குமிடத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு விடலாம். குட்நைட்!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான் வர்மா.

மகரிஷி மட்டுமே அறையில் எஞ்சி நின்றான். நண்பன் விட்டு விட்டுப் போன பேப்பரைக் கையிலெடுத்தான். போட்டோவில் சென்ட்ரியின் முகத்தைப் பார்த்தபோது வயிற்றைப் பிசைந்தெடுத்தது. இவ்வளவு கொடுமையாய் அவனைக் கொன்றுவிட்டு, அந்தக் குற்றம் தன் மீது விழ வேண்டும் என்பதற்காகச் சாவிக்கொத்தை அவனிடம் வீசியெறிந்திருக்கிறார்கள். இந்த நிந்தனை அவனை விட்டு வாழ்நாளெல்லாம் போகாது என்றெண்ணியதும் அவனுக்கு வருத்தம் ஏற்பட்டது.

பேப்பரைக் கீழே வைக்கப் போனபொழுது மேஜைமேலிருந்த மனைவியின் டைரி கண்ணில் பட்டது.

தன்னை இவ்வளவு நன்றாய் மோசம் பண்ணிய தன் னைவி என்ன எழுதியிருப்பாள்? என்றெண்ணிக் காண்டே அந்த டைரியைத் திறந்தான்.

அது ஒரு வருடத்து டைரி அல்ல. அங்கேயே எழுதி பிருந்த உணர்ச்சிகள் எல்லாம் சுருக்கமாய் இருந்தன. நிறைய பக்கங்கள் காலியாய் இருந்தன. அவனை எப்படி மோசம் பண்ணினாள் என்பதைப் பற்றிக் கூட எழுதியிருப் பாளோ?

காதலனோடு ரகசியமாய் எவ்வளவு சந்தோஷத்தை அனுபவித்தோம் என்பதைப் பற்றிக்கூட எழுதியிருப் பாளோ? இவ்வாறு எண்ணிக் கொண்டே அவன் படிக்கத் தொடங்கினான்.

# 6

நான் சிறுவயதிலேயே கட்டுப்பாடு என்ற பெயருடன் ஒரு பக்கத்தில் வீட்டிலும் இன்னொரு பக்கத்தில் பள்ளிக் கூடத்திலும் பிரச்னைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. வீட்டிலோ சின்ன விஷயத்திற்குக் கூட பெரிய திட்டங்கள் இருந்தன. தந்தை வீட்டில் இருக்கும் பொழுது சின்ன சப்தம் கூட போடக் கூடாது, பாத்ருமில் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது கூட பாட்டை முணுமுணுக்கக் கூடாது. ஆடம்பரம் என்ற பேச்சிற்கே எங்கள் வீட்டில் இடமில்லை.

படிப்பிற்குத் தான் எங்கள் வீட்டில் பிரதானம் அளித் தார்கள். எல்லாவற்றிற்கும் ஒரு டயம். எத்தெந்த விஷ



யங்கள் தேவையானவையாய் இருந்தனவோ அவைகள் எல்லாமே தேவையற்றவைகளாய், எங்களுக்குச் சம்பந்த மில்லாதவைகளாய் தோன்றும் விதத்தில் எங்கள் வீட்டில் பயிற்சி பெற்றோம்.

எங்கள் வீட்டில் என் மனத்திற்குப் பிடிக்காத விஷயம் இந்த நியம நிஷ்டைகளும், கட்டுப்பாடுந்தான்! சிறியவர் கள் காபியோ, தேநீரோ குடிக்கக் கூடாது. உரக்கச் சிரிக்கக் கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாங்கள் காற்றடைக்கப்பட்ட பலூன்களாய் வளர்ந்து வந்தோம்.

ஃ ஃ ஃ

இன்றைக்கு வீட்டில் யாருமில்லாத சமயம் பார்த்து பக்கத்து வீட்டிலிருந்து நாங்கள் கொண்டு வந்த 'செக்ஸ்' புத்தகத்திலிருந்த போட்டோக்களைப் பார்க்கத் தொடங் கினோம். எங்கள் வீட்டில் எவ்வளவு கட்டுப்பாடு என்றால் குறைந்த பட்சம் பக்கத்து வீட்டிலிருந்து இரவல் வாங்கிக் கொண்டு வரும் வாரப் பத்திரிக்கைகளைக் கூட யாரும் படிக்கக் கூடாது. படித்து விட்டால் அன்றைக்குப் பூராவும் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டியது தான். அதனால் தான் அவ்வப்பொழுது நாங்கள் திருட்டுத்தனமாய் படிப் போம். ஆனால் இப்படிப்பட்ட புத்தகத்தை இதற்கு முன்னால் பார்த்ததில்லை. அதைப் பற்றி நிறைய வாதா டிக் கொண்டோம். அன்று மாலையில் குளித்துக் கொண்டி ருக்கும் பொழுது என்னையே நான் வெகு நேரம் பரிசோ தித்துக் கொண்டேன். ஏனோ என் உடல் உருப்புக்கள் வாளிப்பாய் இல்லை என்று தாழ்வு மனப்பான்மை ஏற் பட்டது.

ஃ ஃ ஃ

சிநேகம் ஏற்பட்டது.
படிக்கும் காலத்தில் ரோஸியின் சிநேகம் ஏற்பட்டது.
அவள் பல பேர்களுடன் உடலுறவு வைத்துக் கொண்டு
எப்படி உல்லாசமாய் உலாவிக் கொண்டிருக்கிறாள் என்
பதைப் பற்றி எடுத்துச் சொல்லுவாள் அதைக் கேட்டால்
எனக்குப் பெருமூச்சு வரும் முத்தமிடுவலதப் பற்றிக் கூட
எதுவும் தெரிந்து கொள்ளாமலிருந்தது, தாழ்வு மனப்
பான்மையைத் தரும். ரோஸியைப் பார்க்க நிறையப் பேர்
வருவார்கள். மோட்டார் சைக்கிளுக்குப் பின்னாடியோ,
காரிலோ உட்கார்ந்து கொண்டு அவர்கள் தோளில்
சாய்ந்து வம்பளந்து கொண்டே அவர்களோடு போவாள்.
எனக்கு அதைப் பார்த்தால் பொறாமையாய் இருக்கும்.
எனக்கும் ஒரு பாய் பிரெண்ட் இருந்தால்...! என் தந்தை
யைப் பற்றி நினைவு வந்ததும் அந்த யோசனை கூட
பயத்தை உண்டாக்கியது.

ஃ ஃ ஃ

ஒரு முறை பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்காகக் காத்துக்
கொண்டிருந்த பெழுது ஒரு இளைஞன் தன் பைக்கை
எனக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி விட்டு—"லிப்ட்
வேணுமா மேடம்?" என்று பணிவாய் கேட்டான். சிவந்த
மேனியோடு இரவு நேரங்களில் எனக்கு நினைவிற்கு வரும்
சினிமா ஹீரோவைவிட மிக அழகாய் இருந்தான் அவன்.
என்னால் மறுக்க முடியவில்லை, முதல் முதலாக என்
மனது என் தந்தையின் கட்டுப்பாட்டை மீறி விட்டது.
குலுங்கலுக்கு என் மார்பு அவன் மேல் பட்டதைப் பார்த்
தும் ஏனோ தொலைவிற்கு விலகிக் கொள்ள முடியவில்லை
என்னால். ஒருக்கால் அவ்வாறு குலுங்கும்படியாய் அவனே
தான் வேண்டுமென்றே அப்படி ஓட்டினானோ
என்னவோ? என்று தோன்றிற்று. அந்த கற்பனையே மிக
இனிமையாய் இருந்தது.



அதுதான் அவனோடு ஏற்பட்ட பரிச்சியத்திற்கு ஆரம்பம்.

அவனுக்குச் செல்லமாய் 'இலூ' என்று பெயர் வைத்தேன். 'இலூ' என்றால் L. U. ஐ லவ் யூ.

ஃ ஃ ஃ

வீட்டில் ஒழுங்குக் கட்டுப்பாட்குற்குக் கொஞ்சம் குந்தகம் ஏற்பட்டாலும் என் தந்தையின் முகம் சிவந்து விடும். உரக்கப் பேசினால் கூட அவரால் சகித்துக்கொள்ள முடியாது. 'இலூ' அப்படி அல்ல. என்னை ஒரு குழந்தையைப் போல பார்த்துக் கொண்டான். நான் கோபித்துக் கொண்டு விட்டால் உயிரே போய் விட்டாற்போல துடித் துடித்துப் போவான். நான் குறும்புத்தனம் பண்ணினால் ஆர்வத்துடள் பார்ப்பான். வீட்டில் கிடைக்காத சுதந்திரத்தையெல்லாம் அவன் முன்னிலையில் பெற்றேன்.

இலூவின் நெருக்கத்தின் மூலமாய் நான் என் தந்தையைப்பழி தீர்த்துக்கொண்டதாய் தோன்றிற்று. அதோடு என் அவயங்களைப்பற்றி எனக்கு இருந்துவந்த தாழ்வு மனப்பான்மையைக் கூட அவன் போக்கடித்து விட்டதாய் தோன்றிற்று. முதலில் உதட்டையும் பிறகு உடலையும் அவனுக்கு அர்ப்பணிக்க வேண்டியிருந்தது. ஆனால் நாளடைவில் அது எங்களிருவருக்குமிடையே சாதாரண விஷயமாகிவிட்டது. ஆனாலும் நான் வருந்தவில்லை. ரோஸியைப் போல கண்டவர்களுடன் சுற்றவில்லை. அதோடு அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று கூட ஆசைப்பட்டேன்.

ஃ ஃ ஃ ஃ

மாலையில் என் தாயிடம் குழைந்து கொண்டே ''டில்லிக்குப் போகச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்மா ரெண்டே நாள் தான்'' என்றேன்.

''ரெண்டே நாளில் டில்லிக்குப் போய்விட்டு வருவது என்பது சாத்தியப்படாது. பிரயாணத்திற்கே அவ்வளவு நேரம் பிடிக்கும்'' என்றாள் அம்மா.

''ப்ளைட்டில் போறோம்''

யார் அழைச்சுட்டுப் போறாங்க? ..அந்தப் பொண்ணு தானே?''

'அந்தப் பெண்' என்றால் அம்மாவின் கண்ணோட்டத்தில் ரோஸி! இலூவோடு நான் சுற்றியதை ரோஸியோடு சுற்றியதாய் சொல்லிச் சமாளித்துக் கொள்வது பழக்கப்பட்டுப் போய்விட்டது. ரோஸி கூட தேவையானால் எனக்காக எந்தப் பொய்யையும் சொல்லத் தயங்கமாட்டாள். இப்பொழுது கூட என் இலூவோடு தானே நான் போவதே!

''ஆமாம்'' என்றேன் அம்மாவிடம்.

''சரி, அப்பாவின் மூடைப் பார்த்துக்கொண்டு முடிவெடுத்துக் கொள்ளலாம்'' என்றாள் அம்மா. அவரிடம் அம்மா எப்படியாவது நயமாய் எடுத்துச் சொல்லிவிடுவாள் என்று தெரியும் எனக்கு.

ஃ ஃ ஃ

ரோஸி நன்றாய் பணம் சம்பாதித்தாள். அவள் ஃபிளாட்டிற்குப் போனேன் ஒருநாள். எல்லாம் விலையுயர்ந்த சாமான்கள் தான். நான்கு பீரோக்கள் நிறைய துணிமணிகள். அவள் ஆடம்பரத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டேன். ஆனால் அவள் அவைகளை எப்படிச் சம்பாதித்தாள் என்று புரிந்ததும் பொறாமைப் பட்டதற்கு வருந்தினேன்.



ஃ ஃ ஃ

இன்றைக்கு ''சோபாடே'' புத்தகம் படித்தேன். அதில் அஞ்சலியின் பாத்திரம் அசல் என்னைப்போலவே இருக்கிறது. அவள் இந்தப் புத்தகத்தை ஏன் எனக்குத் தந்தாள் என்றுதான் புரியவில்லை.

ரோஸி ஒரு நாள் என்னை எச்சரித்தாள்.

''எங்கள் எல்லோரையும் போலில்லாமல் நீ கொஞ்சம் மாறுப்பட்டவள் என்றெண்ணிக் கொண்டிருந்தேன். நீயும் எங்களோடு சேர்ந்து கொள்வது எனக்கு வருத்தமாயிருக்கிறது'' என்றாள்.

''என்ன சொல்கிறாய் நீ?'' உண்மையாகவே எனக்குப் புரியவில்லை.

''அவனோடு நீ சிநேகம் வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றிச் சொல்கிறேன்'' என்றாள்.

அவனை நான் காதலிக்கிறேன்''

''அவ்வளவு சிறப்பான தன்மை என்ன தெரிந்தது அவனிடம் உனக்கு?'' ரோஸிகூட பரிச்சியங்களைப்பற்றி வித்தியாசமாய் பேசியது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இலூவைப் பற்றி அவளுக்கு நன்றாய் விவரித்துச் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று.

''தான் என்னைப்பற்றி உயர்வாய் எண்ணும்படியாய் அவன் செய்தான். உனக்குத் தெரியுமா? என் அவயங்களைப் பற்றிப் புகழ்ந்து சொல்லுவான்.'' என்றேன்.

''இன்னும் என்னென்ன?''

''என் அழகைப் புகழ்வான். என் விருப்பு வெறுப்புக்களுக்கு மதிப்பளித்தான். நான் என்ன பேசினாலும் கேட்பான்.''

''இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது நடந்ததா? இதையெல்லாம் ஏன் கேட்கிறேன் என்றால் நீ மாறிப் போனதற்குக் காரணம் நான்தானோ என்று வருத்தப்பட்டு...'' ரோஸி உண்மையாய் சொன்னாள்.

நானும் அதேபோல உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்றெண்ணினேன்.

''இதில் நீ செய்தது எதுவும் இல்லை...இன்னும்... அவனோடு சேர்ந்து படுத்துக் கொள்வது வரை வந்து விட்டது. ரொம்ப நன்றாய் இருக்கிறது இந்த அனுபவம்.'' பெரிதாய் கரைகண்டவளைப் போல ஆவேசமாய் சொன்னேன். அவள் திக்பிரம்மையடைந்து விட்டாள்.

''ஸ்ரீவாணி! நீ சுய நினைவோடு தான் பேசுகிறாயா?'' என்று கேட்டாள் ஆச்சரியத்தோடு.

''உனக்கு இப்படிப்பட்ட நுட்பமான விஷயங்கள் எல்லாம் புரியாது. உனக்குத் தெரியுமா?... அவன் இதற்கு முன்பு என்றுமே என்னைப் போன்ற அழகான, உயரமான கவர்ச்சியான உடலைப் பார்த்ததில்லை. 'இப்பொழுது தான் முதல் முதலாக நான் ஒரு அழகான கவர்ச்சியான பெண்ணைப் பார்ப்பது' என்று சொன்னான். என் கைகளைப் பிடித்துக் கொண்டுவிட்டால் போதும் அவன் எவ்வளவு சிறு பையனைப் போல மாறிவிடுவான் தெரியுமா? என்றேன்.

ரோஸி அதற்கு மேல் வாதாடவில்லை.

ஃ ஃ ஃ



யார் என்ன நினைத்தாலும் சரி, என்னால் அவனைப் பார்க்காமல் இருக்க முடியாது. என் தந்தையைப் போல எப்பொழுதும் சிடுசிடுப்பையே முகத்தில் காட்ட மாட்டான். அவ்வாறு சிடுசிடுப்பு இல்லாமல் எப்படித்தான் இருக்கிறானோ என்றுதான் புரியவில்லை எனக்கு. எது என்னவானாலும் சரி, அவனை விட்டு என்னால் பிரிந்திருக்க முடியாது. அப்படிப் பிரிந்தால் அந்த நிகிலோடேயே செத்துப் போய் விடுவேன்.

தந்தை வழங்காத அன்பை அவன் வழங்கினான். வீட்டில் கிடைக்காத பாதுகாப்பு உணர்ச்சி அவன் முன்னிலையில் கிடைத்தது. காதலித்து விட்டால் போதும். திருமணம் நடந்துவிடும் என்ற ஆசை எனக்கு என்றுமே இருந்ததில்லை. அவன் தான் தைரியம் சொல்லுவான். என் தந்தையிடம் இதைச் சொல்லத் துணிச்சல் இல்லை எனக்கு. அவனோடு ஓடிப்போய் விடக்கூட நான் தயார் தான்.

ஃ ஃ ஃ

''என் தந்தை எனக்கு ஒரு சம்பந்தம் கொண்டு வந்தார். அவரை எதிர்க்க பயந்து, என் தாயிடம் என் திருமண விஷயத்தைச் சொன்னேன் எனக்கு இதற்குள் கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கவில்லை'' என்றேன்.

''ஏன்?''

துணிந்து, தைரியத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு முழு விஷயத்தையும் சொல்லிவிட்டேன். நான் ஒருத்தரைக் காதலிக்கிறேன்.''

அதைக் கேட்டதும் என் தாய் அதிர்ந்து போய் விட்டாள். வெகுநேரம் பேசவில்லை. ''உங்கப்பாவுக்குத்

தெரிந்தால் உன்னைப் பெற்றதற்காக என்னைக் கொன்று போட்டு விடுவார்'' என்றாள் இறுதியில்.

தாயோடு வாதாடிப் பிரயோஜனமில்லை என்று தெரியும் எனக்கு. என் தந்தையை எதிர்த்து ஒரு நாளும் பேசியதில்லை என் தாய்.

இந்த விஷயத்தை நான் சொன்னதிலிருந்து என்னை வெளியே போக விடவில்லை என் தாய். எங்கே நான் ஓடிப்போய் விடுவேனோ என்று பயந்துதான் அவ்வாறு செய்ததாய் தோன்றிற்றுத் எனக்கு.

ரோஸி வந்தபொழுது இந்த விஷயத்தைச் சொல்லி விட்டு, ''என் காதலனை வந்து என்னை அழைத்துப் போகும்படி சொல்லு'' என்றேன். ரோஸி அவனிடம் போனாள்.

எனக்குத் தெரியும் இலுவால் என்னைப் பிரிந்திருக்க முடியாது என்று. கண்டிப்பாய் வருவான். என்ற ஆசையோடு காத்திருந்தேன். ரோஸி மட்டுமே திரும்பி வந்தாள். ''அவன் மிகவும் பிஸியாய் இருக்கிறானாம். நாலைந்து நாட்களில் வந்து சந்திக்கிறேன்''—என்று சொல்லச் சொன்னான் என்றாள்.

என் ஆசையின் மீது மண்ணை அள்ளிப் போட்டாற் போலிருந்தது.

ஃ ஃ ஃ

என் திருமணத்திற்கு முதல் நாள் கூட ரோஸியை அவனிடம் அனுப்பினேன். ''வீரேன், நீங்க போங்க'' என்று ரோஸியை அனுப்பி வைத்துவிட்டான். அவன் வரவில்லை.

என் திருமணம் நடந்து முடிந்துவிட்டது.



இலுவோடு என் பந்தம் முறிந்து போய் விட்டதே என்று குமுறிக் குமுறி அழுதேன்.

என் முதலிரவா அது?

அன்றிரவே என் கணவன் என்னைக் கேட்டார். ''நீ யாரையாவது காதலித்தாயா?'' என்று.

சொல்லிவிட வேண்டும் என்று நாக்கு நுனிவரை வந்து விட்டுப் போய் விட்டது. ஆனால் பயந்தேன். அவர் குணம் அன்றிரவே புரிந்துவிட்டது. அவ்வளவு உன்னதமான குணங்களைக் கொண்ட ஒருவரை நான் இதுவரை பார்த்ததேயில்லை. என்னை நான் காதலித்தவரோடு சேர்த்து வைத்துவிடக் கூட அவர் தயார், என்று சொன்னது என் மனதை நன்றாய் நெகிழ்த்திவிட்டது. அதற்குப் பிறகு அவர் ஒரு பெண்ணைக் காதலித்ததாய் சொன்னபொழுது நான் அதிகமாய் வருத்தப்படவில்லை. அதை மறைக்காமல் சொல்லிவிட்ட அவர் நேர்மையை என்னால் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

அன்றிரவு என் கணவரோடு நான் உடலுறவுக்கு முற்றிலும் ஒத்துழைத்தேன்—இலு என்னை உதாசீனம் பண்ணிவிட்டான் என்ற ஆத்திரத்தால்!

ஃ ஃ ஃ

ஒரு நாள் என் கணவர் இல்லாத சமயத்தில் அவன் வந்தான். அவனைப் பார்த்ததுமே நான் விம்மிவிட்டேன். ''இவ்வளவு மோசம் பண்ணிவிட்டாயே'' என்று காலரைப் பிடித்துக் கன்னத்தில் அறைந்தேன், திட்டினேன். கடைசியில் அழுதேன்.

வெகுநேரம் அவன் அமைதியாய் இருந்தான். அவன் ஒன்றுமே சொல்லாதது எனக்கு மிக ஆச்சரியத்தைத் தந்தது.

கடைசியில் அவன் என் மடியில் தலையை வைத்துக் கொண்டு— "உன்னிடம் வருவதற்காகத்தான் புறப் பட்டேன். வழியில் எனக்கு ஆக்ஸிடென்ட் ஆகிவிட்டது. நினைவு திரும்பி வந்தபோது உன் கல்யாணம் ஆகி விட்டது. என்று அழுது விட்டான்.

என் மனம் இளகிப் போய் விட்டது. அந்தச் சமயத்தில் எனக்கு என் கணவரைப் பற்றி ஞாபகம் வரவில்லை. அவனைக் கட்டியணைத்துக் கொண்டு இன்னும் நெருக்க மானேன்.

ஃ ஃ ஃ

இவ்வளவு நாட்களாய் அவனைவிட்டுப் பிரிந்து எப் படித்தான் இருந்தேனோ புரியவில்லை. அவனைச் சந் தித்தபிறகு அந்த 'வெறுமை' நன்றாய் புரிந்தது எனக்கு. என்னால் அவனைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது என்றும் புரிந்துவிட்டது.

அவனிடமிருந்து ஒரு குணந்தான் என்னை அவ னோடு நன்றாய் கட்டிப் போட்டுவிட்டது. என்னிடம் சிறு பையனைப்போல நடந்து கொள்வான். நான் இல்லாமல் ஒரு நிமிஷம் கூட உயிர் வாழ முடியாது என்பது போல கண்ணீர் விடுவான். அந்தத் துக்கத்திலிருந்து ஆவேசத் திற்குத் தாவி விடுவான். அதனால்தான் அவன் அடிக்கடி வந்து கொண்டிருந்ததை என்னால் மறுக்க முடியவில்லை. என் கணவர் கேம்ப்பிற்குப் போன பிறகு அவனுக்குப் போன் பண்ணி வரவழைத்துக் கொள்வேன். உடலுறவில் அவன் தலைக்கு மேல் போய் விடுவான். என் கணவர் அவ்வாறு இல்லை. என்னை எங்கேயாவது முத்தமிட வேண்டுமென்றால் கூட, என் பர்மிஷனைக் கேட்பார். அதனால் தான் இலுவோடு என் அனுபவம் என்றுமே



பூகம்பம் வந்தாற்போல இருக்கும். புதுப்புது அனு பவத்தை விட பெரிய த்ரில்லிங் இல்லை (நான் நீச்சு மானவள்.)

ஃ ஃ ஃ

இலுவோடு இருக்கும்போது என் கணவரைப் பற்றிய ஞாபகம் வந்துவிட்டால் மட்டும் நான், இலுவை விட்டு தொலைவில் ஒதுங்கிக்கொள்வேன். என் மனதிலுள்ள குழப்பத்தைப் பொருட்படுத்தாமல் தன் காரியத்தைத் தான் பண்ணிக் கொண்டே போவான். என் கணவரைப் பற்றி ஞாபகம் வந்துவிட்டால் அவனுக்கு முன்னால் நான் ஜடமாகி விடுவேன். அவ்வளவு நல்ல மனிதருக்கு துரோகம் பண்ணுகிறோமே என்றெண்ணிவிட்டால் போதும், என் இதயத்தை ரம்பத்தால் அறுப்பது போலாகிவிடும். உண்மையில் என் கணவர் என்னை நன்றாய் வைத்துக் கொண்டிருக்கிறார். எதற்கும் குறை இல்லை. ஆனா லும் என்னால் அவனைவிட்டுப் பிரிந்திருக்க முடிய வில்லை. என் பலவீனம் 'அவனாய்' இருப்பது என் துரதிர்ஷ்டம்.

ஃ ஃ ஃ

என் கணவர் கேம்ப்பிலிருந்து தினமும் ஒரு கடிதம் எழுதுவார். திரும்பி வரும்பொழுது எனக்காக விலை மதிப்பு வாய்ந்த பரிசுகளை வாங்கிக் கொண்டு வருவார்.

ஒரு முறை என் கணவர் ஒருமாதம் கேம்ப்பிற்குப் போக வேண்டியிருந்தது. போன இரண்டாவது நாள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். மிகவும் உருக்கமாய் இருந்தது அக்கடிதம். என்னை எவ்வளவு காதலிக்கிறார் என்றும்...என்னை விட்டுப் பிரிந்தால் எவ்வளவு வருத்த மாய் இருக்கிறது என்றும்... முழுவதும் படித்தபிறகு என்

மீதே எனக்கு அருவருப்பு உண்டாயிற்று. அவ்வளவு உயர்ந்த கணவரை மோசம் பண்ணுகிறோமே என்ற வருத்தம் என்னை ரம்பமாய் அறுக்கத் தொடங்கிற்று. ஒவ்வொரு நிமிஷமும் என்னை முள்ளாய் குத்திக் கொண்டிருந்தது.

இன்றைக்கு அவன் ஒரு உண்மையைச் சொன்னான். அவனுக்கு ஆக்ஸிடென்ட் ஆகவில்லையாம். என்னை மணம் செய்து கொள்ளப் பிடிக்காததால் அவ்வாறு பொய் சொன்னானாம். எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. கோபமும் வந்தது. அவன் ஒரு புதிய தியரியைச் சொன்னான். நான் அவனுடைய கனவு ராணியாம். அவனுடைய ஒவ்வொரு அணுவிலும் என் மீது அன்பு நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறதாம். திருமணமாகிவிட்டால் அந்த அன்பு போய் விடுமாம் காதல் ஒரு பொம்மையைப் போன்றதாம். அதைக் கண்ணாடி பீரோவில் போட்டுப் பூட்டி வைக்க வேண்டுமாம். சொன்ன பொழுது நன்றாய்த் தான் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு மட்டும் என்மீதே எனக்கு அருவருப்பு தோன்றிற்று.

அந்தச் சமயத்தில் தான் 'அவன்' வந்தான். நான் மிகச் சீரியஸாய்—''நீ திரும்பவும் என்னிடம் வர வேண்டாம்'' என்றேன். அதை ஜோக் அடிப்பதாய் எண்ணிக் கொண்டான். நான் கண்டிப்பாய்ச் சொன்னேன்—''என்னால் என் கணவருக்கு துரோகம் இழைக்க முடியாது. தயவு செய்து என் கண்ணில் படாதவாறு வெகு தூரத்திற்கு எங்கேயாவது போய்விடு'' என்றேன். அவ்வளவு கடினமாய் எப்படிப் பேசினேன் என்று எனக்கே தெரியாது. கெஞ்சினான்; அழுதான்.

கடைசியில் காலைப் பிடிக்கக்கூட தயாரானான். அவ்வளவுதான். நான் நெகிழ்ந்து போய்விட்டேன் திரும்பவும்!!



டைரியைப் படித்து முடித்ததும் மகரிஷி சலனமில்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

நாணயத்திற்கு இரு பாகம் இருப்பதைப் போல, உண்மைக்குக் கூட இரண்டு முகங்கள் உண்டு போலும்! அது வரை தன் மனைவி நயவஞ்சகி என்றும்' கணவன் கேம்ப்பிற்குப் போனதுமே கள்ளக்காதலனுடன் உறவு வைத்துக் கொண்டிருப்பவள் என்றும் மட்டுமே எண்ணியிருந்தான்.

இப்பொழுது ஆழ்ந்து பரிசீலித்தால்—

ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, வானத்தை அளாவும் ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமல், குடும்பத்து மனிதர்களோடு சரியான ஒட்டுறவு இல்லாமல் குமுறிக் கொண்டிருந்த 'மானசீக அனாதை!' அவள் நிலைமையை சிநேகம் என்ற பெயரில் நன்றாய் பயன் படுத்திக் கொண்டிருக்கிறான் அவன்!

பெண் ஒருத்தியைப் புகழ்ந்து—மடியில் படுத்துக் கொண்டு அழுது, பலவீனத்தின் மீது விளையாடியிருக்கும் 'அவன்' மீது மகரிஷிக்கு வெருப்பும் அருவருப்பும் ஏற்பட்டது.

அந்த துவேஷம் இதற்கு முன்பே, தன்னைத் தூக்குத் தண்டனையின் பிடியிலிருந்து மீட்பதற்கு அவன் நிராகரித்தபொழுது ஏற்பட்ட கோபத்தைக் காட்டிலும் அதிகமாய் இருந்தது.

திருமணம் என்ற பெயரில் டில்லிக்கும் பம்பாய்க்கும் சுற்ற வைத்து விட்டுக் கடைசியில் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் போனது ஒரு தப்பானால் - திருமணமான பிறகு பழைய வாழ்க்கையை மறந்து போய்க் கொண்டிருந்த பெண்ணை, திரும்பவும் அதற்குள் இழுத்துக் கொண்டு வந்தது மற்றொரு தப்பு!

மனைவியைப் பற்றிய யோசனைகளுடன் ரெயிலிங் மீது கைகளை ஊன்றியபடி கீழே பார்த்துக் கொண்டிருந்த மகரிஷிக்கு, ஒரு மனித உருவம் பைப் லைனைப் பிடித்துக்கொண்டே மேலே ஏறிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டது. ஓட்டல் அறைகள் வரிசையாய் இரண்டு ஃபிளாட்டுகளில் பரவலாய் இருந்தன. இருட்டாய் இருந்ததால் அடுத்த ஃபிளாட்டிற்கும், அவன் இருந்த ஃபிளாட்டிற்கும் இடையே இருந்த பைப் லைனைப் பிடித்துக் கொண்டு ஏறிய உருவத்தைத் தெளிவாய் பார்க்க முடியவில்லை.

அந்த உருவம் மெல்லமெல்ல மேலே ஏறி பக்கத்து அறையிலிருந்த பால்கனியில் இறங்கிற்று. முகம் சரியாய் தென்படவில்லை. மிக உயரமாய், திடமாய் இருந்தான் அந்த ஆள்.

அதற்குள் அந்த ஆள் நிசப்தமாய் முன்பக்கமாய் போனான். மகரிஷிக்கு அவன் யார் என்று அடையாளம் புரியவில்லை. உள்ளே என்ன நடந்து கொண்டிருந்தது என்றும் அவனால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை. மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டே பார்க்கத் தொடங்கினான். அதற்குள்... அந்த ஃபிளாட்டிலிருந்து பெருத்த சப்தம் கேட்டது. தொடர்ந்து அலறல்கள்.

மகரிஷி டென்ஷனை அடக்கிக் கொள்ள முடியாதவனாய், தன் அறைக் கதவைத் திறந்துகொண்டு தாழ்வாரத்திற்கு வந்தான்.

அந்த அறையிலிருந்து இரண்டு பேர் வெளியே ஓடி வந்தார்கள். பின்னாடியே...சற்று முன்னால் மாடிக்குப் போன ஆள், அவர்களைத் துரத்திக்கொண்டே அந்தப் பக்கமாய் ஓடுவதைப் பார்த்தான்.

அவன் கையில் துப்பாக்கி இருந்தது. மகரிஷிக்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்று புலபடவில்லை.



விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அந்த ஆளைத் தொடர்ந்து அவனும் படியேறினான்.

அந்த ஆள் மொட்டைமாடிக்கு வந்து சேரும் வரை மகரிஷி நிசப்தமாய் அந்த ஆளையே பின் தொடர்ந்தான். இருவரும் மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

உள்ளேயிருந்து ஓடிவந்தவர்கள் என்னவானார்கள் என்று மகரிஷிக்குப் புரியவில்லை. தண்ணீர் டாங்கிற்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டு அந்த ஆள் என்ன பண்ணுகிறான் என்று கவனிக்கத் தொடங்கினான். அவன் நடந்து தண்ணீர் டாங்க் பக்கமாகவே வந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, மகரிஷி அங்கிருந்து தப்பித்துக் கொள்ளப் போனான். அதற்குள்... டாங்கிற்கு இந்த பக்கமாய் இருந்த விளக்கின் வெளிச்சம் அந்த ஆளின் முகத்தில் பட்டது. அவ்வளவுதான்! மகரிஷி சிலையாய் நின்றுவிட்டான்.

அந்த ஆள்...'தன் மனைவியின் காதலன்'. அவனைப் பார்த்ததுமே மகரிஷி அதிர்ச்சியடைந்தான். தன்னையறியாமல் அங்கிருந்து மறைவிற்கு நகர்ந்து கொண்டான். அவன் மூளை கொஞ்ச நேரம் வேலை செய்ய வில்லை. ஆனால் அது கொஞ்ச நேரந்தான்! அவனிடமிருந்த துவேஷமெல்லாம் வெளிப்படத் தொடங்கிற்று. தான் இன்றைக்கு இந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணமே அவன்தான்! ஒரு குடும்பப் பெண்ணோடு விபச்சாரத்தை நடத்திவிட்டுக் கையும் களவுமாய் பிடிப்பட்டுப் போய், தன் மானம் போய் விடப் போகிறதே என்ற பயத்தில், ஒரு ஆள் தூக்கு மேடையில் ஏறவிருந்ததைக் கூடப் பொருட்படுத்தாமலிருந்த கிராதகன்! மகரிஷியின் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன. ஆவேசம் விவேகத்தை மீறிவிட்டது. சரியாய் அந்தச் சமயத்தில் தான் அவன் குட்டிச் சுவற்றிற்கருகில் போய் கீழே

எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னாலிருந்து காற்றிலும் வேகமாய்ப் போன மகரிஷி, ஒரே அலாக்காய் அவ்வளவு உயரத்திலிருந்து அவனை கீழே தள்ளிவிட்டான். என்ன நடந்தது என்று கவனிப்பதற்குள்ளாகவே அவன் உடல் மூன்றுமாடிக் கட்டிடத்திலிருந்து தரையில் விழுந்துவிட்டது.

பொத்தென்ற சப்தம்.

பிறகு நிசப்தம் எஞ்சிநின்றது.

# 7

வுடா மார்க்கெட்டிங்' எல்லைக்குள் ஐம்பது கிலோ மீட்டர் வேகத்துடன், வேகமாய் வந்து நுழைந்தது ''சன்னி''. பெருத்த ஓசையுடன் கேட்ட பிரேக் சப்தத்திற்குத் தம் வேலைகளில் பரபரப்புடன் ஆழ்ந்து போயிருந்தவர்கள் எல்லோரும் ஒரு வினாடி திரும்பிப் பார்த்தார்கள்.

பைக்கில் வந்து நின்ற அந்தப் பெண் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. ஸ்டைலாய் கேசங்களைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டே ஸ்டாண்ட் போட்டாள், வுடா மார்க்கெட்டிங் எல்லைக்குள் சைக்கிள்களுக்கும். ஸ்கூட்டர்களுக்கும், கார்களுக்கும் தனித்தனியே 'பார்க்கிங்' இடங்கள் இருந்தன. ஆனால் 'சன்னி'யில் வந்து இறங்கிய அந்தப்பெண் 'கார்களை நிறுத்த மட்டும்'-என்று எழுதியிருந்த போர்டைப் பார்த்து விட்டுக் கூட



அதை சர்வ சாதாரணமாய் எடுத்துக் கொண்டு, பைக்கை ஒரு காருக்குப் பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்தினாள். அவள் ஸ்டாண்ட் போட்ட விதத்தைப் பார்ப்பவர்கள், ஒரு வினாடி அப்படியே தம்மை மறந்து நின்று போய் விடுவார்கள்.

அவள் ஸ்டாண்ட் போட்டு விட்டுத் திரும்பியபொழுது ஒரு ஆள் அவளிடம் வந்தான். ஆறடி உயரம். விசாலமான மார்பு! அவன் வந்து கிட்டே நின்றதைப் பார்த்து விட்டு அவள்-''என்ன விஷயம்?'' என்பது போல புருவங்களைத் தூக்கினாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ! இங்கே காரை மட்டுந்தான் பார்க் பண்ணணும்.'' என்றான் அவன். அவன் குரல் கம்பீரமாய் இருந்தது.

''பார்க் பண்ண எங்களிடம் கார் இல்லைங்க''-குறும்புத்தனம் மிளிரச் சிரித்தாள் அவள். அவள் அவ்வாறு சிரித்தபொழுது, வில்லை வளைத்தாற்போல வளைந்தன அவள் உதடுகள்.

''அதில்லைங்க, இங்கே பைக்கைப் பார்க் பண்ணக் கூடாது'' என்று திருத்தினான் அவன். அவள் அழகு அவனைத் தடுமாற்றமடையச் செய்தது.

அவள் அவனை ஏறயிறங்க ஒரு முறை பார்த்து விட்டு, காற்றிற்கு நெற்றியில் வந்து விழுந்த கேசங்களைப் பின்னுக்குத் தள்ளிகொண்டே, ''அதுசரி, இந்த விஷயத்தைச் சொல்றத்துக்கு நீங்கள் யாருங்க?'' என்று குறும்பாய் கேட்டாள். ''நான் இந்தப் பகுதியின் ஏ.ஸி.பி''சிவில் டிரெஸ்ஸில் இருந்த அவன் பதிலளித்தான்.

அவளுக்கு பகீரென்றது. சட்டென்று சமாளித்துக் கொண்டு—'' உங்கள் ஐடென்ட்டிட் கார்டை ஒரு முறை

காட்டுறீங்களா?'' என்று கேட்டாள். அவன் புருவம் முடிச்சேறிற்று. ஏதோ சொல்ல வந்தவன், சட்டென்று அந்த யோசனையை விட்டுவிட்டு, பாக்கெட்டிலிருந்து ஐடென்ட்டிட்டி கார்டை எடுத்துக் காட்டினான்.

அவள் பயந்துபோய் அவனை சமாதானப்படுத்திக் கொள்வதற்காக—''நீங்கள் இவ்வளவு பெரிய ஆபீசராய் இருந்து கொண்டு இப்படிப்பட்ட சின்ன கேசுகளைப் பிடிக்கிறீங்களே, ஏன்?'' என்று அரக்கம் ததும்பக் கேட்டாள்.

''போலீஸ் ஆபீசராய் இல்லாமல் ஒரு சாதாரணக் குடிமகனாய்க் கூட நான் இந்த விஷயத்தைச் சொல்லலாம். இங்குள்ள விதிகளை மீறி நீங்கள் இங்கே பைக்கை நிறுத்தியிருக்கீங்க. அதைப்பற்றிக் கேட்ட ஒரு போலீஸ் ஆபீசரைத் தன் ஐடென்ட்டிட்டியைக் காட்டச் சொல்லி உலுக்கி எடுத்தீங்க.''

''அப்படிக் கேட்கிற அதிகாரம் எனக்கு இருக்கே?''

''நீங்கள் அதிகாரங்களைப் பற்றிப் பேசுவதால் நான் ரூல்ஸைப் பற்றிச் சொல்கிறேன். உங்கள் பைக்கைக் கோர்ட்டில் அபராதம் கட்டி விடுவித்துக் கொள்ளலாம்.''

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. கெஞ்சுவதற்கு மனம் இடங் கொடுக்கவில்லை.

அதற்குள் அங்கே ஒரு கார் வந்து நின்றது. அதன் மீது ''போலீஸ்'' என்று எழுதியிருந்தது அதிலிருந்து கமிஷனர் ஆஃப் போலீஸ் இறங்கினார். தேஜா அவருக்கு சல்யூட் அடித்தான்.

''ஹலோ மிஸ்டர் தேஜா...! என்ன விஷயம்?''—என்பது போல அவனைப் பொருள் பொதியப் பார்த்தார்.



தேஜா ஏதோ சொல்ல வருவதற்குள் அவள் இடைமறித்து—''சார்...இவன் என் அட்ரஸைச் சொல்லச் சொல்லியும் இல்லாதுபோனால் ராங் பார்க்கிங் என்று சொல்லி என் பைக்கை கோர்ட்டிற்கு அனுப்பி விடுவதாகவும் பயமுறுத்துகிறான்'' என்று பயந்தாற்போல நடித்துக் கூறினாள்.

ரவிதேஜா அதிர்ச்சியடைந்தவனாய் வாயடைத்துப் போனான். ஒரு வினாடி இந்த திடீர் சம்பவத்திற்கு திகைத்துப்போனவன், சட்டென்று சுதாரித்துக்கொண்டு ''நோ ..நோ...சார் எல்லாம் பொய். என்ன நடந்தது என்றால்...'' என்று சொல்லப்போனான்.

அவள் அவனைப் பேசவிடவில்லை. ''நிஜந்தான் சார்...ஐடென்ட்டிட்டி கார்டைக் காட்டி 'நான் ஐ.பி.எஸ். ஆபீசர். உன் அட்ரஸைச் சொல்லு என்று உயிரை எடுக்கிறான் சார்'' என்றாள் உரத்தக் குரலில்.

அதற்குள் அங்கே ஜனங்கள் கூடிவிட்டார்கள். 'என்னை ஒருவன் அழவைக்கிறான்' என்று ஒரு பெண் பொய் சொல்லி நம்ப வைப்பது மிகச் சுலபம். அதுவே 'ஒரு பெண் என்னை அழ வைக்கிறாள்' என்று ஒரு ஆண் சொன்னால் யாருமே நம்ப மாட்டார்கள்.

இதற்கு கமிஷனர் ஆஃப் போலீஸ் கூட விதி விலக்கு இல்லை. அதோடு 'சுற்றிலும் ஜனங்கள் வேறு!

''மிஸ்டர் தேஜா...ஒரு பொறுப்பான ஆபீசராய் இருந்துகொண்டு இதென்ன இப்படி நடந்துகொள்கிறீங்க?'' என்றார் அதிகாரக்குரலில்.

தேஜா பதில் பேசவில்லை.

அந்தப் பெண்ணின் நாடகம் வெற்றியடைந்து விட்டது என்று புரிந்தது அவனுக்கு. இனி வாதாடிப்

பிரயோஜனமில்லை என்றும் கூடத் தெரிந்தது. அவர் தோரணையைப் பற்றி நன்றாய் அறிவான் அவன். அதனால்தான் "சாரி" என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

போகும்பொழுது அவள் முகத்தை ஓர் முறை பார்த்தான். அவள் முகத்திலிருந்த குறும்பு அவனை கேலி செய்தது. லேசாய் யாரும் அறியாதவாறு அவள் கண் அடித்தாற்போலவும் தோன்றிற்று.

அவன் தன் வாகனத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் பின்னாலிருந்து, அவர் அப்பெண்ணைக் கேள்வி கேட்டது காதில் விழுந்தது.

"உன் பேரென்னமா?"

அவள் மேலும் அப்பாவியைப் போல முகத்தை வைத்துக்கொண்டு— "என் பெயர் சந்தனா. சார்" என்றாள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

"இட்ஸ் நைஸ் நேம்."

## 8

ரவிதேஜாவின் மனமெல்லாம் ஒரே பரபரப்பாய் இருந்தது. ஐ.பி.எஸ் ரிஸல்ட்டை எதிர் பார்த்துக் கொண்



டிருந்த சமயத்தில் கூட அவனுக்கு அவ்வளவு பரபரப்பு ஏற்பட்டதில்லை. கார் மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தது அதையும் விட முன்னதாகவே அவன் இதயம் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்விட்டது

முதல் தடவை பெண்பார்க்கப் போகும்பொழுது யாருக்குமே அவ்வளவு ஆர்வம் ஏற்படுவது சகஜந்தான்.

அழகான இரண்டடுக்கு மாடிவீடு அது. முன் பக்கத்தில் இரண்டு கார்களை நிறுத்தக்கூடிய அளவிற்கு போர்ட்டிகோ. இரு பக்கங்களிலும் பலவிதப் பூஞ்செடிகள். அவற்றிற்கு நடுவே கேட்டிலிருந்து போர்ட்டிகோ வரைக்கும் செம்மண் சாலை.

கேட்டிற்கருகிலேயே சின்ன போர்டு. அதில் விஷ்ணுவர்த்தனன் என்ற பெயர் இருந்தது. விஷ்ணுவர்த்தனனின் பெயருக்கேற்றபடி அந்த வீட்டில் லட்சுமிகளைவழிந்து கொண்டிருந்தது. சுவர்களில் பலவித வர்ணச் சித்திரங்கள். அறை முழுவதும் சிவப்புக் கம்பளம் பரப்பப்பட்டிருந்தது...... நட்ட நடுவே ஏர்கண்டிஷன் பண்ணப்பட்ட பங்களா அது.

கார் ஹாரன் சப்தத்தைக் கேட்டதுமே கூர்க்கா பரபரப்புடன் போய், கேட்டைத் திறந்துவிட்டு சல்யூட் அடித்தான். கார் வந்து போர்ட்டிகோவில் நின்றது. உள்ளேயிருந்து விஷ்ணுவர்த்தனன் பரபரப்புடன் வெளியே வந்து- "வாங்க, வாங்க, உங்களுக்காகத் தான்காத்துக் கொண்டிருக்கோம்" என்றார். காரிலிருந்து முதலில் சத்யநாராயணன் இறங்கினார். அவர் ரவி தேஜாவின் தந்தை, உயரமாய், பருமனாய், பலமாய் இருந்தார் வழுக்கைத்தலை. லேசாய் நிரை கண்டிருந்த தலை. அது மட்டும் இல்லாமலிருந்திருந்தால், அவர் கூட ஒரு இளைஞன்தானோ என்று தவறாய் எண்ணிக் கொண்டிருப்பார்கள் பார்ப்பவர்கள்.

தந்தையைத் தொடர்ந்து ரவிதேஜாவும் காரிலிருந்து இறங்கினான். சாதாரணச் சமயத்தில் ஒரு ஐ.பி.எஸ். ஆபீசருக்கு இருக்கும் மிடுக்கும் பெருமையும் இப்பொழுது அவனிடம் இல்லை. தந்தையோடு பெண்பார்க்க வந்த இளைஞனாய், கொஞ்சம் சங்கோஜத்தோடு, வரவழைத்துக் கொண்ட கம்பீரத்தோடு இருந்தான்.

மூவரும் ஹாலுக்குள் நுழைந்தார்கள். நடுவே மூன்று சோபாக்கள் வளையமாய் போடப்பட்டிருந்தன. நடுவில் டீப்பாய். அதன்மீது அழகான பூந்தொட்டி. அதற்குப் பக்கத்தில் இரண்டு மூன்று ஆங்கில பத்திரிக்கைகளும் அன்றைய தினசரியும் இருந்தன. "உட்காருங்கள்" என்றார் விஷ்ணுவத்தனன்.

விஷ்ணுவத்தனினும் சத்யநாராயணனும் சிறுவயதில் சேர்ந்து படித்தவர்கள். அதற்குப்பிறகு அவர்கள் இருவேறு வழிகளில் பிரிந்து விட்டார்கள்.

திருமணம் ஆனபிறகு விஷ்ணுவத்தனனுக்கு மரவியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இரண்டு ஏக்கர் இருந்த நிலம் சுமார் இருபது ஏக்கராயிற்று. மகளுக்குப் பத்து வயதானபொழுது, அவர் சொத்துக்கள் இன்னும் பத்துமடங்காய்ப் பெருகிவிட்டது. உதகமண்டலத்திற்குப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அரசாங்கம் நிலத்தை விற்றபொழுது, அந்நிலத்தை வாங்கி யூக்லிப்ஸ்டஸ் மரங்களை வளர்த்தார். அவை அளவுக்கு மீறி லாபங்களைக் கொழித்தன. எப்பொழுதாவது போய் தங்கியிருப்பதற்காக ஒரு கெஸ்ட் ஹவுசைப் போல அந்த தோட்டத்திலேயே ஒரு கட்டிடத்தைக் கட்டியிருந்தார்.

கோடையில் நிறையப்பேர் உதகைக்குப் போய்க் கொண்டிருப்பார்கள். அங்கே வந்தவர்கள் எல்லோரும் கண்டிப்பாய் அந்த தோட்டத்தையும் பார்ப்பார்கள்.



அந்த தோட்டத்தின் பெயர் சந்தனா கார்டன்ஸ். தன் மகளின் பெயரையே அதற்கும் வைத்திருந்தார் அவர்.

விஷ்ணுவர்த்தனன் இயற்கையாகவே கலை உள்ளம் படைத்தவர். இயற்கைக் காட்சிகளை ரசிப்பார். வருடத்தில் ஆறுமாதங்கள் குடும்பத்தோடு சந்தனா கார்டனில் களிப்பார்.

கெஸ்ட் ஹவுசிற்கு முன்னால் பலவித பூஞ்செடிகளைத் தருவித்து நட்டு, வளர்ப்பது அவர் வழக்கம். ஒருமுறை ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு அலாதியான பூஞ்செடியை வரவழைத்தார். மிகப் பெரிய பூவாய் பூக்கும் அந்தச் செடியின் பெயர் ரஃப்லிஸியா. அந்த புஷ்பத்தைப் பார்ப்பதற்காகக்கூட சீசனில் டூரிஸ்ட்டுகள் . சந்தனா கார்டனுக்கு வந்துகொண்டிருப்பார்கள்....

ரவிதேஜா சோபாவில் தர்மசங்கடத்துடன்உட்கார்ந்தபடி சுற்றுமுற்றும் பார்த்தான். அவ்வறையின் ஒரு மூலையில் அழகான படிக்கட்டு இருந்தது. அங்கிருந்து மாடிக்குப் படிகள் இருந்தன. அந்தப் படிகளிலிருந்து இறங்கி வரப்போகும் பெண்ணை எதிர்பார்த்தபடி அவன் அடிக்கடி அந்தப்பக்கமாய் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் சட்டென்று பெரியவர்கள் தன் உற்சாகத்தை கவனித்து விடுவார்களோ என்ற சங்கோஜத்துடன் பார்வையைத் திருப்பிக்கொண்டிருந்தான்.

அந்தப் படிகளிலிருந்து இறங்கி வரப்போகும் பெண் தான் தன்னை முதல் நாள் அழவைத்த சந்தனா என்று தெரிந்திருந்தால் அவனுக்கு எப்படியிருந்திருக்குமோ!

பெரியவர்கள் இருவரும் சம்பாஷணையில் ஆழ்ந்து போனார்கள். யூகலிப்ஸ்டஸ் வளர்ப்பைப் பற்றி விஷ்ணுவர்த்தனன் சொல்லத் தொடங்க, பட்டாளத்தில் தன் அனுபவத்தைப் பற்றி சத்யநாராயணனும் பேசத்

தொடங்கினார். ரவி தேஜாவுக்கு மட்டும் இதொன்றும் காதில் விழவில்லை. அவன் கையில் புத்தகம் இருந்ததே தவிர அவன் மனம் அதிலில்லை. வேறு எங்கேயோ இருந்தது அதற்குள் அவ்வறையில் முதலில் லேசான வாசனை பரவிற்று. பேச்சுக்கள் நின்றுவிட்டன. அறையில் சட்டென்று நிசப்தம் வந்து சூழ்ந்ததைப் பார்த்துவிட்டு ரவிதேஜா நிமிர்ந்து பார்த்தான் முதலில் அவன் கண்முன்னாடி தங்கக் கொடி மின்னினாற்போலிருந்தது. தொலைவிலிருந்து அது நடந்து வந்து கொண்டிருந்தாற் போல தோன்றிற்று. படிகளிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த பெண்ணையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சந்தனா உண்மையிலேயே மிக அழகாய் இருந்தாள். கண்களைப் பறிக்கக்கூடிய அழகோடு இருந்தாள் அவள் மஞ்சள் நிறப் பட்டுப்புடவை உடுத்திக்கொண்டு கையில் ஒரு ட்ரேயுடன் காபிகளைக் கொண்டுவந்து கொண்டிருந்தாள். தங்கத்தைப் பழிப்பது போலிருந்தது அவள் உடல் நிறம். பூஜைக்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்த தேவ கன்னிகையைப் போல தோன்றினாள் அவள். சத்ய நாராயணன் கூட அவளை தொலைவிலிருந்தே பார்த்துவிட்டு ''பொண்ணு மகாலட்சுமியைப் போல இருக்கிறாள்'' என்றெண்ணிக் கொண்டார். விஷ்ணுவர்த்தனன் கூட இவள் தன் மகள்தானா என்று வியந்து போனார்.

அதற்குள் சந்தனா கிட்டே வந்தாள். அப்பொழுது தான் ரவிதேஜா அவளை அடையாளம் கண்டு கொண்டான். அவன் புருவங்கள் முடிச்சேறின. முதலில் எங்கேயோ பார்த்தாற்போலிருக்கிறதே என்றெண்ணிக் கொண்டான். கிட்டே வந்து கொண்டிருக்கையில் திரை விலகினாற்போல மூளையிலிருந்து ஞாபக அலைகள் நகர்ந்து, முதல் நாள் மாலையில் நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது.



அவளேதான்! அதில் சந்தேகமில்லை. தான் ஏன் குழப்பமடைந்தோம் என்று இப்பொழுது புரியத் தொடங்கிற்று. நேற்று அவள் மாடர்ன் டிரெஸ்ஸில் இருந்தாள். இன்று புடவை கட்டியதும் முற்றிலும் தோற்றமே மாறிப் போய்விட்டது.

அதற்குள் சந்தனா டீபாய்க்கருகில் வந்தாள். தலை குனிந்தபடி அவனிடம் காபியை நீட்டினாள்.

ரவிதேஜாவின் முகம் தீவிரமாய் இருந்தது. கமிஷனருக்கு முன்னால் தன் மீது புகார் சொல்லி குறும்புத்தனமாய் சிரித்த சந்தனா, இப்பொழுது இப்படி அடக்க ஒடுக்கமாய் ஏதும் அறியாதவளைப் போல காபியை நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. தான் அவளை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டதை அவள் தெரிந்து கொள்ள வேண்டும், என்பதற்காக முகத்தைத் தீவிரமாய் வைத்துக் கொண்டான். ஆனால் சந்தனா அதைக் கவனித்ததாய் தெரியவில்லை. தந்தைக்கும் கூட காபியைத் தந்துவிட்டு, அங்கிருந்து போய்விட்டாள்.

ரவி தேஜா நொந்து போய்விட்டான். இருவரையும் தனியாய் உட்கார வைப்பார்கள் என்றும், அப்பொழுது அவளை உலுக்கி எடுக்கலாம் என்றும் எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அவள், அவனை அடையாளம் தெரிந்து கொண்டாளா? தெரிந்து கொண்டும் கூட அவ்வாறு தலை குனிந்து கொண்டு வெட்கப்படுவது போல நடித்தாளா?

அதற்குள் உள்ளேயிருந்து விஷ்ணுவர்த்தனனின் மனைவி வந்தாள். அவளை சத்யநாராயணனுக்கு - அறிமுகம் செய்துவைத்தார். அவர்கள் மூவரும் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ரவிதேஜா மட்டும் தன் யோசனையில் தான் ஆழ்ந்திருந்தான்.

"காபி குடிப்பா" என்றார் விஷ்ணுவர்த்தனன்.

யோசனையில் ஆழ்ந்தபடியே கோப்பையைக் கையிலெடுத்துக் கொண்டு ஒரு வாய் குடித்துவிட்டுத் திரும்பவும் தட்டில் வைக்கப் போனவன் அப்படியே நின்று விட்டான்.

கோப்பையை எடுத்த இடத்தில், தட்டில் வட்டமாய் கத்திரித்து ஒட்டப்பட்டிருந்த ஒரு வெள்ளைத்தாளின் மீது அழகான எழுத்துக்கள் "SORRY" என்றிருந்தது.

சட்டென்று மேகங்கள் விடுபட்டாற் போலாயிற்று. நிமிர்ந்து மாடியைப் பார்த்தான்.

படிக்கட்டில் சாய்ந்தபடி பால்கனியில் சந்தனா நின்று கொண்டிருந்தாள். அவன்தன் பக்கமாய் பார்த்ததுமே, அவனுக்கு மட்டுமே புரியும் பிடியாய் லேசாய் சிரித்தாள். அதற்குப் பிறகு இரு கன்னங்களிலும் அடித்துக் கொள்வதுபோல குறும்பாய் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். ரவிதேஜா உதடுகளை இறுக்கிச் சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவன் மனம் சுயேட்சையடைந்து விட்டாற்போல எங்கெங்கோ மிதந்து கொண்டிருந்தது. எப்பொழுதும்ஆர்வத்தோடும், குறும்புத்தனத்தோடும், உலகத்திலுள்ள சந்தோஷமெல்லாம் தமக்கே சொந்தம் என்பது போலவும் இருக்கும் பெண்கள் மிக அரிது. அப்படிப்பட்டவள் தனக்கு மனைவியாய் வரப்போகிறாள் என்றெண்ணியதுமே அவன் மனம் சந்தோஷத்தால் பொங்கிப் பூரித்தது.



# 9

தேஜா சாப்பிட்டு முடித்தபொழுது டெலிபோன் மணியடித்தது. கையைக் கழுவிக்கொண்டு துவாலையால் கைகளைத் துடைத்துக்கொண்டு வந்து ரிசீவரை எடுத்து "ஹலோ...தேஜா ஹியர்—" என்றான்.

"ஹலோ! உங்களிடம் ஒருவிஷயத்தைச் சொல்ல வேண்டும் என்றுதான் போன் பண்ணினேன்." மறுமுனையிலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. "அது சரி, நீங்கள் யார்?" முகத்தைச் சுளித்துக் கொண்டே கேட்டான் ரவிதேஜா.

"நான் யார் என்பதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாதது சார். நான் சொல்லப் போகிற விஷயம் உங்கள் வாழ்க்கைக்கு மிக முக்கியமானது." மறுமுனைக் குரலில் தீவிரம் தெரிந்தது.

"அவ்வளவு முக்கியமான விஷயம் என்ன?" சாதாரணமாய் கேட்பது போலவே கேட்டான். ஆனால் அதில் கலக்கம் இருந்தது. அவன் மனம் ஏதோ தீயதை எடைபோட்டது.

"சார்...நீங்கள் இன்று காலையில் எந்தப் பெண்ணைப் பெண் பார்த்து விட்டு முகூர்த்தத்தை வைத்துக்கொண்டு வந்திருக்கீங்களோ, அந்த பிரபல மரவியாபாரி விஷ்ணுவர்த்தனனின் ஒரே மகள் சந்தனாவைப்பற்றிச் சில விவரங்

களை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்'' மறுமுனைக் குரல் மிகச் சாதாரணமாய் கேட்டது.

தேஜாவின் உடல் சட்டென்று நடுங்கிற்று. இனிமையான ஏதோ கனவு சிதறிப் போய்க் கொண்டிருந்தாற் போன்ற உணர்ச்சி அவனைச் சூழ்ந்து கொண்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு ''எ...என்ன விவரம்?'' என்று கேட்டான்.

''அந்தப் பெண் இதற்கு முன்பே ஒருவனைக் காதலித்தாள். இன்னும் இரண்டு பேர் பாய் ஃபிரெண்டுகள் கூட இருக்காங்க...''

''நோ...இம்பாஸிபிள்'' அவன் உணர்ச்சி வசத்தோடு கத்தியே விட்டான்.

''ஒரே நாள் பெண் பார்த்துவிட்டு வந்து, அவ்வளவு கச்சிதமாய் எப்படிச் சொல்றீங்க?'' மறுமுனைக்குரல் கேட்டது. ஆம். உண்மைதான். அவளைப்பற்றித் தனக்கு என்ன தெரியும் என்று இந்த விதமாய் சொன்னான்? அவன் மனதில் போராட்டம்!

''என்னவோ எனக்கு அப்படித் தோன்றிற்று'' ஏதோ யோசித்தபடியே சொன்னான் தேஜா.

''அந்தப் பெண் ஒருத்தனைக் காதலித்தாள். அடிக்கடி அவங்க சந்தித்துக் கொள்வாங்க. ஒருக்கால் என் வார்த்தை மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் இன்றிரவு-இன்னும் ஒன்றரை மணி நேரங்கழித்து அதாவது பத்தரை மணிக்கு ஒட்டல் கிருஷ்ணா-ரூம் நெம்பர் த்ரீ நாட் த்ரீயில் பாருங்கள். அவளும் அவள் காதலனும் அந்த ரூமில்தான் இருப்பாங்க...''

''அது சரி, நீங்கள் யார்?'' தேஜா வார்த்தையை முடிப்பதற்குள்ளாகவே மறுமுனையில் போன் கட் ஆகிவிட்டது. போனை வைத்துவிட்டான் தேஜா.



உண்மைதானா? அது யாராயிருக்கும்? யாராவது வேண்டாதவர்கள் சொல்லியிருப்பார்களா? சந்தனாவுக்கு விரோதிகள் யாராவது இருக்கிறார்களா? அவன் மூளையில் ஆயிரம் கேள்விகள். அவன் நெற்றியில் வியர்த்துக் கொட்டிற்று. மகன் எதைப்பற்றியோ சீரியஸாய் யோசித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார் சத்ய நாராயணன். மகனிடம் வந்து—''எங்கேயாவது அர்ஜெண்ட்டாய் போகணுமா?'' என்று கேட்டார்.

''ஆமாம் டாடி. இதோவரேன்.''

மகன் அவ்வளவு டென்ஷனாய் இருந்து அவர் பார்த்ததில்லை.

தேஜா டிரெஸ்ஸிங் ரூமிற்குப் போனான். யூனிபாரத்தைக் கையிலெடுக்கப் போனவன் ஒரு நிமிஷம் யோசித்து விட்டுத் திரும்பவும் அடர்ந்த நிறத்தில் பக்கத்தில் இருந்த பேன்ட்டையும் சட்டையையும் போட்டுக் கொண்டான். இரண்டடிகள் நடந்தவன், மறுபடியும் ஏதோ நினைவிற்கு வந்தவனாய் திரும்பவும் யூனிபாரத்திற்கருகில் போய்..எதற்காகவோ தடவினான். தனக்கு வேண்டியது கிடைத்ததும் எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அவ்வறையை விட்டு வெளியேறினான். வெளியே குளிர் அதிகமாய் இருந்தது. தேஜா கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். நேரம் ஒன்பதரை. இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. ஜீப்பை எடுத்துக் கொண்டு போனால் யாருக்காவது சந்தேகம் வரலாம். சென்டர் அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருக்காது. நடந்து போனால் பத்துநிமிஷங்களில் போய்விடலாம்.

பேன்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் நுழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். முதல் ஆட்டம் சினிமா விட்டிருந்ததால் தெருவில் ஜனநடமாட்டம்

நிறையவே இருந்தது. ஸ்கூட்டர்கள், ஆட்டோக்கள், பஸ்கள், அந்தச் சப்தம் தலைவேதனையாய் இருந்தது. அவன் மனதிலிருந்த யோசனைகளைப்போல! கிட்டத்தட்ட சென்டருக்கருகில் வந்து சேர்ந்து விட்டான். அங்கிருந்து இன்னும் இரண்டு மூன்று பர்லாங்கு இருக்கும் அந்த ஓட்டல். ஆனால் அதற்குள்ளாகவே அங்கே போகப் பிடிக்கவில்லை அவனுக்கு. எதற்காகவோ சுற்றுமுற்றும் பார்த்தான்.

சாலைக்கு ஒரு பக்கத்தில் ஒரு பெட்டிக்கடை தென்பட்டது. போக்குவரத்தைக் கடந்து பெட்டிக் கடைக் கருகில் வந்தான். சிகரெட் பாக்கெட் ஒன்றை வாங்கி ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். புகைப்பிடித்துக் கொண்டே யோசிக்கத் தொடங்கினான்.

சந்தனா எவ்வளவு அழகு! சிவந்த மேனி! சிரித்த பொழுது மர்துளை முத்துக்களைப் போல, தென்படும் பல்வரிசைகள்...அக்கண்களில் தான் எவ்வளவு கவர்ச்சி! ஒளி! ஒரு ஆண் ஒரு பெண்ணின் மீதுள்ள காதலால் தாஜ்மகாலைக் கட்டினான் என்று சொன்னபோது இவ்வளவு நாட்களாய் அதைப் பேத்தலாய் நினைத்துக் கொண்டிருந்தான். சந்தனாவைப் பார்த்த பிறகு அதில் எந்த ஆச்சரியமும் இல்லை என்று தோன்றிற்று. ஆனால்... போன்!

போன் ஞாபகம் வந்ததுமே அவன் மூளையைப் பிடித்து யாரோ அமுத்தினாற்போல இருந்தது எப்படியாவது சரி, இந்த மர்மத்தைத் தெரிந்துகொண்டுவிட வேண்டும்!

அந்த டென்ஷனிலேயே மூன்று சிகரெட்டுகளைக் கொளுத்தினான். பிறகு கைக்கடியாரத்தை ஒருமுறை பார்த்தான். பத்தேகால். மெதுவாய் நடக்கத் தொடங்கினான்.



ஓட்டல் கிருஷ்ணா என்ற நியான் போர்டு தொலைவிலேயே தென்பட்டது. வாசலில் கூர்க்கா நின்று கொண்டிருந்தான். அவனைப் பொருட்படுத்தாமல் நேராய் உள்ளே போய் ரிஸப்ஷனிஸ்ட்டிடம் வந்தான். அங்கே ஒரு அழகான பெண் இடது கையில் போனைப் பிடித்துக் கொண்டு வலது கையால் ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள்.

''எக்ஸ்க்யூஸ்மீ! வேர் ஈஸ் ரூம்நெம்பர் த்ரீ நாட் த்ரீ?'' கேட்டான் ரவிதேஜா.

அவள் போனைக் கீழே வைத்துவிட்டு முறுவலுடன்... ''தேர்ட் ஃப்ளோர்!''—என்று கண்களாலேயே லிஃப்ட் பக்கமாய் காட்டினாள்.

''தாங்க்யூ'' என்று சொல்லி விட்டு லிப்டை நோக்கி அடியெடுத்து வைத்தான்.

லிப்ட்டில் மூன்றாவது மாடிக்கு வந்து சேர்ந்தான். லிப்டிலிருந்து இறங்கியதுமே எதிரேயிருந்த அறையின் நம்பரைப் பார்த்தான். அதற்குப் பக்கத்திலிருந்த ரூம் நம்பரையும் பார்த்தான். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு வலதுபக்கமாய் மெதுவாய் நடந்து வராந்தாவின் கோடி வரை வந்தான்.

வலது பக்கத்து கடைசி அறை கதவிற்கு நடுவில் அலுமினிய எழுத்துக்கள் ''303' என்றிருந்தது

வராந்தா ஆளரவமில்லாமல் இருந்தது. ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் வரவில்லை என்று உறுதியாய்த் தெரிந்து கொண்ட பிறகு ஒரு முறை குனிந்து சாவித் துவாரத்தின் வழியாய் பார்த்தான்.

உள்ளே எதுவும் தென்படவில்லை. ஆனால் அவன் செவிகளில் ஏதோ ஆண் குரல் கரகரப்பாய் கேட்டது. அது தெளிவாய் இல்லை.

கதவிற்கு வலது பக்கத்தில் பால்கனி இருந்தது. பால்கனிக்குப் போய் ரெயிலிங்கைப் பிடித்துக் கொண்டே கீழே பார்த்தான். அங்கே சின்னச் சின்னச் செடிகள் புதர்களைப் போல இருந்தன. அந்தப் பக்கமாய் யாரும் வர மாட்டார்கள் என்று உறுதியாய்த் தெரிந்து கொண்டான். பின்பக்கத்து பால்கனியைக் கூர்ந்து பார்த்தான். அவன் நின்றுகொண்டிருந்த இடத்திற்குக் கொஞ்சம் வலது பக்கமாய் சுவர் முடிந்து விட்டது. அங்கிருந்து தென்பட்டன மேலே தண்ணீர் டாங்கிலிருந்து வரும் பைப் லைன்கள்.

பால்கனி ரெயிலிங்கின் மீது ஒரு காலை ஊன்றிக் கொண்டு, இன்னொரு காலை பைப் லைனின் மீது வைத்தான். இப்பொழுது அவன் தலை அறையின் மேல் பாகத்தைப் போல இருந்த வென்ட்டிலேட்டருக்குச் சமமான பரப்பில் இருந்தது, அதில் தலையை நுழைத்துக் கீழே எட்டிப் பார்த்தான்.

அறையில் சந்தனா இருந்தால் அவன் மௌனமாய் போய் விடவேண்டும் என்று தான் தீர்மானித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவ்வறையில் கால் பாகம் மட்டுமே தென்பட்டது. அது கதவிற்கு முன்பாகந்தான். உள்ளே யாரோ அசைந்தாற்போலிருக்கவே கூர்ந்து பார்த்தான்.

அதுவரை வராந்தாவில் மங்கலான வெளிச்சமாகவும் அறைக்குள் அதிக வெளிச்சமாகவும் இருந்ததால், அவ்வாறு நகர்ந்த உருவத்தைக் கண்களால் சட்டென்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் தென்படத் தொடங்கிற்று. அது ஒரு ஆணின் பின் தலை.

தேஜா ஒரு பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்திருந்ததால் நன்றாய் தென்படவில்லை, 'ஒருக்கால் அவன் படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்திருப்பான்' - என்றெண்ணிக்



கொண்டான். அவனுக்கு சந்தனாவைப் பற்றி ஞாபகம் வந்தது.

அவனைச் சிரித்துக்கொண்டே பார்த்தபடி...குறும்போடு மன்னிப்புக் கேட்டுக் கொண்ட தோற்றம் நினைவிற்கு வந்தது. அப்படிப்பட்ட சந்தனா இப்பொழுது ஒரு ஓட்டல் அறையில் ஒரு ஆணோடு...

ரவிதேஜாவால் அவ்வாறு அதிக நேரம் நின்றுகொண்டிருக்க முடியவில்லை. கீழே இறங்கி விட்டான். அவ்வாறு திருட்டுத்தனமாய்ப் பார்ப்பது சாத்தியப்படாது என்று தெரிந்து விட்டது. நேருக்கு நேராய்—கதவிற்கு அருகில் போய் காலிங் பெல்லை அழுத்தினான்.

உள்ளே பேச்சுக் குரல்கள் நின்று விட்டன. பெல்லை இரண்டு முறை அழுத்தியும் கூட பதிலில்லை, மூன்றாவது முறை அழுத்தியபோது கதவு மெதுவாய் திறந்து கொண்டது. கொஞ்சம் திறந்து கொண்டதுமே உள்ளேயிருந்த ஆள் கண்ணில் பட்டான்,

அவன் முகத்தை எங்கேயோ பார்த்தாற்போல இருந்தது,

ஞாபகம் வந்து விட்டது. அவன் தங்க பிஸ்கெட்டுகளைக் கள்ளக் கடத்தல் செய்யும் இப்ராஹிம்!

கதவைத் திறந்த இப்ராஹிம் புலியைக் கண்டவனைப் போலப் பயந்து போய், திறந்து கொண்டிருந்த கதவைத் திரும்பவும் பலங்கொண்ட மட்டும் ஓங்கி அறைந்து சாத்தப் போனான்.

கண்மூடித் திறப்பதற்குள் அவன் முயற்சியைத் தெரிந்து கொண்டு விட்ட தேஜா கதவை ஓங்கித் தள்ளினான். இடது கையால் தள்ளிக் கொண்டே வலது கையில் துப்பாக்கியை வெளியே எடுத்துக் கொண்டான். அவ்வாறு தள்ளிக்கொண்டே வேகமாய் உள்ளே போய் விட்டான்.

கதவைத் தள்ளப் போன ஆள் தேஜாவின் தள்ளலுக்குக் கீழே விழுந்தான். அவ்வறையில் படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்த இன்னொரு ஆள் கலக்கத்துடன் எழுந்து நின்றான். என்ன நடந்தது என்று அவனுக்குப் புரிவதற்குள்ளாகவே ரவிதேஜா—''ஹேண்ஸ் அப்'' மரியாதையாய் கைகளைத் தூக்குங்கள். இல்லாவிட்டால் நாய்களைச் சுட்டுத் தள்ளுவது போல சுட்டுத் தள்ளிவிடுவேன். தேஜாவின் குரல் அவ்வறையில் எதிரொலித்தது.

இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அவ்விருவருக்குமே தெரியும், அவன் புதிதாய் நகரத்திற்கு வந்திருக்கும் ஏ. ஸி. பி. ரவிதேஜா என்று!

இருவரும் கைகளைத் தூக்கிக் கொண்டு நின்ற இடத்திலேயே நின்று விட்டார்கள்.

''சொல்லுங்கள், தங்க பிஸ்கெட்டுகளை எங்கே ஒளித்து வைத்திருக்கீங்க''—உறுமினாற்போலவே கேட்டான். அவர்கள் பேசவில்லை.

''உம்...சொல்லுங்கள்.'' உரக்கக் கத்திக் கேட்டான்.

இப்படிப்பட்ட விஷயங்களில் கடுமையாய் இருக்காவிட்டால் வேலை நடக்காது என்று தெரியும் அவனுக்கு.

''எங்க...எங்களிடம் ஒன்றும் இல்லை சார்'' முதலில் கதவைத் திறந்தவன் சொன்னான்.

ரவிதேஜா அவனை ஓங்கி அடித்தான் ''பொய் சொன்னால் இங்கேயே சுட்டுத் தள்ளி விடுவேன். நான் மூன்று சொல்லி முடிப்பதற்குள் சொல்லாமல் போனால்...'' என்று நிறுத்தி விட்டு—''ஒன்று ..இரண்டு...மூன்று'' என்று முடிக்கப் போனான். அவன் முகத்தைப் பார்த்தால்



கடைசி எண்ணைச் சொல்லி முடித்ததுமே துப்பாக்கியைச் சுட்டு விடுவான் போலிருந்தது? இளைஞர்களான போலீஸ் ஆபீசர்களின் கண்டிப்புகளைப் பற்றித் திருடர்கள் நன்றாகவே அறிவார்கள்.

''படுக்கையடியில் ப்ரீப் கேஸில் இருக்கு சார்'' அடுத்தவன் சொன்னான். துப்பாக்கியை அப்படியே குறி பார்த்துக் கொண்டே கீழே குனிந்து இடது கையால் படுக்கைக்கடியில் தேடிப் பார்த்தான். ஓரிரண்டு ப்ரீப் கேசுகள் தட்டுப்பட்டன. அவற்றை வெளியே இழுத்தான்.

ஒரு அறைக்குள் இருந்த இரண்டு ப்ரீப் கேசுகள் வெளியே வந்தன. அதில் ஒன்றை இடது கையால் மேலே தூக்கிப் படுக்கை மீது வைத்துக் கொண்டு திறந்தான்.

பளபளவென்று மின்னியபடி சிறு குழந்தைகள் தின்னும் பிஸ்கெட் சைஸில் இருந்தன தங்க பிஸ்கெட்டுகள். அதிலிருந்து ஒன்றை எடுத்து பரிசோதித்தான். நூற்றுக்கு நூறு சதவீதம் கலப்படமில்லாத தங்க பிஸ்கெட்டுகள் தேஜாவின் கண்கள் சந்தோஷத்தால் மின்னின.

சில நாட்களாய் நகரத்தில் தங்க பிஸ்கெட்டுக் கடத்தல் அதிகரித்து விட்டிருந்தது. அந்த கேஸின் பைல்களை அவன் தான் பார்த்து வந்தான். அந்த ஃபைல்களில் பார்த்த போட்டோக்களை ஆதாரமாய் கொண்டு கதவைத் திறந்ததுமே கண்டுபிடித்து விட்டான் இவர்களை. அதனால்தான் முதலிலேயே கேட்டான் ''தங்க பிஸ்கெட்டுகள் எங்கே?'' என்று.

உண்மையில் தேஜாவுக்கு இன்னும் சந்தேகமாகவே இருந்தது. தான் எதற்காக இங்கே வந்தோம் என்பதை முற்றிலும் மறந்து போய் விட்டான். இப்பொழுது அவன் மனம் முழுவதும் டியூட்டியில் தான் இருந்தது. கட்டிலுக்குத் தலைமாட்டிலேயே போன் தென்பட்டது.

உடனே அந்த பக்கமாய் போனான். துப்பாக்கி மட்டும் அவர்களை நோக்கியே குறி வைக்கப்பட்டிருந்தது. ட்ரிக்கரின் மீது விரல் விழிப்போடு இருந்தது.

தாம் கொஞ்சம் அசைந்தாலும் போதும் அந்த விரல் அசைந்து, துப்பாக்கி வெடித்துவிடும் என்றும் தாம் செத்துப் போவது உறுதி என்றும் அவர்களுக்குத் தெரியும்.

கைகளைத் தூக்கிக் கொண்டே அப்படியே நின்றிருந்தார்கள். அந்தப் பெயர் பெற்ற கள்ளக்கடத்தல் காரர்கள்.

டெலிபோனுக்கருகில் போய் மளமளவென்று நம்பர் களைச் சுழற்றினான் தேஜா. ''ஹலோ தேஜா ஸ்பீக் கிங்...'' என்றான் மறுமுனையில் ரிசீவரை எடுத்த குரல் காதில் விழுந்ததுமே.

''ஹலோ தேஜா, வாட்ஸ் த மேட்டர்?'' கமிஷனர் ஜெனார்தனனின் குரல் மறுமுனையிலிருந்து கேட்டது.

''ஜெகதாம்மா சென்டரிலுள்ள ஹோட்டல் கிருஷ்ணா, ரூம் நெம்பர் த்ரீ நாட் த்ரீக்கு நீங்கள் சில கான்ஸ்டபிள் களோடு வாங்க.''

''விஷயம் என்ன?''

''தங்க பிஸ்கெட் கடத்தல்காரர்கள் இருவரைப் பிடித்து வைத்திருக்கிறேன். சீக்கிரமாய் வாங்க சார்''

அவன் சொன்னதைக் கேட்டதும் கமிஷனரின் குரலில் மாறுபாடு வந்தது.

''உடனே புறப்பட்டுவரேன்'' - என்று போனை வைத்துவிட்டார் கமிஷனர்-அதைக்காட்டிலும் அதிகமாய் விவரங்களைக் கேட்டு நேரத்தை வீணடிக்கப் பிடிக்காத வரைப் போல.



''நீங்கள் போய் அந்த மூலையில் நில்லுங்கள். க்விக்'' - என்று கையைக் காட்டினான் அவர்களிருவரும் அந்தப் பக்கமாய் அடியெடுத்து வைத்தார்கள். தேஜா மனதிற்குள் எடை போட்டுக் கொண்டான். கமிஷனர் வருவதற்கு இன்னும் பத்து நிமிஷங்களாவது ஆகலாம். அதுவரை இவர்களை இப்படியே மேனேஜ் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒருக்கால் இந்தக் கள்ளக் கடத்தல் காரர்களுக்கு வேண்டாதவர்கள் யாராவது இவர்களைப் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று அவ்வாறு போன் பண்ணியிருப் பார்களா? அப்படியானால் நேரிடையாகவே கள்ளக் கடத்தல்காரர்கள் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாக போன் பண்ணியிருக்கலாம் அல்லவா? அப்படிச் செய் தால் அவன் நம்பமாட்டான் என்று இவ்வாறு செய்தார் களா? மொத்தத்தில் சந்தனாவைப்பற்றிச் சொன்ன

தெல்லாம் பொய்தானா? யாரோ தன்னை அழ வைப் பதற்காகத்தான் போன் பண்ணியிருக்கிறார்கள். இவ் வறையில் கள்ளக்கடத்தல்க்காரர்கள் இருக்கிறார்கள் என்று திட்டவட்டமாய்த் தெரிந்துகொண்டு அவர்களைப் பிடித்துக் கொடுப்பதற்காக இவ்வாறு பண்ணியிருப் பார்கள்.

இந்த யோசனை வந்ததுமே அவன் மனமெல்லாம் கற்பனையில் பறக்கத் தொடங்கிவிட்டது. வினாடி நேரம் அவன் யோசனையில் ஆழ்ந்து சூழ்நிலையை கவனிப்பதை விட்டுவிட்டான். அவன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாலும் அவன் பார்வையில் ஜீவன் இல்லாமல் போனதை அந்த கள்ளக்கடத்தல்காரர்கள் கிரகித்துக் கொண்டு விட்டார்கள். தப்பித்துக் கொள் வதற்கு இதைக் காட்டிலும் நல்ல அவகாசம் கிடைக்காது என்றெண்ணி உடனுக்குடன் திட்டம் போட்டுக் கொண் டார்கள். சட்டென்று ஒருவன் பக்கத்தில் டிரெஸ்ஸிங்

டேபிள் மீது இருந்த பித்தளை பூந்தொட்டியை எடுத்து குறி தவறாமல் தேஜாவின் கையிலிருந்த துப்பாக்கியின் மீது படும்படியாய் வேகமாய் வீசினான்.

என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வதற்கு தேஜாவுக்கு ஒரு வினாடி பிடித்தது. தான் சாந்தனாவைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்திருக்கையில், அவர்கள் அதை நல்ல அவகாசமாய் எடுத்துக்கொண்டு விட்டார்கள். என்று புரிந்தது. ஆனால் அதற்குள் தாமதமாகி விட்டது.

காற்றிலும் வேகமாய் கதவைத் திறந்து கொண்டு இருவரும் வெளியே ஓடிப்போய் விட்டார்கள்.

தேஜா கொஞ்சமும் தாமதிக்காமல் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினான். ஆனால் அதற்குள் அவர்களுள் ஒருவன் கீழே இறங்கும் படிக்கட்டுகளில் கடைசிப் படி இறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். இன்னொருத்தன் மாடிக்குப் போகும் படிகளில் ஏறிக்கொண்டிருந்ததைப் பார்த்தான். ஒரு வினாடி தேஜா சுறுசுறுப்பாய் யோசித்தான்.

தான் கீழே இறங்கினால் அங்கே போய்ச் சேருவதற்குள் அவன் மெயின் கேட்டைத் தாண்டி வீதியில் ஜனங்களோடு கலந்து போய் விடுவான். ஆனால் மாடிக்குப் போனவனால் தப்பித்துக் கொண்டு போய் விட முடியாது. அதனால் தான் மாடிக்குப் போகத் தீர்மானித்துக் கொண்டான். ஒரே பாய்ச்சலாய் மாடிக்கு வந்து சேர்ந்தான்.

ஓட்டல் மூன்று மாடிக் கட்டிடமாய் இருந்ததால் நிமிஷத்தில் மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்து விட்டான். மேலே எங்கும் இருட்டாய் இருந்தது. படிகளுக்குப் பக்கத்திலேயே ஒரு சின்ன அறை இருந்தது.



அதன் மீது சிமெண்ட் ஷீட்டுகள் போடப்பட்டிருந்தன. அதற்குக் கொஞ்சம் தூரத்தில் சிமெண்ட்டால் கட்டப்பட்ட பெரிய வாட்டர் டேங்க் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே மற்றொரு பிளாஸ்டிக் சின்டெக்ஸ் வாட்டர் டாங்க் இருந்தது. 'மாடிக்கு வந்தவன் அவ்விடத்தில்தான் ஒளிந்துக் கொண்டிருப்பான், என்ற சந்தேகம் வந்ததால் அந்த பக்கமாய் அடியெடுத்து வைத்தான். அப்பொழுது தான் அவனுக்கு தான் ஒரு தப்புப் பண்ணிவிட்டது ஞாபகத்திற்கு வந்தது.

கலக்கத்தில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வராமலேயே வந்து விட்டான்.

தன் தவறுக்குத் தன்னையே திட்டிக்கொண்டே சின்டெக்ஸ் வாட்டர் டாங்கரிடம் வந்து விட்டான். அந்த இருட்டில் கூர்ந்து பார்த்தான். ஓடி வந்தவனை அங்கே காணவில்லை.

மொட்டை மாடி முழுவதும் தேடிப் பார்த்தான். வந்தவனின் ஜாடையே காணோம். கைக்கெட்டியதை நழுவ விட்டு விட்டோமே என்று அதிருப்தி அவனைச் சூழ்ந்து கொண்டது.

திரும்பவும் ஒரு முறை சுற்றுமுற்றும் கூர்ந்து பார்த்தான். அந்த மொட்டை மாடிக்கு ரெயிலிங் இல்லை. எதிர்காலத்தில் திரும்பவும் மாடியில் கட்டிடம் கட்டுவதற்காக இரும்புக் கம்பிகளை அப்படியே விட்டு வைத்திருந்தார்கள்.

ஒருக்கால் மாடியிலிருந்து கீழ்த்தளத்திலிருந்த பால்கனியில் குதித்து விட்டானோ என்ற யோசனை வந்ததும் சட்டென்று கட்டிடத்தின் கோடியில் போய் கீழே எட்டிப் பார்த்தான். அவன் ஊகித்தது சரிதான்.

கீழே பால்கனி இருந்தது. ஆனால் எதிரி அவ்வளவு மேலேயிருந்து பால்கனிக்குள் குதிக்க வேண்டுமென்றால் மிகக் கஷ்டம். ஒருக்கால் குதித்தாலும் உடம்பில் நல்ல காயம் பட்டுவிடும். அப்படிப் பட்டிருந்தால் அவன் அங்கேயே தான் இருந்து தீரவேண்டும். ஒருக்கால், தான் வந்து எட்டிப் பார்த்தால் கண்ணில் பட்டுவிடக் கூடாது என்று இன்னும் உள்ளே நகர்ந்து கொண்டிருப்பானோ! இவ்வாறு எண்ணிக் கொஞ்சமாய் குனிந்து பார்த்தான்.

அவ்வளவு தான்—

அந்த அவகாசத்திற்காகவே காத்துக் கொண்டிருந்த அவனுக்குப் பின்னால் நின்ற அந்த உருவம் அவன் இடுப்பில் இரு கைகளையும் வைத்து பலமாய் தள்ளிற்று.

என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்வதற்குள்ளாகவே அவன் உடம்பு காற்றில் பறந்து அந்த மூன்று மாடிக் கட்டிடத்திற்குக் கீழே விழத் தொடங்கிற்று.

திடீரென்று குளிர்ந்த காற்று அவனை விர்ரென்று சூழ்ந்து கொண்டது. வினாடி நேரம் ரவிதேஜாவுக்கு என்ன நடந்தது என்று புரியவில்லை. மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் காற்று உள்ளே போய் திணறத்தொடங்கினான். கண்கள் செருகிக் கொண்டன. அவன் உடல் வேகமாய் பூமியை நோக்கிப் போகத் தொடங்கிற்று.

சில வினாடிகளில் தான் மரணமடைந்துவிடப் போகிறோம் என்றறிந்ததும் அவன் ஸ்தம்பித்து விட்டான்.

அவன் கண்களை அழுத்தமாய் மூடிக் கொண்டான். தரையில் விழப்போகும் கடைசி நிமிஷத்தில் அவனுக்கு சந்தனாவைப் பற்றிய ஞாபகம் வந்தது ஒருக்கால் சந்தனா தன் பாய் பிரெண்டோடு கையும் களவுமாய் பிடிபட்டுப் போயிருந்தால், அவளைத் திருமணம் பண்ணிக் கொண்வானா?



ஆமாம்...இல்லை என்று முடிவெடுப்பதற்குள்ளாகவே ரவிதேஜாவின் உடல் தரையைத் தொட்டது. அவனுக்கு நினைவு தப்பி விட்டது.

ஃ ஃ ஃ

அரும்பாடுபட்டு உதடுகளைச் சுழித்து சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தாள் சந்தனா. அவளுக்கு அடிக்கடி ரவிதேஜாவைப் பற்றித்தான் நினைவு வந்து, கொண்டிருந்தது. அவன் முகத்தில் தோன்றும் அந்த கம்பீரத்தைப் பார்த்தால் போதும். நாக்கை வெளியே நீட்டி அழகு காட்ட வேண்டும் போலிருக்கும். அந்த ஆசைக்கு எடுத்துக்காட்டுதான் போன் பண்ணிப் பொய் சொன்னது.

ரவிதேஜா என்ன பண்ணுவான்? ஓட்டலுக்குப் போவானா? அல்லது அந்த விஷயம் என்ன என்று தன்னையே கேட்டுத் தெரிந்து கொள்வானா? இவ்விரண்டுமே இல்லாமல் தன் மீது நம்பிக்கையோடு... நம்பிக்கை ..ஆம் நம்பிக்கை எப்படி ஏற்படும்?

இதற்கு முன்னால் அவனுக்கு அவளைத் தெரியவே தெரியாதே! பெண் பார்த்த பொழுதுதானே முதல் முதலாகப் பார்த்துக் கொண்டார்கள். இருவரும் அவள் சுபாவமும் நடவடிக்கைகளும் அவனுக்குத் தெரியாது.

அப்படியிருக்கும் போது நம்பிக்கை என்பது எப்படி ஏற்படும்?

நேரிடையாய் அந்த விஷயத்தைக் கேட்பான். அல்லது ஓட்டலுக்குப் போவான். ஒருக்கால் ஓட்டலுக்டுப் போனால்... அவளால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

அவள் யோசனைகளைச் சிதறடித்தபடி போன் மணியடித்தது. போய் ரிசீவரை எடுத்தாள்- மறுமுனையில் பரிச்சியமான குரல். ''நான் ரவிதேஜாவின் தந்தை சத்யநாராயணன்'' அவர் குரலில் தடுமாற்றம் நன்றாய் தெரிந்தது.

"நமஸ்காரம் சார். நான் தான் சந்தனா'' அவள் வேறு ஏதோ சொல்லப் போனாள். முற்றிலும் கேட்காமலேயே பேசினார் அவர்—

''ரவி ஓட்டல் மேல் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டான். ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்காங்க'' மளமளவென்று ஆஸ்பத்திரி விலாசத்தைச் சொன்னார். அதிர்ந்து போய் விட்ட சந்தனா, சுதாரித்துக் கொண்டு ஏதோ கேட்பதற்குள்ளாகவே 'க்ளிக்' என்று போனை வைத்துவிட்ட சப்தம் கேட்டது.

ஃ ஃ ஃ

வர்மா போனை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''நான்தான் மகரிஷி பேசுகிறேன்.''

வர்மாவின் கை போனைச் சுற்றிலும் முறுக்கேறிக் கொண்டது.

''நேற்றையிலிருந்தே உன் போனுக்காக எதிர்பார்த்துட்டிருக்கேன். எங்கே இருக்கிறாய் நீ? ஓட்டலுக்குப் போன் பண்ணினால் நீ காலி பண்ணி விட்டுப் போய் விட்டதாய் சொன்னாங்க. அப்படி இரவோடிரவாய் காலி பண்ணிவிடும்படியாய் என்ன நேர்ந்து விட்டதோன்னு கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். போலீ சாருக்கு உன் இருப்பிடம் தெரிந்துவிட்டதா?''

"'அதெல்லாம் இல்லை வர்மா.''



''பின்னே?''

''நான் இன்னொரு கொலை பண்ணிட்டேன் வர்மா''—

நிசப்தத்தைப் பிளந்துகொண்டு மகரிஷியின் குரல் மெதுவாய்க் கேட்டது. வர்மா திடுக்கிட்டான். ''வாட்?'' என்று கத்திவிட்டான். அவன் குரல் கீச்சென்று ஒலித்தது. ''யாரை?''

''ஸ்ரீ வாணியின் காதலனை.''

''மைகாட்! அவனை நீ எங்கே பார்த்தாய்?''

''நான் இருந்த ஓட்டலுக்கே வந்தான். பார்த்ததுமே ஆவேசத்தை அடக்கிக்கொள்ள முடியாமல் போய் விட்டேன். மேலேயிருந்து பிடித்துத் தள்ளிவிட்டேன்.'' அவன் வார்த்தைகளைக் கத்தரித்துவிட்டு—'' பேப்பரில் படித்தேன். யாரோ போலீஸ் ஆபீசரை கள்ளக்கடத்தல் காரங்க தள்ளிவிட்டதால் கீழே விழுந்து விட்டார் என்று எழுதியிருந்தாங்க. ஆஸ்பத்திரியில் இருக்கானாம்...நீதானா அது!...அவன் உன்னைப் பார்த்தானா?''

''இல்லை.''

''அதுவரை நல்லது. போகட்டும்...நான் அந்தக் காலேஜுக்குப் போனேன். ரெண்டு நாளாய் தேடிப் பார்த்தும் கூட சந்தனாவின் விலாசம் கிடைக்கவில்லை'

''வர்மா.''

''சொல்லு.''

''.........''

''என்ன மகரிஷி, ஏன் தயங்குகிறாய்? சொல்லு.''

''என் மீது உனக்கு அருவருப்பு தோன்றவில்லையா?''

வர்மா பதில் பேசவில்லை.

"சொல்லு வர்மா! உன் மௌனம் என்னை ரம்பத்தால் அறுத்துக் கொண்டிருக்கிறது.''

''ஸ்ரீவாணியின் டைரியைப் படித்தாயா?''

தன் கேள்விக்கும் அந்த எதிர்க்கேள்விக்கும் என்ன சம்பந்தம் என்று புரியாமல்—''படித்தேன்'' என்றான்.

''அந்த டைரியைப் படித்த பிறகு நீ என்ன செய்தாலும் உன் மேல் கோபமோ அருவருப்போ ஏற்படாது. எனக்கு மட்டுமேயில்லை, யாருக்குமே ஏற்படாது''.

''தாங்க்ஸ்''.

"இப்ப என்ன பண்ணலாம்னு இருக்காய்?''

"கொஞ்ச நாள் எங்கேயாவது போய் ஒளிந்து கொள்ளணும். ஓட்டலுக்குப் போய் போலீசார் விசாரணை பண்ணினால் என் அங்க அடையாளங்களை அவங்க சொல்லலாம். மேலும் கொஞ்ச நாள் பார்த்துவிட்டு சரண்டராகி விடுகிறேன்''.

''நான் என்னால் முடிந்தவரை முயற்சிபண்ணிக் கொண்டிருக்கிறேன் மகரிஷி. நீ எங்கே இருக்கிறாய் என்று சொல்லு. வந்து சந்திக்கிறேன்.''

''இன்றைக்கு வேண்டாம். நான் டில்லிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். சந்தனாவின் கிளாஸ்மேட் ஒருத்தி அங்கே இருக்கிறாள். அவளுக்கு சந்தனாவின் அட்ரஸ் தெரிந்திருக்கலாமோ என்னவோ, பார்த்துட்டு வரேன்.''

''இந்த நிலையில் நீ இப்படி வெளியே சுற்றுவது நல்லதில்லைன்னு தோணுது''.



''அதான் சொன்னேனே-எந்த அபாயமும் என்னை பயமுறுத்தி விடாதுன்னு.''

''சரி, உன்னிஷ்டம். நானும் இங்கே முயற்சி பண்ணிட்டிருக்கேன். எனக்கு ஒரு ஆசை தோணுது.'

''என்ன?'' கேட்டான் மகரிஷி.

''ஆஸ்பத்திரிக்குப் போய் அந்த ரவிதேஜா செத்துப் போவதற்கு முன்னால் சொல்ல வேண்டும் போல இருக்கு.

''உன்னைப் பிடித்துத் தள்ளியது மகரிஷி என்று.''

''வேண்டாம், வேண்டாம். ஆனாலும் ஏன் இந்த ஆசை?''

''எனக்குத் தெரியாது மகரிஷி, உன் கேசு கோர்ட்டில் நடந்து கொண்டிருந்தபொழுது நானும் லாயருமாய்ச் சேர்ந்து, அவனை எவ்வளவு கெஞ்சினோம் என்று. டிஃபென்ஸ் சார்பில் வந்து ஒரு தடவை கோர்ட்டில் சாட்சி சொல்லும்படி கேட்டுக் கொண்டோம். அப்பொழுது அவன் சொன்ன பதிலும் காட்டிய அலட்சியமும் இன்னும் என் மனதைவிட்டு அகலவில்லை. அவனுக்கும் அது தெரியவேண்டும்—அவனால் நீ தூக்கு மேடைக்குப் போக நேர்ந்து எப்படிப்பட்ட மனத்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய் என்று மரணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிற அவனுக்கும் தெரிய வேண்டும்.''

''வேண்டாம் வர்மா. அவ்வளவு அரக்கத்தனம் வேண்டாம். நான் ஏதோ ஆவேசத்தில் பண்ணி விட்டேன்.''

''சும்மா சொன்னேன்.''

''அப்ப நான் வெச்சுடட்டுமா? சரியாய் நான்கு நாட்களுக்கப்புறம் ஊரெல்லையில் அம்பேத்கார் காலனி

யில் இருக்கும் 'இந்து ஓட்டலுக்கு மாலை நாலு மணிக்கு வா. உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்''.

''சரி.''

மகரிஷி போனை வைத்துவிட்டான். அன்று மாலையே அவன் டில்லிக்குப் புறப்பட்டு விட்டான்.

## 10

காலை ஐந்து மணிக்கு போலீஸ் கமிஷனர் அசுவத்தாமனின் பெட்ரூமில் அலாரம் அடித்தது. தூக்கத்திலிருந்து எழுந்து வந்து அதை நிறுத்திவிட்டு, வெளியே வந்தார். அவரைப் பார்த்ததுமே இன்ஸ்பெக்டர் எழுந்து சல்யூட் அடித்தார். அசுவத்தாமன் மிகக் கட்டுப்பாடுகளைக் கொண்ட போலீஸ் ஆபீசர்.

ரவிதேஜாவுக்கு சீரியஸானால் உடனே அந்த விஷயத்தைக் தனக்குத் தெரியப்படுத்தச் சொல்லியும் - இல்லாவிட்டால் காலை ஐந்து மணிக்கு வந்து ரிபோர்ட் பண்ணச் சொல்லியும் இன்ஸ்பெக்டருக்கு அறிவிப்பு தந்திருந்தார்.

''ரவிக்கு நினைவு திரும்பவில்லை சார்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

அசுவத்தாமனின் புருவங்கள் முடிச்சேறின. அரை மணியில் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார்.

ஃ ஃ ஃ



...அவ்வறை நிசப்தமாய் இருந்தது.

பாட்டிலிருந்து மெல்லிய டியூப் மூலமாய் தேஜாவின் முழங்கைக்கு மேல் பாகத்தில் குளூகோஸ் ஏறிக் கொண்டிருந்தது. நவீன அரசாங்க ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டிலிருந்த கட்டிலில் படுத்திருந்தான் அவன். அவனுக்கு தொலைவில் அவன் தந்தை உட்கார்ந்திருந்தார்.

இரவு பதினோறுமணியளவில் தேஜாவை கமிஷனர் தானாகவே கூட்டிவந்து ஆசுபத்திரியில் சேர்த்ததால் உடனுக்குடனாய் ஆபரேஷன் நடந்தது.

தேஜாவுக்கு நினைவு திரும்பவில்லை. ''நினைவு திரும்புவதற்கு இன்னும் கொஞ்ச நேரமாகும்''—என்று டாக்டர்கள் சொன்னதால் கமிஷனர் நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டார். இரண்டு கான்ஸ்டேபிள்களை அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துவிட்டு, காலையில் வருவதாய் சொல்லிவிட்டுப் போனார்.

சத்யநாராயணன் மட்டும் மிகவும் பதறிப்போய்க் கொண்டிருந்தார். தன்னோடு சேர்ந்து சாப்பிட்டுவிட்டு 'இதோ வருகிறேன்' என்று போன மகன் இந்த விதமாய் ரத்த வெள்ளத்துடன் ஆஸ்பத்திரியில் விழுந்துக் கிடந்தது அவரை வெகுவாய் பாதித்து விட்டது.

நிசப்தமாகவே விடிந்தது.

காலை ஆறுமணியளவில் சந்தனாவை அழைத்துக் கொண்டு விஷ்ணுவர்த்தனன் வந்தார். அவரைப் பார்த்ததுமே அதுவரை அடக்கிவைத்துக் கொண்டிருந்த துக்கம் சட்டென்று பொங்கிவிடவே, சத்யநாராயணன் தன் வயதையும் மறந்துபோய் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு ஓவென்று கதறிவிட்டார்.

தலையில் பெருத்த கட்டுடன் ரவிதேஜாவைப் பார்த்ததுமே சந்தனாவுக்குக் கண்ணீர் வந்தது. அவன் நெற்றியில் கை வைத்துத் தடவிக் கொடுக்க வேண்டும் என்ற ஆவலை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள்.

''நான் டாக்டரோடு பேசிட்டுத்தான் வந்தேன். ஆபத்து ஒன்றுமில்லையாம். தலையில் மட்டும் லேசாய் காயம் பட்டிருக்காம்'' என்று தேற்றினார் விஷ்ணுவர்த்தனன். கொஞ்ச நேரத்தில் சத்தியநாராயணன் ஓரளவிற்குத் தேறிக் கொண்டார்.

சந்தனாவுக்கு மட்டும் மனம் சரியாயில்லை. தன்னோடு திருமணம் நிச்சயான பிறகு இந்த துரதிர்ஷ்டமான சம்பவம் நடந்து விட்டது, என்று எல்லோரும் நினைத்துக் கொள்வார்களோ என்று பயந்தாள் அவள். யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் ரவிதேஜா மட்டும் அவ்வாறு எண்ணமாட்டான்.

என்று தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டாள்.

அதற்குள் கமிஷனர் டாக்டரோடு சேர்ந்து அங்கே வந்தார். டாக்டர் தேஜாவைப் பரிசோதித்து விட்டு—

''இன்னுமா நினைவு திரும்பலை?'' என்று கேட்டார்.

''இல்லை டாக்டர். ராத்திரி பூராவும் கோமாவிலேயே இருந்தார்'' என்றாள் நர்சு. டாக்டர் இன்னும் இரண்டு இன்ஜெக்ஷன்களைத் தந்தார்,

பரபரப்போடு பார்த்துக் கொண்டிருந்த அவர்களை நோக்கித் திரும்பி—''ஒன்றும் பயமில்லை. கொஞ்ச நேரத்தில் நினைவு திரும்பிவிடும்'' ஆனால் ரொம்பப் பேச வைக்காதீங்க.



நான் அப்புறமாய் வரேன்—என்று அங்கிருந்து போய் விட்டார். அவர் பேச்சைக் கேட்டதும் அங்கிருந்தவர்களுக்கு தைரியம் வந்தது

கமிஷனருக்காக நாற்காலியை இழுத்துப் போட்டாள் சந்தனா அவர் உட்கார்ந்து கொண்டே அவளைப் பார்த்து—''உன்னை இதற்கு முன்பே எங்கேயோ பார்த்தாற் போலிருக்கே!'' என்றார் யோசித்தபடியே.

''முந்தாநாள் தேஜாவோடு ஸ்கூட்டரைப் பார்க்கண்ற விஷயமாய் சச்சரவு பண்ணியபோது...'' அவள் மேலோட்டமாய் சொன்னாள்.

அவர் இன்னும் குழப்பமடைந்து-''அப்ப...தேஜா...'' என்றார்.

''எங்கப்பாவும் அவங்க அப்பாவும் சிறு வயது சிநேகிதர்களாம் கமிஷனர் சார். நேற்றைக்குத் தான் தெரிந்தது'' என்றாள்.

அவருக்கு முற்றிலும் புரியவில்லை. ஆனால் அந்த விஷயத்தை அந்தச் சந்தர்ப்பத்தில் வாதாடுவது பிடிக்காமல் ''ஓஹோ, அப்படியா?'' என்றார்.

அதற்குள் தேஜாவின் இமைகள் லேசாய் அசைந்ததை அங்கிருந்தவர்கள் கவனித்தார்கள். எல்லோரும் பரபரப்புடன் கட்டிலைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டார்கள்.

தேஜாவின் கண்கள் மெதுவாய் திறந்து கொண்டன. ஆனால் அப்பார்வையில் ஒளி இல்லை. ஜீவனில்லாமல் அப்படியே மேற்கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்த தந்தையைக் கூடப் பார்க்கவில்லை.

எல்லோர் முகங்களிலும் பரபரப்பு. எவ்வளவு நேரமாகியும் தேஜா தம்மை நோக்கிப் பார்க்காமல் போகவே

அவன் தந்தைக்குச் சந்தேகம் வந்தது. ''தேஜா'' என்று கூப்பிட்டார். தேஜா குறைந்த பட்சம் ''உம்'' என்று கூடச் சொல்லவில்லை.

விஷ்ணுவர்த்தனன் அவன் கைமேல் தன் கையை வைத்து ''ரவி...'' என்று பரபரப்போடு கூப்பிட்டார். எங்கிருந்தோ கிணற்றிற்குள்ளிருந்து கேட்டாற்போல ''உம்...'' என்ற சப்தம் கேட்டது.

''ரவி, நான் உன் அப்பாடா...'' தேஜாவை ஏறக் குறைய உலுக்கினாற் போலவே சொன்னார் சத்தியநாரா யணன். அதற்குள் நர்சு குறுக்கிட்டு...',அவரை ரொம்ப வும் தொந்தரவு பண்ணாதீங்க'' என்றாள்.

''டாடீ...நீயா... எ...எங்கே இருக்கிறாய் டாடீ?'' என்று கைகளால் தடவத் தொடங்கினான் ரவி.

சந்தனா திக்பிரம்மையடைந்தவளாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உன் பக்கத்திலேயே தான் இருக்கேன், இதோ, இங்கே தான்'' என்று ரவி தேஜாவின் கைகளைப் பிடித்து ஆட்டினார் தேஜாவின் பார்வையில் எந்த மாறுதலு மில்லை. அப்படியே மேற்கூரையைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

''எனககு...எனக்கு ஒன்றுமே தென்படவில்லை டாடி. எல்லாம்...எல்லாம் இருட்டாய் இருக்கு டாடி'' அவன் வார்த்தைகளில் இருந்த வேதனை அங்கிருந்தோரின் இதயங்களைப் பிளந்தது.

''இங்கே,.,இங்கே பாருப்பா, நான் இங்கே தான் இருக்கேன். இதோ உனக்கு மாமனாராகப் போகிறவர். சந்தனா கூட இங்கேயே தான் இருக்கிறாள்.'' என்று ஏறக்குறைய தேஜாவின் தோளைப் பிடித்துத் தன் பக்க மாய் திருப்பினார் சத்யநாராயணன்.



தேஜா அவர்களைப் பார்த்தான். ஆனால் அப் பார்வையில் ஜீவனில்லை. குருடனின் பார்வையைப்போல எங்கேயோ சூனியத்தை நோக்கி இருந்தது கைகளால் தடவிக் கொண்டே - ''டாடி எனக்கு யாருமே தென்பட வில்லை. எல்லாம் இருட்டாய் இருக்கு எனக்கென்னவா யிடுத்து? என் கண்கள் போய் விட்டனவா?''

அவன் குரல் நெகிழ்ந்தது. அவன் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வழிந்து கொண்டேயிருந் தது. சிறு பையனுக்கு ஜுரம் வந்தால் எப்படிப் பேசு வானோ அப்படிப் பேசிக் கொண்டிருந்தான் அவன்.

தேஜாவின் பேச்சைக் கேட்ட சந்தனா அங்கிருந்து டாக்டரிடம் வேகமாய் ஓடினாள். அவள் டாக்டரோடு திரும்பி வந்தபொழுது சத்யநாராயணன் மகன் தலையைக் கட்டியணைத்துக் கொண்டு அழுதவாறிருந்தார். டாக்டர் அவரை அங்கிருந்து பலவந்தமாய் அப்புறப்படுத்த வேண்டியிருந்தது.

டாக்டர் தேஜாவைப் பரிசோதித்து விட்டு விஷ்ணு வர்த்தனனை நோக்கித் திரும்பி - ''தலையில் நல்ல அடிப் பட்டு விட்டதால் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீள வில்லை பேஷன்ட். அதனால்தான் கண் தெரியவில்லை என்கிறார். கொஞ்ச நேரமானால் எல்லாம் சரியாகி விடும்.''

முடிந்தால் ஸ்கானிங் கூட ஒரு முறை செய்து விடுவது நல்லது'' என்று நர்ஸைப் பார்த்து, ''நர்ஸ்! தேஜாவுக்கு ஸ்கானிங்கிற்கு ஏற்பாடு செய்'' என்றார்.

நர்சு அங்கிருந்து வேகமாய் போய் விட்டாள். பத்து நிமிஷங்கழித்து அவ்வறைக்குள் ஸ்ட்ரெச்சர் நுழைந்தது. தேஜாவை அதன் மீது படுக்க வைத்தார்கள்

சந்தனா இந்த உலகத்திலேயே இல்லாதவளைப் போல, நடந்துக் கொண்டிருந்ததையெல்லாம் குழப்பத்

துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனதில் ஒரு எரிமலை கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அவள் ஒருத்திக்குத் தான் தெரியும்.

இருபது நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பவும் தேஜாவைக் கொண்டு வந்து படுக்கையில் படுக்க வைத்தார்கள்.

தேஜாவின் வலது கையைப் பிடித்துக் கொண்டு கமிஷனர் பரிவோடு—''தேஜா! ஏதாவது தென்படுகிறதா?'' என்று கேட்டார். அந்தக் குரலை அடையாளம் தெரிந்து கொண்டு—''இல்லை சார், ஒன்றுமே தென்படவில்லை'' என்றான் தேஜா.

ரிபோர்ட்டிற்காக கமிஷனர் தானே போகப் போனார். அதற்குள் நர்சு வந்து—''உங்களை டாக்டர் கூப்பிடுகிறார்'' என்று சொன்னாள்.

ஆண்கள் மூவரும் விடுவிடென்று டாக்டரிடம் போனார்கள். சந்தனா மட்டும் ரவிதேஜாவின் பக்கத்தில் எஞ்சிநின்றாள். அவனைப் பார்த்தபொழுது அவளுக்கு துக்கம் பொங்கிக் கொண்டு வரத் தொடங்கிற்று. அந்த சப்தத்தைக் கேட்டு விட்டு தேஜா அசைந்தான்.

''யாரது?'' என்றான்.

''நான் தான் சந்தனா'' என்றாள். அவன் கையைத் தூக்கினான், அவள் அதைப் பிடித்துக் கொண்டு கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டாள், அதற்குப் பிறகு தான் விளையாட்டிற்காகப் போட்ட நாடகத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினாள்,

ஃ ஃ ஃ



சுற்றிலும் கண்ணாடிகளுடன் அலாதியாய் தயாரிக்கப் பட்டிருந்த ஏர்கண்டிஷன் அறை அது. டாக்டர் பார்த்தசாரதி சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் அந்த ஆஸ்பத்திரியின் சூப்ரிண்டெண்ட் கூட.

அவர் ரவிதேஜாவின் ஸ்கானிங் ரிபோர்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கையில், எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த மூவரிடமும் பரபரப்பு!

மேலும் பத்து நிமிஷங்கள் வரை ரிபோர்ட்டைப் பரிசீலித்துவிட்டு அதை மேஜை மீது வைத்தார்.

''என்னவாச்சு?'' என்று கேட்டார் கமிஷனர்.

''ஐயாம் சாரீ.''

''டாக்டர்...எனிதிங் சீரியஸ்?'' சத்ய நாராயணன் நாற்காலியை விட்டு எழுந்துகொண்டே கேட்டார். டாக்டர் பார்த்தசாரதியின் குரல் தெளிவாய், பிசிறின்றி ஒலித்தது.

''எஸ்...அவருக்கு இனி பார்வை திரும்பாது.'' எதிரே உட்கார்ந்திருந்த மூவருக்கும் தலையில் இடி விழுந்தாற்போல ஆயிற்று. முதலில் தேறிக் கொண்டவர் கமிஷனர்தான். ''என்ன சொல்றீங்க டாக்டர் நீங்க?'' என்றார். அவ்வளவு பெரிய போலீஸ் அதிகாரியாய் இருந்தும் கூட அந்த உண்மையை நம்பமாட்டாதவராய் அவர் குரல் லேசாய் நடுங்கிற்று.

''ஆமாம். தேஜாவுக்கு இனி வாழ் நாளெல்லாம் கண்பார்வை திரும்பாது'' என்றார்.

அவ்வறையில் திரும்பவும் நிசப்தம் சூழ்ந்துக்கொண்டது. அதுவரை மௌனமாய் இருந்த விஷ்ணுவர்த்தனன்-என்ன தான் ஆச்சு டாக்டர்?'' என்றார்.

அவர் மாடியிலிருந்து தலையைக் குறுக்கிக்கொண்டு விழுந்ததால் பின் பாகத்தில் உள்ள சிறுமூளையிலும், அதன் கீழுள்ள ஆப்டிகல் லூப்ஸிலும் பலமாய் அடிப்பட்டிருக்கின்றன. ஆப்டிகல் லூப்ஸிலிருந்து ரத்தத்தை சர்குலேட் பண்ணுகிற ரத்த நாளங்கள் சிதைந்துபோய் அங்கே ரத்தம் கட்டித்தட்டிக் கொண்டு விட்டது. அதனால்தான் அவரால் பார்க்க முடியவில்லை.'' என்றார் டாக்டர்.

''ஆபரேஷன் பண்ணி திரும்பவும் பார்வை கிடைக்கும் படியாய் செய்ய முடியாதா?'' கேட்டார் கமிஷனர்.

''யூ மீன் ப்ரெயின் ஆபரேஷன்?''

''ஆமாம்.''

''பண்ணலாம்'' என்றார் டாக்டர்.

கேட்டுக்கொண்டிருந்த மூவர் முகங்களிலும் ஒளி ஏற்பட்டது. ''அதனால் அவருக்குப் பார்வை திரும்புமா டாக்டர்?'' கேட்டார் விஷ்ணுவர்த்தனன்.

''சொல்ல முடியாது. நூற்றுக்குப் பத்து சதவீதந்தான் கியாரண்டி தரமுடியும்'' என்று நிறுத்திவிட்டு, மெதுவாய் கடைசி வாக்கியத்தை முடித்தார். ''ஆனால் அதன் மூலமாய் உயிருக்கு ரொம்ப ஆபத்து.''

''அப்படீன்னால்?''

''பார்வை திரும்புவதற்கு ஏதோ கொஞ்சம் சான்ஸ் இருந்தாலும் அந்த ஆபரேஷனால் உயிருக்கு ரொம்ப ஆபத்து. அதனால் நாம்ப அந்த ரிஸ்க்கை எடுத்துக் கொள்வது நல்லதில்லை'' ஒரு டாக்டராய் ஆலோசனை அளித்தார் பார்த்தசாரதி.

மூவரும் நிசப்தமாய் சிலையாய் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். டாக்டர் பார்த்தசாரதி அங்கிருந்து எழுந்து வெளியே போய்விட்டார். ஒரு அதிர்ச்சியான செய்தியைச் சொன்னபிறகு அந்த நோயாளியின் உறவினர்கள் தேறிக் கொள்வதற்குக் கொஞ்ச நேரம் பிடிக்கும் என்று, அனுபவம் அவருக்குக் கற்றுத் தந்திருந்தது.

## 11

ரயில் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. மகரிஷியின் யோசனைகள் அதையும் விட வேகமாய் பறந்து கொண்டிருந்தன.

டில்லியில் அவன் போன வேலை நடக்கவில்லை. அந்தப் பெண்ணின் விலாசத்தைத் தேடிக் கண்டுப்பிடிக்க பத்து நாட்கள் ஆயிற்று. போய்ப் பார்த்த பிறகு தான் தெரிந்தது.

அந்தப் பெண்ணும் அவள் கணவனும் சேர்ந்து துபாயில் இருக்கிறார்கள் என்று. துபாய் விலாசம் கிடைத்தது. ஆனால் அதற்குப்பிறகு என்ன செய்வதென்று தான் புரியவில்லை.

அதனால்தான் திரும்பி வந்துக்கொண்டிருந்தான். அவன் மனமெல்லாம் உற்சாகமின்றி இருந்தது. ஸ்டேஷனில் இறங்கியதுமே நேராய் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் சரண்டராகி விடுவோமா என்றெண்ணினான். இதுவரை யாருக்குமே சந்தேகம் வரவில்லை. ஆனால்

எந்த நேரத்திலும் போலீசார் பிடித்துவிடலாம். அதோடு இப்பொழுது சென்ட்ரியின் கொலைக் கேசு கூட அவன் மீதே இருந்தது. போலீசார் இப்பொழுது திரும்பவும் தன் மேல் கேசு போடுவார்களா?

போட்டாலும்—தூக்குதண்டனையைக் காட்டிலும் பெரிய தண்டனை என்னவிருக்கிறது?

இந்த குற்றத்திற்குக் கூட அதே தண்டனையை விதித்து இரண்டு முறை தூக்குப் போடுவார்களா? கோர்ட்டில் திரும்பவும் இந்த குற்றத்தின் மீது ஒரு வருடம் வரை விசாரனைகள் நிகழ்ந்து கொண்டிருக்குமோ?

சந்தனா இப்பொழுது என்ன பண்ணிக்கொண்டிருப்பாள்? கல்யாணம் ஆகியிருக்குமா? குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருப்பாளா? ஒன்று மட்டும் நிஜம்.

ஒரு காதலன் கண்மறைவாய் தனக்காக ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கிறான் என்று கனவிலும் ஊகித்துப் பார்த்திருக்க மாட்டாள்.

யோசனைகளுக்கிடையே ரயில் நின்றது.

ஸ்டேஷனிலிருந்து அவன் வர்மாவுக்கு போன் பண்ணினான். மறுமுனையிலிருந்து வர்மா-''நீதானா மகரிஷி? இவ்வளவு நாளாய் நீ என்னவானாயோ என்று தெரியாமல், போலீசார் தான் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களோ என்று நினைத்து கலங்கிப் போய்க் கொண்டிருந்தேன். ரெண்டு நாளைக்கு முன்னாடியே வந்திருக்க வேண்டுமே?''

''வந்திருக்க வேண்டியவன் தான் ஆனால் அந்தப் பெண்ணின் அட்ரஸைத் தேடிப்பிடிக்க ரொம்ப கஷ்டமாயிருத்து''



வர்மா பரபரப்புடன் ''என்னவாச்சு? சந்தனா இருக்குமிடம் தெரிந்ததா?'' என்று கேட்டான். மகரிஷி ஜீவனின்றி—''இல்லை. அந்த சுமித்ரா என்ற பெண். துபாய்க்குப் போய்விட்டாளாம்.'' என்றான்.

''சரி, நீ ஓட்டலுக்கு வா. நான் அங்கே வரேன்''. அரைமணிக்குப்பிறகு இருவரும் ஓட்டலில் நிசப்தமாய் நேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

''இதெல்லாம் உனக்கு சில்லியாய் தோன்றுகிறதா வர்மா?''

''இல்லை இல்லை...வேறு ஏதாவது வழி இருக்கான்னு யோசித்துக் கொண்டிருக்கேன்'' மகரிஷி கூட யோசனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் பார்வை ஓட்டல் மேஜை மேலிருந்த அன்றைய தினத்தாளின் மீது பட்டது. எதேச்சையாய் அதைப் புரட்டத் தொடங்கினான்.

ஓட்டல் பையன் வந்து பில்லைத் தந்தான். அதற்குப் பணம் தந்து கொண்டே வர்மா கேட்டான்.

''அந்த துபாய்ப் பெண்ணோட போன் நம்பர் தெரியுமா?''

''இல்லை, அட்ரஸ் மட்டுந்தான் கொடுத்தாங்க.''

''வா, சொல்றேன்'' என்றான் வர்மா எழுந்து கொண்டே...

''எங்கே?''

''துபாயில் என் நண்பன் ஒருவன் இருக்கிறான்: அவனிடம் இந்த அட்ரஸைச் சொல்லி, போன் இருக்கிறதான்னு கண்டுப்பிடித்துச் சொல்லச் சொல்லுவோம்''-

மகரிஷியின் கண்கள் கசிந்து விட்டன. நன்றியால் மனம் நெகிழ்ந்தது. ''எனக்காக எவ்வளவு பண்ணுகிறாய் வர்மா'' என்றான்.

''டோன்ட் பீ சில்லீ, வா.''

இருவரும் வர்மாவின் வீட்டிற்கு வந்தார்கள். வீட்டிற்கு வந்ததுமே வர்மா துபாய்க்கு போன் பண்ணினான். அதிர்ஷ்டவசமாய் சிநேகிதன் கிடைத்தான். அவனிடம் விலாசத்தைச் சொல்லி—''இந்த அட்ரஸிற்குப் போன் இருக்கிறதா இல்லையா என்று கண்டுப்பிடித்துச் சொல்கிறாயா?'' என்று கேட்டான். அதற்கு பிறகு போனை வைத்து விட்டு—''இன்னும் ஐந்து நிமிஷத்தில் டைரக்டரியைப் பார்த்துச் சொல்வதாய்ச் சொன்னான்''—என்று சொன்னான்.

அந்த ஐந்து நிமிஷமும் தன் வாழ்நாளில் என்றுமே அனுபவித்திராத டென்ஷனை அனுபவித்துவிட்டான் மகரிஷி.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன.

போன் வரவில்லை.

தொடர்ந்து கழிந்து கொண்டிருந்த ஒவ்வொரு நிமிஷமும் மகரிஷியின் பரபரப்பு அதிகமாகிக் கொண்டே போயிற்று. கால் மணிக்குப் பிறகு போன் மணியடித்தது. வர்மா சட்டென்று ரிசீவரை எடுத்து ''ஹலோ.. நம்பர் இருக்கா?'' பரபரப்போடு கேட்டான்.

மறுமுனையிலிருந்து வார்த்தைகள் காதில் விழவில்லை. மகரிஷியின் உள்ளங்கைகளில் வியர்த்துக் கொட்டிற்று. வர்மா குனிந்து பென்சிலையும் காகிதத்தையும் எடுத்துக் கொண்டதைப் பார்த்துவிட்டுச் சட்டென்று போய் பின்னால் நின்று, வர்மா எழுதிக்கொண்டிருந்த போன் நம்பரைப் பார்த்தான்.

''என்ன விஷயம்?'' மறுமுனையில் சிநேகிதன் கேட்டான்.



''சின்ன விவரம் தேவையாயிருந்தது'' என்று அவனுக்கு நன்றி சொல்லி விட்டு போனை வைத்து விட்டான்.

அரும்பாடுகள் பட்டு கஷ்டங்களையெல்லாம் அனுபவித்த பிறகு புதையல் கிடைத்தால், சட்டென்று அதைத் தொடாமல் புதையல் தேடுவோர் எவ்வளவு உத்வேகத்துடன் அதைப் பார்ப்பார்களோ, அதே போலவே அந்த நம்பரைப் பார்த்தபடியே கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள் இருவரும்.

அரை நிமிஷத்திற்குப் பிறகு- ''போன் பண்ணு, ஏன் அப்படியே உட்கார்ந்துவிட்டாய்?'' என்றான் மகரிஷி வர்மா சிரித்துவிட்டு—''கடவுளை வணங்கிட்டிருக்கேன்'' என்றான். பிறகு குனிந்து ஒவ்வொரு நம்பராய் டயல் பண்ணத் தொடங்கினான்.

முதலில் துபாய்க்குப் பண்ணினான். பிறகு எஞ்சிய நம்பர்களைப் பண்ணப் போனபொழுது வெளியே காலிங் பெல் ஒலித்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தார்கள்.

வெளியே ஒரு இன்ஸ்பெக்டரும், அவருக்குப் பின்னால் இரண்டு போலீசுகளும் நின்றுக்கொண்டிருந்தார்கள்.

ஃ ஃ ஃ

வர்மா இன்னும் போன் பண்ணிக் கொண்டேயிருந்தான். மகரிஷி மின்னலாய் அங்கிருந்து வர்மாவிடம் வந்து ''வெளியே போலீசார்'' என்றான். வர்மா நிமிர்ந்தான். அவன் முகம் வெளுத்து விட்டது. என்ன செய்வதென்று புரியாமல் வெறுமையாய் மகரிஷியை

ஏறிட்டுப்பார்த்தான். அந்த நிசப்தத்தைச் சிதறடித்தபடி திரும்பவும் காலிங்பெல் அழுத்தமாய் ஒலித்தது.

''பின் பக்கமாய் ஏதாவது வழி இருக்கா?''

''இல்லை.''

''ஸ்டோர் ரூம்?''

''நான் பிரம்மச்சாரியில்லையா, இல்லை.''

''சரி, நான் டாய்லெட்டிற்குள் ஒளிந்து கொள்கிறேன். ஜாக்கிரதையாய் மேனேஜ் பண்ணு'', என்று சொல்லிவிட்டு மகரிஷி அந்தப் பக்கமாய் வேகமாய் போய் விட்டான். அவன் கதவைத் தாழிட்டுக் கொண்ட சப்தத்தைக் கேட்ட பிறகு, வர்மா போய் வாசல் கதவைத் திறந்தான்.

பயத்தால் அவன் கைகள் நடுங்கத் தொடங்கின. இரட்டைப் படுக்கையறைகளைக் கொண்ட ஃபிளாட் அது.

போலீசார் தேடத் தொடங்கி விட்டால் நிமிஷத்தில் பிடிப்பட்டுப் போய் விடுவது உறுதி.

அவன் கதவைத் திறந்ததுமே இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார்.

''வர்மா என்பவர் நீங்கள் தானா?''

வரண்டுப் போய்க் கொண்டிருந்த தொண்டை ஒத்துழைக்க மறுத்தது.

இம்முறை வியப்படைவது வர்மாவின் பங்காயிற்று, அவன் சினிமாக்களிலும் புத்தகங்களிலும் இன்ஸ்பெக்டர்கள் தேடுவதற்காக வந்ததுமே, போலீசார் மளமளவென்று வீட்டிற்குள் நாற்புறமும் புகுந்து சாமான்களையெல்லாம் செல்லாச் சிதறடித்துக் கொண்டே குற்றவாளியைத் தேடுவர்கள் என்று தான் பார்த்திருக்கிறான்.



ஆனால் இந்த இன்ஸ்பெக்டர் சாவதானமாய் சோபாவில் உட்கார்ந்து கொண்டு குடிக்கத் தண்ணீர் கேட்டது அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

அவன் உள்ளே போய் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். போலீசார் இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தார்கள்.

''மகரிஷி என்பவரை உங்களுக்குத் தெரியுமா?'' தண்ணீரைக் குடித்துக் கொண்டே கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''தெரியும்.''

''அவன் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டுவிட்டான். அதனால்தான் விசாரணையைத் தொடங்கியிருக்கோம். தப்பித்துக் கொண்டு பத்து நாளைக்கு மேல் ஆகிறது. இதற்குள் நாட்டை விட்டே கூட போயிருப்பான் ஏதோ ஃபார்மாலிடியாய் எங்கள் விசாரணையை நாங்கள் பண்றோம்''-தம்ளரை மேஜை மேல் வைத்துக் கொண்டே சொன்னார் இன்ஸ்பெக்டர்.

கைதியைத் தேடாமல் அவன் போய் விட்டிருப்பான் என்ற முடிவிற்கு வந்து ரிகார்டு புத்தகங்களில் ரிகார்டுகளை முடிப்பதற்காக ஸ்டேட்மென்ட் எடுத்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரை வியப்போடு பார்த்தான் வர்மா. அவனுக்கு ஆச்சரியமாய்க் கூட இருந்தது.

''ஜெயிலிலிருந்து வெளியேறிய பிறகு மகரிஷி உங்களுக்கு போன் பண்ணினானா?''

''இல்லை.''

''அவன் எங்கே போயிருப்பான் என்று உங்களால் ஊகிக்க முடியுமா?''

''எனக்கு அவ்வளவு தூரம் தெரியாதுங்க.''

இன்ஸ்பெக்டர் எழுந்து நின்று ''டாய்லெட் எங்கே''? என்று கேட்டார். வர்மாவின் தலையில் இடி விழுந்தது. அவன் ஏதோ பதில் சொல்வதற்குள்ளாகவே இன்ஸ்பெக்டர் டாய்லெட்டிற்கருகில் போய் கதவைத் தள்ளினார். உள்ளே தாழிடப்பட்டிருந்ததால் அது திறந்து கொள்ள வில்லை.

''இந்த மழைக்கு மரக்கதவுகள் இறுகிப் போய் விட்டன போலிருக்கு'' என்று பலமாய் தள்ளினார்.

''பெட்ரூமில இன்னொரு டாய்லெட் இருக்கிறது. வாங்க, காட்டுகிறேன்', என்றான் வர்மா ஒருவாறு துணிந்து.

இன்ஸ்பெக்டர் அவனோடு சேர்ந்து பெட்ரூமிற்குள் போனார். வர்மா வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. நண்பனைக் காப்பாற்ற முடிந்ததற்குச் சந்தோஷமாய் இருந்தது. ஆனால் இன்னொரு பக்கத்தில் போலீஸ் டிபார்ட்மெண்ட் இப்படி இருந்ததைப் பார்த்து வருத்தமாய்க் கூட இருந்தது.

அதற்குள் இன்ஸ்பெக்டர் டாய்லெட்டிலிருந்து வெளியே வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டார்

''டயாப்டிஸ் வியாதி ..மழை நாள் வந்து விட்டால் இந்த தேவை இன்னும் அதிகமாகிவிடும்'' என்றார் தன் நிலைமையை விவரிப்பது போல.

''ஆமாங்க. இந்த வருஷம் மழை அதிகந்தான் போலிருக்கு.''

''எல்லாம் வருணயாகத்தின் மகிமை! பாத்தீங்களோனோ?'' என்றார் மேஜைமேலிருந்த செய்தித் தாளைச் சுட்டிக் காட்டி. ''நம் மந்திரி மிக சிரத்தை எடுத்துக் கொண்டு வருணயாகத்தைப் பண்ண வைத்திருக்கிறார், அதனால்தான் இந்த வருசம் மழை அதிகமாய் பெய்கிறது.''



''யாகங்கள் மூலமாய் மழைப் பெய்யுமா? இந்த நவீன காலத்தில் கூட, இதென்னங்க முட்டாள் தனம்?'' என்றான் வர்மா.

இன்ஸ்பெக்டர் குற்றவாளியைப் பற்றி விசாரிப்பதை விட்டுவிட்டு மழையைப் பற்றிப் பேசியது ஒரு விதத்தில் அவனுக்குச் சந்தோஷமாகவே இருந்தது. போலீசார் இருவரும் அவ்வறைச் சுவற்றில் அரைகுறையாடையுடன் இருந்த சினிமா ஸ்டார் படம் போட்ட கேலண்டரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்படீன்னால் யாகங்கள் மூலமாய் மழை பெய்யாது என்கிறீங்களா நீங்கள்?'' இன்ஸ்பெக்டரின் குரலில் இருந்த தீவிரத்தைப் பார்த்து வர்மா பயந்து விட்டான், இல்லை என்று மறுத்தால் ஏதாவது ஒரு சாக்கில் தன்னை அரெஸ்ட் பண்ணி விடுவார் என்ற பயத்தால் ,'சே, அதெல்லாம் இல்லைங்க, இந்த பேப்பரில் தலையங்கத்தைப் பாத்தீங்களா?''

நம்ப மந்திரிகளின் முட்டாள் தனத்தைப் பற்றி எவ்வளவு நன்றாய் தலையங்கம் எழுதியிருக்காங்க பாருங்க'' என்றான் தன் மீது எந்தத் தப்பும் இல்லை என்றாற் போல், தன் அபிப்பிராயம் எல்லாம் பேப்பரைப் படித்தால் வந்த அபிப்பிராயந்தான் என்பது போல,

''அப்படீன்னால் தப்பெல்லாம் அறத்துறை மினிஸ்டர் மேல் தான் என்கிறீர்கள் போலிருககு!''—இன்ஸ்பெக்டர் கேட்டார்,

''ஆமாங்க. இவ்வளவு முட்டாள் தனத்தை நான் எங்கேயுமே பார்த்ததில்லை.''

''அந்த அறத்துறை மந்திரி எங்க மாமாதான். என்னை சிறுவயதிலிருந்தே வளர்த்து ஆளாக்கிப் பெண்ணையும் கொடுத்தவர்-'' என்றார் இன்ஸ்பெக்டர். சீரியஸாய்.

வர்மா திடுக்கிட்டான், முகம் வாடிப் போய் விட்டது. இம்முறை இன்ஸ்பெக்டர் தன்னைக்கண்டிப்பாய் அரெஸ்ட் பண்ணி விடுவார் என்று நினைத்தான். கொஞ்சம் தடுமாறிவிட்டு—''மினிஸ்டர் மேல் தப்பில்லைங்க. ஏதாவது ஒண்ணைப் பண்ண வேண்டாமா? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? யாகங்கள் செய்தால் மேகங்கள் பொழியும் என்று ரிக்வேதத்தில் எழுதியிருக்கு.

ஒருக்கால் மினிஸ்டர்...அதான் உங்க மாமனார் அந்த வேதத்தைப் படித்திருப்பார். அதனால் இந்த யாகத்தைப் பண்ணுகிறார். உண்மையில் பெரிய மகான் அவர் என்றான்.

அவரை சமாதானப்படுத்துவது போல. இன்ஸ்பெக்டர் கொஞ்சம் கர்வமடைந்தாற் போல தென்பட்டார். அவரை இன்னும் குளிர்விப்பதற்காக வர்மா- ''இந்த பேப்பர்காரங்களுக்கு புத்தியே இல்லீங்க.

தலையங்கத்தைப் பாருங்க. உங்க மாமனாரைப் பற்றி எவ்வளவு கொடுமையாய் எழுதியிருக்காங்க பாருங்க. அவர் லெவலில் அவர், மக்கள் சேவை பண்ணிட்டிருக்கார் இவங்களுக்கென்ன வந்தது? நடுவில் சொல்லுங்கள்? இந்த எடிட்டருங்களுக்குப் பொறாமை''- என்றான்.

இன்ஸ்பெக்டர் மேஜை மேலிருந்த பேப்பரை எடுத்து அதென்ன பேப்பர் என்று பார்த்தார். ''நீங்க இந்த எடிட்டரைத் தானே திட்டுகிறீர்கள்?''

''ஆமாம். காரண வாத்ததைப் பற்றி அவ்வளவு கொடுமையாகவா எழுதுவாங்க? இடியட்'' என்றான் கோபமாய்.



இன்ஸ்பெக்டர் அவனைக் குரூரமாய் பார்த்துவிட்டு- ''இந்த எடிட்டர் எங்க சித்தப்பா. எனக்கு போலீஸ் உத்யோகம் வாங்கித் தந்தது அவர்தான்'' என்றார்.

வர்மாவுக்கு ஆத்திரமாய் வந்தது. அரும்பாடுபட்டுத் தன்னை அடக்கிக் கொண்டான். போலீசார் இருவரும் தன்னையே குரூரமாய் பார்த்தாற் போலிருந்தது.

இன்ஸ்பெக்டரின் அனுமதிக்காகவே காத்திருந்தாற் போலவும், அவர் அனுமதி தந்துவிட்டால் அவனை இழுத்துக் கொண்டு போய் லாக்கப் ரூமில் தள்ளி அடிக்கத் தயாராயிருந்தவர்களைப் போலவும் தென்பட்டார்கள், வர்மா முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டான்

''இதில் ஒரு லாஜிக் இருக்குங்க. இந்த பத்திரிகையைப் பாருங்க. இதில் 'வாஸ்து ஆலோசனைகள்'' வாராப் பலன்கள், தினவாரம் நட்சத்திரம் எல்லாம் இருக்கின்றன. இன்னொரு பக்கத்தில் ஒரு மினிஸ்டர் யாகங்கள் பண்ணுவதாய் சொன்னால் அதைக் கண்டித்துத் தலையங்கம் எழுதுவாங்க.

இதெல்லாம் எதுக்காக? காரணவாதிங்களைத் தலையங்கள் மூலமாகவும், பக்தர்களை வாரப் பலன்கள் மூலமாகவும் கவருவதற்காக! அதேபோல மினிஸ்டருங்க யாகங்களைப் பண்ணுவாங்க. எதுக்காக? எப்படியும் இது மழை நாளாதலால் ஒன்றோ ரெண்டோ மழை வராமல் போகாது.

அப்படி மழை வந்தால் அப்பொழுது இந்த யாகங்கள் மூலமாய்த் தான் மழை வருகிறதுன்னு சொல்லி, அப்படி யாகங்கள் பண்ணச் செய்த மினிஸ்டருங்களுக்கே ஓட்டுப் போடுவாங்க ஜனங்க.

அதனால் எடிட்டருங்களும் மேதாவிங்க தான் மினிஸ்டருங்களும் மேதாவிங்க தான். உங்க மாமனார்'

சித்தப்பா ஆகிய இருவரையும் மேதாவிகளாய்ப் பெற்ற நீங்கள் உண்மையாகவே ரொம்ப கிரேட்!''

இன்ஸ்பெக்டர் இம்முறை திருப்தியாய் சிரித்தார். எழுந்து நின்று ஹேட்டை எடுத்துக்கொண்டே ''வெரிகுட் ரொம்ப நன்றாய்ச் சொன்னாய் ஓய்! அது சரி, நான் எதுக்காக வந்தேன்?''

''மகரிஷி என்ற கைதி தப்பித்துக் கொண்டு விட்டானுங்க. அவனைத் தேடுவதற்காக நீங்கள் வந்தீங்க.''

''ஆங்...கரெக்ட், கரெக்ட். அவன் ஏதாவது போன் பண்ணினால் எங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லு. நான் இல்லாவிட்டால் எங்க சப் இன்ஸ்பெக்டர் இருப்பார்'' என்று சொல்லிவிட்டு போலீசாரை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய் விட்டார்.

வர்மா வெகுநேரம் அவர்கள் போன திசையையே பார்த்தபடி நின்று பெருமூச்சு விட்டான்.

பிறகு கதவைச் சாத்திவிட்டு வந்து டாய்லெட்டிற்கருகில் நின்று மூன்று முறை கதவைத் தட்டிவிட்டு—''அவங்க போயிட்டாங்க மகரிஷி. நீ உள்ளே வரலாம்'' என்றான்.

மகரிஷி டாய்லெட்டை விட்டு வெளியே வந்து ''என்ன நடந்தது? கேள்விகள் கேட்டுத் திணறடிச்சுட்டாங்களா?'' என்று கேட்டான்.

''ஆங். நாட்டில் மழை ஏன் பெய்யவில்லை என்ற விஷயத்தைப் பற்றி வெகு நேரமாய் பேசிக் கொண்டோம்'' என்று நடந்ததையெல்லாம் சொன்னான்.

மகரிஷி நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டே ''மை காட்! ஆபத்து மயிரிழையில் தப்பித்ததுன்னு சொல்லு'' என்றான்,



''நீ வேஷத்தை மாற்றிக் கொள்ளாமல் இவ்வ பயமில்லாமல் எப்படித்தான் சுற்றிக் கொண்டிருந்தாயோ, எனக்கு இப்பத்தான் புரிஞ்சுது'' என்றான் வர்மா சிரித்துக்கொண்டே.

இருவரும் போனுக்கருகில் வந்து திரும்பவும் துபாய்க்காக முயற்சிப் பண்ணினார்கள்.

மறுமுனையிலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''மேடம், நான் இந்தியாவிலிருந்து பேசுகிறேன். மிஸஸ் சுமித்ரா நீங்க தானே?'' கேட்டான் தமிழில்.

''ஆமாங்க'' மறுமுனையிலிருந்து கேட்டது, மகரிஷிக்குத் திரும்பவும் டென்ஷன் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

அதுவரை இருந்த பயம் வேறு. இப்பொழுது அதிகரித்துக்கொண்டிருந்த டென்ஷன் வேறு.

வர்மா கேட்டான் ''பாருங்க மேடம்! சந்தனா என்று உங்கள் கிளாஸ்மேட் ஒருத்தி இருந்தாள். அவள் விலாசம் உங்களுக்குத் தெரியுமா?''

''நீங்கள் யார்?''

''நீங்கள் படித்த காலேஜில் ஓல்ட் பாய்ஸ் அஸோசியேஷனின் பிரெஸிடெண்ட் நான். உங்களைப் பார்க்க டில்லியில் கூட முயற்சி பண்ணினோம். நீங்கள் துபாய்க்குப் போய் விட்டதால் நம்பர் தந்தாங்க. நீங்கள் கிடைத்து விட்டீர்கள். முடிந்தால் உங்களால் ஃபங்ஷனுக்கு வர முடியுமா? இன்விடேஷன் அனுப்புகிறேன்.''

''என்னால் வர முடியாதுங்க'' மறுமுனையிலிருந்து கேட்டது.

''அப்ப சந்தனா?...''

''சந்தனா அட்ரெஸ் கூட எனக்குத் தெரியாதுங்க. அந்தப் பெண் அந்த ஊரிலேயே தான் இருப்பாள்.''

ரிசீவருக்கருகில் காதை வைத்து அந்தச் சம்பாஷணை களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மகரிஷி திடீ ரென்று மனமொடிந்து போய் விட்டான்.

''அவங்க அப்பா பெரிய மரவியாபாரிங்க. அவர் பெயர் என்னவோ...ஞாபகத்துக்கு வரலை..பட்...எனக் குத் தெரியும். அந்த ஊரிலேயே பெரிய மரவியாபாரி.''

''பெயரை ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்ல முடியுமா?''

''அவ்வளவு ஞாபகமில்லை. அந்தப் பொண்ணுக்கு உதகையில் ஏதோ பெரிய தோட்டம் கூட இருக்கு. மூணு மாசத்துக்கொரு தடவை அங்கே தாய் தந்தையரோடு சேர்ந்து போய் வந்துட்டிருப்பாள். அவ்வளவு தூரந்தான் ஞாபகமிருக்கு.''

''தாங்க்ஸ். ஏதாவது ஞாபகம் வந்ததானால் மனசில் வெச்சிக்குங்க. நாளைக்குத் திரும்பவும் போன் பண்றென்'' என்றுச் சொல்லி விட்டு போனை வைத்து விட்டான் வர்மா.

மகரிஷி எல்லா ஆசைகளையும் இழந்து விட்டவனாய் அப்படியே உட்கார்ந்திருந்தான். வர்மாவுக்கு அவனைப் பார்த்தால் இரக்கமாய் இருந்தது. ஆறுதல் சொல்வது போல—

''கொஞ்சமாவது தேவலையே ம ரிஷி. குறைந்தது அந்தப் பெண்ணின் தந்தை மர வியாபாரம் பண்ணுகிறவர் என்றும், உதகையில் தோட்டம் இருக்கிறது என்றுமாவது தெரிந்ததே. அதை வைத்துக் கொண்டு முயற்சிப்போம்'' என்றான்.



''எப்படி?'' கேட்டான் மகரிஷி.

''இந்த ஊரில் உள்ள பெரிய மரவியாபாரிகளின் ...ர்களையெல்லாம் டெலிபோன் டைரக்டரி மூலமாய் ...ற்சி பண்ணுவோம்.

''சந்தனா எங்கேயிருந்தாலும் கிடைக்காமல் போக ...ட்டாள்.''

''நீ இந்த வேலையைச் செய். நான் அதற்குள் ...தைக்குப் போகிறேன்''

வர்மா ஆச்சரியத்தோடு உதகைக்கா? எதுக்காக ...தைக்கு? என்று கேட்டான்.

''அங்கே யாராவது மரவியாபாரிங்களின் தோட்டம் ...ருக்கிறான்னு தேடிப் பார்க்கிறேன். இவ்வளவு பெரிய ...ரில் விசாரித்துக் கொண்டு அலைவதை விட, அப்படிப் ...ட ஊரில் விசாரித்தால் கிடைப்பது சுலபம்.

''உதகையில் எங்கே தங்கியிருப்பாய்?''

மகரிஷி மேஜை மீது கிடந்த பத்திரிகையில் வெளி ...ந்திருந்த சின்ன விளம்பரத்தைக் காட்டினான் அதில்...

''WANTED.

உதகையில் ஹௌஸ் கீப்பராய் வேலை செய்வ ...ற்கு ஒரு அஸிஸ்டெண்ட் தேவை. உற்சாகம் மிக்க இளை ...ஞர்கள் வேண்டும். தொடர்பு கொள்ளுங்கள்...''

என்றிருந்தது.

''நாளைக்கு அந்த அபீஸுக்குப் போய் உத்யோகத்திற்கு ...யற்சி பண்றேன்'' என்றான் மகரிஷி.

வர்மா பதில் பேசவில்லை. மௌனமாய் இருந்தான். அவன் மௌனத்தைப் பார்த்து விட்டு மகரிஷி கேட்டான்.

''நாளைக்குத் தூக்குமேடையில் ஏறவேண்டிய இப்படி உத்யோகத்திற்காக ஆபீசுகளைத் தேடி அ கொண்டிருப்பதைப் பார்த்தால் உனக்குச் வருகிறது இல்லையா?''

''இல்லை, இல்லை. ஏதாவது முயற்கி செ தானே நம்ப காரியம் நடக்கும்? நீ சொன்னது போ உதகைக்குப் போ. நான் இங்கே முயற்சி பண் விஷ் யூ பெஸ்ட் ஆப் லக்'' என்றான் வர்மா.

மகரிஷி அங்கிருந்து நகர்ந்தான்.

மகரிஷி பேப்பரில் பார்த்த அந்த அறிக்கை வருவதற்குக் காரணமான சம்பவம் சில நாட்க முன்னர்தான் நிகழ்ந்தது.

## 12

''நமஸ்காரம்.

கையிலிருந்த செய்தித்தாளைக் கீழே வைத்து வி நிமிர்ந்து பார்த்தார் விஷ்ணுவர்த்தனன். நெற்றி பொட்டு, பட்டையான நாமம், கையில் பஞ்சாங்க பார்த்ததுமே வாங்க ''சாஸ்திரியாரே, உட்காருங்க என்று எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினார்.

''இன்றைக்கு நல்ல நாள். லக்ன பத்திரிகையை எழு எடுந்து வந்திருக்கேன்'' என்று பஞ்சாங்கத்திற்குள்ளிரு சந்தனா ரவிதேஜாவின் திருமண பத்திரிக்கையை வெளி எடுத்தார் சாஸ்திரி.



விஷ்ணுவர்த்தனன் சோபாவில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டே சாஸ்திரியைப் பார்த்து ''மன்னியுங்கள், இந்தச் சம்பந்தத்தை நாங்கள் பண்ணிக்கப் போறதில்லை' என்றார்.

அதைக்கேட்டு சாஸ்திரி குழப்பத்துடன் ''என்ன சொல்றீங்க நீங்க?'' என்று கேட்டார்.

''ஆமாம், நிஜந்தான். ரவிதேஜா அந்த பில்டிங்கின் மேலிருந்து கீழ விழுந்து நிரந்தரமாய் குருடனாகி விட்டான். எப்படிக் கல்யாணத்தைப் பண்ணிக்கொள் வோம்?'' அவர் குரல் வருத்தத்தால் தழுதழுத்தது.

''ஐயோ, அப்படியா?'' என்று இரக்கத்தோடு பார்த் தார் சாஸ்திரி. பிறகு என்ன பேசுவதென்று தெரிய வில்லை அவருக்கு. கொஞ்ச நேரம் மௌனமாய் உட் கார்ந்து கொண்டிருந்துவிட்டு— ''சரி, நான் போயிட்டு வரேன்''— என்று லக்னபத்திரிக்கையைப் பஞ்சாங்கத்திற் குள் எடுத்து வைத்துக்கொண்டு அங்கிருந்து போய் விட்டார்.

விஷ்ணுவர்த்தனன் ஆழ்ந்து பெருமூச்சு விட்டுவிட்டு செய்தித்தாளைக் கையிலெடுத்துக் கொள்ளப் போன பொழுது, மாடியிலிருந்து சந்தனா இறங்கி வந்தாள். அவர் அவளைக் கூர்ந்து பார்த்தார். இரண்டே நாட் களில் எப்படித் துவண்டுபோய் விட்டது அவள் முகம்!

''டாடி'' என்றாள் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டே ஏதோ சொல்லத் துடித்தாள் அவள். விஷ்ணு வர்த்தனன் அவளைப் பொருள் பொதியப் பார்த்தார். ''சாஸ்திரியை ஏன் அனுப்பிட்டீங்க?'' என்று கேட்டாள் தான் சொல்ல வந்ததை ஆரம்பிக்க உத்தேசித்து.

''இப்பக் கல்யாணம் எதுக்குன்னுதான்.''

''அப்படீன்னால் தேஜாவோடு என் கல்யாணம் நடக்காதா டாடீ?''

விஷ்ணுவர்த்தனனின் முகத்தில் ஆச்சரியம்! மகள் என்ன சொல்ல விரும்புகிறாள் என்று தெரியாத குழப்பத்துடன்—''ஒரு குருடனுக்குத் கல்யாணம் பண்ணி வைப்பேனாம்மா உன்னை?'' என்றார்.

அவள் கொஞ்ச நேரம் தலைகுனிந்தபடி தன் விரல் நகங்களையே பார்த்துக்கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். பிறகு மெதுவாய் நிமிர்ந்து—''உண்மை தெரிந்தால் நீங்கள் இப்படிப் பேச மாட்டீங்க டாடீ'' என்றாள்.

''என்னம்மா சொல்கிறாய் நீ?''

''ஆமாம்டாடி, அன்றைக்கு ...அதாவது பெண் பார்த்து விட்டுப் போன அன்றிரவு தேஜாவை ஓட்டலுக்கு அனுப்பியது நான்தான்—''

அவர் புருவம் ஏறிற்று. கண்களை இடுக்கிக் கொண்டு— ''என்னது?'' என்றார்.

''ரூம் நம்பர் முன்னூற்று மூணுக்குப் போகச்சொல்லி ஆண் குரலில் நான் தான் போன் பண்ணினேன் டாடி.''

''எதுக்கு?'' அவர் வாயிலிருந்து அணு குண்டாய் வெளி வந்தது அக்கேள்வி.

சந்தனாவின் தலை தாழ்ந்தது. அவள் முகத்தில் தென்பட்டது வெட்கமா, வருத்தமா என்று சரியாய் தெரியவில்லை. ''வரப்போற மனைவியின் மீது அவருக்கு எவ்வளவு நம்பிக்கையும் அன்பும் இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக விளையாட்டாய் நான்தான் போன் பண்ணினேன். ஆனால் எதிர்பாராத விதத்தில்



அந்த அறையில் கள்ளக்கடத்தல் கும்பல் இருக்கும் என்றோ, அது அவ்வளவு வேதனைக்கு ஆளாக்கிவிடும் என்றோ ஊகித்திருக்கவில்லை. விஷ்ணுவர்த்தனனின் முகம் வெளுத்து விட்டது. அவர் சலனமில்லாமல் மகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''நிஜந்தான் டாடி! தேஜாவுக்கு என்னால் தான் கண் போயிற்று. அவருக்கு என் மேல் எவ்வளவு அன்பு இருந்ததென்றால்—அந்த நிமிஷத்திலேயே அந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டு விடுவதற்காக ஓட்டலின் பின் பக்கத்து பால்கனியைப் பிடித்துக்கொண்டு ஜன்னலுக்கருகில் போனார். கள்ளக்கடத்தல்காரர்கள் தென்படவே போலீஸ் ஆபீசராய் கடமை நினைவுக்கு வந்து, துப்பாக்கியால் அவர்களை மிரட்டி, அடக்கி வைத்துக் கொள்ளப் போனார். கடைசியில் அவரே அதற்கு பலியாகி விட்டார். மொத்தத்தில் எது எப்படி நடந்தாலும், எவ்வளவோ அன்பிருந்தாலேயொழிய அவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொண்டிருக்க முடியாது. டாடி, அந்த அன்பிற்காக நான் வாழ்க்கையையே அவருக்குத் தந்து விட எண்ணிக்கொண்டு விட்டேன்.'' அவள் சொல்லி முடித்தாள்.

அதுவரை கண்களை மூடிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்த விஷ்ணுவர்த்தனன் மெதுவாய் கண்களைத் திறந்தார். வயது கற்றுத் தந்திருந்த அனுபவங்களால் பழுத்துப் போயிருந்த அவர் மூளைக்கு மகள் சொன்னது பெரிய உயர்ந்த விஷயமாய் தென்படவில்லை.

''பாரும்மா...உனக்கு வரப்போற மணமகள் குறிப்பிட்ட ஓட்டல் ரூமில் இருக்கிறாள் என்று ஒரு உண்மை விளம்பி சொன்னால் எந்த ஆம்பிள்ளையாயிருந்தாலும் அது உண்மையா பொய்யா என்று தெரிந்துகொள்வதற்

காகக் கண்டிப்பாய் அங்கே போவான். ஆனால் ரவி தேஜா போலீஸ் ஆபீசரானதால் மேலும் உரிமை எடுத்துக் கொண்டு அவ்வறைக்குள் நுழைந்திருக்கிறான். இதற்கு நீ நினைத்துக் கொண்டிருப்பது போல மனமெல்லாம் அன்பு வழிந்து கொண்டிருக்கத் தேவையில்லைம்மா.'' என்றார்.

''ஆழ்ந்த அன்பு இருக்குமிடத்தில்தான் சந்தேகத்திற்கும் பொறுமைக்கும் இடம் உண்டு டாடி. அவருக்கு என்மேல் அன்பில்லாவிட்டால் கேவலம் அந்த போன்காலை மட்டுமே வைத்துக்கொண்டு என்னை உதறியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றெண்ணினார். அதுபோதும்'' என்றாள் சந்தனா.

விஷ்ணுவர்தனனுக்கு வாதாடப் பிடிக்கவில்லை. இப்படிப்பட்ட விஷயங்கள் விவாதங்கள் மூலமாய் ஒரு முடிவிற்கு வராது.

தந்தையின் மௌனத்தை வேறு விதமாய் புரிந்துக் கொண்ட சந்தனா—''நான் இந்த விஷயங்களையெல்லாம் தேஜாவிடம் சொல்லிவிட்டேன் டாடி'' என்றாள்.

''எப்பொழுது சொன்னாய்?''

''நீங்கள் எல்லோரும் ஸ்கானிங்கிற்காக டாக்டரிடம் போனபொழுது''

''தேஜா என்ன சொன்னானம்மா?''

''ஒன்றும் சொல்லவில்லை. நான்தான் அப்படிப் போன் பண்ணியதாய் சொன்னதும் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்துக் கொண்டார். என்னால் தான் அவர் குருடானதால் நான் அவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொன்னபொழுது மாத்திரம் 'இரக்கத்தால் இப்படி முடிவெடுத்துக் கொள்ளாதே' என்று



சொன்னார்...''உண்மை டாடி, நான் மட்டும் இரக்கத்தால் இப்படி முடிவெடுத்துக் கொள்ளவில்லை. தேஜாவை நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன்''

''இன்னொரு தடவை நன்றாய் யோசித்துப்பார்த்துக் கொள்ளம்மா''—

''டாடி, நான் கல்யாணம் என்று பண்ணிக்கொண்டால் தேஜாவைத்தான் பண்ணிக்கொள்வேன். இந்த விஷயத்தில் உங்களுக்குப் பிடிக்காமல் போனாலும் சரி, என் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டுதான் நான் இருப்பேன். என் அதிர்ஷ்டம் நன்றாயிருந்தால் அவரால் திரும்பவும் இந்த உலகத்தைப் பார்க்க முடியும். ஒருக்கால் அவர் கண்பார்வை திரும்பாமலேயே போனால் என் பார்வையால் அவருக்கு உலகத்தைக் காட்டுவேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள் டாடி. எங்கள் கல்யாணத்தை விமரிசையாய் பண்ண வேண்டாம். எளிதாய் பண்ணிவிட்டால் எங்களுக்குத் தொந்தரவு இல்லாமலிருக்கும். முடிந்தால் நாளைக்கே ஏற்பாடு பண்ணு டாடி. என்னால் குருடான அவரை அதிக நாள் தனியாய் திகிலோடு விட்டு வைத்திருக்கப் பிடிக்கவில்லை. எனக்கு''— என்றுச் சொல்லி விட்டுப் போய்க்கொண்டிருந்த மகளை சிலையாய்ப்பார்த்துக் கொண்டிருந்தார் விஷ்ணுவர்த்தனர்.

ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் எவ்வளவு தடங்கல்கள் வந்தாலும் அதை விடாமலிருப்பது அவர் சுபாவம்.

மகள் கூட தன் சுபாவத்தையே கொண்டிருப்பதை அவர் அறிவார்.

# 13

விஷ்ணுவர்த்தனனின் வீடு என்றுமில்லாதவாறு கல கலத்துக் கொண்டிருந்தது. அன்று காலையில் தான் சந்தனா—ரவிதேஜாவிற்கு ரிஜிஸ்தர் ஆபீசில் திருமணம் நடந்தது.

ஒரு குருடனைத் தன்மகள் மணந்து கொள்கிறாளே என்ற வருத்தத்திலிருந்து மெல்ல மெல்ல தேறிக் கொண் டிருந்தார் விஷ்ணுவர்த்தனன்.

மகள் சொன்னபடியே அவர் திருமணத்திற்கு நிறைய விருந்தினர்களை அழைக்கவில்லை. மகள் வாதனை யிலும் உண்மை இருந்தது. தேஜாவை தர்மசங்கடமான நிலைமையில் ஆழ்த்த யாருக்குமே பிடிக்கவில்லை. திரு மணம் ஆனதுமே எல்லோருமாய் சேர்ந்து வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

''டாடி''

''என்னம்மா?''

சந்தனா கொஞ்சம் தடுமாறிவிட்டு—''நானும் அவ ரும் ஒரு மாத காலம் உதகையில் நம்ப கெஸ்ட் ஹவுசி தங்கியிருக்கோம் டாடி''

''எங்கே? சந்தனா கார்டன்ஸிலா?''

''ஆமாம் டாடி''

''இப்ப எதுக்கும்மா? இன்னொரு பத்து நாள் ஆனால்..''



''டாடி, அவரை உத்யோகத்திலிருந்து ரிடயராகி விடச் சொல்லி செய்தி வந்திருக்கிறது. டியூட்டியில் இருக்கும்போது இந்த ஆபத்து நேர்ந்ததால் ரிடயராகும் வயது வரும்வரை சம்பளம் தருவாங்களாம். ஆனால் அதொன்றும் அவ்வளவு சந்தோஷப்படக்கூடிய விஷய மில்லை. அவர் மனத்தளவில் மிகவும் தளர்ந்து போயி ருக்கிறார். எவ்வளவோ சாதிக்க வேண்டிய வயதில் இப்படிக் கண் போய்விட்டதற்கும், வேலையிலிருந்து நீக்கப்பட்டதற்கும் அவர் மிகவும் மன அதிர்ச்சி அடைந் திருக்கிறார். அதிலிருந்து கொஞ்சம் தேறிக்கொள்ள வேண்டும் என்றால் இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் விட்டு தொலைவிற்குப் போக வேண்டும். அதனால் அவரை அழைத்துக்கொண்டு நம்ப கெஸ்ட் ஹவுசுக்குப் போய் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.''

விஷ்ணுவர்த்தனனால் எதுவும் பேச முடியவில்லை.

''சரிம்மா'' என்றார்.

சந்தனாவின் முகம் மலர்ந்தது. ''தாங்க்யூ டாடி'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போக முயன்றாள்.

''சந்தனா...'' கூப்பிட்டார்.

அவள் நின்று தந்தையை நோக்கித் திரும்பினாள்,

''உங்களோடு கூட யாரையாவது கூட்டிட்டுப் போனால் நன்றாயிருக்கும்னு தோணுது''

''யாரப்பா? எதுக்கு?'' என்று கேட்டாள் புரியாமல்.

''பாரும்மா, அவ்வளவு பெரிய கெஸ்ட் ஹவுசில் நீங்க ரெண்டு பேருந்தான் இருப்பீங்க. அப்கோர்ஸ்!

தோட்டக்காரன், வேலைக்காரங்க எல்லோரும் இருப் பாங்கன்னு வை. ஆனால் அவனோ கண் தெரியாதவன். உங்களுக்குத் துணையாய் கொஞ்சம் படித்த ஆள் ஒருத்

தன் சின்னச் சின்ன காரியங்களைப் செய்து தருபவன் இருந்தால் நன்றாயிருக்கும். யோசித்துப் பார்''

சந்தனா தந்தை சொன்னதும் சரியே என்றுணர்ந்து ''சரி டாடி'' என்றாள்.

விஷ்ணுவர்தனன் இண்டர்காமை எடுத்து செக்ரட்டரியைக் கூப்பிட்டார். அவன் வந்ததும் நியூஸ் பேப்பர் ஒன்றில் விளம்பரம் கொடுக்கும்படி சொன்னார்.

மறுநாள் தினத்தாளில் ஓர் சின்ன அறிக்கை வெளி வந்தது.

உதகையில் ஹவுஸ்கீப்பராய் வேலைப் செய்வதற்காக ஒரு அஸின்டென்ட் தேவை. உற்சாகமான இளைஞர்கள் தொடர்பு கொள்ளுங்கள், தகுதியைப் பொருத்துச் சம்பளம் தரப்படும்''

## 14

மகரிஷி ஆபிசு படிகளில் ஏறி உள்ளே நுழைந்தான். அவன் கையில் முதல் நாள் தினத்தாளில் வெளிவந்த அறிக்கை இருந்தது.

உண்மையில் அது மிகச் சின்ன உத்யோகமாயிருந்தாலும் மகளையும் மருமகனையும் பார்த்துக் கொள்ள வேண்டிய வேலையானதால் விஷ்ணுவர்த்தனனே சுயமாய் வந்தவர்களை இண்டர்வ்யூ பண்ண எண்ணினார்.

மகரிஷி போன அரைமணி நேரத்தில் உள்ளேயிருந்து அழைப்பு வந்தது. அவன் உள்ளே போனான்.

பார்த்ததுமே மகரிஷியை விஷ்ணுவர்த்தனனுக்குப் துப்போய் விட்டது. உயரமாய் பலமாய் இருந்தாலும் முகத்தில் வினயமும் பணிவும் தென்பட்டன.



''உன் பெயர்?''

''மகரிஷி''

''என்ன படித்திருக்கிறாய்?'' மகரிஷி சொன்னான்.

அவர் வியப்போடு பார்த்துவிட்டு ''இவ்வளவு படிப்புப் படித்துவிட்டு கேர் டேக்கர் உத்யோகமா பண்ணப் போகிறாய்?'' என்று கேட்டார்.

மகரிஷி பதில் பேசவில்லை. ஆனால் விஷ்ணுவர்தனன் அந்த விஷயத்தைப் பற்றி மேற்கொண்டு கேட்கவில்லை.

மேலும் கேள்விகள் கேட்டுத் திருப்தியடைந்தவராய் ''நாளைக்குக் காலையில் வந்து டியூட்டியில் ஜாயின் ஆகிவிடு'' அங்கே வேலைப் செய்து வந்த சலமய்யனுக்கு நான் போன் பண்ணிச் சொல்லி விடுகிறேன்.

சந்தனா கார்டன்ஸ் என்றால் உதகையில் யாரைக் கேட்டாலும் சொல்லி விடுவார்கள். அந்த காம்பவுண்டிற்குள்ளேயே இருக்கிற அவுட் ஹவுசில் தங்கியிரு.''

மகரிஷி தலையாட்டினான்.

விஷ்ணுவர்த்தனன் திரும்பவும் சொன்னார்.

''என் பெண்ணிற்கு முந்தாநாள்தான் கல்யாணம் ஆச்சு, அவங்க தேநிலவுக்காக அங்கே வராங்க, ஒரு மாதம் இருப்பாங்க.

அவங்களுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு திரும்பி என்னிடம் ஷேமமாய் கொண்டு வந்து ஒப்படைக்கிற பொறுப்பு உன்னுடையது.''

''சரி சார், தாங்க்யு'' என்று வணங்கிவிட்டுத் திரும்பினான் மகரிஷி.

அவன் போனதுமே விஷ்ணுவர்த்தனன் வீட்டிற்குப் போன் பண்ணினார். சந்தனா போனை எடுத்தாள்.

''அம்மா, இன்றைக்கு ஒருத்தன் வந்தான். எனக்கு எல்லா விதத்திலும் பிடித்து விட்டது. அவனை உதகைக்கு அனுப்பி விட்டேன். நீங்கள் நாளைக்குப் போகும்போது அவன் அங்கே இருப்பான்'' என்றார்.

சந்தனாவுக்கு அந்த விஷயத்தில் அவ்வளவு ஆர்வம் இல்லை. ''சரி டாடி'' என்றாள்.

''அவனை உங்களுக்குப் பிடிக்காமல் போனால் திரும்பி அனுப்பி வெச்சுடுங்க அவனை. ரெண்டு மாதச் சம்பளம் தந்து வேலையிலிருந்து தள்ளி விடுகிறேன்.''

''அதற்கென்ன டாடி! நாங்கள் மட்டும் ஒரு மாதத்திற்கு மேல் அங்கே இருக்கப் போகிறோமா என்ன''? என்று சொல்லிப் போனை வைத்து விட்டாள்.

அவள் சம்பாஷணைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரவிதேஜா ''என்ன, ஏதோ உத்யோகம் என்கிறாயே?'' என்றான்.

''யாரோ கேர்டேக்கரை அபாயின்ட் பண்ணியிருக்காராம். அப்பாவுடையதெல்லாம் ஒரே பிடிவாதந்தான்'' என்றாள் சந்தனா.

''கேர்டேக்கரா? உன்னோட கேர்டேக்கரா? என்னோட கேர்டேக்கரா? நாம்ப போவது தேநிலவிற்கா அல்லது எங்கேயாவது யுத்த பூமிக்கா?'' என்றான்.

சந்தனா கூட சிரித்து விட்டு ''ஒரு மாதத்திற்குப் போய் இவ்வளவு தடபுடல் படுத்துகிறார் அப்பா'' என்றாள்.



அந்த ஒரு மாத காலந்தான் அவள் வாழ்க்கைக்கே ஒரு சவாலாகப் போகிறது என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

# 15

''உன்னை அணு அணுவாய் முத்தமிட வேண்டும் போலிருக்கிறது''

சந்தனா சிரித்தாள். 'இதென்ன, காதலில் மூழ்கி கவிதை பிறந்து விட்டதோ?''

''எப்படியும் பிராக்டிகல் தான் இல்லையே, குறைந்த பட்சம் தியரியையாவது பிராக்டீஸ் பண்ணலாமேன்னு தான்'' என்றான் ரவிதேஜா.

சந்தனாவின் முகத்திலிருந்த சிரிப்பு கொஞ்சம் தணிந்தது.

''உண்மையில் உங்களை வருத்தப் படுத்துகிறேனா?'' என்றாள்.

''எந்த ஆணுமே கல்யாணமானதுமே முதலிரவைத் தான் கற்பனை பண்ணிக் கொள்வான்.''

''சரி, உங்களிஷ்டம்.''

அவன் அவளைக் கிட்டே இழுத்துக் கொண்டே—

''சும்மா சொன்னேன். நீ சொன்னது போல கொஞ்ச நாள் பொறுத்திருப்போம்.''

''எனக்கென்னவோ உங்களுக்கு கண் பார்வை திரும்பி விடும் என்று தோன்றுகிறது—சீக்கிரத்திலேயே...வெகு சீக்கிரத்திலேயே...''

''ஆமாம். நீ சொன்னதும் நிஜந்தான். உன் அபார அழகைக் கண்ணில்லாமல் பார்த்துச் சந்தோஷப்படுவதை விட, கண்களாலும் மனதாலும் சேர்ந்து சந்தோஷப்படுவதுதான் நன்றாயிருக்கும். நானும் கொஞ்ச நாள் காத்திருக்கிறேன்.''

அவள், அவன் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு—

''நீங்கள் நிஜமாய் ரொம்பவும் உயர்ந்தவர்''—என்றாள்.

''அன்றைக்கு நீ ஏன் அப்படிப் போன் பண்ணினாய்? நான் துடிதுடித்துப் போய் விட்டேன்.''

''நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள், பார்க்கலாம் என்றுதான். அது இந்தமாதிரி கொண்டு வந்து விடும் என்று தெரிந்திருந்தால் அந்த எண்ணத்தை மனதில் கூட வரவிட்டிருக்க மாட்டேன்.''

''நிஜமாய் அங்கே வேறொரு ஆண் உன்னோடு சேர்ந்து இருந்திருந்தால் என்ன பண்ணியிருப்பேன் தெரியுமா?''

''என்ன பண்ணியிருப்பீங்க?''

''துப்பாக்கியால் அவனைச் சுட்டுத்தள்ளியிருப்பேன்.''

''கல்யாணம் ஆவதற்கு முன்னாடியே வா?''

''அதற்குள்ளாகவே நீ எனக்குச் சொந்தமானவள் என்று என் மனதில் நன்றாய் பதிந்துபோய் விட்டது.''

''ஆமாம், இவ்வளவு சொல்றீங்களே, உங்கள் வாழ்க்கையில் கல்யாணத்திற்கு முன்னால் உங்களுக்கு எந்தப்



பெண்ணோடுமே பரிச்சியம் ஆனதில்லையா? பரிச்சியம் என்றால் எதையோ ஊகித்துக்கொண்டு விடாதீங்க. குறைந்தபட்சம் பேசத்துடித்ததோ, சிநேகம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியதோ...இன்னும்...''.

அவன் அவள் வார்த்தைகளை இடைமறித்து விட்டுத் தலைமீது கையை வைத்து—''உன் மேல் ஆணை, என் வாழ்க்கையில் முதல் முதலாகவும் கடைசியாகவும் நுழைந்த பெண் நீ ஒருத்திதான்'' என்றான்.

''ஆணையெல்லாம் போடத் தேவையில்லை, நம்புகிறேன்.''

''ஆனாலும் உனக்கு இந்தச் சந்தேகம் ஏன் வந்தது?''

''சாதாரணமாய் பெண்களிடம் கவிதைகளை அள்ளி வீசும் ஆண்கள், அந்தத் தொழிலில் ஊறித்திளைத்தவர்களாய் இருப்பார்களாம், எங்கேயோ படித்தேன்'' என்றாள் கலகலவென்று சிரித்துக்கொண்டே.

''கொன்று விடுவேன், நான் ஏதோ மனதில் தோன்றியதை உன்னிடம் சொன்னால், அதைத் தொழிலில் ஊறித் திளைத்தவன் என்று முடிவு கட்டி விட்டாயா?''

''ஆனாலும் காதல் என்பது மிகவும் விலை மதிப்பு வாய்ந்தது. அதை ''விவாகம் என்ற கண்ணாடி பீரோவிற்குள் வைத்துக் கொண்டால்தான் அது எடுபடும்.''

''இது கூட ஒரு தொழிலில் ஊறியவர் பேசினாற் போலவேதான் இருக்கிறது.''

அதுவே கல்யாணமாகாத தொழிலில் ஊறியவனாயிருந்தால் 'காதல் என்பது விலை மதிப்பு வாய்ந்தது. ''அதை விவாகம் என்ற சட்டத்திற்குள் அடைக்கக் கூடாது' என்பானோ என்னவோ?''

அவன் கோபம் வந்தவனைப் போல நடித்து— ''இன்றைக்கு என்ன வந்து விட்டது? என்னை அழ வைப்பதுதான் உன் நோக்கம் என்று வைத்துக் கொண்டிருக்கிறாயோ?'' என்றான்.

அவள் அவன் சட்டை பட்டனைக் கழற்றிக்கொண்டே ''ஏன் இப்படிச் சின்னப் பையனைப் போல கோபப்படுகிறீர்கள்?'' என்றாள். பகில் அவன் பேசவில்லை,

அவள் கிச்சுக்கிச்சு மூட்டினாள்.

''நான் கோபித்துக் கொண்டு விட்டேன்'' என்றான் அவன்.

''உங்கள் கோபத்தை எப்படிப் போக்கடிப்பதுன்னு எனக்குத் தெரியும்'' என்று அவள் முகத்தைக் கீழே தாழ்த்தினாள்.

ஃ ஃ ஃ

காலை மணி பத்தாயிற்று. போர்ட்டிகோவில் கார் டிக்கிக்குள் வேலைக்காரர்கள் சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். விஷ்ணுவர்தனன் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தார்.

சந்தனா உள்ளேயிருந்து ரவிதேஜாவின் கையைப் பிடித்து அழைத்து வந்துகொண்டே.

''போயிட்டுவரேன் டாடி'' என்றாள் தந்தையிடம்.

''ஜாக்கிரதையாய் போயிட்டு வாங்கம்மா. ஏதாவது தேவைப்பட்டால் போன் பண்ணுங்கள், நடுவே நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்''.



''சரி டாடி.''

ரவிதேஜாவும் விஷ்ணுவர்த்தனனிடம் விடை பெற்றுக் கொண்டான்.

சந்தனா போய் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்குப் பக்கத்திலேயே ரவிதேஜா உட்கார்ந்து கொண்டான்.

கார் புறப்படப் போனபொழுது விஷ்ணுவர்த்தனன் படியிறங்கி காரிடம் வந்தார்,

''பாரும்மா, நேற்று அப்பாயின்ட் ஆன ஆள் அங்கே உங்களுக்காகக் காத்துட்டிருப்பான். அவனைப் பார்த்தால் நம்பிக்கையானவனாய்த் தான் தோன்றுகிறது. இங்கிருந்து ஏதாவது தேவைப்பட்டால் அவனை அனுப்புங்கள்.

அவனுக்குக் காரோட்டக் கூட தெரியும்னு நினைக்கிறேன். நீ அதிகமாய் காரை ஓட்டாமல் அவனையே ஓட்டச்சொல்லு.''

சந்தனா கொஞ்சம் கோபம் வந்தவளைப் போல...

''நான் பெரியவளாகி விட்டேன் என்றும், காரை ஓட்ட எனக்கு நன்றாகத் தெரியும் என்றும் உனக்கு எப்பத்தான் நம்பிக்கை ஏற்படப் போகிறதோ தெரியவில்லை ''டாடி'' என்றாள்,

''இப்பக் கல்யாணமாகிவிட்டதில்லையாம்மா, நீ பெரியவளாகி விட்டாய்னு நம்பறேன்'' என்றார் அவர் சிரித்துவிட்டு,

''தாங்க்ஸ் டாடி, என் தீர்மானங்களை நானே எடுத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உனக்கு இப்பவாவது ஏற்பட்டதே'' அவள் காரை ஸ்டார்ட் பண்ணினாள்.

கார் கேட்டைத் தாண்டி கண் மறைவாகும் வரை அவர் அப்படியே நின்று கொண்டிருந்துவிட்டு பிறகு உள்ளே போய் விட்டார்.

''நம்ப தேநிலவு இப்படித் தொடங்கும்னு நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை'' என்றான் ரவிதேஜா சீட்டில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டே.

''எனக்கொரு வாக்குறுதி தருவீங்களா?''

''என்ன?''

''இப்போதிலிருந்து நாம்ப திரும்பி வரும் வரைக்கும் உங்களுக்குக் கண் தெரியவில்லை என்ற வருத்தம் உங்கள் வார்த்தைகளிலோ செய்கைகளிலோ தென்படக் கூடாது, அப்படி பிராமிஸ் பண்ணுங்க.''

ரவிதேஜா சிரித்துவிட்டு ''அங்கிருந்து திரும்பி வந்த பிறகு திரும்பவும் எனக்குக் கண் தெரியலையேன்னு வருத்தப் படலாம் என்கிறாயா?''

''எனக்கென்னவோ உங்களுக்கு அங்கேயே கண் பார்வை திரும்பி வந்து விடும் என்று தோன்றுகிறது.''

''அங்கே யாராவது சுவாமி இருக்காரா, மந்திர நீரைத் தெளித்து கண் பார்வையை வரவழைப்பதற்கு?''

''ஆசை இருப்பதில் தப்பில்லையே?''

''பெரிய பெரிய டாக்டர்களும், சூப்பர் ஸ்பெஷலிஸ்ட்டுகளும் ஸ்கானிங் பண்ணினாங்க, பரிசோதனைகள் பண்ணினாங்க.

இவங்கள்ளாம் பண்ணாத அற்புதம் அந்த உதகையில் எப்படி நடக்கும்?

''ஆசை மனிதனுக்கு பலம் தருகிறது, இனி இந்தப் பேச்சை விடுங்கள்.''



''சரி'' அவன் தன் சீட்டிலிருந்து பக்கத்தில் நகர்ந்து கொண்டு அவள் தோளில் தலையைச் சாய்த்துக்கொண்டு, ''உன்னை பார்பரா மேக்கலை கிட்னாப் பண்ணினாற் போல பண்ணணும்னு இருக்கு'' என்றான்.

''யாரந்த பார்பரா மேக்கல்? அதென்ன கதை?''

''ஒரு பெண்ணைக் கோடி ரூபாய்களுக்காக கிட்னாப் பண்ணினாங்க. அதை எங்க போலீஸ் ட்ரெயினிங்கில் ஒரு பாடமாய் சொல்லித்தருவாங்க. அவளே அதை ஒரு நாவலாய் எழுதியிருக்கிறாள்.''

''நீங்கள் இவ்வளவு ரொமான்ட்டிக் இல்லாதவர் என்று எண்ணியிருக்கவில்லை.''

அவன் சட்டென்று எழுந்து சரியாய் உட்கார்ந்து கொண்டு—''ஏன்...ஏன்...எதுக்கு?'' என்றான்.

''உங்களோடு சேர்ந்து முதல் முதலாக இப்படி சமுத்திரப் பக்கமாய் போய்க்கொண்டிருக்கும்போது, நீங்கள் பயங்கரமான கதைகளையும், கிட்னாப்களையும் பற்றித்தான் பேசுவீர்களா?''

அவன் சிரித்துவிட்டு—''ஐயாம் சாரி'' என்றான். கார் வேகத்தை மேற்கொண்டது.

## 16

பஸ் ஸ்டாண்டில் இறங்கி விலாசத்தைக் கையில் வைத்துக்கொண்டு [illegible] விசாரித்துக் கொண்டே நடந்தான்

மகரிஷி. சந்தடியை விட்டுக் கொஞ்சம் தொலைவிற்கு வந்ததுமே அங்கிருந்த அமைதி அவன் களைப்பைப் போக்கிற்று. சுற்றிலும் மலைகள், எங்கு பார்த்தாலும் பசுமை!

சுமார் ஒரு மணி நேரம் நடந்ததும் அவன் கெஸ்ட் ஹவுசிற்கு வந்து சேர்ந்தான். அங்கே வேலை பார்த்து கொண்டிருந்த சலமய்யனிடம் தான் யார், எதற்காக வந்திருக்கிறேன் என்று சொன்னதுமே—''ஆமாம் தம்பீ, நீங்க வரப்போவதாய் சொன்னாங்க, என்னோடு வாங்க'', என்று அவுட் ஹவுசிற்கு அழைத்துச்சென்று, அவன் சாமான்களை அங்கே வைத்தான்.

சலமய்யனின் மனைவி அவனுக்கு காபி கொண்டு வந்து கொடுத்தாள். குடித்ததும் அவுட் ஹவுசிற்கு முன்னாலிருந்த புல்வெளியில் போடப்பட்டிருந்த பெஞ்சில் வந்து உட்கார்ந்துக் கொண்டான். அவனுக்கு சரியாய்ப் புரியவில்லை. 'தன் மகளும் மருமகனும் தேனிலவுக்கு வந்தால், அதில் அவன் செய்யவேண்டியது என்னவிருக்கும்?

அவனுக்கு அந்த இடம் மிகவும் பிடித்துவிட்டது. சிறிய மலை, மலையின் மீது கெஸ்ட் ஹவுஸ், சுற்றிலும் மரங்கள், குளிர்ந்த காற்று...முக்கியமாய் பட்டினத்தின் இரைச்சல்களும், கலப்படமான காற்றும் இங்கில்லை. அது அவன் மனதிற்கு அமைதியைத் தந்தது.

செய்ய வேண்டிய வேலை எதுவாய் இருந்தால்தான் என்ன என்றெண்ணிக் கொண்டான். சந்தனாவைப் பற்றிய விவரங்களைத் தன் நண்பன் அனுப்பினால் நல்லது தான். இல்லாவிட்டால் தான் இங்கே தேடலாம். அதுவரை இந்த மூலைக்கு வந்து போலீசார் தன்னைப் பிடித்து விடுவார்கள் என்ற பயம் மட்டும் இல்லை.



தற்காலிகமாய் மனதிலிருந்த உணர்ச்சிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவன் அந்த இயற்கைச் சூழ்நிலையில் ஒன்றிப்போய் விட்டான். அந்தச் சமயத்தில் போர்டிகோவில் கார் வந்து நின்றதையோ, அதிலிருந்து விஷ்ணுவர்த்தனின் மகளும், ரவிதேஜாவும் இறங்கியதையோ அவன் கவனிக்கவில்லை. கதவைச்சாத்திய சப்தத்தைக் கேட்டுவிட்டு திடுக்கிட்டுப் போய் அந்தப் பக்கமாய் திரும்பிப் பார்த்தான்.

போர்ட்டிகோவில் கார் நின்றிருந்தது. சட்டென்று எழுந்து மளமளவென்று அந்தப் பக்கமாய்ப் போனான். அதற்குள் சலமய்யன் டிக்கியைத் திறந்து சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தான். டிரைவிங் சீட்டிலிருந்து இறங்கிய சந்தனாவை மகரிஷி முதலில் பார்க்கவில்லை. திறந்திருந்த டிக்கி இருவருக்குமிடையே குறுக்காய் மறைத்துக்கொண்டிருந்தது. கணவனை இடது பக்கமாய் கீழே இறக்கச் செய்வதற்காக அவள் காரின் பின்பக்கமாய் வந்தாள். அந்த சமயத்தில் சலமய்யன் சந்தனாவிடம்-'' அவர்தாம்மா ராஜுபாபு அனுப்பி வச்சிருக்கும் ஆள்'' என்று காட்டினான்.

சந்தனா திரும்பி அவனைப் பார்த்தாள்.

அந்த சமயத்தில் அவனும் அவளை நெருங்கினான். அவ்வளவுதான்...

அவளைப் பார்த்ததுமே அவன் சிலையாய் அப்படியே நின்றுவிட்டான். ஒரு நினைவு அலை வெள்ளமாகி சமுத்திர நீரையும் மீறிக்கொண்டு விர்விர்ரென்று வந்து கரையைத் தொட்டாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

திடீரென்று அவன் கண் முன்னாடி ஆயிரக்கணக்கான ஒளி வெள்ளங்கள் பிரதிபலித்தன.

ச...ந்...த...னா...!

ராட்சசன் தூக்கிக்கொண்டு போய்விட்ட காதலியை சப்த சமுத்திரங்களைத் தாண்டி, ஆரண்யங்களைக் கடந்து, ஒற்றை ஸ்தம்பத்து மாடியில் ஏறி, முதல் முதலாக பிரிவிற்கப்புறம் சந்தித்தாற்போன்ற உணர்ச்சி!

அவன் தன் நிலைமையை மறந்துவிட்டான். சுற்றுச் சூழ்நிலையை மறந்தான். அவளைத்தவிர எதுவுமே தென்படவில்லை. அவன் அவளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தான்.

சரியாய் அந்தச் சமயத்தில்தான் அவள் மார்பின் மீது மினுமினுத்த தாலிக்கயிறு அவனை ஓரடி பின் வாங்கும்படி செய்தது.

வசந்தம் வந்தது. ஆனாலும் லட்சியம் நினைவிற்கு வந்தது. லட்சியம்......

அவளைத் தான் மணந்துகொள்ள வேண்டும் என்ற யோசனை அவனுக்கு என்றுமே இருந்ததில்லை. "பார்த்துத் திருப்தியடைய வேண்டும் திருப்தியடைந்த பிறகு தூக்கு மேடை ஏற வேண்டும்"—என்ற யோசனை ஒன்று தான். அதுதான் லட்சியம்.

அவள் பிறர் உடைமை என்ற உண்மை அவனைச் சாட்டையால் அடித்து எச்சரித்தது. அவன் முன்நோக்கி நகர்ந்தான்.

அதற்கும் முன்பே அவள் தேறிக் கொண்டாள். கிட்டேவந்துக் கொண்டிருந்த அவனைப்பார்த்து-மகரிஷி, நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று வியப்போடு கேட்டாள். கரையைச் சேரப்போன சின்ன அலையைப் பெரிய அலை விழுங்கிவிட்டாற்போல, அவன் சந்தோஷத்தை, அவளுக்கு வேலைக்காரனாக நியமிக்கப் பட்டிருக்கிறோம் என்ற உணர்ச்சி விழுங்கிவிட்டது.

உதட்டில் முறுவலை உண்டாக்கிக்கொண்டு-"உங்களுக்காக அப்பாயின்ட் ஆகியிருப்பவன் நான்தான்" என்றான்.



"வாட்?" அதிர்ந்துவிட்டான் அவன். ஒரு நல்ல சிநேகிதனை வேலைக்காரரின் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க அவன் பண்பு இடங்கொடுக்காததால் அவனைக் குழப்பத்துடன் பார்த்து—"உனக்கு இந்தநிலை ஏன் ஏற்பட்டது?" என்று கேட்டான் வியப்போடு. சட்டென்று என்ன பதில் சொல்வதென்று அவனுக்குப் புரியவில்லை.

தலையைத் திருப்பிக் கொண்டே—"அதையெல்லாம் அப்புறமாய் சாவகாசமாய் பேசிக்கொள்ளலாம். அது சரி, உங்கள் கணவர் எங்கே?" என்று கேட்டுக் கொண்டே கார் கதவைத் திறக்கப் போனான்.

"நான் அழைச்சுட்டு வரேன். இந்த ப்ரீப்கேசை உள்ளே எடுத்துட்டுப்போ" என்று ஒரு ப்ரீப் கேசைத் தந்தாள். அவன் அதை எடுத்துக்கொண்டு கெஸ்ட்ஹவுசிற்குள் நடந்தான். உள்ளே அறைகளில் சாமான்கள் எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, அவன் திரும்பி வெளியே வந்தபோது கங்கம்மாள் பிளாஸ்கையும் பொட்டலங்களையும் எடுத்து வந்தாள். அவன் அவைகளை வாங்கி டிராயிங் ரூமிலிருந்த மேஜை மேல் அடுக்கி வைத்தான்.

அவன் இன்னும் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் பார்த்த காட்சியிலிருந்து தேறிக்கொள்ளவில்லை. தன்னைத்தான் சமாளித்துக் கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தபொழுது அந்தக் காட்சி கண்ணில்பட்டது

கணவனின் கையைப் பிடித்து அழைத்து வந்து கொண்டிருந்தாள் அவள் கைகளைத் தடவிக் கொண்டே நடந்து கொண்டிருந்த கணவனை காட்டேஜிற்குள் அழைத்துவந்து கொண்டிருந்தாள்.

அவனுக்கு முதலில் புரியவில்லை. அதற்குள் பின்னாலிருந்து சலமய்யன் கூட பக்கத்தில் வந்து நின்றதால்—"ஐயாவுக்கு என்னவாயிடுத்து?" என்று கேட்டான்.

''ஐயோ, உங்களுக்கு இன்னும் தெரியாதா தம்பி அவருக்குச் சமீபத்தில்தான் கண் பார்வை போய்விட்டது. அதனால்தான் மன நிம்மதிக்காக இப்படி வந்திருக்காங்க'' என்று சொன்னான் சலயம்மன்.

அதிர்ந்துவிட்டான் மகரிஷி.

சந்தனாவின் கணவன் ஒரு குருடனா.

அவன் இதயத்தை அழுத்தினாற்போல ஒரு மாதிரியாகி விட்டது. எதற்குமே பயன்படாத ஒரு புற்பூண்டைக்கூட பனித்துண்டு கழுவுகிறது. காரிருளைக் கூட நிலாக் வெளிச்சத்தால் நிரப்புகிறது. அப்படிப்பட்டது அன்பே! தவிர, ஆதரவில்லாத ஒரு பெண்ணிற்கு இப்படிப்பட்ட தண்டனையைத் தரக்கூடிய உரிமை அந்த கடவுளுக்குக்கூட ஏது என்றெண்ணிக் கொண்டான்.

கசிந்த கண்களின் வழியாக அத்தம்பதிகள் தன்பக்கமாய் நடந்து வந்ததைப் பார்த்தான். கண்ணில் தூசி விழுந்து விட்டாற்போல அவன் கண்களைத் துடைத்துக் கொண்டான். துடைத்துக்கொண்டு நிமிர்ந்து பார்ப்பதற்குள் அவர்கள் உள்ளே போய் விட்டிருந்தார்கள்.

அங்கே இருந்துகொண்டு செய்ய வேண்டிய காரியம் எதுவுமில்லை என்றாற்போல அவன் கெஸ்ட் ஹவுசிலிருந்து வெளியே வந்துவிட்டான். மாலை ஐந்தாயிற்று. கெஸ்ட் ஹவுசிற்கு தொலைவில் இருந்த கல்மேடையின் மீது அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

சந்தனாவும் அவள் கணவனும் வெளியே வரவில்லை. பிற்பகலில் சலமய்யனே அவர்களுக்குச் சாப்பாட்டைக் கொண்டுவந்து உள்ளே கொடுத்தான் மிகச் சங்கடமான நிலைமை. நினைத்தது வேறு, நடந்துக் கொண்டிருப்பது வேறு. தானே கேள்வி கேட்டுக் கொண்டான். நேற்றுவரை மனதை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்த ஆசை இப்பொழுது அர்த்தமில்லாததாய் தென்பட்டுக் கொண்டிருந்தது. இப்படிப்பார்த்ததில் மனதின் எந்த மூலையிலாவது சின்ன ஆசை கூட இருக்குமா? அவளுக்கு விவாகம் நடக்காமலிருந்தால் அவன் இன்னும் சந்தோஷமாய் இருந்திருப்பானா? பதில்லாத கேள்விகள்! அர்த்தமில்லாத பதில்கள்!



அவன் எழுந்து சலமய்யனிடம் அரைமணியில் வந்து விடுகிறேன் என்று சொல்லி விட்டு மார்க்கெட்டிற்குப் போனான். அங்கிருந்து வர்மாவுக்குப் போன் பண்ணினான். மறுமுனையிலிருந்து வர்மாவின் குரலைக் கேட்டதும்—''சந்தனாவைப் பார்த்துவிட்டேன்.'' என்றான். வர்மா திகைத்துப் போய்—''பார்த்துவிட்டாயா? எங்கே?'' என்று கேட்டான்.

''நான் வேலை செய்த கெஸ்ட் ஹவுஸின் உரிமையாளருடைய மகள்தான் சந்தனா. கணவோடு சேர்ந்து இங்கே வந்திருக்கிறாள்.''

''அடடா! அவளுக்குக் கல்யாணமாயிடுச்சா?''

மகரிஷி லேசாய் சிரித்தான். ''அவளுக்குக் கல்யாணம் ஆனதும் ஆகாமல் போவதும் இங்கே சம்பந்தமில்லாத விஷயங்கள் அல்லவா வர்மா? நானும் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால் அப்புறமாய் யோசித்துப் பார்த்த பொழுது அந்த விஷயத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லையென்று தோணிற்று. அது சரி, இப்ப நான் எதுக்குப் போன் பண்ணினேன் என்றால், நீ அங்கே இன்னும் அந்தப் பெண்ணின் விலாசத்தைத் தேடியலைந்து கொண்டிருப்பாயோ என்னவோ, அது தேவையில்லைன்னு சொல்வதற்காகத்தான்''

''சரிவிடு, தேடப்போன மூலிகை காலில் தட்டுப்பட்டாற்போலத்தானே?''

''நான் இன்றுமாலையே புறப்பட்டு வந்து விடலாம்னு இருக்கேன்.''

''ஏன்?'' புரியாமல் கேட்டான் வர்மா.

ஆமாம். நான் இங்கே இருந்துகொண்டு என்னத்தைப் பண்ணிவிடுவேன்? அவளைப்பார்க்க விரும்பினேன். பார்த்துவிட்டேன்.''

"ஆனால், இங்கே வந்தால் ஆபத்து மகரிஷி.''

''என்ன ஆபத்து? போலீசாரிடமிருந்து தானே? நான் போய் போலீசாரிடம் சரண்டராகி விடுகிறேன்''

"இவ்வளவு கஷ்டப்பட்டு இவ்வளவு முயற்சிகள் பண்ணியதெல்லாம் சரணடராகிப் போய்விடுவதற்காகத் தானா?''

''பின்னே என்ன செய்யச் சொல்கிறாய்? அந்த கெஸ்ட் ஹவுசிற்கு வெளியே வராந்தாவில் உட்கார்ந்து அந்த தம்பதிகள் எப்படி இருக்காங்களோன்னு ஊகித்துக் கொண்டே காலத்தைக் கழிக்கச் சொல்கிறாயா? இல்லா விட்டால் கஷாய வஸ்திரம் போட்டுக்கொண்டு தாடியை வளர்த்துக் கொண்டு இமயமலைக்குப் போகச் சொல் கிறாயா? இல்லை வர்மா, அந்த ரெண்டையுமே என் னால் பண்ண முடியாது. அதைக்காட்டிலும் ஜெயிலுக்குத் திரும்பிப் போய் விடுவதே எனக்குச் சந்தோஷமா யிருக்கும்.''

வெகுநேரம் மௌனமாயிருந்து விட்டு வர்மா— ''உன்னிஷ்டம்'' என்றான்.

மகரிஷி போனை வைத்துவிட்டுத் திரும்பவும் கெஸ்ட் ஹவுசிற்கு வந்தான் அவன் மனம் இப்பொழுது அமைதி யாய் இருந்தது. தான் செய்ய வேண்டும் என்றெண்ணிய காரியத்தை செய்துவிட்டான். ஆசை நிறைவேறி விட்டது. இப்பொழுது மரணம் கூட அவனை பயமுறுத்த வில்லை. முக்கியமாய் அதுவரை இருந்து வந்த அதிருப்தி இப்பொழுது இல்லை.



அவ்வாறு யோசித்துக்கொண்டே அவன் கெஸ்ட் ஹவுசிற்குத் திரும்பி வந்தபோது, வெளியே புல்வெளி யிலிருந்த சிமெண்ட் பெஞ்சின் மீது சந்தனா உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவனைப்பார்த்துவிட்டு, ''வா மகரிஷி, [illegible] எங்கேயோ வெளியே போனதாய் சலமய்யன் சொன் னான்'' என்றாள். அதற்குள் சலமய்யன் கார்டன் சேரைக் கொண்டு வந்து அங்கே போட்டான்.

''உட்கார்'' என்றாள்.

''நீங்க அங்கே உட்காருங்க, நான் இந்த புல் தரையில் உட்கார்ந்து கொள்கிறேன்''—என்றான்.

''நான்சென்ஸ்'' என்றாள் சந்தனா. ''நீங்களாவது? நாம் ஒரே கிளாஸில் சேர்ந்து படித்தபொழுது இப்படித் தான் [illegible]த்தைக் காட்டிக் கொண்டோமா? பரவா யில்லை, வா, உட்காரு'' என்றாள்.

அவன் சங்கடத்துடன் இன்னும் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தான் அவள் அதற்குமேல் அந்த விஷயத்தை நீட்டாமல், தானே போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு—''உம், இப்பச்சொல்லு. என்ன விசேஷங்கள்? நம் கிளாஸ்மேட்டுங்க யாராவது தென் பட்டதுண்டா?'' என்று கேட்டாள்.

''சுமித்ரா துபாயில் இருக்கிறாள், அவ்வளவு தான் தெரியும்.''

ஆமாம், எனக்கும் தெரிந்தது. ஆனால் அட்ரெஸ் இல்லை. உன் க்ளோஸ் ஃப்ரெண்ட் வர்மா எப்படி இருக்கிறான்?''

''நன்றாகவே இருக்கிறான். இன்னும் கல்யாணம் பண்ணிக்கவில்லை.''

''ஆமாம், கேட்க மறந்துட்டேன். இவ்வளவு படித்து விட்டு இந்தச் சின்ன உத்யோகத்துக்கு ஏன் வந்தாய்?'' என்றாள் அவள்.

அப்போதைக்கு எதையாவது ஒன்றைச் சொல்லித் தப்பித்துக் கொண்டால் போதும் என்று தோன்றிற்று அவனுக்கு. ''ஒரு ப்ரைவேட் கம்பெனியில் வேலைப் பார்த்துட்டிருந்தேன். நஷ்டம் வந்துவிட்டதாய்ச்சொல்லி கம்பெனியை மூடிட்டாங்க. வேறு வேலை கிடைக்கிற வரைக்கும் ஏன் சும்மா உட்கார்ந்திருக்கணும்னுதான்... அதோடு கூட எனக்கு இந்தப் பகுதிகளை ரொம்பப் பிடிக்கும்.''

''ஆமாம், கல்யாணம் என்றதும் ஞாபகம் வருகிறது நீ கல்யாணம் பண்ணிக்கவில்லையா?

அவன் வினாடி நேரம் தடுமாறினான். என்னத்தைச் சொல்வது? மனைவியைக் கொலை செய்ததாய்ச் சொல்வதா? அந்தக் குற்றத்திற்கு தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டதாய்ச் சொல்வதா? அவளைப் பார்ப்பதற்காக ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டதாய்ச் சொல்வதா? தப்பித்துக்கொண்டுவந்து, என் மனைவியின் காதலனை ஓட்டல் மாடியிலிருந்து தள்ளிவிட்டதாய்ச் சொல்வதா? எதைச் சொல்வது?

அவன் மௌனத்தை வேறு விதமாய் புரிந்து கொண்டு விட்ட சந்தனா சிரித்துக்கொண்டே—''ஒரு நல்ல பெண்ணாய்ப் பார்த்து நானே ஏற்பாடு செய்கிறேன். ஆமாம், பொண்ணு...சிவப்பாய் ஒல்லியாய் இருக்கணுமா? அல்லது வெள்ளையாய் குண்டாய் இருக்கணுமா? அல்லது கருப்பாய் அழகாய் இருக்கணுமா?'' என்றாள் குறும்பாய். அவளுக்கே உரிய குறும்புத்தனம் காலேஜ் நாட்களை நினைப்பூட்டவே, அவன்மௌனத்தைத் தற்காலிகமாய் உதறியெறிந்து விட்டு—'' ஊஹூம்...



[illegible] குள்ளமாய், எலும்புக் [illegible] இருக்கணும்'' என்றான். [illegible] அவன் அச்சிரிப்பை [illegible] பார்த்துக்கொண்டிருந்தான்.

[illegible] பார்த்ததை கவனித்து [illegible] அடக்கிக் கொண்டே—'' ஏனிப்படி புது [illegible] பார்க்கிறாய்?'' என்றாள்.

''இன்னும் நீ பழைய சந்தனாவாகவே இருக்கிறாய். [illegible] இல்லை'' என்றான். [illegible] மாறிவிட்டது. முகத்திலிருந்த [illegible]

[illegible] ''ஐயாம் சாரி'' என்றான். [illegible] நிமிர்ந்து, ''எதற்கு?'' என்றாள்.

''[illegible] கணவருக்கு...'' [illegible] முடிக்கவில்லை.

[illegible] பெருமூச்சு விட்டு [illegible] நடக்க வேண்டியது [illegible] என்றான். ''நினைவுபடுத்தி [illegible]?''

''[illegible] நீ புதுசாய் வருத்தப்படுத்த [illegible]?''

அவன் [illegible] மாற்ற எண்ணி— ''[illegible] ப்ரோக்ராம்ஸ் என்னென்ன, [illegible] போகணும் என்று முன் கூட் [illegible] நான் உடனுக்குடன் எல்லா [illegible] பண்ணிவிடுவேன்'' என்றான். [illegible] என்று தெரிந்த பிறகு அவனுக்கு

இப்பொழுது தான் என்ன உத்யோகம் செய்யவேண்டும் என்று கொஞ்சம் புரிந்தது.

''அதிகமாய் வெளியே சுற்றணும் என்று கூட இருக்காது அவருக்கு. ஒருக்கால் அவரை எங்கேயாவது வெளியே அழைத்துக்கொண்டு போனாலும் கூட அங்கே தனக்குப் பார்வை கிடையாது என்ற விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு வருந்துவார். அதனால் காலை வேளையில் மட்டும் கொஞ்சம் இப்படியே வெளியே கூட்டிட்டுப் போனால் போதும்''

அவள் குரலில் தென்பட்ட அந்த கொஞ்சம் விரக்திக்கே அவன் இதயத்தை முள்ளால் குத்தினாற்போல வருந்தினான். அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஐந்து நிமிஷத்திற்கு முன்னால் தான் அவன் நாளைக்கே திரும்பிப் போய் விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் இப்பொழுது இவளோடு அப்படிப் பேசிவிட்டானே, இதென்ன? காதலித்தவர் எதிரே இருந்துவிட்டால் மனதிற்கும் மூளைக்குமுள்ள சம்பந்தமே அறுப்பட்டுப் போய் விடும் என்றுச் சொல்கிறார்களே அது இதைத்தான் போலும்!

அவள் எழுந்திருந்தாள். ''அவர் தயாராகிவிட்டாரான்னு பார்க்கிறேன். போகலாம்னு சொன்னால் இப்படியே மலைக்கோடி வரைக்கும் போய்விட்டு வரலாம். காரை ரெடியாய் வைத்திரு. உனக்கு டிரைவிங் தெரியுமா?'' என்றாள்.

மகரிஷி சிரித்து விட்டு— ''உங்கப்பா எனக்கு இங்கே உத்யோகம் தந்ததே டிரைவராய் தான்'' என்றான். அவளும் முறுவலுடன் தலையை ஆட்டிவிட்டு, அங்கிருந்து எழுந்து கெஸ்ட் ஹவுசிற்குள் போய்விட்டாள்.

அவன் எழுந்து சலமய்யனின் வீட்டிற்கு வந்தான். பழங்களையும், காபி பிளாஸ்க்கையும் காரில் வைக்கச்



சொன்னான். காரை ஷெட்டிலிருந்து எடுத்து போர்ட்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தினான்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு உள்ளே அறைக் கதவைத் திறந்த சப்தம் கேட்டது. அடென்ஷனுக்கு வந்தான். உள்ளேயிருந்து கணவன் மனைவியரின் சம்பாஷணை காதில் கேட்டது. ''எங்கே போகிறோம் இப்பொழுது?'' என்று கேட்கிறான் கணவன்.

''உங்களிஷ்டம். நீங்கள் எங்கே போகலாம் என்கிறீர்களோ அங்கே'' என்கிறாள் சந்தனா. அவர்கள் வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் போலும். வார்த்தைகள் இன்னும் கிட்டத்திலிருந்து கேட்கத் தொடங்கின.

''மணி என்ன?''

''ஐந்தரை'' என்றாள் சந்தனா.

மகரிஷி காரின் பின்கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். சந்தனாவின் கணவன் வாசலை விட்டு வெளியே வந்தான்.

அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனின் வெளிச்சத்தில் அவன் முகம் மஞ்சளாய் மின்னிக் கொண்டிருந்தது. அவன் மேலும் இரண்டடிகள் எடுத்துவைத்துபடி திரும்பி காரை நோக்கி வரத் தொடங்கினான். கருப்புக் கண்ணாடியணிந்து கொண்டிருந்த அவன் முகம் இப்பொழுது தெளிவாய் தென்பட்டது.

மெல்ல மெல்ல மேகங்கள் விலகி, மறைவிலிருந்த சந்திரன் தெளிவாய்த் தெரியத் தொடங்கினாற்போல மகரிஷியின் மனதின் அடியாழத்திலிருந்து ஒரு உண்மை வெளிப்பட்டு பிரகாசமான வெளிச்சத்தில் அவனைச் சுட்டெரித்தாற்போல ஆயிற்று.

அவன் ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டான்.

இதயத்தில் எங்கோ இடி விழுந்தது.

தொடர்ந்து ஆயிரமாயிரம் குண்டுகளின் வெடிப்பு!

உலகமே தலைகீழாகி விட்டாற்போன்ற உணர்ச்சி! அவன் சிலையாகி சலனமில்லாதவனாகி...ஆயிரமாயிரம் அணுக்களாய்ப் பிளந்துப் போனான். சூனியமாய் எஞ்சி நின்றான்.

''மகரிஷி! மீட் மை ஹஸ்பென்ட்......ரவி......

ரவிதேஜா...ஐ பி எஸ்.'' சந்தனா பரிச்சியம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

தன் மனைவியின் காதலன்!

ரவி!

தன் காதலியின் கணவன்!

ரவிதேஜா!

யாரை அவன் ஓட்டல் பால்கனியிலிருந்து பிடித்துத் தள்ளினானோ—அந்த ஆள்!

கடந்ததையெல்லாம் மறந்துபோய் தான் யாரை ஆராதிக்க வேண்டும் என்றெண்ணியிருந்தானோ அவன், ஸ்ரீவாணியின் காதலன் ரவி! இப்பொழுது என்ன செய்ய வேண்டும் அவன்?

அவன் மனநிலை அவனுக்கே புரியவில்லை.

இவ்வுலகத்தில் தான் துவேஷிக்கும் ஒரே ஆள்... இந்த உலகத்தில் தான் உயிருக்கும் மேலாய் நேசிக்கும் ஒரே ஒருத்தியின் பிராணநாயகன்!

விதியின் நாடகம் என்றால் இதுதான் போலும்!

அவன் தன் சஞ்சலங்களையெல்லாம் அரும்பாடுபட்டுத் தனக்குள் அடக்கிக் கொண்டான். சாதாரணமாய் இருக்க முயன்றான். சந்தனா அவனுக்காகக் காரின் மறுபக்கத்துக் கதவைத் திறக்கப் போனாள்.

''காரில் வேண்டாம். இருவரும் நடந்துபோகலாம்'' என்றான் ரவிதேஜா.

''சரி, உங்களிஷ்டம்'' என்றவள் அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தவளாய்! 'ஆங், சொல்ல மறந்துட்டேனே. இவன் என் கிளாஸ் மேட் மகரிஷி. ''என்றாள் பரிச்சியம் பண்ணி வைப்பது போல.

ரவிதேஜா கையை நீட்டி—''உங்களைப் பற்றி காலையிலேயே சந்தனா சொன்னாள்'' என்றான். மகரிஷி அக்கையைப் பெற்றுக்கொண்டு குலுக்கிக் கொண்டே ''க்ளாட் டு மீட் யூ சார்'' என்றான். தள்ளிவிட்ட உடலைத் திரும்பவும் தொட்டது அவனுக்கு ஏதோ போலிருந்தது. இந்தக் கைதானே தன் மனைவியின் தோள்களைச் சுற்றிலும் பாம்பாய் வளைந்திருந்திருக்கும் என்ற யோசனையால் அவன் உடம்பு சிலிர்த்தது.

''நாம் போகலாமா?'' என்றாள் சந்தனா.

''ஷ்யூர்'' என்றான் ரவி. அவ்விருவரும் ஒருவர் கையை இன்னொருவர் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்கள். மகரிஷி அப்படியே நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

# 17

அன்றிரவு அவனுக்குத் தூக்கம் வராமல் அப்படியும் இப்படியுமாய் புரண்டான். அதற்குள் அவன் அங்கே வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. அன்று மாலையில் அவர்கள் மூவரும் காரில் அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்த ஒரு கோவிலுக்குப் போனார்கள். திரும்பி வரும்போது வழியில் மலைத் திருப்பத்தில் காரை நிறுத்தச் சொன்னாள் சந்தனா.

மகரிஷி காரை விட்டிறங்கி ரவிதேஜா உட்கார்ந்து கொண்டிருந்த பக்கத்துக் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டு—''இறங்குங்க'' என்றான்.

ரவிதேஜா இறங்கியதும் அந்தப் பக்கத்திலிருந்து சந்தனா அவனிடம் வந்து'' இப்படியே நடக்கிறீங்களா?''— என்றாள்.

''நடக்கிறேன். நடக்க வைப்பதற்குத்தான் நீ இருக்கிறாயே'' என்றான் ரவி.

அவள் கணவனின் கையைப் பிடித்துக்கொண்டவள், அந்தச் சூழ்நிலைக்கு மெய்மறந்து போய் தன்னையறியாமல் ''எவ்வளவு அழகாயிருக்கிறது'' என்றாள். ரவி லேசாய் சிரிக்க முயன்று—''எனக்குக்கூட நன்றாய் இருக்கிறது. பார்க்க முடியவில்லை. ஆனால் காற்றின் குளிர்ச்சி தெரிகிறது. திடீரென்று கண்பார்வை திரும்பி வந்து



இந்த இயற்கைச் சூழ்நிலைகளையெல்லாம் பார்க்க முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்னு தோணுது'' என்றான்.

அந்த வார்த்தை அங்கிருந்த இருவர் உள்ளங்களிலும் வெவ்வேறு விதமாய் தாக்கிற்று. இருவரும் மறைமுகமாய் இதற்குக் காரணம் தாம்தான் என்று உணர்ந்து துடிதுடித்துப் போனார்கள்.

ரவிதேஜா அச்சூழ்நிலையை எளிதாக்க முயன்று இப்படிக் கைகோர்த்துக்கொண்டு உன்னோடு சேர்ந்து சப்தபதி இல்லாவிட்டாலும் சதிபதியாய் நடக்க வேண்டும் போலிருக்கு'' என்றான்.

அந்த வார்த்தை அவளிடமிருந்த பச்சாதாப உணர்ச்சியை உதறித் தள்ளிவிட்டு முகத்தில் முறுவலை வரவழைத்தது.

இதையெல்லாம் நினைத்துக் கொண்டுதான் தூக்கம் வராமல் எழுந்து சால்வையைப் போர்த்திக் கொண்டு வெளியே வந்தான் அவன். கடல் மட்டத்தை விட மிக உயரமாய் இருந்ததால் குளிர்க்காற்று அதிகமாய் இருந்தது அவன் வந்து வெளியே தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டான்.

கெஸ்ட் ஹவுசைச் சுற்றிலும் காவல் காத்துக் கொண்டிருந்த சலமய்யன் அந்தப் பக்கமாய் வரவே, அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த மகரிஷி கண்ணில் பட்டான்.

அவனைப் பார்த்து ஆச்சரியமடைந்தவனாய் ''என்ன தம்பி, இங்கே உட்கார்ந்திருக்கீங்க?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை தாத்தா, தூக்கம் வரலை'' என்றான் அவன்.

''அதற்காகப் பனியில் வந்து உட்காருவாங்களா?''

''ரொம்பக் குளிரவில்லை தாத்தா''

''இந்த மலைப் பனிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது தம்பி. குளிர் இல்லாதது போலவே இருக்கும். ஆனால் தலையில் பிடித்துக்கொண்டதானால் மட்டும் லேசில் விடாது. ஜுரத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்.''

''பின்னே நீ இப்படிச் சுற்றிக்கொண்டிருக்கிறாயே தாத்தா?''

''எங்களுக்கென்ன வந்துச்சு தம்பி? இங்கேயே பொறந்து வளர்ந்தவங்க. பழக்கப்பட்டுப் போயிடுத்து.''

''பரவாயில்லை. எனக்கு இங்கே உட்கார்ந்திருந்தால்தான் அமைதியாய் இருக்கு.''

சலமய்யன்கூட அவனுக்கெதிரே புல் தரையில் உட்கார்ந்துகொண்டு ''புது இடமில்லையா, அதான் தூக்கம் வந்திருக்காது தம்பி'' என்றான்.

அவ்வளவு பிடித்திருந்தும் கூட கொஞ்சமும் அதிகாரத்தைக் காண்பிக்காமல் தன்னோடு ஒரு வேலைக்காரனைப் போலவே பணிவோடு நடந்துகொண்ட மகரிஷியின் மீது சலமய்யனுக்கு அன்பு பெருகிற்று.

சலமய்யனுக்கு ரவிதேஜாவை மட்டும் ஏனோ பார்த்த முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போய் விட்டது.

அதற்குக் குறிப்பிட்ட காரணம் என்று எதுவும் இல்லை. சந்தனா அவனை ஏன் கல்யாணம் பண்ணிக் கொண்டாள் என்றுதான் புரியவில்லை.

சலமய்யன் கொஞ்சநேரம் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு, பிறகு நிசப்தத்தைச் சிதறடித்தபடி



''என்னவோ, சின்னம்மாவைப் பார்த்தால் என் வயிற்றைப் பிசைந்தெடுக்கிறது'' என்றான்.

சந்தனாவைப்பற்றிய பேச்சு வந்ததும் மகரிஷி மெதுவாய் திரும்பிப் பார்த்தான். சலமய்யன் தொடர்ந்தான்.

''எவ்வளவு குறும்புபண்ணிட்டிருக்கும்! அந்தம்மா வந்து விட்டால் இந்த வீட்டிற்கே கல்யாணச்சந்தடி வந்து விட்டாற்போல் இருக்குமே. அப்படியிருந்தது எப்படி இளைச்சுப் போயிடுத்து!''

அவன் மௌனமாய் தூரத்திலிருந்த யூக்கலிப்டஸ் மரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். சலமய்யனின் குரலில் தென்பட்ட வேதனையைத் தாமும் கவனித்து விட்டாற் போல இரக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தன மரங்கள்.

திடீரென்று ஏதோ நினைவிற்கு வந்தாற்போல சலமய்யன் அவனை நெருங்கி வந்து, ஏதோ ரகசியம் சொல்வதுபோல சொன்னான்—''தம்பி, நீங்க ஐயாவின் சிநேகிதராமே? அந்தய்யா கண் குணமாகணும்னால் நான் ஒன்று சொல்றேன், கேட்பீங்களா?''

சட்டென்று அவனை நோக்கித் திரும்பினான் மகரிஷி. அவன் என்ன சொல்லப் போகிறான் என்று முதலில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அந்த கள்ளங்கபடமில்லாத வேலைக்காரனால் எந்தத் தீங்கையுமே யோசித்துப் பார்க்கத் தெரியாது என்ற உறுதி ஏற்பட்டதால்—'சொல்லு தாத்தா, சந்தனா என் உயிர் சிநேகிதி. அவள் வாழ்க்கை நன்றாயிருப்பதற்காக நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்'' என்றான்.

''ஒன்றுமில்லை தம்பி. இங்கே கிட்டத்தில் சேரி இருக்கிறது. அங்கே ராமராஜதொரைன்னு சேரித் தலைவர் ஒருத்தர் இருக்கிறார். அவர் இதுக்கு முன்னாடி

நிறையப் பேருக்கு குணமாக்கியிருக்கிறார். அவ்வளவு எதுக்கு? எனக்கு ஒரு தடவை பக்கவாதம் வந்து வலது காலும் வலதுகையும் விழுந்து விட்டது. அவர்தான் வந்து ஏதோ பச்சிலையை மூணு நாளைக்குத் தடவச்சொல்லித் தந்துட்டுப் போனார். அதைத்தடவிக்கிட்டதுமே மூணே நாளில் பழையபடி ஆயிட்டேன்.''

மகரிஷி ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். அவனுக்கு நம்பிக்கை இல்லை.

பக்கவாதம் வந்தவர்களுக்கும் விஷஜுரம் வந்தவர்களுக்கும் குணமாக்குவது வேறு. இந்த மேற்கு மலைப் பிரதேசங்களில் இப்படிப்பட்ட கிராமவாசிகள் நிறைய பேர் இருப்பதாய் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் குருடர்களுக்குப் பார்வையை வரவழைப்பது வேறு. அதிலும் மூளையில் அடிப்பட்டு ஆப்டிக் நரம்பு பாழடைந்து பெரிய பெரிய டாக்டர்களே கை விரித்துவிட்ட கேசில், மூலிகைகள் மூலமாய் குணமாக்குவது சாத்தியமல்ல.

ஆனால்,

என்னவோ, எந்த புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ?

அவன் சலமய்யனிடம் ''பலன் கிடைக்கும் என்கிறாயா தாத்தா?'' என்று கேட்டான்.

''நிஜந்தான் தம்பி! அவர் பிறவிக் குருடர்களைக் கூட நலமாக்கியிருப்பதாய் சொல்றாங்க'' என்றான் சலமய்யன். மகரிஷி யோசனையில் ஆழ்ந்தான்.

''நாளைக் காலையிலேயே அங்கே போகலாம்னு சந்தனாவிடம் சொன்றேன் தாத்தா. அந்த சேரிக்கு எப்படி போறதுன்னு வழி சொல்லு எனக்கு'' என்றான். சலமய்யன் சொல்லத் தொடங்கியபொழுது உள்ளேயிருந்து வீலென்று அலறல் கேட்டது.



இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள். எழுந்து கெஸ்ட் ஹவுஸை நோக்கிப் போகத் தொடங்கியபோது உள்ளேயிருந்து சந்தனாவின் கத்தல்கள் கேட்கத் தொடங்கின. அந்த நிசப்தத்தில் அவை பயங்கரமாய் கேட்டன.

## 18

சர்தார் அப்பாஸ் அலிகான் தனக்கு எதிரே உட்கார்ந்துக்கொண்டிருந்த இருவரையும் கண்கொட்டாமல் பார்த்தான்.

கள்ளக்கடத்தல் கும்பலில் அலிகானைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. தங்கக் கடத்தல்களில் அவனுடைய கை அவ்வளவு தூரம் ஓங்கியிருந்தது.

''அப்படீன்னால் அந்த ரவிதேஜாவுக்கு நீங்கள் ஓட்டலில் இருந்தது எப்படித் தெரிஞ்சதுன்னு உங்களால் ஊகிக்க முடியவில்லை என்கிறீங்க, அப்படித்தானே?'' என்றான் சர்தார்.

எதிரே இருந்த அவ்விருவரும் பேசவில்லை. அவர்களுள் ஒருத்தனின் பெயர் இப்ராஹீம். இன்னொருத்தனின் பெயர் சாஸ்திரி.

கொஞ்ச நேர நிசப்தத்திற்குப் பிறகு சாஸ்திரி குறுக்கிட்டு—''சார், அந்த போலீஸ் ஆபீசர் எங்களிடம் வந்த சமயத்தில் அங்கே தங்க பிஸ்கெட்டுகள் இருந்ததை ஊகித்திருக்கவில்லைன்னு நினைக்கிறேன்'' என்றான்.

சர்தார் அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு—'' ஏன், எதற்காக அப்படித் தோணிற்று?'' என்று கேட்டான்.

''அவன் போலீஸ் உடையில் இல்லை''.

''மஃப்டியிலும் உங்களை வேட்டையாடலாமே!''

''இல்லை சார்'' என்றான் இப்ராஹீம். ''அவன் உள்ளே வந்ததும் எங்களை மிரட்டி கட்டிலடியிலிருந்த தங்க பிஸ்கெட்டுகளைப் பார்த்த பிறகு கமிஷனருக்குப் போன் பண்ணினான். மறுமுனையிலிருந்த கமிஷனர் கூட ஆச்சரியப்பட்டுவிட்டார். அதைக்கொண்டு போலீசாருக்கு இந்த விஷயம் தெரியாது என்றும் இதெல்லாம் முன்னேற்பாடாய் நடந்த விஷயமில்லை என்றும் தோன்றுகிறது.'' சர்தார் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். நெருப்புக்குச்சியை ஆஷ்ட்ரேயில் போட்டுக்கொண்டே, ''ரவிதேஜாவின் மீது நீங்கள் பூந்தொட்டியை வீசியெறிந்ததுமே வெளியே ஓடி விட்டதாய் சொல்றீங்க.''

இருவரும் தலையாட்டினார்கள். இப்ராஹீம் சொன்னான். ''ஆமாம், நான் மாடிக்கு ஓடிப்போனேன். சாஸ்திரி கீழே ஓடினான். ரவிதேஜா என்னைத் துரத்திக்கொண்டே மாடிக்கு வந்தான். அங்கே வேறு யாரோ ஒரு ஆள் இருந்தான். அவன் ரவிதேஜாவைக் கீழே தள்ளிவிட்டான். நான் மளமளவென்று கீழே ஓடிப்போய் இருட்டில் மறைந்து கொண்டேன்.

சர்தார் இப்ராஹிமிடம் வந்துஓங்கி அவன்கன்னத்தில் அறைந்தான். ''லட்சக்கணக்கான விலை மதிப்புள்ள தங்க பிஸ்கெட்டுகளை அறையில் விட்டுவிட்டு ஓடிப்போனது போதாமல் இருட்டில் போய் ஒளிந்துகொண்டதாய் வேறு சொல்கிறாயோ?'' என்றான் கோபமாய்.

இப்ராஹீம் பதில் பேசவில்லை. சர்தாரை எதிர்த்துப் பேசினால் என்ன நடக்கும் என்று தெரியும் அவனுக்கு.



சாஸ்திரி தன் நாற்காலியில் லேசாய் நகர்ந்தவன் ''சார்'' என்றான். என்ன என்பது போல சர்தார் அவனைக் கடுகடுப்பாய் பார்த்தான்.

''நான் கீழே ஓடிப்போய் செடிகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டேன். எனக்குப் பின்னால் ரவிதேஜா வரவில்லை. அவன் இப்ராஹீமைத் துரத்திக்கொண்டே மாடிக்குப் போய்விட்டான் என்றெண்ணிக் கொண்டிருக்கையில், மாடியிலிருந்து ரவிதேஜா சவமாய் கீழே விழுந்துவிட்டான். இப்ராஹீம்தான் தள்ளியிருப்பான்னு நினைத்தேன். ஜனங்கள் எல்லோரும் ரவிதேஜாவைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டிருந்தபோது நான் திரும்பவும் அந்த அறைக்குப் போனேன். ஆனால் அது ஆட்டோமேட்டிக் லாக் சிஸ்டமாயிருந்ததால் கதவு தாழிட்டுக் கொண்டுவிட்டது. அதன் சாவி உள்ளேயே தங்கிவிட்டது. எனக்கு என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை. அதற்குள் கமிஷனர் போலீசாருடன் வந்ததைப் பார்த்துவிட்டு அங்கேயே தாழ்வாரத்தில் ஒளிந்து கொண்டேன். ரவிதேஜாவை ஆம்புலென்ஸில் ஏற்றியபிறகு கமிஷனர் ஓட்டல் மேனேஜ்மெண்ட்டாரிடமிருந்து சாவியை வாங்கிக்கொண்டு கதவைத் திறந்து உள்ளே போனார். அவரோடு ப்ரீப்கேசுகள் வெளியே வரவில்லை. அந்த நிலைமையில் நான் அவர்கள் கண்ணில் பட்டுவிட்டால் ஆபத்து என்றுணர்ந்து இருட்டிலேயே இருந்து கொண்டிருந்தேன். எல்லோரும் போனபிறகு நான் திரும்பி நம் இடத்திற்கு வந்து விட்டேன். போலீசார் அந்த அறையை சீல் பண்ணி வைத்து விட்டாங்க என்றும், எங்கள் விரலடையாளங்களுக்காக அப்புறமாய் வருவாங்க என்றும் நான் நினைத்தேன். ஆனால் மறுநாள் பேப்பரில் இச்செய்தி ஒன்றுமே வெளிவரவில்லை. தங்க பிஸ்கெட்டுகள் அவ்வறையில் கிடைத்த விவரத்தையே அவங்க பத்திரிக்கைகளுக்கு ரிலீஸ் பண்ணவில்லை. அப்படீன்னால்...''

எஞ்சிய வார்த்தையை சர்தார் முடித்தான்—''அப்படீன்னால் போலீஸ் கமிஷனரே அப்புறமாய் வந்து யாருக்கும் தெரியாமல் அந்த ப்ரீப் கேசுகளைத் தான் சொந்தமாய் எடுத்துக்கொண்டு போயிருப்பார் என்று அர்த்தம்''.

'கரெக்ட்' என்பதுபோல இருவரும் தலையாட்டினார்கள். ''இந்த விஷயத்தை முதல் முதலாய் பார்த்த ரவிதேஜா மேல்மாடியிலிருந்து விழுந்து செத்துப் போயிருப்பான் என்றெண்ணிக் கொண்டு கமிஷனர் அசுவத்தாமன் அந்த தங்க பிஸ்கெட்டுகளை சொந்தமாக்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் இப்பொழுது ரவிதேஜா உயிரோடிருக்கிறான். ஆனால் இப்பொழுதாவது கமிஷனர் அந்த தங்க பிஸ்கெட்டுகளை போலீஸில் ஒப்படைக்க வேண்டும்.''

''ஆனால் இவ்வளவு நாட்களாய் அவைகளை ஏன் ஒப்படைக்க வில்லை என்று மேலதிகாரிகள் கேட்பார்கள் என்று பயந்து பேசாமலிருந்திருக்கலாம்.''

''அப்படியிருந்தால் ரவிதேஜாவும் கமிஷனரும் சேர்ந்துகொண்டிருக்கவேண்டும். இருவருமாய்ச் சேர்ந்து தங்க பிஸ்கெட்டுகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று முடிவெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் தங்கத்தைத் திரும்பவும் பெறவேண்டுமானால் அந்த கமிஷனரை மிரட்ட வேண்டும்'' என்றான்.

''கஷ்டம். அந்த கமிஷனரைச் சுற்றிலும் செக்யூரிட்டிகள் நிறைய இருப்பாங்க. சுலபமான வழி ரவி-தேஜாவை மிரட்டுவதுதான். அவனைக் கொன்றாவது, நாம் அந்த தங்கங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட வேண்டும். அந்த தங்கங்கள் எங்கே இருக்குன்னு தெரிந்து கொள்ள வேண்டுமானால் ரவிதேஜாவை மடக்க வேண்டும். அவன் தற்சமயம் எங்கே இருக்கிறானோ, எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறானோ அதைத் தெரிந்து கொள்ளணும்.''



''அவன் ஆஸ்பத்திரியில் இல்லைசார், அந்த விஷயத்தை நான் தெரிந்து கொண்டுவிட்டேன்'' என்றான் சாஸ்திரி.

''அவன் நிரந்தரமாய்குருடனாகிவிட்டானாம் மனைவியோடு சேர்ந்து தேநிலவுக்குப் போயிருக்கானாம்,'' சர்தார் பெரிதாய்ச் சிரித்தான். ''குருடனுக்குத் தேநிலவா? அப்படீன்னால் நம்ம வேலை இன்னும் சுலபமாயிடும். அவன் தற்சமயம் எங்கே இருக்கான்னு தெரிஞ்சுக்குங்க—'' என்று சொல்லி விட்டு மீட்டிங் முடிந்துவிட்டாற்போல நாற்காலியை விட்டு எழுந்திருந்தான் சர்தார்.

## 19

கெஸ்ட் ஹவுஸிலிருந்து கதறல் கேட்டதுமே மகரிஷி சிமெண்ட் பெஞ்சிலிருந்து எழுந்து வேகமாய் ஓடினான். சலமய்யன அவனைப் பின்தொடர்ந்தான். கதவு உள்ளே தாழிடப்பட்டிருந்தது. தடதடவென்று கதவைத் தட்டினான் மகரிஷி. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகுதா நீங் அது திறந்து கொண்டது. ந்திக்

ரான்.

சந்தனா நைட்டியில் இருந்தாள். வெட வென்று நடுங்கிக் கொண்டிருந்தாள். பெட்ரூமைச் சுட் காட்டி—''பா...பாம்பு...'' என்றாள். அவளைத் த ட்டு விட்டு உள்ளே ஓடினான் மகரிஷி. வெளியே வருவ காக ரவிதேஜா தடவிக்கொண்டே கதவு வரை வந்தா அவன் கைகளைப் பிடித்து வெளியே இழுத்தான் மகரிஷி.

சந்தனா கணவனிடம் வந்து அவனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்று உறுதியாய் தெரிந்து கொள்வதற்காக அவன் உடம்பையெல்லாம் தடவிப்பார்த்தாள். அதற்குள் மகரிஷி பெட்ரூமிற்குள் அடியெடுத்து வைக்கப் போனான் ''மஹி, ஜாக்கிரதை! உள்ளே பாம்பு'' என்றாள் சந்தனா.

அவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் முழுப்பெயருடன் கூப்பிட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்ததில்லை யாருக்குமே.

மகரிஷியை எல்லோரும் ''மஹி'' என்பார்கள். அந்தச் சமயத்தில் அவன் தன் கீழே வேலை பார்த்துக் கொண்டிருப்பவன் என்ற ஞாபகமே மறந்து போய் விட்டது அவனுக்கு.

மகரிஷி ஜாக்கிரதையாய் அறைக்குள் நுழைந்து சுற்றுமுற்றும் பார்த்தான். எங்குமே பாம்பைக் காணோம். பாத்ரூமின் கதவு சாத்தியிருந்தது. அவன் அறையையெல்லாம் பரிசீலித்து விட்டுக் குனிந்து கீழே பார்த்தான். கட்டிலுக்குக் கீழே தென்பட்டது. ஆனால் அது பாம்பு இல்லை. எங்கேயோ ஜன்னலில் கட்டியிருந்த பழைய திரைச்சீலையின் கயிறு. முதல்நாள் மழையில் நனைந்து முடி...விப் போயிருந்தது. காற்றிற்கு அது கழன்று அவள் தை... விழுந்திருக்கும். அவள் அதை உதறித்தள்ளிவிட்டுப் மிரட்...பு என்று பயந்து போயிருப்பாள்.

"பூரிட்...மகரிஷி அதை வெளியே ஹாலுக்குக் கொண்டு தேஜா...ன். ஹாலில் சந்தனா இன்னும் பயந்தபடியே நின்று நாம் ...ண்டிருந்தாள். மகரிஷி சிரித்துக்கொண்டே ''இதான்... விட ...நக் கயிறைப் பார்த்து நீங்கள் பாம்பு என்றெண்ணி தெ...ந்துப் போயிருப்பீங்க.'' என்று தான் எண்ணிக் வே...ாண்டதைச் சொன்னான். ரவிதேஜா பெரிதாய் சிரித்...ான். சந்தனாவுக்குக்கூட விஷயம் புரிந்தது. ஆனால்



பயம் இன்னும் போகவில்லை. தன் நடவடிக்கைக்குத் தானே வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளே போய்விட்டாள். ரவிதேஜா மகரிஷியிடம்—''நீ இந்த ஹாலிலேயே படுத்துக் கொள்.'' என்று சொல்லி விட்டுத்தானும் உள்ளே போனான். மகரிஷி சலமய்யனோடு சேர்ந்து கெஸ்ட் ஹவுஸிற்கு வெளியே வந்தான். சலமய்யன் தன் குடிசையை நோக்கிப் போய்விட்டான்.

மகரிஷி தன் அவுட் ஹவுஸிற்குப் போய் படுக்கைகளை எடுத்துக்கொண்டு கெஸ்ட் ஹவுசை நோக்கி வரத் தொடங்கினான். அதற்குள் பெட்ரூமில் ரவிதேஜா சந்தனாவை கேலி பண்ணத் தொடங்கினான்.

''ஐ.பி.எஸ் ஆபீசரை ஐடெண்டிட்டி கார்டைக் காட்டச்சொல்லி டபாய்த்தது பெரிதில்லை. கயிறா, பாம்பான்னு தெரிஞ்சுக்காமல் ரகளை பண்ணி, அசல் பொம்பிள்ளைங்கிறதைக் காட்டிக் கொண்டுவிட்டாய்'', என்று.

சந்தனா கோபம் வந்தவளைப்போல—''சரிதான் இருட்டில் உங்கள் மீது திடீரென்று ஏதாவது விழுந்தால் அப்பத் தெரியும்'' என்றாள்.

''இருட்டில் எதற்கு? எனக்குப் பகலானாலும் ராத்திரியானாலும் எல்லாம் இருள்தானே?'' என்றான் அவன்.

அவன் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. ''நீங்கள் அடிக்கடி அந்த விஷயத்தையே நினைவு படுத்திக் கொண்டிருந்தால் எனக்கு வருத்தமாயிருக்கு'' என்றாள்.

''ஐயாம் சாரீ!''

அவள் பேச்சை மாற்றியபடி—''நான் குளித்துவிட்டு வரேன்'' என்றாள்.

''இந்தப் பாதி ராத்திரியில் குளிக்கிறதா?'' என்றான் அவன் ஆச்சரியத்தோடு.

"ஆமாம். இல்லாவிட்டால் எனக்கு பயத்தால் தூக்கம் வராது''—என்று துவாலையை எடுத்துக்கொண்டு பாத்ரூமிற்குள் போனாள்.

ரவிதேஜா பெட்ரூம் கதவைச் சாத்தித் தாழிட்டான். அதற்குள் மகரிஷி தன் படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு கெஸ்ட்ஹவுசிற்குள் நுழைந்தான்.

பாத்ரூமில் ஸ்டாண்டின் மீது துவாலையைப் போட்டுவிட்டு, சந்தனா திரும்பவும் வெளியே வந்தாள். கெஸ்ட்ஹவுசின் வாசல் கதவைச் சாத்தவில்லை என்ற விஷயம் ஞாபகத்திற்கு வந்து, பெட்ரூமிலிருந்து வெளியே வந்து வாசல் கதவைச் சாத்தி விட்டுத் திரும்பவும் பெட்ரூமிற்குள் போனாள். கெஸ்ட் ஹ்வுசிற்குள் இருப்பது தாமிருவருந்தான் என்ற உத்தேசத்துடன் அவள் பெட்ரூமின் கதவைச் சாத்தவில்லை.

''குளித்து முடித்து விட்டாயா?'' என்று கேட்டான் ரவிதேஜா.

''இல்லை, குளிக்கப் போறேன்'' என்று சொல்லிவிட்டு அவள் பாத்ரூமிற்குள் நுழையப் போனாள்.

''என்னுடைய சின்ன வேண்டுகோள் ஒன்று''

''என்ன?''

''குளித்துவிட்டு நைட்டி போட்டுக்கொள்ளாமல் அப்படியே படுத்துக்கொள்''

சந்தனாவின் முகம் சிவந்துவிட்டது ''ஓ'' என்றாள் வெட்கத்தோடு.

''ஏன், நாமிருவரும் கணவன் மனைவியர் இல்லையா? அதோடு, ஒருக்கால் வென்ட்டிலேட்டர் வழியாய் ஒரு துளி வெளிச்சம் வந்தாலும் கூட என்னால் உன்னைப் பார்க்க முடியாதே!''



சந்தனாவின் முகத்தில் வருத்தம் ஏற்பட்டது. "இதோ, நீங்கள் திரும்பத்திரும்ப இப்படித்தான் சொல்ல வேண்டாம்னு கேட்டுக் கொள்கிறேன்'' என்றாள்.

"அப்ப நான் அப்படி நினைக்காமலிருக்கணும் என்றால்நீ நான் சொன்ன காரியத்தையெல்லாம் செய்யணும்''

அவள் நிசப்தமாய் பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

உள்ளே ஷவரிலிருந்து விழுந்துகொண்டிருந்த தண்ணீர் சப்தத்தைக் கேட்டபடியே உட்கார்ந்திருந்தான் ரவிதேஜா.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு பாத்ரூம் கதவு திறந்துகொண்டது.

அவள் துவாலையைச் சுற்றிக்கொண்டு வெளியே வந்தாள். அவள் மேனியில் நீர்த்துளிகள் அழகாய் மின்னிக்கொண்டிருந்தன. அவள் கிட்டே வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டதுமே அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். வென்ட்டிலேட்டரிலிருந்து வந்து விழுந்து கொண்டிருந்த நிலா வெளிச்சத்தில் அவள் உடல் தங்க விக்ரகமாய் தென்பட்டது. அவன் மெல்ல அவள் மீது சாய்ந்தான்.

''இனி...இனி என்னால் பொறுத்திருக்க முடியாது சந்தனா...'' என்றான். குசுகுசுத்தாற்போல. அவளும் சற்று முன்னால் நடந்த சம்பவத்தால் ஏற்பட்டிருந்த பயத்தாலும், அதற்கு பிறகு குளித்ததால் உண்டான குளிராலும் அவனைத் தடுக்கவில்லை. தன்னையறியாமல் அவன் தோளகளைச் சுற்றிலும் கைகளைப் போட்டாள். அவன் அவளை முற்றிலுமாய் ஆக்ரமித்துக் கொண்டான்.

நன்றாய் திறந்தேயிருந்த பெட்ரூம் கதவிற்கு அந்தப் பக்கமாய், ஹால் கோடியில் மகரிஷி படுத்துக் கொண்டிருந்தான் என்பதை அவள் அறியாள். தான் தாழ்ப்பாள்

போட்டுவிட்டு வந்த பெட்ரூம் கதவை அவள் திறந்து கொண்டு வெளியே வந்து விட்டுத் திரும்பவும் உள்ளே போனபொழுது தாழிடவில்லை என்ற விஷயம் குருடனான ரவிதேஜாவுக்குத் தெரியாது.

மகரிஷி மட்டும் கண்களை அழுத்தமாய் மூடிக்கொள்ள முயன்றான். தான் கொஞ்சம் அசைந்தாலும் சரி இது வரை தான் அங்கேயே இருந்து வந்த விஷயம் அந்த தம் பதியருக்குத் தெரிந்து விடும் என்று அவன் அறிவான். அதனால் தான் அப்படியே கல்லைப்போல இறுகிக் கிடந்தான்.

மிகச் சங்கடமான நிலைமை.

கண்களை மூட முடிந்ததே தவிர மனக்கதவுகளை எப்படி மூடுவான் அவன்?

## 20

அவனுக்கு ஒவ்வொரு நாளுமே ஒரு தூங்கா இரவாய் இருக்க வேண்டும் என்று எழுதிவைத்திருந்தது போலும்!

ஜெயிலில் இருந்தபோது சந்தனாவைப் பற்றிய யோசனைகளாலும், சந்தனாவைப் பார்த்ததும் அவள் கணவன் குருடாவதற்குத் தான் தான் காரணம் என்ற வேதனையோடும்......

இப்பொழுது......



நேற்றிரவு......

யார் வாழ்க்கையிலாவது இப்படிப்பட்ட சம்பவம் நிகழ்கிறதா?

காதலியை ஆடையின்றி பார்ப்பது...கணவன் கைகளில்...

சுற்றிலும் யாரும் இல்லை என்ற எண்ணத்தில் அவள் தனியாய் இருப்பதுபோலவே நடந்து கொண்டாள். அவள் உடம்பில் தண்ணீர் முத்துக்களைப்போல மினு மினுத்த நீர்த்துளிகளே இன்னும் அவன் கண்முன்னால் நெளிந்து கொண்டிருந்தன.

மின்மினிப் பூச்சிகளைப் போல மனதிற்குள் சுற்றி வந்து கொண்டிருந்தன. அவன் தன்னைத்தான் கட்டுப் படுத்திக் கொள்ள முயன்றான்.

வெளியே வந்து சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான்.

அங்கே சூழ்நிலை நிசப்தமாய் இருந்தது. அவன் மனதிலிருந்த யோசனைகள் புயல்காற்றில் சமுத்திரத்தில் தோன்றும் அலைகளைப் போல அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

இப்பொழுது அவனுக்கு அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் பிடித்துக் கொண்டது. மனிதர்கள் அவமானங் களையும் பயங்களையும், அபாயங்களையும் பொறுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது ஆதரவில்லாத தன்மை யால் தானே தவிர முனிவர்களைப் போல மனதை வென்றதால் அல்ல. எதிர்த்து நிற்கும் சக்தியின்றி, வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டு விட்டாற்போல தென்படுவார்களே தவிர, நிரந்தரமாய் வருந்திக்கொண்டே தான் இருப்பார்கள். சுகங்களைக் கைவிடுவார்களே தவிர, அது முற்றும் துறந்த முனிவர்களைப் போல வேதாந்தத்

தால் அல்ல. பெண்ணைப் பெண்ணாகவே பார்த்து, முந்தைய சிருங்கார உணர்ச்சிகளை அப்படியே வைத்துக் கொண்டு, தான் மட்டும் அந்த மோகத்திலிருந்து வெளியேறுவது மோகத்தை வைராக்கியமாய் மாற்றிக் கொள்ளும் வழிகளுள் ஒருமுறை.

போக பாக்கியங்களையெல்லாம் அனுபவித்து ஒரு நிலைக்கு வந்து சேர்ந்து, வாழ்க்கை கர்மங்கள் பால் விரக்தியை ஏற்படுத்திக்கொண்டு வேதாந்தியாவது இன்னொரு முறை.

ஆனால் இப்பொழுது மகரிஷி அதையெல்லாம் அனுபவிக்காமலேயே தனக்குள்தானே தர்க்கம் பண்ணிக்கொண்டு ஆத்ம விமரிசனம் பண்ணிக்கொண்டு உண்மையில் மகரிஷி ஆகிவிட்டிருந்தான். தான் செய்த தப்பைத் திருத்திக் கொள்வதற்காக அவன் மனதிற்குள்ளாகவே சபதம் செய்து கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்கு தூக்கு மேடையில் உடனே போய் ஏறிவிட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. தன் கண் முன்னர் தான் செய்த பாவகாரியத்தால்...திரும்பவும் பழைய ஆளாகித் தான் காதலித்த பெண் சுகமாய் இருப்பது போல தென்பட்டாலேயொழிய இந்த அமைதியின்மை அவனைவிட்டுப் போகாது.

அவள் கணவன் நீச்சமானவனாய் இருக்கலாம். ஆனால் இந்த உலகத்தில் நீச்சர் அல்லாதவர்கள் தான் யார்? தேவைப்பட்டுவிட்டாலோ, அல்லது அவகாசம் கிடைத்தாலோ ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே இருக்கும் இன்னொரு மனிதனை வெளிக்காட்டுகிறான். தன் காதலியின் கணவன் கூட இதற்கு உட்பட்டவன்தான். அவன் மோசம் செய்தது உண்மையே. மோசம் போனது தன் மனைவி என்பது கூட உண்மைதான். ஆனால் இந்த விஷயத்தையெல்லாம் தான் வெளியுலகத்திற்குச் சொல்வதால் நடக்கப்போகும் லாபம் எதுவுமில்லை. சந்தனாவுக்கு அவள் எதிர்காலத்தில் இதெல்லாம் தெரியக்கூடிய அவகாசமும் இல்லை. என்னவோ? இப்பொழுது ரவிதேஜா முற்றிலும் மாறிப் போய் விட்டானோ என்னவோ? சந்தனாவைப் போன்ற மனைவி கிடைத்தால் எந்த ஆணுமே மாறாமலிருக்க மாட்டான். அப்படியிருக்கும் போது, தான் இந்த விஷயத்தையெல்லாம் வெளியே எடுத்துச்சொல்லி, அவள் மனதை நோடிகப்பானேன்? மனைவியாய் எதிர்காலத்தில் அவள் அடையப்போகும் சந்தோஷங்களுக்கு இடைஞ்சல் பண்ணலாமா? தான் தூக்கு மேடையில் ஏறுவதற்கு அவனே காரணமாய் இருக்கலாம். ஆனால் தனக்கு அபகாரம் செய்தவனுக்கு உபகாரம் செய்வதுதானே மனித தர்மம்?



மகரிஷி வேதங்களையோ உபநிஷதங்களையோ படித்ததில்லை. ஆனால் தன்னையே தான் பரிசுத்தமாக்கிக் கொள்வதற்கும், தன்னைத்தான் ஆத்ம விமரிசனம் செய்துகொண்டு புனிதமானவனாய் மாறுவதற்கும் வேதங்களையோ உபநிஷத்துக்களையோ படித்திருக்கத் தேவையில்லை.

இந்த விதமாய் யோசித்த மகரிஷி இப்பொழுது வேதனையிலிருந்து தேறிக்கொண்டான். பயம் கூட அவன் மனதிலிருந்து நீங்கிவிட்டது. இப்பொழுது அவன் மனதில் நிலைத்திருந்தது கடமை மட்டுமே. தன்னால் குருடான ரவிதேஜாவைத் திரும்பவும் பழையபடியே ஆக்கி, சந்தனாவிடம் ஒப்படைத்து விட்டு, இந்த உலகத்தை விட்டு, தான் மறைந்துவிட வேண்டும் என்ற உணர்ச்சி ஒன்று தான்—இப்பொழுது அவனிடம் நிரம்பியிருந்தது.

# 21

"நிஜமாகவா?" என்றாள் சந்தனா அவனைப் பார்த்து வியப்போடு.

"ஆமாம்." சலமய்யன் சொன்னான்.

அதற்குள் அவளிடம் விரக்தி தென்பட்டது. "என்னால் நம்ப முடியாது. பெரிய பெரிய டாக்டர்களால் பண்ண முடியாததை, இந்த காட்டுவாசிகளும் மந்திரவாதிகளும் எப்படிப் பண்ணுவாங்க?" என்றாள்.

"முயற்சி பண்ணுவதில் தப்பில்லையே? சில சமயங்களில் இங்கிலீஷ் மருந்துங்களால் குணமாகாத நோய்கள், மூலிகை வைத்தியத்தால் குணமாகியிருக்கின்றன."

"ஆமாம். நீ சொன்னதும் சரிதான். முயற்சிபண்ணுவோம்" என்றாள் சந்தனா.

இந்த விஷயம் தெரிந்து எல்லோரைக்காட்டிலும் அதிகமாய் சந்தோஷமடைந்தவன் ரவிதேஜாதான். அவன் மிக உற்சாகமாய் "நாளைக்கே போகலாம்" என்றான். சந்தனாவுக்கு அவன் உற்சாகம் புரிந்தது. அந்த நரஷ்டமான நிலையில் இருப்பவர்களுக்குத்தான் அதன் கஷ்டம் புரியும். ஏதாவது சின்ன நம்பிக்கை கிடைத்துவிட்டாலும் அதையே பிடித்துக் கொள்ளப் பார்ப்பார்கள். கண்ணில்பட்ட தெய்வங்களையெல்லாம், சாமியார்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருப்பார்கள். ரவிதேஜா ஒரு பெரிய ஐ.பி.எஸ் ஆபீசராயிருந்தாலும் கூட இப்படிப்பட்ட மனநிலைக்கு அப்பாற்பட்டவனில்லை. அதனால் தான் அந்த காட்டுவாசியிடம் மறுநாளே போக வேண்டும் என்று அவசரப்படுத்தினான்.



ஃ ஃ ஃ

"மஹீ! கார் ரெடியா?" கணவனின் கையைப் பிடித்து நடத்தி அழைத்து வந்துகொண்டே கேட்டாள் சந்தனா.

"ரெடி, மேடம்" என்றான் காருக்கருகில் இருந்த மகரிஷி. அன்றைகு சந்தனா மிக உற்சாகமாய் இருந்தாள்.

"இதென்ன, இதுவரை சந்தனா என்று கூப்பிட்டு விட்டு, இப்ப 'மேடம்' என்கிறாயே?"—என்று கேட்டாள் லேசான கோபத்துடன்.

"சாரி, ஏதோ யோசனையில் ஆழ்ந்து அப்படிச் சொல்லியிருப்பேன். ஆனாலும் நான் உங்கள் கேர்டேக்கர் அல்லவா? அப்படிச் சொன்னால் என்ன தப்பு?" என்றான் சிரித்துக்கொண்டே, கணவனைக் காரில் ஏற்றி உட்காரவைத்துவிட்டுத்தானும் உட்கார்ந்துக் கொண்டே—"இந்த மாதிரி வார்த்தைகளை இன்னொரு தடவை என்னிடம் சொன்னால் நான் சும்மாயிருக்க மாட்டேன்." ஆள்காட்டி விரலைக்காட்டி மிரட்டினாற் போல சொன்னாள். மகரிஷி லேசாய், சிரித்துக்கொண்டே "சரி" என்று சொல்லி விட்டுக் காரைக் கிளப்பினான்.

ரவிதேஜா அதுவரை மௌனமாகவே இருந்தான். மகரிஷியைச் சந்தித்ததிலிருந்தே அவனை ஒரே ஒரு கேள்வி துளைத்துக் கொண்டேயிருந்தது. அவ்வளவு படித்திருக்கும் மகரிஷி இவ்வளவு குறைந்த சம்பளத்திற்குத் தம்மிடம் ஏன் வந்து சேர்ந்தான்?

சந்தனாவும் மகரிஷியும் கிளாஸ்மேட் என்று சொன்னது உண்மைதானா? தன் 'மனைவி அவனை 'மஹீ' என்று கூப்பிடுமளவிற்கு அவ்வளவு நெருக்கம் உண்டா?

அவன் போலீசானதால் மனதில் ஆயிரம் சந்தேகங் கள் தோன்றிக் கொண்டிருந்தன. முகம் மட்டும் சாதா ரணமாகவே இருந்தது.

அதற்குள் சந்தனா கணவனிடம்— "இந்த காட்டு வாசி மூலமாய் உங்களுக்குக் கண் பார்வை திரும்பினால், மகரிஷிக்கு நாம் ஒரு நல்ல பரிசைத் தரணும்"— என்றாள்.

தன் பழைய யோசனைகளில் ஆழ்ந்திருந்த ரவிதேஜா சட்டென்று "நான் எதற்கு? நீ...நீ கொடு" என்றான்.

சந்தனா வாயடைத்துப் போனாள். காரை ஓட்டிக் கொண்டிருந்த மகரிஷி கூட திரும்பிப் பார்த்தான். அதற்குள் ரவி தேஜாவுக்குத் தான் பேசியது புரிந்து, அதை இழுத்து மூடிக் கொள்வதற்காக, "பின்னே! எனக்குக் கண்பார்வை திரும்பினால் என்னை விட அதிக மாய் சந்தோஷப்படப் போகிறவள் நீதான்னு நான் நினைக்கிறேன். அதில் ஏதாவது தப்பிருக்கா?" என்று கேட்டான் சிரித்துக்கொண்டே,

சந்தனா மட்டும் சிரித்து விட்டாள்.

மகரிஷி, முகத்தில் தன் யோசனைகள் எதுவும் பிரதிபலித்துவிடாதவாறு ஜாக்கிரதைகளை மேற்கொண்டு காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

சந்தனாவின் பரபரப்பு நிமிஷத்திற்கு நிமிஷம் அதி கரித்துக் கொண்டேயிருந்தது. மகரிஷி அந்த விஷயத்தைச் சொன்னதிலிருந்து அவளுக்கு மிகவும் பரபரப்பாய் இருந் தது. எப்பொழுது அந்தச் சேரிவரும் என்று பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



கார் மலைப்பாதையில் மேடு பள்ளங்களில் விழுந்து குலுங்கிக் குலுங்கிப் போய்க்கொண்டிருந்தது. அவ்விடங் களில் நிறைய திருப்பங்கள் இருந்தன.

மகரிஷி தன் பார்வையையெல்லாம் சாலை மீதே வைத்து டிரைவ் பண்ணிக் கொண்டிருந்தான். கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்தாலும் கார் பள்ளத்தில் நழுவிப் போய்விடக்கூடிய ஆபத்து இருந்தது.

மிகப் பயிற்சி இருந்தாலேயொழிய அந்த மலைப் பாதையிலிருந்த திருப்பங்களைச் சமாளிப்பது சாத்திய மல்ல.

திருப்பங்கள் வரும்பொழுதெல்லாம் அவள் தன் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டதைப் பார்த்து ரவிதேஜா லேசாய் சிரித்துவிட்டு, அவள் தோளைச் சுற்றி லும் கையைப் போட்டபடி ஒதுங்கி உட்கார்ந்து கொண்டான்.

இன்னும் இரண்டு கிலோ மீட்டர்கள் பயணம் செய் தால் காட்டுப்பிரதேசம் தொடங்கிவிடும். அங்கிருந்து மண்சாலை. காட்டில் மலைகளுக்கு நடுவே பிரயாணம். சாலைகள் மேலும் மோசமாய் இருந்தால் கால்நடை யாய் கூட நடந்து போக வேண்டியிருக்கும்.

யோசித்தபடியே ஓட்டிக்கொண்டிருந்தான் அவன்.

அதற்குள்...ஒரு ஆள் பாதைக்கு நடுவே நின்று கொண்டு காரை நிறுத்தச் சொல்லி கையை ஆட்டி யதைப் பார்த்து விட்டுக் காரின் வேகத்தைக் குறைத்து ஒரு பக்கமாய் கொண்டு வந்து நிறுத்தினான்.

அந்த ஆளின் முகம் மிகக் கலக்கத்துடன் இருந்தது. மூச்சிரைக்க நின்றுக் கொண்டிருந்தான். கார் நின்றதுமே கிட்டே ஓடிவந்து—"சார்! என் பையனை பாம்பு கடிச்

கடுத்து. உயிருக்குப் போராடிக்கிட்டிருக்கான். தயவு செய்து காட்டில் சேரிப்பகுதி வரைக்கும் கூட்டிட்டுப் போங்க'' என்று ஜன்னல் வழியாய், கைகளைப் பிடித்துக் கொண்டு மன்றாடினாற் போலக் கேட்டான்.

''எங்கே?'' கதவைத் திறந்து கொண்டே கேட்டான் மகரிஷி.

''வாங்க சார், காட்டறேன் அந்தப் புதரில் விழுந்து கிடக்கிறான்'' என்றான் அவன்.

மகரிஷி காரை விட்டிறங்கி, பின்பக்க ஜன்னல் வழியாய் குனிந்து—'நான் இதோ வரேன்'' என்றான். அந்தச் சமயத்தில் ரவிதேஜா சந்தனாவின் தோளில் தலையைச் சாய்த்துப் படுத்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சியைப் பார்த்ததுமே மகரிஷி சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு திரும்பி நடந்தான்.

அந்த ஆள் வழிக்காட்டுவது போலப் போனான். செங்குத்தாய் இருந்த அந்த வழியில் அவனைப் பின் தொடர்ந்தபடியே போனான் மகரிஷி.

கொஞ்ச தூரம் போனதும் அந்த ஆள் புதர்களுக்கிடையே விழுந்து கிடந்த ஆளைச்சுட்டிக்காட்டி ''இவன்தான். கொஞ்சம் உதவிக்குக் கைகொடுங்கள்'' என்றான். மகரிஷி கீழே விழுந்துகிடந்த அந்த ஆளின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே, மூச்சு வருகிறதா என்று தெரிந்து கொள்வதற்காக மூக்கிற்கருகில் கையை கொண்டு போனான்.

சரியாய் அதே சமயத்தில்...அவன் எதிர்பார்த்திராதச் சம்பவம் நடந்தது.

அவன் தலையில் பின்பக்கமாய் ஓங்கி அடி விழுந்தது.

என்ன நடந்தது என்று கவனித்து உணருவதற்குள்ளாகவே தரையில் சுருண்டு விழுந்தான் மகரிஷி.



உடனே நினைவு தப்பிவிட்டது.

தரையில் விழுந்து கிடந்தாற்போல படுத்துகிடந்த ஆள் சட்டென்று எழுந்திருந்து—'' முதல் ஆபரேஷன் வெற்றியடைந்தது'' என்றான்.

பிறகு அவ்விருவரும் சேர்ந்து காருக்கருகில் வந்தார்கள். அதில் ஒருவன் அழுத்தமாய் விசில் ஊதினான்.

அந்தக்காருக்கு ஐம்பதடி தூரத்தில் நின்றிருந்த இன்னொரு ஜீப் அந்த விசில் சப்தத்தைக் கேட்டதுமே கிளம்பி காருக்குப் பின்னால் வந்து நின்றது.

அந்த ஜீப்பிலிருந்து பருமனான ஒருவன் இறங்கினான் ஆறடி உயரம் வெந்த மேனி...திடமாய் இருந்தான் அவன். இறங்கி நேராய் காரிடம் வந்தான்.

ஜன்னல் வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தான். சந்தனாவுக்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்று புரியவில்லை ஏதோ நடக்கப் போகிறது என்று அவள் ஆறாவது அறிவு எச்சரித்தது அவளை.

ஜீப்பிலிருந்து இறங்கிய ஆள் காருக்குள் எட்டிப்பார்த்ததைக் கவனித்துவிட்டு அவள், தன்னையறியாமல் கணவனின் தோளை அழுத்திப் பிடித்துக்கொண்டாள்.

''மிஸ்டர் ரவிதேஜா... ஹௌ ஆர் யூ?''—அந்த ஆளின் குரல் அந்த நிசப்தத்தில் கணீரென்று கேட்டது.

அவ்வளவு நேரமாய் நடந்துகொண்டிருந்த, எதுவுமே தெரியாமல் மனைவியின் தோளின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டிருந்த ரவிதேஜா, ஒரு முன்பின் அறிமுக மில்லாத ஆளின் குரல் திடீரென்று கேட்கவே, திடுக்கிட்டு நிமிர்ந்து—''யார்...யாரது?'' என்றான்.

''வ்வா...என்ன நாடகமாடுகிறாய்?''

''யார் நீங்கள்? என்னால் கண்டுப்பிடிக்க முடியவில்லை.''

''அரே மூடுடா வாயை நான்...சர்தார் அப்பாஸ் அலிகான் கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரு ரவிதேஜா! நீ இவ்வளவு காலமாய் குருடன் என்று நாடகமாடுகிறாய்னு எங்களுக்குத் தெரியும்..''

ரவிதேஜாவின் காதில் அது விழவில்லை.

அந்த ஆள் தன் பெயரைச் சொன்னதுமே அதிர்ந்து விட்டான்.

'அப்பாஸ்! த கிரேட் கோல்ட் பிஸ்கெட் ஸ்மக்லர்!' மனதிற்குள் எண்ணிக்கொண்டான்.

அதுவரை அவனைப் பார்த்ததில்லை, ஃபைலில் போட்டோவைப் பார்த்திருக்கிறான், அவ்வளவே!

இப்பொழுது...இவ்வளவு கிட்டத்தில்...மலைப்பாதையில்... அப்படியென்றால்...இவ்வளவு நாட்களாய் இவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்திருக்கிறார்கள் போலும்! மைகாட்!' என்றெண்ணிக் கொண்டான். தன் கலக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல்—'' இங்கே உனக்கென்ன வேலை?'' என்று கேட்டான் கம்பீரமாய் நடந்து கொண்டிருந்ததையெல்லாம் சந்தனா வாய்டைத்துப் போய் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கணவனின் தோளை விடவில்லை. அப்பாஸ் கடுமையாய் சொன்னான்.

''அதையெல்லாம் அப்புறமாய் சொல்றேன். மொதல்ல நீ காரை விட்டிறங்கு''—என்று கதவைத் திறந்து ரவியை பலவந்தமாய் வெளியே பிடித்து இழுத்தான்.



ரவி கீழே விழப்போய் சமாளித்துக்கொண்டு ''அலிகான்! இதெல்லாம் என்ன?'' என்று உரக்க கேட்டான்.

''மிஸ்டர் ரவிதேஜா! மொதல்ல உன் நடிப்பை நிறுத்து.''

''நடிப்பா?'' ரவியின் புருவங்கள் முடிச்சேறின.

''ரவிதேஜா! நீ ஐ.பி.எஸ் ஆபீசர். சினிமா ஸ்டாரைப் போல நடிக்காதே. குருடனாய் நடித்து எனக்கு முன்னாடியே வேஷம் போடாதே.

''அப்படீன்னால், உன் உத்தேசம்?......என் கண்கள் போய்விடவில்லை என்பதா?',

''உன் கண்கள் போய்விட்டாற்போல உன் மனைவியையும் சமூகத்தையும் நம்ப வைத்துவிடமுடியுமோ என்னவோ, ஆனால் இந்த அலிகானை மட்டும் நம்ப வைத்து விட முடியாது உன்னால். உன் கண்கள் போய் விடவில்லை என்றும், போய்விட்டாற்போல நாடகமாடி நீயும் அந்த கமிஷனரும் சேர்ந்து அரசாங்கத்திற்கு ஒப்படைக்காமல் என் தங்க பிஸ்கெட்டுகளைத் தட்டிக் கொண்டுவிட வேண்டுமென்று திட்டம் போட்டுக்கிட்டிருக்ஈங்கன்னும் எனக்குத் தெரியும். மரியாதையாய் அவைகளை எங்கே ஒளித்து வைத்தாய்னுச் சொல்லிவிடு.''

''நோ... எனக்கொன்னும் தெரியாது. என் கண்கள் நிஜமாகவே போய்விட்டன ''பெரிதாய் கத்தினான் ரவி ''பொய்... எல்லாம் நடிப்பு!'' அதைவிட பெரிதாய் கத்தினான் அப்பாஸ்.

சந்தனா கணவனைப் பார்த்தாள். அவள் குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

''அப்படி நாடகமாடுவதால் எனக்கென்ன லாபம்?'' ரவி கேட்டான்.

''ரெண்டு ப்ரீப் கேசுகள் நிறைய கோல்டு பிஸ் கெட்டுகள்.''

''அப்படீன்னால் உன் உத்தேசம்... அவைகளை நான் திருடிக் கொண்டுவிட்டேன்னா?''

''எஸ்'' என்றான் அப்பாஸ்... ''அன்றைக்கு ஓட்டல் அறையில் எங்க ஆளுங்கு இருவரையும் மிரட்டி' அவங்க ஓடிப்போனதும் நீங்கள் கைப்பற்றிக் கொண்ட ப்ரீப் கேசுகளைப் பற்றி நான் கேட்கிறேன்.''

''நீ தப்பாய் புரிந்துகொண்டு விட்டாய் அலிகான்! அன்றைக்கு நான் அந்த பிஸ்கெட்டுகளை எங்கள் டிபார் மெண்ட்டிடம் ஒப்படைப்பதற்கு முன்பே உங்கள் ஆள் என்னைக் கீழே தள்ளிவிட்டான். அவ்வளவு தான் அதற் கப்புறம் எனக்கு என்ன நடந்ததுன்னு தெரியாது. என் கண்கள் போய்விட்டது மட்டுமே தெரியும்.''

''ரவிதேஜா... நீ திரும்பவும் சினிமாஸ்டார் ஆயிட் டிருக்கிறாயா?''

அப்படீன்னால் நான் சொல்வதெல்லாம் பொய் என்கிறாயா?''

'எஸ்... பச்சைப்பொய்.''

''அவ்வளவு கச்சிதமாய் எப்படிச் சொல்கிறாய்?'' ஆத்திரமும் கோபமும் மிளிர்ந்த குரலில் கேட்டான் ரவி.

''எங்கள் ஆள் உன்னை ஓட்டல் மேலிந்து தள்ள வில்லையா தலால்!''

குண்டு வெடித்தாற்போல சொன்னான் அப்பாஸ்ச்



''உன் விரோதிங்க யாராவது இந்தக் காரியத்தைச் செஞ்சிருப்பாங்க. அல்லது— வேண்டுமென்றே நீயே குதித்திருப்பாய்! ஆனால் நீ எப்படி விழுந்தாய் என்ப தெல்லாம் எனக்குத்தேவையில்லை. என் தங்கம் வேண்டும். தட்ஸால்!'' உறுதியாய் சொன்னான் அப்பாஸ். அந்த நிலைமையிலும் கூட ரவியைக் கள்ளக்கடத்தல் காரர்கள் தள்ளவில்லை என்ற விஷயம் தெரிந்து சந்தனா வாயடை த்து போய்விட்டாள். அதற்குள் ரவி சொன்னான்.

''உண்மையிலேயே அந்த ரெண்டு ப்ரீப்கேசிலும் என்ன இருந்ததுன்னே எனக்குத் தெரியாது.''

அலிகானின் பொறுமை தளர்ந்துவிட்டது. உன்னைக் கெஞ்சி லாபமில்லை. ''என்று திரும்பி—'' ரஃபிக்? இவன் மனைவியை வெளியே இழுத்துக் கொண்டு வா'' என்றான் அடியாளைப் பார்த்து.

அதைக் கேட்டதுமே அதுவரை வியப்போடு பார்த் துக் கொண்டிருந்த சந்தனா பயந்துப்போய் காருக்குள் ஒரு மூலையில் ஒண்டிக்கொண்டாள்.

'நோ...'' என் மனைவியை ஒன்றும் செய்யவேண் டாம். எனக்கொண்ணும் தெரியாது. எங்களை விட்டு விடு'' என்று கத்தினான்.

பெரிதாய் சிரித்தான் அலிகான்.

''உன்வீக் பாயிண்ட் எதுன்னு எனக்குத்தெரியாதுன்னு நினைத்துவிட்டாயா?'' என்று அவன் அடியாள் இழுத்துக் கொண்டு வந்த சந்தனாவின் கையை பிடித்து, கிட்டே இழுத்தான்.

அவன் உத்தேசம், ரவிக்கு கண்கள் இருக்கும் பட்சத் தில் மனைவியை வேற்று ஆண்மகன் கட்டிக்கொண்ட தைப் பார்த்து சகித்துக் கொள்ள முடியாமல் போய்

பிடிப்பட்டுப் போய்விடுவான் என்பது. சந்தனா பீதிய டைந்து போனாள். அலிகான் இரும்புப் பிடி அவள்கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டிருந்தது. செய்வதறியா மல்— ''ஐயோ'' என்று கணவன் பக்கம் வருவதற்காக திமிறிக் கொண்டிருந்தாள்.

அலிகான் பட்டென்று அவள் கன்னத்தில் ஓங்கி ஒன்று அறைந்தான்.

ரவியால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவன், அவள் குரல் கேட்ட பக்கமாய் காற்றில் கைகளை நீட்டி— சந்தனா'' என்று முன்னோக்கிவரப் போனான்.

அவன் உண்மையிலேயே குருடன்தானா இல்லையா என்று பரிசோதித்துக் கொண்டே அலிகான் சந்தனாவின் கையைப்பிடித்துக்கொண்டே சாலையின் ஒரம் அழைத்துச் சென்று, அங்கிருந்து இறக்கத்தில் இருந்த சின்ன புதரின் பக்கமாய் அவளைப் படிக்கவைக்கப் போனான். காலால் அவளைக் கீழே இழுத்தான். வீலென்று அலறினாள் சந்தன.

''மஷீ...'' அவள் தொண்டையிலிருந்து தன்னையறி யாமல் மகரிஷியின் பெயர் வெளிவந்தது.

மகரிஷி வரவில்லை. அவள் கத்தலைக் கேட்டு ரவி

ரவி அந்தப் பக்கம் நகரப் போனான். அவ்வளவு தான்... சாலைப்பக்கமாய் இருந்த பாறாங்கல் தடுக்கிக் கீழே விழுந்தான்! விழுந்ததுதான் தாமதம்' அவன்உடல் அந்த இறக்கத்தில் நழுவிற்று. அவன் பாறாங்கல்லைப் பிடித்துக் கொள்ளப் போனான். அவன் பளுவுக்கு அது வும் அவனோடு கூட பள்ளத்தில் சரிந்தது.

அவன் உடல் இருபத்தைந்தடி ஆழத்திற்கு உருண்டு கொண்டே போய், ஒரு மரத்தில் 'மோதிக் கொண்டது. அதைப்பார்த்து அப்பாஸ் பெரிதாய் சிரித்தான்.



மகரிஷிக்குத் தூக்கமும் இல்லாத விழிப்பும் இல்லாத நிலையில் அப்பொழுதுதான் மெல்ல மெல்ல நினைவு திரும்பிவந்து கொண்டிருந்தது. அவன் செவிகளில் ''ஹெல்ப்...ஹெல்ப்...'' என்ற கத்தல்கள் லீலையாய் விழவே, அதை சந்தனாவின் குரலாய் உணர்ந்து கொண்டு வேகமாய் எழுந்தான்.

சந்தனாவின் குரல் மிகத் தெளிவாய் கேட்டது.

இனி தாமதிக்க முடியாதவனாய் சாலையை நோக்கி வேகமாய் ஓடத்தொடங்கினான்.

அங்கே சந்தனா அப்பாஸின் ஆதிக்கதில் ஆதரவில் லாமல் திமிறிக்கொண்டிருந்தாள்.

ரவி எங்கே இருந்தான் என்று தெரியவில்லை. அப் பாஸின் கையாட்கள் இருவரும் நிதானமாய் நடந்துக் கொண்டிருந்ததை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிரு ந்தார்கள்,

அப்பாஸிற்கு சந்தனாவின் மேல் ஆசை எதுவும் இல்லை. அதைக் காட்டிலும் ரவிதேஜா போட்டுக் கொண்டிருந்த நாடகத்தைத் தகர்த்தெரியவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ரவிதேஜாவை மானசீகமாய் நன்றாய் தளர்த்திவிட வேண்டும். சந்தனா வின் மேனியில் கைகளைப் போட்டு அவளை இன்னும் அழவைத்துக்கொண்டிருந்தான். சாலை ஆளரவமில்லா மல் இருந்தது. அவளுடைய ஆதரவில்லாத கதறலைத் தவிர வேறெந்தச் சப்தமும் இல்லாமல் நிசப்தமாய் இருந்தது. அந்தக் கத்தல்தான் மகரிஷிக்கு சக்தியைத் தந்தன. தன் சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டான். பக்கத்திலிருந்த ஒரு கழியை எடுத்துக்கொண்டு அம்பாய் பறக்கத் தொடங்கினான். அவ்விடத்தில் காவலாய் நின்றுக் கொண்டிருந்த இப்ராஹீமும் சாஸ்திரியும் அவன் ஓடி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து விட்டுத் தாக்கப்

போனார்கள். முதலில் குறுக்காய் வந்தவனின் தலை மீது அந்தக் கழியால் அடித்தான். அவன் வலியால் தலையைப் பிடித்துக் கொண்டே கீழே விழுந்தான். சாஸ்திரி பட்டன் கத்தியை எடுத்துக் கொண்டு அவன் மீது பாயப்போனான். அதே கழியால் அவன் முகவாயை நோக்கிக் குறிப்பார்த்து வீசியெறிந்துவிட்டு வயிற்றில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான் மகரிஷி. அவன் அந்த வலியைத் தாங்கமாட்டாதவனாய் கத்திக்கொண்டே கீழே விழுந்து துடிதுடிக்கத் தொடங்கினான்.

மகரிஷி அலிகானை நோக்கி நகர்ந்தான் வேகமாய். கத்திக்கொண்டே கீழே விழுந்த அடியாட்கள் எழுந்திருக்க முடியாமல் அப்படியே முனகிக்கொண்டே விழுந்து கிடந்தார்கள். மகரிஷி தன்னை நோக்கி வேகமாய் வந்ததைப் பார்த்துவிட்டு அலிகான் சட்டென்று ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து அவனைக் குறி பார்த்து ''ஸ்டாப் தேர்'' என்றான்.

அந்த திடீர்ச் சம்பவத்திற்கு மகரிஷி தன்னையறியாமல் நின்றுபோய் கைகளை மேலே தூக்கினான்.

சந்தனா பயந்து போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளை நகர முடியாமல் ஒரு கையால் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால்மார்பை நோக்கிக் குறி வைத்தான் அவன் விரல் ட்ரிக்கரின் மீது முறுக்கேறிக் கொண்டது.

சரியாய் அதே சமயத்தில்......பின்பக்கமாய் சத்தடி கேட்டது. என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்று அலிகான் பின்பக்கமாய் திரும்புவதற்குள் அவன் தலைமீது பலமான அடி விழுந்தது.

அவ்வளவுதான்...அலிகான் கையிலிருந்த துப்பாக்கி நழுவி விழுந்தது. அவன் தரையில் சாய்ந்தான். அந்த நிமிஷமே அவன் உயிர்போய்விட்டது.





நாட்டின் மிகப் பெரிய கள்ளகடத்தல்க்காரன் அவ்வளவு சின்ன அடிதடியில், அவ்வளவு சாதாரணமாய் உயிரை இழந்தது அங்கிருந்த அம்மூவருக்குமே தெரியாது. தொலைவிலிருந்த இப்ராஹீமிற்கு மட்டும் சந்தேகம் வந்தது. இந்த திடீர் விளைவிற்கு சாஸ்திரிகூட பயந்து பாய்விட்டான்.

சந்தனாவுக்கு இதொன்றும் தெரியாது.

ஆச்சரியமடைந்தவளாய் பின்னால் திரும்பிப் பார்த்த சந்தனாவுக்கு அங்கே ரவி நின்று கொண்டிருந்ததைக் கண்டதும் கண்கள் அகன்றன அங்கே கையில் பாறாங் கல்லை வைத்துக் கொண்டு ரவி நின்று கொண்டிருந்தான்.

அவன் முகம் கோபமாய் இருந்தது.

கணவனுக்குக் கண்பார்வை போகவில்லையா?......

அப்படி...இவ்வளவு நாட்களாய் கண்பார்வை போய் விட்டாற்போல நடித்திருக்கிறான் என்று புரிந்ததுமே அவன் பால் அவளுக்கு இருந்த நம்பிக்கை படபடத்தது.

அப்படியென்றால்...இவ்வளவு நாட்களாய்த் தன் கணவன் குருடனைப் போல உலகத்தாரை நம்பவைத்தது அந்த தங்கத்தை அபகரித்துக் கொள்வதற்காகவா...? அதற்குள் ரவி காற்றில் கைகளை நீட்டிக்கொண்டே முன்நோக்கிவந்து—'' சந்தனா! ஆர் யூ ஆல் ரைட்?'' என்று கேட்டான்.

சிலையாய் நின்றபடி கணவனிடமுள்ள மற்றொரு உருவத்தைத் தேடிக் கொண்டிருந்த அவள் கண்களில் சின்னச்சலனம்!

''உம்'' என்று மட்டுமே பதில் சொல்ல முடிந்தது அவளால். அது நம்பிக்கையா...அவநம்பிக்கையா... என்று தெரியாது. அவளால் அதற்குமேல் பேசமுடியவில்லை.

அவரவர்கள் அப்படியே சிலையாய் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து இப்ராஹீம், அலிகானைச் சுமந்து கொண்டுபோய் ஜீப்பில் படுக்க வைத்துவிட்டு, ஸ்டார்ட் பண்ணினான். ஓட்டமாய் ஓடிப்போய் பின்னால் உட்கார்ந்து கொண்டான் சாஸ்திரி. அவ்வளவு நேரமாய் ரவியையே கவனித்துக் கொண்டிருந்த மகரிஷிக்கு அப்பொழுதுதான் மூளையில் ஏதோ நடந்துக் கொண்டிருந்தாற்போல புரியவே திரும்பிப் பார்த்தான்.

ஜீப் ஸ்டார்ட் ஆகி, ரிவர்ஸ் ஆகிக் கொண்டிருந்தது. அவ்வளவுதான்...தாமதிக்காமல் அந்த ஜீப்பைப் பிடித்துக் கொள்வதற்காக ஓடப்போனான். அதைக் கவனித்த சந்தனா சட்டென்று அவனுக்குக் குறுக்காய் வந்து நின்று—''நோ...போக வேண்டாம்'' என்றாள்.

''இல்லை, அவங்களைப் பிடித்து போலீசில் ஒப்படைக்கணும்.''

''வேண்டாம். நீ போகக்கூடாது.''

''ப்ளீஸ், என்னைப் போக விடு.'' அவளிடமிருந்து தப்பித்துக் கொண்டு போக முயன்ற அவனைச்சட்டென்று இரண்டு கைகளாலும் அழுத்தமாய்ப்பிடித்துக்கொண்டு—''ஊஹூம், உன்னைப் போக விடமாட்டேன். அவங்க உன்னை ஏதாவது பண்ணிட்டால்......''

''எனக்கு ஒன்றும் நேராது.''

''உனக்கு ஏதாவது ஆயிட்டால் என்னால் தாங்கி கொள்ள முடியாது.''

''வேண்டாம் மகரிஷி. அவங்க போகட்டும்'' என்றான் ரவி.

அதற்குள் ஜீப் கண்பார்வையிலிருந்து மறைந்துவிட்டது. கார்கதவைத் திறந்து உட்கார்ந்துக் கொண்டான் மகரிஷி.



சந்தனா கூடபோய் பின் கதவைத் திறந்துக் கொண்டு உட்காரப் போனவள், கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அங்கே ரவி ஆடாமல் அப்படியே நின்றுக் கொண்டிருந்தான். ஒரு வினாடி கணவன் முகத்தையே கூர்ந்து பார்த்துவிட்டு ''வாங்க'' என்று கூப்பிட்டுக் கதவைத் திறந்துகொண்டு உட்கார்ந்தாள்.

அவன் தடவிக் கொண்டே வந்து கொண்டிருக்கையில் மகரிஷி இறங்கிப் போய் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுவந்து காரில் உட்காரவைத்துவிட்டு ''வான்னு சொன்னால் எப்படி வருவாருன்னு நினைச்சாய்?... ஏதாவது கல் தடுக்கிக் கால் நழுவிவிட்டால்...?'' என்றான் சந்தனாவிடம்.

அவள் கோபமாய் ஏதோ சொல்லப்போய் சமாளித்துக் கொண்டு ''அவ்வளவு குறித்தப்பாமல் அவன் தலையில் அடித்தவருக்கு—காரை நோக்கி நடந்து வருவது என்ன பிரமாதம்?'' என்றாள் கணவனையே ஓரக்கண்ணால் கவனித்தபடி.

அப்பொழுதுதான் அவன் கேட்டான் ரவியை.

''ஆமாம்...இவ்வளவு நேரமாய் நீங்கள் எங்கே போயிருந்தீங்க? அதோடுகூட, வந்ததும் வராமலுமாய் அவன் தலையில் எப்படி ஓங்கி அடிக்க முடிந்தது?'' என்று.

''நான் பள்ளத்தில் சரிந்து போனதுமே நினைவுத் தப்பிவிட்டது. ஆனால் சந்தனா கத்தியதால் உடனே நினைவு திரும்பி விட்டது. கையில் ஒரு கல் தட்டுப் பட்டது. அலிகானின் குரல் கேட்ட திசையாய் சத்தமில்லாமல் செய்யாமல் ஊர்ந்துக் கொண்டே வந்தேன். பின்னால் வந்ததும் அவன் குரல் எவ்வளவு உயரத்திலிருந்து கேட்கிறது என்று கவனித்து...ஐ.பி.எஸ். பயிற்சியை ஞாபகத்

திற்குக் கொண்டு வந்து கையிலிருந்த கல்லால் தலையில் அடித்தேன். உண்மையில் பக்கத்தில் சந்தனா இருந்தான் என்றும் அவள் மீது பட்டுவிட்டால் ஆபத்து என்றும் தெரிந்திருந்தும், 'ரிஸ்க்' எடுத்துக் கொண்டு தீரவேண்டியிருந்தது. அதோடு கூட சந்தனாவின் உயரத்தை நான் கணக்கிட்டுக் கொண்ட பிறகுதான் அப்படித் தாக்கினேன்'' என்றுச் சொன்னதைக்கேட்டு சந்தனாவின் மனதில் ஏற்பட்ட சந்தேகம் விலகிவிட்டது.

பச்சாதாபத்துடன் கணவனின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''சமயத்தில் நீங்கள் வந்ததால் சரியாயிற்று, இல்லாவிட்டால் என்ன நடந்திருக்குமோ?'' காரை ஸ்டார்ட் பண்ணிக்கொண்டே சொன்னான் மகரிஷி.

சந்தனா சுதாரித்துக் கொண்டு—''இப்ப அந்தச் சேரிக்கு வேண்டாமே, இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள்.

''ஏன்...ரொம்பக் கிட்டத்தில் வந்தாச்சே'' என்றான் அவன். ரவிகூட தடுத்து விட்டு—'' அலிகான் சாதாரண ஆள் இல்லை. திரும்பி வரும்போது நம்மைத் தாக்கலாம்'' என்றான்.

''கிழித்தான்'' என்றான் மகரிஷி.

''ப்ளீஸ்.. எனக்கென்னவோ பயமாயிருக்கு. திரும்பிப் போயிடலாம்'' என்றாள் சந்தனா.

''ஓ.கே. உங்கள் இஷ்டம்'' என்று காரைப் பின்னுக்குத் திருப்பினான் மகரிஷி.



# 22

'வா மஹீ...நீயும் எங்களோடு சேர்ந்து டிபன் சாப்பிடு!''—சந்தனா கணவனை அழைத்துச்சென்று டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார வைத்துவிட்டுச் சொன்னாள்.

அவன் ''நீங்கள் சாப்பிடுங்க, நான் அப்புறமாய் சாப்பிடுகிறேன்'' என்றான்.

''ஏன், எங்களோடு சேர்ந்து சாப்பிடக்கூடாதா?'' என்றாள் அவள் அன்பாய்.

''அப்படியில்லை...''

''வா மகரிஷி'' ரவியும் கூப்பிட்டதால் அவனால் மறுக்க முடியவில்லை. வந்து ரவிக்கெதிரே உட்கார்ந்துக் கொண்டான்.

டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில்—''நான் இன்றைக்குத் தனியாய் அந்த மலைச்சேரிக்குப் போய் விட்டு வரலாம்னு இருக்கேன்'' என்றான்.

''எல்லோருமாய்ச் சேர்ந்து போகலாம்'' என்றாள் சந்தனா.

''வேண்டாம். நீங்கள் வெளியேவருவது நல்லதில்லை.''

''பரவாயில்லை. எங்களுக்கு ஒன்றும் ஆகாது மஹீ!''

''அதில்லை சந்தனா! அந்த அலிகான் நாம்ப எங்கே போகிறோம் என்று கூட தெரிந்துக்கொண்டு வந்து தாக்கத் தொடங்கிவிட்டால்...அவன் சாதாரண ஆள் இல்லைன்னு தோணுது. எதற்கும் நீங்கள் வீட்டை விட்டு வெளியே வராமலிருந்தால் நல்லது''.

''நிஜந்தான். இந்தத் தடவை மகரிஷி மட்டுமே போய்விட்டு வந்தால் நன்றாயிருக்கும்'' என்றான் ரவியும் அவள் அதற்குமேல் வாதாடவில்லை. மகரிஷி பத்து மணிக்கெல்லாம் காரில் புறப்பட்டான் மலைச்சேரிக்கு.

ஃ ஃ ஃ ஃ

சுமார் மூன்றுமணி நேரம் பயணம் செய்த பிறகு அவன் சேரிக்கருகில் வந்துச் சேர்ந்தான். காரை தொலைவிலேயே நிறுத்தி வைத்துவிட்டு சுமார் அரை மணி நேரம் நடந்த பிறகு தான் சேரிக்குள் வர முடிந்தது.

ஒருவாறு ராமராஜீ தொரை என்பவனைக் கண்டுபிடித்து அவனிடம் விஷயத்தைச் சொன்னபிறகு ராமராஜீ ''கண் குருடானவங்களுக்குப் பார்வையை வரவழைப்பது முடியாத காரியம். அசாத்தியம்'' என்றுச் சொல்லிவிட்டான்.

''ஆனால், பிறவிக் குருடர்களுக்குக்கூட நீங்கள் பார்வையை வரவழைத்திருப்பதாய் கேள்விப்பட்டேன். என் சிநேகிதன் மாடியிலிருந்து கீழே விழுந்து மூளையில் அடிப்பட்டுக் கண்களை இழந்தவன்'' என்றான் மகரிஷி.

ராமராஜீ மறுத்துத் தலையசைத்துவிட்டு—''லாபமில்லை தொரை. உங்க இங்கிலீஷ் மருந்துங்களால்தான்



குணம் பண்ணிக்கணும்'' என்றுச் சொல்லிவிட்டு அதற்கு மேல் பேச எதுவுமில்லை என்பது போல எழுந்துவிட்டான்.

மகரிஷி கெஞ்சுவது போல—''ராமராஜீ, தயவுசெய்து நான் சொல்வதைக் கேளு. நான் எவ்வளவோ நம்பிக்கையோடு வந்தேன். அங்கே என் நண்பனும் அவன் மனைவியும் ரொம்ப ஆசையாய் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாங்க. எப்படியாவது நீதான் குணமாக்கணும். எவ்வளவு பணம் ஆனாலும் பரவாயில்லை'' என்றான்.

''உங்கள் பணம் எங்களுக்கு எதுக்குப் பிரயோசனப் படப்போறது தொரை? அதற்கில்லை, கண்பார்வையை வரவழைப்பது ரொம்ப கஷ்டம்.''

''ரொம்ப கஷ்டம் என்று சொல்கிறாய் என்றால் அது அசாத்தியம் இல்லை என்றுதானே அர்த்தம்?'' என்றான் மகரிஷி.

இந்த வாதனையால் பிடிப்பட்டுப் போனாற்போல ஆன ராமராஜீ சரேலென்று நிமிர்ந்தான். அவன் முகத்தில் கோபம் தென்பட்டது. ''ஆம், அசாத்தியம் இல்லை. எங்களுக்கு எதுவுமே அசாத்தியம் இல்லைதான். ஆனால் அதற்குத் தேவையான மருந்துகளைச் சம்பாதிக்கணும் என்றால் நாங்கள் உயிருக்குத் துணியணும். அந்த மருந்து கிடைக்காது. கிடைப்பதே இல்லை கூட. நான் அந்த வைத்தியத்தை விட்டுப் பத்து வருஷமாயிடுத்து. ஒரு முறை இப்படித்தான் அந்த மருந்துக்காக புறப்பட்டு, நான் என் தம்பியை இழந்துட்டேன். லாபமில்லை தொரை போயிட்டு வாங்க.''

மகரிஷி எழுந்து நின்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவது போல—''ராமராஜீ, உனக்கு வேண்டுமானால் என் உயிரையும் தரேன் உன்னோடு கூட நானும் வரேன். எப்படியாவது அந்த மருந்தைச்

சம்பாதித்துக் கொள்வோம்'' என்றான். ராமராஜீ கைகளை விடுவித்துக் கொண்டு—''லாபமில்லை தொரை. என்னை விட்டுவிடுங்க''—என்று இனி அதற்குமேல் பேச அவகாசம் தராமல் அங்கிருந்து உள்ளே போய்விட்டான்.

மகரிஷி வெகுநேரம் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போல தோன்றிற்று. அவனுக்கு தாங்க முடியாதச் சோர்வு வந்து சேர்ந்தது. கால்கள் தளர அங்கிருந்து திரும்பினான்.

அவன் அவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் கேட்டது அந்த கத்தல் சப்தம். அது, ஒரு பெண்ணின் அலறல் என்றுணர்ந்து அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

சுற்றிலும் அடர்ந்த நாணல் புதர்கள். பெரிய பெரிய மரங்களுக்கிடையே சூழ்ந்துக் கொண்டிருந்தது அவ்விடம். கத்தல் சப்தம் திரும்பவும் கேட்கவே, அவன் அக்கத்தல் வெளிவந்த இடத்தை நோக்கி ஓடினான். தொலைவிலிருந்து ஒரு காட்டுவாசிப் பெண் வேகமாய் ஓடிவந்தது தென்பட்டது;

அவள் அவனை கவனிக்காமல், யாரோ துரத்திக் கொண்டு வந்தாற்போல பயத்தோடு கத்திக்கொண்டே ஓடிவந்து அவன் மேல் மோதிக்கொண்டாள். ''என்ன வாச்சு?'' என்று கேட்டான் அவன்.

அவள் சட்டென்று அவனுக்குப் பின்னால் வந்து, தான் ஓடிவந்த திசையைச் சுட்டிக் காட்டினாள்.

மரங்களுக்கு இடையேயிருந்து துரத்தி வந்துகொண்டிருந்தது ஒரு கரடி.

அங்கே ஒன்றிற்கு இரண்டு பேராய் தென்படவே அது , தன்னையறியாமல் நின்று, உறுமினாற்போல



பார்த்துக்கொண்டே, மெல்ல ஒவ்வொரு அடியாய் அவர்களை நோக்கி எடுத்து வைக்கத் தொடங்கிற்று.

அதை எப்படி எதிர்த்து நிற்பது என்று புரியாமல் ஏதாவது கழி, கட்டை தென்படுகிறதா என்று பார்த்தான் அவன். அவ்விடமெல்லாம் காய்ந்த புல்லைத்தவிர வேறெதுவுமே தென்படவில்லை.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் அவனுக்குப் பின்னால் நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தாள்.

கரடி பாய எண்ணியிருந்தால் பத்தடி தூரத்திலிருந்து பாய்ந்து எதிரியின் உயிரைக்கொன்று விட்டிருக்கும்.

அவ்விருவரும் ஆடாமல் நின்றுக் கொண்டிருந்ததைப் பார்த்து அதற்கு தைரியம் அதிகரித்தது. திடீரென்று அவர்கள் மீது பாயப் போயிற்று.

அவன் சட்டென்று அவளை மரத்திற்குப் பின்னால் இழுத்தான்.

எதிரிக்கு திசை மாறிவிடவே அதற்குப் பிடி கிடைக்காமல் தரையில் விழுந்து, உடனே எழுந்து மரத்தை நோக்கி வந்தது.

மகரிஷி அவளைத் தனக்குப் பின்னால் இழுத்துக் கொண்டு, சட்டென்று கரடியின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அதை அசையமுடியாமல் செய்தான்;

இப்பொழுது மரத்திற்கு இந்த பக்கம் மகரிஷி...அந்த பக்கம் கரடி...

அவன் காட்டுவாசிப் பெண்ணிடம்—''என் கால் சராய் பாக்கெட்டில் நெருப்புப்பெட்டி இருக்கும், சீக்கிரமாய் எடு'' என்றான்.

அவள் சட்டென்று அவன் பாக்கெட்டில் கையை விட்டு நெருப்புப் பெட்டியை எடுத்தாள்.

"அந்தப் புல்லையெல்லாம் இங்கே போட்டு நெருப் புக்குச்சியால் தீப்பற்றவை'' என்றான் அவசரம் அவ சரமாய்.

அவள் மளமளவென்று போய், காய்ந்த சருகுகள் எல்லாவற்றையும் எடுத்து வந்து மரத்தைச் சுற்றிலும் மலையாய்ப் போட்டாள். அவன் கரடியைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தான். ஆனால் அதற்குள் அந்தக் கரடி தன் கூரிய நகங்களால் அவன் கைகளைக் கீறத் தொடங்கிற்று.

கீறிய இடத்திலிருந்து இரத்தம் கொட்டத் தொடங் கிற்று. ஆனாலும் அவன் பிடியை மட்டும் விடவில்லை. விட்டால் அது தன் உயிருக்கே ஆபத்து என்றறிவான் அவன். பற்களைக் கடித்து வலியை அடக்கிக்கொண்டே இடையிடையே அதை அழுத்தமாய் பிடித்துக்கொண்டு வந்தான். அதற்குள் அவள் நெருப்புக் குச்சியைக் கிழித்து பற்றவைத்தாள். நிமிஷத்தில் காய்ந்த புற்கள் பற்றிக் கொண்டு அவ்விடமெல்லாம் ஒளியைச் சிந்திற்று.

நெருப்பைப் பார்த்தால் கரடிக்கு பயம்.

தன்னைச் சுற்றிலும் பரவியிருந்த நெருப்பைத் பார்த்து அது பெரிதாய் கத்திக்கொண்டே அவன் கைகளை பலமாய் உதறிக் கொண்டு தாவியது.

அடுத்த நிமிஷம் திரும்பி காட்டிற்குள் ஓடிப்போய் விட்டது.

ஆழ்ந்த பெருமூச்சு விட்ட மகரிஷி அந்தப் பெண்ணி டம் வந்தான். அப்பொழுதுதான் கவனித்தாள் அவள். அவன் கைகளில் வடிந்து கொண்டிருந்த ரத்தத்தை. "ஐயோ'' என்று மளமளவென்று போய் ஏதேதோ இலை களைக் கொண்டு வந்து, காயங்களின் மீது அந்தச் சாற்றைப் பிழிந்தாள்.

வலியைத் தாங்க முடியாமல் அவன் துடித்தான்.



''குறைஞ்சுடும் தொரை. ஆமாம், நீங்க இங்கே எங்கே வந்தீங்க?''

''இந்த வழியாய் போய்க்கொண்டிருந்தவன் உன் கத்தலைக் கேட்டுவிட்டு வந்தேன்.''

நீங்க மட்டும் வராமலிருந்திருந்தால் இன்னைக்கு அந்தக் கரடியின் பிடியில் சிக்கியிருப்பேன்'' — என்று நன்றியோடு கைகளைக் கூப்பினாள். ''பரவாயில்லை. அதற்கென்ன? நீ தனியாய் போக முடியுமா?''

''காட்டிலேயே பிறந்து வளர்ந்தவள். எனக்கெந்தப் பயமும் இல்லை தொரை. என்னால் போக முடியும்''— என்று இன்னொரு முறை வணங்கிவிட்டு அவள் போய் விட்டாள்.

மகரிஷி காருக்கருகில் வந்து ஸ்டார்ட் பண்ணி திரும்பி உதகைக்குப் புறப்பட்டான்.

## 23

சந்தனாவின் முகம் வாடிவிட்டது. மகரிஷிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தான். ரவிதேஜாவின் முகம் கூட களையிழந்திருந்தது.

எல்லோரைக் காட்டிலும் முதலில் தேறிக்கொண்டவன் அவன் தான். ''மருந்து இருக்கிறது, ஆனால் அதைச் சம்

பாதித்துக் கொள்வது கஷ்டம் என்கிறாயா நான்சென்ஸ்!? மொதல்ல இவங்களுக்கு என்ன மருந்து—என்றே தெரிஞ் சிருக்காது. அப்படிச் சொன்னால் மதிப்பு இருக்காதுன்னு இந்த விதமாய் பொய்ச் சொல்லியிருப்பாங்க! ஆனாலும் நான் அப்பவே நினைத்தேன். கண்பார்வையை வர வழைக்கிற மருந்து அந்த, காட்டுவாசிங்களுக்கு எப்படித் தெரிஞ்சிருக்கும்னு!'' என்றான் கோபமாய்.

மகரிஷி அதற்கும் பதில் சொல்லவில்லை. அதற்குள் குற்ற நெஞ்சால் அவன் மனம் குறுகுறுத்தது. வீண் ஆசைகளைக் கற்பித்துக் கடைசியில் இந்தவிதமாய் செய்து விட்டதற்கு. ''போகட்டும் விடு மஹி! நீ மட்டும் என்ன செய்வாய்? முயற்சி பண்ணினாய. அது பலிக்கவில்லை'' என்றாள் சந்தனா தேற்றுவதுபோல. மகரிஷி அங் கிருந்து எழுந்து தன் அவுட் ஹவுசிற்கு வந்துவிட்டான்.

அன்றிரவு அவன் சாப்பிட்டு விட்டுப் படுக்கையில் சாய்ந்தான். சுமார் பதினோறு மணியளவில் வெளியே சந்தடி கேட்டது. கதவைத்தட்டிய சப்தம் கேட்டது கதவைத் திறந்தான்.

வெளியே ராமராஜீ நின்றுகொண்டிருந்தான். மகரிஷி ஆச்சரியமடைந்து விட்டான். ''வா ராமராஜீ''... என்றான் உள்ளே வரச்சொல்லி வழிவிட்டு, ராமராஜீ உள்ளே வரவில்லை. ''தொரை'' என்றான். அவன் குரல் மெல்லியதாக கேட்டது.

''எங்க பேட்டையைச் சேர்ந்தப் பொண்ணை கரடி யின் பிடியிலிருந்து காப்பாற்றினீங்களாமே?''

''அந்தப் பொண்ணு உங்க பேட்டையைச் சேர்ந்ததா? எனக்குத் தெரியாது'' என்றான் மகரிஷி.

''நாளைக்காலையில் எங்க பேட்டைக்கு வா தொரை! நாம்ப புறப்படலாம்''.



மகரிஷி ஒன்றும் புரியாமல் ''எங்கே?'' என்று கேட் டான். ''மலைகளிலும் முடுக்குகளிலும் தேடி எங் கிருந்தாலும் சரி அந்த மூலிகையைக் கொண்டு வரலாம்'' என்றான் ராமராஜீ உறுதியாய்.

''ஆனால்...'' என்று மகரிஷி ஏதோ சொல்லப் போனான்.

அவன் வார்த்தைகளை இடையிலேயே தடுத்துவிட்டு ராமராஜீ தொடர்ந்தான்.

''இங்கிருந்து காத தூரம் போனால் ஒரு பெரிய காடு வரும் அங்கே 'நாக கோனை' என்ற ஒரு சின்னக் குளம் இருக்கிறது. அங்குள்ள தாழம்புதர்களோடு சேர்ந்து இந்த மூலிகைகளும் வளரும். அங்கே போறது உயிருக்கே ஆபத்து. அங்கெல்லாம் விஷப் பூச்சிங்க சுற்றிக் கொண்டிருக்கும். அதெல்லாம் தாண்டி தாழம்புதரில் இருக்கும் அந்த மூலிகையைக் கொண்டுவரணும். கிரகணத் தன்னைக்கு அதை அரைத்து ரத்தப்பிஞ்சரி சாற்றோடு கலந்து நிலாவெளிச்சத்தில் வைத்தால், அந்த மூலிகை மருந்தும் சாரும் அமிர்தமாய் மாறும். அதை அதற்கு மறுநாள் காலையில் சூரியோதயம் ஆனதுமே கண்ணில் விடணும்.''

''அப்படிப்பட்ட இடத்திற்குப் போவது ஆபத்து என்று சொன்னாயே!

''ஆமாம் தொரை! ஆபத்துதான்! பத்து வருஷத் துக்கு முன்னாடி நானும் என் தம்பியும் போயிருந்தபோது என் தம்பியை ஒரு விஷப்பூச்சி கடிச்சிடுத்து. அவன் அங்கேயே நுரைக் கக்கிக்கொண்டு செத்துட்டான. அப் படிப்பட்ட ஆபத்துகளைச் சந்திக்தபடி புதரின் உள்ளாரப் போய் அந்த மூலிகைகளைச் சம்பாதித்துக் கொள்ளணும். நடக்காத காரியந்தான்...ஆனாலும் சரி நாம்ப போகலாம் தொரை...''

மகரிஷி வாயடைத்துப் போய் அப்படியே நின்றுக் கொண்டிருந்தான். அந்தச் சூழ்நிலையை ஊகித்துப் பார்த்துக்கொண்டாலே அவன் உடம்பு சிலிர்த்தது. ஆனால் அவன் மௌனத்தை ராமராஜீ வேறுவிதமாய் புரிந்துக் கொண்டான். அவன் குரலில் உறுதி தொனிக்க திட்டமாய் சொன்னான்.

"ஆமாம் தொரை! நீ எங்க பேட்டைக்கு வந்து கேட்டபோது நான் இந்த வைத்தியம் பண்ணமுடியாது இப்ப நிறுத்திக்கொண்டு விட்டேன்னு தான் சொன்னேன். உயிருக்கே ஆபத்தான அந்த மூலிகைகளுக்காக எதற்காகப் போகணும்? நீ எனக்கு யாரு? எதற்காகப் போவது? யாருக்காகப் போவது? என்று எதிர்க் கேள்விகளைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் நீ இன்றைக்கு எங்கள் பேட்டையில் ஒரு பெண்ணைக் காப்பாற்றினாய். அவள் உனக்கு என்னவாகணும் என்று காப்பாற்றினாய்? யாருக்காக உன் கைகளை ரத்தமாக்கிக்கொண்டாய்? யாருக்காக உயிரையும் பொருட்படுத்தாமல் துணிந்தாய்? அதுதான் இன்றைக்கு என் கண்களைத் திறக்கச் செய்து விட்டது தொரை. யாரோ சிநேகிதனுக்காக நீ உன் உயிரையும் பொருட்படுத்தாமல் அந்த மூலிகைகளுக்காக வருவதாய் சொல்லும்போது, நான் மட்டும் ஏன் அந்த சாகாயத்தைப் பண்ணக்கூடாது? என் தந்தை எனக்கு அந்த மூலிகை வைத்தியத்தைச் சொல்லித் தந்த போது அவருக்கு மட்டும் இந்த ஆபத்துகளைப்பற்றி தெரியாதா? ஏன் சொல்லித்தந்தார்? அடுத்தவங்களைக் காப்பாற்றணும்னு. அடுத்தவங்களைக் காப்பாற்றுவதில் உயிரே போனாலும் நஷ்டம் என்ன? என்று நீயே நிரூபித்துவிட்டாய் இல்லையா தொரை? உனக்காக நான் இந்தக் காரியத்தைப் பண்றேன். உயிரே போனாலும் சரி. உனக்காக இந்தக் காரியத்தைப் பண்ணித்தரேன். நாளைக்காலையிலேயே எங்கள் பேட்டைக்கு வா தொரை



அங்கிருந்து புறப்படலாம்'' என்று சொல்லி விட்டு மகரிஷி மறுப்பேச்சுப் பேச இடந்தராமல் இருட்டில் மறைந்துவிட்டான்.

மகரிஷி அவன் போன திசையையே பார்த்தபடி வெகுநேரம் உட்கார்ந்திருந்தான்.

காட்டுவாசி ராமராஜீ தன்னிடம் சொன்ன விவரங்களையெல்லாம் முற்றிலுமாய் அந்தத் தம்பதியருக்குச் சொல்லாமல் சுருக்கமாய் சொன்னான் மகரிஷி...'' நானும் அந்தக் காட்டுவாசி ராமராஜீவும் சேர்ந்து மூலிகைகளைக் கொண்டு வருவதற்காக நாளைக்கே புறப்படுகிறோம். ஒரு வாரத்தில் வந்துவிடுவேன். உங்களுக்குத் துணையாய் இருப்பதற்கு சலமய்யன் வேறு ஆளைப்பேசி வைத்திருக்கிறான்''

ரவிதேஜாவைவின் முகம் மலர்ந்தது அதுவரை அதெல்லாம் பேத்தல் என்றுச் சொல்லிக்கொண்டிருந்தவன், திரும்பி மகரிஷி மூலிகைகளுக்காகப் போகப் போவதாய்ச் சொன்னதுமே— ''இதென்ன? அதெல்லாம் ரொம்ப ஆபத்தான விஷயம் என்று அந்தக்காட்டுவாசி சொன்னதாய்ச் சொன்னாயே?'' என்று கேட்டான். கரடியிடமிருந்து தான் ஒரு பெண்ணைக் காப்பாற்றியது தான் ராமராஜீன் மனதை மாற்றியது, நேற்றிரவு அவன் தன்னிடம் வந்தது இதொன்றையும் சொல்லாமல்— ''அவன் எதற்காகவோ நமக்கு உதவி செய்றேன்னு சொன்னான். அவங்க பேட்டைக்கு வந்தால் அங்கிருந்து சேர்ந்து போகலாம் என்றும் சொன்னான். நான் புறப்படுகிறேன். என்று அங்கிருந்து அவுட் ஹசுக்கு வந்து விட்டான். சந்தனாவின் கண்களில் பளிச்சிட்ட ஒளி அவன் மனதை நெகிழ்த்திவிட்டது.

பையில் துணிகளைத் திணித்துக் கொண்டு ஒரு கடிதம் எழுதினான்...

''டியர் சந்தனா...''

பல நாட்கள் மனப் போராட்டத்தின் விளைவுதான் இக்கடிதம். தயவு செய்து இக்கடிதத்தைப் படி.

நான் போவது ஏறக்குறைய மரணத்தின் தலைவாசலைப் போன்ற இடத்திற்கு. எதிர்ப்பாராத சம்பவங்கள் நேர்ந்து அவ்விடத்திலேயே நான் உயிரை விடநேர்ந்தால் போவதற்கு முன்னால் ஒரே ஒரு உண்மையை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது.

.........

நாம் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் உன் குறும்புகள்...'' அவன் எழுதிமுடித்தான். கடிதத்தை உறையில் வைத்து ஒட்டினான்.

போவதற்கு முன்னால் அதை சந்தனாவிடம் தந்து அவன் திரும்பி வராமல் போனால், அவளை அக்கடிதத்தைப் படிக்கசொல்ல வேண்டும் என்பது அவன் ஆசை. அவன் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு கெஸ்ட் ஹவுசிற்கு வரப் போனவன் திரும்பவும் நின்றுவிட்டான்.

எதற்காக அவளுக்கு இக்கடிதத்தைத் தருவது? தன் காதல் விஷயத்தை அவளுக்கு ஏன் சொல்ல வேண்டும்!

அந்த விஷயத்தைச் சொன்னால் அத்தனை விஷயத்தையும் செல்ல வேண்டும் அவள் கணவன் தன் மனைவியை காதலித்த விஷயம்—ரவிதேஜாவைத் தான் கொல்ல எண்ணிய விஷயம்— அத்தனையும் சொல்ல வேண்டும். ஆனால் இக்கடிதத்தில் அதொன்றும் இல்லை. தன் தப்புக்களை மறைத்துக் கேவலம் நல்லதை மட்டும் சொல்வது சிறந்ததா? தன்னுள் இருக்கும் அரக்கனை வெளியே வரவிடாமல் கேவலம் காதலனை மட்டும் அவளுக்குக் காட்டுவது அநியாயம் அல்லவா?



அதுமட்டுமில்லை, அவள் கணவனைத் தான் கொல்ல முயன்றதைச் சொன்னால் அந்தக் கணவன் எப்படிப் பட்டவன் என்பதையும் கூடச் சொல்ல வேண்டும். அது மிகக் கொடுமையானது.

இப்படி இருவேறுபட்ட யோசனைகளால் அவன் அக்கவரைத் தன் பாக்கெட்டிலேயே வைத்துக்கொண்டு பையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

அவன் வாசலைத் தாண்டிக்கொண்டிருந்தபொழுது அவுட்ஹவுசை நோக்கி சந்தனா வந்துக் கொண்டிருந்ததைக் கண்டான். தொலைவில் மலைகளுக்கிடையே அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனைப் போல இருந்தாள் அவள். பொன்னிறத்தில் இருந்த அவள் உடம்பில் சூரிய வெளிச்சம் சாய்மானமாய் விழுந்து கொண்டிருந்தது. அக்கிரணங்கள் அவளைச் சுற்றிலும் ஒரு ஒளி வட்டத்தைச் சிந்திக் கொண்டிருந்தாற் போல இருந்தது.

ஒரு புது அழகைக் காண நேரிட்டாற்போல அவன் அவளையே பார்த்தபடி அப்படியே நின்று கொண்டிருந்தான். அவள் கிட்டே வந்து நன்றி நிரம்பிய குரலில்—''எனக்காக இவ்வளவு சிரமத்தை மேற்கொள்கிற உனக்கு என்னால் என்ன கைம்மாறு செய்ய முடியும் மஹீ?'' என்றாள்.

அவன் முறுவலோடு—''என்ன தருவாய்?'' என்றான், ''எனக்கு மட்டும் மகன் பிறந்தால் உன் பெயரையே வைக்கிறேன் மஹீ! இதைவிட எவ்வளவு பெரிய பரிசு தந்தாலும் உனக்கு குறைவுதான் ஆகும்.''

அவன் நெகிழ்ந்து விட்டான்.

**கண்கள் கசிய ..மனம் கண்ணாடியாகிப்...அதில் அவள் பிரதிபிம்பமாகி...**

அவன் போயிட்டு வரேன் என்றான். அவள் ''சரி'' என்று நகர்ந்து வழிவிட்டாள். அவன் வெளியே நடந்தான்.

செய்த தப்பைத் திருத்திக் கொள்ள முயன்று ஒரு பயங்கரமான மரணத்தின் குகைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம் என்பதை அந்தச் சமயத்தில் அவன் உணர்ந்திருக்கவில்லை.

## 24

உதகையிலிருந்து மலைக்குப் போவதற்கு ஒரு தனியார் பஸ் இருந்தது. அது பேட்டைக்குப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் நின்றுவிடும்.

மகரிஷி பஸ் ஸ்டாண்டில் போய் நின்றுக்கொண்டான். மரநிழல்கள் குளுமையைத் தந்தன. ஜனக்கூட்டம் அதிகமாய் இல்லை.

தொலைவில் இரண்டு மூன்று மலை ஜாதியினர் தரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் மணிமாலைகளும் தேன் சீசாக்களும் இருந்தன. விற்றது போக மீதியை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகிறார்கள் போலும் என்றெண்ணிக் கொண்டான்.

அவன் மரத்தில் சாய்ந்தபடி மௌனமாய் பஸ்ஸிற்காகக் காத்திருந்த பொழுது, ஒரு கார் வந்து அவனுக்கு முன்னால் நின்றது.



அதிலிருந்து முன்கதவைத் திறந்து கொண்டு சந்தனா இறங்கினாள். அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஆச்சரியத்தை ஆனந்தம் விழுங்கிவிட்டது.

எதிர்பாராத விருந்தாளியாய் அவள் அங்கே வந்தது பிரம்மையைப் போல தோன்றவே, கண்களை அகல விரித்துக்கொண்டு ஆச்சரியத்தோடு பார்த்தான்—

சந்தனாவேதான்.

அவன் மளமளவென்று காருக்கருகில் போய்... ''என்ன சந்தனா! எதையாவது மறந்து பேய் விட்டேனா?'' என்று கேட்டான்.

''இல்லை. நீ போனபிறகு நான் எவ்வளவு முட்டாளாய் நடந்து கொண்டுவிட்டேன் என்று புரிந்தது. அவ்வளவு தூரம் நீ போகிறாயே என்ற திகிலில் குறைந்த பட்சம் அது வரைக்கும் கொண்டுபோய் விட்டுவிட்டு வரணும் என்ற யோசனை கூட வராமல் போயிடுத்து. அதனால்தான் தாங்க முடியாதவளாய் வந்துவிட்டேன். அவரையும் கூட வரச்சொன்னேன். ஆனால் தலைவலியாய் இருப்பதாய் சொன்னார். வா, காரில் ஏறிக்கொள். காரில் அந்தப் பேட்டை வரைக்கும் கொண்டுபோய் விடுகிறேன்'' என்றாள்

முதல் முதலாய் அவள் குரலிலிருந்து தன்பால் தென்பட்ட பரிவிற்கு அவன் மனம் நெகிழ்ச்சியடைந்து விட்டது.

வேண்டாம் என்று கூட சொல்லாமல் போய் அவளோடு காரில் ஏறி உட்கார்ந்துகொண்டான். கார் புறப்பட்டது.

அவள் மௌனமாய் ஓட்டிக்கொண்டிருக்கையில் அவன் இடையிடையே திரும்பித் திரும்பி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். சூரிய அம்மூக்கு அவள் உறுதியை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. கார் சிறு பள்ளத்தில் விழுந்து விழுந்து ஏறும் பொழுதெல்லாம் அவள் காதணிகள் மிக அழகாய் ஆடிக்கொண்டிருந்தன. காற்றில் பறந்த முன் கேசங்கள் மேலும் அழகூட்டிக் கொண்டிருந்தன.

நிசப்தத்தைச் சிதறடித்தபடி அவள்—''ஏதாவது பேசு மஹி'' என்றாள். அவன் சட்டென்று யோசனையிலிருந்து மீண்டு—

''என்ன?'' என்றான்.

''எந்த லோகத்தில் சார் இருக்கீங்க நீங்க?''

''ஏதோ யோசனையில் ஆழ்ந்து போய் உட்கார்ந்து விட்டால் எப்படி?'' என்றாள்.

''சாரி''

கார் மலைப்பாதையைத் தாண்டி காட்டுப் பிரதேசத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

''நான் ஒன்று கேட்கிறேன், உண்மையைச் சொல்லுவாயா?'' என்றாள் அவள்.

''கேள் சந்தனா, உன்னிடம் பொய் கூட சொல்லுவேனா?''

அதற்குள் அவள் கேட்டாள். மஹி! நீ இவ்வளவு ரிஸ்க் எதற்காக எடுத்துக் கொள்கிறாய்?''

அவன் பதில் பேசவில்லை.



''சொல்லு மஷி! எதுக்காக இவ்வளவு தியாகம் பண்ணுகிறாய்?'' அவள் குரல் லேசாய் தழுதழுத்தது. அப்படிக் கேட்டபொழுது அவள் கண்களில் தன்னையறியாமல் கண்ணீர்த் திரை மின்னி மாயமாயிற்று.

''இதில் தியாகம் என்ன இருக்கு சந்தனா? சிநேகிதியின் கணவருக்குக் கண் பார்வையை வரவழைக்க வேண்டும் என்றெண்ணுவது எப்படி தியாகம் ஆகும்?''

''எண்ணுவதற்கும் செயல்படுவதற்கும் ஒரு வரம்பு உண்டு.

நீ போவது எவ்வளவு பயங்கரமான இடம் என்று எனக்குத்தெரியும். அங்கெல்லாம் கால் நடையாய் அலைந்தும், பாம்புகளுக்கிடையே மூலிகைகளைத் தேடியும்... சொல்லு மஷி! ஏன் போக விரும்புகிறாய்,

''இல்லை சந்தனா, நீ நினைப்பது போல அவ்வளவு கஷ்டமானதொன்றும் இல்லை.''

எனக்குத் தெரியும், அது எவ்வளவு கஷ்டமானதென்று. இப்பவும் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. நன்றாய் யோசித்துக்கொள். அந்தக் காட்டுவாசிங்களுக்கே எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணம்தந்து அவங்களையே போகச் சொல்வோம்.''

மகரிஷி சிரிப்பதற்கு முயன்றான். ''நீ பலே ஆள் தான்! என்னை ஒரு கோழையாய் முடிவு கட்டுகிறாய் நீ! அப்படிப்பட்ட திகில் ஒன்றையும் வைத்துக்கொள்ளாதே சந்தனா நான் ஷேமமாய் போய்விட்டு லாபமாய்த் திரும்புவேன்.''

''என்னவோ மகரிஷி, என் மனது தீங்கை எடை போடுகிறது. என் கணவருக்குப் பார்வை திரும்புமா என்ற ஆசை ஒருபுறம் இருக்க, ஒரு உயிர்த்தோழன்

எனக்காகக் கஷ்டப்படுவது என் மனதைப் பிசைந்தெடுக்கிறது. ஒரு விஷயத்தைச் சொல்லு இதையெல்லாம் என் மேல் இரக்கத்தோடு செய்யவில்லை? நான் எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்வேனோ என்னவோ இரக்கத்தை மட்டும் என்னால் பொருத்துக் கொள்ள முடியாது.''

அதற்குள் அவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். கார் காட்டுவாசிகளின் பேட்டைக்குச் சொல்லும் மண் சாலைக்கருகில் வந்து சேர்ந்தது. அவன் காரைவிட்டிறங்கி ஜேபியிலிருந்து கவரை எடுத்தான், அதுவரை அந்தக்கவரை அவளிடம் தருவதற்கு அவன் அடைந்த தயக்கமெல்லாம் இப்பொழுது அவனிடம் இல்லை. தான் அவளை எவ்வளவு காதலித்தோம் என்று. தான் மரணமடைந்த பிறகாவது அவளுக்குத் தெரியவேண்டும்.— என்ற ஆசை மட்டுமே மேலோங்கியிருந்தது இப்போது. அந்தக் கவரை அவளிடம் தந்து கொண்டே--'' எனக்கு ஒரு வாக்குறுதி தருவாயா சந்தனா?'' என்றான். அவள் ஆச்சரியத்தோடு அவன் கையிலிருந்த கவரைப் பார்த்து, "இதென்ன?'' என்றாள்.

''அடுத்த சந்திரகிரகணத்தன்றைக்குள் நான் திரும்பி வந்தால் சரி-- அப்படி வராத பட்சத்தில் அப்பொழுது திறந்து இக்கவரில் இருப்பதை படி. அதற்குள் மட்டும் எந்தச் சூழ்நிலையிலும் இதைப் பிரிக்காதே. நான் திரும்பி வந்து விட்டால் அதை அப்படியே என்னிடம் திருப்பித் தந்துவிட வேண்டும் என்றான்.

அவள் வியப்போடு--'' இதென்ன? என்ன இருக்கு இந்தக்கவரில்?'' என்று கேட்டாள்.

''வேறெந்தக் கேள்வியும் வேண்டாம். நான் சொன் புரிந்ததுதானே?''

அவள் கவரை வாங்கிக் கொண்டு— ''சரி. ஆனால் நீ திரும்பி வரவேண்டும் என்று நான் தெய்வத்தைப் பிரார்த்தனைப் செய்து கொண்டிருப்பேன்.'' என்றாள்.



அவன் கடைசி முறையாய் அவளைப் பார்த்துக் கொள்வது போல, ஒரு முறை கண்ணார அவளைப் பார்த்து விட்டு, திரும்பி மண் சாலை வழியாய் நடந்து காட்டிற்குள் மறைந்து போனான்.

அவன் கண்மறைவாகும்வரை அவள் அப்படியே உட்கார்ந்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு காரை ஸ்டார்ட் செய்து திரும்பிப் போகத் தொடங்கினாள்.

## 25

அவர்கள் அக்காட்டிற்குள் நுழைந்து சுமார் ஏழு மணி நேரமாகியிருந்தது. பெப்ட்டல்காட்டை நோக்கிப் பிரயாணத்தைத் தொடர்ந்து... அந்தக் காட்டிற்குள் நுழைந்தார்கள்.

மகரிஷியோடு ராமராஜு மட்டுமேயில்லை இன்னொரு காட்டுவாசி இளைஞனும் புறப்பட்டான். மூவரும் அந்த இருண்ட காட்டில் ஓய்வில்லாமல் பலமணி நேரங்கள் பயணம் செய்தபிறகு, அசதி வந்து சேரவே... ஒரு மரத்தடியில் நின்றார்கள்.

மகரிஷி தன்னோடு கொண்டுவந்திருந்த வாட்டர் பாட்டிலிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்தக் குடித்தான். தான் கொண்டு வந்த பிரெட் பாக்கெடடுகள் இரண்டை அவர்களுக்குத் தந்துவிட்டு ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டு மரத்தில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

இன்னும் எவ்வளவு தூரம் பிரயாணம் செயணும்.?

''அம்மோவ்... இன்னும் ரெம்ப தூரம் நடககணும் தொரை. கால்வாசி தூரம் கூட இன்னும் வந்தபாடில்லை. என்ன தொரை, கால் வலிக்குதா?''

''இல்லை, சும்மா தெரிஞ்சுக்கலாம்னு தான் கேட்டேன் என்றான் அவன்.

பிரெட்டைத் தின்றுவிட்டுத் தண்ணீரைக் குடித்ததும் காலியாண வாட்டர் பாட்டிலைக் கூட வந்த கிராமவாசி இளைஞனிடம் தந்து- ''பீமா! கிட்டத்தில் எங்கேயாவ்து தண்ணீர் இருந்தால் கொண்டுவா என்றான் ராமராஜு.

பீமன் அதை வாங்கிக் கொண்டு போனான். அவன் போனபிறகு ராமராஜு மகரிஷியைப் பார்த்து—''சாதுப் பையன்! நேற்றுவரை என் கையில் வளர்ந்தவன். பேச வராவிட்டாலும், முத்துப் போன்ற இளைஞன் தம்பி'' என்றான்.

''அட! அவனுக்குப் பேச வராதா? காலையிலிருந்து ஒரு வார்த்தைகூட பேசாமல் நடந்து வந்து கொண்டிருந்ததைப் பார்த்து, அவன் சுபாவமே அப்படித்தான் போலிருக்கிறது என்றெண்ணினேன்'' என்றான் மகரிஷி. அந்த இளைஞனின் அழகிய முகம் நினைவிற்கு வந்து மனமெல்லாம் இரக்கத்தால் நிரம்பி வழிந்தது அதற்குள் தண்ணீருக்காகப் போன பீமன் வந்து விடவே, ''இனி நாம் புறப்படலாமா?'' என்று கேட்டான் ராமராஜீ. மகரிஷி தலையாட்டினான். மூவரும் நடந்தார்கள். அந்த ஆளரவமில்லாத காட்டில்......ஜனநடமாட்டத்திற்கு வெகு தொலைவில்...ஜந்துக்களுக்கு நடுவே...மரணத்தின் நுழைவாயிலில்...அமிர்தத்தைத் தேடுவதற்காக!

ஃ ஃ ஃ



மூன்று நாட்களில் நாகசோனை என்ற குளத்திற்கு வந்து சேர்ந்தார்கள். கொண்டு வந்திருந்த பிரெட்டுகள், பிஸ்கெட்டுகள் எல்லாம் எப்பொழுதோ தீர்ந்து விட்டன. வழியில் எங்கேயாவது ஏதாவது காய்கள் தென்பட்டால் பீமன் போய் பறித்துக்கொண்டு வருவான். அதையே தின்றுவிட்டு, தண்ணீரைக் குடித்து விட்டு, மூவரும் திரும்பவும் நடக்கத் தொடங்குவார்கள்.

மூன்றாவது நாள் மாலைக்கெல்லாம் அவர்கள் அந்த நாகசோனைக் குளத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள்

''இருட்டும் சமயமாகி விட்டது. காலையில் போவது நல்லது. அதுவரை அந்த மரத்தடியில் படுத்துக் கொள்ளலாம்''—என்றான் ராமராஜ். மகரிஷிக்குக்கூட அதுதான் சரியாய்ப்பட்டது. அவன் உடலளவில் மிகவும் தளர்ந்து போயிருந்தான். பையில் எஞ்சியிருந்த நான்கு காய்களைத் தின்று, தண்ணீரைக் குடித்துவிட்டு· மரத்தடியில் படுத்தான் அவன். ராமராஜுவும், பீபனும் அவனுக்கு இரு பக்கத்திலும் மான்தோலை விரித்துக் கொண்டு படுத்தார்கள்.

கொஞ்சநேரத்தில் அவனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்துவிடவே அவன் கண்கள் மூடிக் கொண்டன. மரங்களின் சந்துகளின் வழியாய் நிலா வெளிச்சம், அவ்ன் படுத்துக் கொண்டிருந்த இடமெல்லாம் வந்து பரவி இருளை விரட்டியடித்துக் கொண்டிருந்தது.

மகரிஷி உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். பீமன் மட்டும் தூக்கம் வராமல் எழுந்து உட்கார்ந்துகொண்டான் ராமராஜ் எப்பொழுதோ உறக்கத்தில் ஆழ்ந்துபோய் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்.

தாழம்பூ வாசனை மயக்கத்தைத் தருவதுபோல வீசிக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் மகரிஷி சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். கழுத்திற்கருகில் ஏதோ சுருக்கென்று குத்தினாற் போலிருக்கவே, கையால் கழுத்தைத் தடவிக்கொண்டதையும் பார்த்து—'என்னவாச்சு?' என்று சைகைபண்ணிக் கேட்டான் பீமன்.

"என்னவோ......கழுத்தில் ஏதோ குத்தினாற்போல இருந்தது'' என்றான் மகரிஷி.

சந்தேகத்துடன் பீமனின் கண்கள் மகரிஷியைச் சுற்றிலும் தேடிப்பார்த்து, ஓரிடத்தில் சட்டென்று நிலைத்துப்போய் அகன்றன.

இருட்டில் பளபளவென்று மின்னிக்கொண்டே வேகமாய் ஊர்ந்து போய்க் கொண்டிருந்த சர்ப்பத்தைப் பார்த்ததுமே சட்டென்று மகரிஷியிடம் நெருங்கி வந்து கழுத்தைப் பார்த்தான்.

பற்கள் இறங்கியிருந்த அடையாளம்.

அவ்வளவுதான்...பேச்சு வராது என்ற விஷயத்தைக் கூட மறந்துப்போய் தன்னையறியாமல் கத்தப்போனான்.

அவன் தொண்டையிலிருந்து எந்தச் சப்தமும் வெளி வரவில்லை. கலக்கத்துடன் ராமராஜீவை எழுப்பினான். ''என்னடா?'' எழுந்துக்கொண்டே கேட்டான் ராமராஜ். பீமன் பரபரப்புடன் ஏதோ சைகை பண்ணிச் சொன்னான். இதெல்லாம் மகரிஷிக்கு ஒன்றும் புரியவில்லை. பீமன் எதற்காக இவ்வளவு கலக்கமடைகிறான் என்று தெரியாமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

பீமனின் சைகைகள் புரிந்த உடனேயே ராமராஜ் மளமளவென்று எழுந்திருந்து கழுத்திற்கருகில் காலரைத் தூக்கிப் பார்த்தான். அவ்வளவுதான்...அவன் கண்கள் அகன்றன.



மளமளவென்று எழுந்திருந்து தன்னோடு கொண்டு வந்திருந்த நார்ப்பையிலிருந்து ஏதோ மூலிகையொன்றை எடுத்து அதன் சாற்றைப் பற்கள் இறங்கியிருந்த அவ்விடத்தில் பிழிந்தான்.

''என்னவாச்சு ராமராஜ்?'' அதுவரை அவ்விருவரின் நடவடிக்கைகளையும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த மகரிஷி கேட்டான்.

''ஒண்ணுமில்லை தொரை. ஏதோ சின்ன விஷப் பூச்சியைப் போன்றது எப்படியிருக்கு தொரை?'' அவன் முகத்தோற்றத்தை, கூர்ந்து பார்த்துக் கொண்டே கேட்டான் ராமராஜ்.

''ஏதோ கொஞ்சம் மயக்கமாய் இருக்கு, அவ்வளவு தான்.''

இன்றிரவு தூங்காதீங்க. காவல் காக்கணும். லேசாய் கண்ணை அசந்தாலும் விஷப்பூச்சிங்க உடம்பு முழுவதும் ஊர்ந்து விடும்.''—என்றுச் சொல்லிவிட்டு மகரிஷியைக் கொஞ்சம் கிட்டத்தில் உட்காரவைத்துக் கொண்டான்.

''பீமா, கொஞ்சம் தண்ணீர் கொடுடா.''

பீமன் தண்ணீர் பாட்டிலை எடுத்துத்தந்தான்.

''இதால முகத்தைக் கழுவிக்குங்க. மயக்கம் போய் விடும்'' என்று அந்தப் பாட்டிலைத் தந்தான் ராமராஜ். அந்த தண்ணீரால் முகத்தைக் கழுவிக்கொண்டு துவாலையால் துடைத்துக் கொண்டே—'ராமராஜ், எனக்கு ஒரு உதவி பண்ணுவாயா?'' என்று கேட்டான்.

''சொல்லுங்க தொரை''

''ஒன்னுமில்லை, இங்கே எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அந்த மருந்தை என் சிநேகிதியின் கணவருக்குக் கொண்டுபோய் கொடுக்க முடியுமா உன்னால்?''

''அப்படிப் பேசாதீங்க தொரை. உங்களுக்கு ஒன்றும் ஆகாது. எங்க உயிரைத் தந்தாவது உங்களை ஷேமமாய் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்க்கிற பொறுப்பு என்னோடது. இந்த மாதிரி யோசனையெல்லாம் வெச்சுக்காதீங்க, தைரியமாய் இருங்க.''

விடியும்வரை மூவரும் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். மகரிஷியிடம் எந்த மாறுதலும் இல்லாததால்—''மருந்து நன்றாய் வேலை செய்திருக்கு தொரை'' என்றான்.

ஆறுமணியளவில் அங்கிருந்து பயணமானார்கள். முதலில் சிறிய காடு. அதைத் தாண்டிய பிறகு அடர்ந்து பரவிய தாழம்புதர்கள். கொஞ்சம் சாய்வானமாய்இருந்த அந்த நாகக்குளம் தொடங்கிற்று. தாழம்புதர்கள் இருந்த அப்பகுதியில் வேறெந்தச் செடிகளும் தென்படவில்லை.

மூவரும் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொண்டே ஏற்றத்தில் இருந்த அம்மலையின்மீது ஏறத் தொடங்கினார்கள். மகரிஷிக்கு இரு பக்கங்களிலும் ராமராஜுவும் பீமனும் காவல் காத்துக்கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பீமன் கையில் கழியொன்றை ஜாக்கிரதையாய் பிடித்துக் கொண்டிருந்தான். எந்தச் சமயத்தில் எந்தப் பாம்பு தாக்குமோ என்பதுபோல பீமனின் பார்வை கழுகுப்பார்வையாய் நோட்டமிட்டுக் கொண்டிருந்தன.

''புஸ்'' என்ற சப்தம். மகரிஷி எம்பி இரண்டடிகள் தாண்டிக் குதித்தான். ஆபத்து தப்பிற்று மயிரிழையில். கோதுமை நிறத்தில் இருந்த சர்ப்பம் ஒன்று வழியில் குறுக்கே படமெடுத்து சீறிக் கொண்டிருந்தது. அவன் உடம்பு சிலிர்த்தது. அது வழியில் குறுக்கே நின்று கொண்டு அவர்களை நகரவிடவில்லை.



பீமனைப் பொருள்பொதியப் பார்த்தான் ராமராஜு. அடுத்த நிமிஷம் பீமன் கையிலிருந்த கழி பாம்பின் தலையை நோக்கி ஓங்கி அடித்தது. அப்படியே இரண்டு நிமிஷங்கள் கழியால் நசுக்கிக் கொண்டே இருந்தான். கொஞ்ச நேரம் வாலை அப்படியும்இப்படியுமாய் அடித்துக் கொண்டு, பிறகு சலனம் அடங்கிப் போயிற்று பாம்பு.

மகரிஷியின் நெற்றியில் வியர்த்தெடுத்தது. மயிரிழையில் எவ்வளவு பெரிய ஆபத்து தப்பிற்று என்று நினைத்துப் பார்த்தபொழுது மயிர் சிலிர்த்தது அவனுக்கு.

நடக்கவேண்டிய ஆபத்து முன்பே நடந்து விட்டது என்றும், விஷம் நிமிஷத்திற்கு நிமிஷம் அவன் உடம்பில் பரவிக்கொண்டிருக்கிறது என்றும் தெரியாத அவன் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

வெயில் அதிகமாகிக் கொண்டே போயிற்று. உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்து போகத் தொடங்கிற்று. அத்துடன் அங்கும் இங்கும் அடர்ந்து பரவியிருந்த தாழம்புதர்கள் கடையாய் நடப்பதற்குத் தடையாகக் குறுக்காய் இருந்தன.

பீமன் அவைகளில் மூலிகைகளைத் தேடிக்கொண்டே தன் கோடாரியால் இலைகளை நறுக்கித் தள்ளிக் கொண்டே நடப்பதற்கு வழி ஏற்படுத்தித் தந்தான். மகரிஷிக்கு சஞ்சீவினி மூலிகைக்காகத் தேடிய அனுமனை பற்றி ஞாபகம் வந்தது. வாயு புத்திரனாய் இருந்தால் ஒரேயடியாய் மலையையே தூக்கிக்கொண்டு வந்து விட்டார். இவ்விடத்து முயற்சி கூட அதே போன்றுதான். ஆனால் நாம் மட்டும் ஒவ்வொரு செடியையும் தேடிப் பார்க்க வேண்டியதே.''

செருப்புக்கள் அறுந்துவிட்டன. உடம்பெல்லாம் சோர்வு. சருமம் கருத்து. உதடுகள் நலிந்து போயின.

அவனும் ஒரு காட்டுவாசியைப் போலவே இருந்தான். பற்களைக் கடித்துக் கொண்டு அரும்பாடுபட்டு அவர்களோடு சேர்ந்து நடந்து கொண்டிருந்தான். நடந்து கொண்டிருந்த ராமராஜீ சட்டென்று நின்று விட்டான்.

கொஞ்ச தூரத்தில் சின்ன செடி. வெளிர் மஞ்சள் நிறத்தில் நிலத்திற்க்கு அரை அங்குலம் உயரத்தில் இருந்தது அது.

''அதுதான், அதோ அந்தச் செடிதான்!'' பெரிதாய் கத்திவிட்டான் ராமராஜீஜு குனிந்து பார்த்துக்கொண்டே. பீமன் சட்டென்று அதைப் பிடுங்க முயன்றான். அதை கவனித்து அவன் தோளைத்தட்டி நிறுத்தி விட்டான் ராமராஜு.

''அது இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்.. ஜாக்கிறதையாய் பிடுங்கணும். அப்படி அவசரப்பட்டால் உயிருக்கே ஆபத்து அந்தக் கழியை இப்படிக் கொடு'' என்று அவன் கையிலிருந்த கழியை வாங்கிக்கொண்டு புதருக்குள் சந்தடி செய்தான்.

அவ்வளவுதான்! அந்தப் புதருக்குள்ளிருந்து நாலைந்து பாம்புக் குட்டிகள் மிக வேகமாய் வெளியே ஓட்டம் பிடித்தன.

'தொரை!...ஜாக்கிரதை''—எச்சரித்துக் கொண்டே ராமராஜ் எம்பி பக்கத்தில் குதித்தான் பீமன் கால்களுக்கிடையே போயிற்று ஒரு பாம்புக் குட்டி. அந்தப் புதரிலிருந்த விஷப்பூச்சிகள் எல்லாம் வெளியே போய் விட்டன. இனி அச்செடியைப் பிடுங்கலாம் என்றெண்ணி முன் நோக்கி நகர்ந்த ராமராஜு திடீரென்று பின்னுக்குக் குதித்துத் தரையோடு மல்லாந்து விழுந்தான்.

மகரிஷி ஆச்சரியத்தோடு அந்தப் பக்கமாய் பார்த்தான் எதிரே தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் படமெடுத்தாடியபடி கருகருவென்று மின்னிக்கொண்டே தென்பட்டது கிருஷ்ண சர்ப்பம் ஒன்று. ராமராஜு அசைந்தால் அது கடித்துவிடத் தயாராய் இருந்தது. ராமராஜுவின் பாதம் சரியாய் அதற்கு ஓரடி தூரத்தில் இருந்தது. எந்த நிமிஷத்திலும் அது கடித்து விடலாம். பயமென்றால் என்னவென்று தெரியாத பீமன் கூட சிலையாய் நின்று போய் கண்கள் அகல விரிய அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். மகரிஷி அதற்கு வலது பக்கத்தில் மூன்றடி தூரத்தில் இருந்தான். அவன் பாதத்தை ஓரங்குலம் நகர்த்தினாலும் அது தாக்கக் கூடும்.

நேரம் ஈட்டியாய் குத்திக்கொண்டிருந்தது. ராமராஜு இனி தான் செத்தோம் என்றே எண்ணிக் கொண்டான். கிருஷ்ண சர்ப்பம் துடித்தால் அவனுக்குத் தெரிந்து எந்த மூலிகையும் கிடையாது. நிமிஷத்தில் உயிர்ப் போய் விடும்.''

வருத்தத்துடன் கண்களை மூடிக்கொண்டான் ராமராஜீ. அப்பொழுது தான் அந்தச்சம்பவம் நிகழ்ந்தது. எங்கிருந்துதான் வேகமாய் பறந்து வந்ததோ தெரியாது ஒரு கழுகு விர்ரென்று பறந்துவந்து, எவ்வளவு வேகமாய் வந்ததோ...அதே அளவிற்கு வேகத்துடன் பறந்து போய் விட்டது.

எங்கும் நிசப்தம்! புயல் வரப்போகிறது என்றெண்ணியிருந்தது வராமல் அடங்கிப்போய் விட்டாற்போல பீமனின் கண்களில் மெல்லமெல்ல நிம்மதி தென்படத் தொடங்கிற்று. கண்களைத் திறந்த ராமராஜுக்கு நடந்தது என்னவென்று புரியவில்லை அங்கே சர்ப்பத்தைக் காணவில்லை. பொருள் பொதியப் பார்த்துக்கொண்டே எழுந்திருந்தான்.

பீமன் சந்தோஷத்துடன் ராமராஜுவின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்ததை சைகை பண்ணிச்

சொன்னான். ராமராஜுவின் முகத்தில் போன களை திரும்பி வந்தாற் போலாயிற்று. நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டே இன்னும் ஏதாவது பாம்பு எஞ்சியிருக்குமோ என்று கட்டையால் புதரை ஜாக்கிரதையாய் கலைத்துப் பார்த்தான். எதுவும் தென்படவில்லை

மெதுவாய்க் குனிந்து அச்சின்னச் செடியைப் பிடுங்கினான்.

''கிடைச்சுடுத்து தொரை. இனி நாம் போய் விடலாம். இங்கே இருந்தால் எந்தச் சமயத்தில் என்னவாகுமோ?'' என்றான் ராமராஜ்.

''இதைத்தவிர இன்னும் ஏதோ விஷப்பூண்டு கூட வேணும் என்று சொன்னாயே ராமராஜ்?'' என்றான் மகரிஷி.

''ஆமாம் தொரை. ரத்த பிஞ்சேரியின் சாறு வேணும் அது நம்ம பேட்டையில் எந்த மூலை முடுக்கிலாவது கிடைத்துவிடும்.''

''அப்படீன்னால் இனி தாமதம் எதற்கு? போகலாம் வா'' என்று நகர்ந்தான் மகரிஷி. மூவரும் ஜாக்கிரதை. யாய் பார்த்துக் கொண்டே வரும்போது சீர்படுத்திக் கொண்டிருந்த வழியே கீழே இறங்கத் தொடங்கினார்கள். அதற்குள் பிற்பகலாகி விட்டது. வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. வந்த காரியம் முடிவடைந்து விட்டதால் சந்தோஷமாய் இருந்தார்கள் எல்லோரும். அதனால் கொஞ்சம் சாவதானமாய் இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஏறக்குறைய கீழே வந்து சேரவிருந்த பொழுது அங்கே...

ஓரிடத்தில் பீமன் திடீரென்று நின்றுவிட்டான். அவன் பார்வை கத்தியைப் போலக் கூர்மையாய் ஓரிடத்தில் நிலைத்துப்போனதைப் பார்த்து விட்டு, இருவரும் அந்த பக்கமாய்த் திரும்பினார்கள். தாழம்புதருக்கு



முன்னால் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது ஒரு சர்ப்பம். அதன் உடம்பெல்லாம் செதில் செதிலாக இருந்தது. பார்க்க அசிங்கமாய்த் தென்பட்டது. அது மனிதனைக் கடித்துவிட்டால் உயிர் போய்விடாது. ஆனால் மனிதனின் உடம்பு கூட கொஞ்ச நாட்களில் அதே போல மாறிப்போய், தோல்கள் செதில் செதிலாக உதிர்ந்துப் போய்க் கொண்டேயிருக்கும்.

அந்தப் பாம்பைப் பார்த்து விட்டு அலட்சியமாய்— ''ஆங்...அது நம்மை ஒண்ணும் பண்ணாது. படுத்துக்கிட்டு இருக்கு'' என்று பீமனின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து நகரப்போனான் ராமராஜ். பீமன் நகரவில்லை. எங்கேயோ பார்த்த ஞாபகம்.

சட்டென்று அப்படிப்பட்டப் பாம்பை எங்கே பார்த்தேன் என்று நினைவுக்கு வந்துவிட்டவனாய் ராமராஜ்வை நோக்கித் திரும்பி சைகைப் பண்ணி ஏதோ சொன்னான். ராமராஜுவுக்கு முதலில் புரியவில்லை.

''புரியும்படியாய் சொல்லு, எனக்கொண்ணும் புரியவில்லை'' என்றான் ராமராஜ்.

பீமன் மகரிஷியின் காலரை ஒதுக்கிக் கழுத்து பாகத்தைக் காட்டி அங்கே கடித்தது இதே பாம்புதான் என்பது போல சைகை காட்டினான் அவ்வளவுதான்!

ராமராஜ்விடம் ஒரு வினாடி சலனம் ஒடுங்கிவிட்டது! பீமன் சொன்னது புரிந்ததுமே ராமராஜ்வின் மூளை மரத்துப் போய்விட்டது. மகரிஷி கூட ஆச்சரியத்தோடு அந்தப் பாம்பைப் பார்த்தான். தன் கழுத்தில் கடித்தது அவ்வளவு பயங்கரமான பாம்பு என்றெண்ணியதுமே தன்னையறியாமல் அவன் உடம்பு சிலிர்த்தது.

அது கடித்தால் ஏற்படும் விளைவைப் பற்றித் தெரிந்திருந்தால் இன்னும் எப்படி நடுங்கிப் போயிருப்பானோ?

நடக்கப் போகும் விளைவைப் பற்றித் தெரிந்த ஒரே ஒரு ஆள் ராமராஜ். தற்சமயம் அவன் மூளையெல்லாம் சூனியமாய் மாறிப் போயிருந்தது.

# 26

சோபாவில் கணவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த சந்தனா கேட்டாள்—

''நான் ஒன்று கேட்பேன். நிஜம் சொல்லுவீங்களா?''

''என்ன, கேள் சந்தனா?''

''இந்த போட்டோவில் இருக்கிற பெண் யார்?''

அப்படிக் கேட்டுவிட்டாளே தவிர...ஆயிரம் வெடி குண்டுகளை எதிர்த்து நிற்க வேண்டியிருக்குமோ என்ற பயம் தோன்றிற்று அவளுக்கு.

''எ...எந்த போட்டோ?'' அவன் புரியாமல் கேட்டான்.

''உங்கள் பர்சில் கிடைத்தது.''

அவன் ஒரு நிமிஷம் மௌனமாகி விட்டான். உணர்ச்சியில்லாமல் தென்பட்ட அவன் கண்களுக்குப் பின்னால் எவ்வளவு காட்சிகள் சினிமா ரீல்களைப் போல சுழன்று கொண்டிருந்தன என்று ஊகிக்க முடியாத அவள், அவன் மௌனமாய் இருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்பவும் கேட்டாள்.



''சொல்லுங்கள், யார் இந்தப் பெண்?'' என்று.

''சந்தனா! அதெல்லாம் என் வாழ்க்கையில் நடந்த ஒரு வேதனையான கதை. இப்ப அதெல்லாம் எதுக்கு? சமயம் வரும்போது நானே உனக்குச் சொல்லுவேன்'' என்றான் அவன். 'வேதனையான கதை' என்றதுமே 'நிறைவேறாத காதல்' என்ற சந்தேகம் அவளுள் ஏற்பட்டது. திறந்திருந்தாலும் - மூடிக்கொண்டிருப்பது போல எந்த உணர்ச்சியும் இல்லாத அவன் கண்களுக்குள் எதையோ தேடிக்கொண்டே—''இப்பவே சொல்லணும்'' என்றாள் பிடிவாதமாய்.

அவள் குரலில் தென்பட்ட உறுதிக்கு அவன் பீதியடைந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்—''சரி, உன்னிஷ்டம். என்றாவது ஒரு நாள் உன்னிடம் சொல்லவேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்த விஷயந்தான் இது''— என்று சொல்லிவிட்டு சொல்லத் தொடங்கினான்.

''நான் ஐ.பி.எஸ் ட்ரெயினிங்கில் இருந்தபொழுது ஒரு நாள் ஒரு கிழவனை ஆக்ஸிடெண்ட்டிலிருந்து காப்பாற்றினேன். அவர் நன்றியோடு என்னை அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அவர் பெண் ஸ்ரீ வாணி தன் தந்தையைக் காப்பாற்றியதற்காக என்னை மிகவும் பாராட்டி விட்டு 'அண்ணன்' என்று சொல்லி, என் கையில் 'ராக்கி' கட்டினாள். அதிலிருந்து அவளை என் தங்கை என்றே எண்ணிக் கொண்டிருந்தேன்.

என் ட்ரெயினிங் முடிவடைந்ததும் அந்தப் பெண் திருமணமாகிப் போய் விட்டதாய்த் தெரிந்தது. விலாசத்தைத் தேடிக்கொண்டு போனேன். வெகு நாட்களுக்கப்புற

மாய் சந்தித்துக் கொண்டதால் சுதந்திரமாய் பேசிக் கொண்டிருந்தபொழுது, அவள் கணவன் வந்து தப்பாய்ப் புரிந்து கொண்டு, நான் எவ்வளவு சொன்ன போதிலும் காதில் போட்டுக் கொள்ளாமல் என் கண் முன்னாடியே அவளைக் கொன்று போட்டுவிட்டுத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டான்.

அதற்கு பிறகு அவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்ததுன்னு வை, அப்படிச் செத்துப் போன என் தங்கையின் போட்டோவை வைத்துக் கொண்டு அவ்வப் பொழுது அவளை ஞாபகப் படுத்திக் கொண்டு வருந்து வேன்.

அது தப்பு என்கிறாயா?'' சொல்லிவிட்டு அவள் கை மீது தன் கையை வைத்து—'' சொல்லு. நான் செய்தது தப்பாயிருந்தால் அந்த போட்டோவை இப்பவே கிழித்துத் தூள் தூளாக்கி எறிந்து விடுகிறேன்'' என்றான்,

அவன் சொல்லி முடித்ததுமே அவள் மனம் உருகிப் போய் கண்களிலிருந்து துக்கக் கண்ணீர் பொலபொல வென்று உதிரத் தொடங்கிற்று.

அவன் கையை மார்போடமுத்திக் கொண்டே— ''என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள்.

''இதில் மன்னிக்க என்ன இருக்கு? அது சகஜம், கணவனின் மணிபர்ஸில் ஒரு பெண்ணின் போட்டோ தென்பட்டால் யாருமே எப்படி எடுத்துக் கொள்வாங் களோ அப்படியே தான் நீயும் செய்தாய்.

இன்னும் நான் அதிர்ஷ்டக்காரன் என்றே சொல்ல லாம். சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வாழ்நாளெல்லாம் அந்த ஒரு ஆதாரத்தை வைத்துக் கொண்டு உலுக்கி உலுக்கி எடுத்துக் கொண்டிருப்பவங்க நிறைய பேரை நான் பார்த்திருக்கிறேன்.



உன்னைப் போன்ற கனிந்த இதயம் கொண்ட ஒருத்தி எனக்கு மனைவியாய் வாய்த்தது என் அதிர்ஷ்டம்.''

ஏற்கனவே இளகிய மனது...அது மேலும் இளகிப் போய்...இலேசாகி விட்டது. அவளுள் சந்தோஷம் பொங்கிற்று. அவன் மார்பில் சாய்ந்தாள்.

புயலின் சீற்றம் தணிந்தாற்போலாகி விடவே அவன் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டான். அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டிருந்த அவள் மூச்சுக்காற்று உஷ்ணமாய் அவன் மார்பில் படவே... ''தேவிக்கு நல்ல மூட் வந்து விட்டது போலிருக்கு'' என்றான்.

''ச்...போங்கள்'' என்றாள் அவள் தலையை மார்பில் மேலும் புதைத்துக் கொண்டு.

''எங்கே போகணும் என்றாலும் நீ தான் கூட்டிட்டுப் போகணும்'' என்று லேசாய்ச் சிரித்தான் அவன்.

''இப்படிப் பேச வேண்டாம்னு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்!'' என்றாள் லேசான கோபத்துடன்.

''சரி, சரி இனி ஒருபோதும் சொல்லமாட்டேன்'' கன்னத்தில் போட்டுக் கொண்டான் அவன். அவன் கைகளை அழுத்தமாய்ப் பிடித்துத் தடுத்துவிட்டு—

''ஆனாலும் இந்த வருத்தம் இனி அதிக நாள் இருக் காது. இன்னும் மூன்று நாளைக்குள் மகரிஷி அந்த மருந் தைக் கொண்டு வந்து விடுவான்.''

''உங்களால் திரும்பவும் நன்றாய் பார்க்க முடியும்.'' என்றாள். அவள். அவ்வாறு சொன்னபொழுது காட்டுப் பாதையில் தனியாய் போய்க் கொண்டிருந்த மகரிஷியின் உருவந்தான் ஒரு வினாடி கண் முன் நிழலாடி மனதைப் பிசைந்தெடுத்தது.

அவளுடைய சுயநலத்திற்காக அவன் மரணத்தின் நுழைவாயிலைப் போன்ற காட்டிற்குள் போனாலும் அவளால் தடுக்க முடியாமல் போய் விட்டதே என்றெண் ணினாள்.

அவளுக்கு மகரிஷியின் நல்ல குணத்தைப் பற்றி கணவ னிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.

''நிஜமாய் மகரிஷி ரொம்ப நல்லவன் இல்லையா?''

''இப்ப அதெல்லாம் எதுக்கு?''

''அதில்லை. உங்களுக்காக அவன் எவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொள்கிறான்.''

''நிஜந்தான். ஆனால் இப்படிப்பட்ட சமயத்தில் அவனைப் பற்றி எதற்கு, சொல்லு?'' என்றான் அவன் மயக்கத்தோடு, அவள் கழுத்து வளைவில் முகத்தைப் புதைத்துக் கொண்டே.

''நல்லதைப் பாராட்டுவதற்குச் சமயம் சந்தர்ப்பம் எதற்கு?'' என்றாள் அவள். கணவன் அவனிடமுள்ள நல்ல குணத்தைப் புரிந்து கொள்ளாமல் போகிறானே என்ற வருத்தமும், புரிந்து கொள்ள வேண்டும் என்ற தவிப்பும் அவள் குரலில் தொனித்தது, தனக்குப் பிடித்த வர்களைப் பற்றித் தன்னைச் சேர்ந்தவர்கள் கூட விருப்பத் தோடு பேச வேண்டும் என்ற அப்பாவித்தனம் அவளிடமும் இருந்தது. அதனால் தான்...''அவன் கொஞ்சமும் சுயநல மில்லாமல் இந்தக் காரியத்தைச் செய்கிறான். உங்களுக் காக யோசித்துப் பார்க்கிறவங்களைப் பற்றி நீங்கள் கொஞ்சங்கூட யோசித்துப் பார்க்காமல் போவது நன்றா கவே இல்லை'' என்றாள்.

''அதெல்லாம் எனக்காக இல்லை.''

அவளுக்குப் புரியவில்லை.



''ஆமாம், அவன் அதையெல்லாம் பண்றது உனக் காக!'' என்றான் அவன்.

அவள் அதிர்ந்து போய் தொலைவிற்கு ஒதுங்கிக் கொண்டு—''என்ன சொல்றீங்க நீங்க?'' என்றாள். ''என் உத்தேசம்...சிநேகிதியின் கஷ்டத்தைக் காணச் சகிக்காமல் அவன் இந்த ரிஸ்க்கை எடுத்துக் கொண்டிருக் கிறான்னு சொன்னேன்.''

மேலே பாய வந்த புலி வாலைச் சுருட்டிக்கொண்டு பூனையைப் போல போய் விட்டாற்போலவே, தோன் றிற்று அவளுக்கு அந்த வார்த்தைகள்.

'இதையெல்லாம் உனக்காகப் பண்ணுகிறான்'—என்ற துமே அவள் அந்த வார்த்தைகளுக்கு வேறு அர்த்தம் கற்பித்துக்கொண்டு பயந்தாள்.

அவன் வேறு அர்த்தத்தை ஜோடித்துத்தான் இந்த வார்த்தைகளைச் சொன்னான் என்று தெரியாமல், அவள் நன்றியோடு அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

## 27

அந்தப் பாம்பின் செதில்களைப் பற்றி ஒன்றுமே தெரியாத மகரிஷி ஆபத்து தப்பிவிட்டது என்றெண்ணிக் கொண்டான்.

ஆனால் ராமராஜுன் கலக்கம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. ஆனால் வயது கற்றுத்

தந்திருந்த அனுபவத்தால் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

கொஞ்சநேரத்தில் தேறிக்கொண்டவன் ஒரு முடிவிற்கு வந்தவனாய் ''நீங்க ரெண்டு பேரும் இறங்கி அந்த மரத்தடியில் உட்கார்ந்துட்டிருங்க. நான் அப்புறமாய் வரேன்'' என்று சொல்லிவிட்டு அவர்கள் பதிலுக்காகக் காத்திராமல் திரும்பி புதருக்குள் மறைந்து போனான்.

போய்க்கொண்டிருந்த அவனைப்பார்த்து ஏரோகேட்கப் போன மகரிஷி, ஒருக்கால் வேறு ஏதாவது மூலிகையைத் தேடுவதற்காகத்தான் போகிறானோ என்னவோ என்றெண்ணி மௌனமாய் கீழே இறங்கத் தொடங்கினான். பீமனும் அவனைத் தொடர்ந்தே வந்து கொண்டிருந்தான். பீமனின் முகம் கூட உணர்ச்சி வசத்தில் இருந்தது.

கீழே இறங்கி மரநிழலில் கொஞ்சநேரம் இளைப்பாறிய பிறகு பசியைப்பற்றிய ஞாபகம் வந்துவிட்டது. அவன் பீமனைப்பார்த்து 'இங்கே சாப்பிடுவதற்கு ஏதாவது காய் கனிகள் கிடைக்குமா பீமா?'' என்று கேட்டான். ''பார்த்துட்டு வரேன்'' என்று சைகை காட்டிவிட்டுப் போய்விட்டான் பீமன்.

மகரிஷி தண்ணீர் பாட்டிலில் எஞ்சியிருந்ததண்ணீரைக் குடித்துவிட்டுக் கொஞ்சம் நீரை முகத்தில் தெளித்துக் கொண்டான். துவாலையால் துடைத்துக் கொண்டிருந்த போது, பீமன் மேல் துண்டில் ஏதோ காய்களை மூட்டை கட்டிக்கொண்டு திரும்பி வந்தான்.

கோதுமை நிறத்தில் வட்டமாய் எலுமிச்சம் பழத்தின் சைசில் இருந்தன அக்காய்கள். ''இதென்ன காய்?'' கேட்டான் மகரிஷி—அவசரப்பட்டுத் தின்று விட்டால் ஏதாவது தீங்கு நேரிட்டு விடப்போகிறதே என்ற சந்



தேகத்தில். ஆனால் அவனால் பேச முடியாது என்ற விஷயம் ஞாபகத்திற்கு வந்து ''சாப்பிடலாமா?'' என்று சைகை செய்து கேட்டான்.

அவன் பதிலுக்கு நாலைந்து காய்களைப் பிளந்து உள்ளேயிருந்த பருப்பை எடுத்துத் தின்றான். 'சாப்பிடலாம்'—என்று சைகை காட்டிய பிறகு எடுத்துத் தின்னத் தொடங்கினான்.

வயிறு நிரம்பியதும் தூக்கம் வந்து சூழ்ந்துக் கொண்டது அவனை. துவாலையை விரித்துப் போட்டுக் கொண்டு மரத்தடியில் தூங்கத் தொடங்கினான். பீமன் கூட மரத்தின் மீது சாய்ந்தபடி தூங்கத் தொடங்கினான். கொஞ்ச நேரத்தில் இருவரும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்

அவர்கள் திரும்பி எழுந்திருந்தபோது இருள் சூழ்ந்து கொள்ளத் தொடங்கியிருந்தது. நேரத்தைப் பார்த்துக் கொண்டான் மாலை ஆறாகியிருந்தது. ராமராஜ் இன்னும் வரவில்லை. அப்படியே உட்கார்ந்து ராம ராஜுவுக்காகக் காத்திருந்தார்கள் இருவரும்.

ஆறரை மணியளவில் வந்தான் ராமராஜ். முகமெல்லாம் சோர்ந்து தளர்ந்து போயிருந்தான அவன். வந்ததுமே தரையில் உட்கார்ந்து கொண்டு...

''தொரை! நாம் இன்றிரவு இங்கேயே இருந்துட்டு விடிஞ்சதும் போகணும்'' என்றான்.

''ஆமாம், கீழே இறங்கியபிறகு திரும்பவும் ஏன் மேலே போனாய் தனியாய்?'' கேட்டான் மகரிஷி.

''சற்று முன்னால் நாம் பிடுங்கி வந்த அதே மூலிக்கைக்காகத்தான் போனேன் தொரை.''

''ஏன்? நமக்கு அது போதாதா?''

''அது ஒரு ஆளுக்குத்தான் பத்தும். இன்னொரு ஆளுக்குக் கூட வேணும்''

''யாருக்கு?''

''உங்களுக்கு தான் தொரை!''

அதைக் கேட்டதுமே திடுக்கிட்டுப் போனான் மகரிஷி ''எனக்கு என்னவாயிடுத்து? என் கண்கள் நன்றாய்தானே இருக்கு?''

''ஆபத்து உங்க கண்ணுக்கு இல்லை. உங்க உடம்புக்கு வந்திருக்கு தொரை. ஒன்றுமே ஆக வேண்டாத ஒரு மனுஷனுக்காக உயிருக்கே துணிஞ்சு நீங்க வந்திருக்கும்போது...அதை உணராத தெய்வம் உங்களுக்கே தண்டனை கொடுத்துடுத்து தொரை'' என்றான் ராமராஜ்.

''நீ சொல்றது எதுவுமே எனக்குப் புரியலை. எனக்கு என்னவாயிடுத்து ராமராஜ்?''

ராமராஜ் ஒரு வினாடி மௌனமாய் அவன் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். சிவந்த மேனியுடன் மிக அழகாய் தென்பட்டுக் கொண்டிருக்கும். அம்முகம் பாம்பின் உடம்பைவிட மிக ஹீனமாய் மாறி விடப்போகிறதென்று நினைத்துப் பார்த்தாலே அவன் இதயத்தை முள்ளால் குத்தினாற் போலிருந்தது. என்றாவது சொல்லித்தானே தீரவேண்டும் என்றெண்ணி சொல்லத் தொடங்கினான்.

''உங்களைக் கடித்த விஷ ஜந்து சாதாரணமானது இல்லை தொரை. அது கடித்துட்டால் மனுஷனின் தோலில் அதன் தோலைப்போலவே செதில் செதில்களாய் பரவத் தொடங்கிவிடும். மனுஷனிடம் விஷம் பெருகிப் போய் விடும்.



அப்புறம் மனுஷனுக்கும் பாம்புக்கும் வித்தியாசமே இருக்காது சருமத்தில்.''

மகரிஷியின் உடம்பு சிலிர்த்தது. தன்னையறியாமல் அவன் உள்ளங்கை முகத்தைத் தடவிக்கொண்டது. ''அப்ப அதுக்கு மருந்தே கிடையாதா?'' என்று கேட்டான்.

''இருக்கு. உங்க சிநேகிதனுக்குக் கண் பார்வையை வரவழைக்கக்கூடிய இந்த மூலிகைதான் அதற்கும் விஷ முறிவு. அதன் சாற்றைப் பிழிந்து ரத்த பிஞ்சேரி சாற்றோடு கலந்து சந்திர கிரகணத்தன்னைக்கு நிலா வெளிச்சத்தில் வைக்கணும். அப்ப அதை எடுத்துத் தடவிக்கிட்டால் உங்க ரத்தத்தோடு கலந்த சாறு விஷ முறிவாகி விடும். ஆனால் தொரை ..'' என்று நிறுத்திக்கொண்டான் ஏதோ சொல்லத் தயங்கினாற்போல.

''பரவாயில்லை சொல்லு. இதைவிட பயங்கரமான உண்மைகளை இந்த இதயம் தாங்கிக்கொண்டிருக்கிறது'' என்றான் மகரிஷி. அதற்குள் அவனிடம் ஏதோ வைராக்கிய உணர்ச்சி இடம்பெறத் தொடங்கியிருந்தது.

''...இன்னொரு மூலிகை எதுவுமே கிடைக்கலை தொரை. நாலு நாளில் அந்த மருந்தை நீங்கள் குடிக்காமல் போனால் விஷமெல்லாம் உடம்பில் பரவி விடும். அப்ப எந்த மருந்தைப் போட்டாலும் வேலை செய்யாது''.

அவன் கொஞ்சம் நடுங்கிவிட்டான். எதுவும் பேச முடியாதவனாய் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தான்.

ராமராஜ் மறுபடியும் தொடர்ந்தான்—

''அதனால்தான் திரும்பவும் போனேன். இந்தப் பக்கத்தில் எங்கேயுமா கிடைக்கலை. நாளைக்குப்பொழுது

புலர்ந்ததுமே மூவரும் நாக குளத்துக்கும் அந்தப்பக்கத்தில் போய், தேடணும். அதிஷ்டம் இருந்து கிடைத்துட்டால் உங்க உடம்பு குணமாயிடும்'' என்றான்.

மகரிஷி பதில் பேசவில்லை. மௌனமாய் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு நடக்கப்போவதை நினைத்துப் பார்த்தபொழுது வருத்தம் ஏற்படவில்லை. அதற்கும் முன்பே அவன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் காட்டிலும் பெரியது ஒன்றுமில்லை என்பதுபோல அவன் முகம் உணர்ச்சியில்லாமல் இருந்தது.

“காலையில் எழுந்ததுமே மூவரும் புறப்பட்டார்கள். அன்றிரவு மூவரும் பங்கு போட்டுக் கொண்டு காவல் காத்து வந்ததால், சரியான தூக்கம் இல்லாமல், எல்லோருக்கும் களைப்பாய் இருந்தது. அதோடு மூன்று நாட்கள் என்றெண்ணிக் கொண்டிருந்த பயணம் ஐந்து நாட்கள் வரை இழுத்தடித்துவிட்டது. சரியான ஆகாரம் இல்லை. நடை அதிகமாயிருந்ததால் கால்கள் தள்ளாடின.

ஆனாலும் விடாமல் நாககுளத்திற்கு அந்தப் பக்கமாய் பயணத்தைத் தொடர்ந்தார்கள் மூவரும். முன்பக்கத்திலிருந்து பார்த்தால் சின்னதாய்த் தென்பட்ட அக்குளம் சுற்றிக் கொண்டு வந்தபோது மிக அகலமானதாய் மாறிப் போயிருந்தது. அந்தப் பக்கமாய் மலையேறத் தொடங்கினார்கள். அந்தப் பக்கத்தில் மேலும் அடர்ந்த புதர்களோடு சூழ்ந்திருந்தது. பீமன் இரண்டு தென்னம்மட்டைகளைப் பிடுங்கிச் சிறு கழிகளாக்கி மகரிஷியிடம் ஒன்றைத் தந்துவிட்டுத் தான் ஒன்றை வைத்துக்கொண்டான். அவர்களோடு கொண்டு வந்திருந்தது ராமராஜீவிடம் இருந்தது. மிக ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டே கூடியவரை கிளைகளை வெட்டும் தேவையில்லாமல் சின்ன சந்து இருந்தாலும் அதில் புகுந்து போனார்கள். கொஞ்ச தூரம். பாம்புக் குட்டிகள் கரப்பான் பூச்சிகளைப் போல வழியில் குறுக்கும் நெடுக்குமாய் போய்க் கொண்டேயிருந்தன.



ராமராஜுவும் பீமனும் ஒவ்வொரு புதரிலும் தேடிப் பார்க்கத் தொடங்கினார்கள் அந்த மூலிகையை. எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. மேலே வெயில் மண்டையை வறுத்தெடுத்தது. உடம்பெல்லாம் வியர்வையால் தெப்பமாயிற்று. அளவுக்கு மீறிய தாகம் எடுக்கத் தொடங்கிற்று. புறப்படும்பொழுது பளு எதற்காக என்றெண்ணித் தம்மோடு கொண்டு வந்திருந்த சாமான்களையெல்லாம், அவர்கள் முதல்நாள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மரத்தடியிலேயே விட்டுவிட்டு வந்திருந்தார்கள், அவற்றோடு தண்ணீர் பாட்டிலையும் அங்கேயே விட்டுவிட்டார்கள். மலையேறுவதற்கு முன்னால் குளத்திலிருந்து நீரை அள்ளிக் குடித்தார்கள்.

இருட்டும் வரை தேடிப் பார்த்தும் அவர்களுக்கு அந்த மூலிகை கிடைக்கவில்லை. இனி லாபமில்லை என்று கீழே இறங்கினார்கள். மங்கலான இருள் சூழ்ந்திருந்தது. இறங்கியதும் குளத்து நீரைக் குடித்து முகம் கழுவிக் கொண்டார்கள்.

''என்ன பண்ணலாம் தொரை?'' ராமராஜ் கேட்டான் மகரிஷியை.

“என்ன பண்ண முடியும்? திரும்பிப் போக வேண்டியதுதான். சந்திர கிரகணம் கிட்டே வந்துவிட்டது. திட்டமிட்ட சமயத்தில் நாம் பேட்டைக்குத் திரும்பிப் போய்ச் சேரணும்'' என்றான் அவன்.

'அதில்லை தொரை'"'

ராமராஜ் சொல்லவந்தது புரிந்தாற்போல—'' என்னைப் பற்றி யோசிக்காதே ராமராஜ். மொதல்ல என் சிநேகிதியின் வாழ்க்கை நன்றாய் ஆகணும்'' என்றான்.

ராமராஜ் என்ன எண்ணிக் கொண்டானோ தெரியாது. அதற்குமேல் வாதாடவில்லை. மூவரும் சேர்ந்து

அந்த நிலா வெளிச்சத்தில் பேட்டைக்குப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

அங்கங்கே அரைமணிக்கு மேல் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் நடந்து இரண்டு நாட்களில் பேட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்றிரவுதான் சந்திரகிரகணம்.

போனதுமே மகரிஷியை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு ராமராஜ் ரத்த பிஞ்சேரி விஷத்திற்காக பேட்டையைச் சார்ந்த இளைஞர்களை நான்கு குழுவாக்கி காட்டிற்கு அனுப்பி வைத்தான். அவர்கள் அன்று மாலை ஏழுமணிக்குள் அந்த விஷத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குள் ராமராஜ் நாக குளத்திலிருந்து கொண்டு வந்த மூலிகைச் சாற்றை எடுத்து ஒரு எருது கொம்பாலான பாத்திரத்தில் ஊற்றினான். அவர்கள் விஷத்தைக் கொண்டு வந்ததுமே அதையும் அந்தச் சாற்றுடன் கலந்தான். மலைக்கோவிலுக்கு முன்னாலிருந்த பலி பீடத்தின் மீது வைத்து அன்றிரவெல்லாம் காவல் காத்தான் ராமராஜ்... மலைத்தெய்வத்தைப் பூஜித்துக் கொண்டே.

விடிந்தது மகரிஷி ராமராஜுவிடம் போய் "மருந்து தயாராயிடுத்தா ராமராஜ்?" என்று கேட்டான்.

"ஆயிடுத்து தொரை."

"அப்ப தாமதம் எதற்கு, சீக்கிரமாய் போய், ரவி தேஜாவுக்குக் கண்பார்வையை வரவழைக்க முயற்சிப் பண்ணுவோம்" என்றான் மகரிஷி. ராமராஜ் ஒருவினாடி மௌனமாய் இருந்துவிட்டு, பிறகு திட்டமாய் சொன்னான் —

"இந்த மருந்தை யாருக்கும் தரப்போறதில்லை தொரை."

அதிர்ந்து விட்டான் மகரிஷி.



# 28

சந்தனா தூக்கத்தில் அப்படியும் இப்படியுமாய் புரண்டு கொண்டிருந்தாள், பக்கத்தில் கணவன் அந்த பக்கமாய் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தான். நேரத்தைப் பார்த்தான். பன்னிரண்டரை ஆகியிருந்தது. தூக்கம் வரவில்லை. அன்றிரவுதான் சந்திர கிரகணம்.

மகரிஷிக்கு அந்த மூலிகைகள் கிடைத்ததோ இல்லையோ? அந்தக் காட்டில் சரியான உணவு இல்லாமல் என்ன அவஸ்தைப் படுகிறானோ? என்று தோன்றிற்று. கடவுள் கிருபையால் ரவிதேஜாவுக்கு கண் பார்வை திரும்பி விட்டால் நல்லது...

இந்த யோசனைகளில் இருந்த அவளுக்கு அப்பொழுது தான் ஞாபகம் வந்தது. அக்கடிதத்தைப் பற்றி! சந்திர கிரகணம தாண்டிய மறுநாள், தான் வராமல் போனால் பிரித்துப் படிக்கச் சொன்னான். ஒருக்கால் வந்தால்...

படிக்காமலேயே திருப்பித் தந்துவிடச் சொல்லியிருக்கிறான். அப்படியென்றால்...அந்தக் கடிதத்தில் என்ன தான் இருக்கிறது? என்ன எழுதியிருப்பான்?

அவளுக்கு அக்கடிதத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

எழுந்து மேஜை விளக்கைப் போட்டுவிட்டு, டிராயரில் இருந்த அக்கவரை வெளியே எடுத்தாள். திறந்தாள்.

ரோஜா வண்ணக் காகிதத்தில் அழகான கையெழுத்துக்கள்.

...அவள் கண்கள் எழுத்துக்களின் மீது ஓடின.

‘‘சந்தனா...’’

சில நாட்கள் மானசிகப் போராட்டத்தின் விளைவு தான் இக்கடிதம், தயவுசெய்து படித்துப்பார். சத்தியங்கள் என்னை தகித்துக் கொண்டிருக்கின்றன. அதைத் தாங்க முடியாமல் குறைந்தபட்சம் ஒன்றையாவது உன்னோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

நான் போவது ஏறக்குறைய மரணத்தின் கடைவாயிலைப் போன்ற இடத்திற்கு. எதிர்பாராத சம்பவங்கள் நேர்ந்து அவ்விடத்திலேயே நான் உயிரை விட நேர்ந்தால் போவதற்கு முன்னால் ஒரே ஒரு உண்மையை உனக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று.

நாம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் உன் குறும்புகளையும், படிப்பில் காட்டும் சுருசுருப்பையும் பார்த்து நான் உன்னைப் போற்றத் தொடங்கினேன். ஒரு நாள் நீ காலேஜுக்கு வராவிட்டாலும் ஏதோ திகில் என்னைச் சூழ்ந்து கொண்டு விடும்.

நாளடைவில் என் மனமெல்லாம் முற்றிலும் உன் பக்கமாய் சாய்ந்து விட்டது. ஆனால் எல்லோருடனும் சரளமாய்ப் பழகும் நீ, என் கண்களில் மிதந்த காதல் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாமல் என்னையும் ஒரு நண்பனாகவே ஏற்றுக் கொண்டாய்.

நாளுக்கு நாள் உன்மீது பெருகிய கவர்ச்சியும் அன்பும் என்னைப் பைத்தியக்காரனாக்கி விட்டன. சொல்ல வேண்டும் என்று உனக்கு முன்னால் வந்தும் கூட முடியாமல் போய் விடுவேன். ஒருக்கால் என் காதலை நீ மறந்து விட்டால், அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய மனத்துணிச்சல் என்னிடம் இல்லை.



கடைசியில் உன் சிநேகம் சிநேகமாகவே எஞ்சிநின்று விட்டது. பரீட்சைகள் முடிவடைந்ததுமே உன் வழியில் நீ போய் விட்டாய். என் காதல் எனக்குள்ளேயே சமாதியாகி விட்டது. பிறகு எந்த வேலையைச் செய்தாலும் உன் நினைவேதான் வந்து கொண்டிருக்கும். அதற்குப் பிறகு உதகையில் தான் உன்னைப் பார்த்தது.

நான் மனப்பூர்வமாய்க் காதலித்த, உன் வாழ்க்கை அந்த காரத்தில் ஆழ்ந்து போவதை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. உனக்காக, உன் வாழ்க்கை சீர்திருந்துவதற்காக என் உயிரையும் தரலாம் என்று தோன்றும்.

அவகாசம் கிடைத்து விட்டது. போகிறேன். நான் திரும்பி வராவிட்டாலும், என் முயற்சி வெற்றியடைந்து ரவிதேஜாவுக்குக் கண்பார்வை திரும்பினால், அதைக் காட்டிலும் எனக்கு வேண்டியது வேறென்ன? நீயும் ரவியும் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்.

இந்த முயற்சியில் தோற்றுவிட்டால், ரவிக்குக் கண் பார்வையை மீட்க முடியாமல் போய் விட்டால், என்னை, மன்னித்துவிடு. இதைவிட உனக்கு எதுவும் எழுத முடியவில்லை என்னால்.

— விடைபெற்றுக் கொள்கிறேன்’’ —

கடிதத்தைப் படித்து முடித்ததுமே அவள் மனமெல்லாம் சலனமில்லாமல் ஆகிவிட்டது. கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் ‘‘மஹி...மஹி’’ என்றெண்ணிக் கொண்டாள். இவ்வளவு நாளாய் அவன் அன்பிற்குப் பின்னால், சிநேகம் மட்டுமே இருந்ததாய் எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் அளவில்லாத காதல் மறைந்திருந்ததாய் எண்ணியிருக்கவில்லை. அவள் மனமெல்லாம் அவன் மீது இரக்கத்தால் நிரம்பி வழிந்தது.

கேவலம் தன்னைக் காதலித்ததற்கு உயிரையும் பொருட்படுத்தாமல் துணிந்து தமக்கு உதவ வேண்டும் என்றெண்ணும் அவன் பண்பு, இமயத்தையும் விட ஓங்கி விட்டதாய் எண்ணினாள் அவள்.

தூக்கத்தில் புரண்டு படுத்துப் பக்கத்தில் தடவிப் பார்த்த ரவிதேஜாவுக்கு. மனைவியின் உடல் தட்டுப்படாமல் போகவே-- "சந்தனா" என்று கூப்பிட்டான்.

அவள் யோசனையிலிருந்து விடுபட்டு "உம்" என்று எழுந்து, அக்கடிதத்தை சூட்கேஸில் துணிகளுக்கு அடியில் மறைத்து வைத்தாள்.

அதுதான் அவள் செய்த தப்பு.

## 29

"நீ என்ன சொல்கிறாய் ராமராஜ், புரியவில்லையே!" இவ்வளவு சிரமப்பட்டு சாதித்துக் கொண்டு வந்ததை கடைசிச் சமயத்தில் கொடுக்க மாட்டேன் என்று சொன்னதால்...குழப்பமடைந்தான் அவன்.

"ஆமாம் தொரை. இதை ரவி ஐயாவுக்குத் தரப் போறதில்லை" என்றான் ராமராஜ் உறுதியாய்.

"ஏன்? எதுக்காக?" அவன் குரல் நடுங்கிற்று.

"ஏன்னா. ஒரு ஆளுக்கு உதவி பண்றத்துக்காக, உங்கள் வாழ்க்கை நாசமாகிப் போவது எனக்குப் பிடிக்கலை."?



திடீரென்று நிம்மதியடைந்தான் மகரிஷி ராமராஜ் தன் சுயநலத்திற்காக அம்மருந்தைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறான் போலும் என்றெண்ணியிருந்தான்.

"என்னைப் பற்றி யோசிக்காதே ராமராஜ், முதலில் அவனுக்குக் கண் பார்வை திரும்ப வேண்டியது முக்கியம். எனக்கு எதுக்கு. யாருமில்லாத ஒண்டிக்கட்டை நான், என்னைப் பற்றி யோசிப்பதற்கோ, வருத்தப்படுவதற்கோ கூட யாருமில்லை" விரக்தியாய்ச் சொன்னான் அவன்.

"அதற்காக நீங்கள் நாசமாகிக் கொண்டிருக்கையில் வேறு யாருக்கும் இந்த மருந்தைத் தர முடியாது என்னால். நீங்கள் நோயில் பாதிக்கப்பட்டிருக்கும்போது என்னால் எப்படிப் பார்த்துட்டிருக்க முடியும் தொரை?"

ராமராஜுவின் குரலில் பரிவு இழையோடிற்று. நேற்று வரை அவன் யாரோ! இன்றைக்குத் தன்னைப் பற்றி வருத்தப்படுகிறான். யோசிக்கிறான். மகரிஷியின் உள்ளம் நெகிழ்ந்தது. அவன் கண்கள் கசிய—"உன் அன்பிற்கு நன்றி. ஆனால் இந்த விஷயத்தில் என் முடிவை மட்டும் மாற்றிக் கொள்ள முடியாத பலவீனன் நான். ராமராஜ் என்னை மன்னித்துவிடு" என்றான்.

"தொரை! இப்படிப்பட்ட பெரிய பெரிய வார்த்தைகளையெல்லாம் பேசாதீங்க தொரை. தியாகம் பண்றதுக்குக்கூட ஒரு வரம்பு இருக்கு. நீங்கள் என்ன சொன்னாலும் சரி, இந்த மருந்தை நீங்க தான் பயன்படுத்திக்கணும்."

"இது தியாகம் இல்லை ராமராஜ்...பொறுப்பு."

"என்ன சொல்றீங்க தொரை நீங்க?"

"ஆமாம். இது, நான் போவதற்குள் கண்டிப்பாய்ச் செய்து தீர வேண்டிய காரியம். உண்மையைச் சொன்னால் நீ கூட ஒப்புக்கொள்வாய்."

''நிஜமா? என்ன தொரை, விவரமாய் சொல்லுங்க,'' ராமராஜுவின் கண்களில் ஆர்வம் தெரிந்தது. மகரிஷி பெருமூச்செறிந்துவிட்டுச் சொல்லத் தொடங்கினான்.

''சில எதிர்பாராத சூழ்நிலையால் என் சிநேகிதியின் கணவனுக்கு கண்பார்வை போனதற்கு நானே காரணமாகி விட்டேன். அப்புறந்தான் தெரிந்தது அவன் என் சிறுவயது சிநேகிதியின் கணவன் என்று. என்னால் அவள் வாழ்க்கை நாசமாகிவிட்டதே என்ற வருத்தத்தால், இரவும் பகலும் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறேன். தெய்வாதீனமாய்ச் செய்த தப்பைத் திருத்திக் கொள்கிற அவகாசம் கிடைத்துவிட்டது. இப்பக்கூட நான் என் சுயநலத்தைப் பார்த்துக்கொண்டால்... உயிரோடிருக்கும் வரை என் மனசாட்சிக்கு முன்னால் நான் குற்றவாளியாய், தலைகுனிந்துகொண்டு தான் வாழணும். அது எனக்குப் பிடிக்கவில்லை. இப்பச்சொல்லு ராமராஜ்— நான் செய்தது தப்பு என்கிறாயா?''

''சே...படிச்சவரு நீங்க, தப்பாய் யோசிப்பீங்கன்னு எப்படி எண்ணிப்பேன் தொரை? நான் சொல்றதைக் கூட கேட்டால்...'' இழுத்தான்.

''சொல்லு ராமராஜ்''.

''ஒன்றுமில்லை தொரை. நீங்கள் உயிரோடு ஷேமமாய் இருந்தால் இன்னொரு சந்திரகிரகணம் வராமல் போகாது. அப்ப அந்த ரவித்தம்பியின் கண்பார்வையை வரவழைக்கும் பொறுப்பு என்னோடது. இன்றைக்கு நீங்கள் இந்த மருந்தைப் பயன்படுத்தாவிட்டால், உங்க உடம்பெல்லாம் விஷமாய் மாறிப்போய் கொஞ்சங் கொஞ்சமாய் பாம்பின் குணங்களே வந்துவிடும் தொரை. இப்ப நீங்க இந்த மருந்தைக் குடியுங்க.''

''வேண்டாம் ராமராஜ். நான் சொல்வதைப் புரிந்து கொள். தயவுசெய்து என்னைப் பலவந்தம் செய்யாதே.



எனக்கு என் உயிரைக் காட்டிலும் அந்தக் கணவன் மனைவியர் ஷேமமாய் சுகமாய் இருப்பது தான் முக்கியம். தெரிஞ்சோ தெரியாமலோ என்னால சில தவறுகள் நடந்துவிட்டன. குறைந்தபட்சம் ஒன்றையாவது திருத்திக் கொள்ள விடு.''

''நீங்க என்ன சொன்னாலும் சரி நான் கொடுக்கப் போறதில்லை'' பிடிவாதமாய்ச் சொன்னான் ராமராஜ். மகரிஷிக்கு அவனை எப்படி இணங்க வைப்பது என்று புரியவில்லை. எது எப்படியானாலும் பரவாயில்லை என அவன் தனக்காக சிரத்தை எடுத்துக் கொள்கிறான். அதனால் அவன் மனம் கோணாதபடி பேச வேண்டும் என்றெண்ணினான் கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தவனாய், பெரு மூச்செறிந்து விட்டு—

''உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும் ராமராஜ். நான் ஒரு குற்றம் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிருக்கேன். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தப்பித்துக் கொண்டு விட்டேன். அதிகமாய்ப் போனால் இன்னும் ஓரிரு மாதங்கள் போலீசார் கண்ணில்படாமல் தப்பித்துக் கொள்ள முடியும் அவ்வளவுதான். அதற்கப்புறம் எப்படியும் பிடிப்பட்டுப் போய் விடுவேன். ஆனாலும் நானாகவே போய் சரணடைந்து விடலாம் என்றிருக்கேன். இந்த வேலை முடிந்து விட்டால் சந்தோஷமாய் போய், தூக்கு மேடையில் ஏறுவேன்.''

ராமராஜ் ஆச்சரியமடைந்துவிட்டான். மகரிஷி குற்றம் பண்ணுவதாவது! அதுவும் தூக்குமேடையில் ஏறக் கூடிய அளவிற்குக் குற்றம் செய்வதாவது! அவனால் நம்பவே முடியவில்லை. ''என்ன சொல்றீங்க தொரை நீங்க?'' என்றான்.

''நிஜந்தான் ராமராஜ். ஜெயிலில் இருந்திருந்தால் இதற்குள் தூக்குப் போட்டிருப்பாங்க. நான் எப்படியும்

நாலு நாளில் போய்ச் சேரவேண்டியவன். குறைந்த பட்சம் அந்த தம்பதிகளாவது சுகமாய் குடும்பம் நடத்தினால் போதும்.'' அதைக்கேட்ட ராமராஜ் உருகிப் போய் விட்டான். மரணத்திற்கு அவ்வளவு அண்மையில் இருந்தபோதிலும்...உடம்பெல்லாம் விஷம் பரவிக் கொண்டிருந்தபோதிலும், தளராமல் மற்றவர்களுக்காகவே யோசித்துக் கொண்டிருக்கும், அவனின் மனநிலை அந்தக் காட்டுவாசிக்கு அற்புதமாய்த் தோன்றிற்று.

குரு தட்சணைக்காக கட்டைவிரலை வெட்டித்தந்த ஏகலைவனின் அர்ப்பண உணர்ச்சி, ஏதோ அவன் கண்களில் தென்பட்டாற்போலிருக்கவே தன்னையறியாமல் கைகளைக் கூப்பினான். அதைக்காட்டிலும் அவனை எப்படிப் புகழ்வது என்று தெரியவில்லை ராமராஜுவுக்கு.

கடைசியில் பெருமூச்சு விட்டுவிட்டு—''உங்களிஷ்டம் தொரை'' என்றான்.

ஃ ஃ ஃ

மகரிஷி நடந்து கொண்டிருந்தான் என்றபெயரே யொழிய அவனுக்கு மிக அவசரமாய் இருந்தது. வரும்போது சந்தனாவிடம் தந்து விட்டு வந்த கடிதத்தை அவள் படிப்பதற்கு முன்பே திருப்பிப் பெற்றுக் கொண்டு விட வேண்டும் என்ற தவிப்பு, அவசரமாய் நடக்க வைத்தது, ராமராஜ் அவனுக்குப் பின்னால் கொஞ்சம் தொலைவில் நடந்து வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் மகரிஷிக்கு அந்த யோசனை வந்தது. 'ரவிதேஜாவுக்குத் திரும்பவும் கண் பார்வை வந்து விட்டால், தன்னைக் கண்டிப்பாய் அடையாளம் தெரிந்து கொண்டு விடுவான். தன்னை அரெஸ்ட்



பண்ணுவது...அது வேறு விஷயம். ஆனால், சந்தனா... சந்தனாவுக்கு விஷயம் தெரிந்தகென்றால்... தன் மனைவியைக் கொன்று, ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்ட ஒரு கொலையாளி என்று தெரிந்தால்...அவள் பார்வையில் தென்படும் அருவறுப்பை ஒரு வினாடி கற்பனை செய்து, ஸேசாய் நடுங்கினான்.

தன் கையில் செப்பிற்குள் இருந்த அந்த மருந்து ஒரு வினாடி சந்தனாவின் மனதில் தன் ஸ்தானத்தைக் குலைப்பதற்காக வந்த விஷமாய்த் தோன்றிற்று. தன்னையறியாமல் அவன் நடையின் வேகம் குறைந்தது.

மகரிஷிக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ராமராஜ் ''என்ன தொரை, ஏன் நின்னுட்டீங்க?'' என்று கேட்டான், மகரிஷி ஒரு வினாடி தடுமாற்றமடைந்தான். சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு—''ஒண்ணுமில்லை ராமராஜ், இன்னும் எவ்வளவு தூரம் நடக்கணும் நாம்?'' என்று பேச்சை மாற்றினான்.

''வந்துட்டோம் தொரை...அதோ...அங்கே தென்படுதே, அந்த குறுங்காட்டைத் தாண்டிட்டால் உதகை வந்துட்டாற் போலத்தான்''

மகரிஷி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. திரும்ப யோசனையில் ஆழ்ந்து போனான். ஒருக்கால் ரவிக்குக் கண்பார்வை திரும்பி, தன்னை அடையாளம் கண்டு கொண்டால்...தன்னை அரெஸ்ட் பண்ண முயன்றால்... சந்தனா கண்டிப்பாய்க் காரணம் கேட்பாள். அப்பொழுது இருவருள் யாராவது ஒருவர் பதில் சொல்லியே தீர வேண்டும். இதில் மறைமுகமாகவும் நேரிடையாகவும் ரவிக்கும் அவனுக்கும் சமபங்கு இருக்கிறது.

அதனால் ரவியால் சொல்ல முடியாது. அடையாளம் தெரிந்துகொண்டாலும் அவனால் வெளியே சொல்ல முடியாது. தானும் அப்படியே. சந்தனாவிடம் இந்த

விஷயத்தைச் சொல்லி, அவள் மனதில் தன்பாலுள்ள நல்ல அபிப்பிராயத்தைப் போக்கிக்கொள்ள முடியாது. அவனால்.

அதோடு கூட, தானே இந்த விஷயத்தை சந்தனாவிடம் சொல்லுவதால், அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கையைச் சின்னாபின்னம் செய்து விட்டவனாவான். இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்து, உயிருக்குத் துணிந்து மருந்தைக் கொண்டு வந்தது. அவ்விருவரும் பிரிந்து போவதற்காகவா? இல்லை. அவன் அந்தக் கோணத்திலிருந்து யோசித்துப் பார்த்ததும், கொஞ்சம் திருப்தியடைந்தான்.

...உதகைக்கு வந்து சேர்ந்தபொழுது மாலை மணி நான்காகியிருந்தது.

# 30

''ஏங்க!''

''என்ன சந்தனா?''

''மகரிஷி அந்த மருந்தைக் கண்டிப்பாய் கொண்டு வருவானா? நேற்றிரவே சந்திரகிரகணம் வந்து விட்டது. இன்னும் வரவில்லையென்றால் மகரிஷிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ என்னவோ?'' என்றாள் அவள்.

ரவிதேஜா பதிலளிக்கவில்லை. எந்த உணர்ச்சியுமில்லாத அவன் கண்களில் கூட, அதே உணர்வு தான் மிதந்து கொண்டிருந்தது என்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

''இங்கே இருந்தால் உன் யோசனையெல்லாம் அந்த மருந்தைப் பற்றியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும். வா. இப்படியே வெளியே கார்டனில் போய் உட்கார்ந்திருப்போம்'' என்றான்.



அவன் சொன்னதும் நிஜந்தான் என்று தோன்றிற்று அவளுக்கு. இருவரும் கார்டனில் நாற்காலிகளைப் போடச் சொல்லி உட்கார்ந்து கொண்டார்கள்.

மாலை நேரத்து வெயில், சிவந்த அவன் உடலை மேலும் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. லேசாய் மண்டியிருந்த தாடி கரும் பச்சை நிறத்தில் தென்பட்டு, அவன் அழகை மேலும் இரு மடங்காக்கிக் கொண்டிருந்தது.

சந்திரனிடம் உள்ள களங்கத்தைப் போல, அவ்வளவு அழகான முகத்தில் ஜீவனில்லாத கண்களைப் பார்த்ததும் அவளால் சாதாரணமாய் இருக்க முடியவில்லை.

மகரிஷி சீக்கிரமாய் வரவேண்டும் என்று அவள் மனதிற்குள் ஆயிரம் தெய்வங்களை வேண்டிக் கொண்டாள். ஆனாலும் மேலுக்கு கம்பீரமாய் இருந்து கொண்டு, கணவனோடு சாதாரணமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

'கிறீச்' சென்று 'கேட்' சப்தம் கேட்டது.

தன்னையறியாமல் திரும்பிப் பார்த்த சந்தனாவின் கண்கள் சட்டென்று மலர்ந்தன. கேட்டைத் திறந்து கொண்டு வந்த மகரிஷியைப் பார்த்ததுமே அவள் சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்திருந்து விடுவிடென்று அவனுக்கு எதிரே போனாள்,

''மஹீ...'' முதலில் அவன் க்ஷேமத்தை அறிந்து கொள்ள வேண்டுமா? அல்லது போன காரியம் முடிந்து மருந்து கிடைத்ததா இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? என்று ஒரு வினாடி புரியாமல் அவள் வார்த்தையை உதிர்க்க முடியாமல் அப்படியே நின்றாள்.

மகரிஷி அவளை முறுவலுடன் பார்த்துவிட்டு, ரவிதேஜாவிடம் போய் ''நான் தான் மகரிஷி'' என்றான்.

''ஓ மகரிஷி, நீயா...? என்னவாச்சு போன காரியம்?''

ரவிதேஜாவின் கேள்வி முடிவடைவதற்குள்ளாகவே சந்தனா பரபரப்புடன் ''மருந்து கிடைத்ததா?'' என்று கேட்டாள்.

அவ்விருவரிடமும் தென்பட்ட பரபரப்பைப் புரிந்து கொண்டவனாய், அவன் லேசாய் சிரித்து விட்டு, ''கொண்டு வந்திருக்கேன்'' என்றான்.

சந்தனாவுக்கு திடீரென்று நிம்மதியும் சந்தோஷமும் ஏற்பட்டது. ரவிதேஜா'வின் முகத்தில் கூட மகிழ்ச்சி தெரிந்தது.

''உனக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டோம்'' என்றான்.

''இதில் சிரமம் என்ன இருக்கு?'' என்று சொல்லிக் கொண்டே திரும்பி கேட்டிற்கருகிலேயே நின்றுவிட்ட ராமராஜுவைப் பார்த்து—'' அங்கேயே ஏன் நின்று விட்டாய? வா'' என்றான்.

சந்தனா மகரிஷியின் முகத்தைப் பார்த்து ''இதென்ன ஏன் இப்படி ஆயிட்டாய் மஹீ?'' என்று கேட்டாள்.

''எப்படி ஆயிட்டேன்? நன்றாய்த்தானே இருக்கேன்? அது சரி, எங்களை உள்ளே கூட கூப்பிடப்போற தில்லையா?'' என்று கேட்டான் சிரித்துக் கொண்டே பேச்சை மாற்றியபடி.

''சாரி, உள்ளே வா'' என்று ராமராஜுவைக் கூட கூப்பிட்டுவிட்டு, ரவிதேஜாவை உள்ளே அழைத்து வருவதற்காகப் போகத் திரும்பினாள்.

''சந்தனா, ரவிதேஜாவை உள்ளே கூட்டிட்டு வா. கண்களில் மருந்தை விடணும்'' என்றான் மகரிஷி.

''ஒரு நிமிஷம்; நீங்க போங்க, நான் கூட்டிட்டு வரேன்'' என்றான்.



மகரிஷி ராமராஜுவை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான். சந்தனா, ரவிதேஜாவை அழைத்துக் கொண்டு வந்து சோபாவில் படுக்க வைத்துக் கொண்டிருந்தபோது ''இம்மருந்துக்காக பேருதவி செய்த ராமராஜு இவர் தான்'' என்று பரிச்சயம் பண்ணினான் மகரிஷி.

ராமராஜ் தோல் பையிலிருந்து ஒரு சிமிழை எடுத்துக் கொஞ்ச நேரம் தெய்வ பிரார்த்தனையை பண்ணிவிட்டு. அதை சந்தனாவிடம் தந்தான்.

அவள் அதை வாங்கித் திரும்பி மகரிஷியிடம் தந்து— ''அவருக்குப் புனர்ஜென்மம் தரக்கூடிய நல்ல காரியத்தை நீ, உன் கையாலேயே பண்ணனும்'' என்றாள்.

''அதில்லை சந்தனா...'' அவன் ஏதோ சொல்லப் போனான்.

''ப்ளீஸ்'' என்று அவள் கண்களிலேயே வேண்டிக் கொண்டாள்.

அதற்கு மேல் வாதாடாமல் மகரிஷி அதை வாங்கி மூடியைத் திறந்தான். ரவிதேஜாவின் க்ண்கள் மேற் கூரையைப் பார்த்துத் திறந்தபடி ஜீவனில்லாமல் இருந்தன.

சந்தனா, கண் இமைக்கவே மறந்து போனாள்.

ராமராஜ் கண்களை மூடிக்கொண்டு தெய்வத்தை துதித்துக் கொண்டிருந்தான்.

மகரிஷி மெதுவாய் குனிந்து, சிமிழில் இருந்த மருந்தை ரவிதேஜாவின் கடைக்கண்ணிற்கருகில் சொட்டுச் சொட்டாய் விட்டான்.

மூவரும் ரவிதேஜாவிற்கருகில் நின்றபடி பரபரப்போடு காத்துக் கொண்டிருந்தார்கள். ரவியின் முகத்தோற் றத்தையே பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள் மூவரும்.

நிசப்தம்...மகரிஷியின் மனதில் தீங்கை எடைபோடும் படியாய் செய்தது. சந்தேகத்துடன் குனிந்து—

''தேஜா...எப்படி இருக்கு உங்களுக்கு?'' என்று கேட்டான்,

ரவிதேஜாவிடம் சலனம் இல்லை.

ரவியிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் போகவே சந்தனா, சந்தேகத்துடன் குனிந்து "ஏங்க?'' என்று கூப்பிட்டாள்.

ரவிதேஜா பதில் பேசவில்லை. சந்தனா பயந்து நடுங்கிப் போய், தோளைப் பிடித்துக் குலுக்கினாள். அவள் கைக்கு அவன் உடம்பு குளிர்ந்து கொண்டிருந்தாற் போலத் தோன்றவே—''ஏங்க, பேசுங்க. நான்...உங்கள் சந்தனா.

ஒரு தடவை கண்ணைத் திறந்து பாருங்க'' என்று உடலைக் குலுக்கியபடி பெரிதாய்க் கத்தத் தொடங்கினாள்.

அவன் உடல் பஞ்சாய், எந்தப் பக்கம் அசைத்தாலும் அந்தப் பக்கமாய் ஆடிக் கொண்டிருந்தது. அவள் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தாற் போன்ற உணர்ச்சி,

இதயம் படபடத்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

எஞ்சிய இருவர் நிலைமையும் அதே போலவேதான் இருந்தது. மகரிஷியின் மூளை மரத்துப் போயிற்று. என்ன நடந்தது என்றோ, என்ன நடக்கப் போகிறது என்றோ புரியவில்லை.



சந்தனா எல்லாம் முடிந்து விட்டது என்றே எண்ணி விட்டாள். ரவிதேஜாவின் கைகளை மார்போடமூத்திக் கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

மகரிஷி, அவள் தோளைத் தட்டிவிட்டு—'சந்தனா! கலங்காதே. சும்மாயிரு, ப்ளீஸ்! தேஜாவுக்கு ஒன்றும் ஆகலை. கொஞ்சம் ஷாக் அவ்வளவுதான், நினைவு திரும்பிவிடும், அழாதே'' என்று தேற்றத் தொடங்கினான்.

எந்த ஆறுதல், வார்த்தையாலும் அவள் துக்கத்தை அடக்க முடியவில்லை. மனதைப் பிழியும்படியாய் அழத் தொடங்கினாள்.

''சந்தனா...ப்ளீஸ்! இன்னும் கொஞ்சநேரத்தில் நினைவு திரும்பி விடும். வருத்தப்படாதே. நான் தான் இருக்கேனே?''

அந்தக் கடைசி வார்த்தைகளைக் கேட்டதுமே அவள் சரேலென்று திரும்பினாள். அவள் கண்களில் அக்னி ஜுவாலைகள் தென்பட்டன என்ன நடந்தது என்று புரிந்து கொள்வதற்குள்ளாகவே 'சுளீர்' என்ற சப்தம் அவ்வறைச் சுவர்களில் எதிரொலித்தது. அவள் கை தன்னையறியாமல் மகரிஷியின் கன்னத்தை நோக்கிப் போயிற்று

காற்றுக்கூட, என்ன நடந்தது என்று புரியாமல் ஒரு வினாடி ஸ்தம்பித்து விட்டது.

''பைத்தியம் பிடித்து விட்டதா?''

'ஆமாம் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. நானும் என் கணவரும் அத்தனைப் பேரும் பைத்தியக்காரர்கள் தான். உன் நிஜ சொரூபம் தெரியாமல் உன்னை நம்பி வந்த பைத்தியக்காரர்கள்''—என்று முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு அழத் தொடங்கினாள்.

''என்ன சந்தனா? நீ என்ன பேசுகிறாய் என்று எனக்குப் புரியவேயில்லை.''

''நிறுத்து உன் நாடகத்தை, உன்னை ..உன்னைப் பார்க்கவே அருவருப்பாய் இருக்கிறது எனக்கு.'' அருவருத்துக் கொண்டாற் போல பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''நாடகமா? மொதல்ல நீ சுய நினைவோடு தான் பேசுகிறாயா?'' குழப்பத்துடன் கேட்டான் மகரிஷி.

''ஆமாம் நீ நாடகந்தான் ஆடுகிறாய். உன்னைப் பொன்ற அயோக்கியன் கிடையாது. நம்பிக்கைத்துரோகி நீ என்னைக் காதலித்ததால் சாமார்த்தியமாய் என் கணவனைக்கொன்று விட்டு அந்த இடத்தைக்கைப்பற்றிக் கொண்டுவிட வேண்டும் என்று பார்த்துக்கொண்டிருக்கும் நயவஞ்சகன் நீ. இப்பொழுது..... இப்பொழுது என்ன வாகும்? நீ எவ்வளவு சுயநலக்காரன்!

உன்னை உன்னை சும்மா விட்டுவிடமாட்டேன். உன்னைக் கொன்று போட்டுவிடப் போகிறேன்''—ஹிஸ்டீரிக்காய் கத்திக் கொண்டே வேகமாய் எழுந்து அவன் கழுத்தைப் பிடித்துக் கொண்டாள்.

ஆச்சரியம், அவ நம்பிக்கை, குழப்பம் அடைந்த அவன் மனது, அவள் சொன்ன வார்த்தைகளால் தாங்க முடியாத துக்கத்தை அடைந்தது.

அன்பைப் பொழிந்த கண்கள்......எரிமலையைக் கக்குவது...பரிவைக் காட்டிய மனது அருவருப்பை வெளிப்படுத்துவது...ஈட்டியாய் இதயத்தைப் பிளந்தது அவன் வார்த்தை! அவளை விரும்பி...ரவியைக் கொல்வதற்காக இதையெல்லாம் பண்ணினானா அவன்?

எப்படி எடுத்துச் சொல்வது?



உண்மையில் அவர்கள் நலனைக் கருதித்தான் இதையெல்லாம் செய்தேன் என்று எப்படிச் சொல்வது? எப்படி நம்பவைப்பது? கடைசியில் தொண்டையைத் திறந்து—

''சந்தனா ..தெரிந்து நான் எந்தப் பாவமும் பண்ணலை. ஒருக்கால் உனக்கு அநியாயம் பண்ணியதாய் நீ நினைத்தால் இப்பொழுதே உன் கண் முன்னாடியே நான் உயிரை விட்டுக் குற்றமற்றவன் என்று நிரூபித்துக் கொள்கிறேன்'' என்றான் கிட்டே நெருங்கியபடி மகரிஷி.

''நீ செத்தாலும் நான் நம்பமாட்டேன்'' என்று அவனை வேகமாய்ப் பிடித்துத் தள்ளிவிட்டு, முழங்காலிட்டுச் சரிந்தாள்.

அவன் பெட்ரூமிற்குள் போய் தடாலென்று கதவைச் சாத்திக் கொண்டான். தான் எந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வளவு நாளாய் உயிரோடு இருந்தானோ அது நிறைவேறாதபோது போலீசார் போடும் தூக்கைக் காட்டிலும் தற்கொலை பண்ணிக் கொள்வதே மேல் என்று தோன்றிற்று,

அவளுக்குத் தன் மேல் ஏற்பட்ட சந்தேகம் போனால் போதும். தன் சாவிற்கு இதைக் காட்டிலும் பெறும் பேறு கிடைக்கும் என்று அவன் என்றுமே எண்ணியதில்லை.

ஃ ஃ ஃ ஃ

மகரிஷி அவ்வாறு ஆவேசத்தோடு போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டதுமே...அவ்வளவு நேரமாய் நடந்து கொண்டிருந்ததையெல்லாம் திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்த ராமராஜுவிடம் சலனம் ஏற்பட்டது.

''அம்மா ஒரு வார்த்தை சொல்றேன், நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லையென்றால்...என்றான்.

சந்தனா வெறுப்போடு பார்த்து ''நான் யார் பேச்சையும் கேட்கத் தயாராயில்லை. ஆனாலும் உனக்குக் கூட இதில் பங்கு இருக்குமே'' என்றாள்,

''நீங்க என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லிக்குங்கம்மா, ஆனால் அந்த தொரையைப் பற்றி ஒரு உண்மையைச் சொல்றேன். தயவுசெய்து இதை மட்டும் கேளுங்கம்மா'' என்றான் ராமராஜ் கெஞ்சினாற்போல,

''அதென்ன அவ்வளவு பச்சையான உண்மையோ?'' கேலியாய் கேட்டாள்.

''இந்த மருந்தைத் தேடுவதற்காக அந்தத்தொரை தன் வாழ்வையே விஷமாக்கிக்கிட்டு...'' அவன் வார்த்தையை முடிக்கவில்லை. ஆனால் ரவிதேஜாவிடம் லேசாய் சலனம் தென்படவே, நிறுத்திக்கொண்டு, கண்கள் அகல விரிய அந்தப் பக்கமாய் பார்க்கத் தொடங்கினான்.

அதைக் கவனித்து விட்டு அவளும் அவன் பக்கமாய்த் திரும்பினாள். ரவி தேஜாவின் கைகளில் லேசான அசைவு தென்பட்டது. ஒரே பாய்ச்சலாய் ஓடிப்போய் கணவனின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். அக்கை உஷ்ணமாய் இருந்தது. அவள் சந்தோஷம் தாங்க முடியாதவளாய் கணவனின் கையை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டாள். தன்னை மறந்தவளாய் கொஞ்சநேரம் அப்படியே இருந்தாள். தன் கணவன் பிழைத்து விட்டான்...தன் கணவன் ..

''அம்மா'' என்ற ராமராஜுவின் அழைப்பிற்குச் சட்டென்று நினைவு வந்தவளாய் அவனை நோக்கித் திரும்பினாள் பொருள் பொதிய ''அம்மா, அந்தத்தொரை ஏதோ தப்புத் தண்டா பண்ணிக் கொண்டு விடுவார் போலிருக்கு'' என்றான் மூடிய கதவுகளைச் சுட்டிக் காட்டியபடி.



அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது அவளுக்கு. கணநேர ஆவேசத்தில் அவள் என்னென்ன வார்த்தைகளைப் பேசிவிட்டாள்! ஒரு இதயத்தை எவ்வளவு கண்டந்துண்டமாய் வெட்டி விட்டாள்! என்ன நடக்கப் போகிறதோ என்று புரிந்ததுமே அவள் இதயம் ஒரு வினாடி நின்றுவிட்டுப் பிறகு வேகமாய்த் துடிக்கத் தொடங்கிற்று.

அவ்வளவுதான்! கணவன் கையை விட்டுவிட்டு, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாய், கதவை நோக்கி ஓடினாள்.

அவளைத் தொடர்ந்து ராமராஜுவும் ஓடினான், கதவு உள்ளே தாழிடப்பட்டிருந்தது.

அவள் பயந்து போய் கதவைத் தட்டி ''மஹீ! அவசரப்படாதே, ஐயாம் சாரீ! ஒரு முறை கதவைத் திற, ப்ளீஸ்...'' என்று உரக்கக் கத்தத் தொடங்கினாள்,

உள்ளேயிருந்து சப்தம் இல்லை,

நிமிஷத்திற்கு நிமிஷம் அவளுள் கலக்கம் அதிகமாகி வார்த்தை கூட தடுமாறிற்று, அவ்வளவுநேரமாக என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண்டிருந்த ராமராஜ் அப்பொழுது சுயநினைவிற்கு வந்தவனாய், சந்தனாவை ஒதுக்கி விட்டு, நாலைந்தடிகள் பின்னுக்குப் போய் பலமாய் மூச்சை விட்டுக் கொண்டான்,

வேகமாய் வந்து தோளால் கதவைத் தள்ளினான். கதவு சப்தமிட்டதே தவிர திறந்து கொள்ளவில்லை, இம்முறை இன்னும் கொஞ்ச தூரம் பின்னுக்குப் போய் வேகமாய் வந்து தள்ளினான். கதவு திறந்து கொள்ளும் போல் தோன்றவில்லை.

சந்தனாவுக்கு பயம்! வருத்தம், துக்கம் எல்லா உணர்ச்சிகளும் சேர்ந்து மூளையை மரத்துப்போகும் படி

யாய்ச் செய்து. வாழ்க்கையில் முதல் முதலாக தெய்வத்தை பிரார்த்தித்துக் கொண்டாள். அவள் வேதனையை அந்தத்தெய்வம் காதில் வாங்கிக் கொண்டு விட்டாற் போல இம்முறை கதவு திறந்து கொண்டது. கதவோடு கூட ராமராஜுவும் போய் தடாதென்று தரையில் விழுந்தான், தலை அதிர்ந்து நினைவு தப்பிப் போயிற்று அவனுக்கு. அவள் அவனுக்குப் பின்னாடியே அறைக்குள் ஓடிவந்தாள்,

அதற்குள் தாமதமாகி வுட்டது, அதற்கு முன்னாடியே மகரிஷி ஸ்டூலைத் தள்ளி விட்டிருந்தான், அறைக்கு நடுவே மின்விசிறியில் தொங்கிக் கொண்டிருந்தான்,

அக்காட்சியைப் பார்த்ததுமே அவளுக்குள் எரிமலை வெடித்தது, சமுத்திரம் பொங்கிற்று...''நோ...'' என்று ஒரே பாய்ச்சலாய்ப் போய் மின் விசிறியில் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள்,

பலத்தையெல்லாம் தோள்களில் வரவழைத்துக் கொண்டு அவன் உடலை மேலுக்குத் தூக்கி எழுப்பினாள்,

சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு அப்படியே அழுத்திப் பிடித்துக் கொண்டாள், நிமிஷத்திற்கு நிமிஷம் அவள் இதயம் நசிந்து போய்க் கொண்டேயிருந்தது,

இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருந்தால், அந்தப் பளுவைத் தாங்க முடியாமல் விட்டு விடப் போவது உறுதி, என்று புரிந்தது அவளுக்கு,

ஒருக்கால் அப்படி விட்டுவிட்டால் கயிறு திரும்பவும் இறுகிவிடும், அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை! தலையைச் சுற்றினாற் போல இருந்தது, தோள்களில் ரத்த ஓட்டம் நின்று போய் மரத்துப் போனாற்போல தோன்றத் தொடங்கிற்று!



உதவிக்காக ராமராஜ் இருந்த பக்கம் பார்த்தாள். அவன் நினைவுத் தப்பி விழுந்து கிடந்தான்,

''ராமராஜு...ராமராஜு'' என்று கூப்பிட்டாள். அவனிடம் சலனம் இல்லை. அவள் செய்வதறியாமல் திரும்பி அறைக்கு வெளியே பார்த்தாள்.

தொலைவில் ஹாலில் இருந்த சோபாவில் கணவன் லேசாய் அசைந்ததைப் பார்த்தாள். அவ்வளவுதான். அவள் முகத்தில் போன களை திரும்பி வந்தது. ''ஏங்க... ஏங்க—'' என்று அங்கிருந்தே உதவிக்காகக் கூப்பிட்டாள்.

ஆனால் ரவிதேஜாவுக்கு விழிப்பு வரவில்லை. அவளுக்கு திடீரென்று துக்கம் வந்து விட்டது. பெரிதாய் அழத் தொடங்கினாள்,

''மஹரி—எனக்காக உயிரைக் கொடுக்கவும் சித்தமானாய். உன் உயிரைக் காப்பாற்ற என்னால் எதுவும் பண்ண முடியவில்லையே. என்னை மன்னித்து விடு...'' என்று மனதிற்குள்ளேயே புலம்பினாள்,

அவள் துக்கம் ஒலியலைகளாய் உருப்பெற்று மரணத்தின் கடைவாசலில் இருந்த அவன் செவிகளில் பட்டதோ என்னவோ?—

காதலியின் வேதனை உருவத்தை அவன் மனக்கண்கள் உணர்ந்து கொண்டு ரத்த அணுக்களுக்கு செய்தி அனுப்பிற்றோ என்னவோ? ரத்த ஓட்டத்தின் வேகத்திற்கு இதயத் துடிப்பு திரும்பவும் அதிகரிக்கத் தொடங்கியது.

காதலியின் மார்பு, பாதங்களைக்கூட நடுங்கச் செய்தாற்போல, அவன் பாதங்களில் லேசான அசைவு அவள்

அழகை, அவன் மூளையில் செய்திகளாய் ஒலிபரப்பிக் கொண்டேயிருந்தது.

மெல்ல கண்களைத் திறந்தான். முதலில் எல்லாம் சிவப்பு, பிறகு இருண்ட கருமை, அதற்குப் பிறகு காதலியின் முகத்து வெண்மை, அவன் கண்முன் கொஞ்ச நேரம் வானவில்லாய் நிழலாடிற்று.

காதலியின் ஸ்பரிசம் அவனுக்குப் புத்துணர்ச்சியைத் தந்தது.

அரும்பாடுபட்டு கழுத்திலிருந்து கயிற்றை நீக்கிக் கொண்டு கீழே பார்த்தான். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தன்னை அருவருத்துக் கொண்ட சந்தனா இப்பொழுது புனர்ஜென்மம் தருவது போல...சூனியத்தோடு ஒன்றறக் கலந்து போகவிருந்த பிராணவாயுவை உள்ளங்கையில் சிறைப்படுத்தி, தன்னுள் நுழைத்துக் கொண்டிருந்தாற் போன்ற உணர்ச்சி!

அவன் கண்களைத் திறந்ததைப் பார்த்ததுமே அவனுள் சந்தோஷம் பெருக்கெடுத்தது. அவன் கால்களை மெதுவாய் தழைத்தாள். அவனும் மெல்ல மெல்லக் கீழே இறங்கத் தொடங்கினான்.

அங்கே காற்றும் கூட விலகி நின்று அவ்விருவருக்குமிடையே நெருக்கத்தைத் தோற்றுவித்தது.

அவன் கைகள், தன்னையறியாமல் அவளின் தோளிலிருந்து இறங்கி அவள் இடுப்பு வளைவில் நின்று போயின. அவன் பாதங்கள் முழுவதுமாய் தரையைத் தொட்டன.

இருவர் மார்பும்...சிநேகிதர்களாயின. ஏதோ பாதுகாப்பு உணர்ச்சி அவளைக் கவசமாய்த் திரையிட்டது.

அவன் எல்லாவற்றையும் மறந்து விட்டான். அங்கே மனதிற்கும் மனதிற்குமிடையே இருந்த திரை விலகி



விட்டது. அந்த மகிழ்ச்சியில் அவனுக்குத் தப்பா' தப்பில்லையா என்பதைப் பற்றியெல்லாம் நினைவிற்கு வரவில்லை.

எத்தனையோ கனவுகளின் ஸ்பரிச உணர்ச்சி ஏற்பட்ட வேளை...அவன் ஒரு சாதாரண மனிதனாகவே ஆகிவிட்டான்.

கேவலம் வினாடி நேரந்தான்.

ஃ ஃ ஃ

சரியாய் அந்த வினாடி நேரத்தில் சோபாவில் படுத்துக் கொண்டிருந்த ரவிதேஜாவுக்கு நினைவு திரும்பிற்று. அதற்குப் பிறகு மெல்ல மெல்ல இருள் விலகி அக்காட்சி தெளிவாயிற்று.

எங்கேயோ இடி விழுந்தது,

கண்களுக்கு முன்னால் வரிசையாய் மின்னல்கள், எங்கும் அவநம்பிக்கையான இருட்டு.

அதற்கு பிறகு நம்பத்தகுந்த வெளிச்சம்! அவன் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான்.

தன் மனைவி 'அவன்' அணைப்பில் இருந்ததே அவனை அதிர்ச்சிக்கு ஆளாக்கியதென்றால் 'அவன்' ஸ்ரீ வாணியின் கணவனாய் இருந்தது மேலும் அதிகமான அதிர்ச்சிக்கு ஆளாக்கி விட்டது.

அது கொஞ்ச நேரந்தான்.

அவன் மூளை வேகமாய் இயங்கத் தொடங்கிற்று. அப்படியென்றால்...அப்படியென்றால் மகரிஷி தனக்குப்

பின்னால் நிழலாய் இருந்து கொண்டு பழி தீர்த்துக் கொள்வதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான் போலும்...அல்லது அவன் மனைவியைத் தான் அனுபவித்ததால்...தன் மனைவியை அவன் --

அதற்கு மேல் அவனால் யோசிக்க முடியவில்லை. தன் மனைவியின் கிளாஸ்மேட் ஆன மகரிஷி தம்மிடம் வேலைக்காரனாய் ஏன் வந்து சேர்ந்தான் என்று இவ்வளவு நாட்களாய் இருந்து வந்த சந்தேகத்திற்கு இப்பொழுது தெளிவான காரணம் கிடைத்து விட்டது.

அது மட்டுமில்லை--

தனக்குக் கண் பார்வை திரும்பி விட்ட அடுத்த நிமிஷமே தான் மகரிஷியை அரெஸ்ட் பண்ண வேண்டும். பண்ணினால்...ஸ்ரீ வாணிக்கும் தனக்குமுள்ள சம்பந்தம் சந்தனாவுக்குத் தெரிந்துவிடும்.

நிமிஷத்தில் இவ்வளவையும் யோசித்துவிட்டு ஒரு முடிவிற்கு வந்தான் அவன்.

அங்கே அறையில்--

அவ்விருவருள் முதலில் தேறிக்கொண்டது சந்தனா தான்.

சட்டென்று அவள் மகரிஷியின் அணைப்பிலிருந்து தொலைவிற்கு ஒதுங்கிக் கொண்டு, கணவன் நினைவிற்கு வந்தவளாய் சோபாவை நோக்கி ஓடினாள்.

அவள் தொலைவானதுமே கனவு சிதறிப் போய்விட்டவனாய் மகரிஷி தன்மயமான நிலையிலிருந்து விழிப்புற்றான். எதிரே ராம்ராஜ் நினைவு தப்பி விழுந்து கிடந்தான்.

அவனைப் போய் உலுக்கி, ''ராமராஜு'' என்று கூப்பிட்டான். கொஞ்ச நேரத்தில் ராமராஜ் கண்களைத்



திறந்தான். எதிரே மகரிஷி தென்பட்டதைப் பார்த்துவிட்டு ''தொரை! உங்களுக்கு ஒன்றுமாகவில்லையே?'' என்று சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

மகரிஷி சாதாரணமாய் இருந்ததைப் பார்த்ததும் அவன் மனம் நிம்மதியடைந்தது.

அதற்குள் ஹாலுக்குள் போன சந்தனா ''ஏங்க? உங்களுக்கு எப்படி இருக்கு? ''கலக்கத்துடன் ரவிதேஜாவின் தோளைப் பிடித்து உலுக்கிக் கொண்டே கேட்டாள்.

''எனக்கு எதுவும் தென்படவில்லை சந்தனா'' என்றான் ரவிதேஜா.

''ஐயோ, கண் தெரியவில்லையா?'' சந்தனாவின் முகத்தில் திடீரென்று நிராசை வந்து சூழ்ந்து கொண்டது.

அதைக் கண்ட மகரிஷி ராமராஜுவை நோக்கித் திரும்பி--''எங்கேயாவது குறை ஏற்பட்டதா?'' என்று கேட்டான்.

''இல்லை தொரை. அதான் பண்ணவேண்டியதையெல்லாம் பண்ணி விட்டோமே! மருந்து ஏன் வேலை செய்யலைன்னு எனக்கும் புரியவில்லை'' என்றான் ரவியின் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு,

சந்தனாவுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. வெகு நேரம் வரை அப்படியே துக்கத்துடன் உட்கார்ந்திருந்தாள் அவள்.

ரவிதேஜா அவளைத் தேற்றுவது போல—''வருந்தாதே சந்தனா! இந்த ஜென்மத்துக்கு இதான் எனக்குன்னு நினைத்துத் தேற்றிக் கொள்கிறேன்'' என்றான்.

அவள் அவனைப்பார்த்து ''இல்லை, உங்களுக்குக் கண் பார்வை திரும்பி வந்துவிடும் என்று எனக்கு ஏனோ நம்பிக்கையாய் தோணுகிறது'' என்றாள் திடமாய்.

''எனக்குக் கண் இல்லாமல் போனால் என்ன? நீயும் மகரிஷியும் எனக்கு ரெண்டு கண்களாய் இருக்கிற வரைக்கும் எனக்கெந்தக் கவலையும் இல்லை.''

மகரிஷி மன்னிப்பு கேட்டுக் கொள்வது போல ''சாரி தேஜா! இந்த மருந்து வேலை செய்யும்னு நினைச்சேன். ஆனால் இப்படியாகும்னு நினைத்திருக்கவில்லை. ஐயாம் ரியலி சாரி'' என்றான்.

''நீ ஒன்றும் வருந்தாதே. உன் முயற்சியை நீ செய்தாய். இதைவிட வேறு யாரால் மட்டும் செய்து விட முடியும்? இனி இந்த விஷயத்தை மறந்து போய் விடுவோம்'' என்றான் ரவிதேஜா.

ராமராஜ் கைகளைக் கூப்பி வணங்கிவிட்டு ''நான் வரேன் தம்பீ! நீங்க என்னை மன்னியுங்க. வீணாய் ஆசைகளை உண்டாக்கி விட்டேன்'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

மகரிஷி அவனோடு கூட வெளியே வந்து கொண்டிருக்கையில் சந்தனாவும் எழுந்து நின்று கணவனிடம் ''இதோ வருகிறேன்'' என்று சொல்லி விட்டுத் தானும் கூட அவர்களோடு வெளியே வந்தாள்.

மகரிஷியிடம்...''நீ காரை எடு. ராமராஜுவை அவங்க பேட்டை வரை கொண்டுபோய்விட்டுவிட்டு வா'' என்றாள்.

''தேவையில்லைம்மா. நான் பஸ்ஸில் போய் விடுகிறேன்'' என்றான் ராமராஜ். அவனுக்கு இப்பொழுதே மிகவும் சங்கோஜமாய் இருந்தது. வீணாய் அத்தம்பதிகளுக்கு ஆசைகளைக் கற்பித்துத் தோல்வியடையும்படி செய்து விட்டோமே என்று!



சந்தனா மகரிஷியைப் பார்த்து ''காரைக்கொண்டு வா'' என்பது போல தலையாட்டினாள்.

மகரிஷி ஷெட்டை நோக்கிப் போனான். அவள் ராமராஜுவிடம் ''எங்களுக்காக இவ்வளவு செய்திருக்கிறாய்! உன்னைக் குறைந்த பட்சம் உங்கள் ஊர் வரைக்குமாவது கொண்டுபோய் இறக்கி விட்டு விட்டு வருவது எங்கள் பொறுப்பு'' என்றாள். ராமராஜ் தலை குனிந்து கொண்டான். சந்தனா திரும்பிப் பார்த்தாள்--மகரிஷி ஷெட்டின் கதவுகளைத் திறந்து கொண்டிருந்தான் அவனுக்குப் பேச்சுக்குரல் காதில் விழாது என்று உறுதியறத் தெரிந்து கொண்டதும் ராமராஜுவிடம் ''என்ன ராமராஜ், நீ என்ன சொல்ல வந்தாய்?'' என்று கேட்டாள்.

ராமராஜ் புரியாமல், ''என்னம்மா, எந்த விஷயம்?'' என்றான்.

''அதான், என் கணவருக்கு நீங்கள் தந்த மருந்தால் உயிரே போய் விடுமோன்னு நான் பயந்து கொண்டிருந்த சமயத்தில் நீ ஏதோ சொல்லவந்து நிறுத்திக் கொண்டு விட்டாய். அதென்ன விஷயம்?'' என்று கேட்டாள் தோரிடையாய்.

ராமராஜ் தடுமாற்றத்துடன் ''சே, ஒன்றுமில்லைம்மா'' என்றான்.

''இல்லை, சொல்லணும்.''

''விட்டுத் தள்ளுங்கம்மா. மகரிஷி தம்பி உயிரை மாய்த்துக் கொண்டு விடுவாரோங்கிற பயத்தில் வாய்த் தவறி வெளிவந்துவிட்டது''.

''சொல்லாவிட்டால் என் மேல் ஆணை. உங்கள் தெய்வத்தின் மேல் ஆணை'' என்றாள்.

ராமராஜ் தடுமாற்றமடைந்தான். காட்டுவாசிகளுக்கு தெய்வத்தின் மீது சத்தியம் என்றால் மிக நம்பிக்கை. அந்த விஷயம் அவளுக்கும் தெரியும்.

இனி சொல்லித் தீர வேண்டியதுதான் என்பதுபோல ''எங்களோடு கூட மகரிஷி தம்பி வந்துட்டிருந்த போது அவரைப் பாம்பு கடிச்சிடுத்தும்மா. நான் பச்சிலைங்களைப் பயன்படுத்தி அவருக்கு நினைவை வரவழைத்தேன்' ஆனால்...'' சங்கடத்துடன் நிறுத்திவிட்டான்.

''ஆனால்—ஆனால் என்னவாகும்?'' கலக்கத்துடன் நிறுத்திவிட்டாள்.

''மெல்ல மெல்ல உடம்பெல்லாம் செதில் செதிலாகித் தோல் உதிர்ந்து விடும்மா!'' சொல்ல முடியாமல் சொன்னான்.

''அப்படீன்னால்...அப்படீன்னால் அதற்கு மருந்தே கிடையாதா?''

''இருக்கும்மா! உங்க புருஷனோட கண்ணில் விட்ட அமிர்தந்தான் மகரிஷி தம்பிக்கு மருந்து நான் இப்பக் கொண்டுவந்த மருந்தை அந்த தம்பியையே பயன்படுத்திக் கும்படி சொன்னேன். ஆனால் அவரு அது உங்க புருஷனுக்காகத் தரவேண்டியதுன்னு சொல்லி, நான் எவ்வளவு சொல்லியும் கேட்டுக்காமல் கொண்டு வந்தார்'' சந்தனா நெகிழ்ந்து போனாள்.

அவள் கண்கள் கசிந்தன. உடல் நடுங்கிற்று. கேவலம் ரவிதேஜா தன் கணவராயிருக்கும் காரணத்தால் தன் உயிரையே பலியிட்டு மகரிஷி மருந்து கொண்டுவந்திருக்கிறான் என்று தெரிந்ததும், அவளுக்கு மகரிஷியின் மீது இருந்த அன்பு இருமடங்காயிற்று. அந்த மருந்து குணமாக்குகிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் அவன் மட்டும் தியாகத்திற்கு எடுத்துக்காட்டாகி விட்டான்.



தொலைவிலிருந்து மகரிஷி காரை எடுத்துக்கொண்டு வரும் சப்தம் கேட்டது. ராமராஜ் சொன்னான்''...திரும்பவும் அடுத்த சந்திரகிரகணம் வரை மகரிஷி தம்பிக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமலிருந்தால், அதற்குள் எப்படியாவது சரி, நான் அந்த மூலிகையைத் திரும்பி சம்பாதித்து கொண்டுவிடுவேம்மா. எங்கே இருந்தாலும் சரி, மகரிஷி தம்பிக்கு அந்த மருந்தைத் தருவேன். அது கண்டிப்பாய்ப் பலன் தரும்...ஆனால், அடுத்த சந்திரகிரகணம் வருவதற்குள் மகரிஷி தம்பி அந்த விஷத்தின் பிடியில் சிக்கிக்கொள்ளபமல் இருக்கணும். அப்படிச் சிக்கிக்கொள்ளாமல் இருக்கணும்னா நான் போனதுமே குல தெய்வத்துக்கு பூசைகளைப் பண்றேன். எங்க பேட்டை முழுவதும் சேர்ந்து பூசை பண்ண வைக்கிறேன்''. என்று சொல்லி வணங்கி விட்டு, காருக்குப் போனான்.

## 31

காலையில் ஐந்து மணியளவில் பெட்ரூம் கதவைத் தட்டிய சப்தம் கேட்டு விழிப்பு வந்தது ரவிதேஜாவுக்கு. இவ்வளவு அதிகாலை நேரததில் யார் வந்திருப்பார்கள் என்ற சந்தேகத்துடன் மனைவியை எழுப்பினான்.

''இந்தச் சமயத்தில் நம்மை யார் தொந்தரவு பண்ணுவாங்க?'' அவளும் சந்தேகத்துடனேயே எழுந்துபோய் கதவைத் திறந்தாள்.

கதவைத் திறந்ததுமே எதிரே தென்பட்ட ஆளைப் பார்த்து விட்டு வீலென்று கத்தியபடி உள்ளே ஓடிவந்து கணவனை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டாள்.

''என்ன சந்தனா, ஏன் அப்படிக் கத்தினாய்?'' அவன் கலக்கத்துடன் எழுந்து கேட்டான்.

அவள் பயத்தால் நடுங்கிக்கொண்டே ''அன்றைக்கு... அன்றைக்கு...'' என்று ஏதோ சொல்லவந்தாள். அவன் அதைக் கவனித்துவிட்டு வாசல் பக்கமாய்ப் பார்த்தான். எதிரே இப்ராஹீம்.ரவிதேஜா திடுக்கிட்டுப்போய்விட்டான்.

தன்னைப் பார்த்ததுமே அவன் முகம் நிறம்மாறியதைக் கவனித்து விட்டுச் சிரித்தான் இப்ரஹீம்.

அதற்குள் தேஜா தன் அவசரத்தை மூடி மறைத்துக் கொண்டு, பார்வையைத் திருப்பி சூனியத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டே—''யாரு?...யாரு?... யார் நீங்கள்?'' என்று உறுமினாற் போலக் கேட்டான்.

'என்னை அடையாளம் தெரியவில்லையா ரவிதேஜா?' கணீரென்ற குரலில் கேட்டான் இப்ராஹீம்.

''இல்லை நீங்கள் நீங்கள்...'' அவன் குரலை அடையாளம் தெரிந்து கொள்ள முயல்வது போலக் கேட்டான்.

''வாட்? மிஸ்டர் ரவிதேஜா? திரும்பவும் நாடகமாடுகிறாயா?''

''நோ...நாடகமா? நீங்கள் யாருன்னு மொதல்ல சொல்லிவிடுங்க.''

''இந்த வேஷத்தை முன்பே பார்த்தாச்சு, இனி நீயா நானா என்று ஒரு முடிவுக்கு வருவதற்காகவே வந்திருக்கோம். இனி நடிக்காதே.''

''ஓ...'' அப்படீன்னால் நீ தங்கக் கடத்தல் அலீகான் என்று சொல். உனக்கு என்ன வேணும், சொல்லு''

அவன் குரலில் ஒரு போலீஸ் ஆபீசரின் தைரியம் தெரிந்தது.



''நான் ஏன் வந்திருக்கேன்னு உனக்குத் தெரியும் ரவிதேஜா! ஆனால் நீ எதுவுமே தெரியாதது போல எங்களை நம்ப வைக்கணும்னு பார்க்கிறாய்.

உனக்குக் கண் பார்வையே தெரியாதது போல ஒரு பக்கத்தில் போலீஸ் டிபார்ட்மெண்டையும், இன்னொரு பக்கத்தில் உன் வீட்டாரையும் அமோகமாய் நம்ப வைத்து விட்டாய்.

ஆனால் எங்களை மட்டும் நம்ப வைத்துவிட முடியாது எங்களைப் பார்த்ததுமே உன் முகம் நிறம் மாறியதைக் கொண்டே எங்களை நீ அடையாளம் கண்டு கொண்டு விட்டாய் என்று புரிந்து கொண்டு விட்டோம்.

எதற்காக இந்த முக்காடெல்லாம்? என்னோடு கை கலந்து கொள். அந்த இரண்டு ப்ரீப் கேசுகளையும் என்னிடம் ஒப்படைத்துவிடு. வரும் லாபத்தில் பாதி பாதியாய் எடுத்துப்போம்,

இல்லாவிட்டால் உன் தலையெழுத்து உன்னையும் உன் மனைவியையும், கடைசியில் அந்த கமிஷனரையும் கொன்று தங்கத்தை எப்படிப் பறித்துக் கொள்வதென்று தெரியும் எனக்கு.

அதற்கப்புறம் உன்னிஷ்டம். நீயே யோசித்துக்கொள்'' என்று பேண்ட் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்தான்.

ரவியின் நிலைமை இக்கட்டில் ஆழ்ந்தது.

''பார் மிஸ்டர்...அந்த ப்ரீப்கேசுகள் என்னிடம் இருந்தாலும் சரி, என்னால் உன்னோடு கை கலந்து கொள்ள முடியாது. நான் அரசாங்கத்தின் ஆள், உயிரே போனாலும் நான் அந்தக் காரியத்தைச் செய்ய மாட்டேன்.

வீணாய் என்னைச் சுற்றி ஏன் வருகிறாய்? என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் கொன்று விட்டாலும் அரசாங்கத்தைச் சேர்ந்த அந்த தங்க பிஸ்கெட்டுகள் திரும்பி வராது'' என்றான் ரவி.

''தேஜா, உடனிருந்து அதை எப்படி வரவழைத்துக் கொள்வதுன்னு எனக்குத் தெரியும்'' என்று ஒரு கையால் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டே முன் நோக்கி அடியெடுத்து வைத்து சந்தனாவின் கூந்தலைப் பிடித்துத் தன் பக்கமாய் இழுத்தான்,

வீலென்று கத்தினாள் சந்தனா.

''ப்ளீஸ், என் மனைவியை ஒன்றும் பண்ணாதே''—கக்கத்துடன் எழுந்து காற்றில் கைகளை நீட்டிக் கொண்டே முன் நோக்கி வந்தான் அவன்.

''ஸ்டாப் தேஜா'' துப்பாக்கியை அவன் மார்பை நோக்கிக் குறி வைத்துக் கொண்டே கத்தினான் இப்ராஹீம்.

இப்ரஹீம் சிரித்துக் கொண்டே சந்தனாவின் கூந்தலை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு முகத்தைத் தன் பக்கமாய் திருப்பிக் கொண்டே, உதட்டில் முத்தமிடுவதற்காகக் குனிந்தான்

அவன் திட்டமெல்லாம் ரவிதேஜாவின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதற்காகத்தான் அது பலித்தது.

ரவிதேஜாவால் அதற்கு மேல் பொருத்துக் கொண்டிருக்க முடியவில்லை நின்று கொண்டிருந்த இடத்திலிருந்தே காலை ஓங்கி உதைத்தான். அதுவும் ஃபுட்பால் ஆடும் பழக்கமுடையவனாயிருந்ததால், துப்பாக்கி பந்தாய் போய் தூரத்தில் விழுந்தது.



ஒரு வினாடி அதிர்ந்து போய் விட்டான் இப்ராஹீம் கான். அந்த அவகாசம் போதும் ஐ. பி. எஸ். பயிற்சி பண்ணியிருந்த ரவிதேஜாவுக்கு.

இப்பொழுது துப்பாக்கி அவன் கையில் இருந்தது. இப்ராஹீம்கான் இந்த திடீர் விளைவிற்கு வாயடைத்துப் போய் விட்டான். துப்பாக்கியை குறி வைத்துக் கொண்டிருந்த ரவிதேஜாவைப் பார்த்ததுமே தன்னையறியாமல் சந்தனாவை விட்டு விட்டான். ரவிதேஜாவின் பார்வை சூனியத்தை நோக்கி இல்லை. நேருக்கு நேராய், கானின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ரவிதேஜா! என்னைத் தாழ்வாய் எடை போட்டு விடாதே. வெளியே என் ஆட்கள் இருவர் இருக்கிறார்கள். துப்பாக்கி வெடித்தால் போதும் இங்கே வந்து விடுவார்கள்

எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், உன்னையும் உன் மனைவியையும் கண்டதுண்டமாய் வெட்டிப் போட்டு விடுவார்கள் ஜாக்கிரதை!'' கான் சற்றும் பயப்படாமல் சொன்னான்.

''இறிப்பார்கள். முதலில் உன்னையும் பிறகு உன் ஆட்களையும் சுட்டுத் தள்ளிவிடுகிறேன்.''

''அது உன்னால் முடியாது. கேவலம் உனக்குக் கண்கள் போய் விடவில்லை என்று நிரூபிப்பதற்காகவே இந்த நாடகம் ஆடினேன். பாவம் இவ்வளவு நாளாய் தேசிய விருது கிடைக்குமளவுக்கு நடித்துத் தள்ளி விட்டாய் இப்பொழுது நீ ஆடியது நாடகம் என்று ருசுவாகி விட்டது. அதனால் இனி அந்த கோல்ட் பிஸ்கெட்டுகள் எங்கே இருக்கின்றனவென்று சொல்லிவிடு.''

''சொல்லா விட்டால்?''

''சொல்லா விட்டால்...சிம்பிள், உன்கண் முன்னாடியே உன் மனைவியைக் கற்பழித்து விடுவேன்,''

''இடியட்! என்ன தைரியம் உனக்கு?'' ரவிதேஜாவின் ஆள்காட்டி விரல் ட்ரிக்கரின் மீது முறுக்கேறிக் கொண்டது. கானின் கண்களில் எந்த உணர்ச்சியும் இல்லை, முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது.

இதையெல்லாம் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சந்தனா, கணவனுக்கு கண்கள் போய்விடவில்லை என்ற விஷயத்தை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை, இவ்வளவு நாட்களாய் கண் பார்வை தெரியாதவனை போல நாடகமாடியது அதிர்ச்சியைத் தந்தது அவளுக்கு,

ரவிதேஜா அதற்கு மேல் தாமதிக்கவில்லை. முன் நோக்கி வந்து கொண்டிருந்த கானைத் தடுத்து நிறுத்துவதற்காக ட்ரிக்கரை அழுத்தினான், 'க்ளிக்' என்ற சப்தம்! குண்டு வெளியே வரவில்லை, கலக்கத்தை அடக்கிக் கொண்டு திரும்பவும் அழுத்தினான், அதே சப்தம்!

அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு—அவ்வளவு நேரமாய் கான் அவ்வளவு துணிச்சலாய் நின்றுகொண்டு எப்படிப் பேசியிருக்கிறான் என்று!

கடகடவென்று சிரித்தான் கான்.

''இப்பொழுது புரிந்ததா ரவிதேஜா! இந்த கான் என்றால் யார் என்று! 'டபுள் கேம்' ஆடுவது உன் ஒருத்தனால் தான் முடியும் என்றெண்ணிக் கொண்டாயா?''—என்று வாசலை நோக்கித் திரும்பி—''ஜேம்ஸ்! இவளை இழுத்துக் கொண்டு போய் ஜீப்பில் போடுங்கடா''---என்று உத்தரவிட்டான்.

இரண்டு அடியாட்கள் சந்தனாவை இரு பக்கமும் பிடித்து இழுத்துக் கொண்டு போகத் தொடங்கினார்கள்,



அப்பொழுதுதான் அதிர்ச்சியிலிருந்து தேறினாள் சந்தனா. ஆனால் ஒன்றுமே பேசவில்லை. நிசப்தமாய் அங்கு நடந்து கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மிஸ்டர் கான்! எங்களுக்கு ஒன்றுமே தெரியாது எங்களை விட்டுவிடு'' என்றான் ரவிதேஜா செய்வதறியாது.

''சாரி மிஸ்டர் ரவிதேஜா! நான் கொலைகாரங்களைக் கூட நம்புவேனோ என்னவோ, ஆனால் உங்கள் போலீஸ் டிபார்ட்மென்ட்காரங்களை மட்டும் நம்பவே மாட்டேன். ஆனாலும் உன் மனைவியை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். நாளைக்கு இரவு பன்னிரெண்டு மணிக்குள் என் இரண்டுப்ரீப்கேஸ் தங்கங்களையும் என்னிடம் ஒப்படைத்து விட வேண்டும். அப்பொழுதுதான் உன் மனைவியைப் பத்திரமாய் க்ஷேமமாய் ஒப்படைக்கமுடியும். நாளைக்குச் சாயந்திரம் போன் பண்ணுகிறேன்—அவைகளை எங்கே கொண்டுவந்து ஒப்படைக்கணும்னு! ஏதாவது மாறுபாடு ஏற்பட்டதோ உன் மனைவியைக் கொடுமையிலும் கொடுமையாய் ரேப் பண்ணி, சவத்தை உனக்குப் பரிசாய் அனுப்பி விடுவேன்.''

''ப்ளீஸ் கான்! என் மனைவியை ஒன்றும் செய்யாதே. கமிஷனரோடு பேசி அவைகள் என்னவாயிற்று என்று தெரிந்து கொள்கிறேன்.''

''நோ...உன் தக்கல் பாச்சித் தனத்தையெல்லாம் நான் நம்ப மாட்டேன். என் சங்கதி உனக்கு இன்னும் நன்றாய்த் தெரியாது. போலீசுங்களோடு சேர்ந்து கண்ட கண்ட வேஷமெல்லாம் போட முயன்றால் அதன் விளைவு விபரீதமாய் ஆகிவிடும்.'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வேகமாய்ப் போய்விட்டான். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு வெளியே ஜீப் புறப்பட்ட சப்தம் கேட்டது.

# 32

'உனக்குக் கண் பார்வை திரும்பியதற்காகச் சந் தோஷப்படுவதா, இப்படி நேர்ந்ததற்காக வருத்தப்படுவ- தான்னு தெரியவில்லை'' என்றார் கமிஷனர் அசுவத்தாமன்.

ரவிதேஜா பதில் பேசவில்லை.

''ஆமாம், உனக்குக் கண்பார்வை எப்படித் திரும்பி வந்தது?'' என்று கேட்டார் கமிஷனர்.

''என்னவோ எனக்குத்தெரியாது. காலையில் கதவைத் தட்டிய சப்தம் கேட்டுக் கண்களைத் திறந்தேன். எனக்கு எல்லாம் தென்படத் தொடங்கிற்று. அந்த ஆச்சரியத் திலிருந்து தேறிக் கொள்வதற்குள், சந்தனா கதவைத் திறந்ததும் அந்தக் குண்டர்கள் உள்ளே நுழைந்ததும் நடந்து முடிந்து விட்டது'' என்றான் ரவிதேஜா.

''ரவி! என் பேச்சைக் கேட்டு நான் சொன்னபடி செய். சந்தனாவுக்கு ஒன்றும் ஆகாது. போலீஸ் படை களையெல்லாம் பயன்படுத்திப்போம். எப்படியாவது சரி அவர்களைப் பிடித்துவிடலாம் நாம்.''

''வேண்டாம் சார். நம்ம பிளான் தெரிந்தால் அவங்க என் மனைவிக்கு ஏதாவது தீங்கு செய்வார்கள்''—கண்டிப் பாய் சொல்லிவிட்டான் ரவிதேஜா.

அவ்விருவருக்குமிடையே இந்த விஷயம்பற்றி வெகு நேரமாய் விவாதங்கள் நடந்தேறின. கடைசியில் கமிஷனர்



அந்த தங்க பிஸ்கெட்டுகளை கள்ளக்கடத்தல்காரர் களிடம் ஒப்படைப்பதற்குச் சம்மதித்துத் தீரவேண்டி யிருந்தது.

ரவிதேஜா சொன்னான்—''சார்! ஓட்டலில் இந்த ப்ரீப்கேசுகள் கிடைத்தபொழுது உடனே நாம் இவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்க வேண்டியது தானே. அப்படி ஏன் பண்ணவில்லை?''

''இந்த பிஸ்கெட்டுகளை நாமிருவரும் சேர்ந்து சூறை யாடி விட்டோம் என்று அந்த கள்ளக்கடத்தல்காரங் களுக்குச் சந்தேகம் வந்துவிட்டால், அவங்க எந்த விதத் திலாவது நம் பின்னாடியே சுற்றிசுற்றி வந்துட்டிருப்பாங் கன்னும், அந்தச் சமயம் பார்த்து அவங்களை அரெஸ்ட் பண்ணிவிடலாம் என்றும் நினைத்தோம்.''

''ஆனால் இந்த விதமாய் நமக்கு வேண்டியவங்களை கிட்னாப்பண்ணி அவங்க திரும்பி, தங்கங்களைக் கைப் பற்றிக் கொண்டு விடுவாங்கன்னு நாம் ஊகிக்காமல் போய் விட்டோம் இல்லையா?'' வருத்தத்துடன் கேட்டார் அசுவத்தாமன்.

''அதுவும் ஒரு விதத்தில் நல்லதற்குத்தான் என்று நினைக்கிறேன். நாம் ஒருக்கால் அரசாங்கத்திடம் ஒப் படைத்திருந்தால், அதற்கப்புறம் அவங்க சந்தனாவை இந்த விதமாய் கிட்னாப்பண்ணி, அந்த தங்க பிஸ்கெட்டு கள் தமக்கு வேண்டும் என்று கண்டிஷன் போட்டிருந்தால், நாம் ரொம்பச் சிக்கலில் ஆழ்ந்து போயிருப்போம்.

இந்தத் தங்கத்தை அவங்களிடம் திரும்பித் தருவதா வேண்டாமா என்று அரசாங்கம் முடிவெடுத்துக் கொள்வ தற்குள்ளாகவே, சந்தனாவுக்கு அபாயம் நேர்ந்திருக்கும். இப்பொழுது இந்த விஷயம் நம்மிருவரைத் தவிர வேறு

யாருக்குமே தெரியாததால், சந்தனாவை நாம் உடனே காப்பாற்ற முடிகிறது.'

இந்த விஷயத்தில் மட்டும் எனக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு, நாம் தோற்றுப் போனாலும் சரி, ஒரு உயிர் காப்பாற்றப்படுகிறது'' என்றான் ரவிதேஜா.

கமிஷனரால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை, ரவிதேஜா சொன்னதிலும் உண்மை இருந்தது. இன்னமும் விடாப்பிடியாய் இருந்தால் அங்கே ஒரு உயிர் போய் விடலாம்.

கமிஷனர் எழுந்திருந்து ''ப்ரீப் கேசுகளை நான் தான் பாங்க் லாக்கரில் வைத்தேன், அவைகளை உடனே கொண்டுவரேன். அவைகள் எங்கே இருக்கின்றனவென்று என் ஒருத்தனுக்குத் தான் தெரியும்'' என்று எழுந்து சென்று விட்டார்.

அவர் போன அரை மணிக்கெல்லாம் போன் வந்தது.

ரவிதேஜா ரிசீவரை எடுத்தான். 'எஸ்...''

''ஹலோ மிஸ்டர் ரவிதேஜா.. ஹௌ ஆர்யூ?''

மறுமுனையிலிருந்து இப்ராஹீம்கானின் குரல் கேட்டது.

''கான் குசலப் பிரச்னைகளைக் கேட்டுக் கொண்டிருக்க நாம் ஒன்றும் உறவினர்கள் இல்லை, சீக்கிரமாய் விஷயத்திற்கு வா''.

''ஓ. கே. தங்கங்களைத் திருப்பி ஒப்படைப்பதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டு விட்டாற்போலத் தானே?''

''ஒப்புக்கறேன். அந்த தங்கங்களை எங்கே, எப்படி, எப்பொழுது ஒப்படைக்கணும்னு சொல்லு'',



இப்ராஹீம் சொன்னான்—''இன்றிரவு சரியாய் பதினோறு மணிக்கு உதகையிலிருந்து எழுபத்தைந்தாவது கிலோ மீட்டர் கல்லிற்கருகில், காரில் வந்து அந்த ப்ரீப் கேஸ்களை அவ்விடத்தில் வைத்து விட்டு, நேராய் இன்னும் இரண்டு கிலோ மீட்டர்கள் முன்நோக்கிச் செல்ல வேண்டும்.

அதற்கப்புறம் மறுபடியும் பின்னுக்குத் திரும்பி வந்தால், அந்த ப்ரீப்கேசுகளை வைத்த இடத்திலேயே உன் மனைவி நின்று கொண்டிருப்பாள்.''

''அப்படியென்னால் சரி, நீ சொன்னபடியே செய்கிறேன்''.

இந்த விஷயத்தில் நீ ஏதாவது சாமர்த்தியத்தைக் காட்டிக் கொண்டாலோ, போலீஸ் உதவியைப் பெற்றுக் கொண்டாலோ, உன் மனைவியின் உயிர் போய் விடும். என் சக்தி உனக்குத் தெரியுந்தானே?''

''தெரியும்.''

''யார் எடுத்துட்டு வரப் போறாங்க?''

''என்னுடைய டிரைவர், மகரிஷி.''

'மகரிஷியா?' இப்ராஹீம் குரலில் ஆச்சரியம்தொனித்தது.

''...இதென்ன! நீ வரப்போறதில்லையா?''

''உன்னிஷ்டப்படி மிஸ்டர் கான், என்னை வரச் சொன்னால் நானே வரேன்.

கான் ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்துவிட்டு—

''வேண்டாம். இந்த விவகாரத்தில் உன்னைப் போன்ற போலீஸ் ஆபீசருங்க பங்கெடுத்துக் கொண்டால்

எங்களுக்கு ஆபத்து. உன் டிரைவரையே அனுப்பு. ஆனால் ஒரு விஷயம்.

ஏதாவது மோசடி நேர்ந்தால் அடுத்த எச்சரிக்கை இல்லாமலேயே உன் மனைவியின் உயிரை எடுத்து விடுவது உறுதி'' என்றான்.

''அந்த விஷயம் எனக்குத் தெரியும் மிஸ்டர் கான். ஆனால் ஒரு விஷயம்! நடுவில் எங்க டிரைவர் ஏதாவது மோசம் பண்ணினால், அதற்கு மட்டும் நான் பொறுப்பு இல்லை,

அப்படிக் கொண்டு வருகிற தங்கம் நிஜத் தங்கந் தானா போலியான்னு தெரிந்து கொண்டு அதற்கப்புறமே நீ என் மனைவியை விடலாம்''.

''அப்படீன்னால்?'' சந்தேகத்துடன் கேட்டான் கான்.

''ஒருக்கால் டிரைவர் மோசம் பண்ணினால்?...''

மறுமுனையிலிருந்து கான் சிரித்தான். அப்படி மோசம் பண்ணினால் அந்த டிரைவர் உயிரோடிருக்க மாட்டான். அவ்விடத்திலேயே அவன் உயிரை எடுத்து விட்டு, அதற்கப்புறம் நடக்க வேண்டியதை பற்றி யோசிப்பேன்.''

''ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள், மிஸ்டர் கான். தங்கத்தை அனுப்புகிற வரைக்குந்தான் எங்கள் பொறுப்பு. அது நல்ல தங்கமில்லாவிட்டால் நீ நடவடிக்கை எடுத்துக்க வேண்டியது எங்க டிரைவரைத் தானே த ர, என் மனைவியை அல்ல'' என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டான் ரவிதேஜா.

அடுத்த அரைமணிக்கெல்லாம் கமிஷனர் தங்க பிஸ்கெட்டுகளுடன் அங்கே வந்தார். அந்த பிரீப்கேசு



களை ரவிதேஜாவிடம் தந்துவிட்டு, ''போன் வந்ததா?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''வந்தது சார். அந்த ப்ரீப் கேசுங்களை எப்பொழுது, எங்கே, எப்படி ஒப்படைக்கணும்னு சாயந்திரமாய் சொல் றேன்னு சொன்னான் கான்!

அது மட்டுமில்லை, இந்த விவகாரத்தில் போலீசார் யாருமே பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதாம், யார் மூல மாய் அனுப்பணும்னு சாயந்திரமாய் சொல்றதாய் சொன் னான்''.

மேற்கொண்டு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, மாலையில் வருவதாய் சொல்லிவிட்டுப் போய் விட்டார் கமிஷனர்,

அடுத்த பத்து நிமிஷத்திற்கெல்லாம் ரவிதேஜா அந்த பிரீப்கேசுகளைக் காரில் எடுத்துக்கொண்டு வேகமாய் புறப்பட்டான்! ஊரிலிருந்த ஒரு சின்ன சந்திற்குள் நுழைந் தான். அங்கே வரிசையாய் தட்டான் கடைகள் இருந்தன,

அவன் ஒரு தட்டானைச் சந்தித்துச் சுருக்கமாய் ஆக வேண்டியதைச் சொன்னான். அந்த விஷயத்தைக் கேட் டதுமே தட்டான் முதலில் முடியாது என்று மறுத்து விட்டான்.

ரவிதேஜா தான் யார் என்று சொல்லி, கொஞ்சம் பணத்தை ஜேபியிலிருந்து எடுத்து நீட்டிய பிறகே, தட் டான் ஒப்புக் கொண்டான். மாலை நாலு மணிக்கெல்லாம் தேவையானதை தயார் செய்து வைப்பதாய் வாக்குறுதி அளித்தான்.

ரவிதேஜா வீட்டிற்கு வந்து மாலை நான்கு மணிவரை தனியாய் உட்கார்ந்திருந்தான். சரியாய் தாலடித்ததும்

திரும்பவும் தட்டானிடம் போய் அந்த ப்ரீப்கேசுகளை வாங்கிக் கொண்டான்.

இப்பொழுது அவனிடம் சரியாய் நான்கு ப்ரீப்கேசுகள் இருந்தன. இரண்டு கமிஷனர் தந்தது, மேலும் இரண்டில் ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் இருந்தன. ராத்திரியானதும் கமிஷனர் வந்தார். அப்பொழுதுதான் ரவிதேஜா மகரிஷியைக் கூப்பிட்டான்.

மகரிஷி அதுவரை டென்ஷனில் இருந்து வந்தான். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. ராமராஜுவை பேட்டைக்கருகில் இறக்கி விட்டுவிட்டு அவன் திரும்பி வந்தபோது, வீட்டில் சந்தனா இல்லை என்று மட்டுமே அவனுக்குத் தெரியும். அவள் என்னவானாள் என்று கேட்பதற்கு, அவனுக்கு ரவிதேஜாவிடம் அவ்வளவு நெருக்கம் இல்லை தான் கொண்டு வந்த மூலிகையின் பிரபாவத்தால் ரவிதேஜாவுக்குக் கண்பார்வை திரும்பி விட்டது என்ற சந்தோஷம், சந்தனாவின் கிட்னாப் மூலம் சப்பென்றாகி விட்டது.

கமிஷனர் வந்த பிறகு, அவனைக் கூப்பிட்டு ரவி தேஜா, சுருக்கமாய் என்ன நடந்தது என்று சொன்னான்.

மகரிஷி மிகவும் மனவருத்தமடைந்தான். "இப்ப... இப்ப என்ன செய்யணும் சார்?" என்று கேட்டான்.

"நீ போய் இந்த ப்ரீப்கேசுகளை அவங்க கொண்டு வந்து தரச்சொன்ன இடத்தில் கொண்டு போய்க்கொடுத்து விட்டு, சந்தனாவைத் திருப்பி அழைத்துக் கொண்டு வரணும்."

"வரேன் சார்" என்றான் மகரிஷி கமிஷனரிடம்.

"அவங்க பொல்லாதவங்க, ரொம்ப ஜாக்கிரதையாய் நடந்துக்கணும்" எச்சரித்தார் கமிஷனர்.



"என் உயிரே போனாலும் பரவாயில்லை சார்! சந்தனாவை ஜாக்கிரதையாய் கூட்டிட்டு வரேன்" என்றான் மகரிஷி.

"எங்க காரில் போ" என்றான் ரவிதேஜா. மகரிஷி அவனிடமிருந்து சாவியைப் பெற்றுக்கொண்டு, ப்ரீப் கேசுகள் இரண்டையும் காரில் வைத்துக்கொண்டு, ஸ்டார்ட் செய்தான். கமிஷனரும் ரவிதேஜாவும் மேல் படியில் நின்று கொண்டிருந்தார்கள். கார் மெதுவாய், தெருக்கோடியில் திரும்பி, கண்மறைவாயிற்று.

ரவிதேஜா ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டான். தன் மனைவியை விடுவிப்பதற்கு முன்னால் இப்ராஹீம் கான் அவை ஒரிஜினல் பிஸ்கெட்டுகள் தானா இல்லையா என்று பரிசோதித்துப் பார்ப்பான் என்று தெரியும் அவனுக்கு அவை ட்யூப்ளிகேட் என்று தெரிந்ததுமே ஒரிஜினலைத் தரச்சொல்லி மகரிஷியைத் தொந்தரவு பண்ணுவான். என்ன நடந்ததென்று தெரியாத மகரிஷியால் சரியான பதில் சொல்ல முடியாது. கான் அவன் உயிரை எடுத்துவிடுவான். அதில் சந்தேகமில்லை.

ரவிதேஜாவுக்கு வேண்டியதும் அதுதானே! தன் கையில் கறை படியாமல் மகரிஷி உயிரை இழப்பது! அப்படி நடக்காமல் போனால், ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்ட குற்றத்தின் பேரில் மகரிஷியின் கேசு கோர்ட்டுக்குப் போனதுமே, தனக்கும் ஸ்ரீவாணிக்கும் இடையே இருந்துவந்த சம்பந்தமெல்லாம் வெளிவந்துவிடும் என்றும், அது தன் மனைவிக்குத் தெரிந்து விடும் என்றும் ரவி தேஜா அறிவான். அதனால் மகரிஷி போலீசாரிடம்

பிடிப்பட்டுப் போவதைக் காட்டிலும், கான் கையில் உயிரை இழப்பதே சிறந்தது. அதனால்தான் அவன் இந்தத் திட்டத்தை போட்டிருந்தான்.

தன் கைக்கு வந்தது ஒரிஜினல் தங்க பிஸ்கெட்டுகள் அல்ல, என்றறிந்ததுமே இப்ரஹீம் கான் சந்தனாவை விட மாட்டான் என்றும், மகரிஷியைக் கொன்று விட்டுத் திரும்பவும் தம்மோடு பேரமாடுவான் என்றும், வேண்டு மென்றால் அப்பொழுது ஒரிஜினல் பிஸ்கெட்டுகளைத் தந்து சந்தனாவை மீட்டுக்கொள்ளலாம் என்றும் ரவி தேஜா திட்டமிட்டுக் கொண்டிருந்தான். மகரிஷி செத்து விட்டால் சந்தனாவுக்கும் தனக்குமிடையே இனி எந்த குறுக்கீடும் இருக்காது என்றெண்ணினான் அவன். ஒருக் கால் மகரிஷி அந்த தங்க பிஸ்கெட்டுகளுடன் தலைமறை வாய் ஓடிப்போய் விட்டால், அப்பொழுது எல்லா விஷ யத்தையும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி விடலாம். அப்பொழுது சந்தனாவை விடுவிக்க வேண்டிய பொறுப்பு போலீஸைத் தான் சாரும்.

ப...த்து லட்சம் விலைமதிப்புக் கொண்ட ஒரிஜினல் தங்க பிஸ்கெட்டுகள் தன்னிடமே இருந்து விடும்—என் றும் எண்ணினான் அவன்.

கிட்னாப்பர்கள் தன் மனைவியைக் கொல்லமாட்டார் கள் என்று நன்றாய் அறிவான் அவன். கிட்னாப்பர்கள் சாதாரணமாய் அவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொள்ள மாட் டார்கள். முடிந்தவரை பணத்தைக் கறந்து கொள்ளத் தான் பார்ப்பார்கள்.

சரியாய் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, கமிஷனரும் ரவிதேஜாவும் இன்னொரு காரில் அவனைப் பின் தொடர்ந்து போனார்கள். எழுபதாவது கிலோ மீட்டர் கல்லிற்கருகில் காரை நிறுத்தினார் கமிஷனர். மகரிஷி ப்ரீப் கேஸை ஒப்படைக்க வேண்டிய இடம் அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.



இன்னும் அரைமணி நேரத்திற்குள்—கானை—மகரிஷி சந்தித்து, ப்ரீப் கேசுகளைத் தந்துவிட்டு, சந்தனாவை ஒப்படைப்பது நடந்தேறிவிடும்.

இருவரும் அதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். சந்தனாவை அழைத்துவருவதற்கா ப் போன மகரிஷியை எதிர்பார்த்து கமிஷனர் அசுவத்தாமனும்—

மகரிஷியின் மரணச் செய்திக்காக ரவிதேஜாவும்

ரவிதேஜாவின் கண் முன் பெட்டியில் புடவைகளுக் கடியில் கிடைத்த கடிதம் நிழலாடிக் கொண்டிருந்தது நாக குளத்திற்குப் போவதற்கு முன்னால்—மகரிஷி அவ ளுக்கு எழுதிய கடிதம் அது.

## 33

ஒரு ஆளை கிட்னாப் பண்ணுவதைக் காட்டிலும் கிட்னாப் பண்ணிய ஆளை சிறைப்படுத்தி வைத்திருப்பது மிகக் கஷ்டமான காரியம். புத்தகங்களிலும் சினிமாக் களிலும் பார்ப்பது போல. அத்தனை சுலபமாய் பணத்தை வசூலித்துக்கொள்வது சாத்தியப்படுவதாக இருந்தால், இவ்வுலகத்தில் எல்லோருமே இதே தொழிலை கடைப் பிடித்திருப்பார்கள்.

யாருக்கும் தெரியாத இடத்தில் அந்த ஆளைச் சிறைப் படுத்தி வைத்திருப்பது, அந்த ஆளுக்கு ஆகாரம், நீர் வழங்குவது, அவன் கத்தல் யார் காதிலும் விழாதபடி

பார்த்துக் கொள்வது, கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு அவனை பாதுகாப்பது, இதெல்லாம் மேலுக்குத் தென்படுவது போல அத்தனை சுலபமான விஷயங்கள் அல்ல.

எப்பொழுதும் கைகளைக் கட்டிப்போட்டு வைத்திருப்பதும் சாத்தியப்படாது. வாய்க்கு பிளாஸ்டர் போட்டாலும் கூட அது சிற்சில சமயம் உயிருக்கே ஆபத்தாய் மாறிவிடக்கூடும்.

கிட்னாப்பர்கள் சாதாரணமாய் தாம் பிடித்து வைத்திருக்கும் நபரைக் கொன்றுவிட வேண்டும் என்று நினைக்க மாட்டார்கள். தமக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைத்ததும், அந்நபரை விட்டுவிடத்தான் விரும்புவார்கள். ஏனெனில் கிட்னாப் குற்றத்தைக் காட்டிலும் கொலைக் குற்றத்திற்கு தண்டனை அதிகம்.

அலிகான் மரணமடைந்த பிறகு இப்ராஹீமும் சாஸ், திரியும் சேர்ந்து அத்திட்டத்தை முடித்துவிட வேண்டும் என்றெண்ணினார்கள். சாதாரணமாய் ஒரு எஜமானரின் கீழ் சமநிலையில் வேலை செய்யும் இரண்டுபேருக்கிடையே சிநேகம் அதிகமாய் இருக்காது. இருவரும் தம் அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக உள்ளூர ஒருவரையொருவர் வெறுத்துக் கொள்வது சகஜம். அலிகான் உயிரோடிருந்தவரை இப்ராஹீம், சாஸ்திரி இருவருக்குமிடையே 'தலைமை கையாளின்' ஸ்தானத்திற்காகப் போட்டி இருந்து வந்தது. அலிகான் மரணமடைந்த பிறகு, இருவரும் பிரிந்து போய் விடலாம் என்றெண்ணிக் கொண்டார்கள்.

சந்தனாவை கிட்னாப்பண்ணி அழைத்துக்கொண்டு வந்தது இப்ராஹீம் கான். வெளியே ஜீப்பில் காத்துக் கொண்டிருந்தது சாஸ்திரி. அதனால் தாமிருவரும் இந்த



ஆபரேஷன் முழுவதிலும் இருந்து தீரவேண்டும் என்று முன்பே முடிவெடுத்துக் கொண்டார்கள்.

மூன்றாவது நபரை இதில் சேர்த்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் ஆபரேஷனில் முதல் பாகம் வெற்றிகரமாய் முடிவடைந்து விட்டதால், தாம் எதிர்பார்த்த பத்து லட்சம் தங்கமும் கைக்குக் கிடைத்துவிட்டாற்போலவே எண்ணிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

உதகையிலிருந்து காட்டை நோக்கிப் பயணமாகும் சாலை, காட்டு வழியாகவே போயிற்று.

அக்காட்டிலேயே ஒரு சின்ன குன்றின் மீது பாழடைந்த கோவில் ஒன்றில் சந்தனாவை வைத்திருந்தார்கள். அங்கிருந்து எழுபத்தைந்தாவது கிலோ மீட்டர் கல் அண்மையில் தான் இருந்தது.

அதனால் அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

இப்ராஹீம்கான் ஊருக்குள் போய் ரவிதேஜாவுக்கு போன் பண்ணிவிட்டுத் திரும்பி வந்தபோது. சாஸ்திரி கோவிலுக்கு வெளியேயிருந்த பாறாங்கல்லின் மேல் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருந்தான்.

சந்தனா கொஞ்ச தூரத்தில் கட்டிப் போடப்பட்டிருந்தாள். அவள் கால்கள் இரண்டையும் அழுத்தமாய் கட்டிப் போட்டிருந்தான் சாஸ்திரி. கைகளை மட்டும் கட்டவில்லை.

சந்தனாவும் எதிர்த்து நிற்க முயற்சி பண்ணவில்லை. அந்தக் காட்டில் பெரிதாய் கத்தினாலும் யார் காதிலும் விழாது என்றறிவாள் அவள். அதனால் தான் அவ்வாறு ஒரு கல்லில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

போன் செய்து விட்டு வந்த இப்ராஹீம்கான், சாஸ்திரியிடம் நடந்ததைச் சொன்னான். சந்தனா கூட அதையெல்லாம் கேட்டாள்.

மகரிஷி தன்னை அழைத்துக் கொண்டு போவதற்கு வரப்போகிறான் என்றறிந்தபொழுது மட்டும் அவள் இதயம் வேகமாய் துடித்தது. தான் இவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கும் பொழுது தன்னை அழைத்துக்கொண்டு போவதற்குக் கணவன் வராமல், வேறு யாரையோ அனுப்பியது அவள் மனதை மேலும் புண்படுத்தியது.

அதற்குள் இப்ராஹீம்கான் சாஸ்திரியிடம் ட்யூப்ளிகேட் விஷயத்தையும் சொன்னான்.

''இப்பப் பண்ண வேண்டிய ப்ரோகிராமைச் சொல்றேன், கேட்டுக் கொள்.

நான் அந்த மகரிஷி என்பவன் கொண்டு வருகிற பிஸ்கெட்டுகளை அங்கேயே பரிசோதிக்கிறேன். அவை ட்யூப்ளிகேட்டாய் இருந்தால் அவனை அங்கேயே கொன்று போட்டு விடுகிறேன்.

என் துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டு விட்டு, கலக்கத்துடன் உடனே சந்தனாவை அழைத்துக் கொண்டு அங்கே வந் விடாதே.

ஒருக்கால் துப்பாக்கிச் சப்தம் கேட்கா விட்டால் நான் ப்ரீப் கேசுகளை எடுத்துக் கொண்டு உன்னிடம் வருவேன்.

இங்கிருந்து நாம் ஓடிப் போய் விடலாம்.

''அப்ப...இந்தப் பெண்?'' கேட்டான் சாஸ்திரி'' இப்ராஹீம் சந்தனாவைப் பார்த்து விட்டு''—

''அது நம்ம பொறுப்பு இல்லை. நடந்து ரோடு வரைக்கும் போய் ஏதாவது லாரியில் ஏறிப் போய்ச் கொள்ளும்'' என்றான் கான்.



'ஒருக்கால் அந்த மகரிஷியோடு கூட போலீஸ் டிபார்ட்மெண்ட் 'கண்ணி' வைத்திருந்தால் நம்ம காரியம் கஷ்டமாகி விடும்.

நாம் அதே காரில் புறப்பட்டுப் போனால், கொஞ்ச தூரம் பயணம் செய்த பிறகு, காரையும் இந்தப் பெண்ணையும் விட்டு விடலாம்,

இந்தப் பெண் நம்மோடு இருந்தால் 'பாதுகாப்பு' என்றான் சாஸ்திரி.

உண்மையில் இப்ராஹீம்கானை விட சாஸ்திரி கெட்டிக்காரன்,

ஆனால் சாஸ்திரியின் புத்திசாதுர்யங்களை ஒப்புக்கொள்வதற்கு கானின் அகம்பாவம் குறுக்கிட்டது.

''அதையெல்லாம் நான் யோசித்துக் கொள்கிறேன்'

நீ சொன்னதைச் செய். துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டு விட்டு பயந்து போய் விடாதேன்னு சொல்றேன்'' என்றான் எரிந்து விழுந்தபடி.

''சரி உன்னிஷ்டம்'' என்றான் சாஸ்திரி.

பத்தரை மணி வரையிலும் இருவரும் குடித்து கொண்டே உட்கார்ந்திருந்தார்கள். பத்தரைக்கு கான் புறப்பட்டான். ''ஜாக்கிரதை'' என்று மற்றொரு முறை எச்சரித்து விட்டு சாலைப் பக்கமாய் இறக்கத்தில் இறங்கினான் அவன் போன ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு சந்தனா மூதல் முதலாய் பேசத் தொடங்கினாள்.

''எனக்கென்னவோ இந்த கானைப் பார்த்தால் சந்தேகமாயிருக்கு'' என்றாள் சந்தனா.

அதற்குள் எட்டாவது பெக் குடித்துக் கொண்டிருந்த சாஸ்திரி ''ஏன்?'' என்று கேட்டான்.

''என் கணவருக்கு இவன் போன் பண்ணியபோது, ப்ரீப்கேசில் ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் இருக்கலாம் என்று சொன்னதாய் இவன் நம்மிடம் சொன்னான்.

எந்தப் போலீஸ் ஆபீசருமே கிட்னாப்பரிடம் அப்படிச் சொல்லமாட்டாங்க'' என்றாள்,

சாஸ்திரிக்கு அவள் சொன்னதில் உண்மை இருப்பதாய் பட்டது, ''உண்மைதான்'' என்றான்''. ...ஆனால் உன் கணவர் ஊகிப்பது போல நடுவில் அந்த டிரைவர் பிஸ்கெட்டுகளை மாற்றி விடலாமில்லையா?''

''அவன் டிரைவரில்லை, என் கிளாஸ்மேட் மகரிஷி! நிறையப் படித்தவன்'' என்றாள் சந்தனா.

''அதோடு கூட இதில் இன்னொரு பாயின்ட் கூட இருக்கு.

எழுபத்தைந்து மைல் தூரம் காரை ஓட்டுவதற்கு மகரிஷிக்கு ஏறக்குறைய ஒரு மணி நேரமாகும் என்று வைத்துக் கொண்டால், அவனிடம் போலீசார் அந்த ப்ரீப் கேசுகளை ராத்திரி எப்பொழுதோ ஒன்பதரை மணிக்கு ஒப்படைப்பாங்க,

அவன் பதினோறு மணிக்கெல்லாம் இங்கே கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். இதற்குள் இதே சைசு ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் தயாரித்து ப்ரீப்கேசில் மாற்றி வைப்பது என்பது மகரிஷியால் முடியாது.''

''கரெக்ட்'' என்றான் சாஸ்திரி, ''பின்னே உன் கணவர் இந்த விஷயத்தை ஏன் சொல்லியிருப்பார் என்கிறாய்?''

''இந்த விஷயத்தை என் கணவர் சொல்லியிருக்க மாட்டார்—இதெல்லாம் இப்ராஹீம் போடுகிற நாட்கம், என்று தான் எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் சந்தனா.

சாஸ்திரி வாயடைத்துப் போனான். அவனுக்கு இது வரை இப்படிப்பட்ட யோசனை வந்ததில்லை. சந்தனாவை பார்த்து—''இப்ராஹீம் கான் அப்படிப் பொய் சொல்ல வேண்டிய காரணம் என்ன?'' என்று கேட்டான் அவன்



தன் பார்ட்னர் போலவும் அவள் ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்வது போலவும்.

சந்தனா சொன்னாள்—''என் உத்தேசப்படி பதினோறு மணிக்கு நமக்குத் துப்பாக்கிச் சப்தம் கேட்கும் போது, அதைக்கொண்டு வருகிற டிரைவரை இப்ராஹீம் கான் கொன்று விடுவான். முடிந்தால் அந்த ப்ரீப் கேசுகளை எடுத்துக் கொண்டு, தான் மட்டும் காரில் ஏறிப் போய்விடுவான். அல்லது, முன்னரே இப்ரஹீம் கான் ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் தயாரித்து வைத்திருப்பான். ஒரிஜினல் பிஸ்கெட்டுகளை மாயமாக்கி விட்டு, தான் தயாரித்து வைத்திருக்கும் பிஸ்கெட்டுகளை இங்கே கொண்டுவருவான். நம்மிடமோ அந்தக் கார் டிரைவர்தான் ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் எடுத்துக் கொண்டு வந்ததாகவும், அதனால் தான் அவனை கொன்று விட்டதாகவும் சொல்லுவான்.''

சாஸ்திரிக்கு இந்த யோசனை நூறு சதவீதம் சரியானதாகத் தோன்றிற்று. தான் சந்தனாவோடு இங்கேயே இருந்தால், ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளை மாற்றி இப்ராஹீம் கொண்டு வருவதைத் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது. அதற்கப்புறம் அவன் எங்கேயோ ஒளித்து வைத்திருக்கும் ஒரிஜினல் பிஸ்கெட்டுகளோடு மாயமானதும், தான் அவனைத் தப்புச் சொல்ல முடியாது. ஒரே நிமிஷத்தில் இவ்வளவையும் யோசித்து விட்டு--

''இப்ப என்ன பண்ணலாம்?'' என்றான்.

''நாமிருவரும் கூட அங்கே போகலாம்'' என்றாள் சந்தனா.

''தொலைவிலிருந்தே, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று பார்ப்போம். இப்ராஹீம் மட்டும் ஒரிஜினல் பிஸ்கெட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு ட்யூப்ளிகேட்

பிஸ்கெட்டுகளை அந்த இடத்தில் வைத்தானானால், நீ அவனை என்ன பண்ணணும்னு அவ்விடத்திலேயே முடிவெடுத்துக் கொள்ளலாம். எது என்னவானாலும் அங்கே நடப்பதைக் கண்ணால் கண்டாலேயொழிய, இப்ராஹிம்கானின் நேர்மையைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாது.''

சாஸ்திரி மேற்கொண்டு யோசிக்கவில்லை. ''ஆமாம், வா'' என்று அவளிடம் வந்து அவள் கால்க்கட்டுகளை அவிழ்த்து விட்டு, துப்பாக்கியை அவளை நோக்கிக் குறிவைத்துக்கொண்டே ''நட'' என்றான்

சந்தனாவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. மகரிஷி ப்ரீப்கேசுகளை எடுத்துக்கொண்டு வருகிறான் என்று தெரிந்ததிலிருந்து, அவள் மனம் அவள் வசத்திலில்லை. ஒருக்கால் போலீசாரே ஏதாவது சூப்பர் பிளான் போட்டு ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளை அனுப்பியிருந்தால், அதற்கு பலியாக வேண்டியது மகரிஷி தான் என்று தெரிந்ததிலிருந்து, அவனை எப்படிக் காப்பாற்றுவது என்று மனதிற்குள்ளேயே யோசனையில் ஆழ்ந்தபடி வந்து கொண்டிருந்தாள். அவள் சொன்ன யோசனைகளை சாஸ்திரி, நம்பி, இந்த விதமாய் பிளானை மாற்றியது அவளுக்கு மிகச் சந்தோஷமாயிருந்தது

உண்மையில் மகரிஷி ஒரிஜனல் பிஸ்கெட்டுகளையே கொண்டுவந்து ஒப்படைத்தால் எந்த அபாயமும் இல்லை. அப்படியில்லாமல் ஒருக்கால் இப்ராஹிம் கானே இந்த விதமாய் நாடகமாடினால் மகரிஷியின் உயிர் போகப்போவது உறுதி. முதலில் மகரிஷியின் உயிர் போகப் போவது உறுதி. முதலில் மகரிஷியின் உயிரைத் தான் காப்பாற்ற வழி தேட வேண்டும். எல்லாவற்றையும் விட அதுதான் முக்கியம்.



இவ்வாறு எண்ணிக்கொண்டே அவள் நடந்து கொண்டிருந்தாள். பின்னாடியே துப்பாக்கியோடு சாஸ்திரி நடந்து வந்து கொண்டிருந்தான்.

அதற்குள் அவன் ஏறக்குறைய முழு சீசாவையும் குடித்து விட்டிருந்ததால் கால்கள், கொஞ்சம் தள்ளாடிக் கொண்டிருந்தன. அது சிறு குன்றுப் பிரதேசமாயிருந்ததால் அவ்வாறு தள்ளாடியபோது, அவன் இரண்டு முறை கீழே விழுந்து உருண்டு சரியத் தொடங்கினான். அவன் கையிலிருந்த துப்பாக்கி எந்த முயற்சியும் பண்ணாதபோதே வெடித்தது.

அந்த சப்தத்தைக் கேட்டுவிட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த சந்தனா, சாஸ்திரி கீழே உருண்டு கொண்டிருந்ததைப் பார்த்தாள். அவள் ஒரு வினாடி நேரத்தைக் கூட வீணாக்க விரும்பவில்லை. பலத்தையெல்லாம் கால்களில் கூட்டிக் கொண்டு ஓடினாள். நடந்ததை ஊகித்துணர்ந்து கொண்டு, சாஸ்திரி கல் ஒன்றைப் பிடித்துக்கொண்டு எழுந்து நிற்பதற்குள், அவள் இருட்டில் கண்மறைவாகி விட்டாள்.

* * * *

ஏழுபத்தெட்டாவது மைல் கல்லிற்கருகே நின்று கொண்டிருந்த இப்ராஹிம்கானுக்கு தொலைவிலிருந்து துப்பாக்கிச் சப்தம் கேட்டது. அது சாஸ்திரி சுட்டது தான் என்று தெரியும். ஆனால் அவனுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. சாஸ்திரி சந்தனாவைச் சுட்டுத் தள்ளி விட்டானோ என்றெண்ணிக் கொண்டான். கோபத்தாலும் ஆத்திரத்தாலும் அவன் நெற்றி நரம்புகள் புடைத்துக் கொண்டன. திரும்பிப் போனான்.

அதே சமயத்தில் சாலையில் தொலைவிலிருந்து ஒரு வாகனம் வந்து கொண்டிருந்தது கண்ணில் பட்டது.

சந்தனாவோ, சாஸ்திரியோ உயிரோடு தான் இருக்கிறார்களா இல்லையா என்று அவன் யோசிக்கவில்லை. அவ்விருவரும் செத்துப் போயிருந்தாலும், அவனுக்கு அதனால் ஏற்படப் போகும் நஷ்டம் எதுவுமில்லை. அதனால் அவன் அந்த கிலோ மீட்டர் கல்லிற்கருகிலேயே நின்று கொண்டிருந்தான். அதற்குள் வாகனம் மெதுவாய் வந்து அங்கே நின்றது. அதிலிருந்து மகரிஷி இறங்கி ப்ரீப் கேசுகள் இரண்டையும் வெளியே வைத்தான். இப்ரஹிம்கான் மரத்திற்குப் பின்னாலிருந்து பெரிதாய்க் கத்தினான்.

"நீ அப்படியே நூறடி பின்னுக்கு நகர்ந்து தொலைவில் போய் இரு. இந்த ப்ரீப்கேசுகளில் பிஸ்கெட்டுகள் இருக்கின்றனவா இல்லையா என்று நான் பார்க்கிறேன்" என்றான்.

மகரிஷி அதே விதமாய் தொலைவில் போய் நின்று கொண்டான்.

மரத்திற்குப் பின்னாலிருந்து இப்ராஹிம்கான் வெளியே வந்து, ப்ரீப்கேசுகளை எடுத்துக் கொண்டு திரும்பவும் மரத்திற்குப் பின்னால் போனான்.

அவற்றைத் திறந்து தன்னிடமுள்ள உபகரணங்களைக் கொண்டு பரிசோதித்தான்.

முதல் நிமிஷத்திலேயே அவை ட்யூப்ளிகேட் என்று தெரிந்து விட்டது. அவன் முகம் கடுகடுப்பாகி விட்டது. துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டான். மரத்திற்குப் பின்னாலிருந்து திரும்பவும் கத்தினான்.

"மகரிஷி! ப்ரீப்கேசுகளில் பிஸ்கெட்டுகள் சரியாய் தான் இருக்கின்றன. நீ திரும்பி காருக்கருகில் வரலாம்"



என்று. அவன் அவ்விடத்திற்கு வந்ததுமே சுட்டுவிடத் தயாராய் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டான்.

காயப்படுத்தி விட்டுப் பிறகு நிஜத்தைக் கக்க வைக்க வேண்டும் என்பது கானின் உத்தேசம்.

ஆனால் மகரிஷி திரும்பி வரவில்லல.

"நீ திரும்பி வரலாம்" என்று பெரிதாய் கத்தினான்

அந்தப் பக்கத்திலிருந்து சந்தடியே இல்லை.

இப்ராஹிம்கான் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். எதுவுமே தென்படவில்லை. திரும்பவும் உரக்க— "மகரிஷி! இதோ, சந்தனா இங்கேயே தான் இருக்கிறாள். வந்து அழைத்துக் கொண்டு போ" என்று கத்தினான்.

அவனுள் கோபம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

மகரிஷி வரும் ஜாடையைக் காணோம். இம்முறை கோபமே கலக்கமாய் மாறி விட்டது இப்ராஹீமுக்கு. ஏதோ நடந்திருக்கிறது என்று தெரியும், ஆனால் என்ன நடந்ததென்றுதான் தெரியவில்லை. இவ்வாறு போலி பிஸ்கெட்டுகளைத் தந்து விட்டுப் போய் விட்டதில், மகரிஷியின் உத்தேசந்தான் என்னவாயிருக்கும்?

ரவிதேஜாவின் மனைவியுடைய உயிர் எப்படிப் போனால் தனக்கென்ன என்று ஒரிஜினல் பிஸ்கெட்டுகளை எடுத்துக் கொண்டு இருட்டில் மாயமாகியிருப்பானா?

அப்படிப்பட்ட உத்தேசமிருப்பவன் காரில் இவ்வளவு தூரம் எப்படி வந்திருப்பான்? அங்கிருந்தே அதே காரில் மாயமாய் மறைந்து விட்டிருக்கலாமே?

எதிரேயிருந்த போலி பிஸ்கெட்டுகள் தன்னைப் பரிகசிப்பது போலத் தோன்றின. அவற்றைக் காலால் ஓங்கி உதைத்தான்.

மறுபடியும் ஒரு முறை உரக்க ''மகரிஷி'' என்று கத்தினான்.

துப்பாக்கியை ஜாக்கிரதையாய் பிடித்துக் கொண்டு, அவன் அடிமேலடி வைத்துக் கொண்டே காருக்கருகில் வந்தான். சரியாய் அதே சமயத்தில் சாலைக்கு அந்த பக்கத்திலிருந்து சந்தடி கேட்டது.

சட்டென்று துப்பாக்கியின் குறியை அந்தப் பக்கமாய்த் திருப்பினான்.

தொலைவிலிருந்து சாஸ்திரி நொண்டிக் கொண்டே ஓடிவந்து கொண்டிருந்ததைக் கண்டான், இப்ராஹிமிற்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் வேகமாய் சாஸ்திரியை நோக்கி ஓடி வந்து ''என்ன வாச்சு?'' என்றான்.

சாஸ்திரியின் முகம் வெளுத்துப் போயிருந்தது, குடி மயக்கமெல்லாம் இறங்கிப் போயிருந்தது.

''சந்தனா ஓடிப்போய் விட்டாள்'' என்றான்.

''வாட்?''

''ஆமாம்''

''அவள் கால் கட்டுகளை ஏன் அவிழ்த்து விட்டாய்?',

சாஸ்திரி பதில் பேசவில்லை.

''எனக்குத் துப்பாக்கி சப்தம் கேட்டது. அதென்ன?'' என்று கேட்டான் இப்ராஹீம்.

''நான் தான் சுட்டேன்''—என்றான் சாஸ்திரி.

''எதுக்கு?''

''அவள் ஓடிப்போயிருந்ததைப் பார்த்துட்டு'' பொய் சொன்னான்.



''இடியட்! நான் கேட்டது அவள் கால் கட்டுகளை ஏன் அவிழ்த்தாய் என்று!''

''ரெண்டு பேருமாய்ச் சேர்ந்து இங்கே வரலாம்னு நினைச்சோம்'' என்றான் சாஸ்திரி.

''நம்ம ஒரிஜினல் பிளானில் அது இல்லையே?''

கோபத்தை அடக்கிக் கொண்டே கேட்டான் இப்ராஹிம்.

''இல்லை...ஆனால் இங்கே என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்னு தான்.''

''அப்படீன்னால் நான் இந்த ப்ரீப்கேஸுங்களை எடுத்துக்கிட்டு ஓடிப்போய் விடுவேன்னு நினைச்சீங்களா நீங்க இருவரும்?''

சாஸ்திரி—''அதில்லை...'' என்று ஏதோ சொல்லப் போனான். அப்பொழுது சுட்டான் இப்ராஹிம்கான்.

தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றும், ப்ரீப் கேஸ்களைத் தன்னிடம் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டிய ஆள், இருட்டில் தலைமறைவாகி விட்டான் என்றும், சந்தனா தப்பித்துக் கொண்டு விட்டாள் என்றும், தன் அடியாள் தன்னை மோசம் பண்ணி விட்டான் என்றும், இவ்வளவு காரணங்களுமாய்ச் சேர்ந்து அலைக்கழிக்கவே, அவன் அந்தச் சமயத்தில் அரக்கனாகவே மாறி விட்டான்.

வரிசையாய் நான்கு முறை துப்பாக்கியை வெடித்தான் சாஸ்திரியின் மார்பு துளையாயிற்று. மறுபேச்சுப் பேச முடியாமல் அவன் அவ்விடத்திலேயே சுருண்டு விழுந்தான்,

அடுத்த நிமிஷம் அவன் உயிர் காற்றோடு இரண்டறக் கலந்து விட்டது.

ஃ ஃ ஃ

காரை விட்டு தொலைவில் போய் நின்று கொண்டே மகரிஷி கடைக் கண்ணால் பார்க்கத் தொடங்கினான்.

இப்ராஹிம் அந்த ப்ரீப்கேசுகளை எடுத்துக்கொண்டு மரத்திற்குப் பின்னால் போனதையும் அங்கே பாட்டரி விளக்கின் வெளிச்சத்தில் அந்த பிஸ்கெட்டுகளைப் பரிசோதித்ததையும் கவனித்தான்.

அவை ட்யூப்ளிகேட்டாய் இருக்கலாம் என்ற சந்தேகம் மகரிஷிக்கு ஏற்படவே இல்லை அவன் மனமெல்லாம் சந்தனாவின் நிலைமையைப் பற்றிய கவலையிலேயே ஆழ்ந்திருந்தது!

அந்த பிஸ்கெட்டுகளை எடுத்துக் கொண்டு அவர்கள் சந்தனாவை விட்டுவிட்டால், அதுவே போதும் என்ற உணர்ச்சியில் இருந்தான்,

அதற்குள் இப்ராஹிம்கான் ப்ரீப்கேசுகளை மூடி விட்டுத் தன்னைக் கூப்பிட்ட சப்தம் கேட்டது.

அவன் திரும்பி கார் இருந்த பக்கமாய் நடக்கத் தொடங்கினான். அவன் காரை நோக்கி வந்திருந்தால் அந்த நிமிஷமே அவன் உயிர் போயிருக்கும். ஆனால் அதே சமயத்தில் புதருக்குள் சந்தடி கேட்டது. அவன் அந்தப் பக்கமாய் திரும்பிப் பார்த்தான். அந்தப் பக்கத்திலிருந்து ஒரு உருவம் ஓடிவந்து கொண்டிருந்தது தென்பட்டது. அப்படி வந்து கொண்டிருந்தது யார் என்று புரியாமல் அவன் அப்படியே நின்றுவிட்டான். கிட்டே வந்ததும் அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. சந்தனா!

அவன் ஏதோ பேசவந்தபொழுது அவள் வேகமாய் வந்து, அவன் உதட்டின் மீது கையை வைத்துத் தடுத்து, மெல்லிய குரலில் 'உஷ்' என்றாள்.



அவனும் நிலைமையைப் புரிந்துக்கொண்டாற்போல பதில் பேசாமல் அவளோடு சேர்ந்து சாலை இறக்கத்தில் இறங்கி விட்டான்.

அதற்குள் இப்ராஹீம்கான் இரண்டு முறை கத்திவிட்டு சாஸ்திரியோடு சம்பாஷணையில் இறங்கியிருந்தது காதில் விழுந்தது. தம் கண் முன்னாடியே சாஸ்திரியை இப்ராஹிம்கான் கொன்றதைப் பார்த்து சந்தனா பயத்தால் நடுங்கிவிட்டாள். மகரிஷியை அழுத்தமாய்க் கட்டிக் கொண்டாள்.

அதற்குப்பிறகு இப்ரஹீம்கான் இருட்டில் கலந்து கண்மறைவாகும் வரை அவர்கள் எதுவும் பேசிக்கொள்ள வில்லை.

அவன் தொலைவிற்குப் போய் விட்டது அறிந்ததும், மகரிஷி ''என்ன நடந்தது சந்தனா?'' என்று கேட்டான். அப்பொழுதுதான் உணர்ந்தாள் அவள்-தான் அவன் அணைப்பில் இருந்ததை!

முற்றிலும் பயந்து போய் தம்நிலையைத் தான் மறந்தவர்களாய் ஒருவர் அணைப்பில் இன்னொருவர் இருந்து கொண்டிருந்தார்கள், அதை உணர்ந்தவளாய் அவள் அவனைவிட்டு விலகி நின்றாள்.

நடந்ததையெல்லாம் சொன்னாள்.

தன்னைக் காப்பாற்றுவதற்காக அவள் அபார அறிவோடு, தனித்திருந்த சாஸ்திரியின் எண்ணங்களைக் கிளறித் தூண்டி விட்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் மகரிஷி நெகிழ்ந்து போய் விட்டான். அவளைத் திரும்பவும் மார்போடணைத்துக் கொள்ள வேண்டும் என்றெழும்பிய விருப்பத்தை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டு, நன்றி நிரம்பிய கண்களோடு—'' உனக்கு நான் எப்படித்தான் நன்றியைத் தெரிவித்துக் கொள்வேனோ

தெரியவில்லை. ஒருக்கால் போலீசார் ஆடிய நாடகத்தால் அவை ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளாய் இருந்தால் என் உயிர் போயிருக்கும்'' என்றான்.

அப்பொழுதுதான் சந்தனாவின் டென்ஷன் கொஞ்சமாய் குறைந்திருந்தது. தாம் முற்றிலும் ஆபத்திலிருந்து மீண்டு விட்டோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. லேசாய் சிரித்துக்கொண்டே—''கணவர் என்னதான் போலீஸ் ஆபீசராய் இருந்தாலும், தன் மனைவிக்காக அவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொள்ளமாட்டார். வா, போகலாம், இங்கே இருப்பது நமக்கு ரிஸ்க்'' என்றாள்.

இருவரும் காருக்கருகில் வந்தார்கள்.

## 34

உதகைக்கு எழுபத்தைந்தாவது கிலோ மீட்டர் கல்லிற்கருகே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் கமிஷனர் அசுவத்தாமனும், ரவிதேஜாவும்.

சுற்றிலும் காரிருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

மகரிஷிக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து அவ்விடம் வரைக்கும் வந்து நின்று விட்டார்கள். ஒருக்கால் மகரிஷிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் உடனே களத்தில் குதிப்பதற்கு சித்தமாய் அசுவத்தாமனும், ரவிதேஜாவும் அவ்விடம் வரைக்கும் வந்திருந்தார்கள். இருவரிடமும் துப்பாக்கிகள் இருந்தன.

கார் ஹெட் லைட்டை அணைத்துவிட்டு இருட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் இருவரும்.



''மகரிஷி அந்த எழுபத்தைந்தாவது கிலோமீட்டர் கல்லிற்கருகில் காரை நிறுத்தினானோ இல்லையோ?''—தான் போட்ட திட்டத்திற்கு அஸ்திவாரம் போடுவதற்காக முதல் காயை நகர்த்தியபடி சொன்னான் ரவிதேஜா.

அசுவத்தாமன் அவனை சந்தேகத்துடன் பார்த்து விட்டு, ''உங்க டிரைவர் ரொம்ப நம்பிக்கையானவன் என்றும் அவனிடம் பிரீப் கேசைக் கொடுத்தனுப்பலாம் என்றும் நீதானே சொன்னாய்?'' என்றார்.

''பத்து லட்சம் விலைமதிப்புடைய தங்கத்தைப் பார்த்தால் எவ்வளவு நம்பிக்கையானவனாயிருந்தாலும் ஆசை உண்டாவதில் ஆச்சரியமில்லையே?''

''ஒருக்கால் அப்படியே நடந்தால் அவங்க நம்மைத் தொடர்பு கொள்வாங்க.''

''நாம் அந்த டிரைவருக்கு நிஜமாகவே தங்கத்தைத் தந்து அனுப்பிவிட்டோம் என்றும், நம்மிடம் இனி எதுவுமில்லை என்றும் சொன்னால் அவங்க நம்பி விடுவாங்களா?''

கமிஷனர் சிரித்தார். ''ஒரிஜினல் தங்கம் நம்மிடையேதான் இருக்கிறது ரவிதேஜா.''

சாதாரணமாய் உரையாடிக்கொண்டிருந்த ரவிதேஜா இடி விழுந்தாற்போல அதிர்ந்துவிட்டான். ''என்ன சார் சொல்றீங்க நீங்க?'' என்றான் தடுமாற்றத்துடன்.

''நாம் உங்க டிரைவர் மூலமாய் கொடுத்தனுப்பியது ட்யூப்ளிகேட் பிஸ்கெட்தான்.''

ரவிதேஜாவின் தொண்டை வறண்டு விட்டது. ''அப்படீன்னால்...அப்படீன்னால்...'' என்றான்.

''ஆமாம். அவ்வளவு விலை மதிப்பு வாய்ந்த பிஸ்கெட்டுகளை ஒரு சாதாரண டிரைவர் மூலமாய் அனுப்புவதற்கு நான் எப்படிச் சம்மதித்திருப்பேன்னு எண்ணிவிட்டாய்? அதே போன்ற ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் தயாரிக்கச் செய்தேன். அந்தப் பேச்சே வராததால் இவ்வளவு நேரமாய் நானும் சொல்லவில்லை உன்னிடம்.''

ரவிதேஜாவுக்கு சந்தோஷப்படுவதா, வருத்தப்படுவதா என்று புரியவில்லை. தானும் தயாரிக்கச் செய்தது ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளுக்கே, டியூப்ளிகேட் போலும்! பத்து லட்சம் கைக்கெட்டுவது போல எட்டிவிட்டு, கை நழுவிப் போய்விட்டது!

ஒரு விதத்தில் இதுவும் தனக்கு நல்லதுதான் என்று தோன்றிற்று அவனுக்கு. இப்ராஹீம்கான் தங்கங்களைப் பரிசோதித்து விட்டு, அவை ட்யூப்ளிகேட் என்று தெரிந்து மகரிஷியைக் கொன்றுவிட்டால், அப்பொழுது அசுவத்தாமனுக்குக்கூட சந்தேகம் வராது. ஆனால் அந்த பத்து லட்சத்தை வசியப்படுத்திக் கொள்ளும் அதிர்ஷ்டம் மட்டும் கை நழுவிப் போய்விட்டது தனக்கு!

இந்த விதமாய் யோசித்துக் கொண்டு ரவிதேஜா குரலில் மேலும் வியப்பை ஏற்படுத்திக்கொண்டு...''சார்! ஒருக்கால் அந்த இப்ராஹீம் ப்ரீப் கேசைத் திறந்து அதிலிருப்பது ட்யூப்ளிகேட் என்று தெரிந்து கொண்டு விட்டு சந்தனாவுக்கு ஏதாவது தீங்கிழைத்தால்?'' என்றான்.

''மாட்டான். கிட்னாப்பர்ஸ அப்படிப்பண்ண மாட்டாங்க. நம்மை மேலும் தூண்டிவிடுவதற்காக அவங்க நம்மை பயமுறுத்துவாங்க. அவ்வளவு தூரம் அவங்களுக்குச் சந்தேகம் வந்தாலும் அது உங்கள் டிரைவர் மீது தான் தாவும்.'' என்று ஏதோ சொல்லப்போனார். அதற்குள் தொலைவிலிருந்து துப்பாக்கி வெடித்த சப்தம் கேட்டது. இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். ''சார்...சந்தனா...''



''ஸ்டார்ட் த கார் க்விக்'' என்று கத்தினார் கமிஷனர், ரவிதேஜா காரை ஸ்டார்ட் பண்ணி வேகமாய் முன்னுக்கு ஓட்டிக்கொண்டு போனான். அவர்கள் இன்னும் மூன்று கிலோ மீட்டர் தூரம் போவதற்குள் மேலும் நான்கு முறை துப்பாக்கிச் சப்தம் கேட்டது. ரவிதேஜா வேகத்தை இன்னும் அதிகமாக்கினான். கார் இருளைக் கிழித்துக் கொண்டு வேகமாய்ப் பறந்தது. எழுபத்தைந்தாவது கிலோ மீட்டர் கல்லிற்கருகே தம் கார் தென்பட்டது. ரவிதேஜா வாகனத்தை நிதானமாக்கி, தம் காருக்குப் பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்தினான். அந்தக் கார் விளக்கின் வெளிச்சத்தில் மகரிஷியும் சந்தனாவும் தென்பட்டார்கள்.

கமிஷனர் அசுவத்தாமன், சந்தனா இருந்ததைப் பார்த்து நிம்மதியாய் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

ரவிதேஜா மட்டும் மகரிஷி எந்தக் காயமும் இல்லாமல் இருட்டிலிருந்து வந்ததைப் பார்த்து, வாயடைத்துப்போய் அப்படியே நின்று விட்டான்.

ஃ ஃ ஃ

மகரிஷியோடு சேர்ந்து வந்து கொண்டிருந்த சந்தனாவை எதிரே ஓடிப்போய் அணைத்துக் கொள்ளப் போனான். அவள் ஜட பதார்த்தத்தைப் போல அசையாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து, அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

வந்ததுமே ஓடிவந்து தன் மார்பில் சரிந்து—''திரும்பவும் உங்களைப் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லைங்க''

என்று அழுவாள் என்று எதிர்பார்த்திருந்த அவன், அவள் அலட்சியமாய் இருந்ததால் சந்தேகத்துடன், தன் கேசங்களை ஒதுக்கியபடி கண்களுக்குள் எதையோ தேடிக் கொண்டே ''சந்தனா'' என்று கூப்பிட்டான்.

அவள் ரோஷத்துடன் நிமிர்ந்து ஏதோ சொல்லப் போனாள். அதற்குள் கமிஷனர் வந்ததால் தன்னையறியாமல் நிறுத்திக் கொண்டாள்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டார்'' கமிஷனர் கலக்கத்துடன்,

அதற்குள் மகரிஷி நடந்ததையெல்லாம் சொன்னான். தொலைவில் கிடந்த சாஸ்திரியின் சவத்திற்கருகில் போய் கமிஷனர் பரிசோதித்தார்.

திரும்பி வந்து ''அவன் செத்துக் கிடக்கான் என்றார்.

''வாங்க, போகலாம் கெஸ்ட் ஹவுசுக்குப் போய் எல்லாவற்றையும் பேசிக் கொள்ளலாம்'' என்றான் ரவிதேஜா.

சந்தனா அவனோடு கூட காரை நோக்கிப் போகாமல் மகரிஷியிடம் ''வா, என்னை கெஸ்ட் ஹவுசில் இறக்கிவிடு' என்றாள்.

திக்பிரமையால் அதிர்ந்து விட்டான் ரவிதேஜா.

'இதென்ன சந்தனா! வா, நாம் போகலாம். அவன் காரை எடுத்துக் கொண்டு கெஸ்ட் ஹவுசுக்கு வருவான் என்றான்.

சந்தனா, அவன் வார்த்தைகள் காதில் விழாதவளைப் போல—''வா மகரிஷி'' என்று போய் காரில் உட்கார்ந்து கொண்டாள்.

பின்னாலிருந்து ரவிதேஜா—''உனக்கு புத்தி ஏதாவது பிசகிடுத்தா'' என்று அவளோடு கூட காரை நோக்கி நடக்கப் போனான்.



அவள் உரக்க ''ப்ளீஸ், டோன்ட் கம்! உங்க காரில் நீங்க வாங்க'' என்று மகரிஷி பக்கம் திரும்பி—''வந்து டிரைவ் பண்ணுகிறாயா! என்னையே ஓட்டிட்டுப் போகச் சொல்கிறாயா இந்தக் காரை?'' என்று கேட்டாள்.

மகரிஷி சங்கடத்தில் ஆழ்ந்துபோய் இருவரையும் பார்த்தான்.

அச்சூழ்நிலையை அதிக நேரம் வளரவிடக் கூடாது என்றெண்ணி—

அசுவத்தாமன் இடைமறித்து— ''நீ கூட்டிட்டு வா அவளை''—என்று சொல்லிவிட்டு ரவிதேஜாவைப் பார்த்து

''வா ரவிதேஜா, நாம் இந்தக் காரில் போகலாம். அங்கே போன பிறகு விபரமாய் பேசிக்கலாம்'' என்றார்.

இரு கார்களும் வந்து கெஸ்ட் ஹவுசிற்கு முன்னால் நின்றன. முதல் காரிலிருந்து மகரிஷியும் சந்தனாவும் இறங்கினார்கள். இரண்டாவது காரில் ரவிதேஜாவும் அசுவத்தாமனும் இருந்தார்கள்.

ரவிதேஜாவின் முகம் சிவந்திருந்தது.

கிட்னாப் நடந்த இடத்தில் சந்தனாவின் நடவடிக்கையால் அவன் அதிர்ச்சிக்கு ஆளாகியிருந்தான். அசுவத்தாமன்தான் அவனை கெஸ்ட் ஹவுஸ் வரைக்கும் அழைத்துக் கொண்டு வரவேண்டியிருந்தது.

கெஸ்ட் ஹவுசிற்கு முன்னால் இறங்கிக் கொண்டு அவள் உள்ளே போகப் போன பொழுது ரவிதேஜா ''சந்தனா! ஏன் இவ்வளவு கோபமாய் இருக்கிறாய்?'' என்றான் கையைப் பிடித்துக் கொண்டு.

அவள் அவன் கையை விடுவித்துக் கொண்டே ''பிகாஸ் ஐஹேட்'' என்றாள் ஒவ்வொரு வார்த்தையாய் அழுத்தி உச்சரித்து.

''ஏன்? நான் என்ன தப்புப் பண்ணினேன்?'' அதே ஸ்தாயியில் கேட்டான் அவன்,

''ஒரு தப்பில்லை, நீங்க பண்ணாத தப்புதான் என்ன? கட்டிய மனைவியையும் சமூகத்தையும் மோசம் பண்றது தப்பில்லையா?''

ஆவேசத்தால் அவள் உடல் அதிர்ந்தது.

''அப்படீன்னால்?'' ரவிதேஜாவின் புருவம் முடிச்சேறிற்று.

''உங்களுக்கு என்னால் தான் கண் பார்வை போய் விட்டதென்றும்...என்னால் ஒருத்தர் தன் வாழ்க்கையை இருட்டில் தொடரக் கூடாது என்றும் நினைத்து, உங்களை கல்யாணம் பண்ணிக் கொண்டேன். ஒவ்வொரு நிமிஷமும் உங்களைப் பார்த்து நான் செய்த தப்பை ஞாபகப் படுத்திக்கொண்டு குமுறிக் குமுறிப் போய், எவ்வளவு நரகத்தை அனுபவித்திருக்கிறேன்னு. அதற்குப் பிரதிபலனாய் நீங்கள் என்ன செஞ்சீங்க?

எங்கள் அத்தனை பேரையும் நம்ப வைத்து கண்ணில்லாதவரைப் போல நடிச்சீங்க. நீங்களும் கமிஷனரும் சேர்ந்து அந்தத் தங்கத்தை சூறையாட வேண்டும் என்று பிளான் போட்டிருக்கீங்க.

வேறென்ன? அதான் கிடைத்து விட்டதே. அந்தத் தங்கம் உங்களுக்கு? எடுத்துக்குங்க. பாதி பாதியாய் பங்கிட்டுக் கொண்டு மாடமாளிகைகளைக் கட்டிக்குங்க'' கோபம் துக்கமாய் மாறி விம்மிக்கொண்டே கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள்.

அவளைச் சமாதானப் படுத்த கைகளை விலக்கப் போனான்.



''தோ...என்னைத் தொடாதீங்க. என் கணவர் ஒரு நம்பிக்கைத் துரோகி—தேசத் துரோகி என்று சொல்லிக் கொண்டு சுற்றி வந்துட்டிருக்க முடியாது என்னால். இனி என்னை சந்திக்க முயற்சிக்காதீங்க'' என்று அவனை விட்டு தொலைவிற்குப் போய் ஒதுங்கிக் கொண்டாள்.

''அம்மா சந்தனா! நீ தப்பாய் புரிந்து கொண்டு விட்டாயம்மா. அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல் அந்த ரெண்டு ப்ரீப்கேசுங்களையும் பேங்க் லாக்கரில் வைத்தது நான்தான்,

அப்படி ஏன் பண்ணினேன் தெரியுமா? அப்படிச் செய்தால் அவங்க தங்கத்திற்காக எங்களைத் தாக்க வரலாம், அப்பொழுது அவங்களைப் பிடித்து விட வேண்டும் என்று எங்கள் பிளான். இந்த விஷயத்தில் ரவிக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. வீணாய் அவனைத் தவறாய்ப் புரிந்து கொண்டு, உன் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ளாதே'' பரிவோடு சொன்னார் கமிஷனர்.

''பின்னே கண்பார்வை போய்விட்டாற்போல ஏன் நாடகமாட வேண்டியிருந்தது?''

ரவிதேஜா குறுக்கிட்டு—''கண் பார்வை போனது பொய் இல்லை. ஆனால் மகரிஷி கொண்டு வந்த மருந்தால் எனக்குப் பார்வை திரும்பக் கிடைத்து விட்டது'' என்றான்.

''பின்னே, அப்பொழுது உங்களுக்குக் கண் தெரியவில்லைனு ஏன் பொய் சொன்னீங்க?'' நேரிடையாய் கேட்டாள்.

ரவிதேஜா ஒரு வினாடி தடுமாற்றமடைந்தான். என்ன சொல்லவேண்டும் என்று தெரியவில்லை. அவன் மௌனமாய் இருந்ததால் அவள் சந்தேகம் உறுதியாகக் காரணமாயிற்று

''பாருங்கள்! உங்களால் பதில் சொல்ல முடியாது. ஆனால் தப்புப் பண்ணவில்லைன்னு மாத்திரம் சாதிக்க முடியும். நீங்கள் குருடராய் தொடர்ந்து கொண்டிருந்தது என்னை வேவு பார்ப்பதற்காகத்தானே? இல்லை என்று வாதாடாதீர்கள் வெறும் சமாதானவார்த்தைகளால் குடும்பங்கள் நிலைத்து நின்றுவிடாது. உண்மை வேண்டும் எனக்கு. என் கணவர் எந்த தப்பும் பண்ணவில்லை என்று ருசுவான அன்று, நானே மன்னிப்புக் கேட்டுக்கொள்வேன். தயவுசெய்து அதுவரை என்னைப் பேசவைப்பதற்கு முயற்சி பண்ண வேண்டாம்'' என்று விடுவிடென்று நடந்து உள்ளே போய் பெட்ரூம் கதவைத் தடாலென்று மூடித் தாழிட்டுக்கொண்டாள்.

ரவிதேஜா அவளோடு கூடப்போக முயன்றபோது, அசுவத்தாமன் அவனை இடைமறித்து—''ரவி, அவள் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆக விடு. இந்த நிலையில் நீ என்ன சொன்னாலும் அவளுக்குப் புரியாது. கொஞ்சநாள் காத்திருப்பது தான் நல்ல வழின்னு எனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

ரவிதேஜா கோபத்தை அடக்கிக் கொண்டு ''சரி, சரி'' என்றான்.

''நான் போயிட்டு வரேன். அங்கே சாலையில் கிடக்கிற சவத்தைப் பற்றிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும்''—என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரவிதேஜாவிடம் இந்த மாதிரியான காரியங்களை ஒப்படைக்க அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டது. ரவிதேஜா இன்னொரு அறைக்குள் நுழைந்து தானும் கதவைச் சாத்திக்கொண்டான். கமிஷனரின் கார் புறப்பட்டுப் போய் விட்டது. மகரிஷி மட்டும் இருட்டில் தனியாய் நின்று கொண்டிருந்தான். அவன் மனதிலும் கூட அதே இருள் நிலவிக்கொண்டிருந்ததாய்த்



தோன்றிற்று. எங்கே தொடங்கிய கதை எந்தப் பக்கமாய் போய்க் கொண்டிருக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை.

# 35

நள்ளிரவு, பன்னிரெண்டு மணிக்கு ஏனோ விழிப்பு வந்தது மகரிஷிக்கு. அவனும் அன்றிரவு கெஸ்ட் ஹவுசில் தான் படுத்துக்கொண்டான். அந்தக் கணவன் மனைவியின் நடவடிக்கையைப் பார்த்தால், ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம் என்ற பயம் ஏற்பட்டது. அதனல் அவ்விருவரும் தனித்தனி அறைகளுக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டதும், அவன் இதற்கு முன்பே ஒரு நாள் படுத்துக் கொண்டிருந்தாற்போல வராந்தாவில் படுக்கையை விரித்துக் கொண்டு படுத்தான்.

தனக்கு ஏன் விழிப்பு வந்தது என்று அவனுக்கு முதலில் புரியவில்லை. வாசலுக்கருகில் வந்து பார்த்தான். இரண்டு அறைகளின் கதவுகளும் சாத்தப் பட்டுத்தான் இருந்தன. அவன் திரும்பி படுக்கையை நோக்கி வந்து கொண்டிருக்கையில், உடம்பில் ஏதோ மாறுபாடு!

சோம்பல் முறித்துக் கொள்ளவேண்டும் போல இருந்தது. தலை பாரமாய் இருந்தது.

தாகம் எடுத்தது.

கூஜாவிலிருந்த நீரைச் சேந்திக் குடித்தான். தம்ளரை வைத்துவிட்டுத் திரும்பிய அவனுக்கு, எதிரிலிருந்த கண்ணாடியில் தன் முகம் தென்படவே, திடுக்கிட்டுப் போனான்.

'அம் முகம்......அம் முகம்யாருடையது? தன்னுடையது தானா?' என்றெண்ணிக் கொண்டே மறுபடியும் வியப் போடு அவன் கண்ணாடிக்கருகில் வந்தான். உடம்பு நிறமெல்லாம் நீல நிறத்திற்கு மாறிப்போய்.. முகமெல் லாம் புள்ளிகள்......அவை...அவை...நாககுளத்தில் பார்த்த பாம்பின் உடலின் மீது இருந்த புள்ளிகளைப் போல... அசல் அதேபோலவே இருந்தன. தன்னையறியாமல் அவன் உடல் சிலிர்த்தது...'அப்படியென்றால்...அப்படி யென்றால்...மைகாட்!' என்றெண்ணிக் கொண்டே, அவன் நாற்காலியில் சரிந்து விழுந்தான்.

அதற்குள் எதிரேயிருந்த அறையின் கதவைத் திறந்த சப்தம் கேட்டது.

மகரிஷி படுத்துக்கொண்டிருந்த வராந்தாவில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு சந்தனா அந்தப்பக்கமாய் வந்தாள். ''என்ன மகரிஷி, உனக்கும் தூக்கம் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

அவன் சட்டென்று திரைச்சீலையால் முகத்தை மறைத்துக்கொண்டான். பதில் சொல்லவில்லை. திரும்பிப் போய்விடலாமா? எதிரில் போக வேண்டுமா என்று தெரி யாமல் தடுமாற்றத்துடன், அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான் மகரிஷி.

அவளுக்கும் அதே நிலைமைதான் ஏற்பட்டது. அவன் திரைச்சீலையை இழுத்துக்கொண்டதைப் பார்த்துச் சந் தேகத்துடன், இரண்டு வினாடிகள் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். எந்த சப்தமும் காதில் விழாத தால்—''மகரிஷி, நீ இன்னும் அங்கேயே நின்று கொண் டிருக்கிறாயா?'' என்று கேட்டாள்.

அவன் ''உம்'' என்றான் சுருக்கமாய். அவனுடைய அந்த நடவடிக்கைக்குக் காரணம் சற்றுமுன் தான், தன் கணவனிடம் நடந்து கொண்ட விதந்தானோ என்ற சந் தேகம் வந்தது அவளுக்கு. ''உனக்குத் தெரியாது மகரிஷி, ரவிதேஜா, அந்த கள்ளக்கடத்தல் காரனுக்குப் போன் பண்ணி ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் வந்து கொண்டிருப்ப தாய் முன்கூட்டியே சொன்னார். அப்படீன்னால்... அப்படீன்னால்...'' என்று நிறுத்திக்கொண்டாள். அவனி டமிருந்து பதிலில்லை. தான் சொன்னது அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவளுக்கு. மகரிஷி திரைச்சீலைக்குப் பின்னால் ஏன் மறைந்துகொண்டு நிற்கிறான்! என்று அவளுக்குப் புரிய வில்லை.



அவள் சட்டென்று திரைச்சீலையை விலக்கிவிட்டு ''என்ன மகரிஷி! நீ...'' என்றவள் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டாள்.

மகரிஷி முகத்தைக் கைகளால் பொத்திக்கொள்ளப் போனான்.

ஆனால் அதற்குள் அவள் பார்த்துவிடவே, பயந்து போய் வீலென்று அலறிக் கொண்டு மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டாள்.

ஃ ஃ ஃ

அவனுக்குச் சட்டென்று என்ன செய்வதென்று புரிய வில்லை. அவள் கத்தலைக் கேட்டுவிட்டு யாராவது வரு கிறார்களோ, என்று ஒரு வினாடி அவ்விடத்திலேயே நின்று விட்டான்.

அதற்குள் ரவிதேஜா அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்ததைப் பார்த்தான் மகரிஷி. உடனே சட்டென்று வராந்தாவிற்குள் நழுவிக்கொண் டான்..

ரவிதேஜா வந்து சந்தனாவுக்குப் பக்கத்தில் முழங்காலிட்டு அமர்ந்துகொண்டு அவளை எழுப்பியதைப் பார்த்தான். பிறகு அவளை இருகைகளாலும் தூக்கிக் கொண்டு பெட்ரூமிற்குள் போனதைப் பார்த்துவிட்டு, மகரிஷி ஆழ்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

இனிதான் அங்கிருந்து போய் விடுவதற்குத் தருணம் வந்து விட்டது என்று புரிந்தது அவனுக்கு. தான் இருக்கும் வரை கணவன் மனைவியருக்கிடையே இன்னும் சண்டைகள் வந்து கொண்டேதானிருக்கும் என்று தோன்றிற்று.

எழுந்ததுமே துணிமணிகளையெல்லாம் அடுக்கி வைத்துக்கொண்டான். சந்தனாவை நேருக்கு நேராய்ப் பார்க்க வேண்டும் என்றாலே அவனுக்குப் பயமாய இருந்தது, ஆனால் போகும் முன்னால் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டால் மன அமைதி இருக்காது. ராத்திரி அவன் முகத்தைப் பார்த்துவிட்டு பயத்தால் நினைவு தப்பி விழுந்துவிட்டாள். இப்பொழுது கூட அவன் முகம் அப்படியேதான் இருக்கும் என்ற சந்தேகத்துடன் அவள் வாழ்நாளெல்லாம் வருந்திக் கொண்டேயிருப்பாள். தான் பழையபடியே ஆகிவிட்டதாய் அவளுக்கு உணர்த்த வேண்டியது தன் கடமை. அவன் அவள் அறைக்குக் கிளம்பினான்.

ரவிதேஜா வீட்டில் இல்லை.

காலை வாக்கிங்கிற்குப் போயிருந்தான் போலிருந்தது. அவள் தலையணையைச் சாய்த்தாற்போல வைத்துக் கொண்டு சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தாள். முகம் மிகச் சோர்வுடன் தென்பட்டது. அவன் போய்க் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த ஸ்டூலை இழுத்துப் போட்டுக் டு உட்கார்ந்தான். அவள் அவனைப் பார்த்து



ஆச்சரியமடைந்தாள். அவன் முகத்தையே கூர்ந்து பார்க்கத் தொடங்கினாள்.

அவனுக்கு எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று புரியவில்லை. கொஞ்ச நேரம் தன் உள்ளங்கைகளைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். அவளை விட்டுப்போக வேண்டும் என்றாலே அவனுக்கு நரகமாய் இருந்தது. ஆனால் இங்கே அவன் ஸ்தானம் என்ன? என்று கேட்டுக்கொண்ட பொழுது, அவனுக்கு போய்விட வேண்டும் என்றே தோன்றத் தொடங்கிற்று.

''மஹீ, ஆர் யூ ஆல் ரைட்?'' அவள் கேட்டாள்... தான் கேட்க வேண்டிய கேள்வியை அவள் கேட்டதைப் பார்த்துவிட்டு தடுமாற்றமடைந்தான் அவன். குனிந்து கொண்டே தலையாட்டினான்.

''நோ! உன் உடம்பு சரியாயில்லை'' அவள் அவன் கண்களையே பார்த்துக் கொண்டு சொன்னாள்.

அவன் சிரிக்க முயன்றபடி—''எனக்கென்னவாயிடுத்து? நன்றாய்த்தானே இருக்கேன்?'' என்றான்.

''பின்னே, ராத்திரி உன்முகம் ஏன் அப்படி மாறிற்று?'' அவன் பதில் சொல்ல முடியாதவனாய் மௌனமாய் இருந்து விட்டான். சொல்லு மஹீ, ராத்திரி உன் முகம் ஏன் அப்படி மாறிற்று?''

''எப்படி மாறிற்று? நான் நன்றாய்த்தானே இருந்தேன். ராத்திரி திரைச்சீலை மறைவில் என் முகத்தைப் பார்த்து பயந்துப் போய் நினைவு தப்பி விழுந்து விட்டாய், அவ்வளவுதான். நான் நன்றாய்த்தான் இருக்கிறேன், பார், என் முகத்திற்கு என்னவாகிவிட்டது?'' அவன் கையால் தன் முகத்தைத் தடவிக்கொண்டே சொன்னான்.

''என் கண்கள் என்னை மோசம் செய்துவிடாது. மஹி, ராத்திரி திரைச்சீலையை ஒதுக்கிக்கொண்டு பார்த்தபோது உன் முகம் எவ்வளவு பயங்கரமாய் மாறிப் போயிருந்தது தொரியுமா? மைகாட்! கண்கள் நீலநிரமாய் மாறிப் போய், முகமெல்லாம் புள்ளிகள்... முகத்தில் பாம்புச் செதில்களைப் போன்ற அடையாளங்கள்; ராமராஜ் சொன்ன அறிகுறிகள் எல்லாம் தொடங்கிவிட்டதா? சொல்லு மஹீ... பேசு,''

என்னத்தைப் பேசுவான்? தன் சருமம், அங்கங்கள் அவ்வளவும் விஷமாகி விட்டன என்பானா? தனக்கும் பாம்புக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பானா? ஒன்றும் சொல்ல முடியாதவனாய்—'' எனக்கொன்றும் ஆகவில்லை சந்தனா, அதெல்லாம் உன் பிரம்மை'' என்றான்.

''ராமராஜ் சொன்ன விஷயமெல்லாம் பிரமைதானா மஹீ? எனக்காக... சுயநலக்காரரான என் கணவருக்காக, உன் வாழ்க்கையையே பலி வாங்கிக் கொண்டதைக் கூட, பிரம்மை என்று தான் நினைத்துக் கொள்ள வேண்டுமா?'' அவள் எதிர்த்துக் கேட்டாள். துக்கத்தால் அவள் தொண்டை தழுதழுத்தது.

''சந்தனா, இந்தப் பெரிய வார்த்தைகள் எல்லாம் எதற்கு? ஏதோ என்னால் ஆன உதவியைச் செய்யப் போய் சின்ன ஆபத்து நேர்ந்தது, அவ்வளவுதான். அதற்காக நீ இவ்வளவு வருத்தப்படுவானேன்? நடக்கவேண்டியது நடந்து தீரும். நீ வீணாய் வருத்தப்பட்டுக்கொண்டு உன் மனதையும் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளாதே.'' என்றான் அவன் பரிவோடு.

''சின்ன ஆபத்து, ஆமாம் சின்ன ஆபத்துதான். வாழ்கையில் கல்யாணம் செய்துகொண்டு சுகமாய் குடும்பத்தை நடத்த அருகதையில்லாமல் போவது சின்ன



ஆபத்து தான். முப்பது வயது நிரம்புவதற்குள் நீ நூறாண்டு வாழ்க்கையையும் இழந்துவிட்டது சின்ன ஆபத்துதானே!'' அவள் தொடர்ந்தாள்--- ''உனக்குத் தெரியுமா? என் கணவர் உன்னைக் கொல்லப்பார்த்தார்!

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. துக்கமும் ஆவேசமும் பொங்கி எழ ''இவ்வளவு நடந்தும் எனக்காக... என் மீது உள்ள அன்பிற்காக, உன் வாழ்க்கையையே தாரை வார்ப்பாயா?'' என்று ஒரே பாயச்சலாய் கட்டிலை விட்டிறங்கி அவன் பாதத்தைத் தொடப் போனாள்.

''ப்ளீஸ் சந்தனா'' அவன் தடுக்கப் போனான்.

அவள் தேம்பித் தேம்பி அழுது கொண்டே அவன் கைகளில் சரிந்து விழுந்தாள். அவன் செய்வதறியாது அவளை அப்படியே அணைத்துப் பிடித்துக் கொண்டான். மெல்ல மெல்ல அவள் அவன் மடியில் சரிந்து துக்கம் அடைந்து கொண்டிருந்தாள். சரியாய் அந்த சமயத்தில் ரவிதேஜா அவ்வறைக்குள் நுழைந்தான்.

அவ்விருவரையும் அந்த நிலையில் பார்த்துவிட்டுச் சட்டென்று சந்தடி செய்யாமல் அங்கிருந்து திரும்பினான்.

## 36

''சார்''-- என்று உள்ளே நுழைந்தான் ரவிதேஜா... ஃபைலைப் பார்த்துக்கொண்டிருந்த அசுவத்தாமன் நிமிர்ந்து, ''வா, உட்கார், ரவிதேஜா!'' என்றார் எதிரே இருந்த சீட்டைக் காண்பித்து. ரவிதேஜாவின் கையில் ஒரு ஃபைல் இருந்தது.

''சின்ன தப்பு நேர்ந்து விட்டது சார்.''

''என்ன?''

''எங்களிடம் டிரைவராய் வேலை செய்கின்ற மகரிஷி, வேறு யாரோ இல்லை—மனைவியைக் கொலைசெய்த குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட கைதி.''

''வாட்?''

''ஆமாம் சார். அவன் ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டு எங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறான். போலீஸ் ஆபீசராய் இருந்தும் இந்த விஷயத்தை இவ்வளவு நாளாய் கண்டுபிடிக்காமல் போனது என் தப்பு. ஐயாம் சாரீ சார்'' என்றான்.

அசுவத்தாமன்—''நீ சொன்னதெல்லாம் நிஜந்தானா ரவி?'' என்று கேட்டார் குழப்பத்தோடு.

''ஆமாம் சார். இந்தச் சந்தேகம் ஏற்பட்டதுமே நான் ஜெயிலிலிருந்து அந்த ஃபைலை வரவழைத்தேன். இதோ, இந்த போட்டோவைப் பாருங்க—'' என்று தன்னோடு கொண்டு வந்திருந்த ஃபைலை அவருக்கு முன்னால் தள்ளினான். அசுவத்தாமன் அதை வாங்கிக் கொண்டு போட்டோவைக் கூர்ந்து பார்த்தார். நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்துக்கொண்டே— ''மை காட்'' என்றார்.

''ஒரு கொலையாளியை இவ்வளவு நாட்களாய் உங்களோடு கூடவே உங்கள் வீட்டில் வைத்துக்கொண்டிருந்திருக்கீங்கன்னு சொல்லு.''

''ஆமாம் சார். அதற்காக வெட்கப்படுகிறேன் கூட.''

''நீ என்ன பண்ணுவாய் ரவி? நிஜ சொரூபம் தெரிகிறவரை எல்லோருமே சாதாரண மனுஷங்களைப் போலத்தானேதென்படுவாங்க? நாம்ப இம்மீடியேட்லி அவனை அரெஸ்ட் பண்ணணும்.''



''நீங்க பர்மிஷன் தந்தால்'' ''இப்பொழுதே தாமதமாகி விட்டது. நமக்கு விஷயம் தெரிந்துவிட்டதாய் அந்த மகரிஷிக்குச் சந்தேகம் வருவதற்குள்ளாகவே போதிய படைகளைத் தந்து இன்ஸ்பெக்டரை அனுப்பு. போலீஸ் படை வருவதாய் அங்கே யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது. கொஞ்சம் தெரிந்து விட்டாலும் அவன் திரும்பவும் தப்பித்துக் கொண்டு விடுவான்.''—தொடர்ந்து செய்ய வேண்டியவைகளை எடுத்துச் சொன்னார் அசுவத்தாமன்.

ரவி தேஜா எழுந்து நின்று ''எஸ் ஸார்'' என்றான். அவன் வாசலைத் தாண்டப்போனபொழுது ''ரவி'' என்று கூப்பிட்டார். ரவிதேஜா திரும்பி அட்டென்ஷனுக்கு வந்து ''சார்'' என்றான்.

''அந்த மகரிஷி கொஞ்சம் எதிர்த்தாலும் கூட ஷூட் ஹிம் அட் சைட் என்று நான் உத்தரவு கொடுத்ததாய்ச் சொல்லு''

''சரி சார்'' என்று அங்கிருந்து அகன்றான் ரவி தேஜா.

ஃ ஃ ஃ

கதவைத் தட்டிய சப்தத்தைக் கேட்டுவிட்டு ''கமின்'' என்றாள் சந்தனா.

மகரிஷி உள்ளே நுழைந்தான். அவன் ரெடியாகி இருந்ததைப் பார்த்து--''எங்கே போகிறாய்?'' என்று கேட்டாள். மகரிஷி பதில் பேசவில்லை.

எங்கே என்றுச் சொல்லுவான்? மனைவியைக் கொன்ற குற்றத்திற்காகத் தூக்குதண்டனை அனுபவிப்பதற்குப் போய்க் கொண்டிருக்கிறேன் என்று சொல்வானா?, உன்னைப் பார்த்துக்கொண்டு இங்கேயே இருந்துவிட வேண்டும் போலிருந்தாலும், பலவந்தமாய் ஆசைகளைக் கொன்றுவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறேன் என்று சொல்வானா?

ஒன்றும் சொல்ல முடியாதவனாய்--''எங்கேயோ ஓரிடத்திற்குப் போய்த் தீரவேண்டியது தானே?'' என்றான்

''எதுக்கு? இங்கே நன்றாய் இல்லையா?''--என்று கேட்டாள் அவள்.

''அதற்காக இல்லை. போய் ஏதாவது ஒரு உத்யோகம் பார்த்துக் கொள்ள வேண்டாமா? இங்கே என் வேலை முடிவடைந்துவிட்டது. இனி வேறு உத்யோகம் ஏதாவது தேடிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன் அதனால் தான் இன்றைக்குப் போகிறேன்.''

''தேவையில்லை. எங்கப்பாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் ஆபீசிலேயே ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துத் தருவார். நீ எங்கேயோ போய் முயற்சி பண்ணவேண்டிய அவசியம் இல்லை.''

அவனுக்குத் தான்சிக்கிக் கொண்டு விட்டாற்போல தோன்றிற்று. ஆனாலும் போய்த்தீர வேண்டும் என்ற தீர்மானம் உறுதியாகி விட்டதால்--''இல்லை. இப்படி உன்னை ரவிதேஜாவுக்கு தொலைவில் இருப்பதைப் பார்த்துக்கொண்டே இங்கே இருக்க முடியவில்லை என்னால். போய்விடுகிறேன் சந்தனா. என்னை பலவந்தப்படுத்தாதே''--என்றான். பேச்சுத் தன்னையறியாமலேயே அவள் பெர்சனல் மேட்டர் பக்கமாய் போய் விட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், என்னதான் வேண்டாம் என்று நினைத்தாலும் அது அந்தப் பக்கமாகவே போய்க்கொண்டிருந்தது. அதற்குள் அவள் சொன்னாள்.



''அந்த விஷயத்தை விடு மஹீ. என் மனது சிதறிப் போய்விட்டது. கணவன் மனைவியருக்கிடையே அன்பும், பந்தமும் இருக்கவேண்டுமே தவிர, ஒளிவுமறைவு அல்ல. அவர் எதற்காக அப்படி நடந்து கொண்டார் என்று தெளிவாய்ச் சொன்னால் கொஞ்சமாவது நிம்மதியடைவேன். ஆனால் ஏனோ அவர் என்னிடமிருந்து எல்லாவற்றையுமே மறைக்கிறார் என்று தோன்றுகிறது. இப்படி அவங்கவங்க மனதில் அவங்கவங்க தாம் செய்வது தான் சரியானதுன்னு தம் துணைவர்களிடமிருந்து எல்லாவற்றையும் மறைத்து வைத்து விட்டால், பிறகு அந்த குடித்தனத்திற்கு அர்த்தம் இருக்கா?'' அவள் பெருமூச்சு விட்டாள்.

''இதில் அவர் மறைத்து வைத்த உண்மை என்ன சந்தனா? நீதான் வீணாய் ரவிதேஜாவைத் தவறாய் புரிந்து கொள்கிறாயோன்னு தோணுகிறது'' அவன் நயந்து சொல்லப்போனான்.

''அந்த விஷயத்தை விடு மஹீ. உன்னைப்பற்றிப் பேசலாம். உம், சொல்லு. போகப்போவதாய் சொல்கிற யோசனையைக் கைவிட்டுவிட்டாற்போலத்தானே?''

''இல்லை சந்தனா. நான் கண்டிப்பாய் போய்த் தீரணும். அங்கே எனக்காக நிறையபேர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாங்க. அவசரத்தில் யாரிடமுமே சொல்லிக் கொண்டு வரவில்லை. நான் போய் வரேன். ப்ளீஸ்--'' அவன் கெஞ்சினாற்போலவே சொன்னான்.

''நோ! உன்னை எங்கேயும் போகவிடமாட்டேன். எனக்காக எவ்வளவோ செய்தாய். உனக்காகக் குறைந்தபட்சம் உத்யோகம் பார்த்துத் தருகிற சின்னக்காரியத்தையாவது பண்ணவிடு, ப்ளீஸ்! இங்கேயே இருந்துகொண்டு வைத்தியம் கூட பண்ணிக் கொள்ளலாம்.''

''ப்ளீஸ் சந்தனா, நான் சொல்றதைக் கேள்.''

''நான் கேட்கமாட்டேன்...இன்னொரு தடவை போகிறேன் என்று சொன்னால் நான் செத்து விட்டதற்குச் சமானம். என் மேல் ஆணை'' கடைசி அஸ்திரத்தைக் கையாண்டாள். அவன் வாயடைத்துப் போனவனாய் அவளையே பார்த்தான். முன்னுக்கும் போக முடியாத— பின்னுக்கும் நகர முடியாத நிலைமை அவனுக்கு. ரவிதேஜாவுக்குக் கண் பார்வை திரும்பியதுமே, அவனை அடையாளம் கண்டு கொண்டிருப்பான் என்பது நிச்சியம் ஆனாலும் தன்னை ஏன் அரெஸ்ட் பண்ணவில்லை என்ற காரணத்தைக்கூட அவனால் ஊகித்துக்கொள்ள முடிந்தது. என்றாவது ஒருநாள் அரெஸ்ட் பண்ணாமலிருந்துவிட மாட்டான். அப்படி மட்டும் நடந்தால் சந்தனாவுக்கு இதுவரை அவன் மீது இருந்து வந்த நல்ல அபிப்பிராயங்கள் எல்லாம் ஒரேயடியாய் துடைத்தெறியப் பட்டு விடும். அது கூடப் பரவாயில்லை என்று விட்டு விடலாம். ஆனால் இப்பொழுதே அவள் ரவிதேஜாவின் மீது கோபமாய் இருக்கிறாள். அவன் விஷயம் வெளிப்பட்டால், தொடர்ந்து ஸ்ரீவாணிக்கும், ரவிக்கும் இருந்து வந்த சம்பந்தம் கூட வெளிப்படாமலிருக்காது அப்பொழுது அவள் ரவியை முற்றிலுமாய் வெருக்கத் தொடங்கிவிடுவாள். வேண்டாம், அப்படி நடக்கக் கூடாது அவன் வாழ்க்கைதான் எப்படியோ நாசமாகி விட்டது. குறைந்தது சந்தனாவின் வாழ்க்கையாவது சீர் திருந்த வேண்டுமானால், அவன் போய்த் தீர வேண்டும். அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் சொன்னாள்--

''ஆமாம் வந்ததிலிருந்தே பார்க்கிறேன், நீ ஏன் வெளியே எங்கேயும் போவதில்லை. எப்பப் பார்த்தாலும் மௌனமாய் யோகியைப் போல உட்கார்ந்திருக்கிறாய். காலேஜில் படித்த அந்த மகரிஷி தானான்னு ஆச்சரியமாய் இருக்கு. எவ்வளவு, கலகலப்பாய் இருப்பாய்!''— அவள் வியப்படைந்தவளாய்க் கேட்டாள்.



''ஏன், மாறுவேஷத்தில் வந்திருப்பேனோன்னு நினைக்கிறாயா?'' அவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

அவளும் சிரித்து விட்டு ''அப்படியில்லை, அப்பொழுதிருந்து வந்த குறும்புத்தனம், கலகலப்பு எல்லாம் எங்கே போயிடுத்துன்னுதான் கேட்டேன்.''

''நீ கூடத்தான் நிறைய குறும்புத்தனம் பண்ணிக்கொண்டிருப்பாய் அப்பொழுதெல்லாம்.''

''ஏன், இப்ப மட்டும் குறும்புப் பண்றதில்லையா நான்?''

''எங்கே? உனக்கு எப்பொழுதும் உங்களவரோடு சண்டை போடவே தான் சரியாயிருக்கு அதற்கப்புறம் குறும்புப் பண்ண நேரம் எங்கே இருக்கும் உனக்கு?''

திடீரென்று சம்பாஷனை அந்தப் பக்கமாய் போய் விடவே, அவள் முகம் கம்பீரமாய் மாறிவிட்டது. கணவனைப் பற்றிய பேச்சு வந்ததுமே அவள் கண்களில் கருநிழல் படிந்ததைப் பார்த்து அவன் மனம் வருந்தினான்.

''சந்தனா'' அவளைப் பரிவோடு பார்த்துக்கொண்டே கூப்பிட்டான்.

''உம்'' நிமிர்ந்து மெதுவாய்க் கேட்டாள்.

''சிநேகிதனாய் நான் ஒன்று விரும்புகிறேன் செய்வாயா?''

''சொல்லு மஹி''

''ஒன்றுமில்லை. நீ திரும்பவும் ரவிதேஜாவிடம் போனால் நன்றாயிருக்கும்'' அந்த வார்த்தைகள் அவள் மனப்புண்ணைக் கிளறினாற் போல ஆகிவிடும் என்று தெரிந்தும், அவள் வாழ்க்கை அவ்வாறு சாரமில்லாமல்

கழிந்து போவதை அவனால் காணச்சகிக்கவில்லை. அவளி டம் திரும்பவும் கலகலப்பைத் தோற்றுவிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை. ஜெயி லிலிருந்து தப்பித்துக் கொண்டது அவளை இப்படிப்பட்ட நிலையில் பார்ப்பதற்காக அல்ல.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதுமே அவள் சரேலென்று நிமிர்ந்தாள். கண்களில் நீர் எந்த நிமிஷத்திலும் கீழே குதிக்கத் தயாராயிருக்கும் அருவியைப் போல இருந்தது.

அவன் நொந்து கொண்டே, ''வருத்தப்படுத்தி விட் டேனா சந்தனா?'' என்றான்.

அவள் வழிந்த தண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ''வருத்தம் எனக்குப் புதியதில்லை மஹீ. ஆனால் சிநேகி தனாய் இருந்தும் நான் செய்யும் காரியத்தைச் சரியானது தானா? என்று சொல்லமாட்டேங்கிறாயேன்னுதான் வருத்தம்.''

''இல்லை சந்தனா! நீ என்றுமே தப்பான முடிவிற்கு வரமாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் இது எல்லாவற்றையும் போல இல்லையே. வாழ்க்கை சம் பந்தப்பட்ட பிரச்னை. சில விஷயங்களில் ஈடுகட்டிக் கொண்டு போய்த்தான் தீரவேண்டும்.''

''என் விஷயம் கிடக்கட்டும். மஹீ, உன்னைப் பற்றிச் சொல்லு'' அதைக் கேட்டதும் தற்காலிகமாய் அவ்ளைப் பற்றிய யோசனைகளிலிருந்து மீண்டான்.

''என்னைப்பற்றி என்ன இருக்கு? நான் தனிக்கட்டை'' பெருமூச்செறிந்தான் அவன்.

''இந்த நிராசைதான் வேண்டாம் என்கிறேன். நாங் கள் எல்லோரும் இல்லையா? உனக்குஒரு நல்ல பெண்ணைப்



பார்த்துக் கல்யாணம் பண்ணிவைத்து, நல்ல உத்யோகம் ஒன்றைப் பார்த்துத்தந்து, எங்க வீட்டிலேயே வைத்துக் கொள்கிறேன் உங்களிருவரையும்.''

அவன் பதில் பேசவில்லை. ஒரு பொய்யால் அவளு டைய இரக்கப் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தால்...எதற்காக உண்மையைச் சொல்லவேண்டும்? என்றெண்ணி மௌனமாய் இருந்துவிட்டான்.

''ஏன் பதிலே பேசவில்லை? ஆமாம் அடிக்கடி நீ இப்படி யோக முத்திரையில் ஆழ்ந்துப் போய்விடுகிறாயே, ஏன்?''

''ஒன்றுமில்லை. கேள்வியையும் பதிலையும் நீயே சொல்லி விட்ட பிறகு, இனி பேசுவதற்கு வேறென்ன இருக் குன்னு நினைச்சுப் பேசாமலிருந்தேன். அவ்வளவுதான்'' அவன் தடுமாற்றமடைந்தான்.

''அதில்லை. பேசும்பொழுது மட்டுமேயில்லை, தனி யாய் உட்கார்ந்திருக்கும்போதுகூட நீ இப்படியேதான் இருக்கிறாய். சூனியத்தைப் பார்த்துக் கொண்டு உட் கார்ந்திருக்கிறாய். தாழங்காட்டிற்குப் போய் விட்டு வந்ததிலிருந்தே பார்க்கிறேன். கேட்கலாம் என்றால் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. எதுக்கு மஹீ, ஏன் அப் படி இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை. அமைதியாய் இருப்பதுதான் எனக்குப் பிடிக்கும். அதைத்தவிர வேறொன்றுமில்லை'' அவன் தப்பித்துக் கொள்ளப் பார்த்தான்.

''பேச்சை மாற்றுவதில் மகா கெட்டிக்காரன்தான்'' அவள் சிரித்தாள்.

சங்கடமான சம்பாஷணை விலகிப் போய் விடவே, அவனும் நிம்மதியாய் மூச்சுவிட்டுக்கொண்டு அவள் சிரிப் போடு சுருதி கலந்து கொண்டான்.

அதுதான் அவ்விருவருக்குமிடையே 'கடைசி சிரிப்பு' என்று எடுத்துச் சொல்வதற்காகவே வந்தாற்போல, அந்த காம்பவுண்டிற்குள் ஒரு ஜீப் நுழைந்தது அதே சமயத்தில்.

சந்தனா ஜீப் வரும் சப்தத்தைக் கேட்டுவிட்டு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள். அதன்மீது ''போலீஸ்'' என்று எழுதியிருந்ததால், தம் கார் பழுதடைந்து விட்டது போலும், கணவன் ஜீப்பில் வருகிறான் போலும் எனறெண்ணினாள். ஆனால் வேறொரு இன்ஸ்பெக்டர் இறங்கியதால், அவள் கெஸ்ட் ஹவுசிற்கு வெளியே வந்தாள். இன்ஸ்பெக்டர் அவளிடம் வந்து—''மேடம், மகரிஷி என்பவர் இங்கே இருக்கிறாரா?'' என்று கேட்டார். அவள் சந்தேகத்துடன் ''எதுக்கு?'' என்று கேட்டாள்.

''அவரை அரெஸ்ட் பண்றத்துக்கு.''

சந்தனா அதிர்ச்சியடைந்தவளாய் ''என்ன பேசுகிறீர்கள் இன்ஸ்பெக்டர் நீங்க?'' என்று கேட்டாள் கடுமையாய்.

ஆமாம் மேடம். அவருக்கு மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. மறுநாள் காலையில் தூக்கிலேற்றப்படவிருந்த பொழுது அன்றிரவே தப்பித்துக்கொண்டு விட்டார். அங்கே சென்ட்ரீயைக் கூட மிகக் கொடுமையாய் கொன்று விட்டார். இவ்வளவு நாட்கலாய் அவரை போலீஸ் டிபார்ட்மென்ட் தேடிக்கொண்டே இருந்தது. இங்கே வந்து சேர்ந்திருக்கிறார் என்று எங்களுக்கு நம்பிக்கையாகத் தெரிந்துவிட்டது.''

''யார் சொன்னாங்க?''

அரெஸ்ட் பண்ணுவதற்காக வந்த இன்ஸ்பெக்டரின் பெயர் ரவிகிரண். அவர்டம் ரவிதேஜா தெளிவாய் சொல்லிவிட்டான். எந்தச் சூழ்நிலையிலும் தன் பெயர் வெளியே வரக்கூடாது என்று.



இன்ஸ்பெக்டர் கிரண் ஒரு வினாடி தடுமாற்றமடைந்து விட்டு—''மகரிஷிக்கு வர்மா என்று ஒரு சிநேகிதன் இருக்கிறான் மேடம்! அவனை அரெஸ்ட் பண்ணி விசாரணை செய்து பார்த்தபொழுது இந்த விஷயம் தெரிய வந்தது'' என்றார்.

''அந்த அவுட் ஹவுசில் இருப்பார், பாருங்கள்'' இன்ஸ்பெக்டர் கிரண் போலீசாரோடு சேர்ந்து விடுவிடென்று அவுட் ஹவுஸ் பக்கமாய்ப் போனார் அவர் திரும்பி வரும்வரை அவள் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். வந்து கொண்டிருந்த இன்ஸ்பெகடரின் முகம் தொய்ந்து போயிருந்தது. ''அவுட் ஹவுசில் மகரிஷி இல்லை மேடம்'' என்றார்—அவன் தன் மேலதிகாரியைப் போலவும், அங்கே நடந்ததை அவளிடம் சொல்ல வேண்டும் என்பது போலவும்.

தன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படாதவாறு ''மைகாட்! தப்பித்துக் கொண்டுவிட்டானே?'' என்றாள் சந்தனா.

''அப்படித்தான் தோணுது. சூட்கேஸெல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஒருக்கால் போகத் தயாராய் இருந்திருக்கலாம். அதற்குள் எங்கள் போலீஸ் ஜீப்பின் சப்தத்தைக் கேட்டுவிட்டு சூட்கேசை எடுத்துக் கொள்ளாமல் ஓடிப்போயிருப்பான். நாங்கள் போகிறோம் மேடம். சுற்றுப்பக்கத்தில் எல்லாம் தேடணும்''--என்று இன்ஸ்பெக்டர் போலீசாரோடு பரபரப்புடன் ஜீப்பில் ஏறிப் போய்விட்டார்.

அவள் உள்ளே வந்தாள்.

வெளியே நடந்து கொண்டிருந்த சம்பாஷணை எதுவும் தெரியாத மகரிஷி, ''என்ன நடந்தது சந்தனா?'' என்று கேட்டான்.

அவள் மெதுவாய் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே—"ஒன்றுமில்லை. அவரைத் தேடிக்கொண்டு யாரோ வந்தாங்க" என்றாள். அவளுக்குக் கொஞ்சநேரம் தனியாய் இருக்க வேண்டும் போலிருந்தது. அதற்காக அவனை விட்டு தொலைவிற்குப் போய் விட வேண்டும் போலும் இல்லை. "நான் காபி கலந்து கொண்டுவரேன்"—என்று அந்தச் சாக்கில் சமையலறைக்குள் போனாள்.

மகரிஷிக்குத் திருமணம் ஆகிவிட்டதா? மனைவியைக் கொன்றுவிட்டானா? அவளால் நம்ப முடியவில்லை. பாற்கடலை ஆலகால விஷத்திற்கு இருப்பிடமாய் நம்ப வேண்டி வந்தபொழுது, ஏற்பட்ட திக்பிரம்மை அவளைச் சூழ்ந்து கொண்டது. ஒரு சிநேகிதியின் நன்மைக்காக—அவளுடைய வாழ்க்கை அந்தகார நிலையைமாய் மாறாமலிருப்பதற்காக, தன் வாழ்க்கையையே காணிக்கையாய் சமர்ப்பித்துக் கொண்ட ஒரு உன்னதமான மனிதன்... ஒரு பெண்ணைக் கொல்வதாவது!

மனம் சிலையாகி விட்டது.

அவள் நிசப்தமாகி விட்டாள்.

அங்கிருந்த சூழ்நிலை வேதனைக்கு இருப்பிடமாயிருந்தது.

அவள் காபி கோப்பைகளை எடுத்துவந்து ஒன்றை அவனிடம் தந்துவிட்டுத் தான் மற்றொன்றை எடுத்துக் கொண்டாள்.

"மகரிஷி, என்னிடம் ஒரு உண்மையைச் சொல்வாயா?" காபிக்கோப்பையை உதட்டிற்கருகில் கொண்டு போன மகரிஷி, நின்று—அவளை வியப்போடு பார்த்தான்—"என்ன சந்தனா, உன்னிடம்கூட எனக்கு ஒளிவு மறைவா? சொல்லு" என்றான்.



"என் கணவரைப் போலவே நீயும் என்னை மோசம் பண்ண வேண்டும் என்று பார்க்கிறாயா?" அவன் சந்தடி செய்யாமல் காபி கோப்பையை மேஜை மேல் வைத்தான். அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஏதோ தெரிந்துவிட்டது என்று புரிந்தது. அவனுக்குப் புரிந்துவிட்டது என்ற விஷயம் அவளுக்கும் தெரிந்துவிட்டது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தார்கள்.

"மகரிஷி, உனக்குக் கல்யாணமாயிடுத்து இல்லையா?"

அவன் தலை குனிந்து கொண்டு "ஆயிடுத்து" என்றான் மெதுவாய்.

"நீ...நீ..." அவளால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை.

அவன் சொன்னான்—"நான்தான் கொன்றேன். என் மனைவியை நான்தான் கொன்று விட்டேன்."

"நம்ப மாட்டேன். என்னால் நம்ப முடியாது"—ஹிஸ்டீரிக்காய் கத்தினாள் சந்தனா." நீ உன் மனைவியைக் கொன்றாய் என்றால் என்னால் நம்ப முடியாது".

வெகு நேர நிசப்தத்திற்குப் பிறகு, அவன் குரல் அவ்வறையில் எதிரொலித்தது—"இந்த உலகத்தில் நான் இந்தக் கொலையைச் செய்யலைன்னு நம்பியது நீ ஒருத்திதான் சந்தனா. முதலாவதும் கடைசியும் கூட நீயே! அது ஒரு விபத்து! அவ்வளவுதான்! என் மனைவியை வேறொருத்தரின் அணைப்பில் பார்த்தபோது, என்னால் ஆவேசத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு வினாடி ஆவேசப்பட்டுவிட்டேன். ஆனால் மனிதனின் வாழ்க்கையை மாற்றிவிடுவதற்கு ஒரு வினாடி போதும்.

ஆனாலும் நான் சத்தியமாகச் சொல்கிறேன். நான் என் மனைவியைக் கொல்லவில்லை. அது ஒரு ஆக்ஸிடெண்ட். அவ்வளவுதான்.''

''உன் மனைவியின் பெயர்?''

''ஸ்ரீவாணி.''

அவளுடைய அடுத்த கேள்வி அவ்வறையில் வெடி குண்டாய் வெடித்தது. ''உன் மனைவியின் காதலன் பெயர்?''

அவன் ஒரு வினாடி நின்று, மெதுவாய், ''சூரிய நாராயணன்'' என்றான்.

அவள் ஆழ்ந்து பெருமூச்சுவிட்டாள். பிறகு தனக்குள் சொல்லிக் கொள்வது போல ''சில பெண்கள் கணவரை எவ்வளவு மோசம் பண்றாங்க! உன்னைப்போன்றவனைக்கூட விட்டுவிட்டு, கல்யாணமான பிறகு கூட காதலனுடனேயே சேர்ந்து இருந்திருக்கிறாள் என்றால், அவளைத் தூக்கிலேற்ற வேண்டும் மகரிஷி'' என்றாள். மகரிஷி மறுத்துத் தலையாட்டி விட்டு— ''ஸ்ரீவாணி மிகவும் அப்பாவியான பெண். ஒரு ஆண் அந்த அப்பாவித்தனத்தைத் தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டான். அந்த வயதில் ஆண் எதைச்சொன்னாலும் பெண்கள் அதை நம்பிவிடுவாங்க. அப்படித் தனக்கு ஏற்ற விதத்தில் அவளை மாற்றிக் கொண்டுவிட்டான்'' என்றான்.

''உன் மனைவியாதலால் நீ இப்படி எண்ணுகிறாய் இல்லையா?''

''இல்லை. நான் கூட முதலில் அவளைப்பற்றித் தாழ்வாய் நினைச்சிட்டிருந்தேன். ஆனால் அவள் டைரியைப்படித்த பிறகு தப்பு அவளுடையதில்லை என்றும், அவள் காதலனுடையது தான் என்றும் தெரிந்தது. ஆனா



லும் இப்ப அதெல்லாம் எதற்கு? நடந்ததென்னவோ நடந்துவிட்டது. என்மீது தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டது. இன்னும் அப்படியே இருக்கிறது. நான் போய் சரண்டராகி விடப்போகிறேன். என்றாவது ஒரு நாள் போலீசாரிடம் பிடிப்பட்டுப் போகப்போகிறவன் தானே?'' என்று எழுந்திருந்தான்.

போக முயன்றவன் நின்று— ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள் சந்தனா. சாகப்போவதற்கு முன்னால் உன்னைப் பார்க்கணும்னு வந்தேன். பார்த்துட்டேன். என்வரவால் உன் வாழ்வில் இவ்வளவு வேதனைமயமான மாறுபாடு ஏற்பட்டுவிடும் என்று தெரிந்திருந்தால், நான் வராமலே இருந்திருப்பேன்.

இப்பொழுதாவது என் கடைசி ஆசை, நீ உன் கணவரோடு சேர்ந்து இருப்பதே......'' அவன் அங்கிருந்து போய் விட்டான்.

அவனோடு கூட எழுந்திருப்பதற்குக் கூட சக்தி இல்லாதவளாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

ஸ்ரீ...வா...ணி!

எங்கேயோ கேட்டிருக்கிறாள் அந்தப் பெயரை. எங்கே? எங்கே?

அவளுக்கு லேசாய் சந்தேகம் ஏற்பட்டது. சட்டென்று நாற்காலியை விட்டெழுந்திருந்து அவுட் ஹவுசை நோக்கி ஓடினாள். அப்பொழுதுதான் மகரிஷி அங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

''மகரிஷி, உன் மனைவி அப்பாவி. அவள் காதலன் தான் அவளை மோசம் பண்ணிட்டான்னு சொன்னாய் அல்லவா? நீ அந்த முடிவிற்கு எப்படி வந்தாய்?'' என்று கேட்டாள்.

''இப்ப அதெல்லாம் எதுக்கு?'' என்றான் அவன்.

''இல்லை. எனக்கு வேணும். நீ பொய் சொல்றாயா இல்லையான்னு நான் தெரிஞ்சுக்கணும்'' என்றாள்.

மகரிஷி சிலையாகி விட்டான். "நீ...நீ என்னை நம்பவில்லையா சந்தனா?" என்றான்.

"நம்பவில்லை. நான் யாரையும் நம்பவில்லை. கட்டிய கணவனையும், கண்ணியமான சிநேகிதனையும் யாரையுமே நம்பமாட்டேன். நீங்கள்...நீங்கள் எல்லோருமாய் சேர்ந்துதான், என்னுள் இந்த அவநம்பிக்கையை ஏற்படுத்தி விட்டீங்க. நீ என்னை உண்மையாய் நேசித்திருந்தால், உன் மீது எனக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட வேண்டுமென்றால், உனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்ததுன்னு சொல்லித் தீர வேண்டும்."

"என் மனைவியின் டைரி மூலமாய்"—என்றான் அவன்.

"எனக்கு டைரி வேண்டும்"--உறுதியாய்க் கேட்டாள் சந்தனா.

"நான் அதைக் கொளுத்திவிட்டேன்" என்றான் அவன். அவள் அவனை நேருக்குநேராய்ப் பார்த்தாள். அவன் தலைகுனிந்து கொண்டான்.

அவள் போட்டோ உன்னிடம் இருக்கிறதா?"

.'இல்லை'' என்று அவளை நெருங்கி வந்து--'' நீ இவ்வளவு கேள்விகளை ஏன் கேட்கிறாய் என்று எனக்குப் புரியவில்லை சந்தனா. என் மனைவிக்கு ஒரு காதலன் இருந்தான். அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருந்ததைப் பார்த்து விட்டு நான் பிடித்துத் தள்ளினேன். அவள் மரணமடைந்து விட்டாள் அவள் தானாகவே அவனைக் காதலித்தாளா அல்லது அவனே அவளை மோசம் பண்ணினானா? என்பதெல்லாம் தேவையில்லாத விஷயங்கள். அவளைக் கொலைசெய்த குற்றத்திற்காக எனக்குத் தூக்கு மோடை அங்கே காத்திருக்கிறது. அது மட்டும் உண்மை. இதைக் காட்டிலும் வேறு விஷயமெல்லாம் தேவையில்லாதவை.'' என்று சொல்லிவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினான்.



"நான் உன்னைக் காரில் உதகைவரைக்கும் கொண்டு போய் விடுகிறேன். ஆட்சேபனை இல்லையே?" கேட்டாள் சந்தனா.

அவன் வியப்போடு "எதுக்கு?" என்றான்.

"கடைசி நிமிஷம் வரைக்கும் உன்னோடு சேர்ந்து இருப்பதற்காக... ஏன், இருக்கக்கூடாதா?"

அவன் நொந்து போனான். "அதெல்லாம் இல்லை சந்தனா, வா, போகலாம்" என்றான்.

காரில் அவ்விருவரும் அதிகமாய்ப் பேசிக் கொள்ளவில்லை உதகமண்டலத்தின் ஊரெல்லைக்கு வந்தபிறகு, "உன்னை எங்கே இறக்கி விடுவது?" என்று கேட்டாள்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கருகில்."

அவள் பதில் பேசாமல் காரை போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் நிறுத்தினாள் அவன் காரை விட்டிறங்கி அவளைப் பார்த்தான். அதுதான் கடைசியாய்ப் பார்ப்பது என்று தெரிந்தாற்போல அவள் அப்படியே நின்றுக்கொண்டிருந்தாள். அவள் திரும்பவும் காரை ஸ்டார்ட் பண்ணி அங்கிருந்து புறப்பட்டுப் போனாள் ..அவள் நடவடிக்கை அவனுக்குப் புரிபட வில்லை.

அவ்விடத்திலேயே ஒரு நிமிஷம் நின்று கொண்டிருந்து விட்டு, பிறகு மெதுவாய் போலீஸ் ஸ்டேஷனுக்குள் போனான்.

## 37

வீட்டில், ஹாலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் வர்மா. ஒவ்வொரு நாளும் காலையில்

பேப்பர் வந்ததுமே அதை முதலிலிருந்து கடைசிவரை இண்டு, இடுக்கு இல்லாமல் பார்த்துக் கொண்டே தான் வருகிறான். 'ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்ட கைதி பிடிப்பட்டான்' என்ற செய்தி, பேப்பரில் எந்த மூலை யிலாவது தென்படுமோ என்ற ஆசை. அது ஆசை கூட இல்லை. அப்படித் தென்படக்கூடாது என்பது தான் அவன் ஆசை. ஆனால் மகரிஷி உதகமண்டலத்திற்குப் போனதிலிருந்தே, அவனைப்பற்றிய தகவலைக்காணோம். அங்கே என்ன நடந்துகொண்டிருந்தது என்றும் அவ னுக்குப் புரியவில்லை. சந்தனாவை பார்த்த பிறகு உயி ரின் மேல் ஆசையோடு அவன் அங்கேயே தங்கிவிட் டானோ, என்ற சந்தேகம் கூட ஏற்பட்டது ஆனால் மகரிஷியைப் பற்றி நன்றாய்த் தெரிந்தவனாதலால், அவ்வாறு நடக்க வழியில்லை என்றும் நம்பினான்.

இவ்வாறு இரு வேறு உணர்ச்சிகளில் தத்தளித்துக் கொண்டிருந்த அவன், பேப்பரைப் படித்துக்கொண்டிருந்த பொழுது, காலிங்பெல் மணியடித்தது. அவன் கதவைத் திறந்தான்.

எதிரே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

''வணக்கம்'' என்றாள்.

அவன் முன்பின் அறிமுகமில்லாத அவளை வியப் போடு பார்த்துக்கொண்டே— ''நீங்கள்...'' என்றான்.

''நான் சந்தனா.''

ஒரு வினாடி அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். சந்தனா சிரித்துக்கொண்டே—''ஏன், பெயரைச் சொன்ன பின்னரும்கூட என்னை அடையாளம் தெரிய வில்லையா?'' என்று கேட்டாள்.

கண்களுக்குக் கீழே கரிய நிழல்களும், கலைந்த கேசங் களும் அவள் அழகை மறைக்க முடியவில்லை. ஆனா



லும் அவளிடம் நிறைய மாறுதல்கள் தென்பட்டன. அவன் நிசப்தத்தைப் பார்த்து அவள்--''இப்படி நின்று கொண்டே பேசச் சொல்றீங்களா என்ன?'' என்றாள் உரிமையோடு. அவன் சோபாவைக் காட்டினான். அவன் இன்னும் ஆச்சரியத்திலிருந்து மீளவில்லை.

அவள் உட்கார்ந்து கொண்டே--''சின்ன சமாச்சாரம் ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று வந் தேன்'' என்றாள்.

''மகரிஷி...மகரிஷி உங்களைச் சந்திக்க வந்தானா?'' கேட்டான் வர்மா.

''வந்தான், போய்விட்டான்.''

''எங்கே?''

''போலீஸ் ஸ்டேஷனில் சரண்டர் ஆவதற்கு.''

வர்மா பெருமூச்சு விட்டான். எது நடக்கக்கூடாது என்றெண்ணிக் கொண்டிருந்தானோ அது நடந்து விட்டது.

''வர்மா, எனக்கு ஒரு சமாச்சாரம் வேண்டும் மகரிஷியின் மனைவி பேயர் ஸ்ரீவாணிதானே?'' அவள் அக்கேள்வியை ஏன் கேட்டாள் என்று புரியாதவனாய் 'ஆம்''...என்றான்.

'ஸ்ரீவாணியை மகரிஷி கொலைசெய்து விட்டான் இல்லையா?''

''நோ'' கத்தினான் வர்மா. ''...அது ஒரு ஆக்ஸி-டென்ட். அவ்வளவுதான்! அவளை, அவள் காதலனின் அணைப்பில் பார்த்துவிட்டுக் கோபத்துடன் தள்ளினான். அவள் கீழே விழுந்ததால் ஆக்ஸிடென்டலாய் மரண மடைந்து விட்டாள். அவள் காதலன் அந்த சாட்சியைச் சொல்லமுடியாது என்று மறுத்துவிட்டான் அதனால்

தான் மகரிஷிக்கு மரணதண்டனை கிடைத்துவிட்டது. குறைந்தபட்சம் நீயாவது நம்பவேண்டும். உன் மீதுள்ள அன்பால்தான் அவன் ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டு வந்து உனனைச் சந்தித்தான்''--என்றான் ஆவேசமாய்.

ஆமாம், அதெல்லாம் எனக்குத் தெரியும். நான் நம்புகிறேன் கூட. நான் நம்பாத விஷயம் என்னவென்றால் ஸ்ரீவாணிக்கும் அவள் காதலனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, அவங்களது நட்பு வெறும் அண்ணன்-தங்கை சம்பந்தம் மட்டுமே.''

''நான்சென்ஸ்! யார் சொன்னாங்க இந்த விஷயத்தை?''

''ஸ்ரீவாணியைத் தங்கையைப்போல பாவிக்கிற அந்த ஆளே சொன்னார்.''

''இதைக்காட்டிலும் வேறு ஆத்ம வஞ்சனை இருக்க முடியாது. நான் ஸ்ரீவாணியின் டைரியை முதலிலிருந்து கடைசிவரை படித்தேன். அவளை வலையில் வீழ்த்தி, அவள் அப்பாவித்தனத்தை சாதகமாய் வைத்துக்கொண்டு அவளை அனுபவித்து, கடைசியில் உதறிவிட்டான் அந்த அயோக்கியன்.''

''அந்த அயோக்கியனின் பெயர்?''

''ரவிதேஜா''

அவ்வளவுதான்! தொலைவில் எங்கோ சமுத்திரம் ஆகாசத்தோடு ஒன்று சேருமிடத்தில், ஒரு குண்டு வெடித்தாற் போன்ற உணர்ச்சி! அந்தப் பிரளயத்துக்கிடையில்... ஒரு நம்பிக்கை உறுதியாகிவிட்டது.

அவள் இதயத்தில் கணவனின் பிரதிபிம்பம் விகாரமாய் மாறிற்று.





சலனமில்லாமல் அவள் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

## 38

ரவிதேஜாவுக்குக் கண் பார்வை திரும்பி வந்து விட்டதாய் அறிந்து, எல்லோரைக் காட்டிலும் அதிகமாய் மகிழ்ச்சியடைந்தவர் விஷ்ணுவர்த்தனன் தான்.

தன் மகள் வேடிக்கைக்காக செய்யப்போன குறும்புத்தனத்தால் ரவிதேஜாவுக்குக் கண்பார்வை போய் விட்டதை அறிந்ததும், அவர் மிகவும் கலங்கிப் போய் விட்டார். அந்த காரணத்தால்தான் மகள் அவனை மணந்துகொள்ளப் போவதாய்ச் சொன்னபொழுது, அவ்வளவாய் விருப்பமில்லாவிட்டாலும், அவர் வேறு வழியில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

உதகையிலிருந்து அவருக்கு போன் வந்தது. உடனே புறப்பட்டு வருகிறோம் என்று ரவிதேஜா போனில் சொன்னான். சந்தனாவின் கிட்னாப் விஷயத்தைப்பற்றித் தெரிவிக்கவில்லை.

வருவதாய்ச் சொன்ன நேரம் கூட தாண்டிப்போய் வெகு நேரமாகிவிட்டது. தம்பதிகள் இன்னும் வராமல் போகவே கலக்கமடைந்தவராய் உதகைக்கு போன் பண்ணினார். அங்கே சலமய்யன் போனில் ''சந்தனா, மகரிஷியோடு சேர்ந்து புறப்பட்டதாய்'' சொன்னதைக்கேட்டு அவர் குழப்பமடைந்தார்.

''அப்ப ரவிதேஜா?'' என்று கேட்டார்.

''அந்தத் தம்பி காலையிலேயே புறப்பட்டுப் போயிட்டாருங்க.'' என்றான் சலமய்யன். விஷ்ணுவர்த்தனனின் குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. மருமகனுக்குக் கண் பார்வை திரும்பி வந்த சுப வேளையில் கணவனும் மனைவியுமாய், சேர்ந்து வராமல் இப்படித் தனித்தனியாய் ஏன் வருகிறார்கள் என்று புரியவில்லை.

அவர் ரவிதேஜாவின் தந்தை சத்யநாராயணனுக்கு போன் பண்ணினார்.

''ஆமாம். ரவி இப்பத்தான் வந்தான். அர்ஜென்டாங் டியூட்டிக்கு ரிபோர்ட் பண்ணவேண்டியிருந்ததால், தான் முன்கூட்டியே வந்து விட்டதாகவும், சந்தனாவை அப்புறமாய் சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு டிரைவரோடு சேர்ந்து வரச்சொன்னேன் என்றும் சொன்னான்'' என்றார்.

விஷ்ணுவர்த்தனன் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டார்.

இது நடந்து ஒரு மணி நேரங்கழித்து சந்தனா வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

''என்னம்மா, டிரைவர் எங்கே?'' என்று கேட்டார். சந்தனா பதில் பேசவில்லை. விடுவிடென்று தன் அறைக்குப் போனாள். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் அவள் திரும்பவும் வெளியே போவதைக் கவனித்து—''எங்கே போகிறாயம்மா? ரவி ஆபீசில் இருக்கிறானாம்'' என்றார்.

''நான் இதோ வரேன் அப்பா'' என்று அவள் திரும்பவும் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

''மகரிஷி எங்கே?'' பின்னாலிருந்து கேட்டார் அவர்.

''போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறான்.''



''எதுக்கு?'' ஆச்சரியமாய்க் கேட்டார் அவர்.

''இந்த உலகத்தில் அநியாயம் மட்டும் நான்கு கால்களோடு நடந்து கொண்டிருக்கிறது; என்று நிரூபிப்பதற்காக—'' என்று சொல்லிவிட்டு அவள் அங்கிருந்துபோய் விட்டாள்.

விஷ்ணுவர்த்தனன் சலனமில்லாமல் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

ஃ ஃ ஃ ஃ

சந்தனா போனபொழுது ரவிதேஜா தன் ஆபீசில் ஏதோ ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரே கதவைத் திறந்து கொண்டு வந்த மனைவியைப் பார்த்ததுமே அவன் எழுந்து நின்றான். தன்மானம் அதிகம் உள்ள அவள் தானாகவே திரும்பி வருவாள் என்றும், அதுவும் ஆபீசிற்கே வந்து விடுவாள் என்றும் எதிர்பார்த்திராத அவன் சந்தோஷத்தோடு ''வா சந்தனா'' என்றான்.

அவள் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே ''மகரிஷி உங்களுக்கு என்ன துரோகம் பண்ணினான்?'' என்று கேட்டாள் கடுமையாய்.

ரவிதேஜா திகைப்படைந்தவனாய்—''அவன் எனக்கு துரோகம் செய்வதா! என்ன கேட்கிறாய் நீ?'' என்றான்.

''நிஜமாய் உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?''

''நிஜமாய் எனக்கு ஒன்றுமே தெரியாது; மகரிஷி எங்கே?''

''மகரிஷியை நீங்கள்தான் அரெஸ்ட் பண்ணச் செய்தீங்க. எதுக்காகப் பொய் சொல்றீங்க?''

''எனக்கொண்ணுமே தெரியாது. மகரிஷியை நான் எதற்காக அரெஸ்ட் செய்யணும்?''

''உங்கள் காதலியைக் கொன்று விட்டதால்.''

ரவிதேஜாவின் முகம் வெளுத்துவிட்டது. "அப்படீன்னால்... அவன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான்னு சொல்லு.'' என்றான்.

''இல்லை. அவன் சொல்லவில்லை. கடைசி நிமிஷம் வரைக்கும் உங்களையும் உங்கள் மானத்தையும் காப்பாற்றுவதற்குத்தான் முயற்சி பண்ணினான். ஆனால் எனக்கு வேறொருத்தர் மூலமாய் விஷயம் அத்தனையும் தெரிந்துவிட்டது. நீங்கள் தங்கையைப் போல பார்த்துக் கொண்ட உங்கள் காதலி ஸ்ரீவாணியின் கணவன்தானே மகரிஷி?''

ரவிதேஜா கோபமாய்—''என்ன பேசுகிறாய் நீ? ஸ்ரீவாணி என் தங்கை என்று சொன்னேன். அவ்வளவுதான். அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் அவள் .....''

''டோன்ட் டாக் ரப்பிஷ் மிஸ்டர் ரவிதேஜா!'' என்று கத்தினாள் சந்தனா.'' ஒரு பெண்ணோடு உடலுறவு வைத்துக் கொண்ட பிறகு கூட, அவளைத் தங்கை என்று சொல்லிக் கொள்கிற அளவுக்கு நீச்சமானவர் என் கணவர்..! என்று என்னால் கனவிலும் ஊகித்துப் பார்க்க முடியவில்லை.''

''நீ நம்பாவிட்டால் அது உன் தலையெழுத்து.'' என்றான் ரவிதேஜா.



''நான் இல்லை நம்பவேண்டியது, உலகம் முழுவதுமே நம்பும்! ஸ்ரீவாணியின் டைரியை கோர்ட்டிற்குக் கொண்டு வந்துவிட்டால்—'' என்றாள். ரவிதேஜா திடுக்கிட்டான். ஸ்ரீவாணியின் டைரியா?'' என்றான்.

''ஒரு பெண்ணை நீ எப்படி வலையில் வீழ்த்தினாய் என்றும், அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்லி எப்படி மோசம் பண்ணினாய் என்றும், அதற்குப்பிறகு வேறொருவர் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகும் கூட, அவளைத் திரும்பவும் எப்படி வசப்படுத்திக் கொண்டாய் என்றெல்லாம் விவரமாய் எழுதியிருக்கும் டைரி—''

''அந்த டைரியை நீ படித்தாயா?''

''படிக்கவில்லை. வர்மா என்ற மகரிஷியின் சிநேகிதன் அத்தனையையும் அப்படியே ஒப்பித்தான்.''

ரவிதேஜா நிம்மதியாய் மூச்சு விட்டான்.

''பார்த்தாயா? நானும் நினைச்சுட்டேயிருந்தேன். இந்த மகரிஷி, வர்மா இவங்கள்ளாம் ஒரு கும்பலுங்க. உன் மனதைக் கெடுப்பதற்காக விதம் விதமான கதைகளைப் புனைந்து சொல்றாங்க போலிருக்கு.'' சந்தனா வேதனையாய் சிரித்தாள். ''நான் டைரியைப் படிக்கவில்லை என்று சொன்னதுமே நீ கதையை இப்படித் திருப்பி விடுவாய் என்று தெரியும். அதனால்தான் பொய் சொன்னேன். நான் டைரியைப் படித்தேன்'' என்றாள்.

ரவிதேஜாவின் முகம் கோபத்தால் சிவந்தது.

''அப்படீன்னால் என்னை சோதிக்கணும்னு பார்க்கிறாயா?'' என்றான்.

''இல்லை. மனுஷங்க எவ்வளவு சுலபமாய் வார்த்தைகளை அப்படியும் இப்படியுமாய் மாற்றி விடுகிறாங்க என்று தெரிந்து கொண்டேன்'' என்றாள்.

''அப்படீன்னா...இப்ப என்ன பண்ணச்சொல்கிறாய்?''

''மகரிஷியை தூக்கிலிருந்து தப்பிவிக்கக்கூடிய சக்தியுள்ள ஒரே ஆள் நீ. அவன் ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டதற்கு கேசு திரும்பவும் கோர்ட்டிற்கு வரும். அதில் இதற்கு முந்தைய கேசைக்கூடத்திரும்பவும் திறக்கச் செய்யலாம். நீ வந்து சாட்சி சொல்லு, போதும்.''

''என்னவென்று?''

''அன்றைக்கு நீ அங்கே தான் இருந்தாய் என்றும், அது கொலை அல்லவென்றும், ஆக்ஸிடென்டாய் அவள் விழுந்துவிட்டதற்கு நீ முக்கிய சாட்சி என்றும், ஒப்புக் கொள் அவனுக்குத் தூக்கு தண்டனை கிடைக்காமல் தப்பும்.''

''ஆனால், அவன் உன்னைப்பார்ப்பதற்காக ஜெயிலிலிருந்து வெளியேறியபோது, ஒரு சென்ட்ரியைக் கூட கொன்று விட்டான். அந்த விஷயம் தெரியுமா?'' ஆவேசத்துடன் கேட்டான்.

''அவன் கொல்லவில்லை. வேறு யாரோ கைதிகள் அந்த சென்ட்ரியைக் கொன்று விட்டுத் தப்பித்துக் கொண்டு ஓடியபோது, மகரிஷி இருந்த செல்லில் சாவிக் கொத்தை அவன் மீது விட்டெறிந்து விட்டுப் போனார்கள். சந்தேகமெல்லாம் அவன் மீதே வரவேண்டும் என்று அவர்கள் அவ்வாறு செய்தார்கள். பிறகு அவர்கள் பிடிப் பட்டுப்போய் போலீஸ் ஸ்டேஷனில் கன்ஃபெஷன் ஸ்டேட் மென்ட் தந்தாங்களாம். அந்த விஷயத்தைக் கூட தெரிந்து கொண்டேன்.''

''ஓஹோ! உன் காதலன் மீது என்னென்ன குற்றங்கள் உள்ளன, அவைகளிலிருந்து அவனை எப்படித் தப்பிக்க வைக்கலாம் என்றெல்லாம் தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறாய்னு சொல்லு'' என்றான் பழிப்பது போல.

''நீ எண்ணிக் கொண்டிருப்பது போல எங்களிருவருக்குமிடையே எந்தச் சம்பந்தமும் இல்லை ரவிதேஜா.''



''ஓஹோ, அதையும் திருடிப்படித்து விட்டாய் என்று சொல். ஆனால் உனக்குத் தெரியாத இன்னொரு விஷயத்தைக் கூட சொல்றேன், கேள். மகரிஷி, தன் காதலை என்றைக்குமே வெளிப்படுத்தியதில்லை. அவன் ஜெயிலிலிருந்து வெளியே வந்தது, கேவலம் என்னைக் கடைசித் தடவையாய்ப் பார்ப்பதற்காகவே! என் கணவர் கண்ணில்லாதவர் என்று தெரிந்ததும், அவன் உயிரையும் பொருட்படுத்தாமல் மருந்தைக் கொண்டு வந்தான். கடைசி நிமிஷம் வரைக்கும் எனக்கு உன்மேல் கௌரவம் போகாமலிருப்பதற்காக எல்லா விஷயத்தையும் மறைத்து வைத்தான். குற்றத்தைத் தன் மீதே போட்டுக் கொண்டான்'' என்றாள்.

''நான் கண்பார்வை திரும்பி வராததைப் போல நடித்தது கூட உன் மேலிருந்த அன்பால் தான். ஜெயிலிலிருந்து வெளியேறிய மகரிஷி, உன்னை அடைய வேண்டும் என்பதற்காக நம் கெஸ்ட் ஹவுசில் கேர்டேக்கராய் வந்து சேர்ந்தான் என்று தெரியும். உன்னை இன்னும் அதிகமாய்க் கவரவேண்டும் என்பதற்காக, நாக குளத்திற்குப் போய் மருந்தைக் கொண்டுவந்தான் என்றும் கூடத் தெரியும். நீங்களிருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவன் தற்கொலை பண்ணிக் கொள்வது போல நாடகமாடி, உனக்கு நெருக்கமாகிவிட்டான். அப்பொழுது தான் எனக்குக் கண்பார்வையும் திரும்பிற்று. உங்களிருவருக்குமிடையே இன்னும் எவ்வளவு தூரம் இந்த விவகாரம் தொடருகிறது பார்க்கலாம் என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான், நான் கண்பார்வை இன்னும் திரும்பாதது போல நாடகமாடினேன். ''என்று சொல்லிக் கொண்டே ரவிதேஜா அவளை நெருங்கினான். அவன் குரலில் திடீரென்று மாறுபாடு வந்தது. ''இதெல்லாம்

உன் மேலிருக்கும் அன்பால் தான். எங்கே அன்பு இருக்
குமோ அங்கே தான் பொறாமையும் இருக்கும், இல்லையா?
நீ எங்கே அந்த மகரிஷிக்கு நெருக்கமாகி விடப்போகிறா
யோன்னு பயந்தேன். இந்த ஒரு விஷயத்தில் என்னை
மன்னிக்க மாட்டாயா?''

''ஒரு நிபந்தனையின் பேரில் உன்னை மன்னிக்கிறேன்''
என்றாள் அவள் உறுதியாய்.

''அதென்ன?''

''கோர்ட்டில் நீங்கள் நடந்ததையெல்லாம் ஒப்புக்
கொள்ளுங்கள்''

''ஆனால் என் மதிப்பும், மரியாதையும்...?''

''பாருங்கள் ரவிதேஜா! கல்யாணமாவதற்கு முன்பே
நீங்கள் ஒரு பெண்ணை அனுபவிச்சீங்க. காதல்லீலை
களைத் தொடர்ந்து கொண்டிருந்தீங்க. அந்த விஷயம்
இப்ப எனக்குத் தெரியும். ஆனால் நான் உங்களை மன்
னிக்கிறேன். ஆனால் நீங்கள்......நீங்கள் அப்படியில்லை.
என்னை மகரிஷி காதலித்தான் என்ற விஷயம் நேற்று
முந்தாநாள் வரை தெரியாது. ஆனாலும் கூட நீங்கள்
எனக்கு அவன் எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு
ஏதேதோ சந்தேகங்களை வளர்த்துக் கொண்டு விட்டீங்க...
சரி, அதற்கும் உங்களை மன்னித்து விடுகிறேன். ஆனால்
இப்பொழுது உலகத்தாரின் பார்வையில் உங்கள் மானமும்
மரியாதையும் போய் விடும் என்று சொல்லி, ஒரு நிரப
ராதியைத் தூக்குமேடையில் ஏற்றிவிடாதீங்க. வேண்டு
மென்றால் கோர்ட்டில் ப்ரொஸீடிங் எல்லாவற்றையும்
'இன்கெமேரா'வில் நடக்கும்படியாய் பார்த்துப்போம்.
அப்பொழுது பத்திரிக்கைகளுக்கோ, எஞ்சியவங்களுக்கோ
கூட, தெரியக்கூடிய அவகாசமே இருக்காது. உங்கள்
மானமும் மரியாதையும் எங்கேயும் போய்விடாது.
உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள் ரவிதேஜா! நான் உங்



ளை நடந்ததையெல்லாம் மறந்து போய் ஒரு கணவ
னாய் கௌரவிப்பேன்.''

''ஆனால், அவன் தன் மனைவியை ஆவேசத்தோடு
பிடித்துத் தள்ளியதை நான் கண்ணாரக்கண்டேன்.''

சந்தனாவின் முகத்தில் ஒரு ஜீவனற்ற புன்னகை
தெரிந்தது...''உங்களுக்கு ஞாபகமிருக்கா ரவிதேஜா? நம்ம
கல்யாணமாவதற்கு முன்னால் உங்களுக்கு நான் போன்
பண்ணினேன். ஏதோ ஓட்டலில் உங்களுக்கு மனைவியாக
வரப்போகிறவள் தன் பாய்பிரெண்ட்டோடு சேர்ந்து
இருக்கிறாள் என்று சொன்னேன். அப்பொழுது நீங்கள்
அங்கே வந்தீங்க. சாதாரணமாய் உள்ளே நுழையாமல்
பால்கனி வழியாய் உள்ளே நுழைந்து, எங்களிருவரையும்
கையும் களவுமாய்ப் பிடித்துவிட வேண்டும் என்றெண்ணி
னீங்க.'' அவள் குரலில் கொஞ்சம் வேதனை இழையோ
டிற்று.''...அப்ப நம்மிருவருக்கும் விவாகம் கூட நடை
பெறவில்லை. கல்யாணமாகாமலேயே உங்களுக்கு என்
மேல் அவ்வளவு சந்தேகம் இருக்கும்பொழுது, தன்
மனைவியை வேறொரு ஆணின் அணைப்பில் பார்த்த
மகரிஷியின் நிலைமை எப்படி இருந்திருக்கணும்?''

''சந்தேகம் இருப்பதில் தப்பில்லை சந்தனா! நானே
சொன்னேன் அல்லவா, எங்கே அன்பு இருக்குமோ
அங்கே தான் பொறாமை இருக்கும் என்று. நான் உன்
மேலிருந்த அன்பால்தான் அங்கே வந்தேன்''

''அன்பால் தான் அங்கே வந்தீங்களா? அப்படீன்னால்
துப்பாக்கியை ஏன் கொண்டுவந்தீங்க?'' அவள் மெல்லிய
குரலில் கேட்ட போதிலும்' அந்த வார்த்தைகள் வெடி
குண்டாய் வெடித்தன.

அவள் தொடர்ந்தாள்—''அந்தச் சமயத்தில் நிஜ
மாகவே நான் யாருடனாவது இருந்திருந்தால் நீங்கள்

ஆவேசத்தால் என்ன பண்ணியிருப்பீங்கன்னு உங்களுக்கே தெரியாது. ஆவேசம் மனிதனை முட்டாளாக்கிவிடும். அதனால்தான், அதை விட அதிக ஆவேசக்காரரான உங்களுக்கு மகரிஷியைத் தண்டிக்கக்கூடிய அதிகாரம் இல்லை. அதைத்தான் நான் சொல்ல வந்தேன்''—

''நான் ஒரு போலீஸ் ஆபீசர் சந்தனா! போலீஸ் ஆபீசர் எங்கே போனாலும் தம்மோடு கூடவே துப்பாக்கியைக் கொண்டுபோவாங்க.''

''ஓஹோ! அப்படியா? ஆனால் உங்களுக்கு வரப்போகிற மனைவி எப்படிப்பட்டவள் என்று தெரிந்து கொள்வதற்காக நீங்கள் அவங்களைத் தொந்தரவு செய்ய வேண்டிய தேவையில்லை. தொலைவில் இருட்டில் நின்று கொண்டிருந்தாலே உங்களுக்குப் புரிந்து போயிருக்கும். கையும் களவுமாய்ப் பிடித்து என்னத்தை சாதிக்கலாம் என்றெண்ணிக் கொண்டிருந்தீங்க?''

அவன் பதில் பேசவில்லை.

''சரி, அந்த விஷயத்தை விட்டுத் தள்ளுங்க. மகரிஷி எனக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்த பிறகு தான், நீங்கள் அவனைக் கொல்ல வேண்டும் என்றெண்ணினீர்களா?''

ரவிதேஜா திகைப்படைந்து--''நான் கொல்ல வேண்டும் என்றெண்ணினேனா? இதென்ன இப்படிப் பேசுகிறாயே?'' என்றான்.

''ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் வந்து கொண்டிருப்பதாய் கானுக்கு போனில் நீங்கள் ஏன் சொன்னீங்க? அவை நிஜமாகவே ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் என்று உங்களுக்குத் தெரியும்.

கான் அவைகளைப் பரிசோதித்து விட்டு மகரிஷிதான் அவைகளை மாற்றியிருப்பான் என்றெண்ணி, அவனை அவ்விடத்திலேயே கொன்றுபோட்டுவிடுவான் என்றெண்ணிக் கொண்டிருந்தீங்க. இல்லையா?''



''அவை ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் என்று எனக்குத் தெரியாது.''

''உங்களுக்குத் தெரியும்.''

''தெரியாது... தெரியாது''— என்றான் ரவிதேஜா எரிச்சலுடன்.

''தெரியும் ரவிதேஜா! ஏனென்றால் அவைகளை நீங்களே தான் மாற்றினீங்க, அதனால்...'' ரவிதேஜா திடுக்கிட்டு...'' நான்...நான் மாற்றினேனா?'' என்றான்.

''அவை ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகள் என்று முதலில் உங்களுக்குத் தெரியாது. கமிஷனர் உங்களுக்கு ஒரிஜினல் பிஸ்கெட்டுகளைத் தந்ததாய் எண்ணிக்கொண்டு, அவைகளைத் தட்டானிடம் எடுத்துக் கொண்டு போய், அதே போன்ற ட்யூப்ளிகேட்டைத் தயாரிக்கச் சொன்னீங்க. மறுக்க முடியுமா?''

''இல்லை, பொய்.''

''இல்லை, நிஜம். அந்த தட்டான் உங்களை அடையாளம் தெரிந்து கொண்டான். அதற்கப்புறம் அவன் உங்கள் வீட்டிற்கு போன் பண்ணியபோது நீங்கள் எங்கள் வீட்டில் இருக்கீங்க போலிருக்குன்னு நினைச்சு உங்கப்பா அந்த நம்பரைத் தந்தார் அவனுக்கு. அவனோடு நானே சுயமாய் பேசினேன்.''

ரவிதேஜாவின் முகம் வெளுத்துவிட்டது. அவன் பதில் பேசவில்லை.

''பார்த்தீங்களா, நான் இருட்டில் விட்ட பாணம் நன்றாய் தைத்துக் கொண்டுவிட்டது'' என்றாள்.

ரவிதேஜா சரேலென்று நிமிர்ந்தான். சந்தனாவின் முகத்தில் மறுபடியும் அதே சிரிப்பு. ''தட்டான் விஷயமாய் பொய் சொன்னேன். போலீஸ் ஆபீசரின் மனைவி

இல்லையா? எனக்கும் உங்கள் சகவாசத்தால் இருட்டில் பாணம் விடக் கொஞ்சம் பழக்கப்பட்டிருக்கிறது போலி ருக்கிறது ''என்று சொல்லிவிட்டு நிறுத்தியவள்—''...... ஸோ...ட்யூப்ளிகேட் பிஸ்கெட்ஸ்ஸையே மாற்றியது கூட நிஜந்தான்னு சொல்லுங்க''—என்றாள்.

''அந்த தேவை எனக்கு இல்லை''—என்றான் பற்களைக் கடித்து கோபத்தை அடக்கிக் கொண்டே.

''ஏன் இல்லை? மகரிஷி செத்துப் போவது உங்களுக்கு. உங்கள் மனைவியின் எண்ணத்தில் ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரியாய் என்றென்றும் இருந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை! மகரிஷி நாளைக்கு கோர்ட்டுக்குப் போனால், அவன் திரும்பவும் இந்த விஷயங்களையெல்லாம் எடுத்து விடவேண்டியிருக்கும். அல்லது தன் சிநேகிதியான என்னிடமே உங்களைப்பற்றியும் உங்கள் நிஜ சொரூபத்தைப்பற்றியும் விவரமாய்ச் சொல்லலாம் ஸ்ரீவாணியின் டைரியைக் காட்டலாம். இதெல்லாம் உங்களுக்குப் பிடிக்காது. அதனால் நீங்கள் கானுக்கு போன் பண்ணி, ஒருகால் அவை ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டாயிருந்தால் எடுத்துக்கொண்டு வரும் ஆளை உடனே கொன்றுவிடு, என்றுக் சொன்னீங்க. உங்கள் துரதிர்ஷ்டத்தினால் அந்த கான் தன் கையாளான சாஸ்திரியிடம் எனக்கு முன்பாகவே இந்த விவரங்களையெல்லாம் சொன்னதால், உங்கள் நிஜசொரூபம் எனக்கு அங்கேயே தெரிந்துவிட்டது. கண்பார்வை திரும்பிவந்து விட்ட பிறகு கூட, நீங்கள் குருடரைப் போலவே நடித்துக் கொண்டிருக்க வேண்டிய காரணம் என்ன? என்ற சந்தேகத்திற்குச் சரியான பதில்கிடைத்து விட்டது. உங்களுக்குக் கண் பார்வை திரும்பியபொழுது நான் ஒன்றும் மகரிஷியின் அணைப்பில் இல்லை. தன் நேர்மையை நிரூபித்துக்கொள்வதற்காக அவன் தற்கொலை செய்



கொள்ளப் போனதால், அதிலிருந்து மீட்பதற்காகத்தான் அவனைப்பிடித்துக் கொண்டேன். நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போன்ற எந்தவிதமான சம்பந்தமும் எங்களுக்கிடையே இல்லை. நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் இதுதான் உண்மை. உங்கள் மனைவிக்கு அவன் காதலன் அல்ல. அவன் மனைவிக்கு நீங்கள்தான் காதலர் அவ்வளவு தான் வித்தியாசம்.''

''அதனால் இப்ப என்ன செய்யச் , செல்கிறாய்?''

''அதை தீர்மானித்துக் கொள்ள வேண்டியது நீங்கள்.'' உறுதியாய்ச் சொன்னாள் சந்தனா--'' நீங்கள் வந்து மகரிஷியின் மனைவியோட மரணம் ஆக்ஸிடென்ட் என்றும்' அது கொலை இல்லை என்றும் சொன்னால் சரி அப்படிச் சொல்லாத பட்சத்தில், ஸ்ரீவாணியின் டைரியை கோர்ட்டில் தந்துவிடுவேன். ஸ்ரீவாணிக்கும் உங்களுக்கும் இருந்த சம்பந்தம் உலகம் முழுவதும் தெரிந்துவிடும் படியாய்ச் செய்து விடுவேன். நீங்கள் டியூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் தயாரித்து அவைகளை கிட்னாப்பரிடம் தந்துவிட்டு, ஒரிஜினல் பிஸ்கெட்டுகளை மாயமாக்கிவிடப் பார்க்கிறீர்கள் என்ற விஷயத்தை எல்லோரும் தெரிந்து கொள்ளும்படியாய்ச் செய்துவிடுவேன். எல்லாவற்றையும் விட, முக்கியமாய் மகரிஷியை நீங்கள் கொல்வதற்கு எந்தவிதமாய், முயற்சித்தீர்கள் என்பதை உங்கள் மனைவியாய், உலகத்திற்கு எடுத்துச் சொல்லுவேன்.''

''நீ மனுஷி அல்ல, ராட்சசி என்றான் ரவிதேஜா.

''ஆமாம் நான் மனுஷி அல்ல. ராட்சசிதான், உன் மனைவி அல்லவா?'' என்றாள்--'' ஆனால் உங்களுக்கு இன்னொரு வழியைக் கூட காட்டுகிறேன் இப்பொழுதாவது உங்களிடம் மனிதப்பண்பு கொஞ்சமாவது ஒட்டிக் கொண்டிருந்தால், நீங்கள் மாறிப் போய்விட்டீர்கள் என்ற நம்பிக்கை ஏற்படும்படியாய் இதந் ஒரு காரியத்

தைச் செய்யுங்கள், போதும். கோர்ட்டுக்கு வந்து உள்ளதை உள்ளவாறு சொல்லுங்கள் உங்கள் மனைவியாய்த் தொடர்ந்து இருப்பேன் நான். அல்லது இவ்வளவு தெரிந்துவிட்ட என்னை, மனைவியாய்த் தொடர்ந்து வைத்து கொள்ளப் பிடிக்காமல் போனால், சட்டரீதியாய் விவாகரத்து வாங்கிக் கொண்டு பிரிந்துப் போய்விடலாம். மகரிஷி மட்டும் பிழைத்துத்தீர வேண்டும். இந்த விஷயத்தை யோசித்துக் கொள்ளுங்கள்.'' என்று சொல்லிவிட்டுத் திரும்பப் போனாள். அவன் கிட்டே வந்து--'' ஐ லவ் யூ சந்தனா என்றான். அவள் பதில் பேசவில்லை.

''உன் பண்பு, பகுத்தறிவு.. நிஜமாய் என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி வேறுயாறும் இருக்க முடியாது. நான் சின்னச் சின்ன தப்புகள் செய்தது நிஜம்தான். ஆனால் நீ நினைப்பது போல அய்யோக்கியன் இல்லை நான். ஓட்டலில் தேடிக் கொண்டு வந்தது; உனக்கும் மகரிஷிக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாய் நினைத்தது; பகையால் குமுறிக் கொண்டிருந்தது;-- இதெல்லாம் என் பலவீனங்கள் தானே தவிர நான் சாதாரணமாய் அயோக்கியன் இல்லை. இந்த ஒரு விஷயத்தை மட்டும் நம்பு-- நீ என்னோடு இருந்தாலும் சரி பிரிந்து போனாலும் சரி.

அவள் மெதுவாய்த் திரும்பினாள். அவனைப் பார்த்து.

''நாம் சேர்ந்து இருக்கனுமா கூடாதா என்பது நீங்கள் நடந்து கொள்ளப் போகிற நடவடிக்கையின் மீது தான் ஆதாரப்பட்டிருக்கிறது. முடிவெடுக்க வேண்டியது நான் இல்லை, நீங்கள்--'' என்று சொல்லி அங்கிருந்து வெளியே வந்தாள். ரவிதேஜா அப்படியே நின்று கொண்டிருந்தான். அவன் முகம் களையிழந்தது. தனக்கும் தன் மனைவிக்குமிடையே பிளவு ஏற்பட்டுவிட்டதென்று அவனுக்குத் தெரியும். அதை எப்படிப்



போக்கடித்துக் கொள்வதென்றும் என்ன செய்வது என்றும் யோசித்தபடியே நின்றுகொண்டிருந்தான் அவன்.

ஃ ஃ ஃ

மெதுவாய் படியிறங்கி கீழே வந்தாள் சந்தனா வரும்போது இருந்த ஆவேசத்தையெல்லாம் கணவனுக்கு முன்னால் கக்கிவிட்டதால், அவளைத் திடீரென்று பலவீனம் வந்து சூழ்ந்து கொண்டது. முப்பதுபடிகள் இறங்குவதற்கே சுமார் பத்து நிமிஷம்மாயிற்று. அப்படியே வந்து காரில் உட்கார்ந்து கொண்டு ஸ்டார்ட் செய்யப் போனாள். அதற்குள் பின்னாலிருந்து ஏதோ சந்தடி கேட்டது. அவள் பின்னால் திரும்பிப் பார்ப்பதற்குள், ஒரு கை அவள் முகத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டது. இன்னொரு கையிலிருந்த கைக்குட்டை அவள் மூக்கின் மேல் வைக்கப்பட்டது. அவள் மூச்சை அடக்கிக் கொள்ளப் பார்த்தாள். ஆனால் முடியவில்லை. கைக்குட்டையிலிருந்து க்ளோரோஃபாம் நொடிக்குள் அவள் நினைவுத்தப்பினாள்.

## 39

வீட்டை விட்டுப் பரபரப்புடன் புறப்பட்ட சந்தனா, வெகு நேரமாகியும் வராமல் போகவே விஷ்ணுவர்த்தனன் கலக்க மடைந்தார். ரவிதேஜாவின் ஆபீசிற்கு போன் பண்ணி மகளைப் பற்றிக் கேட்டார்.

''இதென்ன அங்கிள்! அவள் இங்கிருந்து புறப்பட்டு வெகுநேரமாயிடுத்தே.'' மறுமுனையிலிருந்து கலக்கத்துடன் பதிலளித்தான் ரவிதேஜா.

''என்னதான் நேர்ந்ததோ புரியவில்லை எனக்கு வந்ததிலிருந்தே சந்தனா ஏதோபோலிருந்தாள். ஐந்து நிமிஷம் கூட வீட்டில் இல்லாமல் உடனே புறப்பட்டு விட்டாள். உதகையில் ஏதாவது ரகளை நேர்ந்ததா?''

''சின்ன ரகளை ஏதோ நடந்தது உண்மைதான். ஆனால் அதொன்றும் அவ்வளவு பெரிய விஷயமில்லை அங்கிள்.''

மணமான புதிதில் கணவன் மனைவியருக்கிடையே சின்னச் சின்ன பூசல்கள் ஏற்படுவது சகஜமேயாதலால், விஷ்ணுவர்த்தனன் கூட அதைப்பற்றி அதிகமாய்ப் பேச வில்லை. ''பின்னே எங்கே போயிருப்பாள்?'' என்று கேட்டார்.

''தன் சிநேகிதிகள் யாரிடமாவது போயிருக்கலாமோ என்னவோ?''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை ரவி! உனக்குக் கண்பார்வை திரும்பி வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய பார்ட்டிக்கு அரேஞ்சு பண்ணலாம்னு நினைச்சுட் டிருந்தேன். நீங்களிருவரும் எங்க வீட்டிற்கு வந்து அந்த பார்ட்டியில் சந்தோஷமாய் பங்கெடுத்துப்பீங்கன்னு நினைச்சுட்டிருந்தேன். ஆமாம், நீங்களிருவரும் தனித் தனியாய் வரவேண்டிய காரணமென்ன? வந்ததுமே நீ போய் டியூட்டியில் ஜாயின்டாகிவிட்டாய். அவளோ வீட்டில் இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிறாள். இதெல் லாம் என்ன? எனக்கொண்ணுமே புரியவில்லை.''

''நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீங்க அங்குள். எல் லாம் நினைத்தாற் போலவே நடக்கும். நான் இப் பொழுதே சந்தனாவைப் பற்றி விசாரிக்கிறேன்.'' என்று போனை வைத்துவிட்டான் ரவிதேஜா தன் வீட்டிற்கு போன்பண்ணி, சந்தனா அங்கே வரவில்லை என்று தெரிந்து கொண்டு, அதற்குப்பிறகு, போலீஸ் ஸ்டேஷ னுக்கு போன் பண்ணி, மகரிஷியைப் பற்றி விசாரித்தான், அங்கே மகரிஷி சரண்டராகி விட்டான் என்று தெரிந்தது. கமிஷனர் அசுவத்தாமனுக்கு மறுபடியும் போன் பண்ணிச் சொன்னான்.

''வெரிகுட்'' என்றார் கமிஷனர். ''இப்பொழுது தான் இன்ஸ்பெக்டர் கிரண் வந்து சொன்னார். கொலை



யாளி உதகையிலிருந்து ஓடிப்போய் விட்டதாய்..... என்ன பண்ணலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது, நீ இந்தச் செய்தியைச் சொன்னாய்.''

''இப்பொழுது திரும்பவும் அவன் மீது கேசு ஃபைல் பண்ணுவாங்கன்னு நினைக்கிறேன்.'' என்றான்.

''ஆமாம், ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்ட குற் றத்திற்கு அவன் மீது திரும்பவும் கேசு தாக்கலாகும்.''

''ரொம்ப இன்ட்ரெஸ்டிங்காய் இருக்கு சார். தூக்கு மேடையில் ஏறப்போவதற்கு முதல்நாள் அங்கிருந்து தப் பித்துக் கொண்டதும், அவன் மீது கேசு கோர்ட்டில் நடப்பதும்—அதனால் அவன் தூக்குதண்டனை தள்ளிப் போடப்படுவதும்—''

மறுமுனையிலிருந்து கமிஷனர் கூட சிரித்தார். ''இது தானே நம்ப சட்டம் இருக்கிற நிலைமை!''

ரவிதேஜா போனை வைத்துவிட்டு நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டான்.

அதே சமயத்தில் விஷ்ணுவர்த்தனனின் பங்களாவிற் குள் ஒரு ஆள் நுழைந்தான். கூர்க்கா, அவன் எழுதித் தந்த சீட்டை எடுத்துக் கொண்டு உள்ளே போனான். விஷ்ணுவர்த்தனன் அந்தச் சீட்டைப் பார்த்து விட்டு— ''நான் பிஸியாய் இருக்கிறேன். அப்புறமாய் வரச்சொல்'' என்றார்.

கூர்க்கா போய் விட்டுத் திரும்பவும் வந்து—''உங் களை இல்லையாம் சார், அம்மாவைச் சந்திக்கணுமாம்'' என்று சொன்னான்.

விஷ்ணுவர்த்தனன் முகத்தைச் சுளித்து விட்டு— ''அம்மாவா? அம்மா வீட்டில் இல்லைன்னு சொல்லு'' என்றார். கூர்க்கா போகத்திரும்பியபோது, திரும்பவும் கூப்பிட்டார்—''வேண்டாம், உள்ளே வரச்சொல்.''

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அந்த ஆள் உள்ளே வந்தான். கைகளைக் கூப்பி வணங்கி விட்டு--"வணக்கம், என் பெயர் வர்மா, மிஸ். சந்தனாவோடு பேசணும்" என்றான். "என்ன விஷயம்?" கேட்டார் அவர்.

"சந்தனா சின்ன விசாரணை ஒன்றைப் தெரிஞ்சுட்டு வரச்சொன்னாங்க. அதைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். அந்த விஷயங்களை அவங்களுக்குத் தெரிவிக்கணும்."

விஷ்ணுவர்த்தனனின் புருவங்கள் முடிச்சேறின.

"விசாரணை பண்ணவேண்டிய அளவுக்கு அவ்வளவு பெரிய விஷயம் என்ன?" என்று கேட்டார்.

"ஸ்ரீ வாணி என்ற பெண்ணைப்பற்றி."

"அவள் யார்?"

வர்மாவுக்கு எரிச்சலாயிருந்தது. அந்தக் கிழவரின் விடாப்பிடிவாதத்திற்குத் தானும் சளைத்துப் போகாமல் "அதையெல்லாம் நீங்கள் உங்க பெண்ணைக் கேட்டுக் குங்க அவங்க என்னைச் சில விவரங்களைத் தெரிந்து கொண்டு வரும்படி சொன்னாங்க அவைகளைத் தெரிந்து கொண்டுவிட்டேன் என்ற விஷயத்தைச் சொல் லுங்கள் போதும்" என்று சொல்லிவிட்டுத் திரும்பப் போனான்.

"ஸ்ரீ வாணி யார்? அந்தப் பெண்ணிற்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? என்ன விவரங்களைத் தெரிந்து கொண்டு வரச்சொன்னாள்?" குரலில் குழைவை வர வழைத்துக் கொண்டே கேட்டார் விஷ்ணு வர்த்தனன். அவரிடம் முன்பிருந்த எரிச்சல் இப்பொழுது இல்லை.

"ஸ்ரீவாணி என்ற பெண்ணிற்கு அவள் காதலனோடு சம்பந்தங்கள் உள்ளன என்று தெரியப்படுத்தும் ருசுக்கள் சில கிடைத்திருப்பதாய் அம்மாவிடம் சொல்லுங்கள் போதும். மீதியெல்லாம் அவளுக்குப் புரிந்துவிடும்.;



சந்தனா அந்தக்காரியமாய்தான் என்னை அனுப்பியிருந் தாங்க.

"பாரு மிஸ்டர்! நீ சொல்றது எதுவும் எனக்குப் புரியவில்லை. ஸ்ரீவாணி யார்? அவள் காதலன் யார்? என் மகளுக்கும் அவங்களுக்கும் என்ன சம்பந்தம்?" அதைச் சொல்ல வேண்டுமென்றால் மகரிஷியைப் பற்றிச் சொல்லவேண்டும். அது பிடிக்காததால்—'ஸ்ரீவாணி என்ற சந்தனாவுக்குத் தெரிந்த ஒரு பெண் கொலை செய்யப்பட்டாள். அவள் காதலனைப்பற்றித் தெரிந்து விட்டதால், ஸ்ரீவாணியின் கணவன் அவளைக் கொலை செய்து விட்டான். அந்த விவரங்களை சந்தனா என்னைக் கண்டுப்பிடித்துக் கொண்டு வரும்படிச் சொன் னாள்" என்றான். "யார் அந்தக் காதலன்? ஆர்வ மில்லாமலேயே கேட்டார்.

"ரவிதேஜா என்று ஒருவன்"

ஒரு ஆன்டம் பாம் வெடித்தாற் போலாயிற்று. தன் மகள் உதகையிலிருந்து தனியாய் ஏன் வந்தாள்? என் பதற்குக் காரணம் கிடைத்துவிட்டாற்போல......சமுத் திரத்தில் அடித்துக்கொண்டு போகப்படுபவனுக்கு திசை புரியாதது போல...விஷ்ணுவர்த்தனனுக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை. இந்த நிலைமையில் தனக்கு ஆலோ சனை வழங்கக்கூடியவர் தன் சிநேகிதரான கமிஷனர் அசுவத்தாமன் தான் என்று தோன்றிற்று. முதலில் அவ ருக்கு போன் பண்ணலாம் என்றெண்ணி பிறகு, வேண் டாம், நேரிடையாய்ப் போய் பெர்சனலாய் சந்தித்துப் பேசினால் நல்லது என்று தோன்றிற்று. அவர் உடனே கமிஷனர் ஆபீசுக்குப் புறப்பட்டார்.

அசுவத்தாமனின் அறைக்குள் அவர் நுழைந்தபொழுது கமிஷனர் போனில் பேசிக்கொண்டிருந்தார். அவர் முகம் ரத்தமில்லாதது போல வெளுத்துப் போயிருந்தது.

விஷ்ணுவர்த்தனன் உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்காரப் போனபொழுது, கமிஷனர் போனை வைத்து

விட்டு அவரைப் பார்த்து--"உங்களுக்கு இந்தச் செய்தியை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை" என்றார்.

"என்னவாச்சு அசுவத்தாமா?"

"சந்தனாவை கிட்னாப் பண்ணிட்டாங்க."

விஷ்ணுவர்த்தனனின் கைகள் நடுங்கின. உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன. அவர் பி.பி. திடீரென்று ஏறிவிட்டது. "கிட்னாப்பா! என் மகளையா? யார்? எதுக்கு?" என்று கேட்டார் நடுங்கும் குரலோடு.

"தங்க பிஸ்கெட்டுகளுக்காக, கான் என்ற ஒரு ஆள்."

"நீங்க என்ன பேசறீங்க? தங்க பிஸ்கெட்டுகளுக்கும் என் மகளுக்கும் என்ன சம்பந்தம்? என்னதான் நடந்தது?" ஏறக்குறைய கத்தியே விட்டார் விஷ்ணுவர்த்தனன்.

"உங்கள் மகளுக்கும் அந்த தங்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அந்தத் தங்கத்திற்குப் பதிலாய் அவங்க உங்க மகளை கிட்னாப் பண்ணியிருக்காங்க. அவளை விட வேண்டுமென்றால் நாங்கள் தங்கங்களைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டிருக்காங்க"--என்றுச் சொல்லிவிட்டு ரவிதேஜாவுக்கு இந்த விஷயத்தைத் தெரிவிப்பதற்காக போன் பண்ணத் தொடங்கினார் கமிஷனர் அசுவத்தாமன்.

## 40

"டக்...டக்...டக்..."

காதுகளைப் பிளக்குமாறு கேட்ட அந்த ஓசைக்கு, நினைவு திரும்பி வந்தது சந்தனாவுக்கு. ஒரு வினாடி தான். எங்கே இருக்கோம் என்று புரியவில்லை. எழுந்திருக்கவும் சக்தியில்லாதவளைப் போல அப்படியேபடுத்துக் கொண்டிருந்தாள். வெளியிலிருந்து கேட்ட சப்தம் மெல்லமெல்ல நின்று விட்டது. சுற்றிலும் இருள்.



க்ளோரோஃபாமின் மயக்கம் முற்றிலுமாய் விடுப் பட்டதுமே அவள் எழுந்து உட்கார்ந்து கொள்வதற்கு முயன்றாள். மேலே என்ன இருந்தது என்று பார்த்துக் கொள்ளாமல் எழுந்திருக்கப் போனதால்... ..பெருத்த சப்தத்தோடு தலை பிளந்து விடும்படியாய் மேற்கூரை டமாரென்று தலையில் இடித்தது. அந்த அடிப்பட்டதும் அவள் பெரிதாய்க் கத்தினாள். அப்பொழுதுதான் அவளுக்குச் சந்தேகம் தோன்றத் தொடங்கிற்று. கையைத் தூக்கித் தடவிப் பார்த்தாள். சரியாய் ஒன்றரை அடி உயரத்தில் மேற்கூரைத் தட்டுப்பட்டது.

அவளுக்கு ஒரு வினாடி ஒன்றுமே புரியவில்லை. சுற்றிலும் தடவிப்பார்த்தாள். இருபக்கங்களிலும் மரக்கதவுகள் தட்டுப்பட்டன.

அப்பொழுது மறுபடியும் சப்தம் கேட்கத்தொடங்கிற்று.

"டக்...டக்...டக்" அவள் பயந்து போய் "யார்? யாரது?" என்று பெரிதாய்க் கத்தினாள்.

திரும்பவும் சப்தம்...யாரோ சுத்தியால் ஆணிகளை அடித்துக் கொண்டிருந்தாற்போல.

கண்களைக் கசக்கிக்கொண்டாலும் கன்னங்கரேலென்ற இருட்டு தான் தெரிந்தது. உள்ளே காற்று வீசவில்லை. அவள் உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்து போயிற்று. தொண்டையைக் கிழித்துக் கொண்டு உரக்க—"யாரது என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?" என்று கேட்டாள். வெளியேயிருந்து பதிலில்லை.

அவளுக்கு திடீரென்று ஒரு விஷயம் புரிந்து விட்டது' தான் ஒரு மரப்பெட்டிக்குள் சிறைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று.

வெளியே யாரோ ஆணியடித்துக் கொண்டிருந்தார்கள். சவப்பெட்டிக்குள் வைத்து சவத்தை அடக்கம் பண்

ணினாற்போல, அவளை யாரோ இதில் சிறைப்படுத்தி வெளியே ஆணியடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த யோசனை வந்ததுமே அவள் நடுநடுங்கிப் போய்விட்டாள். ''நோ...நோ...'' என்று பெரிதாய் கத்தத் தொடங்கினாள்.

மூன்று நான்கு முறை அவ்வாறு கத்திய பிறகு அவள் தொண்டை கீச்சென்றாகி விட்டது. சப்தம் வெளியே வரவில்லை. அவளுக்கு இன்னொரு விஷயம் கூடப் புரிந்தது. தான் எவ்வளவு கத்திக் கூச்சலிட்டாலும் வெளியே சின்ன சப்தம் கூடக் கேட்காது.

அதை உணர்ந்ததுமே அவள் கத்துவதை விட்டாள்.

இருள் அவளை பயமுறுத்திக் கொண்டிருந்தது. சுற்றிலும் ஓரடி தூரத்தில் எங்கு பார்த்தாலும் சுவர்களைப் போன்ற மரத்தாலான ஷீட்டுகள். அவற்றிற்கிடையே இருட்டில் படுத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது... அது தான் அவளை பயமுறுத்திக் கொண்டிருந்தது. சின்ன ஒளிக்கற்றைக்காக அவள் தத்தளித்துப் போய்க் கொண்டிருந்தாள். மூச்சுத்திணறியது சுவாசத்திற்காக இல்லை, வெளிச்சத்திற்காக. அந்த நிலைமையை அனுபவித்தாலே யொழிய புரியாது. பயங்கரமான நிலை அது.

அதற்குள் மரப்பெட்டியைக் காற்றில் தூக்கினாற் போல அது நகர்ந்தது.

எங்கே எடுத்துக் கொண்டுபோகிறார்கள் அவளை? இப்படியே உயிரோடு பூமிக்குள் புதைத்துவிடப் போகிறார்களா?

பெட்டியை மெதுவாய்க் கீழே இறக்கினார்கள், சந்தனா மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். தன்னைக் குழிக்குள் இறக்குகிறார்களோ? மேலே மண்ணைப் போட்டு மூடிவிடுவார்களோ?



எவ்வளவு நாட்கள் உயிரோடிருப்பாள் அவள்? அரை மணியா? கால்மணியா? ஐந்து நிமிஷமா? அவள் உடம்பு நனைந்து போய்க் கொண்டிருந்தது, அவளுக்கு நன்றாய்த் தெரிந்தது.

தான் இருந்த பெட்டியை இன்னும் நாலடி தூரத்திற்கு நகர்த்தியதை அவள் உணர்ந்தாள். அதற்குப்பிறகு அப்பெட்டி படகைப்போல லேசாய் அப்படியும் இப்படியுமாய் ஆடிற்று. அவள் உருண்டு போகாமலிருக்க இரு, பக்கத்து மரஷீட்டுகளையும் இரு கைகளால் அழுத்திப் பிடித்துக் கொள்ளவேண்டியிருந்தது.

பெட்டி அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டே இருந்தது. பிறகு மெதுவாய் அது நின்றுவிட்டது. நின்று போவதற்கு முன்னால் கூட, ஒரு சின்ன அலைவந்து மோதியபடகைப் போல அது நகர்ந்துவிட்டது, பிறகு சலனமில்லாமல் நின்றது.

அப்போது தான் அவளுக்கு புரிந்தது அந்த விஷயம். தன்னை நீர்நிலைக்குள் தள்ளிவிட்டார்கள்! ஆம் நிச்சயமாய் நீர்நிலைக்குள் தான்! அவளுக்குப் பெரிதாய் அழவேண்டும் போலிருந்தது. அழக் கூட முடியாதபடி அப்படியே இருந்தாள்.

உயிரோடிருக்கும் பெண்ணை ஒரு மரப்பெட்டிக்குள் போட்டு அடைத்துத் தண்ணீருக்கடியில் தள்ளிவிடுவது... மனிதப் பண்புள்ள யாராலுமே கனவிலும் ஊகிக்க முடியாத விஷயம்.

தன்னைச் சுற்றிலும் நீர் இருந்தது என்றும், எந்த நிமிஷத்திலும் மரப்பெட்டிகளின் சந்துகளின் வழியாய் உள்ளே வந்து விடலாம் என்றும்' அதற்குப் பிறகு, தன் உடல் அழுகி, நாசமாகப் போகிறது என்றும் புரிந்ததுமே, அவளுக்கு ஃபிட் வந்தாற்போல ஆகிவிட்டது. இந்த

யோசனையிலேயே இதயமே நின்று விடுமோ என்ற பய மும் ஏற்பட்டது.

வெளிச்சத்தைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகத் தொடங்கிற்று. உள்ளே ஏதாவது ஆணி கிடைத்தால் அதன் மூலம் அந்த மரத்தை ஓட்டை போட்டு, உள்ளே வந்து விழும் ஒளிக்கிரணத்தைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு அது! உள்ளே நீர் புகுந்து, தான் தத்தளித்து மரணமடைந்தாலும் சரி முதலில் வெளிச்சத்தைப் பார்த்து விட வேண்டும். தன்னால் இருட்டைத்தாங்கிக் கொள்ள முடியாது.

அவள் சுற்றுலும் தடவிப் பார்த்தாள். தலைமாட்டிற்கு மேல் அரை அடி உயரத்தில் இருந்த, இரும்புச் சட்டத்தின் தேவை ஏனோ என்றெண்ணிக் கொண்டு, அவள் அதைக் கையால் நன்றாய் தடவிப் பரிசோதித்துப் பார்த்தாள். அதென்னவென்று அவளுக்குப் புரியவில்லை, அதே விதமாய் கால்மாட்டில் கூட ஒரு பிளாஸ்டிக் பக் கெட் தட்டுப்பட்டது.

தலைமாட்டில் ஒரு பக்கத்தில் ஒரு பேப்பர் பாக் கெட்டைப் போன்ற ஒன்று தட்டுப்பட்டது. அவளுக்குப் புரியவில்லை. அதைப் பிரித்துப் பார்த்தாள் உள்ளே ஒரு திட பதார்த்தத்தைப் போன்ற ஒன்று இருந்தது!

இது என்னவாக இருக்கும். கண்களுக்கருகே வைத்துக் கொண்டு பார்த்தால் ஏதாவது கண்ணுக்குத்தெரியலாமோ என்றெண்ணி, அவள் அதைக் கண்ணுக்கருகில் கொண்டு போனாள். அப்பொழுது தான் புரிந்தது அவளுக்கு அதென்னவென்று.

காட்பரீஸ் சாக்லெட்...ப்ரெட்...



# 41

கமிஷனர் அசுவத்தாமனும், ரவிதேஜாவின் தந்தை சத்யநாராயணனும், விஷ்ணுவர்த்தனனும் அவ்வறையில் உட்கார்ந்திருந்தார்கள். மூவர் பார்வையும் டெலிபோன் மீதே இருந்தது. எந்த நேரத்திலும் அது ஒலிக்கலாம். அதற்காகவே அவர்கள் காத்திருந்தார்கள்.

வேறிடத்தில், தன் ஆபீசில் ரவிதேஜா அதே போனுக்காகக் காத்திருந்தான்.

அவன், எங்கே போன் செய்வான் என்று தெரியாது. அதனால் யாருமே ரிஸ்க் எடுத்துக் கொள்ளத் தயாரா யில்லை. ஒவ்வொருவரும் ஒரு போனுக்கருகில் உட்கார்ந் திருந்தார்கள். அரைமணிக்குப் பிறகு கமிஷனரின் ஆபீஸில் போன் மணியடித்தது. அசுவத்தாமன் சட்டென்று போனை எடுத்து ''ஹலோ'' என்றார்.

மறுமுனையிலிருந்து எந்தப் பதிலும் இல்லை. அசு வத்தாமன் உரக்க ''ஹலோ.....ஹலோ'' என்றார் மறு முனையிலிருந்து கரகர சப்தம் கேட்டது. அதற்குப்பிறகு குரல் காதில் விழுந்தது. மறுமுனையிலிருந்த ஆள் பேச வில்லை என்றும், அது கேவலம் டேப்பில் ரிகார்ட் செய்யப்பட்ட குரல் என்றும் கமிஷனருக்குப் புரிந்தது.

அப்படியென்றால்...

நான் என்ன பேசினாலும் லாபமில்லை. மறுமுனை யிலிருந்த ஆள் சொல்லும் வார்த்தைகளைத்தான் அவ ரால் கேட்க முடியும். அதற்குள் மறுமுனையிலிருந்து கிட் னாப்பரின் குரல் கேட்கத் தொடங்கிற்று.

ஜாக்கிரதையாய் கேளுங்கள். சந்தனா நலமாய் இருக்கிறாள். ஆனால் அவள் ஒரு சவப்பெட்டிக்குள் பத்தி ரப்படுத்தப்பட்டிருக்கிறாள். சுற்றிலும் ஃபையர் கிளாஸ்

கள் உள்ள அந்த சவப்பெட்டி ஒரு நீர்நிலைகடியில் வீசி யெறியப்பட்டுள்ளது. தண்ணீரின் தாக்கலால் அந்தப் பெட்டி உடைந்து போய் விடாமலிருக்க, ஜாக்கிரதை களை மேற்கொண்டுள்ளேன். உள்ளே ஒரு சொட்டு நீர் கூடப் புகுந்து விட முடியாது. ஆனால் ஒரு சின்ன ஆப த்து, என்னவென்றால் உள்ளிருக்கும் இருட்டிற்கு அவள் பழக்கப்பட வேண்டும். அந்த நிசப்தத்திற்கு அவளுக்குப் பைத்தியம் பிடிக்காமலிருக்க வேண்டும். அப்படி சாகாமல் இருக்கவேண்டுமென்றால்' கூடிய சீக்கிர்த்தில் என்னிடம் அந்த பிஸ்கெட்டுகளை ஒப்படைக்க வேண்டும். எங்கே, எப்படி என்பதை நான் மறுபடிம் சொல்கிறேன்—' டேப்ரிகாடர் நின்று போய் விட்ட சப்தம்.

அந்த போன் எங்கேயிருந்து வந்தது என்று தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை அசுவத் தாமன். அதனால் ஏந்த லாபமும் இராது என்று தெரியும். ஒருக்கால் போலீசார் அங்கே போனால் யாரும் இருக்க மாட்டார்கள். அப்படி ஏதாவது கிடைத்தாலும் ஒரு சின்ன டேப்ரிகார்டர் கிடைக்கலாம். அவர் கிட்னாப் பரைப் பற்றி யோசிக்கவில்லை. சந்தனாவின் நிலைமை யைப் பற்றி யோசித்துப் பார்த்தபொழுது, அவர் உடம்பு சிலிர்த்தது. அவ்வளவு அனுபவம் உடைய போலீஸ் ஆபீசருக்கே நடுக்கம் ஏற்பட்டது.

அசுவத்தாமனின் தோற்றத்தையே கவனித்துக்கொண் டிருந்த விஷ்ணுவர்த்தனன் ''என்னவாச்சு?'' என்று பர பரப்போடு கேட்டார்.

அசுவத்தாமன் நடந்தது என்னவென்று சொன்னார்.

ஒரு சவப்பெட்டிக்குள் பூமிக்கடியில் சேற்றுக் குட்டை யில் தன் மகள் ஆதரவில்லாமல் கிடப்பது... எந்த சமயத்திலும் அவள் உயிர் போய் விடலாம், என்று கமி ஷனர் சொன்னதைக் கேட்டதும் விஷ்ணுவர்த்தனனுக்கு நினைவு தப்பிவிட்டது மூர்ச்சையானார்.



## 42

சுற்றிலும் காரிருள். சந்தனா கத்துவதை எப்பொ ழுதோ விட்டு விட்டாள். சுற்றிலும் உலகமே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாற்போல இருந்தது.

இதெல்லாம் கனவு இல்லை என்றும் உண்மைதான் என்றும், தான் மரணத்தின் கடைவாயிலில் இருக்கிறோம் என்றும், உனர்ந்து கொள்ள இவ்வளவு நேரமாயிற்று அவளுக்கு.

எழுந்து நடக்க வேண்டுமென்றும், ஓடவேண்டும் என்றும் கண்களைக் கசக்கிக் கொண்டு குதிக்க வேண் டும் என்றும், இதயத்திலிருந்து பொங்கிவந்த எண்ண த்தை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள் அவள். அதெல்லம் பைத்தியம் பிடிப்பதற்கு முதல் அறிகுறி என்று தெரியும் அவளுக்கு அவற்றிற்கு அடிமையாகி விடக் கூடாது! அவள். தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள் வதற்கு அரும்பாடுபட்டாள். ஆழ்ந்து மூச்சு விட்டுக் கொள்வதற்குக் கூட பயந்தாள்.

ஆழ்ந்து மூச்சு விட்டால் அப்பெட்டியிலிருக்கும் காற்று தீர்ந்துவிடுமோ என்னவோ என்ற பயம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, அவள் இருட்டிற்குப் பழக்கப்பட்டுப் போனாள். தனக்குத் தானே தைரியம் சொல்லிக் சொல்லிக்கொண்டாள். இவ்வாறு தைரியம் கொள்ளத் தொடங்கியதும், அவள் மனம் ஒரு நிலைக்கு வரத்தெடங்கிற்று. தலைமாட்டில் இருக்கும் பொருள் என்னவென்று இன்னும் புரியவில்லை. அவள் அதற்காகத் தடவிக் கொண்டே கையைக் கொஞ்சம் ஒரு பக்கமாக நகர்த்தியபொழுது எலெக்ட்ரிக் ஸ்விட்ச்சைப் போன்ற ஒன்று கைக்குத் தட்டுப்பட்டது.

அதை அழுத்தினாள்,

ஆயிரம் நட்சத்திரங்கள் ஒரேசமயத்தில் மின்னினாற் போல ஒரு வெளிச்சம் சவப்பெட்டிக்குள் வந்து சூழ்ந்து கொண்டது.

உண்மையில் எரிந்தது ஒரு ஜீரோ வாட் பல்பு தான் ஆனால் அதுவரை அவ்வளவு இருட்டிற்குப் பழக்கப்பட் டிருந்த அவள் கண்களால், அந்த வெளிச்சத்தைக் கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் அழுத்தமாய்க் கண்களை மூடிக்கொண்டாள். அந்த வெளிச்சம் அவளுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்தது என்றால் அந்த சமயத்திலேயே, தான் அந்தப் பெட்டியிலிருந்து. விடுதலை அடைந்துவிட்டாற்போல இருந்தது. இன்னொரு பக்கத்தில் மின்விசிரி இருந்தது, அதன் ஸ்விட்ச்சு கூட பக்கத்திலேயே இருந்தது, அவள் அதை அழுத்தினாள் குளிர்ந்த காற்று வீசத்தொடங்கிற்று, அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது. அவள் பக்கவாட்டில் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் அவள் கைக்கு இன்னொரு பொருள் தட்டுப்படவே அதை எடுத்துப் பார்த்தாள்.

அது தண்ணீர் பாட்டில்

அவள் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டாள். விளக்கு, ஃபேன், தண்ணீர் போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றால், தன்னைஅவர்கள் கொல்ல வேண்டும் என்று உத்தேசிக்கவில்லை என்பது புரிந்தது. இந்தயோசனை அவளுக்கு தைரியத்தைத் தந்தது. தலை மாட்டுப்பக்கமாய் கையைத் தடவி சாக்லெட்டை எடுத் துக் கொண்டாள். அத்துடன் கூடவே இன்னொரு காகி தமும் இருந்தது.

அது ஒரு கடிதம் என்றுணர்ந்து அவள் படிக்கத் தொடங்கினாள்.



அது உண்மையில் கடிதந்தான் . நடுங்கும் கைகளோடு பிடித்துக் கொண்டாள்.

உன் தலைமாட்டின் பின் பக்கத்தில் ஒரு பாட்டரி இருக்கிறது. விளக்கும், ஃபேனும் அத்துடன் பொருத்தப் பட்டுள்ளன. உன்னிஷ்டப்படி காற்றையும் வெளிச்சத் தையும் அனுபவிக்கலாம். அதே விதமாய் உன் தலைமா ட்டுக் கருகில் கொஞ்சம் ஆகாரம் கூட உள்ளது. ஆனால் ஒரு விஷயம்! பெட்டிக்குள் பொருத்தப்பட்டிருக்கும் பேட் டரி ஆறுமணி நேரந்தான் வேலை செய்யும். அதனால் காற்றையும் வெளிச்சத்தையும் சிக்கனமாய் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, தான் சொல்லத் தேவை யில்லை போலீசார் எங்களிடம் தங்கத்தை ஒப்படைத்து விட்டால் சரி, இல்லாவிட்டால் வி. ஆர். சாரீ ...குட்பை!''

அவள் அக்கடிதத்தையே பார்த்துக்கொண்டு அப்ப டியே உட்கார்ந்திருந்தாள்.

கொஞ்ச நேரங்கழித்து அவள் சட்டென்று நினை விற்கு வந்தவளாய் மின்விசிறியை அணைத்துவிட்டாள். விளக்கை மட்டும் அவளால் அணைக்க முடியவில்லை. மனதிற்குள்ளாகவே தான் இருந்த நிலைமையையும், அந்த சவப்பெட்டியையும் ஊகித்துக்கொள்ளத் தொடங் கினாள் அவள் மனதில் ஒரு தோற்றம் உருவெடுத்துக் கொண்டது.

அவள் மேலும் பத்து நிமிஷம் படுத்துக் கொண்டி ருந்தாள் ஆனால் எவ்வளவு நேரந்தான் அவ்வாறு இருக்க முடியும்? உள்ளே மறுபடியும் ஃபேனை போட்டுக் கொண்டாள்.

இதற்குள் கிட்னாப்பர்கள்? போலீசாரிடம் அவள் விஷயத்தைச் சொல்லிருப்பார்களா? போலீசாரும் அவர் கள் ஒப்படைக்கச் சொன்ன பிரகாரம் தங்க பிஸ்கெட்டு களை எடுத்துக் கொண்டு போயிருப்பார்களா?

யோசனையில் ஆழ்ந்தபடியே அவள் பக்கத்தில் புர ண்டு படுத்தாள்.

அப்பொழுது அவள் கையில் பட்டது மற்றொரு உப கரணம். அவள் அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள். ஒயர்லெஸ் செட்!

முதலில் அதென்னவென்று அவளுக்குப் புரியவில்லை. அவள் என்றுமே ஒயர்லெஸ்ஸைப் பார்த்ததில்லை.

அந்த செட்டின் மீது இன்னொரு கடிதம் இருந்தது. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அதில் விவரமாய் எழுதப்பட்டிருந்தது, கடிதத்தின் கடைசியில் இவ்வாறு இருந்தது—

"இந்த ஒயர்லெஸ்ஸின் உதவியால் வேண்டுமென் றால் நீ உன் வீட்டாரோடு பேசலாம். இது ஒன்வே ட்ராஃபிக்- ஒயர்லெஸ். அதாவது நீ வேண்டுமென்றால் அவங்களோடு பேசலாம். ஆனால் அவங்க உன்னோடு தொடர்பு கொள்ள முடியாது. ஏனென்றால் உன் வேவ் லென்த் அவங்களுக்குத் தெரியாது. கடைசியாய் ஒரு ஆலோசனை— ஒரு ஃபேன் ஒரு மணிநேரம் சுற்றினால் ஆகும் பேட்டரி செலவிற்கும் ஒரு லைட் இரண்டுமணி நேரம் எரிந்தால் ஆகும் செலவிற்கும், கிட்டதட்ட பத்து டங்கு இந்த ஒயர்லெஸ்ஸைப் பயன் பயன்படுத்தினால் செலவாகும். அதனால் சுருக்கமாய் பேசு. ஒரு நிமிஷம் நீ உன் வீட்டாரோடு பேசினால் பத்து நிமிஷம் உன் பேட்டரியின் வாழ்க்கையில் கழிந்து போய் விடும். என் பதை நினைவில் வைத்துக் கொள்—"

அவளுக்கு அதுவே பெரிய வரமாய் இருந்தது.

அந்த நிசப்தத்திலிருந்து மீட்டுத் தன் மனிதர் களோடு பேசுவதற்காகவே தெய்வம் இந்த ஒயர்லெஸ்ஸை அனுப்பியிருப்பதாய்த் தோன்றிற்று அவளுக்கு. கிட்னாப் பர்களின் திட்டத்தில் அது ஒரு மிக முக்கியமான சதித் திட்டம் என்பதை அவள் ஊகித்திருக்கவில்லை.



## 43

கமிஷர் அசுவத்தாமன் தீர்க்காலோசனையில் மூழ் கிவிட்டிருந்தார்.

கிட்னாப்பர்களின் உத்தேசம் அவருக்குப் புரிந்துவிட் டது. எந்த விஷயத்தையும் சொல்லாமல் அவர்கள் மௌனமாய் இருந்தால் தமக்கு டென்ஷன் அதிகரித்து விடும் என்றும், அவர்கள் சொன்ன நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டு தீரவேண்டிய மனநிலை ஏற்பட்டு விடும் என்றும் அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் எந்த விஷயத்தையும் சொல்லாமல் மௌன மாகி விட்டார்கள் என்றும் அவருக்குப் புரிந்தது. அவர் ஹோம் மினிஸ்டரின் செக்ரட்டரியோடு பேசி எல்லா விஷயத்தையும் விவரமாய்ச் சொன்னார். தங்க பிஸ் கெட்டுகள் கிடைத்ததுமே அவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைக்காமல் தம்மிடமே வைத்துக் கொண்டதற்கு அர சாங்கத்தின் நடவடிக்கை எப்படியிருக்குமோ என்று அவர் பயந்தார். ஆனால் இந்த விஷயத்திற்கு ஹோம் மினிஸ் டர் அதிக முக்கியத்துவம் தரவில்லை. அவர் கூட சந்த னாவை எப்படி வெளியேகொண்டுவருவது என்ற விஷயத் திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால் இந்த தங்க விவகாரம் மட்டும் பத்திரிக்கைகளுக்குத் தெரியாம லிருப்பதற்காக ஜாக்கிரதைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். கமிஷனர் அசுவத் தாமன் நேர்மையைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கே பிரச்னை, நம்பிக்கை அவநம்பிக்கையை பற்றி இல்லை. சந்தனாவை அந்த கிட்னாப்பர்களின் பிடியிலிருந்து எப்படி வெளியே கொண்டுவருவது என்பது தான்!

விஷ்ணுவர்த்தனன் மனத்தளவில் மிகச் செல்லமாய் வளர்த்த தன் மகள் எங்கே இருக்கிறாள் என்று தெரியாமல் தவித்துப் போனார்.

இந்த விஷயத்தில் மனத்துணிச்சலோடு இருந்தவர் அசுவத்தாமன்தான். கிட்னாப்பர்கள் தமக்கு வேண்டியது கிடைத்ததும் தாம் கிட்னாப் செய்த நபரைப் பாதுகாப்பான இடத்தில் விட்டுவிட்டுப் போய் விடுவார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ரவிதேஜா கூட அவ்விடத்திலேயே தான் இருந்தான். முதல் முதலாக போன் கால் கமிஷனர் ஆபீசிற்கு வந்ததுமே, கிட்னாப்பர்கள் இனி கமிஷனரோடு தான் தொடர்பு கொள்வார்கள் என்றறிந்து, அவனும் இங்கேயே வந்து சேர்ந்து கொண்டான்.

அந்த நால்வராலும் செய்ய முடிந்தது எதுவுமே இல்லை. கிட்னாப்பரிடமிருந்து வரப்போகும் இன்னொரு போன் காலுக்காக எதிர்பாத்துக் கொண்டிருப்பது ஒன்று தான். அந்தச் சமயத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் பரபரப்புடன் அங்கே வந்து ''சார்'' என்றார்.

கமிஷனர் நிமிர்ந்து பார்த்தார்.

''ஒரு ஒயர்லெஸ் செய்தி.''

''யாருக்கு?''

''அதுதான் தெரியவில்லை. ரொம்பகுழப்பமாய் இருக்கு சார்.''

கமிஷனர் எழுந்து பரபரப்புடன் ஒயர்லெஸ் ரூமிற்குள் போனார். அவர் அதை அட்ஜெஸ்ட் செய்து கொண்டிருக்கையில் எங்கோ கிணற்றிற்குள்ளிருந்து வந்தாற் போன்ற ஒரு குரல் கேட்டது. ''யார், யார் பேசுவது?''

''நான் தான் கமிஷனர் அசுவத்தாமன், யார்?''



''நான் சந்தனா.''

கமிஷனரின் இதயம் ஒரு வினாடி துடிப்பதை நிறுத்தி விட்டுத் திரும்பவும் துடிக்க தொடங்கிற்று. பரபரப்புடன் ''சந்தனாவா?'' என்று கத்திவிட்டார். அவளுக்கு ஒயர்லெஸில் பேசுவதற்குச் சரியாய் தெரியவில்லை. இந்தப் பக்கத்திலிருந்து கமிஷனர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அந்த பக்கத்திலிருந்து அவளும் பேசத்தொடங்கினாள். முதலில் அவளுக்கு அந்த விஷயத்தைக் கற்றுத்தர வேண்டியிருந்தது. கமிஷனர் சொன்னார்--'' நான்பேசிமுடித்ததுமே ''ஓவர்'' என்று சொல்கிறேன். அப்பொழுது நீ ஆன் செய்ய வேண்டும். நீ பேசி முடித்ததுமே ''ஓவர்''என்று சொல்லவேண்டும், அப்பொழுது நான் இங்கே ஆன் செய்ய வேண்டும்.''

சந்தனா, அந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டு ''நான் தான் அங்கிள் சந்தனா ஓவர்..'' என்றாள்.

''எங்கேயிருந்து பேசுகிறாயம்மா? அந்த ஒயர்லெஸ் உனக்கு ஏது?''

''ஒரு சின்ன சவப் பெட்டிக்குள் போட்டு என்னை அடைத்திருக்காங்க. எங்கேயோ தண்ணீருக்குள் போட்டிருக்காங்க. உங்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்காக, இந்த ஒயர்லெஸ்ஸைத் தந்திருக்காங்க. ஆனால் அங்கிள், என்னால், அதிக நேரம் பேச முடியாது. இங்கிருக்கிற பேட்டரி தீர்ந்துவிட்டால் எனக்கு இந்தப் பெட்டிக்குள் காற்றும் வெளிச்சமும் கூட இருக்காது, ஓவர்.''

கமிஷனருக்கு விஷயம் புரிந்தது,

கிட்னாப்பர்கள் தம்மை மேலும் இக்கட்டில் ஆழ்த்துவதற்காக அவளுக்கு ஒரு ஒயர்லெஸ்ஸைக் கூடத் தந்திருக்கிறார்கள், பெட்டிக்குள் வைத்திருக்கிறார்கள் என்றால் அவள் இன்னும் அதிக நேரம் உயிரோடிருக்க

மாட்டாள். அந்த விஷயத்தைத் தாம் தெரிந்து கொள்வதற்காகவே இந்த விதமாய்ச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது அவள் ஒயர்லெஸ்ஸில் தன்னை காப்பாற்ற சொல்லி கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். மனத்தளவில் நம்மை நன்றாய் வீழ்த்திவிட்டார்கள். கிட்னாப்பர்கள் போட்ட இரண்டாவது யுக்தி இது.''

இந்த நிலைமையில் கானுடைய சாமர்த்தியத்தை அவரால் மெச்சாமலிருக்க முடியவில்லை. போலீசார் அவர்களைப் பிடிக்க வலை வீசினால், அங்கே சந்தனாவின் உயிர் போய்விடும். கிட்னாப்பர்களைப் பிடித்து சந்தனா எங்கே இருக்கிறாள் என்று தெரிந்து கொள்வதற்காக தர்ட்டிதிரியைப் பயன்படுத்தத் தொடங்கினால், அவர்கள் ரகசியங்களைச் சொல்லுவதற்குக் குறைந்த பட்பட்சம் நாலைந்து மணி நேரமாவது ஆகும். அதற்குள் அங்கே உயிர் போய்விடுவது உறுதி. ''நோ ட்ரிக்ஸ்... உங்கள் பெண் உங்களுக்கு பத்திரமாய்க் கிடைப்பாள்'' என்று மறைமுகமாய் கிட்னாப்பர்கள் சொல்லுகிறார்கள்.

கமிஷனர் இந்த யோசனையில் இருந்தபோது, விஷ்ணுவர்த்தனன் அங்கே நுழைந்தார். கமிஷனர் அவரிடம் நடந்ததைச் சொன்னார்.

தன் மகள் எங்கேயோ தண்ணீருக்கடியில் இருப்பதாய்த் தெரிந்ததுமே விஷ்ணுவர்த்தனன் சிறு பையனைப் போல புலம்பத் தொடங்கி விட்டார்.

கிட்னாப் செய்த நபரை ஒரு சேற்றுக் குட்டையில் ஒளித்துவைத்து, அந்நபர் மூலமாகவே போலீசாருடன் தொடர்ப்பு கொள்ளும்படியாய் ஏற்பாடு செய்தது, சரித்திரத்தில் இதற்கு முன்னால் ஒருதடவை நடந்திருக்கிறது. ஒரே ஒரு முறைதான். கமிஷனர் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒயர்லெஸ்ஸிற்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். திரும்பவும் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒயர்லெஸ்ஸிலிருந்து செய்தி வந்தது.



''அங்கிள், நான்தான்.''

''உங்கப்பா இங்கே தான் இருக்கிறார் பேசுகிறாயா?''

விஷ்ணுவர்த்தனன் சட்டென்று ஒயர்லெஸ்ஸை முன்னுக்கு இழுத்துக் கொண்டு-- ''நான்தாம்மா, சந்தனா, எப்படி இருக்கிறாய்? எங்கே இருக்கிறாய்? என்ன செய்துட்டுயிருக்கிறாய்?'' என்று கேள்விமாரி பெய்யத் தொடங்கினார்.

மறுமுனையிலிருந்து சந்தனா--'' இங்கே எல்லாம் இருட்டாய் இருக்குப்பா. விளக்கை அணைத்துவிட்டேன். ஃபேனைக் கூட அணைத்துவிட்டேன். எல்லாவற்றையும் பயன்படுத்தினால் பேட்டரி அதிக நேரம் வராது. நான் திரும்பவும் ஒரு மணி நேரங்கழித்து உங்களோடு தொடர்பு கொள்கிறேன்... உயிரோடிருந்தால்--'' என்று சொல்லி விட்டு சுவிட்சை அணைத்துவிட்டாள்.

அசுவத்தாமன் உள்ளங்கைகளை மடக்கிக் கொண்டு ஆத்திரத்துடன் மேஜை மேல் குத்தினார்.

அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒன்வே--ட்ரா--பிக்--ஒயர்லெஸ்ஸாய் இருந்தால் மறுமுனையிலிருந்த நபர் எங்கேயிருந்து பேசுகிறார் என்று தெரிந்து கொள்வது கஷ்டம். ஒருக்கால் தெரிந்து கொள்ள முடிந்தால் அதை இந்த நாலைந்து மணி நேரத்தில் கண்டுபிடிப்பதும் கஷ்டம்.

அவருக்கு நன்றாய்த் தெரியும். எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சந்தனா சவப் பெட்டிக்குள் நாலைந்து மணிநேரத்திற்கு மேல் பிழைத்திருக்க மாட்டாள்.

அந்தச் சமயத்தில் ஒரு ஆள் உள்ளே நுழைந்தான். ''வணக்கம்'' என்றான் கைகளைக் கூப்பியபடி.

கமிஷனர் எரிச்சலுடன், ''என்ன வேணும்?'' என்று கேட்டார்' அந்தச் சமயத்தில் முன் பின் அறிமுகமில்லாத

ஆள் நுழைந்தது கமிஷனருக்கு எரிச்சலை உண்டாக்கியதில் ஆச்சரியமில்லை.

''நான் இந்த தெருக்கோடியில் இருக்கும் மளிகைக் கடை முதலாளி சார்.''

''அதனால்?''

''இப்பொழுதுதான் ஒரு போன் வந்தது. யாரோ உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லச் சொல்லி போன் செய்தார்கள்.''

அசுவத்தாமன் சட்டென்று நாற்காலியை விட்டெழுந்திருந்து-- ''என்ன விஷயம்?'' என்று கேட்டார் உத்வேகத்துடன்.

''போலீஸ் கமிஷனர் ஆபீசுக்கு எதிரே உள்ள போஸ்ட் பாக்ஸிற்குள் ஒரு கடிதம் இருக்கும். அதைப் படிக்கச்சொல்லி கமிஷனரிடம் சொல்லு'' என்றான். எனக்கு முதலில் யாரோ ரௌடி போன் செய்துருப்பான்னு தோணிற்று. ஆனால் இதைச் சொன்னால் நல்லதோ என்னவோ என்றெண்ணி இங்கே வந்தேன்.

''ரொம்பநல்ல காரியம்செய்தாய்'' என்று அவன் தோளைத் தட்டினார் கமிஷனர். அவர் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. மளமளவென்று வெளியே வந்தார். வெளியே இருந்த கமிஷனரின் சிப்பந்தி வியப்போடு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தெருவைக் கடந்து மறுபக்கத்தில்இருந்த போஸ்ட் பாக்ஸிற்கருகில் போனார். போஸ்ட் பாக்ஸின் பூட்டை உடைப்பது சட்டவிரோதமான காரியம் என்று அவருக்குத் தெரியும். ஆனால் அவர் இதையொன்றையும் யோசித்துப் பார்க்கும் நிலையில் இல்லை. சிப்பந்தியிடம் அப்பூட்டை உடைக்கும்படி சொன்னார். சிப்பந்தி உடைத்து அதற்குள்ளிருந்த காகிதத்தை வெளியே எடுத்தார்.

வெள்ளைக் காகிதத்தில் இவ்வாறு சுருக்கமாய் எழுதப்பட்டிருந்தது.



''மாலை ஐந்து மணிக்கு வைகை எக்ஸ்பிரஸ்ஸில் வலதுபக்கம் உட்கார்ந்துகொண்டு ஒருத்தர் புறப்பட வேண்டும். எங்கோ ஓரிடத்தில் புதர்களுக்கிடையே சிவப்புக் கொடி தென்படும். உடனே கம்பார்ட்மென்டிலிருந்து கேசை வெளியே தூக்கி எறிய வேண்டும். அதற்குப் பிறகு அரைமணி நேரத்தில் உங்கள் பெண் எங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதைத் திரும்பவும் சொல்லமுடியும்''--

அவ்வளவே நான்கே வாக்கியங்கள் தான் இருந்தன.

கமிஷனர் அக்காகிதத்தை எடுத்துக்கொண்டு திரும்பி தன் ஆபீசுக்கு வந்தார். வைகை எக்ஸ்பிரெஸ் என்றால் மேலும் மூன்றுமணி நேரங்கள்! அவர் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன. யார் மீது என்றே தெரியாத ஆத்திரம்......

மூன்றுமணி நேரங்கள்! சந்தனா அந்த சவப்பெட்டிக்குள் இருக்க வேண்டும் என்ற யோசனையே அவரைத் தத்தளிக்கச் செய்தது.

இன்னொரு பக்கத்தில் விஷ்ணுவர்த்தனனைத் தேற்றுவது பிரம்ம பிரயத்தனமாய் இருந்தது.

அவர் பி.பி.க்கு சிகிச்சை செய்வதற்காக வந்த டாக்டரிடம் ரகசியமாய் அவருக்கு செடெடின் தரச் சொல்லி ஆலோசனை தந்தார் அசுவத்தாமன். அந்த விதமாய் அவருக்கு இஞ்ஜெக்ஷன் தரப்பட்டது. விஷ்ணுவர்த்தனன் உறக்கத்தில் ஆழ்ந்து போனார்.

அசுவத்தாமன் நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

வாய்க்கு ப்ளாஸ்டர் போட்டு, கைகளைக் கட்டிப் போட்டு, கிட்னாப் செய்த ஆளை அல்லும் பகலுமாய் கவனித்துக்கொண்டு வரும்படி செய்வதும், தேவையில்லாமல் ஒரு பெட்டிக்குள் ஆளைப் போட்டுவிடுவதும், டெலி

போனில் நேரிடையாய்ப் பேசாமல் டேப்ரிகார்டர் மூல மாய் அறிவிப்புக்களைத் தருவதும், போஸ்ட் பாக்ஸிற்குள் கடிதத்தைப் போட்டுவிட்டு எடுத்துக் கொள்ளும்படி சொல்வதும், எல்லாவற்றையும் விட முக்கியமாய் போலீ சாரின் வலையில் சிக்கிக்கொள்ளாமல் ஓடிக்கொண்டிருக் கும் ரயிலிலிருந்து ப்ரீப் கேஸை வெளியே தூக்கி எறியும் படி சொல்வதும்......கான் அவ்வளவு இண்டர்நேஷனல் கள்ளக்கடத்தல்காரனாய் எப்படி ஆனான்? என்று இப் பொழுதுதான் புரியத் தொடங்கிற்று அவருக்கு.

அவர் யோசனையில்ஆழ்ந்திருந்தபொழுதே திரும்பவும் ஒயர்லெஸ்ஸில் சந்தனாவின் குரல் கேட்டது. அவர் சட் டென்று குனிந்து ''ஹலோ'' என்றார்.

''என்னவாச்சு அங்கிள்?''

''ஆயிடுத்தும்மா! இன்னும் மூன்றுமணி நேரந்தான்! கிட்னாப்பர்கள் தம்மிடம் தங்கத்தை எப்படி ஒப்படைப் பது என்று சொல்லிட்டாங்க. ஆறு மணிக்கு அவங்களிடம் தங்கம் ஒப்படைக்கப்பட்டுவிடும். அதற்குபிறகு அரை மணி நேரத்தில் நீ எங்கே இருக்கிறாய் என்று எங்களுக்குச் சொல்லுவதாய்ச் சொன்னாங்க.''

''இன்னும் மூன்று மணி நேரமா!'' என்றாள் சந்தனா. அவள் குரலில் விம்மல் ...அவள் தன் டென்ஷனை வெளிக் காட்டிக்கொள்ளாமலிருக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந் தது நன்றாய்ப் புரிந்தது.

''நீ எதற்கும் வருத்தப்படாதேம்மா. இப்படிப்பட்ட நிலைமையில் தைரியமாய் இருக்க வேண்டியது முக்கியம். சரியாய் மூன்றுமணி நேரம் ஃபேனையும் விளக்கையும் போட்டுக்கொண்டு உள்ளேயே இரு. நாங்கள் வந்து விடு வோம். ''தைரியம் சொன்னார் அசுவத்தாமன். மறு முனையிலிருந்து எந்தப்பதிலும் கேட்க வில்லை. ''ஹலோ... ஹலோ...'' என்றார். சந்தனா அதற்குமுன்பே ஒயர்



லெஸ்ஸை அணைத்து விட்டாள் என்று புரிந்தது. அப்படி அணைத்ததற்குக் காரணம் கூட அசுவத்தாமனுக்குத் தெரி யும்.

பேட்டரியை இன்னும் மூன்று மணி நேரம் செலவழிக் காமல் சிக்கனமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஒயர்லெஸ்ஸைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்!

அப்படிப்பட்ட நிலைமையில்கூட அவரால் அவளை மனதிற்குள்ளேயே பாராட்டாமலிருக்க முடியவில்லை. சந்தனா ஃபேனை அணைத்தாள்.

பெட்டிக்குள் உஷ்ணமாய் இருந்தாற்போல தோன் றிற்று. அவளுக்கு ஆச்சரியமாய்க்கூட இருந்தது. சுற்றி லும் நீர், நடுவே பெட்டி இருந்தபோதிலும்கூட, உள்ளே இவ்வளவு உஷ்ணமாய் இருப்பது......

கமிஷனர் சொன்ன கணக்குப்படி பார்த்தால் இன் னும் மூன்று மணி நேரம்...அதற்குபிறகு இன்னுமொரு மணி நேரம் அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரிந்து கொள் வதற்குப் பிடிக்கும். மொத்தம் நான்குமணி நேரம் ..அதா வது இருநூற்றி நாற்பது நிமிஷங்கள்...அதாவது பதினாலா யிரத்து நானூறு வினாடிகள்.

அவள் கணக்கிடத் தொடங்கினாள்.

ஒன்று...இரண்டு...மூன்று...நான்கு...ஐந்து... ஒவ்வொரு எண்ணிற்கும் ஒவ்வொரு வினாடி பிடிக்கும் என்றெண்ணிக் கொண்டு, அவள் நேரத்தைக் கணக்கிடத் தொடங் கினாள்.

பத்தாயிரம்...பத்தாயிரத்து ஒன்று...இரண்டு...மூன்று. நேரம் நெருங்க நெருங்க அவளுள் நிம்மதி பிறக்கத்தொடங் கிற்று. ஏறக்குறைய தான் வெளியேறக்கூடிய நேரம் வந்து விட்டது என்ற உணர்ச்சி அவளுக்குத் தெம்பைத் தரத் தொடங்கிற்று. அதோடு கூட இவ்வாறு எண்ணுவதன் மூலமாய் நேரம் சரியாய்த் தெரியும்; பொழுதும் போகும்.

பதினாலாயிரத்து முன்னூற்று எண்பது...தொண்ணூறு பதினாலாயிரத்து நானூறு—

அவள் கணக்கிடுவதை நிறுத்தினாள். சரியாய் நான்கு மணி நேரம் கழிந்து விட்டது என்று உறுதியாய்த் தெரிந்து கொண்டபிறகு, அவள் தொலைவிலிருந்து கேட்கப்போகும் காலடிச் சப்தத்திற்காக மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டாள்.

ஹெலூஸினேஷனைத் தவிர வேறொன்றும் இல்லை.

நான்கு மணிநேரம் கழிந்திருக்காதோ என்னவோ? அல்லது ஆறுமணி கூட ஆகியிருக்கலாம். வெளியேயிருந்து எந்தச்சப்தமும் கேட்கவில்லை.

வெளி சப்தம் எதுவுமே உள்ளே கேட்காது என்பது அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

பெட்டியை யாராவது அசைப்பார்களோ என்றெண்ணி அவள் ஜாக்கிரதையாய் அசையாமல் படுத்துக் கொண்டிருந்தாள்.

அப்படிப்பட்டது எதுவும் நடக்கவில்லை. தான் தப்புக் கணக்குப் போட்டு விட்டோமோ என்றெண்ணினாள். திரும்பவும் பன்னிரண்டாயிரத்திலிருந்து கணக்கிடத் தொடங்கினாள்.

ஏறக்குறைய மேலும் ஒரு மணி நேரம். வெளியே எந்தச் சந்தடியும் இல்லை. அப்பொழுதுதான் அவளுக்கு அந்தச் சந்தேகம் வந்தது—தான் மரணத்திற்கு அண்மையில் இருப்பதாய்.

அதற்குள் அவள் சவப்பெட்டிக்குள் அடைத்துப்போடப்பட்டு எட்டுமணி நேரம் ஆகியிருந்தது.

## 44

வைகை எக்ஸ்பிரஸ் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இஞ்ஜினிலிருந்து மூன்றாவது கம்பார்ட்மென்



டில் வலதுபக்கமாய் உட்கார்ந்திருந்தான் ரவிதேஜா. அவனுக்குப் பக்கத்திலேயே இரண்டு ப்ரீப்கேசுகள் இருந்தன. முதல்வகுப்பு கம்பார்ட்மென்ட் கூபேஅது. அதில் அவனைத் தவிர வேறு யாருமே இல்லை.

போலீஸ் பாதுகாப்புக் கூட இல்லை கிட்னாப்பர்களைச் சிறைப் பிடிப்பதற்கு எந்த விதமான ரிஸ்க்கையும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை போலீஸ் அதிகாரிகள்.

அது அசாத்தியமானது கூட.

எந்த பாயிண்ட்டிற்கருகில் சிவப்புக்கொடி தென்படுமோ, எங்கே ப்ரீப்கேசுகளை வீசியெறிய வேண்டுமோ... அந்த பாயின்ட்டிற்கருகில் போலீசுகளை நியமிப்பது அசாத்தியம். ட்ராக் முழுவதிலும் போலீசாரை நிற்க வைப்பது கூட சாத்தியக்கூறு இல்லை; அதனால் அப்படிப்பட்ட திட்டங்கள் ஒன்றையும் செய்யவில்லை.

ஓடும் ரயிலிலிருந்து ப்ரீப்கேசுகளை வீசியெறிந்து விட்ட பிறகு, எவ்வளவு நேரங்கழித்து கிட்னாப்பர் அங்கே வந்து அவற்றை எடுத்துக்கொள்வான் என்று தெரிந்து கொள்வது கூடக்கஷ்டமே. ஒருக்கால் அச்சுற்றுப்புற எல்லையிலேயே ஒளிந்து கொண்டிருந்து, அந்த ப்ரீப்கேசுகளை எடுத்துக்கொண்டு, உடனே போய்விட்டாலும் அவனைப் பிடித்துக் கொள்வது கஷ்டம்.

இதையெல்லாம் வாதாடிப் பார்த்தபின்னர், போலீஸ் அதிகாரிகள், கிட்னாப்பர்கள் சொன்னபடியே செய்வதற்கு முடிவெடுத்துக் கொண்டார்கள். அதன் விளைவுதான் இந்தப் பிரயாணம்.

ரயில் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. ரவிதேஜா ஜன்னல் வழியாய் கண்கொட்டாமல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலும் அரைமணி கழிந்தது. மெல்ல மெல்ல இருட்டத் தொடங்கிற்று.

கமிஷனர் ஆபீசில் அசுவத்தாமன் டென்ஷனோடு ஓயா
லெஸ்ஸையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.
வெகு நேரமாய் சந்தனா ஓயர்லெஸ்ஸில் பேசாமல்
போனதே அந்த டென்ஷனுக்குக் காரணம். அவளுக்கு
என்னவாயிற்றோ, என்ற யோசனை அவரை அலைக்
கழித்துக்கொண்டிருந்தது. விஷ்ணுவர்த்தனன் இன்னும்
மயக்கத்திலேயே இருந்தார்.

ப்ரீப் கேசுகளை வீசியெறிந்ததுமே, அதற்கடுத்த
ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து திரும்பி வருவதற்கு
ரவிதேஜாவுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.
ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஒரு போலீஸ் வாகனம் அவனுக்
காகத் தயாராய் இருந்தது.

இருட்டத் தொடங்கியதுமே அசுவத்தாமனின் டென்
ஷன் மேலும் அதிகமாயிற்று. இருட்டில் அந்த சிவப்புக்
கொடி கண்ணிற்குத் தெரியாவிட்டால் ப்ரீப்கேசுகளை
வீசியெறிய வேண்டிய அவகாசமே ஏற்படாது.

ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக்கொண்டிருந்த
ரவிதேஜா திடீரென்று விழிப்படைந்தான். தொலைவில்
வயலில் ஒரு கொடி தென்பட்டது. ரயில் அதை
நெருங்க நெருங்க அது இன்னும் தெளிவாய்த் தெரிந்தது.
ரயில்வே ட்ராக்கிற்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் வயல்களுக்
கிடையே நடப்பட்டிருந்தது சிவப்புக்கொடி.

ரயில் அதை நெருங்கிய போது இரு கைகளாலும் ப்ரீப்
கேசுகளைத் தூக்கி வெளியேவீசியெறிந்தான். அதற்கடுத்த
ஸ்டேஷனில் இறங்கி வாகனத்தில் ஏறி, வேகமாய்
ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான்.

கிட்னாப்பர்களிடமிருந்து இன்னும் செய்தி வர
வில்லை. அதற்குக் கொஞ்ச நேரமாகலாம் என்று அங்
கிருந்த போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியும். ஏனெனில்
போன தடவை ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைப் பெற்றுக்
கொண்ட அனுபவத்தால் இம்முறை, கிட்னாப்பர்கள்



வைகளைப் பரிசோதித்துப் பார்த்த பிறகுதான் சந்தனா
ருக்குமிடத்தைப் பற்றிச் சொல்லுவார்கள்.

இதெல்லாம் நடக்க இன்னும் அரைமணியாகலாம்.
ல்லோரும் அந்தப் போன் காலை எதிர்பார்த்து காத்துக்
கொண்டிருந்தார்கள்.

...அரை மணி கழிந்தது.

...ஒரு மணி கழிந்தது.

போன் வரவில்லை.

## 45

ரயில் போனதுமே ட்ராக்கிற்குப் பக்கத்தில் நின்று
கொண்டிருந்த கங்கய்யன் பச்சைக்கொடியை மடித்துக்
கையில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

கங்கய்யனுக்கு ஐம்பத்தைந்து வயது. சுமார் முப்பது
ஆண்டுகளாய் ரயில்வே இலாக்காவில் வேலை பார்த்துக்
கொண்டிருக்கிறான். திருமணமாக வேண்டிய இரண்டு
பெண்கள் இருந்தார்கள். இன்னும் சில ஆண்டுகளில் அவன்
ரிடயராகவிருந்தான். அன்றைக்கு வைகை எக்ஸ்பிரெஸ்
பத்து நிமிஷம் லேட்டாகி விட்டது. வானத்தில் மேகக்
கூட்டங்கள் அதிகமாயிருந்தது. எந்த நிமிஷத்திலும்
பெருத்த மழை பெய்யலாம் போலிருந்தது.

ரயில்வே ட்ராக்கையே பார்த்துக்கொண்டு நடந்து
கொண்டிருந்த கங்கய்யனுக்குபாலத்தின் கட்டைக்குக் கீழே
ஏதோ கருப்பாய் மினுமினுத்துக்கொண்டிருந்தது கண்ணில்
பட்டது. முதலில் ஏதாவது ஜல்லிக்கல்லாய் இருக்கும்
என்றெண்ணினான். கிட்டேபோய் பார்த்தபொழுது
அது ப்ரீப்கேசு.

அவனுக்கு உடனே சந்தேகம் தோன்றியது. யாராவது
நக்ஸலைட்டுகள் ரயில்வே பாலத்தைத் தகர்த்தெறிவதற்

காக பொருத்தியிருந்த வெடிகுண்டாயிருக்கும் என்பது தான். மேலும் கிட்டே போய் பார்த்தபொழுது ப்ரீப் கேசு தென்பட்டது. அதற்குக் கொஞ்சம் தூரத்தில் புத ரில் இன்னொரு ப்ரீப்கேசும் இருந்தது.

உடனே அவற்றைக் கையால் தொடாமல் தொலை வில் நின்று பரிசோதித்தான். அச்சுற்றுவட்டாரத்தில் கூட கொஞ்ச நேரம் தேடிப் பார்த்தான். இரண்டு ப்ரீப்கேசு களைத் தவிர வேறெதுவுமே கிடைக்கவில்லை. அவன் ஒரு வினாடி தடுமாறிவிட்டு, அவைகளுக்கருகில் போய், கையில் எடுத்துக்கொண்டான்.

இரண்டும் மிக பளுவாய் இருந்தன. அவைகளைத் திறந்து பார்க்கலாமா என்றெண்ணினான். ஆனால் அப் படி சீலைத் திறந்ததுமே வெடித்து விடும்படியாய்பொருத்தி யிருப்பார்களோ, என்ற பயம் மனதின் ஒரு மூலையில் தோன்றிற்று.

சாதாரணமாய் ரயிலிலிருந்து ப்ரீப்கேசுகளோ, பெட்டி களோ நழுவி வெளியில் விழாது. பஸ்ஸுகளின் மேல் பாகத்தில் வைக்கப்படும் சாமான்கள் அவ்வாறு விழுவது அவ்வப்பொழுது சகஜமே. ஆனால், ரயிலில் அந்த அவ காசமே இல்லை. அவனுடைய முப்பது வருட சர்வீஸில் இதுதான் முதல் தடவை. ரயில்வே பாலத்தின் மீது உட் கார்ந்து கொண்டு அவன் அந்த பிரீப்கேஸைத் திறப்பதற்கு முயன்றான். ஆனால் இரண்டு ப்ரீப்கேசுகளுமே பூட்டப் பட்டிருந்தன.

அவன் அவைகளை உடைத்தெறிய முயற்சி எதுவும் பண்ணவில்லை. இரு கைகளிலுமாய் அவைகளை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான்.

ரயில்வே பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் அதே ஸ்டேஷ னில் இருந்தார். கங்கய்யன் அவரிடம் போய் பாலத்தின் கருகில் கிடைத்த அவ்விரண்டு ப்ரீப்கேசுகளைப் பற்றிச் சொன்னான்.



இன்ஸ்பெக்டருக்குக் கூட கங்கய்யனுக்கு வந்த சந் தேகமே வந்தது. ஆனால் ரிஸ்க் எடுத்துக் கொள்ளத் துணிந்தார். ஏனோ அவருக்கு அந்த ப்ரீப்கேசுகளைப் பார்த்தபொழுது அவற்றில் ஆர்.டி.எக்ஸ். போன்ற வெடி சாதனங்கள் இருக்கும் என்று தோன்றவில்லை. ஒரு ப்ரீப்கேசை உடைத்தார்.

கங்கய்யன், மேலும் சில ரயில்வே ஊழியர்கள், பாது காப்புப் படையினர் .....எல்லோரும் பார்த்துக்கொண்டிருக் கையில் அவர் ப்ரீப்கேஸைத் திறந்தார்.

திடீரென்று அவ்விடத்தில் சலசலப்பு தோன்றிற்று. அவருக்குத் தான் பார்த்துக் கொண்டிருப்பது கனவா, நினைவா என்று புரியவில்லை. இவ்வளவு தங்கத்தை யாருமே தம் வாழ்நாளில் பார்த்திருக்க முடியாது. அறை முழுவதும் குசுகுசுக்களாலும், வியாக்கியானங்களாலும். நிரம்பி வழியத் தொடங்கிற்று. எல்லோரிடமும் பரபரப்பு

கங்கய்யன் மட்டும் நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண் டான். அதே ப்ரீப்கேசுகளைக் கிடைத்த இடத்திலேயே திறந்திருந்தால்; அவ்வளவு தங்கங்களைப் பார்த்துவிட்டு, தன் மனது கண்டிப்பாய்ச் சிதறிப் போயிருக்கும் திருமண மாகவேண்டிய மகள்கள் நினைவிற்கு வந்தார்கள். அத் தங்கங்களை விற்றால் எஞ்சிய வாழ்நாளெல்லாம் நிம்மதி யாய்க் கழிந்துபோகும். ஆனால் முப்பது வருடத்து நேர்மை, குப்பையில் போய்ச் சேர்ந்திருக்கும். தனக்கு அந்த நிலைமை ஏற்படாமல் போனதற்கு மனதிற் குள்ளேயே தெய்வத்திற்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

ரயில்வே பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் கங்கய்யனிடம் வந்து, பாராட்டுவது போல தோளில் தட்டிவிட்டு— ''உன்னைப் போன்ற நேர்மையாளர்கள் இந்தக்காலத்தில் ரொம்பக் குறைவு கங்கையா! உன் பெயருக்கு நல்ல பரிசு கொடுக்கும்படியாய் சிபாரிசு செய்கிறேன்' என்றார்.

கங்கையன் கைகூப்பி வணங்கினான்.

ரயில்வே பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் அந்த ப்ரீப் கேசுகளை சீல்பண்ணி ரயில்வே ஸ்டேஷன் லாக்கருக்குள் வைத்தார். அதற்குப் பிறகு ரயிலில் அவைகளை செக்யூரிட்டரி கார்டுகளோடு பாதுகாப்பாய் சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்தார். ரயில்வே ப்ரொடக்ஷன்ஃபோர்ஸ்ஆர்.பி.எப்மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த பிரிவு. அதற்கும் மாநில அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. அவ்வப்பொழுது ரயில்வே போலீசாரோடு சேர்ந்து கேசுகளை நடத்தினாலும், அதிகமாய் அது சுதந்திர இலாக்காவாகவே இயங்கி வரும். அதனால் ரயில்வே பாலத்திற்கருகில் கிடைத்த ப்ரீப்கேசுகளை அந்த ஊர் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்காமல் தன் இலாக்கா மூலமாய் அதைப் பற்றி ஆராய வேண்டும் என்று அவர் நினைத்ததில் தப்பில்லல.

இன்ஸ்பெக்டர் அசுவத்தாமன் மட்டும் அந்த ப்ரீப் கேசுகளை கிட்னாப்பர்கள் எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள் என்றும், தனக்கு போன் வரும்என்றும் நினைத்துக் கொண்டு டெலிபோனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்...

எட்டுமணி ஆயிற்று.

போன் வரவில்லை.

ஃ ஃ ஃ

அவள் கணக்கிடுவதை விட்டுவிட்டாள்.

அவள் சவப்பெட்டிக்குள் அடைக்கப்பட்டு ஆறு ஏழு மணி நேரங்களுக்கு மேல் ஆகிவிட்டதென்று அவளுக்கு நன்றாய்த் தெரிந்தது ஆனாலும் அவளைக் காப்பாற்றுவதற்கு யாருமே வரவில்லை என்றால், ஒருக்கால் தங்கத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை போலும்! அல்லது தங்கத்தை எடுத்துக் கொண்டு அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரிவிக்காமலேயே கிட்னாப்பர்கள் மாயமாகி விட்டிருக்கலாம்.



அவளுக்கு இம்முறை பயம் ஏற்படவில்லை. தன் மரணத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினாள். இம்முறை அவள் தனக்குள் சந்தோஷமாய் இருப்பதற்கு முயற்சித்தாள். லேசாய் பாட்டுப்பாடத் தொடங்கினாள்—"ரகுபதி ராகவ ராஜாராம்... பதீதபாவன சீதாராம்......"

ஒரு நிமிஷம் பாடிவிட்டு அவள் நிறுத்தி விட்டாள். தலைமாட்டில் தடவிப் பார்த்தாள். ரொட்டியின் சிறு துண்டு எஞ்சியிருந்தது. அதைத் தின்று தண்ணீர் பாட்டிலை வாயிற்கருகில் கொண்டு போனாள். மல்லாந்து படுத்துக்கொண்டு தண்ணீர்க் குடிக்கக் கஷ்டமாயிருந்தது. வேறுவழியில்லை.

அவள் தண்ணீரைக் குடித்துவிட்டு, மூடி வைத்தாள் பாட்டிலை. உண்மையில் அவளுக்குப் பசி இல்லை. ஏதாவது ஒரு வேலையைச் செய்யாவிட்டால் அவளுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. உரக்கக் கத்திப் பாடவேண்டும் போலிருந்தது. கொஞ்சநேரம் கால்களால் பெட்டியின்மீது லயப்படி தாளம் போட்டாள்.

தான் 'இன்சேனி'டியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது புரிந்தது. ஆனால், அவளால் அதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. தனக்கு வரப்போகும் வியாதியின் பெயர் அவளுக்குத் தெரியும்.

'க்ளஸ்த்ரோஃபோபியா'.

இடுக்கான இடங்களிலும், சின்னச் சின்ன லிஃப்டுகளிலும் இருப்பதற்கு பயப்படும் நபர்களுக்குள்ள வியாதியை 'க்ளஸ்த்ரோஃபோபியா' என்பார்கள். இருட்டில் நன்றாய் இழுத்துப் போர்த்திக்கொண்டு படுப்பதற்குக் கூடி இந்த நபர்கள் பயப்படுவார்கள்.

இந்த ஃபோபியாவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி...?

அவள் அந்த விதமாய் யோசித்துக் கொண்டிருக்கையில் நெற்றியில் வியர்த்துக் கொட்டிற்று.

முதலில் அவளுக்குப் புரியவில்லை. வியர்வை போலும் என்றெண்ணினாள். ஆனால் தடவிப் பார்த்தபொழுது அது தண்ணீர்த்துளி! அவள் இதயம் ஒரு வினாடி நின்று விட்டது.

அவள் கலக்கத்தோடு பெட்டியின் மேல்பாகத்தைத் தடவிப்பார்த்தாள். அங்கே ஈரமாயிருந்தது. அதாவது நீர் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

கலவரத்துடன் அவள் சுவிட்சைப் போட்டாள். ஜீரோ வாட் பல்பு ஒரு வினாடி பளிச்சிட்டு விட்டு—லேசாய் புகை வந்து-அணைந்து போய்விட்டது. அவள் உள்ளங்கையை மடக்கிக்கொண்டு பெட்டியை ஓங்கி குத்திக்கொண்டே ''நோ...''—என்றும் ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றும் கத்தத் தொடங்கினாள்.

தன் கத்தல் யார் காதிலும் விழாத அளவிற்கு ஒரு குகைக்குள் இருக்கிறோம் என்பதைக்கூட மறந்து போய், அவள் ஹிஸ்டீரிக்காய் கத்தத் தொடங்கினாள்.

பேட்டரி தீர்ந்து போய் விட்டது என்பது அவளைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்தது.

## 46

போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பிற்குள் சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான் மகரிஷி. முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் அவன்.

அவன் மனம் இப்பொழுது சலனமில்லாமல் இருந்தது. எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை அவன்.

அவன் போலீஸ் ஸ்டேஷனில்சரண்டர் ஆனபிறகு திரும்பவும் ஜெயிலுக்கு அனுப்பும் ஏற்பாடுகள் நடைபெற வில்லை. முதலில் அவனை மேஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் ஆஜராக்கி ''ஜெயில் பிரேக்'' கேஸின் கீழ் திரும்பவும் விசா



தெரியாது. இதையெல்லாம் முன்பே யோசித்தோம் நாம்! ஆனால் இப்பொழுது அவன் சந்தனாவின் கணவன்! அவனுக்கு மான நஷ்டத்தை உண்டாக்கும் படியான காரியம் எதையும் என்னால் செய்ய முடியாது.'' உறுதியாய்ச் சொன்னான் மகரிஷி.

வர்மா எரிச்சலோடு அவனைப்பார்த்தான். ''நீ சென்ட்டிமெண்ட்டைப் பிடித்துக் கொண்டு தொங்காதே. கடைசியாய் சந்தனாவுக்குக் கூட அவள் கணவன் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை. எல்லா விஷயங்களையும் நாங்களும் கூட வாதாடிக் கொண்டோம்.''

''ஒருக்கால் நீங்கள் இதையெல்லாம் செய்தால் கூட அதன் மூலமாய் எந்த பிரயோஜனமும் இல்லைன்னு உங்களுக்குத் தெரியுமா?'' கடுமையாய்க் கேட்டான் மகரிஷி.

''தெரியும். பலன் இருக்காதுன்னு உணர்ந்துகொண்டு, எந்தக்காரியத்தையும் செய்யாமலிருப்பது கூட நல்லதல்ல. நம் முயற்சியை நாம் செய்வோம்.''

''என்ன பண்ணுவாய்?''

''உண்ணாவிரதம் இருப்பேன்!''

''என்னது?''

''ஆமாம் எந்த விதத்திலாவது இதெல்லாம் பேப்பர் களில் வரணும். ரவிதேஜா தொந்தரவிற்குள்ளாகணும். ரவிதேஜாவின் ஆபீசிற்கு முன்னாடியும், வீட்டிற்கு முன் னாலும், டென்ட் போடுவேன் எல்லா விஷயத்தையும் பேப்பர்களில் போடச் செய்வேன். மானம் போனபிறகு ரவிதேஜா கீழே இறங்கி வந்தே தீருவான். அப்பொழுதாவது மாறுகிறானா என்று பார்ப்போம்.''

''மாறமாட்டான். இதெல்லாம் நாமிருவரும் சேர்ந்து செய்கிற விவகாரம் என்பான். அதுமட்டுமில்லை. தன் மனைவிக்கு நான் காதலன் என்று கூட பேப்பர்களில் வெளியிடுவான். இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி நீ

யோசித்துப் பார்த்தாயா? சந்தனாவின் வாழ்க்கை ஒரே யடியாய் நிர்மூலமாகி விடும். சமூகத்தில் எங்கே போனாலும் அவளை விரல் சுட்டிக் காட்டுவார்கள்.

இதையெல்லாம் நான் நடக்க விடமாட்டேன் என் உடலில் உயிருள்ளவரை நடக்க விடமாட்டேன்-- ஆவேச மாய்ச் சொன்னான் மகரிஷி.

வர்மா அவனை இரக்கம் ததும்பப் பார்த்தான். ''நடந்தே தீரும் மகரிஷி. நானும் சந்தனாவும் இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டோம். எது என்னவானாலும் நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வோம். உன் ஒத்துழைப்பு இருந்தாலும் சரி இல்லா விட்டாலும் சரி,'' இந்த விஷயத்தைச் சொல்வதற்காகத் தான் வந்தேன் என்று செல்லி விட்டு, அங்கிருந்து நகர்ந்தான் வர்மா.

"வர்மா...ப்லீஸ்! நான் சொல்றதைக் கேள்" என்று கத்தினாலும் கூட, வர்மா காதில் போட்டுக் கொள்ளா மல் அங்கிருந்து வெளியே வந்தான்.

மகரிஷி சிலையாய் நின்றுவிட்டான். அவன் உள்ளம் மௌனமாய் விம்மிக் கொண்டிருந்தது. ஆவே சத்தோடு அவ்விருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்டிருக் கும் இந்த முடிவு, எதில் கொண்டுபோய் விடப்போகி றதோ என்று கலங்கிப் போனான். நடக்கப் போவது எதுவும் இல்லை-தனக்கு தூக்குத்தன்டனை விதிக்கப் பட்டுவிடும் உண்ணாவிரதங்களையும், பேப்பர்களில் வரும் செய்திகளையும் கோர்ட் பொருட்படுத்தாது. தனக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு இந்த உலகத்தை விட்டு போன பிறகு, எஞ்சியிருப்பவள் சந்தனா மட்டுமே. அதற் குள் நடக்கவேண்டிய அநியாயமெல்லாம் நடந்தேறி விடும். அவ்விருவரும் சேர்ந்து ஆவேசத்தில் எடுத்துக் கொண்ட முடிவின் விளைவுகளை, பிற்பாடு சந்தனா வாழ்நாள் முழுவதும் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டும்



அவன் வந்து தன் பழைய இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

அவன் ஒரு தடவை சந்தனாவைச் சந்தித்துத் தீர வேண்டும். சந்தித்தால் அவள் மனதை மாற்றலாம். ஆனால் எப்படி?

மகரிஷி இவ்வாறு யோசித்துக் குழம்பிக் கொண்டிருக் கையில், போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்த வர்மா, வீட்டைநோக்கி நடக்கத் தொடங்கினான். அவன் மனமெல்லாம் உணர்ச்சி வசத்தோடு இருந்தது. அவனுக்கு ஏனோ இந்த விதமாய்ச்செய்வதன் மூலமாக, மகரிஷியைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றி விட முடியும்'—என்ற நம்பிக்கை இருந்தது. எந்த மனிதனாயிருந்தாலும் ஏதோ ஒரு இடத்தில் மானசீகமாய் 'ப்ரேக்' ஆகிவிடுவான்.

ரவிதேஜாவை அந்த விதமாய் 'பிரேக்' ஆக்க முடிந் தால் போதும். ''நீ கோர்ட்டில் சொல்கிறாயா? அல் லது நான் உன் மானத்தைக் கப்பலேற்றி விடட்டுமா?''- என்று, தான் பேரம் பேசினால் அதில் லாஜிக்இருந்தாலும், இல்லாமல் போனாலும், ரவிதேஜாவிடம் பயம் ஏற்படும்.

அந்த பயம் போதும்...கொஞ்சம் அவகாசம் இருந் தாலும் போதும், ரவிதேஜா கோர்ட்டுக்கு வருவதற்கு ஒப்புக் கொண்டுவிடுவான். சந்தனா மரணத்தின் கடை வாயிலில் இருக்கிறாள் என்றும், தான் செய்கிற முயற்சி கள் எதற்கும் பயன்படாது என்றும் தெரியாத வர்மா பப்ளிக் போனுக்கருகில் போனான். நம்பரை டயல் பண்ணிவிட்டு-''ஹலோ'' என்றான்.

மறு முனையிலிருந்து-''எஸ்...ரவிதேஜா ஸ்பீகிங்'' குரல் கேட்டதுமே-''நான் தான் வர்மா''-என்றான்.

மறுமுனையிலிருந்து எரிச்சலுடன் -''வர்மாவா... வர்மா யார்?'' என்று கேட்டான்.

''மகரிஷியின் நண்பன்.''

மகரிஷியைப் பற்றிய பேச்சுவந்ததுமே ரவிதேஜாவிடம் பரபரப்பு ஏற்பட்டபோதிலும், அதை மூடி மறைத்துக் கொண்டு—

''இப்ப நான் எதுவும் பேசுகிற நிலையில் இல்லை. எனக்கு நிறைய அர்ஜென்ட் வேலைகள் உள்ளன''—என்று போனை வைத்துவிடப் போனான்.

''நான் சொல்வதைக் கேட்டால் இத்தனை சுலபமாய் போனை வைத்துவிட மாட்டீங்க.''-மெதுவாய்ச் சொன்னான் வர்மா.

''வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்?''

''தி நான்சென்ஸ் பை நேம்--ஸ்ரீவாணி.''

''வாட்?''

அப்பொழுது வர்மா தான் அமுலாக்க உத்தேசித்திருக்கும் காரியத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான்.

## 47

கமிஷனர் அசுவத்தாமன் கடுகடுப்புடன் நடைபயின்று கொண்டிருந்தார். அவ்வறையிலிருந்த போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

கிட்னாப்பரிடமிருந்து போன் கால் வரவில்லை. அங்கே சந்தனா உயிரோடு இருக்கிறாளா இல்லையா என்று தெரியாது.

''டாமிட்! அசுவத்தாமன் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, தனக்குள் பேசிக்கொள்வது போல ''அவங்க கேட்டபடியே தங்கத்தை ஒப்படைத்தோம். இன்னும் ஏன் நமக்கு போன் பண்ணவில்லைங்கிறேன்? அங்கே அந்தப் பெண்ணின் நிலைமையைக் கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாங்களா? அவங்க மனுஷங்கதானா? ராட்சசர்களா?'' என்றார்.



யாரும் பதில் பேசவில்லை.

கமிஷனர் ரவிதேஜாவைப் பார்த்து ''அவங்க கேட்டுக் கொண்டபடியே தானே ப்ரீப்கேசுகளை வீசியெறிந்தாய்?'' என்றார்.

''எஸ் சார்'' என்றான் ரவிதேஜா.

''பின்னே? அது அவங்களுக்குக் கிடைக்கவில்லையா? அல்லது எடுத்துக் கொள்வதற்குத் தாமதமாயிற்றா? அது நிஜத் தங்கங்கள்தானா இல்லையான்னு தெரிந்து கொள்வதற்கு இவ்வளவு நேரமாகிறதா?''

அவர் வார்த்தைகள் முடிவடைவதற்குள்ளாகவே, இன்ஸ்பெக்டர் கிரண் உள்ளே வந்தார். அவர் முகத்தில் பயம், பீதி...நன்றாய்த்தெரிந்தன. ''சார்...''—என்றார் சங்கடத்துடன்.

அசுவத்தாமன் அவர் பக்கமாய்த் திரும்பினார்.

''இப்பத்தான் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு நியூஸ் வந்தது சார். ரயில்வே பாலத்திற்கருகில் விழுந்துகிடந்த ப்ரீப் கேசுகளை லைன்மேன் ஸ்டேஷனில்ஒப்படைத்தாராம். அவைதற்சமயம் ரயில்வே ப்ரொடக்ஷன் ஃபோர்ஸின் பாதுகாப்பில் இருக்கிறதாம்.'' அவர் சொன்னதைக் கேட்டு ஆபீசர்கள் எல்லோரும் முகம் வெளுக்க, ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

எதிர்ப்பாராத இந்த விளைவிற்கு ஆத்திரமடைந்தவராய்' அசுவத்தாமன் உள்ளங்கையை மடக்கி மேஜை மேல் ஓங்கிக் குத்தி—''நான்சென்ஸ்...இதெப்படி நடந்தது? எப்படி நடக்கும்ங்கிறேன்''—என்றார் நாற்காலியை விட்டு எழுந்திருந்து.

யாருமே பேசவில்லை. எல்லோர் முகங்களிலும் ஒரே கேள்வி. ''என்ன செய்வது? இப்பொழுது என்ன பண்ணுவது?''—

அசுவத்தாமன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றார்.

நினைத்தபடி கிட்னாப்பர்கள் அங்கே வந்து பார்த்திருப்பார்கள். ப்ரீப்கேசுகள் இல்லாததைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போயிருப்பார்கள். அப்படியென்றால்... சந்தனா இன்னும் அந்த சவப்பெட்டிக்குள்ளேயே தான் இருப்பாள்! கிட்னாப்பர்கள் என்னவோ தம்மை போலீசார் ஏமாற்றிவிட்டதாய்நினைத்துக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது தம்மோடு திரும்பவும் தொடர்பு கொள்ளுவார்களா...அல்லது ஆபரேஷனையே விட்டுவிடுவார்களா?

இந்த யோசனை வந்ததுமே நடுங்கிப் போய் விட்டார் அசுவத்தாமன். ரவிதேஜாவின் முகம் வெளுத்துப் போயிருந்தது. விஷ்ணுவர்த்தனன் வாயடைத்துப் போய் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தார்.

கமிஷனர்கிரணிடம்—''எனக்கு ஹோம் மினிஸ்டரோடு கனெக்ஷன் கொடுக்கச் சொல்லு. முடிந்தால் டில்லிக்குக் கூட, பேசுகிறேன். முதலில் அந்த தங்கங்கள் அடங்கிய ப்ரீப் கேசுகளைத் திருப்பி வரவழை!'' என்று கத்தினார். கிரண் பரபரப்புடன் அங்கிருந்து போய்விட்டார். தொடர்ந்து செய்ய வேண்டியது என்னவென்பதை அங்கிருந்த ஆபீசர்கள் வாதாடிக் கொண்டார்கள்.

''உடனே பிரெஸ் மீட்டிங்கிற்கு ஏற்பாடு பண்ணுங்க. இரவோடிரவாய் இந்த நியூஸ் பத்திரிக்கைகளுக்குப் போய்ச் சேர்ந்து விடணும். தொலைக்காட்சியில் கூட பிராட்கேஸ்ட் பண்ணுங்க. இதில் நம்ம தப்பு எதுவும் இல்லை என்றும், கிட்னாப்பர்கள் கேட்டுக்கொண்டாற்போலவே ப்ரீப்கேசுகளை ஒப்படைத்தோம் என்றும், தவறுதலாய் அது வேறொருத்தரின் கண்ணில் பட்டுவிட்டதென்றும், கிட்னாப்பர்களுக்குத் தெரிய வேண்டும். அவங்க எங்கே ஒப்படைக்கச் சொல்றாங்களோ, அங்கே திரும்பவும் ஒப்படைப்போம் என்னும் செய்தி பத்திரிக்கைகளில் வரவேண்டும். தாமதிக்காமல் சந்தனாவை ரிலீஸ் பண்ணவேண்டும். அது முக்கியம்''—அசுவத்தாமன் சொல்லிமுடித்தார்.



ஒரு போலீஸ் அதிகாரி, பிரெஸ் கான்ஃபிரென்ஸிற்கு ஏற்பாடு பண்ணுவதற்காக பரபரப்புடன் வெளியே போனார்.

விஷ்ணுவர்த்தனன், மகள் கிடைப்பாள் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்.

இதெல்லாம் நடந்து...இந்த நியூஸ் நாளைக்காலையில் பேப்பர்களில் வந்து, அந்த கிட்னாப்பர்கள் படித்து...அந்த ப்ரீப்கேசுகளை ஒப்படைத்த பிறகு, சந்தனாவின் இருப்பிடத்தைப் பற்றிச் சொல்வதற்குள் பன்னிரெண்டு மணி நேரம் கழிந்துவிடும். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சந்தனா அவ்வளவு நேரம் பிழைத்திருக்க மாட்டாள். இப்பொழுதே அவளிடமிருந்து ஒயர்லெஸ் செய்திவந்து நான்கு மணி நேரம்ஆகி விட்டது. ஒருக்கால் பேட்டரி தீர்ந்து போயிருக்கும். மூச்சும் விடமுடியாமல் அந்த இருட்டில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தன் மகளின் நிலைமையைப் பற்றி யோசித்தபொழுது, அவர் கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் வழியத் தொடங்கிற்று. கமிஷனர் இன்னும் அறிவிப்புக்களைத் தந்துகொண்டேயிருந்தார்.

''சார்...'' என்றான் ரவிதேஜா. கமிஷனர் அவனை நோக்கித் திரும்பினார்.

''நாம் பேப்பர்களிலும், டி.வி யிலும் இந்த விதமாய் அறிவிப்புத் தருவதன் மூலமாய், வேறு யாராவது இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தத் தங்கங்களை தட்டிக்கொள்வதற்கு வழி ஏற்படுத்தித் தருகிறோமோன்னு தோணுது'' என்றான்.

''ஆனால் நமக்கு வேறு வழி ஏது? சந்தனா பிழைக்க வேண்டும். அதுதான் முக்கியம். இந்த நிலைமையில் வேறெந்த வழியும் இல்லை. நாம் அறிவிப்புக் கொடுப்பதைப் பார்த்துவிட்டு ஒன்றிற்கு மேல்பட்டு அதிகம் பேர் முயன்றார்கள் என்றால், என்ன பண்ணலாம் என்பதை அப்பொழுது யோசித்துக் கொள்ளலாம்...''

ரவிதேஜா எழுந்திருந்து டி.வி. அதிகாரிகளோடு தொடர்பு கொள்வதற்காக வெளியே போனான். பத்து நிமிஷங்கள் கழிந்தன. அதற்குள் இன்னொரு இன்ஸ்பெக்டர் வந்து சொன்னார்— தங்க பிஸ்கெட்டுகள் இருந்த ப்ரீப்கேசுகளை, ரயில்வே ப்ரொடக்ஷன் ஃபோர்ஸிடமிருந்து சுவாதீனப்படுத்திக் கொண்டுவிட்டதாகவும், விஷயம் தெரிந்ததும் அவர்கள் திரும்ப அதை ஒப்படைத்துவிட்டார்கள் சார்! என்றார்.

கொஞ்சத்தில் கொஞ்சம் தேவலை! அந்த ப்ரீப்கேசுகள் வருவதற்கு இன்னும் ஒருமணி நேரமாகலாம். இப்பொழுது அதில்லை பிரச்னை. பிரச்னையெல்லாம் சந்தனா அவ்வளவு நேரம் பிழைத்திருப்பாளா என்பதுதான்!

இந்த விதமாய் அவரவர்கள் தம் யோசனைகளில் மூழ்கியிருந்தபோது, கமிஷனர் மேஜை மேலிருந்த போன் மணி அடித்தது. கமிஷனர் ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றார்.

''நான் தான் கான்.''

கமிஷனர் ஆத்திரத்தை அடக்கமாட்டாமல் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டே எழுந்து நின்றார். ''மிஸ்டர் கான்...நாங்கள்...'' என்று ஏதோ சொல்லப் போனார்.

''ரவிதேஜா இருக்கானா?'' மறுமுனையிலிருந்து கடுமையாய்க் கேட்டது குரல்.

''இல்லை. இப்பத்தான் வெளியே போனார். பத்து நிமிஷத்தில் வந்துவிடுவார். மிஸ்டர் கான், நாங்கள் சொல்றதைத் தயவுசெய்து கேள். அந்த ப்ரீப்கேசுகளை நீ ஒப்படைக்கச் சொன்னாற்போலவே ரயில்வே பாலத்திற்குப் பக்கத்தில் போட்டோம் ஆனால் துரதிர்ஷ்டவசமாய்...'' அவர் சொல்லிக் கொண்டே போனார். போன் கட் ஆகிவிட்டது.

''ஹலோ...ஹலோ'' கமிஷனர் கத்திக்கொண்டேயிருந்தார். மறுமுனையிலிருந்து எந்தப் பதிலும் இல்லை.



கமிஷனர் சோர்ந்து போய், ரிசீவரை வைத்து விட்டு நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்தார்.

அதற்குள் ரவிதேஜா உள்ளே வந்தான். ''இன்னும் அரைமணியில் பிரெஸ் கான்ஃபிரென்ஸிற்கு ஏற்பாடு பண்ணிட்டோம் சார்! டி.வி.க்காரங்க கூட வராங்க'' என்று சொன்னான்.

''இப்பத்தான் கான் போன் பண்ணினான்'' என்றார் கமிஷனர்.

ரவிதேஜா டென்ஷனோடு என்னவென்று கேட்டான்.

ஒன்றும் சொல்லவில்லை. ஒருக்கால் ஆபரேஷன் க்ளோஸ் ஆகிவிட்டது என்று சொல்வதற்காகத் தானோ என்னவோ?'' என்று கமிஷனர் சொல்லிக்கொண்டிருக்கையில், திரும்பவும் போன் மணியடித்தது. ரவிதேஜா ரிசீவரை எடுத்துக் கொண்டான்.

அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்து கொண்டிருந்தது.

''எஸ்...நான்தான் ரவிதேஜா பேசுகிறேன்.''

''...........''

''ஓ கே...ஓ.கே...தாங்க்யூ'' என்று ரவிதேஜா போனை வைத்துவிட்டான்.

''எங்கேயிருந்து?'' என்று கேட்டார் கமிஷனர் பரபரப்போடு

''கம்பார்ட்மென்ட்டிலிருந்து, ப்ரீப்கேசுகளை வீசியெறிந்ததை கான் பார்த்தானாம். ரயில்வே லைன்மேன் அவைகளை எடுத்துக்கொண்டு போனதைக் கூடப் பார்த்தானாம். நாம் ஏமாற்றிவிட்டோம் என்ற எண்ணம் அவனுக்கு இல்லை.''

எல்லோரும் நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில் அந்தச் செய்தியே எல்லோருக்கும் சிறிது நிம்மதியைத் தந்தது.

''பின்னே இப்ப என்ன பண்ணலாம்?'' கேட்டார் கமிஷனர்.

''அதைத் திரும்பவும் சொல்றானாம்.''

''ஷட்'' என்றார் கமிஷனர் கோபமாய். ''இது எலியும் பூனையும் விளையாட்டாய் இருக்கிறது. சந்தனாவைப் பற்றி அந்த இடியெட் கொஞ்சமாவது யோசித்து பார்த்தானா?''

யாருமே பதில் பேசவில்லை.

கமிஷனர், ரவிதேஜாவிடம்—''அந்த பத்திரிக்கை நிருபருங்க கூட்டத்தை கேன்ஸல் பண்ணிவிடச்சொல்லு. வீணாய் இந்தச் செய்தி வெளியே போய்விட்டால் இல்லாத பொல்லாத நியூசென்ஸ்'' என்றார். ரவிதேஜா அந்தக் காரியமாய் வெளியே போனான்.

இரவு பதினொன்றரை மணிக்கு கிட்னாப்பரிடமிருந்து இன்னொரு செய்தி வந்தது. இம்முறை அது ஒரு பத்திரிக்கைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. உறையின் மீது—''டுதி கமிஷனர் அர்ஜென்ட்'' என்று டைப் அடிக்கப்பட்டிருந்தது.

கமிஷனர் பத்திரிக்கையாளர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததும்... பிறகு அதை கேன்ஸல் செய்ததும்...... அதனால் அந்தப் பத்திரிக்கைக் காரியாலயத்தோடு 'ஏதோ'.நடந்து கொண்டிருப்பதாகவும் யூகிக்க முடிந்தது. ஆனால் என்ன நடந்து கொண்டிருந்தது என்றுதான் புரியவில்லை அவர்கள் அந்த உறையை உடனே போலீஸ் இலாக்காவுக்கு அனுப்பினார்கள்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்த அசுவத்தாமன் பரபரப்புடன் பிரித்துப் படித்தார். ''ஒரு ஓயர்லெஸ் செட் உள்ள ஜீப்பில் அந்த ப்ரீப்கேசுகளை அனுப்புங்கள். அதன் ஃப்ரீக்வென்ஸியை 074எப்—2-பியில் அட்ஜெஸ்ட் செய்யுங்கள். அவற்றை மகரிஷி எடுத்துக் கொண்டு வர வேண்டும். உதகை ரோட்டில் வந்தால், அந்த ப்ரீப் கேசுகளை எங்கே ஒப்படைக்க வேண்டும் என்று ஓயர்லெஸ்ஸில் சொல்லுவேன்.'' மகரிஷியோடு கூட இன்னொரு போலீஸ் அதிகாரியையும் அனுப்பலாம். மகரிஷி, ஒரு கொலைக்குற்றவாளி. அவனுக்கும், கானுக்கும் தொடர்பிருக்குமோ?...



நிமிஷத்தில் அந்த ஏற்பாடுகள் நடந்தன. மகரிஷியோடு கூட, ரவிதேஜாவைப் போகச் சொல்லி கமிஷனர் அறிவித்தார். கிட்னாப்பர்களிடம் ப்ரீப்கேசுகளை ஒப்படைத்ததுமே, சந்தனா இருக்கும் இடத்தைப்பற்றி ஓயர்லெஸ்ஸிலேயே சொல்லலாம். உடனே அவளைக் காப்பாற்றுவதற்கு ரவிதேஜாவைக் காட்டிலும் சரியான நபர் வேறொருவர் இருக்க முடியாது, என்று கமிஷனர் எண்ணினார். அதோடு கூட, ஒரு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் கைதியை இந்த விதமாய் வேன் தந்து அனுப்புவது சட்டவிரோதம் ஆனால் அங்கே ஒருத்தியின் உயிர் ஆபத்தில் இருந்ததால்—மேற்கொண்டு எதுவும் யோசிக்கவில்லை கமிஷனர்! இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமாய், ரவிதேஜா வேனுக்குள் இருக்கிறான் என்று தெரிந்தால், தங்க பிஸ்கெட்டுகளை மாற்ற முடியாது என்ற நம்பிக்கை கிட்னாப்பர்களுக்கு ஏற்படும்.

சரியாய் கால்மணி நேரங்கழித்து ஜீப் புறப்பட்டது.

உணர்ச்சி வசத்தோடு எல்லோரும் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். எல்லோர் மனதிலும் ஒரே யோசனை! எல்லாம் நினைத்தபடியே நடந்து விடும். ஆனால்......

அதுவரை சந்தனா பிழைத்திருப்பாளா?

ஃ ஃ ஃ

என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று மகரிஷிக்குத் தெரியாது. ஏறக்குறைய பதினைந்து நிமிஷங்கள் பிரயாணம் செய்து, ஊரெல்லையைத் தாண்டியதும் மகரிஷி

''நாம் எங்கே போயிட்டிருக்கோம்? உங்களுக்கு ஆட்சேபணை இல்லாவிட்டால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்; முதல் முதலாக வாயைத்திறந்து சொன்னான் ரவிதேஜா!

''சந்தனாவை கிட்னாப் பண்ணிட்டாங்க.''

சடன் பிரேக்குடன் மகரிஷி வேனை நிறுத்தினான்.

''நிஜமாகவா? எப்பொழுது?'' என்றான்.

''வேனை விடு. எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்றேன்.'' வேன் திரும்பவும் புறப்பட்டது. ரவிதேஜா நடந்ததையெல்லாம் சொன்னான். ''இப்பொழுது நமக்கு ஒயர்லெஸ்ஸில் அந்த கிட்னாப்பர்கள் பிரீப்கேசு ...ள எங்கே விட வேண்டும் என்று சொல்வார்கள் அது ...ர நாம் இந்த சாலை வழியாய்ப் போய்க்கொண்டே ...நக்கணும்.'' ரவிதேஜா சொல்லி முடிக்கக்கூடவில்லை, ...ர்லெஸ்ஸில் வார்த்தைகள் கேட்கத் தொடங்கின. ...வரும் டென்ஷனோடு அதைக்கேட்கத் தொடங்கினார் ... ஆனால் மறுமுனையிலிருந்து பேசியது கிட்னாப் ...ன் இல்லை. அசுவத்தாமன்!

''ஏதாவது செய்தி வந்ததா?''

''வரவில்லை சார். அதற்காகத்தான் காத்துட்டிருக்கோம் நாங்கள்.''

''பின்னே, ரொம்ப வேகமாய்ப் போகாதீங்க. ஒருக்கால் இந்தச் சுற்றுவட்டாரத்திலேயே அவளைச் சிறைப்படுத்தி வைத்திருந்தார்கள் என்றால், கிட்னாப்பர்கள் அந்த எல்லைக்குள்ளேயே தான் இருப்பாங்க. நீங்கள் தொலை தூரத்திற்குப் போய் விட்டால், திரும்பவும் பின் நோக்கி வரவேண்டுமென்றால் கஷ்டம்.''

''ஆமாம் சார். நாங்கள் மெதுவாய்த்தான் போய்க் கொண்டிருக்கிறோம்''—ரவிதேஜா ஒயர்லெஸ்ஸை அணைத்து விட்டான்.



மகரிஷி அந்தச் சம்பாஷனை எதையும் காதில் போட்டு கொள்ளவில்லை. சந்தனாவின் நிலைமை எப்படி இருக்கிறதோ? அவளிடமிருந்து கடைசித் தடவையாய் செய்தி வந்து நான்கு மணி நேரத்திற்குமேல் ஆகிவிட்டது, என்ற உண்மை அவனைத் தளர்ச்சியடையச் செய்து கொண்டிருந்தது. கைகள் இயந்திர கதியில் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தனவே தவிர, மனம் மட்டும் அங்கே இல்லை. அவன் கண்களில் நீர் திரையிட்டது. தன் மரணத்திற்கு முன்னால்கூட தெய்வத்தைப் பிரார்த்தனை பண்ணாத அவன், இப்முறை பிரார்த்தனை பண்ணிக் கொண்டான். ''கடவுளே, அவளைக் காப்பாற்று.''

## 48

மரணம் இன்னும் சில நிமிஷங்களில் சம்பவிக்கப் போகிறதென்பது சந்தனாவுக்குத் தெரிந்தது.

மரப்பெட்டி லீக்காகி ஒவ்வொரு நீர்ச்சொட்டாய் உள்ளே விழத் தொடங்கி வெகு நேரமாகியிருந்தது. இப்பொழுது அந்த வெள்ளம் இன்னும் வேகத்தை மேற் கொண்டது. அவள் தோள்களும் கால்களும் நனைந்து போய்விட்டன. தாங்க முடியாத நாற்றம் பெட்டிக்குள் சூழ்ந்து கொண்டிருந்தது.

இவை எல்லாவற்றிக்கும் மேலாய்... உள்ளேகாற்ற மிக உஷ்ணமாகி விட்டிருந்தது. நீர்ச் சொட்டுக்கள் உள்ளே விழுந்து கொண்டிருந்ததனால் கூட அந்த உஷ்ணம் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகமாகத் தொடங்கியிருக்கலாம். பெட்டியிலிருந்து காற்றை வெளியே கொண்டுப் போகும் குழாய்கள் ஒருகால் அடைத்துக் கொண்டிருக்கலாம். அதனால் ஆக்ஸிஜன் குறைந்து போகும் கொண்டிருந்த அறிகுறிகள் தெளிவாய்த் தென்படத் தொடங்கின. விரு

மூச்சு விடவும் கஷ்டமாயிருந்தது.

உள்ளே காற்று குறைவாயிந்ததால் அவள் ஃபேனைப் போடுவதற்காக கைகளைத் தூக்க முயன்றாள். ஆனால் கையைத் தூக்கக் கூட சக்தி நசிந்து விட்டிருந்தது. அவளுக்கு லேசாய் மேல் மூச்சு வாங்கத்தொடங்கிற்று. அரும்பாடுபட்டுக் கைகளை மேலே தூக்கினாள். வாயால் கூட காற்றைச் சுவாசிக்க முடியவில்லையே என கையால் ஃபேனைச் சுழற்றத் தொடங்கினாள். அந்தச்சமயத்தில் அது அவளுடைய கடைசி முயற்சி ஆனால்... தன்னை யறிமால் அவள்கை ஃபேன் சுவிட்சின் மீது பட்டு, ஃபேன் மெதுவாய் சுழலத் தொடங்கிற்று.

ஒரு வினாடி, அதுகனவா நினைவா என்று புரிய வில்லை. சந்தோஷத்தால் கத்தக் கூட சக்தியின்றி அவள் சலனமில்லாமலிருந்தாள். அந்த ஃபேனையே பார்க்க முயன்றாள். சில மணி நேரங்களுக்கு முன்னால் அவள் சுவிட்சைப் போட்டபொழுது, ஒருக்கால் பல்பில் ஃபில மென்ட் எரிந்து போயிருக்கலாம். ஆனால் அவளோ பட்டரி தீர்ந்துவிட்டதாய் எண்ணி பயந்துவிட்டிருக் காள்.

இப்பொழுது அவள் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்க வில்லை. முதலில் வேகமாய் சுழன்ற ஃபேன், மெல்ல மெல்ல வேகம் குறைந்து கொண்டிருந்தது நன்றாய்த் தெரிந்தது அப்படியென்றால் பேட்டரியின் சக்தி குறை ந்து கொண்டே. வருகிறது என்று அர்த்தம் போலும்! ஒரு முறை சக்தி குன்றத் தொடங்கிவிட்டால் நிமிஷ ங்களில் அது முற்றிலுமாய்ப் பலமிழந்து போய் விடும். அவளுக்குத் தன் வீட்டாருடன் பேச வேண்டும் போலி ருந்தது. முக்கியமாய் தந்தையோடு... ஒரு முறை ஒயர் லெஸ்ஸை 'ஆன்' செய்து பேசினால், அது முற்றிலும் பேட்டரி சக்தியை இழுத்துக்கொண்டுவிடும் என்று அவ ளுக்குத் தெரியும். இன்னும் கொஞ்ச நேரம் உயிரோடி ருப்பதா, அல்லது தன் தந்தையோடு பேசி விட்டு மர ணமடைவதா, என்ற இரண்டில் அவள் மனம், இரண்டா வதைத்தான் தேர்ந்தெடுத்துக் கொண்டது.



அவள் எடுத்துக் கொண்ட அந்தக் கடைசி முடிவு இக்கதையின் திருப்பத்திற்குக் காரணமாயிற்று.

ஃ ஃ ஃ ஃ

மகரிஷியோடு சேர்ந்து ரவிதேஜா ஜீப்பில் புறப்பட்டுப் போய் அரைமணி நேரம் ஆகிவிட்டது. பத்து நிமிஷங்க ளுக்கொரு முறை அசுவத்தாமன் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டே இருந்தார். கிட்னாப்பரிடமிருந்து இன்னும் எந்தச் செய்தியும் வரவில்லை என்று சொல்லிக் கொண்டேயிருந்தான் ரவிதேஜா.

மகரிஷி இவை ஒன்றையும் கவனிக்காமல் வேனை, கவனமாய் ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் மனம் சந் தனாவைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

அசுவத்தாமன், அப்பொழுதுதான் ரவிதேஜாவோடு பேசிவிட்டு ஒயர்லெஸ்ஸை நிறுத்தினார் இரண்டு நிமி ஷங்கள் கழிந்த பிறகு மறுபடியும் சப்தம் கேட்டது. ரவி தேஜாவிடமிருந்துதான் என்றெண்ணிக் காண்டு அவர் ''ஹலோ! கிட்னாப்பர்கள் தொடர்பு கொண்டார்களா?'' என்று கேட்டார்.

''நான் தான் அங்கிள்' சந்தனா.''

அசுவத்தாமன் திடீரென்று அடென்ஷனுக்கு வந்தார். ''சந்தனா'' என்று கத்திவிட்டார்.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் சரேலென்று அவரை பார்த்தார்கள். விஷ்ணுவர்த்தனன் சட்டென்று ரீசிவரை அசுவத்தாமனிடமிருந்து வாங்கிக் கொண்டு ''அம்மா சந்தனா, நீயா எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

கடைசித் தருணத்தில் இருக்கிறேன்ப்பா. அதைச் சொல்லத் தான் போன் செய்தேன்.''

அக்குரலில் தென்பட்ட தீனத்திற்கு அசுவத்தாமன் உருகிவிட்டார். அவள் மனநிலையை உணர்ந்து அவளுக்கு தைரியம் சொல்வதற்காக விஷ்ணுவர்தனனின் கையிலிரு

ந்த ரிசீவரை வாங்கிக் கொண்டு--'' பார் சந்தனா ப்ரீப் கேசுகளை எடுத்துக் கொண்டு ரவிதேஜாவும், மகரிஷியும் புறப்பட்டாச்சு இன்னும் பத்து பதினைந்து நிமிஷத்தில் கிட்னாப்பர்கள் நீ இருக்கிற இடத்தைச் சொல்லிவிடு வாங்க. ஒரு பத்துநிமிஷந்தான். நீ தைரியமாய் இரு'' என்றார்.

நான் தைரியமாய்த் தான் இருக்கிறேன் அங்கிள். ஆனால் இங்குள்ள நிலமை என் உயிரை எடுத்து விடும் போலிருக்கு. அதனால் தான் கடைசித் தடவையாய் உங்கள் எல்லோருடனும் பேசுவதற்காக ஒயர்லெஸ்ஸை ஆன் செய்தேன். மரணத்தையே எதிர்பார்த்துக் கொண் டிருப்பதை விட, சந்தோஷமாய் உங்கள் எல்லோரோடும் பேசிவிட்டுச் செத்துப் போகலாம்னு.''

அவள் இம்முறை பேட்டரியைப் பற்றியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்காமல் பேசிக்கொண்டிருந்தாள். முற்றிலும் தன் மீது ஆசையை விட்டுவிட்டு, பேட்டரியைப் பற்றியே அவள் பொருட்படுத்தவில்லை; என்பதைப் புரிந்து கொண்டார் அசுவத்தாமன்.

''பாரும்மா சந்தனா! இப்பத்தான் நீ கொஞ்சம் தைரியமாய் இருக்கனும் நீ கண்டிப்பாய் விடுதலையாகி விடுவாய். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால், பார்பரா மாக்ஸி என்ற பெண்ணைக் கூட கிட்னாப்பர்கள் அசல் இதே போலவே தான் சிறைப்படுத்தினார்கள். முப்பத்தாறு மணி நேரங்களுக்குப் பிறகு போலீஸ் டிபார்மென்ட், அவளைக் காப்பாற்றிவிட்டது. அதனால் நீ தைரியத்தை வரவழைத்துக்கொள். இன்னும் ஒருமணி நேரம்! அதிக பட்சம் ஒரு மணி'' என்று சொல்லி விட்டு சுவிட்சை அணைத்துவிட்டார். தான் பேசிக் கொண்டே யிருந்தால் சந்தனாவும் பேசிக் கொண்டேயிருப்பாள் என் றும், அவளுக்கு இப்பொழுது தன் உயிரைக் காட்டிலும் யாருடனாவது பேசுவது தான் முக்கியம் என்ற நிலைக்கு வந்திருந்தாள் என்றும் அவர் உணர்ந்து-- மறுமுனையில்



பேட்டரி வீணாகாமலிருக்கத் தானே சம்பாஷணையை முடித்தார்.

மறுமுனையில் சந்தனா கூட ஒயர்லெஸ்ஸை அணைத்தாள். அசுவத்தாமன் சொன்ன கடைசி வாக்கியம் மட்டும் ஒரு அலையாய் வந்து தாக்கிற்று அவளை.

பார்பராமாக்ஸி!

பா...ர் ..ப...ரா...மா...க்...ஸி!

எங்கேயோ கேட்டிருக்கிறாள் அவள் அந்தப்பெயரை! எங்கே? ஆமாம். அந்த வார்த்தைகளை அவள் கணவன் அவளிடம் சொன்னான். நல்ல ரொமான்ட்டிக் மூடில் இருக்கும்பொழுது அந்த கிட்னாப் விஷயத்தை அவன் சொன்னது அவளுக்கு நினைவிற்கு வந்தது.

அசல் இதே சூழ்நிலையில்...அவள் கூட கிட்னாப் பண்ணப் பட்டிருக்கிறாள்.

...அவளிடம் ஏதோ புரிபடாத சங்கடம்! மெல்ல மெல்ல அவளுள் ஒரு யோசனை உருவெடுத்துக்கொள்ளத் தொடங்கிற்று. கான் செய்த கிட்னாப்பிற்கும், இந்த கிட்னாப்பிற்குமுள்ள வேறுபாடு அவளுக்குப் புரியத் தொடங்கிற்று. ஒயர்லெஸ் செட், பேட்டரி, ஃபேன், உள்ளேயும் வெளியேயும் காற்றிற்கு ஏற்பாடு......

யோசிக்க யோசிக்க அவளுள் ஒரு சந்தேகம் தெளியத் தொடங்கியது. அந்த யோசனைக்கே அவள் நடுநடுங்கி விட்டாள். தம் திருமணம் நடந்ததிலிருந்து, அதுவரை நடந்த ஒவ்வொரு சம்பவத்தையுமே லாஜிக்கலாய் யோசிக்கத் தொடங்கினாள் தான் ரவிதேஜாவை மிரட்டியது, தங்க பிஸ்கெட்டை மாற்றுவதற்கு ரவி தேஜா முயன்றது...எல்லாவற்றையும் விட முக்கியமாய்... தான் அவனோடு பேசிவிட்டுக் கீழே வந்ததுமே, கிட்னாப் பண்ணப்பட்டது...கிட்னாப் செய்த ஆள் பின் னாலிருந்து மயக்க மருந்தைக் காட்டியது எல்லாம் வரிசை யாய் நினைவு வரத் தொடங்கிற்று.

அவள் அவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கையில்......

அங்கே சேம்பரில் விஷ்ணுவர்த்தனனுக்கு தைரியம் ஏற்படுவதற்காக அசுவத்தாமன் சொல்லிக்கொண்டிருந்தார்.

''நீங்கள் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. இன்னும் ஒரு மணி நேரந்தான். உங்கள் மகள் உங்களிடம் பத்திரமாக வந்து சேர்ந்து விடுவாள். எங்கள் ஐ.பி.எஸ் ட்ரெயினிங்கில் இப்படிப்பட்ட கிட்னாப்பைப்பற்றிதான் சொல்லிக்கொடுப்பாங்க. ஒரு பெட்டிக்குள் முப்பத்தாறு மணி நேரம் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு பெண். தன் கதையைப் புத்தகமாய் எழுதியிருக்கிறாள். அந்த விஷயத்தைத்தான் சந்தனாவுக்கு தைரியமூட்டுவதற்காகச் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

அவர் வார்த்தைகள் இன்னும் முடியக்கூடவில்லை. ஒயர்லெஸ் திரும்பவும் இயங்கத் தொடங்கிற்று. அசுவத்தாமன் அதை ஆன் செய்துவிட்டு ''ஹலோ'' என்றார்.

மறுமுனையிலிருந்து பேசுபவருக்கு அவகாசம் கூடத் தராமல் மளமளவென்று பேசத்தொடங்கினாள் சந்தனா. ''அங்கிள்! என்னை கிட்நாப் பண்ணியது என் கணவர் ரவிதேஜா! இதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. என் உயிர் போனாலும் சரி, அவர் மட்டும் தண்டனைக்கு ஆளாகவேண்டும். அதுதான் என் கடைசி ஆசை. அது மட்டுமில்லை ரவிதேஜா, மகரிஷியோடு சேர்ந்து போயிருக்கிறார் என்றால், ஒருக்கால் மகரிஷியைக் கூட கொன்றுவிடுவார். எப்படியாவது நீங்கள் மகரிஷியையாவது காப்பாற்ற வேண்டும்.''

அசுவத்தாமன் அதிர்ந்துவிட்டார். அவ்வளவு அனுபவமுள்ள போலீஸ் கமிஷனரே அந்த வார்த்தைகளை ஜீரணித்துக்கொள்ள முடியாதவராய் அப்படியே சலனமில்லாமல் நின்றுவிட்டார்.

''நோ...இட்ஸ் இம்பாஸிபிள்'' என்றார் அவர்.



''வாதாடுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை அங்கிள். நான் சொல்வது தான் நிஜம். மகரிஷி மூலமாய், கானிடம் அனுப்பிய பிஸ்கெட்டுகளை ட்யூப்ளிகேட் செய்தது கூட ரவிதேஜாதான். பணத்துக்காகத் தான் அந்தக் காரியம் செய்ததாய் என்னிடம் ஒப்புக்கொண்டார். அதற்கு மேல் உங்களிஷ்டம்.''

ஒயர்லெஸ் மூடிக்கொண்டு விட்டது. அசுவத்தாமன் ''ஹலோ...ஹலோ...'' என்று கத்திக்கொண்டிருந்தார். எந்தச் சப்தமும் வரவில்லை யாருமே பேச முற்படவில்லை. அவரவர்கள் தம் யோசனையில் இருந்தார்கள். சந்தனா சொன்ன விஷயம் அங்கே வெடிகுண்டாய் வெடித்தது. ரவிதேஜாவைப் போன்ற ஐ.பி.எஸ். ஆபீசர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தார் என்று சொன்னால்!...அங்கே யாருக்குமே நம்பிக்கை ஏற்படவில்லை.

எல்லோரைக் காட்டிலும் முன்னதாய் தேறிக்கொண்டவர் விஷ்ணுவர்த்தனன் தான் அவருக்கு ஆதியிலிருந்தே தன் மருமகன் மீது நல்ல அபிப்பிராயம் கிடையாது. அவர் அசுவத்தாமனிடம் ''சந்தனா சொல்லுவதில் கொஞ்சம் உண்மை இருப்பதாய் தோன்றுகிறது'' என்றார்.

அசுவத்தாமன் திகைப்படைந்தவராய் ''என்ன உண்மை?'' என்று கேட்டார்.

''ஆமாம். இன்றைக்குத்தான் வர்மா என்று ஒருத்தன் என்னிடம் வந்தான். ரவிதேஜாவின் கடந்த காலத்தைப்பற்றி விசாரணை பண்ணிக் கொண்டுவரச் சொல்லியிருந்தாளாம் என் மகள். மகரிஷியின் மனைவியோட காதலன் தான் ரவிதேஜாவாம்—''

அசுவத்தாமன் அவர் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சந்தனா சொன்ன இன்னொரு பாயிண்ட்டைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். தாம் ஒப்படைத்த பிஸ்கெட்டுகளை கானிடம் தருவதற்கு முன்னால், இன்னொரு முறை அவைகள் ட்யூப்ளி

கேட் எடுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி, அவரைக் கலக்கமுறச் செய்தது.

அவர் கூட ஒவ்வொரு சம்பவமாய் விவரமாய் பரிசீலிக்கத் தொடங்கினார். மிக சாமர்த்தியமாய் கிட்னாப்பர் முதலிலிருந்தே நடந்துக்கொண்ட விதம்...இம்முறை மிகத் தெளிவாய் அவருக்குப் புரிந்தது. தன் குரல் வெளிப்பட்டுவிடாமல் டேப் ரிகார்டரில் சொல்வது, போஸ்ட் பாக்ஸில் கடிதத்தைப் போடுவது முதலியவைகளைப்பற்றியெல்லாம் யோசித்துக்கொண்டே வந்தபோது, அவருக்கு சந்தனா சொன்னது உண்மைதானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதற்குப்பிறகு அவர் ஒயர்லெஸ்ஸை ஆன் செய்துவிட்டு — ''ரவிதேஜா... ரவிதேஜா... அசுவத்தாமன் ஹியர்'' என்றார்.

''தேஜா ஸ்பீடிங் சார்...ஓவர்.''

''சந்தனா கிடைத்து விட்டாள்''.

அவர் அதைச் சொன்னதுமே ரவிதேஜாவைக் காட்டிலும் அவ்வறையிலிருந்த போலீஸ் ஆபீசர்களுக்குத்தான் அதிகமாய் ஷாக் அடித்தது. நிமிஷத்தில் தீர்மானம் எடுத்துக்கொள்ளக் கூடியவர் அவர். இந்த விஷயம் அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும்.

சந்தனா கிடைத்து விட்டாளா? எப்பொழுது? எங்கே? எப்படி? ''மறுமுனையிலிருந்து ரவிதேஜா உத்வேகத்துடன் கத்திக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுவிட்டு ஓட்டிக் கொண்டிருந்த ஜீப்பை சடன் பிரேக்போட்டு நிறுத்தினான் மகரிஷி.

''ரொம்ப லக்கியாய் கிடைத்துவிட்டாள். யாரோ குருவிக்காரர்கள் தண்ணீரிலிருந்து வெளியே வந்த குழாய்களைப் பார்த்துட்டாங்க போலிருக்கு. சரியாய் விவரங்கள் எதுவும் தெரியாது. அங்கிருந்து போன் தொடர்பு கூட சரியாய் இல்லை. தண்ணீருக்குள் ஏதோ மரப்பெட்டி இருப்பதாய் அவங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிபோர்ட் பண்ணிட்டாங்கன்னு நினைக்கிறேன். அந்த



சப் இன்ஸ்பெக்டர் அதைத் திறந்து பார்த்தார். உள்ளே சந்தனா நினைவு தப்பிய நிலையில் இருந்தாளாம். சீதோஷ்ண நிலை நன்றாயில்லாததால் போன்கள் கூட சரியாய் இயங்கவில்லை. நான் விரல் அடையாள நிபுணர்களை உடனே அங்கே அனுப்புகிறேன். டாக்டர் கூட அங்கே போய்ச் சேர்ந்திருப்பார்.''

ரவிதேஜா பதில் பேசவில்லை-அவன் முகம் சிவந்திருந்தது. மகரிஷி அவனையே பார்த்துக்கொண்டிருந்தான். சந்தனா பிழைத்துவிட்டாள் என்ற விஷயம் தெரிந்ததும், அவன் மனம் பஞ்சாய் பறக்கத் தொடங்கிவிட்டது.

''மிஸ்டர் ரவிதேஜா, ஆர் யூ லிசனிங்?''

''எஸ் சார்.''

நீங்கள் அந்த ப்ரீப்கேசுகளை எடுத்துக்கொண்டு இன்னும் அப்படிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டாம். சந்தனா தப்பித்துக் கொண்டு விட்ட விஷயம் கிட்னாப்பருக்குத் தெரியாது. அவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களோடு தொடர்பு கொள்வான். அவனிடம் ப்ரீப்கேசுகளைத் தருவதுபோல நடித்து,முடிந்தால்பிடித்துக் கொள்ள முயற்சிபண்ணு. அதுவும் முடியாமல் போனால் ஷூட் பண்ணிவிடு.''

''எஸ் சார்.''

''ஓவர்''—அசுவத்தாமன் ஒயர்லெஸ்ஸை அணைத்துவிட்டு நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டார். அங்கிருந்த ஆபீசர்களுக்கெல்லாம் திட்டம் புரிந்து விட்டது. எல்லோரிடமும் டென்ஷன்...

ஒருக்கால் உண்மையாகவே கிட்னாப் செய்தது ரவிதேஜாவாய் இல்லாவிட்டால், சந்தனாவின் உயிருக்குப் பெரிய 'ரிஸ்க்' ஆகிவிடும் என்று அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும். அசுவத்தாமன் மிக ஆபத்தான முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

நேரம் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தது. பத்து நிமிஷங்கள்...பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன.

ஒயர்லெஸ்ஸில் மறுபடியும் ரவிதேஜாவின் குரல் கேட்டது.

"சார், அந்த கிட்னாப்பர்கள் தொடர்பு கொண்டார்கள்."

"என்ன சொன்னார்கள்?"

"நாற்பதாவது மைல் கல்லிற்கருகில், வலது பக்கத்தில் சின்ன குறுக்கு வழி ஒன்று இருக்கிறதாம். அங்கே பாழடைந்த கோவிலுக்கருகில் இந்த பிரீப்கேசுகளைக் கொண்டு வந்து வைக்கச் சொன்னான் நான் இப்பொழுது அங்கேயிருந்துதான் பேசுகிறேன். ப்ரீப்கேசுகளை எடுத்துக் கொண்டு போகிறேன் சார்."

"போ. மகரிஷியை ஜீப்பிலேயே இருக்கச்சொல்லு. ஏதாவது அர்ஜென்ட் செய்தி இருந்தால் தொடர்பு கொள்கிறேன். நீ மட்டும் கிட்னாப்பர்களை ஜாக்கிரதையாய் ஹேண்டில் பண்ணு."

ரவிதேஜா ஜீப்பை விட்டு இறங்கி ப்ரீப் கேசுகளை எடுத்துக்கொண்டு மகரிஷியிடம்— "நீ இங்கேயே இரு, நான் இதோ வருகிறேன் என்று சொல்லி விட்டுப்புறப்பட்டான். அவன் மனமெங்கும் ஆத்திரம் மண்டிக் கிடந்தது. ஒரு பக்கத்தில் சந்தனா எப்படித் தப்பித்துக் கொண்டாள்? என்ற சந்தேகம், இன்னொரு பக்கத்தில் இவ்வளவு செய்த பிறகு கடைசி சமயத்தில் இவ்வாறு நிகழ்வது...இவ்விரண்டும் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

ஆனால் அனுபவம் வாய்ந்த போலீஸ் அதிகாரியாய் இருந்ததால், நிமிஷத்தில் நிலைமையையெல்லாம் ஊகித்தறிந்து கொண்டு விட்டான் ரவிதேஜா. நடக்க வேண்டியவைகளை மனதில் உருவகப் படுத்திக் கொண்டான். ப்ரீப் கேசுகளை எடுத்துக்கொண்டு குறுக்கு வழியே நுழைந்து கொஞ்ச தூரம் நடந்தான். அங்கே அடர்ந்த காடு பரவலாய் இருந்தது. ஓரிடத்தை அடையாளம் வைத்துக் கொண்டு அவ்விடத்தில் ப்ரீப்கேசுகளை வைத்து, காய்ந்த சருகுகளை அவற்றின் மீது பரப்பினான்.

துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு திரும்பி வந்தான்.

சந்தனா தப்பித்துக் கொண்டுவிட்டதால், இப்பொழுது மகரிஷியைக் கொல்வது ஒன்று தான் பாக்கியிருந்தது. அவன் செத்து ஒழிந்தால், பிறகு கேசு கோர்ட்டுக்கு வராது. தன் பெயர் வெளியே வராது.



அதிர்ஷ்டம் என்னவென்றால், தங்கம் தனக்குக் கிடைத்துவிட்டது. அதுவரை, தான் வெற்றி பெற்று விட்டாற்போலத்தான்.

அதற்குப்பிறகு நடக்கவேண்டிய நிகழ்ச்சிகளைக் கூட அவன் ஜாக்கிரதையாய் திட்டம் போட்டுக் கொண்டான். மகரிஷியைக் காட்டிற்குள் அழைத்துச்சென்று சுட்டுத் தள்ளிவிட்டால், பிறகு கமிஷனரிடம், கிட்னாப்பர் தான் பழைய விரோதத்தினால் மகரிஷியைக் கொன்றுவிட்டதாய்ச் சொல்லலாம். இதற்கு எந்தச்சாட்சியும், ஆதாரமும் கிடைக்காது.

சாட்சி என்றதும் அவனுக்கு கமிஷனர் சொன்ன இன்னொரு விஷயம் நினைவிற்கு வந்தது. பெட்டியின் மேலிருக்கும் விரலடையாளங்களைப் பரிசோதிப்பதற்கு நிபுணர்கள் வரப்போவதாய்ச் சொன்னது!

அப்பெட்டியைக் குருவிக்காரர்கள் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே எடுத்தபொழுது. அதை அங்கேயே விட்டு விட்டு சந்தனாவை மட்டும் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள். தண்ணீரிலிருந்து வெளியே வரும் குழாய்களின் மீது அவன் விரலடையாளம் இருக்க, அவகாசம் இருக்கிறது. அவற்றைக் கலைத்து விடாமல் போனால், அதனால் ஆபத்து வரலாம்.

முதலில் மகரிஷியைக் கொன்றுவிட்டு, பிறகு பெட்டி விஷயத்தைக் கவனிக்கவேண்டும். இந்த விதமாய் யோசித்து, அவன் திரும்பவும் சாலைக்குவந்தான். தொலைவில் ஜீப் தென்பட்டது. அவன் சாலைக்கு வந்து— "மகரிஷி" என்று உரக்கக் கூப்பிட்டான்.

ஜீப்பிலிருந்து பதில் இல்லை.

அவன் வியப்போடு 'மகரிஷி'' என்று இரண்டு முறை கூப்பிட்டான்.

ஜீப்பில் அவன் இருந்த ஜாடையே இல்லை.

அவன் ஓட்டமாய் ஜீப்பிற்கருகில் வந்தான்.

ஜீப்பில் மகரிஷி இல்லை.

ஃ ஃ ஃ

ரவிதேஜா ப்ரீப்கேசுகளை எடுத்துக்கொண்டு குறுக்கு வழியே போனதுமே, ஒரு நிமிஷங்கழித்து மறுபடியும் ஒயர்லெஸ் ஒலித்தது. இம்முறை மகரிஷி அதை ஆன் செய்து ''ஹலோ'' என்றான்.

''யார் பேசுவது?'' மறுமுனையிலிருந்து அசுவத்தாமனின் குரல் கேட்டது.

''நான்தான் சார் மகரிஷி.''

''ரவிதேஜா இருக்காரா?''

''இல்லை சார். இப்பத்தான் ப்ரீப் கேசுகளை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் போனார்.''

''நான் சொல்றதை கவனமாய்க் கேள். வேறெந்தக் கேள்வியும் கேட்காதே. நீ உடனே அங்கிருந்து புறப்படு. ரவிதேஜாவின் கண்ணில் படாதே. அவன் உன்னைக் கொன்றுபோட்டு விடும் ஆபத்து இருக்கிறது. அவனுக்குப் பின்னாடியே போய் எங்கே போகிறான் என்பதைக் கவனி. புரிந்ததா?''

மகரிஷிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் மௌனமாய் இருந்ததைப் பார்த்துவிட்டு—''நீ எதையும் யோசிக்காதே. நான் சொன்னபடி செய். ஓ.கே?''—என்றார் அசுவத்தாமன். ''எஸ் சார்'' என்று ஒயர்லெஸ்ஸை அணைத்துவிட்டு, ஜீப்பிலிருந்து ஒரே பாய்ச்சலாய்க் கீழே குதித்து தொலைவிற்குப் போய், மரத்திற்குப் பின்னால் நின்று கொண்டான் மகரிஷி. அதற்கு பிறகு கொஞ்ச நேரங்கழித்து ரவிதேஜா அங்கே வந்து தன் பெயரைக் கூப்பிட்டது கேட்டது. மகரிஷி தான் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. ரவிதேஜா அந்தச் சுற்றுப் புறத்திலெல்லாம் கலக்கத்துடன் தன்னைத் தேடியதைப் பார்த்தான்.

அவ்விடமெல்லாம் நிசப்தமாயிருந்ததால், ரவிதேஜா ஒயர்லெஸ்ஸில் பேசிய வார்த்தைகள் கூட தெளிவாய்க் கேட்கத் தொடங்கிற்று. ''சார்...மகரிஷி தப்பித்துக் கொண்டு விட்டான்''—என்று செய்தி சொல்லிக் கொண்டிருந்தான் அவன். மறுமுனையிலிருந்து அசுவத்தாமன் என்ன பேசினாரோ மகரிஷிக்குக் காதில் விழவில்லை. ரவிதேஜா ஒயர்லெஸ்ஸை அணைத்து விட்டு, திரும்பி சாலையில் இறங்கி காட்டிற்குள் போனது மட்டும் நன்



றாய்த் தென்பட்டது. அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து போனான் மகரிஷி.

சுமார் பத்து நிமிஷங்கள் இருவரும் அவ்வாறு நடந்து கொண்டிருந்தார்கள்.

மேலும் பத்து நிமிஷங்கள் நடந்தபிறகு, அவன் ஒரு நீர்நிலைக்கருகில் வந்து நின்றான். சுற்றிலும் மரங்கள் நடுவில் சின்ன குழியைப் போல இருந்தது அந்தக்குழியில் மழைநீரும், சேரும் சேர்ந்து செம்மண் நிறத்தில் இருந்தது.

மேலும் இரண்டடிகள் நடந்து அதனருகில் வந்து சேர்ந்தான் ரவிதேஜா.

அது இருந்த இடத்திலேயே இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தவனாய், அப்படியே நின்றுவிட்டான். பெட்டி குழிக்குள் அப்படியே தான் இருந்தது!!

அதிலிருந்து வெளியே வந்த குழாய் வைத்தது வைத்தாற்போலவே கரையின் மீது பொருத்தி வைக்கப்பட்டிருந்தது; மிகக் கூர்ந்து பார்த்தாலேயொழிய அது தென்படாது. அவனுக்குக் கொஞ்சநேரம், தான் காண்பது கனவா நினைவா என்று புரியவில்லை. தன்னை வலையில் வீழ்த்தவே அசுவத்தாமன் அந்த விதமாய்ச் சொல்லியிருப்பார் என்றயோசனையே தோன்றவில்லை அவனுக்கு. ஏதோ நடந்திருக்கிறது என்று தெரியும். எங்கேயோ தனக்குப் பின்னால் கதவுகள் மூடிக்கொண்டு போவது போன்ற உணர்ச்சி! வெறுப்போடு அந்தப்பெட்டியைக் காலால் தள்ளினான். அது நீர்க் குழிக்குள் நழுவிப் போயிற்று.

அந்த விதமாய் சந்தனாவைத் தண்ணீருக்குள் நிரந்தரமாய் சமாதி பண்ணி விட்டு, அவன் திரும்பினான். விடுவிடென்று ஜீப்பிற்கருகில் வந்து, அதில் ஏறிஉட்கார்ந்து கொண்டு ஸ்டார்ட் பண்ணினான். ஜீப் புறப்பட்டது.

ஜீப் கண்மறைவானதும் மரத்திற்குப் பின்னாலிருந்து வெளியே வந்தான் மகரிஷி. எதிரேயிருந்த நீர்க்குழியையும், அதற்கருகில் ரவிதேஜா நடந்துகொண்ட விதத்தையும் பார்த்ததுமே அவனுக்கு சந்தனா அவ்விடத்தில்தான் அடைத்துப் போடப்பட்டிருப்பாள் என்ற விஷயம் புரிந்துவிட்டது. திரும்பவும் ரவிதேஜா வந்துவிடுவானோ, தன்

உயிருக்கே ஆபத்தாகிவிடுமோ...என்பதைப் பற்றியெல்லாம் அவன் யோசிக்கவில்லை. மேலும் ஒரு நிமிஷம் தாமதித்தாலும்கூட, அது சந்தனாவை மரணத்தை நோக்கி இன்னும் கிட்டே இழுத்துச் சென்று விடும். என்ற யோசனை ஒன்றுதான் அவனை அவசரப்படுத்திற்று. மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு நீர்க்குட்டைக்குள் குதித்து விட்டான்.

∴ ∴ ∴

சின்ன சப்தம்.

ஏறக்குறைய ஒரு யுகத்திற்குப் பிறகு சின்ன சப்தம், கேட்டாற்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவளுக்கு. முதலில் அவள் பிரம்மை என்றெண்ணிக் கொண்டாள். அதுவரை ஏற்பட்டுவந்த பலவிதமான ஹெல்யூஷன்ஸில் அது கூட ஒரு பாகமாய்த் தோன்றிற்று. அதற்குப் பிறகு பெட்டி லேசாய் நகர்ந்தது. முதலில் அவள் அதை நம்பவில்லை. பிறகு பெட்டி மெல்ல மெல்ல தண்ணீருக்குள்ளேயிருந்து மேலே மிதக்கத் தொடங்கினாற்போல—படகைப் போல ஆடத் தொடங்கினாற்போல—உறுதியாய்த் தெரிந்துகொண்டதும், அவள் தன்னையே தான் நம்ப மாட்டாதவளாய் கையால் பெட்டியை அழுத்தமாய் அடித்தாள். வெளியே இன்னொரு ஆள் இருந்ததையும், பெட்டியை நகர்த்திக் கொண்டிருந்ததையும் அவள் நம்பிக்கையறத் தெரிந்து கொள்வதற்காக, வெளியேயிருந்து கூட பெட்டியை அடித்த சப்தம் கேட்டது. அவள் தன்னையறியாமல் விம்மத் தொடங்கினாள். மனம் முழுவதும் அளவுக்கு மீறிய சந்தோஷம் சூழ்ந்து கொண்டதால் ஏற்பட்ட விம்மல் அது.

இரண்டு நிமிஷங்களில் அதைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தாற்போன்ற சப்தம் கேட்டது.

தண்ணீரிலிருந்து மேலே தூக்க முடிந்தாற்போல அப்பெட்டியை கரைக்கு இழுப்பது அவ்வளவு சாத்தியமாகவில்லை அரும்பாடுபட்டு அதைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டு, ஆயாசத்துடன் மூச்சிரைக்க நின்றான் மகரிஷி.

உள்ளே சந்தனா, அடுத்ததாய் என்ன நடக்கப் போகிறதோ என்று எதிர்பார்த்தபடி மூச்சை இழுத்து



அடக்கிக்கொண்டு காத்திருந்தாள். உள்ளங்கைகளை அழுத்தமாய் மடக்கிக் கொண்டு மேற்கூரையையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்

டக்...டக்...டக்...

பெட்டியை மூடும்பொழுது ஏற்பட்ட சப்தமே திரும்பவும் கேட்கத் தொடங்கிற்று. ஆனால் இம்முறை அது ஆணி அடிப்பதற்காக அல்ல. ஆணியை எடுப்பதற்காக! முதலில் ஒரு சின்ன மரத்துண்டு கழன்று கொண்டது.

வெளியே கூட இருளாய் இருந்ததால் உள்ளேவெளிச்சம் படரவில்லை. ஆனால், குளிர்ந்த காற்று மட்டும் உடம்பில் பட்டது. அடுத்த இரண்டு நிமிஷங்களில் மேற்கூரை பலமாய் பிரிக்கப்பட்ட சப்தம் கேட்டது. சந்தனா கூட பலத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு கீழேயிருந்து பெட்டியின் மேற்கூரையைத் தள்ளுவதற்கு முயன்றாள். ஆனால் அவ்வளவு தேவையில்லாமலேயே மேல் மூடி கழன்று விழுந்தது.

அவள் அதுவரை எவ்வளவு இருட்டில் இருந்திருக்கிறாள் என்றால், கடைசியில் நிலா வெளிச்சத்தைக் கூடத் தாங்க முடியாத அளவிற்கு அவள் கண்கள் கூச்சத்தால் மூடிக்கொண்டன.

இரண்டு கைகள் தன் உடம்பை மரப்பெட்டியிலிருந்து வெளியே எடுத்தது அவளுக்குத் தெரிந்தது. அவள் தன்னையறியாமல் அவன் கழுத்தைச் சுற்றிக் கைகளைப் போட்டாள் அவனும் அவளை அப்படியே அணைத்துப் பிடித்துக்கொண்டு ஜாக்கிரதையாய் தரையில் இறக்கிவிட்டுத் தூக்கி நிற்கவைக்கப் போனான். அவள் அவனை விடவில்லை விட்டுவிட்டால் எங்கே அந்தக் கனவு சிதறிப்போய் விடுமோ என்பது போல, அவனை அப்படியே அணைத்துப் பிடித்துக் கொண்டேயிருந்தாள்.

அவனுக்கும் துக்கம் வந்தது இருவரும் நிசப்தமாய், மௌனமாய், அவ்வாறு எவ்வளவு நேரம் இருந்தார்களோ தெரியாது உலகத்தில் எந்தச் சக்தியுமே இனி தம்மைப் பிரிக்க முடியாது என்ற நம்பிக்கை இறுகிவிட்டதாக அவர்கள் அணைப்பு நிரூபித்துக் கொண்டிருந்தது.

∴ ∴ ∴

அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்து கொண்டிருந்தது. அறையில் இருவரே இருந்தார்கள்.

ரவிதேஜா, அசுவத்தாமன்.

''சொல்'' என்றார் அசுவத்தாமன் அந்த நிசப்தத்தைச் சிதறடித்தபடி.

''சந்தனாவை அந்த நீர்க் குட்டைக்குள் தள்ளியது கான், என்னவானான் என்று எனக்குத் தெரியாது சார். அவங்க வைக்கச் சொன்ன இடத்தில் நான் ப்ரீப் கேசுகளை வைத்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டேன் நான் வந்த போது மகரிஷி ஜீப்பில் இல்லை. அவ்வளவுதான் எனக்குத் தெரியும் ''

''பொய்'' என்றார் அசுவத்தாமன். ''நீ சொன்னதெல்லாம் பொய்தான் என்று உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும். ப்ரீப்கேசுகளை மரத்தடியில் வைத்து விட்டு அதன் மேல் நீ சருகுகளைப் போட்டு மூடினாய். அவைகளை, கான் எடுத்துக் கொண்டு போகவில்லை. அவை இன்னும் அங்கேயே தான் இருக்கின்றன. அவை எங்கே இருக்கின்றன என்று மகரிஷி எங்களுக்குச் சொன்னான்,

''இல்லைசார்! இதெல்லாம் மகரிஷியும் கானும் சேர்ந்து ஆடுகிற நாடகம்.''

அசுவத்தாமன் சிரித்தார். ''ரொம்ப விஷயங்களை உன்னால் நிஜம் என்று நிரூபித்துவிட முடியாது ரவிதேஜா! நான் தந்த பிஸ்கெட்டுகளை மாற்றி நீ திரும்பவும் ட்யூப்ளிகேட் பிஸ்கெட்டுகளைத் தயார் செய்து வைத்ததாய் அந்த, தட்டான் சாட்சி சொல்லுவான். சவப் பெட்டியின் மீது உன் விரலடையாளங்கள் இருப்பது அசைக்க முடியாத சாட்சி. ஸ்ரீவாணியின் டைரி உன்னை குற்றவாளியாய் கோர்ட்டில் நிற்கவைத்துவிடும்''—என்று சொல்லி விட்டுச் சின்னக் குரலில் சொன்னார்—''இப்ப இதையெல்லாம் நான் யாரிடமும் சொல்லப்போவதில்லை. நம்மிருவருக்குமிடையே மட்டுமே ரகசியமாய் இந்த விவகாரம் இருக்கும்.''

ரவிதேஜா ஆச்சரியமடைந்தவனாய் நிமிர்ந்தான். அசுவத்தாமன் ஒரு ரகசியத்தைச் சொல்வது போல மெல்லிய குரலில் தொடர்ந்தார். ''நீ சொன்னது நிஜந்தான். உனக்கும் எனக்கும் தவிர இந்த விவகாரங்



கள் ரெண்டாம் பேருக்குத் தெரியாது. தகுந்த சாட்
சியோ, ஆதாரங்களோ கூட இல்லை. ஆனால் உன்
மானத்தைப் போக்கடிப்பதற்கு இருக்கிற சாட்சிகளே
போதும். சொல்லு......ஃபிஃப்டி பெர்செண்ட்?''
ஏதோ புரிந்தாற்போல ரவிதேஜா அவரைப் பார்த்
தான். அசுவத்தாமன் லேசாய் சிரித்தார். ரவிதேஜா
தலைகுனிந்தபடி ''உங்களிஷ்டம் சார்'' என்றான்.
''ஒரு ப்ரீப் கேசு உனக்கு, ஒன்று எனக்கு''.
''ஆனால் மகரிஷி...?''

''நான் ரொம்ப நேர்மையானவன் என்று மகரிஷி
நம்பிக் கொண்டிருக்கிறான். அவன் என் ஆதீனத்தில்
தான் இருந்து கொண்டிருக்கிறான். அவனை ஒழித்துக்
கட்டுவது பெரிய விஷயமில்லை. எப்படியும் தூக்குத்
தண்டனை விதிக்கப்பட்ட கைதியாதலால் 'ஷுட் இட்
அட் சைட்!' என்று நாம் கேசை எழுதிக் கொள்ளலாம்''
''தாங்க்ஸ் சார்!'' சுருக்கமாய் சொன்னான் ரவிதேஜா
''ஆமாம், இதையெல்லாம் ஏன் பண்ணினாய்?
சந்தனாவைக் கொல்லுவது பெரிய ரிஸ்க் என்று உனக்குத்
தோன்றவில்லையா?''

''எனக்கு முதலில் அந்த யோசனை இல்லை. வர்மா
வந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாய்ச் சொன்னான்.
மிரட்டினான். சந்தனா உயிரோடிருந்தால், என்றைக்
காவது ஆபத்து வராமல் போகாது என்று தோன்றிற்று.
அவளுக்கு நிறைய விஷயங்கள் தெரியும். நாளைக்கு
மகரிஷியின் கேசு கோர்ட்டுக்கு வந்தால் அவளும் மௌன
மாய் பேசாமலிருந்துவிட மாட்டாள்.''
''ஆனால் இப்பொழுது சந்தனாவுக்கு இன்னும்
நிறைய விஷயங்கள் தெரியும். தன்னை கிட்னாப் செய்
தது நீதான் என்றும், அந்த தண்ணீர்க் குட்டையில்
போட்டு விட்டாய் என்றும் அவள்தான் எங்களுக்கு ஓயர்
லெஸ்ஸில் சொன்னாள்!!

''ஊகித்துக் கொண்டிருப்பாள். ஆன்ால் கோர்ட்,
கேசுக்ள் இதெல்லாம் அப்படிப்பட்ட ஊகங்களை நடை
முறைக்கு எடுத்துக் கொள்ளாது'' என்றான் ரவிதேஜா;
உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது என்றாற்
போல.

''எப்பொழுதாவது அந்த கான் போலீசாரிடம் பிடிப் பட்டுப் போய் விட்டால் கஷ்டம். இந்த கிட்னாப் சங்கதி தனக்கு ஒன்றுமே தெரியாது என்று போலீசாரிடம் கண் டிப்பாய்ச் சொல்லுவான்.''

ரவிதேஜா சிரித்தான். எதிரே இருந்தது தன் மேலதி காரியாயிருந்தாலும், ஒரு பாவத்தில் பங்காளியாவதால் சுதந்திரமாய் சிரித்தான். ''கான் சொன்ன விஷயங்களை போலீஸ் டிபார்ட்மென்ட் நம்பவேண்டிய அவசியம் இல்லை சார்'' என்றான்.

''அங்கேயே மகரிஷியைக் கொன்று விட்டிருந்தாயா னால் வேலை மிகச் சுலபமாகிவிட்டிருக்கும். சந்தனா, அந்த நீர்க்குட்டையில் அப்படியே மரணமடைந் திருப்பாள்.''

ஆமாம். ஆனால் சந்தனாவுக்குச் சந்தேகம் ஏற்படும் என்று நான் ஊகித்திருக்கவில்லை.''

''சந்தனா ஒயர்லெஸ்ஸில் சொன்ன வார்த்தைகளை சுற்றிலுமிருந்த போலீஸ் அதிகாரிகள் அத்தனைப் பேரும் கேட்டார்கள். எனக்கும் அந்த நிலைமையில் என்ன செய்வ தென்று தெரியவில்லை. போகட்டும், நீ சம்பாதித்ததில் பாதி பாகம் எனக்குன்னு எழுதி வைத்திருந்தது போலும்'' சிரித்தார் அசுவத்தாமன்.

''இனி நடக்க வேண்டியதையெல்லாம் நீங்கள் தான் பார்த்துக்கணும் சார். நான் எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை'' என்றான் ரவிதேஜா.

''இனி யோசிக்க வேண்டியது எதுவும் இல்லை மிஸ்டர் ரவிதேஜா'' – கம்பீரமாய் கேட்டது குரல்.

ரவிதேஜா திடுக்கிட்டு நிமிர்ந்தான். இப்பொழுது அசுவத்தாவன் ஒரு பாவத்தில் பங்கெடுத்துக் கொள்பவ ராய் இல்லை.ஒ– நேர்மையான போலீஸ்கமிஷனராய் இருந் தார். ஜோபி') கையை நுழைத்து ஒரு பாக்கெட்டை எடுத்துக் காட்டி விட்டுத் திரும்பவும் உள்ளே திணித்துக் கொண்டார். ''போதும், இதுவரை உன் சம்பாஷணை யெல்லாம் ரிகார்டாகி விட்டது. இதுவரை எந்த சாட்சி யும் ஆதாரங்களும் இல்லை என்று சொல்லி பெருமை யடித்துக் கொண்டாய் அல்லவா? இந்த டேப் ரிகார்டரின் சாட்சியே போதுமானது என்று நினைக்கிறேன்.''



ரவிதேஜாவின் முகம் ரத்தம் இல்லாதது போல சுண்டி விட்டது. எழுந்து நின்றுகொண்டே ''சார்...'' என்று ஏதோ சொல்லப்போனான்.

''உட்காரு'' கடுமையாய்க் கேட்டது அசுவத்தாமனின் குரல்.

அதற்குள் அவர் குரலில் மாறுபாடு வந்துவிட்ட

''இந்தக் கேசை எப்படி முடிக்கணும் என்பது உன் மீது தான் ஆதாரப்பட்டிருக்கிறது மிஸ்டர் ரவிதேஜா. ஒரு பெண்ணை அவ்வளவு அரக்கத்தனமாய் சவப்பெட்டிக் குள் வைத்து, தண்ணீர்க்குட்டையில் போட்டதற்கே உனக்கு தூக்குத்தண்டனை விதிக்கும் கோர்ட். அல்லது ஆயுள் தண்டனை! அதில்லை இங்கே யோசிக்க வேண்டி யது நம் டிபார்ட்மென்ட்டின் கௌரவப் பிரச்சினை. நீ எவ்வளவு நீசத்தனமாய் நடந்து கொண்டிருக்கிறாய் பார்! இன்னொருத்தனின் மனைவியோடுகூடாஒழுக்கம் வைத்துக் கொண்டு, அந்த ஆள் தூக்குமேடையில் ஏறப் போன பொழுது எப்படி மௌனமாய் இருந்து விட்டாய் என்றும், அதற்கப்புறம் உன் மானம் போய்விடும் என்று அந்த ஆளையே கொல்ல எப்படி முயற்சித்தாய் என்றும், நாளைக்கு பேப்பர்களில் வந்தால் அது உனக்கு மட்டுமே யில்லை, டிபார்ட்மென்டிற்கே அவமானம்.''

ரவிதேஜா பதில் பேசவில்லை. அசுவத்தாமன் அவனி டம் வந்து தோளில் கையைப் போட்டார். ''உனக்கு எந்தத் தண்டனை விதிக்க வேண்டும் என்றுநீயே யோசித்து கொண்டு விட்டால், குறைந்த பட்சம் உன் மானம் வெளி யேறாமல் இருக்கும். அந்தத் தண்டனையை விதித்துக் கொள்ளப் போவதற்கு முன்னால் ஒரு உதவி செய். ஸ்ரீவாணியின் மரணம் கொலை அல்லவென்றும், அது ஆக்ஸி டென்டல் என்றும் கோர்ட்டிற்குத் தெரியும்படியாய்ச் செய். இதை விட விவரங்களை இந்தச் சூழ்நிலையில் தான் உனக்குச் சொல்லத் தேவையில்லைன்னு நினைக் கிறேன்''. இனி பேச வேண்டியது எதுவுமில்லை என் னாற்போல அசுவத்தாமன் அவ்வறையைவிட்டு வெளியே நடந்தார்.

மறுநாள்காலையில் இன்னும் முழுவதுமாய் விடியக் கூடவில்லை. அவருக்கு ஒரு போன் கால் வந்தது. ''... தான் இன்ஸ்பெக்டர் கிரண் பேசுகிறேன்.''

''என்ன விஷயம்?''

''ரவிதேஜா தற்கொலை பண்ணிக்கிட்டார் சார்'' அசுவத்தாமன் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்து விட்டு, பிறகு கேட்டார்

''எப்பொழுது?''

''விடியற்காலையில்.''

''ஏதாவது குறிப்பு எழுதிவைத்திருக்கானா?''

''வைத்திருக்கார் சார். தன் தற்கொலைக்கு யாருமே காரணமில்லைன்னும் தானேதான் என்றும்.''

''இன்னும் ..''

''தன் காதலி ஸ்ரீ வாணியைத் தான் தான் கொன்றது என்றும், அந்தக் கொலைக் குற்றத்தை மகரிஷியின் மீது சுமத்தியது தான்தான் என்றும்... மரண வாக்கு மூலத்தில் பொய் சொல்ல வேண்டிய தேவை தனக்கு இல்லை என்றும்...''

அசுவத்தாமன் நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டார். கேட்டதற்கும் மேலாகவே உதவி பண்ணிவிட்டான் ரவிதேஜா; என்று அவருக்குப் புரிந்தது. மரணமடையும்போது ஒரு நல்ல காரியம் பண்ணியதற்காக அவர் மனதிற்குள்ளேயேரவிதேஜாவிற்குப்பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மறுமுனையிலிருந்து கிரணின் குரல் கேட்டது.

''சவத்தை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்புகிறோம் சார். எனி ஃபர்தர் இன்ஸ்ட்ரக்ஷன்?''

''எதுவுமில்லை தாங்க்ஸ்'' போனை வைத்து விட்டு அசுவத்தாமன் எழுந்து தயாராகத் தொடங்கினார். அவர் இனி செய்யவேண்டிய காரியங்கள் இரண்டு எஞ்சியிருந்தன.

ஒன்று—மகரிஷியை ஜெயிலிலிருந்து விடுவித்து அவனுக்கு பிளட் ட்ரான்ஸ்ஃப்யூஸ் பண்ண வைப்பது.

இரண்டு—சந்தனா—மகரிஷியின் விவாகத்தைப்பற்றித் தன் பரிச்சியத்தைப் பயன்படுத்தி, விஷ்ணுவர்த்தனனைச் சம்மதிக்க வைப்பது. அவர் ... திருப்தியோடு வெளியே நடந்தா[illegible]

ய[illegible] ...க,

சா[illegible] 7.